பொங்கும் மங்களம் என்னும்

# வேங்கடேச தேவஸ்தான வரலாறு

(திருப்பதியின் வரலாறு)

இந்நூல் ஆங்கிலத்தில்
ராஜசேவ சக்த திவான் பகதூர்
டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார்
அவர்களால் இயற்றப்பட்டதை
T. V. S. ராகவன், M.A., A.I.A. யால்
தமிழாக்கம் செய்யப்பட்டது

இந்நூல் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால்
வழங்கப்பட்ட பொருளுதவியைக் கொண்டு
இயற்றப்பட்டது
(This book has been prepared with the financial Assistance
extended by the Tirumala Tirupati Devasthanam)

முதற்பாகம்

1984

© 1000 Books 1984

ஸ்ரீ வேங்கடாத்ரி சிருங்கார மங்கல பரணுங்க்ரயே
மங்களானும் நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்

தேனேங்கு சோலைத் திருவேங்கடமென்றும்
வானேங்கு சோலை மலையென்றும்—தானேங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்

விலை ரூ.

Printed at
Super Power Press, Madras-600 0001.
Phone : 24492

# தமிழாக்கம் செய்தவர் முகவுரை

திருப்பதியில் வாசம் செய்யும் பெருமாளைப் பற்றி அறியாதார் ஒருவருமிலர். ஒவ்வோர் இந்து வீட்டிலும் ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு ஓர் உண்டி இருக்கும். அவர் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். அப்படியிருக்க தமிழில் அத்தெய்வத்தைப் பற்றிய சரித்திர ரீதியிலான வரலாறு இல்லாதது ஓர் வருந்தத் தக்க விஷயம். தேவஸ்தானத்தார் சுமார் 40 வருடங்களுக்கு முன் ஆங்கிலத்தில் வெளியிட்ட ஓர் சரித்திரம் கிடைத்தது. அதை மொழி பெயர்த்தால் தமிழர் ஒவ்வொரு வீட்டிலும் திருப்பதியைப் பற்றிய பூரண சரித்திரம் கிடைக்கும் என்னும் எண்ணத்தால் இந்நூலை மேற்கொண்டேன். அடியேன் அறிவிலேன். அப்படியிருப்பினும் இந்நூலை மேற்கொண்டது அப்பெருமானிடம் கொண்ட விசுவாசம் ஒன்றேயாகும். இந்நூலில் குற்றம் குறைகள் இருப்பின் அவைகளை மன்னித்து எம்பெருமானின் விஷயங்களிலேயே ஈடுபாடு கொண்டு இந்நூலை வாசகர்கள் அங்கீகரிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இந்நூலை ஸ்ரீநிவாஸப் பெருமானது திருவடித்தாமரைகளில் அடியேன் அடிபணிந்து சமர்ப்பிக்கிறேன்.

T. V. S. ராகவன்

மதராஸ்
ருத்ரோத்காரி
கார்த்திகை மாதம்



# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | நிலத்தின் அமைப்பு | ... | 1 |
| II. | திருப்பதியை நிர்மாணித்தவன் தொண்டைமான் | ... | 10 |
| III. | திருப்பதியும், முதலாழ்வார்களும் | ... | 18 |
| IV. | சிலப்பதிகாரத்தில் திருப்பதி | ... | 40 |
| V. | திருமழிசையாழ்வார் நூற்களில் திருப்பதி | ... | 43 |
| VI. | நம்மாழ்வாரும் ஆழ்வார்களில் அவருடைய இடமும் | ... | 62 |
| VII. | இதர ஆழ்வார்கள் | ... | 74 |
| VIII. | பக்தி அக்காலத்தில் தலைமை இடம் பெற்றிருந்தது | ... | 93 |
| IX. | தொண்டை மண்டலத்தில் வரலாறு | ... | 102 |
| X. | சோழ வம்சத்துக் கல்வெட்டுகள் | ... | 125 |
| XI. | வைஷ்ண ஆசார்யர்களுடைய காலம் | ... | 137 |
| XII. | திருப்பதியில் ராமானுஜரால் வகுக்கப்பட்ட பூஜாக்கிரமங்கள் | ... | 157 |
| XIII. | கடைசி சோழர்களும் அவர்கள் வம்சத்தவர்களும் | ... | 173 |
| XIV. | யாதவராயர்கள் | ... | 193 |
| XV. | தொண்டமான் சக்கரவர்த்தி திருப்பதியை ஸ்தாபித்த மானிட அரசன் | ... | 219 |
| XVI. | விஜய நகர ஆட்சியில் திருப்பதி | ... | 233 |
| XVII. | சாளுவர்கள் ஆட்சியில் திருப்பதி | ... | 277 |


RANI

# முன்னுரை

வெங்கடாசலம் குன்றுகள் என்று கூறப்படும் குன்றுக் குவியல்களும் அவற்றுள் திருப்பதி குன்றுகள் என்று சொல்லப் படுபவையும் தென்னிந்தியாவில் நெடுநாட்களாக மிகப்பிரசித்தி பெற்ற யாத்திரா ஸ்தலமாகும். திருப்பதி குன்றுகள் இதுவரை யிலும்கூட வேறு எங்கும் அவைகளுக்கு ஈடுஇணை இல்லை எனும் கியாதி பெற்று விளங்குகிறது. கோவில் நிர்வாகத்தினர் சமீபத்தில் திருத்தியமைக்கப் பட்ட ஒரு குழுவாகும். அவர்கள் மலையிலுள்ள கோவிலின் நிர்வாகத்தையும் அதற்கு உரியபெரும் சொத்துக்களையும் வருவாய்களையும் பரிபாலனம் செய்ய கடை மைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் பொது ஜனங்கள் இக் கோவிலின் சரித்திரத்தை நன்கு அறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த பணியை ஆரம்பித்தது சரியான வாய்ப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இந்த விஷயத்தை ஆராய முதல் கூட்டம் இதில் கவனம் செலுத்திற்று. ஸ்ரீ திவான் பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாருடைய அபிப்பிராயம் இந்த சரித்திரத்தை எழுத என்னை அழைத்து அந்தப் பணியை எனக்குக் கொடுக்க வேண்டுமென்பது. அந்தக் குழுவும் இதை ஒரு மனதாக ஒப்புக் கொண்டது. இந்தக் குழுவின் அழைப்பு எனக்கு மிக்க சந்தோஷத்தையளித்தது. ஏனெனில் இந்த கோவில் சரித்திரத்தைப் பற்றி நான் ஏற்கனவே செய்த ஆராய்ச்சிகளை ஓர் முடிவுக்கு கொண்டு வரவேண்டுமென்பது எனது நெடுநாளைய ஆவல். இந்த ஆராய்ச்சியை நான் 1904லேயே ஆரம்பித்தேன். அபொழுது நான் ராமாநுஜருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதிக் கொண்டிருந்தேன். அந்த ஜீவிய சரித்திரம் வெளிவந்தபோது சிதம்பரத்தில் கோவிந்தராஜர் கோவிலில் அது பரிசீலனை செய்யப்பட்டது. மேலும் இது தக்க சமயமாயுள்ளது. ஏனெனில் கடந்த பத்து வருஷங்களாக தேவ ஸ்தானத்தின் சாஸனங்களின் டிபார்ட்மெண்ட் அநேக சாஸனங்களை ஒன்று சேர்த்து அவைகளை அச்சடித்து பொது ஜனங்களுக்கு கிடைக்கும்படி செய்து விட்டது. கோவிலின் சரித்திரம் இந்த புஸ்தகத்தில் அமைந்திருப்பதெல்லாம் இந்த சாஸனங்களிலிருந்து எடுத்துத் தொகுத்தவை தான். முக்கிய மாக பின் காலத்திய சரித்திரம் அந்த சாஸனங்களையே பின் பற்றியிருக்கிறது. ஏனெனில் அந்த சாஸனங்களில் அடங்கி யிருக்கும் விஷயங்கள் விரிவானவை; தென்னிந்தியாவை

மற்றெந்த முக்கியமான கோவிலுக்கும் கிடைக்கும் சாஸனங்களை விட எவ்விதத்திலும் குறைந்தனவல்ல. பிற்காலத்திய சரித்திரம் என்பது வைஷ்ணவ ஆசாரியர் ராமாநுஜருடைய ஜீவிய காலத்திற்குப் பின்னர் ஆகும். ராமானுஜர் இக்கோவிலில் செய்த நிகழ்ச்சிகளும் தொண்டுகளும் வெகு காலமாக விவாதிக் கப்படும் விஷயங்களாக இருக்கின்றன.

ராமாநுஜருடைய காலத்தைப் பற்றியும் அவர் கோவில் பூஜைகள், தொழுதல் ஆகிய இவ்விஷயங்களில் ஒழுங்குபடுத்திய தைப் பற்றியும் அவ்விதம் செய்த ஏற்பாடுகளை சாஸ்வதமான முறையில் அமைத்து வைப்பதைப் பற்றியும் அவருடைய ஜீவிய சரித்திரத்தில் கிடைக்கும் விஷயங்களை வைத்துக் கொண்டு தான் நாம் எழுத வேண்டியிருக்கிறது. ஆனால் இவைகளில் நமக்குக் கிடைக்கும் விஷயங்கள் அவர் செய்த காரியங்களை தீர்க்கமாக அறிந்து கொள்ள போதுமானவையல்ல. ஆனால் நம்முடைய அதிர்ஷ்டவசத்தால் ராமாநுஜருக்குப் பிறகு சில தலை முறைக்குள் எழுதப்பட்ட ஒரு அரிய சம்ஸ்கிருத கிரந்தம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதில் அவரைப்பற்றி விஷயங் களைத் தெரிவிக்கின்றன. கோவில் நிர்வாகக் குழு இந்த அரிய நூலின் ஆராய்ச்சி பதிப்பு ஒன்றை மறுபதிப்பு அச்சிட தங்களது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது. இதுவரையில் இதைப் பற்றி ஓர் தெலுங்கு பதிப்பு இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது சரியாக எழுதப் படவில்லை. இந்த பதிப்பும் இப்போது அச்சில் இல்லை. அக்காலத்தில் கமிஷனராக இருந்த ஸ்ரீ ஏ. ரங்கநாத முதலியார் **ஸ்ரீ வேங்கடாசல இதிஹாசமாலை** என்னும் நூலை தேவநாகரி அக்ஷரத்தில் வெளியிடுவதற்கு எனக்கு கொடுத்த உதவிக்கு எனது மனமார்ந்த வந்தனங்கள் இந்த நூலில் ராமாநுஜர் காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றியும் அவர் ஏற்படுத்தி விட்டுச் சென்ற ஏற்பாடுகள் இடை விடாது மேலும் எப்படி நடந்து வருகிறது என்பதைப் பற்றி யும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ராமாநுஜர் காலத்துக்குப் பின்னர் நமக்குக் கிடைக்கும் சாஸனங்களின் மூலம் தெரிந்து கொள்ளும் விஷயங்களைப் போல் அவருக்கு முன் காலத்தில் நடந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ராமாநுஜர் காலத்திற்கு முன் சுமார் மூன்று நூற்றுண்டுகள் வரை நாம் சாஸனங்கள் மூலம் சில விஷயங்களை அறியமுடிகிறது. இவை சொல்பமான சாஸனங்கள் ஆனால் கோவிலைப் பற்றிய சூக்ஷ்மங்களையும் அது பொதுமக்கள் களால் போற்றப்படும் நிறுவனமாக எப்போது அமைந்துள்ளது என்பதைப் பற்றியும் தெளிவாக்குகிறது.

இந்நூலை நான் தொகுக்கும் பொழுது, மேற்கூறிய இந்த ஆதாரங்களையெல்லாம் உபயோகித்துக கொண்டேன். மேலும் வேணுமென்றே இதே ஆதாரங்கள் தங்கள் கதைகளைக் கூற வேண்டுமென்ற நோக்கத்துடன் அவ்வாதாரங்களை விரிவாக உபயோகித்திருக்கிறேன். மேலும் சர்ச்சைக் குறிய இந்த விஷயங்களில் ஆதாரங்களை தெளிவாக எடுத்துரைத்து அவை களிலிருந்து அவரவர்கள் தக்க முடிவுகளை அறிந்து கொள்ள வேண்டுமென்று விட்டு விடுவதே நன்று என்ற கொள்கையைக் கடைப் பிடித்திருக்கிறேன். ஆகவே, விஷயங்களைத் தனியாக எடுத்துரைத்து அவைகளிலிருந்து நான் என்ன அபிப் பிராயங்களை எடுக்க முடியுமோ அவைகளையும் கொடுத்திருக் கிறேன். ஆகவே நான் எடுத்துக் கொண்ட முடிவுகளுக்கும் இந்நூலில் வரும் இதர அபிப்பிராயங்களுக்கும் நானே பொறுப் புள்ளவனுகிறேன். ஆகவே இந்நூலில் கொடுக்கப்பட்ட விவரங்களெல்லாம் சரித்திர வாயிலான சம்பவங்கள் தான். ஆங்காங்கே விஷயங்கள் தெளிவாக இல்லாத இடங்களில் எனது விரிவு உரைகளையும் தந்திருக்கிறேன். வாசகர்கள் தான் நான் செய்துள்ள பணி எவ்வளவு நன்ருகவோ அல்லது வேறு வகை யாகவோ செய்யப்பட்டிருக்கிறது என்பதை தீர்மானிக்க வேண்டும். கோவிலின் மொத்த சரித்திரத்தை இந்நூல் எவ் வாறு அவர்கள் மனதில் பதிய வைக்கிறது என்பதை அவர்கள் தான் தீர்மானிக்கவேண்டும்.

கோவிலின் சரித்திரத்தை அதன் உத்தேசமான ஆரம்பத்தி லிருந்து (இது கிறுஸ்து சகாப்தத்தின் ஆரம்பித்திலிருந்து எனக் கொள்ளலாம்), கிட்டத்தட்ட 18 வது நூற்ருண்டின் இறுதிவகை கொடுத்திருக்கிறேன். கர்னுடிக் போர்களின் ஆரம்பகாலத்தி லிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் விவரணங்கள் பூரணமான தாகவேவில்லை. ஏனெனில் இந்த காலத்திற்கு தக்க ஆதாரங்கள் சரியாக எடுபடவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ரிகார்டுகளி இந்த காலத்தைப் பற்றிய விவரங்கள் நன்கு தெரிய ஹேதுவால் யிருக்கும். ஆனுல் அந்த ரிகார்டுகள் இன்னும் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப் படவில்லை. மேலும், இந்த விஷயத்துக்காக அந்த ரிகார்டுகளை பரிசோதித்ததில் அவற்றுள் சில சாஸனங்கள் இந்த கோவிலைப் பற்றியும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களைப் பற்றியும் நமக்கு மிகுந்த விஷயங்களைத் தெரிவிக்கின்றன. ஆனுல் 8 வது நூற்ருண்டுக்கு முன்னர் இருந்த நிலையைப் பற்றி தெரிந்து கொள்ள நாம் வேறு ஆதாரங்களை நாடவேண்டி யிருக்கிறது. அவைகள் அநேகமாக தமிழிலும் சமஸ்கிருதத் திலும் கோவிலைப் பற்றி இலக்கியத்தில் உள்ளன. சங்கத்

தமிழில் வேங்கடத்தைப் பற்றி சில குறிப்புகள் வருகின்றன. அதில் தமிழ் தேசத்துக்கு வடக்கு எல்லை வேங்கடம் என கூறப் பட்டுள்ளது. சில நூல்களில் இக் கோவிலின் இருப்பைப் பற்றியும் அங்கு வருடா வருடம் நடக்கும் உற்சவங்களைப் பற்றியும் கூட குறிப்புகள் வருகின்றன. இச்சங்க கால இலக் கியங்களுக்குப் பிறகு பன்னிரண்டு வைஷ்ணவ ஆசார்யர் களுடைய நூல்கள் உண்டாக்கப்பட்டன. இவை சங்க காலத்தின் பொற்காலத்திலிருந்து சுமார் எட்டாம் நூற் றுண்டின் இறுதி வரையிலுள்ள காலத்தில் இயற்றப்பட்டன. இவர்கள் இத்தலத்தை மிகவும் புனிதமானது எனக் கருதின தால் இவர்களுடைய நூல்களில் இத்தலத்தைப் பற்றி மிக்க அதிகமாகக் கூறப்பற்றிருக்கிறது.

இந்த ஆதாரங்களில் மறைமுகமாக இக்கோவிலின் உற் பத்தியைப் பற்றிக் கூறியிருப்பினும், அதைப் பற்றிய விரிவான குறிப்புகள் கொடுக்கப்படவில்லை. ஆகவே இவ்விரிவான குறிப்புகள் நமக்குத் தெரிய வேண்டுமானால் நாம் புராணங்களை நாட வேண்டியிருக்கிறது. இப்புராணக் குறிப்புகள் எல்லாம் **வேங்கடசால மாஹாத்மியம்** என்னும் சமஸ்கிருத நூலில் வரையப் பட்டிருக்கின்றன. இந்நூல் அநேக பதிப்புகளில் வந்திருப் பினும், அவற்றுள் சில சரியானதாகவில்லை. சமீபத்தில் தேவஸ்தான அதிகாரிகள் இந்நூலின் புதிய பதிப்பைத் தயா ராக்கினார்கள். அது இன்னும் அச்சிடப்படவில்லை. அதை நான் பார்க்க நேர்ந்தது. இந்நூல் பதினொரு புராணங்களில் இக் கோவிலைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கும் செய்யுள்களை யெல்லாம் ஒன்று தொகுத்து இக்கோவிலுக்கு புகழ்மாலை சூட்டுவது போல் உள்ளது. ஸ்வயம்பு மூர்த்தியான இக் கோவிலிலுள்ள மூர்த்தி எவ்வாறு காணப்பட்டது என்பதை விரிவாகக் கூறி, வெவ்வேறு மக்கட்களிடமிருந்து காலப் போக்கில் எவ்வாறு சேவைகள் கிடைக்கப்பட்டன என்பதையும் இது விரிவாகக் கூறுகிறது. இவ்வாறு எல்லா புராணங்களி லிருந்து தொகுத்து எடுக்கப்பட்ட இந் நூலிலிருந்து நமக்கு இக் கோவிலின் ஆரம்பத்தைப் பார்க்க நான் அனுமதி கேட்ட பொழுது, அரசாங்கம் அந்த அனுமதியைத்தர மறுத்து விட்டது. ஆகவே, இந்த விஷயத்தை அப்படியே விட்டு விடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை.

முதலாவதாக நான் எனது நண்பர் ஸ்ரீ டி. ஏ. ராமலிங்கம் செட்டியாருக்கும் தேவஸ்தானம் கமிட்டியின் இதர மெம்பர் களுக்கும் எனது கடனைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு

கிறேன். இவர்களுக்குப் பிறகு வந்த தேவஸ்தானம் கமிட்டியில் தலைவர் ஸ்ரீ வெங்கட ரங்கராயனிங்காரு அவர்களுக்கும் இதர மெம்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரு கமிஷனர்கள் சீதாராம ரெட்டியார், ரங்கநாத முதலியார் அவர்களும் எனக்குப் பல விதத்தில் உதவி புரிந்தனர். தேவஸ்தானம் ஆபீஸில் உள்ள பணியாளர்களும் எனக்குப் பல விதத்தில் உதவி புரிந்தனர். முக்கியமாக இப் புத்தகத்தை எழுதும் பொழுது எனக்கு உதவி புரிந்த சாஹித்திய சிரோமணி பண்டிட். எஸ். ராஜகோபாலாசாரியா அவர்களும் டாக்டர் பி. ஸ்ரீனிவாஸாசாரியார் எம்.ஏ.பி.எச்.டி. அவர்களும் புத்தகத்தின் முதன் பாகத்தில் எனக்கு உதவி புரிந்தனர். அவர்கள் உதவியை நான்மிக்க சந்தோஷத்துடன் இங்கு கூறக் கடைமைப்பட்டிருக்கிறேன். இப்புத்தகத்திற்கு இறுதியில் பெயர்களுக்கு அகராதி ஒன்றைத் தொகுத்தவர் டி.வி. மஹாலிங்கம் என்பவராவர். இவர் சமீபத்தில் வரையில் யூனிவர்சிடியில் ஆராய்ச்சியாளராக இருந்தார். இவர்கள் யாவருக்கும் நான் எனது வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதை அச்சிடுவதற்கு ஆனந்தா பிரஸ்ஸுக்குக் கொடுக்கப்பட்டது. இதை அச்சிடும் பொழுது ஸ்ரீ பி. மாதவராவ் எம். எ. என்னும் இந்த பிரஸ்ஸின் சொந்தக்காரர் எனக்குப் பல விதத்திலும் உதவி செய்திருக்கிறார். இதை அச்சில் வெகு நேர்த்தியாகச் செய்திருப்பது யாவரும் கண்டு களிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இதில் கொடுக்கப்பட்டிருக்கும் போட்டோக்களில் ஒருபாதி தேவஸ்தான சாஸன போடோ நெகடிவ்களிலிருந்தும் இதர போடோக்கள் தேவஸ்தான கமிட்டிக்காக ஜீ கே. வேல் என்பவரால் எடுக்கப்பட்டதிலிருந்தும் எடுத்தவைகளாகும்.

இறைவன் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் பரிபூர்ண கிருபையால் நான் இந்தப் பணியை விக்கினமின்றி முடிவுக்குக் கொண்டுவர முடிந்ததற்கு நான் சந்தோஷப்பட வேண்டிய வனுகிறேன். இந்தப் புஸ்தகத்தை ஸ்ரீ வெங்கடேசனிடம் எனக்கிருக்கும் பக்தியைக் காண்பிக்க அவனுக்கே அர்ப்பணம் செய்கிறேன்.

தசரா 1939<br>மைலாப்பூர், மதருஸ் } எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்

# முதற் பாகம்



"ஆநந்த நிலையே ஸஸ்வத் நிவஸன் நித்யமங்களா
ஸ்ரீ நிவாஸ கிருபா சிந்து ஆநந்தான் விதநோது ந:"
ஆநந்த விமான நிலயம்



கல்ப விருக்ஷ வாகனத்தில் பெருமாள்

ஸ்ரீரஸ்து

# பொங்கும் மங்களம் என்னும்
# ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தான வரலாறு

---

## அத்தியாயம் 1
## நிலத்தின் அமைப்பு

**நில அமைப்பு :**

திருப்பதி என்றும் திருமலைக் குன்றுகள் என்றும் வழங்கப் படும் மலைக் கூட்டங்கள் தென்னிந்தியாவில் 13°, 14° அம்ச ரேகைகளுக்கு நடுவில் இருக்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் வடக்கிலிருந்து கிருஷ்ணா நதிவரையில் கடலோரமாக வருகின்றன. அங்கிருந்து தெற்கே மூன்று பிரிவுகளாகப் பிரிகின்றன. ஒன்று கடலோரமாக பொன்னேரி வரையிலும், இன்னொன்று மைசூரிலிருந்து அனந்தபூர், கர்னூல் ஜில்லாக்கள் வழியாகவும் மூன்றாவது இவ்விரு மலைக் கூட்டங்களுக்கும் நடுவே கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கே கர்னூல் ஜில்லாவில் **நல்ல மலைக் கூட்டம்** என்றும் அதற்கும் தெற்கே **திருப்பதி, காளஹஸ்தி** என்றும் ஓடுகின்றன. மைசூரிலிருந்து பொன்னேரிக்கு ஒரு கோடு போட்டால் இந்தத் திருப்பதி, காளஹஸ்தி மலைகள் இக் கோட்டில் அடங்கும். இந்தக் கோடுதான் தமிழ் நாட்டின் வட எல்லையாக, இயற்கையாகவே அமைந்த மலைச் சுவராகக் கருதப்படுகின்றது. எனவே, தமிழகத்தின் எல்லைகளைக் குறிப்பிடும் போது வடக்கே வேங்கடத்தையும் (திருப்பதியையும்) கிழக்கு மேற்கு திசைகளில் கடல்களையும், தெற்கே குமரி முனையையும் குறிப்பிடுவது மரபு. தொல்காப்பியத்திலும் இவ்வெல்லைகளே குறிப்பிடப் பட்டுள்ளன. திருப்பதியைப்பற்றி கூறும் நூல்கள் சிலவற்றுள், திருப்பதி—நல்ல மலைக் கூட்டங்கள் ஒரு பெரிய நாகத்திற்கு ஒப்பிடப்பட்டு, அதன் வாலில் ஸ்ரீசைலம், வயிற்றில் அஹோபிலம், தலையில் திருப்பதி, வாயில் காளஹஸ்தி ஆகியன இருப்பதாகக் கற்பனை செய்து கூறப்பட்டுள்ளன.

**மலையின் சரியான பெயர் :**

வைணவர்களுக்கு "திருப்பதி" என்னும் பெயர் மலையின் மேலிருக்கும் கோயிலைத்தான் சாதாரணமாகக் குறிக்கும். இதைத் தமிழ் இலக்கியங்கள் "வேங்கடம்" என்று அழைக்கின்றன. வைணவர்களும் இத்தலத்தை "வேங்கடம்" என்றும் "திருவேங்கடம்" என்றும் அழைக்கின்றனர். பொதுவாக "வேங்கட" மெனும் சொல், அப்பெயர் கொண்ட மலையைக் குறிக்குமாயினும், அதைச் சுற்றியுள்ள இடங்களையும் குறிக்கும். தொல்காப்பியத்தில் தமிழ் நாட்டைப் பற்றி குறித்துப் பேசுகையில் அதன் வட—தென் எல்லைகளை முறையே வடவேங்கடம்—தென்குமரி என்று குறிக்கிறது. வடவேங்கடம் வரையிலுள்ள இடங்களில் தமிழ் மொழி பேசப்படுகிறது என்றும் அதைத்தாண்டி வடக்கே செல்வோமாயின், வேற்று நாட்டுக்கு செல்கிறோ மென்றும் அங்கு பேசும் மொழி, தமிழினின்று வேறுபட்டது என்றும் இதன் பொருள். எனவே வேங்கடம் என்பது திருப்பதியைக் கூறுவதாகக் கொள்ளலாம்.

**வடுகர் நாடு :**

தமிழில் திருப்பதிக்கு வடக்கில் வசிப்பவர்கள் பேசும் மொழி வடுகு என்றும், திருப்பதியையும் அதற்கு மேற்கிலுள்ள இடங்களையும் ஆண்ட வேந்தர்களை வடுகர் பெருமான் என்றும் குறிப்பிடப்படுகின்றார்கள். பெருமகன் என்பது "பெருமன்" என்று பிற்காலத்தில் மருவியது. ஆகவே வடுகு மொழி என்பது தற்காலத்துத் தெலுங்கு மொழியைக் குறிக்கும். பழங்காலத்தில் "வடுகு" எனும் சொல் தமிழ் நாட்டுக்கு வடக்கே செல்லும் போது ஏற்படும் மொழி வேற்றுமையையும் கிழக்கிலிருந்து திருப்பதி மூலம் உள் நாட்டுக்குச் செல்லும் ஒரு கோட்டுக்கு வடக்கிலிருக்கும் மக்கள் பேசும் மொழியையும் குறித்தமையால், இச் சொல் அக்காலத்தில் பல மொழிகளைக் குறித்தது. அக்காலத்தில் (சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பு) மைசூரை ஆண்ட சிற்றரசன் ஒருவன் **எருமை** என்றும் **வடுகர் பெருமகன்** என்றும் குறிப்பிடப்படுகின்றான். அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சாலைகள் மிக்க சிலவே. அவைகள் வடுகர் நாட்டினுள் புகுமுன் "வடுகர் முனை" என்று அழைக்கப்படும் தமிழ் நாட்டு எல்லைப் புற ஊர்களைத் தாண்டிச் செல்ல வேண்டும். வடுகர் என்பது நீலகிரியிலிருக்கும் ஒரினத்தின் பெயரான "படகர்" என்னும் சொல்லின் சிதைவாக இருக்கலாம். எனவே சுமார் 11-ம், 12-ம்

நூற்றூண்டுகளுக்கு முன் கன்னட தேசத்தவரும், தெலுங்கர்களும், தமிழில் 'வடுகர்கள்' என்று குறிப்பிடப்பட்டனர். நச்சிஞர்க்கினயரும் இவர்களே ஒரே பெயரில் அழைக்கக் காண்கிறேம். தெற்குலிருந்து வடக்கே செல்லும் பாதையை 'வடுகாவளி' என்றனர். அப்பெரிய சாலேயின் முனேயில்தான் வேங்கடம் இருந்தது ; இன்றும் உளது.

**தமிழ் இலக்கியத்தில் திருப்பதி :**

சங்கத் தமிழில் திருப்பதியைப் பற்றிக் கூறும் சிறப்புகளேக் காண்போம். முதலில் பெருந்தேவஞர் எழுதிய பாரதத்தை எடுத்துக் கொள்ளுவோம். இவர் 'பாரத வெண்பா' என்னும் நூலே எழுதிய பெருந் தேவஞருக்கு முந்தியவர் எனத்தெரிய வருகின்றது. 'பாரதம்' எழுதிய பெருந்தேவஞர் எட்டுத் தொகையின் துதியில் அக்காலத்தில் பிரசித்தமான எல்லாத் தெய்வங்களேப் பற்றியும் பாடியுள்ளார். 10–வது நூற்றூண்டைச்சார்ந்த செப்புச்சாஸனமொன்று "மஹா பாரதத்தைத்தமிழாக்கிய" பாண்டியனேக் குறித்து, அவன் தலேயாலங்காணம் சண்டையில் வெற்றி பெற்றவன் எனக் குறிக்கிறது. அந்தப் போரில் (எட்டுத் தொகையில் கூறியுள்ளவாறு) அந்தப் பாண்டியன் சேர சோழ அரசர்களே வென்றுன். எனவே எட்டுத்தொகை இப்போருக்குப் பிந்தையது எனக் கொளல் வேண்டும். எனவே இந்த எட்டுத் தொகையில் இக்குறிப்பிடப் பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் தலேயாலங்காணம் போருக்கும் முன்னதாக நடந்திருக்க வேண்டும். எனவே பெருந்தேவஞர் எழுதிய துதிப்பாடல்களும் இப்போருக்கு பின் தான் இயற்றப்பட்டிருக்கப படவேண்டும்.

**இக்குறிப்புக்களின் ஸ்வரூபம் :**

இவ்விலக்கியத்தில் திருப்பதியை வேங்கடம் என்றும் தமிழ் நாட்டின் வட எல்லே என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேலும் திருப்பதியைக் குறிக்கும்போது அவ்விடத்தின் மூலமாக வடக்கு நோக்கிச்செல்வோர் தமிழ் பேசும் நாட்டிலிருந்து தமிழல்லாத வேற்று மொழி பேசப்படும் நாட்டுக்குச் செல்வதாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர். தலேயாலங்காணத்துப் பாண்டியன் காலத்திய புலவர்களில் இருவர் கல்லாடஞர், நக்கீரர் ஆவர். அகநானூற்றில் 83–வது பாட்டில் வேங்கட நாட்டை ஆளும் புள்ளி எனக் கூறுகிருர்கள். அவனே **இளேஞர் பெருமகன்** என்றும் அழைத்தனர். அதாவது இளேஞர்களின் அரசன் என்று அர்த்தம். இளேஞர் என்னும் சொல் வேடுவர்

களைக்குறிக்கும், மேலும் அவன் **கள்ளா** என்றும் குறிப்பிடப் படுகின்றான். அதாவது நாகரீகம் அற்றவன் என்று பொருள். 209 செய்யுளில் புள்ளியைப் பற்றிக் கூறுகையில் "குன்றுகளின் நடுவில் இருக்கும் குகையின் வழியே சென்று புள்ளியின் நாட்டை அடைகிறோம்" என்று சொல்லப்பட்டுள்ளது. நக்கீரர் வேங்கடத்தைப் பற்றி நேராகக் குறிப்பிடாவிடினும், பவத்திரி (ரெட்டிபேலம்—கூடூர் தாலூக்காவைத் தலை நகராகக் கொண்ட திரையனைக் குறிப்பிடுகையில்), வேங்கட நாட்டை தான் அவர் குறிக்கிறார், 253–வது செய்யுளில் நக்கீரர் "வடுகர் பெருமான் எருமை" என்கிறார். அதில் கூறும்போது அயிறி நதியைத்தாண்டி தமிழ் நாட்டிலிருந்து வடுகர் நாட்டுக்குச் செல்லுகிறோம் என்கிறார். அயிறி என்பது சித்ல துர்க்கத்திற்கு அருகில் ஓடும் ஹிகிறையைக்குறிக்கும். இந்நதி துங்க பத்திராவில் சேருகிறது. அகம் 27-ல் **கணக்காயனுர்** வேங்கடத்தைப்பற்றிக் கூறுகையில், காடுகளில் வசிக்கும் யானைக்கூட்டங்களைக் குறிப்பிடுகிறார். **தாயங் கண்ணன்** வேங்கடத்தை தொண்டையாருக்குச் சொந்தமானது என்று கூறுகிறார். **காட்டூர் கிழார்** என்பவருடைய மைந்தன் **கண்ணன்** வேங்கடத்தை யானைக் கூட்டங்கள் நிரம்பியது என்றும் அந்த யானைக் கூட்டங்களுக்கு தீனி மூங்கில்களின் இளந்தளிர்கள் என்றும் கூறுகிறார். மாமூலனார் 7 செய்யுள்களில் திருப்பதியைப் பற்றிக் கூறுகிறார். 61-வதில் கள்வர் குலத்தைச் சேர்ந்த புள்ளியைச் சேர்ந்த வேங்கடம் என்கிறார். வேங்கடம் பல உற்சவங்களுக்குப் பேர் போனது என்கிறார். 115-ல் குட நாட்டை ஆளும் எருமையைக் குறிப்பிடுகிறார். 281–ல் வடுகர் களைப்பற்றிக் கூறுகையில் மௌரியர்கள் தென்னாட்டுக்கு வந்த போது குன்றிலுள்ள குகை வழியாக வடுகர்களைத் துரத்திக் கொண்டு வந்தார்கள் என்று கூறப்படுகிறது. 295-ல் திருப்பதியைப் புள்ளிக்குன்றம் (அதாவது புள்ளி ஆளும் குன்றம்) என்கிறார். 311-ல் புள்ளியின் நல்ல நாட்டைக் கூறி, அதைத் தாண்டினால் பாலை நிலமென்றும், அதில் மக்கள் புளி கலந்த சோற்றை தேக்கு இலைகளில் வைத்துச் சாப்பிடுகிறார்கள் என்னும் வழக்கத்தையும் கூறுகிறார். 393–ல் புள்ளியின் சொற்களும் சொற்றொடர்களும் நீண்டவை என்றும் அதுவே அந்த நாட்டு மொழிகளின் இயல்பு என்றும் கூறுகிறார்.

**திருப்பதி புனிதத்தலம் எனப்படவில்லை :**

மேற்கூறிய பண்டை நாளைய செய்யுட்களில் திருப்பதி மலையையும் அந்நாட்டு அரசனையும் கூறினார்களேயன்றி, அங்கு

ஒரு கோயில் இருந்ததெனவோ, அதன் மஹிமையைப் பற்றியோ கூறியிருக்கவில்லை. நிகழ்காலத்தில் திருப்பதியென்ருல் கோயில் தான். மாமூலனுர் மாத்திரம் அகம், 61-ல் "உற்சவங்களால் சிறப்பிக்கப்பட்ட வேங்கடம்" என்கிருர். இவ்வொறே சான்றை வைத்துக் கொண்டுதான் நாம் அன்றே அங்கு கோவில் இருந்திருக்க வேண்டும் என்றும், மக்கள் அங்கு வழிபாட்டின் பொருட்டு சென்றனர் என்றும் ஊகிக்க வேண்டியுள்ளது. ஆகவே, சங்க காலத்தில் அந்தக் கோவில் இருந்திருப்பினும், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏற்பட்டிருந்ததெனத் தெரியவில்லை.

**இவ்விடம் பற்றி இலக்கிய வருணனை :**

ஆகவே சங்கத்தமிழில், தமிழ் நாட்டை வடநாட்டினின்றும் பிரிக்கும் இடத்தை வடுகு என்றும், வடுகு மொழியை தற்காலத்திய தெலுங்கு மொழி என்றும், வேங்கடத்திற்கு வடக்கிலிருப்போர்கள் யாவரும் வடுகர்கள் என்றும் கூறப் பட்டது. அந்தத் தேசம் தற்காலத்திய ராயலசீமாவுக்குச் சரியான தேசமாம். மேலும் அக்காலத்தில் வடுகர் பேசின மொழி காதுக்கு இனிமையின்றி இருந்ததாகவும், வேங்கடத் தைச் சுற்றி யானைக் கூட்டங்கள் மிகுந்திருந்தனவென்றும் இந்த இடம் **கள்வர்** தலைவன் புள்ளி என்பவனுல் ஆளப்பட்டது என்றும், அவனுக்குப்பின் பவத்திரியைத் தலைநகராகக் கொண்ட திரையனுல் ஆளப்பட்டது என்றும், இவ்வேங்கடத்தைச் சுற்றி யுள்ள நாடு தொண்டையர்களுடையது என்றும் (அதாவது தொண்டை மண்டலத்தில் ஓர் பாகம்) தெரிய வருகிறது. கடைசியாக சோழ நாட்டரசன் ஒருவன் வடுகர்களைச் சண்டையில் 'பாலி' என்னுமிடத்தில் தோற்கடித்ததாக சங்கத் தமிழ் பாக்களினுல் தெரிய வருகிறது. இந்தத் திரையனைப் பிற்காலத்தில் காஞ்சியை ஆண்ட இளந்திரையனேடு ஒன்று படுத்தி விடக்கூடாது.

**பழங்காலத்தில் உற்சவங்கள் திருப்பதியில் நடந்தன :**

அகநானூறு 61-ல் மாமூலனுர்.

> **"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்**
> **மழபுலம் வணக்கிய மாவன் புல்லி**
> **விழ வுடை விழுச்சீர் வேங்கடம் பெரினும்**
> **பழகுவ ராதலோ வரிதே"**

என்கிருர்.

அஃதாவது, ஆனைத்தந்தத்தைக் கொடுத்து நெல்லிலிருந்து எடுத்த கள்ளை வாங்குபவர்களும், போர் வீரர்களுக்கே உரித்தான கால் சலங்கைகளை அணிபவர்களுமான கள்வர்களின் தலைவன் புள்ளி, மாலவர் நாட்டை வென்றவன்; பெருங் கொடை வள்ளல். (உன் தலைவன்) புள்ளியின் தலைநகரும், உற்சவங்கள் பல நடப்பதினால் மிகச் செழிப்பாய் இருப்பதுமான வேங்கடத்தையே அடைவதானாலும் அவன் வெளித் தங்க மாட்டான். "இதன் முக்கியப் பொருள் :– அக்காலத்திலே வேங்கடத்தில் பல உற்சவங்கள் நடந்தன : அவற்றுள் முக்கியமானது வருஷத்தில் முக்கியமாக நடக்கும் பெரிய உற்சவம்." புராணங்களின் வரலாறுபடி தொண்டைமான் எனும் அரசன் ஒரு புற்றைத் தோண்டி, அங்கு ஒரு தெய்வச் சிலையைப் பார்க்க, உடனே அங்கு ஒரு கோயில் கட்டி, அதற்குப் பல உற்சவங்கள் நடத்த ஏற்பாடு செய்தான் என்று. தொண்டைமான் எக் காலத்தவன். என்று நிர்ணயித்தால் இந்தக் கோவில் எப்போது ஏற்பட்டது என்று தெரியவரும். ஆனால் புராணங்கள் இத்தலத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது விஷ்ணுவே தன்னுடைய சங்கல்பத்தினால் தானாகவே அந்த இடத்தில் தோன்றினார் (ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரம்) என்று கூறுகின்றன.

மேலும் வேங்கடத்தைப் புள்ளி ஆண்டானென்றும் அவனுக்குப்பின் திரையன் என்னும் தொண்டையன் ஆண்டான் என்றும் தெரிகிறது. மாமூலர் குருந்தொகை செய்யுள் 11-ல் இவ்விடத்தை வடுகர் நாடு என்றும் வேற்காடு நாடு என்றும் குறிப்பிடுகிறார். வேற்காடு என்பது தற்போதைய பழவேற்காடு என்பது. ஆகவே செங்கற்பட்டு, வடஆற்காடு, நெல்லூர் ஜில்லாக்களின் பகுதிகள் வேங்கடத்தின் ஆட்சிக்குள் இருந்தன என்றும் அவற்றின் முக்கிய நகரங்கள் பவித்திரி, வேற்காடு எனவும் தெரிய வருகிறது. திரையன் என்பவன் இளந்திரையனா என்பது பற்றி ஒரு ஐயம் இருந்து வருகிறது. பெரும் பாணாற்றுப் படையில் காஞ்சியை ஆண்ட இளந்திரையனைப் பற்றி வரலாறு கூறுவதாலும் அகநானூரில் வருபவன் வெறும் 'திரையன்' என அடைமொழி இல்லாமல் இருப்பதாலும் இருவரும் வேறு எனக் கருத வேண்டும். இதே கருத்தையே மகா மகோபாத்தியாய சுவாமிநாதய்யரும் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும் ஒரோர் பழமொழியில் காஞ்சியைத் தொண்டைமான் காஞ்சியென்றும் அதன் தலைவனைத் திரையன் என்றும் சொல்லும் சொல்லை இளம் திரையன் என்று கொள்வதாலும் இருதிரையனும் ஒருவனே என்பது மற்றொரு கருத்து. இளம்

திரையனின் வெற்றியைக் கூறும் பெரும் பாணுற்றுப் படையில் அவனுடைய வடஎல்லையைப் பற்றியாவது அங்குள்ள நகரங்களைப் பற்றியாவது கூறுதிருப்பது மேற்கூறிய ஐயத்தை வலியுறுத்துகிறது. நாம் இந்த ஆராய்ச்சியில் மேலும் புகாமல் இலக்கியங்களில் காணப்படும் திரையன் என்பவன் காஞ்சியில் ஆண்ட இளம் திரையனையே குறிக்கும் எனக்கொள்ளலாம். பெரும் பாணுற்றுப்படை 40, 41-ல் கோயில்களில் மக்களின் ஆத்மீக உயர்வுக்காக உற்சவங்கள் நடத்துவதால் காஞ்சி மாநகர் மற்ற நகரங்களைவிட அதிகப்புகழ் அடைந்தது என்று உரையாடர் சொல்லுகிருர். ஆகவே, தொண்டைமான் இளந்திரையன் காலத்தில் காஞ்சி போன்ற நகரங்களில் கோவில் விழாக்கள் சாதாரணமான நிகழ்ச்சிகளாக இருந்தன என்று தெரிகிறது. திருப்பதியின் கோயிலில் உற்சவங்கள் ஒரு தொண்டைமானுல் ஆரம்பிக்கப்பட்டன என்று புராணங்கள் சொல்லுவது, காஞ்சியைச் சேர்ந்த தொண்டைமான் இளந்திரயனைத் தான் குறிக்கிறது எனக் கொள்வதுபற்றி ஐயமில்லை. திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதியில் 41-ல் ஓண விழவு—அதாவது திருவோண உற்சவத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். இந்தத் திருவோண உற்சவம் திருப்பதியில் பிரம்மாவாலேயே ஆரம்பிக்கப்பட்டு வருடத்தில் முக்கிய உற்சவமாக பிரம்மோற்சவம் எனக் கொண்டாடப் படுகிறது. ஆகக்கூடி சரித்திரத்தின் வாயிலாகவும், புராணத்தின் வாயிலாகவும் பார்த்தால் தொண்டைமான் அல்லது தொண்டைமான் சக்கரவர்த்தி இந்தக் கோயில்களில் உற்சவங்களை ஆரம்பித்தான் என ஊகிக்க இடமிருக்கிறது.

**தொண்டமான் இளந்திரையன் :**

பத்துப்பாட்டில் ஒன்ருகிய பெரும் பாணுற்றுப் படை தொண்டைமான் இளந்திரையனைப்பற்றி விவரிக்கிறது. இதை ஆக்கியவர் கடியலூர் ருத்ரன் கண்ணன் என்பவர். அதாவது கடியலூர் ருத்ரனின் குமரன் கண்ணன் ஆக்கியது என்க. இவர் ஒரு பிராம்மணர். இளந்திரையன் பெரும் புகழ் பெற்றவனுயிருப்பினும் முடிசூடினவனுகக் கருத முடியாது. மேலும் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களுக்கு ஒரு படி தாழ்வான அரசன். அதாவது அவன் ஒரு குறுநில மன்னன். தொல்காப்பியத்தில் இச்சிற்றரசர்கள் இராஜவமிசத்தைச் சேர்ந்தவர்களாயினும் முடிசூடும் மன்னர்களுக்கு ஒப்பாகார் என்று கருதப் பட்டிருக்கிறது. ருத்ரன் கண்ணன் இவ்வரசனைத் தொண்டை மண்டலத்திற்கு அதிபதியாய் காஞ்சிமா நகரத்தி

விருந்து அரசு புரிந்தான் என்கிருன். அவன் அரசு வடக்கில் தெலுங்கு எல்லைவரையிலும் தெற்கில் பாலாறு சில சமயங்களில் தெற்கே வடவெள்ளாறு) வரையிலும் பரவியிருந்தது. வடபெண்ணைக்கும் வடவெள்ளாறுக்கும் நடுவில் உள்ள நாடு அவன் ராஜ்ஜியம் என எடுத்துக் கொள்ளலாம். அவனைச் சோழ அரசன் கிள்ளி வளவன் (நெடுமுடிக் கிள்ளியின்) குமரன் எனக் கருதப்படுகிறது. பெரும் பாணுற்றுப் படையில் அவனை அயோத்தியையாண்ட ராஜவம்சத்தைச் சேர்ந்தவன் என்றும் இக்ஷ்வாகு குலத்தைச் சேர்ந்த சோழ மன்னர்களின் கிளைத் தோன்றல் என்றும் விவரிக்கிருர்.

> "மிரு நிலங்கடந்த நீயுரு திருமறு மார்பின்
> முன்னீர் வண்ணன் புறங்கடையந்நீர்த்
> திரை தரு மரபினுர வோனும்பல்"

(பெரும் பாணுற்றுப்படை 29-31).

திரையன் எனில் கடலைச் சேர்ந்தவன் எனப் பொருள். சோழ தேசத்தரசன் காவிரிப் பூம்பட்டினத்தின் கடலோரத்தில் ஒருநாள் உலாவிக் கொண்டிருக்கையில் ஒரு நாக கன்னிகையைப் பார்வையுற்ருன். அவள் மிக அழகாய் இருந்ததால் அவள் மேல் காதலுற்ருன். அவளும் இணங்கவே நிதமும் தாழ்வரையில் அவளைக் கண்டு குலாவி வந்தான். சில காலம் கழித்து அவளுக்குப் பிள்ளைப்பேறு உண்டாயிற்று. நாக கன்னிகை மிகவும் பயம் அடைந்தாள். சோழ ராஜன் அந்தக் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்துத் தொண்டை என்னும் கொடியை அந்த குழந்தை காலில் சுற்றி, அப்பெட்டியை கடலில் விட்டு விடும்படி சொன்னுன். கொஞ்சம் நாள் கழித்து ஒரு செம்படவன் அந்தக் குழவியைப் பெட்டியுடன் கண்டெடுத்து அரசனிடம் கொண்டு போய்க் கொடுத்தான். அவ்வரசனும் அக்குழவியைத் தன் மகனுகவே கருதி வளர்த்து வந்தான். வயது வந்ததும் காஞ்சிக்குச் சிற்றரசனுன். இந்தக் கதையைத்தான் நாம் மணிமேகலையில் காண்கிருேம். பெரும் பாணுற்றுப்படையில் ஐந்துவகை நிலங்களைக் கூறி, பாலை நிலத்தில் நீர்பெயர்த்து எனும் பகுதியிலிருந்து யாழ் இசைக்கும் பெரும் பாணர் வெவ்வேறு நிலங்களைத் தாண்டிக் காஞ்சியில் இளந்திரையன் சபைக்கு வருகிருர். காஞ்சியிலிருக்கும் விஷ்ணுவின் கோயிலை "வெஃகா" என்று கூறுகிருர். மேலும் அவர் காஞ்சியில் அனேக உற்சவங்கள் பல்வேறு மக்களுக்குத் தக்கவாறு நடைபெற்றன என்று குறிப்பிட்டு இருக்கிருர். ருத்ரன் கண்ணன் பட்டினப்பாலை என்னும் இன்னொரு பாடலில்

சோழ நாட்டுத் தலை நகராகிய காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பு மிக்கப் பாடி சோழ அரசனிடமிருந்து பல வெகுமதிகள் பெற்ருர். அப்போது ஆண்ட சோழன் கரிகாலன். மேலும் காவிரிப்பூம்பட்டின வர்ணனையும் காஞ்சி வர்ணனையும் ஏறக் குறைய ஒரே மாதிரி யிருப்பதால் இளந்திரையனும் கரிகால் சோழனும் ஒரே சமயத்தில் இருந்தார்களெனத் தெரிகின்றது. சரித்திரப்படி கரிகாலனுக்குப்பின் வந்த அதியமான் காலத்தில் ஔவைபிராட்டி அம் மன்னரிடமிருந்து இளந்திரையனிடம் தூது சென்று அவனைச் சமாதான முறைகளில் செல்லும்படி கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. இந்த இளந்திரையின், திரையனூர் என்னும் நகரை உருவாக்கினுன். காஞ்சியில் தெற்குப் பாகத்தில் திரையனேரி என்று ஒரு ஏரி திகழ்கிறது. மேலும் இப்பொழுது விளங்கும் மிஷன் ஆஸ்பத்திரி சுற்று வட்டாரங்கள் ஒரு காலத்தில் திரையனின் அரண்மனையாக இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இளந்திரையன் காஞ்சிமா நகரை ஆண்டான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அவன் வடநாட்டை (வேங்கடம் முதலிய இடங்களை) ஆண்டவிவரம் சரியாகத் தெரியவில்லை. இருப்பினும், தொண்டை மண்டலம் அல்லது தொண்டை நாடு என்று வேங்கடத்தின் தெற்கேயுள்ள நாடுகள் கூறப்படுவதால், அவன் வேங்கடத்தையும் அரசு புரிந்தான் என்று சொல்வதில் தவறு இல்லை.

அத்தியாயம் 2

# திருப்பதியை நிர்மாணித்தவன்—தொண்டைமான்

**தொண்டைமானும் முதலாழ்வார்களும் :**

போன அத்தியாயத்தில் சொன்ன வரலாற்றின்படி தொண்டைமண்டலத்தை ஆண்ட தொண்டைமான் இளந்திரையன் புள்ளிக்குப் பின் வந்தவனாக இருக்க வேண்டும். மேலும் அவன் தலையாலங்கானத்தில் வெற்றி பெற்ற பாண்டியன்காலத்தவனாக இருத்தல் வேண்டும். நக்கீரர் காலத்தவனாயும் இருத்தல் வேண்டும், நக்கீரரும் இந்தப் பாண்டியனும் மதுரையில் மூன்றாவது சங்ககாலத்தவர். இளந்திரையன் கரிகாலன் காலத்தவனாக இருந்ததாலும் நக்கீரரின் அகம் 340-ல் திரையனைப் பவித்திரியின் அரசனாகப் போற்றப்படுவதாலும், காஞ்சியின் இளந்திரையனும் ஒன்றே என ஊகிக்க இடமிருக்கிறது. இளந்திரையன் காஞ்சியில் வெஃகாவைப் பாடியிருக்கிறான். முதலாழ்வார்களும் காஞ்சியில் வெஃகாவையும் வேங்கடத்தையும் கிட்டத் தட்ட ஒரு சமமாகப் பாடியிருக்கிறார்கள். மேலும் பொய்கை ஆழ்வாரும் திருமழிசை ஆழ்வாரும் காஞ்சியின் பேரோடு இணைக்கப்பட்டுள்ளார்கள். பொய்கையார் காஞ்சியில் மாலை வணங்கும் போது செய்யுளில் திரையினையும் குறிப்பிட்டிருக்கிறார். இச் செய்யுள் பொய்கையார் பாடியது என்றும் பொய்கை ஆழ்வார் பாடியது அன்று என்றும் ஒரு வழக்கு. ஆனால் 12–ம் நூற்றாண்டில் யாப் பெருங் கலக்காரிகைக்கு உரையாடர் மேற்படி செய்யுளை பொய்கை ஆழ்வாருக்கு உரித்தது என விளக்குகிறார். ஆகையால் பொய்கை ஆழ்வாரும் பொய்கையாரும் ஒருவரே.

ஒரு சமயம் பொய்கை, பேய், பூதத்தாழ்வார் மூவரும் காஞ்சிக்கு வந்து வெஃகாவிலிருக்கும் மாலை தரிசிக்கப் போனார்கள் அப்பொழுது, அவர்கள் திருமழிசைப்பிரானையும் அங்கு தரிசித்தார்கள். திருமழிசைப்பிரான் வெஃகாவிலேயே இருந்து கொண்டு மாலுக்குப் பணிபுரிந்து வந்ததாகத் தெரிகிறது.

ஒரு சமயம் கணிகண்ணன் என்னும் பிரபு திருமழிசைப் பிரானுக்குச் சீடனாக இருந்தான். இக் கண்ணனுக்கு அந் நாட்டு அரசன் திரையன் என்பவனிடம் செல்வாக்கு இருந்தது

ஒரு கால் இவ்வரசனே இளந்திரையனாக இருந்திருக்கக் கூடும். கணி கண்ணன் ஆழ்வாருக்கு விசுவாசத்துடன் பணி புரிய தனக்கு ஒரு பெண்மணியை உதவிக்கு வைத்துக் கொண்டான். அக்கிழாத்தி. ஆழ்வாருக்கு மிக்க ஊக்கத்துடன் பணி புரிய கடவுள் அருளால் குறையா அழகும் தேயா இளமையும் பெற்றாள். அந் நாட்டு அரசனும் அக் கிழாத்தி மேல் மையல் இட்டு அவளைத் தன் அண்மையிலேயே வைத்துக் கொண்டான். அவள் மூலம் ஆழ்வார் பெருமையை உணர்ந்து, அவ் வாழ்வாரைத் தன் அவைக்குக் கொண்டு வரும்படி கணி கண்ணனுக்கு ஆக்ஞை யிட்டான். கணிகண்ணன் மறுக்கவே அவனைக் காஞ்சியை விட்டு வெளியேறும்படி சொன்னான். இதை அவன் ஆழ்வாரிடமும் சொல்லி, வெஃகாவிலிருக்கும் மாலிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியே போகலானான். இதைக் கண்ட ஆழ்வார் தானும் அவனுடன் செல்ல ஆரம்பித்து கடவுளையும் "பைந் நாகப்பாய் சுருட்டிக்கொண்டு ஏகுக" என்று கூற பகவானும் ஆழ்வார் கட்டளைக் கிணங்க நாடு கடந்து அவர்களுடன் சென்றார் என்று.

இதிலிருந்து திருமழிசைப்பிரான் இளந்திரையன்காலத்தின ராக இருந்தார் என்றும் மேற்கூறியபடி அதே சமயத்தில் பொய்கை ஆழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகியோரும் இருந்தார்கள் என்றும், மேலும் பொய்கையாழ்வார் திரையனைத் தான் பாடலில் பாடினார் என்றும் தெரிகிறது, ஆகவே நான்கு ஆழ்வார்களும் இளந்திரையன் காலத்தவர்கள். இதை வைத்துக் கொண்டு திருப்பதியின் வரலாற்றை ஆரம்பிக்க நமக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்போது நாம் புராண வழக்கில் தொண்டைமானைப்பற்றிக் கூறும் வரலாற்றைக் கவனிப்போம்.

**திருப்பதியின் புராண வரலாறு :**

திருப்பதி கோவிலின் உற்பத்தியைப் புராணங்களில் பல வழக்குகளாக கூறப்பட்டு இருக்கின்றன. பதினொரு புராணங் களில் திருப்பதியின் ஆரம்பத்தை பற்றிக் கூறுவது நமக்கு வியப்பைத் தரும். இப்புராணங்களில் எல்லாம் பெரும் பாலும் அமானுஷ்யமான சங்கதிகள் தான் உண்டு. அப்படியிருந்தும் கூர்ந்து நோக்கிக் கவனித்தால், சரித்திர வரலாறு இருப்பது தெரியவரும். புராணக் கதை பின்வருமாறு :—

பிருகு மஹரிஷி திரு மூர்த்திகளில் யார் மேலானவர் என்பதை நிர்ணயிக்க பல்வேறு மஹரிஷிகளால் ஏவப்பட்டு அவர் நேராக அம்மூர்த்திகளின் இருப்பிடம் சென்று அவர்களை

பரீக்ஷிக்க ஆரம்பித்தார். முதலாக சத்திய லோகம் போய் பிரம்மாவுடைய ஆலோசனை மண்டபத்திற்குச் சென்றார். பிரம்மா தன் பரிவாரங்களுடன் ஆலோசனையிலிருந்ததால் அந்தரிஷியை தக்க மரியாதையுடன் வரவேற்கவில்லை. மேலும் அந்த ரிஷி தனது குமாரர் ஆகையால் கொஞ்சம் சிரத்தை குறைவாகவே இருந்து விட்டார். மஹரிஷியும் பிரம்மாவுக்குத் தான் என்ற பாவம் இருப்பதை உணர்ந்து பிறகு கைலாயத்திற்கு ஏகினார். அங்கு சிவபெருமான் உமையாளுடன் போகத்திலிருக்க, உமையாள் பிருகு மஹரிஷி அங்கு வந்ததை விரும்பாததை பெருமானுக்கு எடுத்துரைக்க, முக்கண்ணனும் கோபாவேசத்துடன் அவரைக் கைலாயத்திருந்து துரத்தி விட்டார். மேற்கொண்டு பிருகு ஸ்ரீ வைகுண்டம் ஏகினார், அங்கு ஸ்ரீமந்நாராயணன் தேவிகளுடனும் இதர பரிவாரங் களுடனும் இருந்து கொண்டு யோக நித்திரையில் அமர்ந் திருந்தார். உலகத்தைக்காக்கும் அப்பெருமான் யோக நித்திரையில் இருப்பது நன்றன்று என நினைத்து மஹரிஷி அப்பெருமான் மார்பில் தன் காலால் உதைத்து அவரை எழுப்பினார். திருமாலும் விழித்துக் கொண்டு மஹரிஷிக்குத் தக்க மரியாதைகள் கொடுக்காததற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டு, அவர் கால்கள் வலிபொருக்காமல் இருக்கின்றனவா என்று கேட்டு காலை வலி போக வருடி விட்டார். பிருகுவும் பூமியிலிருக்கும் ரிஷிகளுக்கு இம்மூவர்களுடைய செயல்களையும் உரைக்க, அவர்கள் ஒரு மிக்க விஷ்ணுவே மேலானவர், மற்றவர்கள் அவர்களது உணர்ச்சிகளுக்கு வசப்பட்டவர்கள் என்று தெரிவித்துக் கொண்டனர்.

திருமாலின் மார்பில் இயங்கும் இலக்குமி நாதனிடம் குறையிட்டுக் கொண்டாள். அதாவது மஹரிஷியின் உதை தன் மேல் பட்டது; அதனால் தனக்கு ஒரு இழிவு காட்டினதாகும். மேலும் மஹரிஷி மஹாவிஷ்ணுவுக்கு உரிய மரியாதைகளைக் காட்டவில்லை. எனவே நாதனால் தனக்கு அவமானம் ஏற்பட்டது என்று நொந்து கொண்டனள். நாதன் எவ்வளவு கூறியும் இலக்குமி கோபம் தணியாதவளாய் இனி மாலின் மார்பில் இருப்பதில்லை என்று சொல்லிக் கொண்டு வைகுண்டத்தை விட்டு ஏகிவிட்டாள். திருமாலுக்கு இது மிக்க ஏமாற்றத்தை உண்டாக்கியது. ஆகவே அவர் ஓர் நல்ல இடத்தைத் தேடி அங்குபோய் இருக்க ஆசைப்பட்டார். அப்போது சேஷாசல மலை அப்படியான நல்ல இடமாயிருப்பதை உணர்ந்து அங்கு வந்து வசிக்கலானார். அவர் அங்கு வந்திருப்பதை உணர்ந்த ரிஷிக்குழாங்கள் அவரிடம் போய்

தவம் செய்ய ஆரம்பித்தனர். மேலும், தேவர்கள் எல்லோரும் திருமாலுக்கு உகந்த வஸ்துக்களை அங்கு கொண்டு வந்து கொடுத்தனர். இம்மாதிரியாக விஷ்ணு ஸ்ரீவைகுண்டத்தை விட்டு இங்கு வந்து வசிக்கலானார்.

இப்படி இருக்கும் போது ஒரு மனு அந்தரம் வந்த பொழுது அவர் ஓர் பிரம்மாண்ட வராக ரூபம் எடுத்து பூமி தேவியைப் பாதாளத்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்தார். இதைத்தான் மேல் திருப்பதியில் ஸ்வாமி புஷ்கரிணியின் மேற்குக்கரையில் விஷ்ணு தீர்த்தம் என்னுமிடத்தில் ஸ்ரீவராஹ மூர்த்தியாக எழுந்தருளி அருள் புரிகின்றார். பிறகு பலகாலம் கழித்து, தன்னைக் குறித்துக் கடுந்தவம் செய்யும் ஒரு பக்தனுக்கு தரிசனம் கொடுக்க எண்ணி ஸ்ரீநிவாஸ மூர்த்தியாக உருக் கொண்டு, அவன் ஆசைக்கிணங்க இலக்குமியை மார்பில் ஏந்தி, அவனுக்குத் தரிசனம் கொடுத்துவிட்டுப் பூமியின் அடியில் பலகாலம் மண்ணால் மூடிக்கிடந்தார். பிறகு ஒரு சமயம் இடையர்கள் பலர் தங்களது ஆநிரைகளைக் காட்டில் மேய்க்கப் போய் இருக்கையில் ஆக்கள் ஒருபுற்றின் மத்தியில் நின்று கொண்டு தாங்களாகவே பாலை முழுக்க சொரிந்து விட்டு வீட்டுக்குத் திரும்புகையில் அவைகளிடம் கறவையில்லாது இருப்பதைக் கண்டார்கள். இந்நிகழ்ச்சியை அப்பசுக்களுக்கு உரியோனை மன்னனிடம் தெரிவிக்க, அவனும் இதை விசாரிக்க அப்புற்றிடம் வந்து அதைத் தோண்ட, அங்கு ஒரு சிறிய கோவிலில் ஒரு பெருமாள் சிலை இருப்பதைக் கண்டான். உடனே அவ்விடத்தை நன்கு தோண்டி அங்கிருந்த சிறிய கோயிலைச் சுற்றிச் செங்கல்லாலான ஒரு கோயிலை எழுப்பி, அக்கோவிலுக்குத் தக்க செய்வனகள் செய்தான். இதுதான் உலகம் போற்றும் ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில்.

**புராணத்திலிருக்கும் தொண்டைமான் ராஜா :**

புற்றிலிருந்து எம்பெருமானை எடுத்து அவனுக்குக் கோவில் ஒன்றைக் கட்டிக் கோவிலுக்குரிய வழிபாடுகளை வகுத்த தொண்டைமான் யார் என்பதை நாம் அறிய வேண்டும். புராணத்தில் கூறப்பட்டிருக்கும் தொண்டைமானைப் பற்றிக் கொஞ்சம் தீர்க்கமாக விசாரிப்போம். இந்த தொண்டைமான் திருப்பதியில் குடிகொண்ட விஷ்ணுவினிடம் பக்தி கொண்டவன்; பகவானுக்கும் அவனிடம் அன்பு இருந்ததால் அவன் சண்டைக்குப் போகும் போது தனது சங்கு சக்கரங்களை அவனுக்குக் கொடுத்தனுப்பினார். பிரபந்தங்களிலும் கடவுளு டைய அருளுக்குப் பாத்திரமாகி மேற்கூறிய வரப்பிரசாதங்

களையும் கடவுளிடமிருந்தே அடைந்து கொண்டான் என ஆழ்வார்கள் கூறுகின்றனர். ஆகவே, அக்காலத்தில் இச்சம்பவம் ஒரான் வழியாக வந்த ஓர் சம்பவம். புராணக் கதையின்படி திருப்பதியில் எழுந்தருளிய திருமால் ஸ்ரீமஹாலக்ஷ்மி தன் மார்பை விட்டுச் சென்று விட்டதால் மனம் நொந்து காடுகளில் வேட்டையாடுதல் ஆகிய காரியங்களில் ஈடுபடலாயினர். ஒரு சமயம் அவர் வேட்டையாடிக் கொண்டிருக்கும் போது ஓர் சாரலில் மிகுந்த அழகுள்ள ஒரு மாதைக் கண்டார். அம்மாது ஆகாச ராஜனின் மகளேயாவள். அம்மாது குழந்தையா யிருக்கும் போது ஆகாசராஜன் காட்டில் போய்க் கொண்டிருக் கும் போது தெய்வானுக் கிரகத்தால் அக்குழந்தையைக் கண் டெடுத்து வளர்த்து வந்தான். இவ்வாகாச ராஜன் தொண்டை மான் குலத்தவன். அவனுடைய இளைய சகோதரன் தொண்டை மான் எனும் பெயர் பூண்டு அண்ணனுக்கு அரசியல் காரியங் களில் பணி புரியலானன். அவனே திருப்பதியைச் சுற்றியுள்ள வட்டாரங்களை ஆண்டு வந்தான். புராண வரலாற்றுப்படி ஆகாசராஜனின் மகளைத் திருப்பதியிலிருக்கும் திருமாலுக்குத் திருமணம் செய்வித்தான். இராமாயணத்தில் சீதை தான் பழி பாவமற்றவள் என்பதை நிரூபிக்கத் தீயில் இறங்கும் போது ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் தான் திரும்பவும் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்று பிரார்த்தித்தாள். அப்பிரார்த்தனைக் கிணங்க சீதை ஆகாசராஜன் பெண்ணாக வந்து ஸ்ரீபதமாவதி என்ற பெயர் பெற்று திருப்பதி ஸ்ரீவெங்கடேசப் பெருமாளை மணந்து கொண்டாள்.

ஆகாசராஜன் கொஞ்ச நாள் கழித்து இறந்தான். அவனுக்குக் குழந்தை பத்மாவதியைக் காட்டில் கண்டெடுத்துக் கொண்டு வந்த பிறகு தன் ராணி மூலம் ஒரு ஆண்மகவு ஈன்றான். ஏற்கனவே ஆகாசராஜா ராஜ்ய காரியங்களைத் தன் தம்பியிடம் கொடுத்து வைத்திருந்ததால் ஆகாசராஜனுக்குப் பின் தம்பிக்கும், பிள்ளைக்கும் இடையே யார் அரசுபுரிவது என்பது பற்றி சண்டையுண்டாயிற்று. இருவரும் பெரிய போர் வீரர்களாகையால் சண்டையில் ஜயம் ஒருவருக்கும் கிடைக்கா மல் இருந்தது. அப்போது தான் தம்பி தொண்டைமானுக்குக் கடவுள் தன் சங்கு சக்கரத்தைக் கொடுத்து உதவினர். சண்டையில் ஸ்திரமான முடிவு ஏற்படாது இருக்கவே அவர் களிருவரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். திருப் பதியும் அதன் சுற்றிலுமுள்ள இடங்களைத் தம்பி தொண்டை மான் ஆளுவது என்றும் ஆகாசராஜனது மற்ற பிரதேசங்களை அவன் பிள்ளை ஆளுவது என்றும் ஒப்புக் கொண்டார்கள்.

தொண்டைமான் பழைய தலைநகரான நாராயணவரத்திலிருந்து தன் பகுதியை ஆண்டான். மற்றவன் ஆற்றின் கிழக்குப் பகுதிகளை ஆண்டான். தொண்டைமான் ஆட்சியில் திருப்பதி கோவிலுக்கு அநேக பணிகளும் ஏற்பாடுகளும் வழிபாடுகளும் செய்துவித்தான். அவன் ஏற்படுத்திய வழிபாடுகள் இன்றும் பின்பற்றப் படுகின்றன. இவன் ஆட்சியில் கோவிலுக்குச் சேவைகள் செய்ய தான் யார் கண்ணிலும் படாமல் போக ஓர் மறைவான வழியைக் கட்டிக் கொண்டான் என்று கூறப் படுகிறது. அவனே கோவிலில் அநேக உற்சவங்களை ஏற்படுத்தி அதில் முக்கியமாகப் புரட்டாசி மாசத்தில் பிரமமோத்சவத்தை நடத்தவழி செய்தான். இந்த உத்ஸவத்தை தான் திருமழிசை பிரானும் ஓண விழவு என்கிறார் போலும்.

**தொண்டைமான் ராஜா உண்மை வரலாற்று அரசனா ?**

தொண்டைமான் சரித்திரத்தில் ஓர் உண்மையான அரசன் தான் என நம்ப வேண்டியிருக்கிறது. இவன் அண்ணன் ஆகாச ராஜாவைப் பற்றிப் பல புராண வரலாறுகள் இருப்பினும் இவன் திருப்பதி கோயிலைக் கட்டி அதில் வழிபாடுகளை ஒழுங்கு படுத்தினதால், இவன் உண்மையாக வாழ்ந்த ஓர் அரசன் எனத் தெரிகிறது. புராண வரலாற்றின்படி இக்கோவில் கலியுகத்தில் உண்டானதாகவும், அப்போது கலிபிறந்து வெகு நாட்களாக ஆகி, **விக்ரமாதித்திய சகாப்தம்** ஏற்கனவே நடந்து வருகிற தென்றும் **சாகா** என்னும் சகாப்தம் இன்னும் ஆரம்பமாகவில்லை என்றும் தெரிகிறது. இதன்படி பார்த்தால் இந்த கோயில் கி.மு. 57, 58–லிருந்து கி.பி. 78-க்குள் உண்டாகி இருக்க வேண்டு மென்று தெரிகிறது. திரையனுடைய ஆட்சிப்படி பார்க்கினும் ஏறக்குறைய இந்தக் காலமே நமக்குக் கிடைக்கிறது. ஆயினும் நமக்கு தொண்டைமான்கள் மூவர் கிடைக்கின்றனர். அதாவது தொண்டைமான் (தொண்டைமான் சக்ரவர்த்தி) புராணத்தின் படி, திரையன்—வடக்கு தொண்டைமண்டலத்தை ஆண்டவன், தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியிலிருந்து ஆண்டவன். இம்மூவரும் வெவ்வேறா அல்லது ஒருவரேயா என்பது ஆராயப் படவேண்டும்.

**தொண்டைமான் ராஜாவும் தொண்டைமான் இளந்திரையனும் ஒன்றா ?**

முன்பு பவித்திரியில் ஆண்டதிரையனும் காஞ்சியை ஆண்ட இளந்திரையனும் ஒன்று என்பதில் கொஞ்சம் ஐயம் இருப்பதை அறிந்தோம். இருவரும் வெவ்வேறே என வைத்துக் கொள்ளு வோம். இளந்திரையனுக்கு இளம் என்னும் அடைமொழி

இருப்பதால் அவனுக்கு முன் ஒரு முதுத்திரையன் இருந்திருக்க வேண்டும். அப்படி வைத்துக் கொண்டால் திரையனுக்குப்பின் கொஞ்ச காலம் கழித்து இளந்திரையன் வந்திருக்க வேண்டும். திரையன் என்பது குடிப்பெயர். தொண்டையர்களுக்கு அதிபதி அல்லது தொண்டை நாட்டு மன்னன் தொண்டைமான் எனக் கொள்ளலாம். புராணங்களில் கூடத்தொண்டைமான் அரசர்களைச் சோழ வம்சத்தவர் எனக்கூறியுள்ளார். திருப்பதி கோவிலை ஆக்கிய தொண்டைமானும், ஒரு சோழ அரசனுக்கும் ஒரு தொண்டைமான் பெண்ணுக்கும் பிறந்தவன் எனக்கூறி, அந்தச் சோழ அரசன் அத்தொண்டைமான் பெண்ணை ஓர் தனி வழியே சென்று இரகசிய இடத்தில் காதலித்தான் எனக் கூறுகிறது. இந்நிகழ்ச்சி பெரும் பாணாற்றுப் படையில் கூறப் பட்டுத் தொண்டைமான் இளந்திரனுடைய கொடையைப் பாராட்டுகிறது. இதை வைத்துக் கொண்டு திருப்பதி தொண்டைமானும் தொண்டைமான் இளந்திரையனும் ஒரு வனே என்று சொல்ல முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

**திருப்பதி தொண்டைமான் ராஜாவும் தொண்டைமான் இளந் திரையனும் வெவ்வேறு :**

முன்பாக பவத்திரியிலிருந்து ஆண்ட தொண்டைமான் திருப்பதியைச் சுற்றியுள்ள நாட்டையாண்டதாகவும், தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியிலிருந்து ஆண்டதாக வும், புராண வரலாற்றின்படி திருப்பதியில் கடவுளுக்குக் கோவில் கட்டி வழிபாடுகள் செய்தவன் ஒரு தொண்டைமான் என்றும் கண்டோம். இறுதியில் சொன்ன தொண்டை மானுக்கே கடவுள் ஆயுதங்களைக் கொடுத்துத் திருவஷ்டாக்ஷரம் என்னும் மகாமந்திரத்தை உபதேசம் செய்ததாகவும் கொள்ள லாம். இதிலிருந்து பொதுவாக வேங்கடத்தையும், அதைச் சுற்றிலுமுள்ள தொண்டை மண்டல நாட்டையும் தொண்டை மண்டல நாட்டார்கள் எனக் கொள்ளலாம். புராணத்தில் வரும் தொண்டைமான் சோழ அரசனுடைய பிள்ளை என்றும் ஒரு தொண்டை மண்டல அரசியை அவ்வரசன் காதலித்த தாகவும் அவர்களுக்குப் பிறந்தவன் எனவும் தெரிகிறது. இளந்திரையனைப் பற்றி பெரும் பாணாற்றுப்படை வாயிலாக நாம் அறிவது யாதெனில் அவன் ஒரு சோழ அரசனுக்கும் ஒரு நாக கன்னிகைக்கும் பிறந்ததாகத் தெரிகிறது. இதையே மணி மேகலையும் குறிப்பிடுகிறது. ஆகவே தொண்டைமான் இளந் திரையன் சோழ வம்சத்தவன், கரிகால் சோழனுக்கு ஓரிரண்டு பரம்பரைக்கு அடுத்து வந்தவன் எனத்தெரிகிறது. மணி



திருக்காரைக் கோவிலும் குளமும்




ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி மோஹினி அலங்காரம்

மேகலைக்கும் பெரும் பாணாற்றுப் படைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. சோழ அரசன் நாக கன்னிகையை காவிரிப்பூம் பட்டினத்தில் காதலித்தான் என்று மணிமேகலையிலும், இச் சம்பவம் நாகப்பட்டினத்தில் நடந்ததென்று பெரும் பாணாற்றுப் படையிலும் சொல்லப்பட்டுள்ளது. இது எப்படியாயினும் ஆகுக. திருப்பதி தொண்டமானும் தொண்டமான் இளந்திரையனும் ஒருவனா என்ற கேள்விக்கு விடை, இருக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களையும் நோக்கின் அவர்கள் ஒருவனே எனக் கொள்ளலாம்; ஆனால் சந்தேக மறக்கொள்ள இடமில்லை. பெரும் பாணாற்றுப் படையில் இளந்திரையனைப் பற்றிக் கூறுகையில் திருப்பதியைப் பற்றி ஒரு குறிப்பு கூடவரவில்லை இந்த ஒரே காரணத்தினால் அவர்கள் இருவரும் ஒருவரே என்று குறிப்பிடத் தயக்கமாயிருக்கிறது. பொதுவாக நோக்கின் தொண்டை மண்டலத்தை தொண்டமான் அரசர்கள் ஆண்டார்கள் என்றும் அவர்களுள் ஒருவனும் மிகச் சிறந்தவனுமானவன் இளந்திரையன் என்றும் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளின் திருப்பதியில் இருந்த தொண்டமான் இளந்திரையனுக்கு முற்பட்டவனாக இருந்திருக்கலாம் என ஊகிக்கலாம்.

## அத்தியாயம் 3

# திருப்பதியும் முதலாழ்வார்களும்

### நாலாயிரத்தில் திருப்பதி

திருப்பதியின் ஆதிவரலாறு பற்றி நமக்கு அதிக விளக்கம் தருவது நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களேயாகும். மற்ற இலக்கிய நூல்களை விட இப்பிரபந்தங்கள் தான் திருப்பதியின் ஆதிவரலாற்றைப் பளிங்குபோல் காண்பிக்கின்றன. இவைகளில் விஷ்ணுவைப் பற்றிப் பன்னிரு ஆழ்வார்களால் போற்றிப்பாடப் பட்ட பாடல்கள் உள்ளன. இப் பூ உலகில் 108 க்ஷேத்திரங்களில் அவ்வாழ்வார்கள் எம்பெருமானைத் தரிச்சித்து அவனை 4000 பாக்களால் தோத்திரம் செய்தார்கள் இப்பிரபந்த நூல் கி. பி. 300–லிருந்து கி. பி. 800-க்குள் தோன்றியது எனக்கருதப் படுகிறது. ஆழ்வார்களில் முதலாழ்வார்களாவார்கள் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் முதலானோர். பொய்கை, பேய்பூதத்தாழ்வார்கள்செந்தமிழில்பாடினோர்கள் எனதிருமங்கை ஆழ்வார் கூறுகிறார். இந் நால்வருடைய சுய சரிதத்தைப் பற்றி நமக்குத் தகவல்கள் கிடையா. ஆயினும் அவர்களுடைய பிரபந்தங்களிலிருந்து ஒருவாறு அவர்கள் இருந்த காலத்தை நிர்ணயிக்கலாம். மேலும் இப்பிரபந்தங்கள் திருப்பதி முதலான கோயில்களைப்பற்றியும் பக்திமார்க்கத்தைப்பற்றியும் நமக்கு விளக்குகின்றன. மேலும் வைஷ்ணவர்கள் வழிபாட்டைப் பற்றியும் பாஞ்சராத்திர வழிபாட்டைப்பற்றியும் விளக்குகின்றன. பாஞ்சராத்திர நூல்கள் வெவ்வேறு மக்கள் கடவுளை எவ்வாறு தொழவேண்டும், ஒரு பக்தன் தன் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும், ஆகிய பல விஷயங்களைப்பற்றிக் கூறுகின்றன. வைஷ்ணவ மதத்தின்படி கடவுள் ஒருவரே ஆயினும் அவரை நாம் அர்ச்சாரூபத்தில் துதிக்கலாம், அவருக்குப் பல குணங்கள் உள; அவர் நம் போற்றுதலை ஏற்று நமக்கு அருள் புரிகின்றார் என்று. ஆழ்வார்களின் பிரபந்தங்கள் இந்த வைஷ்ணவ மதத்தைத்தான் விரிவாக விளக்குகின்றன.

### முதலாழ்வார்களும் அவர்கள் காலமும் :

முதலாழ்வார்கள் எனப்படும் பொய்கை, பூதம், பேயாழ்வார்களின் சரித்திரத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதாயினும், அவர்கள் ஏறக்குறைய ஒரே சமயத்தில் பிறந்தவர்

களாயும், அருகே அருகே உள்ள ஊர்களில் பிறந்தவர்களாயும் உள்ளனர் எனத்தெரிகிறது. அவர்கள் தனி வாழ்க்கை நடத்திக் கொண்டு நாடோடிகளாய் வைஷ்ணவ தலங்களுக்குச் சென்று கடவுளை வணங்கினர்கள். ஓரிரவு மழை மிக்கதாய் இருந்ததால் திருக்கோவலூர் என்ற ஊரில் இவர்களுள் ஒருவர் அங்கிருந்த ஒரு வீட்டின் குறுகிய ரேழியில் போய்த் தங்கினர். அவ்வமயம் மற்றொருவர் கதவைத் தட்டித் தனக்கும் இடம் தரவேண்டும் எனக்கேட்க, முதல்வர் அங்கு ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம். எனக்கூறி அவருக்கு இடம் கொடுத்தார். இருவரும் அமர்ந்திருக்கையில் மற்றொருவர் கதவைத்தட்ட, அவர்கள் திறந்து பார்க்கையில் அவரும் வைஷ்ணவராயிருப்பது கண்டு, "ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம் மூவர் நிற்கலாம்" எனக்கூறி அவரையும் உள்ளே அழைத்து மூவரும் மழை நிற்கும் வரை உள்ளே நின்று கொண்டிருப்பது எனத் திட்டமிட்டுக் கொண்டனர். இம்மூன்று வைஷ்ணவ பக்தர் களும் ஒன்றாகக் கூடியிருக்கும் போது, பகவானால் வாளா விருக்க இயலுமா? ஆகவே அவ்வூர் கோவிலிலிருக்கும் பெருமாள் மஹாலக்ஷ்மியுடன் அங்கு அவர்கள் அறியாத வண்ணம் வந்து, சிறிது சிறிதாகத்தன் உருவைப் பெரிதாக்கிக் கொண்டு அவர்களுக்கு இறுக்கத்தைக் கொடுத்தார்- ஏன் தங்களுக்கு இவ்வளவு நெருக்கம் உண்டானது என முதலில் உணராத அவர்கள் பிறகு இது கடவுளின் அருட்செயல்தான் எனத்தெரிந்து மூவரும் பகவானைத் துதி செய்யவாரம் பித்தனர். ஒவ்வொருவரும் ஒரு நூறு வெண்பாக்களால் பகவானைத்துதிக்கலாயினர். இதுவே **இயற்பா** எனப்படும் பகுதியின் ஒரு பிரிவு ஆகும்.

**இவ்வாழ்வார்களுடைய பிரபந்தங்கள் :**

இம்மூவர்களுள்ளும் முதன்மையரான பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி என்னும் நூறு பாக்கள் கொண்ட பிரபந்தத்தையருளினர். பொய்கையெனில் ஒரு குளம். இவர் வெஃகா என்னும் கோவிலின் அருகில் உள்ள குளத்தில் தோன்றியதால் இவரைப் பொய்கையாழ்வார் என்பர். இவரைப்பற்றி இலக்கிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். முக்கியமாக **யாப்பெருங்கலம்** என்னும் அலங்கார கிரந்தத்துக்கு (கி.மு. 11, 12 நூற்றாண்டு.) உரையாடர் இந்த நூலைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார். அவர் "பொய்கையார் செய்த நூல்" எனினும் குறிப்பிட்ட பாடல்கள் பொய்கை யாழ்வார் பாடியவையேயாகும். அவர் குறிப்பாக செய் யுட்கள் 40, 51 ஆகியவைகளைத் தனது உரையாடலில் குறிப்

பிட்டுள்ளார். ஏனைய இலக்கியப் பெரியோர் ஆழ்வாரைக் குறிப்பிடுகையில் வெண்பாவில் பாடிய பெரியோர் என்றும் சங்கத்தமிழில் வெண்பாப்பா மாலைகளுக்கு எடுத்துக் காட்டாக அப்பாக்களை இயற்றியவர் என்றும் சிறப்பாகக் குறிப்பிட்டு உள்ளனர். ஆகவே ஆழ்வார் வைஷ்ணவராயிருந்தும் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர் என்று சங்க காலப் பெரியோர்களால் போற்றப்பட்டவர். சோழ அரசன் செங்கண் என்பவன், சேர நாட்டு மன்னனான கணைக்கால் இரும் பொறையைப் போரில் தோற்கடித்ததை ஒரு கவி களவழி நாற்பது என்று ஒரு நூலில் பாடியுள்ளார். அதைப்பாடியது பொய்கையாரா என்பது தெரியவில்லை.

திருக்கோவலூரில் அன்று இரவு எம்பெருமானை மூவரும் பாடிய பொழுது, இவர் உலகத்தைத் தகளியாகவும் (எண்ணெயை ஏந்தும் பாத்திரம்), பெருங்கடலை நெய்யாகவும், சூரியனைத்திரியாகவும் பாவிதது, அத் திரியை ஏற்றியவுடன் அவர் இயற்றிய நூற்றுந்தாதி என்னும் பாமாலையைப் பரமனுக்கு அவரது தாமரை அடியில் சமர்ப்பித்துத் தன்னை எங்கும் பரவிய துன்பக் கடலில் இருந்து மீட்க விண்ணப்பிக் கிறார். பூதத்தாழ்வார், அன்பைத் தகளியாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், இன்புருகு சிந்தையைத் திரியாகவும் கொண்டு, "நாராயணனுக்கு ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன்" என்கிறார். மூன்றாமவரான பேயாழ்வார், திருவைக் கண்டேன், பொன் மேனியைக் கண்டேன், காலையில் உதிக்கும் சூரியனின் நிறம் கண்டேன், ஆழியையும் சக்கரத்தையும் கண்டேன், கடல் வண்ணனான திருமாலைக் கண்டேன், திருமாலைக் காண்கையில் இவையெல்லாவற்றையும் கண்டேன் என்கிறார்.

ஆகவே, அன்றிரவு அவர்களால் தங்களது பூதக் கண்ணால் கண்டறியாத எம்பெருமானை ஞானக்கண்ணால் கண்டு, ஒவ்வொருவரும் நூறு பாக்களால் பாடிக் களித்தனர்.

**முதல் நூற்றந்தாதியில் திருப்பதியைப்பற்றி :**

இந் நூற்றந்தாதியில் பொய்கையாழ்வார் 12 முதல் 15 இடங்கள்வரை திருப்பதியைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அவர் திருப்பதியைக் குறிப்பிடுகையில் அத்தலம் மஹா விஷ்ணு தன் கிருபையால் தனது பக்தர்கள் தன்னைத் தொழுவதற்காக இயங்கிய தலங்களில் ஒன்று என்கிறார். இக்குறிப்புகளில் நாம் அத்தலத்தின் சிறப்புகளைப்பற்றி அறிவது மல்லாமல் அத்தலத்திலிருக்கும் தெய்வச்சிலையைப்பற்றி ஏற்பட்ட சில

விபரீதக் கருத்துக்களையும் நாம் நீக்கிக் கொள்ளுமாறு செய்கிறார். முதலாவதாக அச்சிலையின் சில முக்கிய அம்சங்களிலிருந்து அது விஷ்ணுவின் சிலையா அல்லது வேறு ஏதாவது சிலையா என்பதைப்பற்றிய கேள்விகள் தோன்றும். இது பற்றி ஆழ்ந்து நோக்குமுன் ஆழ்வார் சொல்வதைக் கவனிப்போம்.

இத்தருணத்தில், பாக்கள் 5, 74 ஆகியவற்றை ஆராய்வோம் :—

**" அரன்நாரணன் நாமம் ஆன்விடைபுள்ளூர்தி
உறைநூல் மறையுறையும் கோவில் வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையது வேல்நேமி
உருவம் எரிகார் மேனி யொன்று "** (5)

**" ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான நிழல் மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூ மகளான் வார் சடையான் நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு "** (74)

முதற்பாவில் அவன் பெயர் அரன், நாரணன், அவன் வாஹனம் எருமை, கருடன்; அவன் பிரமாணம் ஆகமம், வேதம்; வாசஸ்தலம் கைலாயமலை, திருப்பாற்கடல்; தொழில் அழிப்பது ரக்ஷிப்பது; ஆயுதம் வேல், சக்கரம்; ஒருவன் நெருப்பின் நிறம்; இன்னொருவன் கார்மேனி வண்ணன் என்று, கூறுகிறார். இரண்டாவது பாவில், எருதை வாஹனமாக உடையவன், கருடன்மேல் ஏறுபவன், திரிபுறம் எரித்தவன், இரணியன் வயிறைக் கிழித்தவன், விபூதியால் பூசப்பட்டவன, கார்மேனி வண்ணன், ஒரு பாகத்தில் பார்வதியை உடையவன், ஒரு பாகத்தில் தாமரையாளைக் கொண்டவன், தலை சடையுடையவன், கிரீடம் தரித்தவன் கங்கையைத் தலையில் தரித்தவன், நீண்ட திருவடியில் கங்கை (திருவிக்கிரமாவதாரத்தின் போது)யைக் கொண்டவன் என்று கூறுகிறார்.

ஆகவே, வேங்கடத்தில் இருக்கும் மூர்த்தியை இப்பாக்களைக் கொண்டு, ஹரியும், ஹரனும் சேர்த்தியாயிருக்கின்றனரென்றும் ஆகவே அத்திருக்கோவில் ஓர் சிவன் கோவில் எனவும் ஒரு வாதம் உண்டு.

இப்போது. இவ்விருபாக்களையும் உற்று நோக்கின், அவைகள் வேங்கடம் அல்லது திருப்பதியிலிருக்கும் மூர்த்தியைத் தான் கூறுகிறதென்று ஸ்பஷ்டமாகத் தெரியவில்லை ஆயினும்

இவ்வாழ்வார் திருப்பதியிலிருக்கும் மூர்த்தியை இழைந்திருக்கிறார். ஆகையாலும், அம்மூர்த்தியின் வடிவில் சில அம்சங்கள் அசாதாரணமாயிருப்பதாலும் மேற்கூறிய பாக்கள் ஒரு வாதத்திற்கு உட்படுமோ என்றும் ஒரு ஐயம் எழும் ஆனால் ஆழ்வாருடைய நோக்கு மற்ற பாகங்களிலிருந்து திருமாலையே வழிபடுவதில் ஊன்றியிருப்பதாலும் பலவேறு இடங்களில் சிவனை விஷ்ணுவின் ஒரு பாகம் என ஸ்பஷ்டமாகக் கூறுவதாலும் இம்மூர்த்தி விஷ்ணுமூர்த்தியே, விஷ்ணு சின்னங்கள் இல்லாமல் சிவ சின்னங்கள் இருந்தால் அச்சின்னங்களுக்குடையவன் விஷ்ணுவின் ஒரு பாகத்தில் தரிக்கப்பட்டவன் என்கிறது.

முதலில் வைஷ்ணவர்களுக்கு முக்கியமான தலங்கள் நூற்றெட்டு என்றும் சைவர்களுக்கு முக்கியத் தலங்கள் ஆயிரத்தெட்டு என்றும் கணக்கிடப்படுள்ளன. இவ்வாழ்வாரும் மற்றைய ஆழ்வார்களும் வைணவத் தலங்களைப் பற்றியே பாடியுள்ளனரேயன்றி ஓரிடத்திலாவது சிவத்தலங்களைப்பற்றி பாடியது கிடையாது. இவர் பாடிய வைணவத் தலங்களில் சில—ஸ்ரீரங்கம் (6 செய்யுள்கள்), வேங்கடம் (அநேக செய்யுள்களில்) விண்ணகர், வெஃகா, திருக்கோவலூர் (77 செய்யுட்கள்). இவற்றுள் விண்ணகர் என்பது வைகுந்தத்தைக் குறிக்கும், அல்லது கும்பகோணத்துக்கு அருகிலிருக்கும் விண்ணகர் என்னும் தலத்தைக்குறிக்கும். ஆனால் செய்யுளில் குறிப்பிட்டுள்ளபடி பெருமாள் நின்ற கோலத்தில் இருக்கிறார். மற்றையதலங்கள் காஞ்சி என்னும் அவருடைய பிறப்பிடத்திலிருந்து மிகத் தொலைவில்லாத இடங்களாகும். அவற்றுள், ஸ்ரீரங்கம் சிறிது தொலைவிலிருந்தாலும் அத்தலத்தின் மகிமை அப்போது நன்கு பரவியிருந்ததால் அத்தலத்தைப் பாடினார். இவ்வாழ்வார் பல தலங்களுக்கு சென்றவராயிருப்பினும் காஞ்சிக்கு அருகாமையிலுள்ள திருப்பதியைப் (வேங்கடம்) பற்றி நன்கு அறிந்திருந்ததால் அத்தலத்தைப்பற்றி விவரமாக அநேக இடங்களில் பாடியுள்ளார். செய்யுள் 26ல், ''வானோர் மனச்சுடரைத் தூண்டு மலை'' என்கிறார். 37-ல் கூறும் போது வேதியர்கள் நித்தியமும் தூப தீபங்களையும் புஷ்பம் தீர்த்தங்களையும் எடுத்துக் கொண்டு பலதிசைகளிலிருந்து வந்து ''வெண் சங்கம் ஊதிய வாய் மாலுகந்த வூரி'' லிருக்கும் கடவுளைத் தொழுகிறார்கள் என்கிறார். 39-ல் வேங்கடத்தைப் பற்றிக் கூறும் போது அத்தலத்தில் வராஹ மூர்த்தியாய் உலகை எடுத்தவனும், நீரோதமா கடலில் கிடந்திருப்பவனும் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்தவனும் ஆகிய

திருமால் நின்று கொண்டு காட்சியளிக்கிறார் என்று கூறுகிறார். 40-ல் வேங்கடத்தைப் பற்றிக் கூறும் போது, அங்குள்ள யானைகள், விண் மீன்களைக் கண்டு, குறவர்கள் கையிலிருக்கும் தீப்பந்தம் என நினைத்து அஞ்சும் என்கிறார். 68 ல் பொதுவாக பரமபதத்திலிருப்பவனும், வேங்கடத்திலிருப்பவனும், நான்கு வேதங்களிலிருப்பவனுமான திருமால் என்கிறார். 76-ல் சீரான் திருவேங்கடம் அதாவது திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள திருமால் உலகத்தையும் அளந்தவன் என்கிறார். 77—ல் திருவேங்கடம், விண்ணகர், வெஃகா திருக்கோவலூர். ஆகிய இத்தலங்களில் திருமால் நின்று கொண்டும், சயனித்துக் கொண்டும் நடந்து கொண்டும் காட்சியளிக்கிறார் என்கிறார். 82—ல் வேங்கடத்தைப்பற்றிக் கூறுவது கவனிக்கத் தக்கது.

" படையாரும் வாள்கண்ணார் பாரசிநாள் பைம்பூம்
தொடையிலேந்திய தூபம் —இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொரு நாள்
மான் மாய வெய்தான் வரை "

அஃதாவது இராமாவதாரத்தில் மாரீசனாகியமாயமானை அம்பெய்து கொன்ற இராமன் நித்யவாஸம் செய்கிற மலையானது வேங்கடம். மேலும் கூறுவது விசேஷமானது —வளர்பிறை தேய்பிறையில் 12—வது நாளாகிய துவாதசியில் ஸ்திரீகள் வந்து தூபம், புஷ்பங்களால் அர்ச்சித்துத் தொழும் மலை என்று. திருப்பதியில் அநேக பண்டிகைகள் கொண்டாடப்படினும் இத்துவாதசிப் பண்டிகை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. மேலும் புராணங்களில் துவாதசியை விஷ்ணுவுக்கும், திருப்பதிக்கும் சிறந்த நாளாகக் கூறப்படுகிறது.

99-ல் திருமாலைக் கூறுகையில், திருப்பாற் கடலில் நித்ய வாஸம் செய்கிறவனும், வேங்கடத்திலிருப்பவனும் அவனை நினைக்கும் பக்தர்களின் ஹிருதயத்தில் நித்தியவாஸம் செய்கிறவனுமான திருமால் எனப் பாடுகிறார். ஆகவே, இத்தனைக் குறிப்புகளிலும் வேங்கடத்தைப் பற்றி வரும் இடங்களில் அங்கிருக்கும் தேவதை விஷ்ணு தான் என்று பொதுவாகவும், அவனுடைய பல்வேறு அவதாரங்களை எடுத்துணர்த்தியும் ஆழ்வார் திருப்பதியில் இருக்கும் விஷ்ணுமூர்த்திக்கு அடியன் ஆகின்றேன் என்கிறார். மேலும் 58, 64, 65 பாக்களில் ஆழ்வார் 'திருமாலையல்லாது வெறொரு தெய்வத்தை யான் தொழ மாட்டேன்' என்கிறார். ஆகவே இவர் திருப்பதியில் இருக்கும் கடவுளை விஷ்ணு மூர்த்தியாகவே அறுதியிட்டே பாடியுள்ளார். இதை இன்னும் சந்தேக மற இருக்கும்படி கூறுகிறார் :—

**" பொன் திகழுமேனிப் புரிசடையம் புண்ணியனும்**
**நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்**
**இருவரங்கத்தால் திரிவரேலும் ஒருவன்**
**ஒரு வணங்கத் தென்று முளன் "** (98)

**" கைய வலம்புரியும் நேமியும் கார் வண்ணத்து**
**ஐய மணமகள் நின்னாகத்தாள் —செய்ய**
**மறையான் நின் உந்தியான் மாமதிள் மூன்றெய்த**
**இறையான் நின்னாகத் திறை "** (99)

இதனால் வேங்கடத்தில் இருக்கும் தெய்வம் விஷ்ணு தான் என ஐயம் திரிபு அறக்கூறுகிறார். அதாவது முதல் பாவில் சடைமுடியன் (சிவன்) திரிவிக்கிரமன் (விஷ்ணு) வினுடைய சரீரத்தில் அடங்கியவன். இரண்டாவது பாவில், மற்ற பாகங்களிலிருக்கும் ஆயுதங்களைக் கூறி விட்டு, உனது வலப்புறத்தில் திரிபுறம் எரித்த சிவனைத் தாங்கி நிற்கிறாய் என்று வேங்கடத்துறைவனைக் கூறுகிறார். ஆகவே, பொய்கையாழ்வார் விஷ்ணு பக்தரேயாவார். பிரமன், சிவன், இவர்களைக் குறிக்குங்கால் அவர்கள் விஷ்ணுவின் சரீரத்தில் ஒரு பாகத்தில் உள்ளவர்கள் என்று கூறுபவர் எனத்தெரிகிறது,

மற்றுமோர் இடத்தில் திருமாலைக் குறிப்பிடுகையில் ' இளம் குமரன் தன் விண்ணகர் ' என்கிறார். அதாவது திருப்பதியில் திகழும் தேவதை, இளங்குமரன் (சுப்பிரமணியன்) என்பதாகும். இதுவும் மேற்கண்ட வழக்குக்குட்பட்டு விஷ்ணுவே முதற் கடவுள் எனக்கொள்ளவேண்டும். மேலும், அநேக விடங்களில் ஆழ்வார் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தைக் குறிப்பிட்டு பால கிருஷ்ணனுடைய சேஷ்டைகளைக் குறிப்பிடும் போது இளங் குமரன் என்கிறார். ஆகவே இது சுப்பிரமணியக் கடவுளைக் குறிக்காது. திருவாய் மொழியிலும் கூட 481 வது பாசுரத்தில் எருதைவாகனமாய் உடைய சிவனும் நான் முகனும் லக்ஷிமியும் அவனுடைய உடம்பில் என்றும் இடம் பெற்றிருக்கின்றனர். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே விஷ்ணு வடிவாயிருந்து இதரதேவதைகளைத் தன்னுள் கொண்டிருப்பதென்று, இவ்வாழ்வார் அன்றி மற்றையவைணவ இலக்கியங்களிலும் காணப்படுகிறது. மேலும் இங்கு வழிபடுதல் வைணவ விதிகளைத் தழுவியது என்பதை மேலும் விவரிப்போம். 53-ல் பாடுகிறார்.

**" சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்**
**நின்றால் மரவடியாம் நீள் கடலுள்—என்றும்**
**புணையாம் மணி விளக்காம் பூம் பட்டாம் புல்கும்**
**அணையாம் திருமாற் கரவு "**

இங்கு ஆதிசேஷன் என்னும் பாம்பணையான் விஷ்ணுவுக்குச் செய்யும் தொண்டுகளைக் குறிப்பிடுகிறார். இதற்கு வைணவ உரையாடர்கள் கூறும் போது பகவானுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சேஷ சேஷீ சம்பந்தத்தை இப்பா குறிக்கிறது என்பர். அவ்வாதி சேஷன் திருமாலுக்கு நடையில் குடையாகவும், இருப்பில் சிம்மாசனமாகவும், நிற்கையில் பாதுகையாகவும். பாற்கடலில் யோக நித்திரையில் இருக்கையில் படுக்கை யாகவும், மேலும் மணி விளக்காகவும், பட்டாடையாகவும், பயன்படுகிறார் என்பது பொருள். திருப்பதி மூர்த்தியின் மேல் காணப்படும் சின்னங்கள் "பூம்பட்டாம்" எனவரும் அலங் காரத்தைக் குறிப்பது என்பர். இது பற்றிப் பிறகு கவனிப்போம்.

இரண்டாவதாக பூதத்தாழ்வார் வேங்கடத்தைப்பற்றி எட்டு இடங்களில் நேரிடையாகக் குறிப்பிடுகின்றார். 25–ல் வேங்கடத்தில் நிற்கும் திருமாலைக் குறிப்பிட்டுச் "சினத்தினால் இலங்கைக்குச் என்று இராவணனைக் கொன்ற திருமால்" என்கிறார் 45–லும் அம்மாதிரியே பொதுவாகச் சொல்லுகிறார். 46-ல் வேங்கடம், திருவரங்கம் திருக்கோட்டியூர், திருநீர்மலை ஆகிய தலங்களைப் பற்றிச் சொல்லுகிறார். 48–ல் இருஞ்சோலை என வருகிறது. இதைத் திருமாலிருஞ்சோலையையாவது, திருப் பதியையாவது கொள்ளலாம். 70–ல் தஞ்சை அரங்கம், திருத்தண்கால் ஆகிய இடங்களில் இருப்பவனும், திருப்பதி, திருக்குடந்தை, திருப்பாற்கடல், திருக்கடன் மல்லை, திருக் கோவலூர் ஆகியதலங்களில் இருப்பவனும் எம்பெருமானே என்கிறார். 72–ல் வேங்கடத்தைக் குறிப்பிட்டு அங்கு குரங்கு களானவை அதிகாலையில் அன்றலர்ந்த தாமரை மலர்களைப் பரமனுக்குக் கொணர்ந்து சமர்ப்பிக்கின்றன என்கிறார். 75–ல் வேங்கடத்தில் யானைகள் மூங்கில் குருத்தைப் பிடுங்கித் தேனில் தோய்த்து பெண் யானைகளுக்குக் கொடுக்கின்றன என்கிறார். 94–ல் காஞ்சியில் உள்ள பாடகம் என்ற தலத்தையும், 95-ல் அத்தியூரானையும், 97-ல் குடமூக்கினையும் (கும்பகோணத்தைக்) குறிப்பிடுகிறார். 28-ல்

> "**மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
> நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்—ஏனைப்பலரும்
> தேவாதி தேவன் எனப்படுவான்: முன்னொரு நாள்
> மாவாய்ப் பிளந்த மகன்**" (28)

அஃதாவது வேங்கடத்திலிருப்பவனும், திருவரங்கத்தில் இருப்பவனும் ஒருவனே. அவனே கிருஷ்ணவதாரத்தில்

கேசி என்ற அசுரனின் வாயைப்பிளந்தவன். என்கிறார். 54-ல் வேங்கடத்திலும், திருமாலிருஞ் சோலையில் நின்று கொண்டும் பக்தர்களுக்கு அருள் புரிகிறார். 60-ல் "ஈருருவும்" என்பதை இரண்டு உருவம் எனக் கொண்டு, ஒன்றிலொன்று அடங்கியுள்ளது. என்று பொய்கையாழ்வார், நம்மாழ்வார் முன்னமே கூறிய கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது எனக் கொள்ளலாம். ஆனால் வைணவ உரையாடர்கள் "ஈர் உருவம் அதாவது பெருமை வாய்ந்த உருவம்" எனக் கொண்டு பொருள் கூறுவர். பூதத்தாழ்வார், பொய்கையாழ்வாரைப் போலவே வேங்கடத்திலிருக்கும் திருமாலிடம் மிக்க அன்பு பூண்டவர் எனத் தெரிகிறது. இது அம் மூர்த்தியில் சில சிவனுடைய அம்சங்களிருப்பினும், இப்பூதத்தாழ்வார் வேதத்தை நினைத்து அம்முறைப்படியே திருமாலை வணங்குவது சிறந்தது எனக் கொள்ளினும், சிலவிடங்களில் மாதவனுடைய பெயரை உச்சரித்த மாத்திரத்தில் பாவங்கள் அணுகா; அவன் நம்மைக் காப்பான் எனக் கூறுகிறார்.

"எமக் கென்று இருநிதியம் ஏமாந்திராதே
தமக் கென்றும் சார்வமறிந்து—நமக் கென்றும்
மாதவனே யென்னும் மனம் படைத்து மற்றவன் பேர்
ஓதுவதே நாவினு லோத்து" (38)

"ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே உத்தமன் பேர்
ஏத்தும் திற மறியின் ஏழைகாள்—ஒத்ததனை
வல்லீரேல் நன்று அதனை மாட்டீரேல் மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு (39)

"சுருக்காக வாங்கிச் சுலாவி நின்று ஐயார்
நெருக்கா முன் நீர் நினை மின் கண்டீர்—திருப்பொலிந்த
ஆகத்தான் பாதமறிந்தும் அறியாத
மோகத்தாலில்லை பொருள்" (40)

முதல் பாவில், மனிதர்களை அழைத்துச் சொல்லுகிறார். "கையில் நிதியிருக்கிறதென்று ஏமாந்திராதீர். சாஸ்வதமான வஸ்து மாதவனே. அவனையே வழிபடுங்கள்" என்று' இரண்டாவதில் "ஏழைகள்" என விளித்துக் கூறுகிறார். "வேதங்களில் கூறுவதும் இது தான். பகவானையே வழி படத் தெரிந்து கொள்ளுங்கள். வேதங்கள் தெரிந்தால் நன்று. இல்லையேல், அவன் நாமத்தையே இடையறாது சொல்லிக் கொண்டிரும்" என்கிறார்.

இம்மாதிரியே இன்னும் பல பாக்களில் பகவானைத் துதி செய்வதை மிகச் சுலபமாகச் செய்து அவனது நாமஸ்மரணை பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும், என்று இன்னும் பல இடங்களில் சொல்லுகிறார். 64—ல் இதையே சொல்லுகிறார். வேதங்கள், இதிகாஸ புராணங்களில் பகவானைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் படியே அவன் தனக்கு சாக்ஷாத் காரமாக வேண்டு மென்று கூறுகிறார். 62-ல் கூறுகிறார்—“பரமனே! உன் பெயரை முன்னதாகவே அறியவில்லை. பிறகும் உன் பெயரைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும், வேறு விதமாக வந்த இப் பெயரைச் சொல்லி உன்னை வணங்குகிறேன்’. என்று 65—ல் “அவன் உருவத்தைப் பார்த்து வணங்குகிறேன். தன் இரு கைகளாலேயே அவன் பாதங்களுக்குத் தாமரை மலர்கள் சமர்ப்பிக்கிறேன். அவனுக்கே பணி செய்வதைத் திடமாக மனத்தில் கொண்டேன். ஆக கிட்டே அடைய காலம் வரும் பொழுது அவனையே இடையறாது துதித்துக் கொண்டிருப்பேன்” என்று கூறுகிறார். 66—ல் தன்னுடைய தீர்மானத்தைத் தெரிவிக்கிறார். “இவ்வுயிர் எல்லாம் நாராயணனுடைய நாமமே. அவன் நாமத்தைச் சொல்லி நரகத்தில் செல்லுவதிலிருந்து மீட்டுக் கொள்ளுங்கள்” என்று. 67—ல் “கடவுளைக் கண்டேன். கனவில் அவனது சக்கரத்தைக் கண்டேன். புண்ய பாபங்களாகிற, கருமங்களையும் தொலைத்து இனியும் அவை வராதபடி தடுக்கக் கூடிய மிடுக்கையும் காணப் பெற்றேன்” என்கிறார். இதையே 81-ல் அவனை இருள் கலவாத பகலில் கண்டேன், அவன் நாராயணனே என்பது புலனாயிற்று; உண்மையாக அவனையே கண்டேன்; கையில் சக்கரத்தையுடையவனும் பிரகாசம் மிக்க திருவடிகளையுடையவனுமான அவனுடைய சோதிமயமான வடிவத்தைக் கண்டேன் என்கிறார். 86—ல் கேட்கிறார் :—நாவலர்கள் அவனது நாமங்களை எப்பொழுதும் சொல்லிக் கொண்டு அவனுக்கு அன்று மலர்ந்த மலர்களைப் பூஜித்ததனால் அவர்கள் பெற்ற பயன் என்ன? அவனைக் கண்டது நான் செய்த பூஜையினால் அல்ல, அவனே எனக்குத் தன்னைக் காண்பித்தான் என்கிறார். 87—ல் மேலும் கூறுகிறார். முன்பே கர்ப்பத்திலிருந்த பொழுது திருக்கோட்டியூரிலிருக்கும் பிரானுடைய பெருமைகளை அறிந்திருந்தேன். இன்று தான் என்னுடைய தவத்தினால் நான் திருவிக்கிரமாவதாரம் எடுத்தவனுடைய மேன்மையைத் தெரிந்தவன் ஆனேன்” என்று 90-ல்மிக திருப்தியுடன் கூறுகிறார். “திருமாலைக் கை தொழுதபின் “மண்ணுளக மாளேனே, விண்ணுலகம் தன்னகத்து மேவேனே” எனப் பெருமையுடன் கூறுகிறார்.

மேற்கூறிய பாக்களின் மூலம் வைணவர்கள் ஆதரித்த பக்தி மார்க்கத்தை எவ்வளவு சீராக பூதத்தார் எடுத்துக் காட்டுகிறார் என்று தெரிகிறது. இம்மார்க்கத்தை ஒரு சிலர் தான் பின் பற்றக்கூடும் என்றில்லை; பாமரரும் பற்றலாம்.

**பேயாழ்வார் :**

மூன்றும் திருவந்தாதியை ஆக்கிய இவ்வாழ்வார் மைலாப்பூரில் கேசவப் பெருமாள் கோவில் அருகில் உள்ள கிணற்றில் தோன்றினார். அவருடைய பிறப்பைப் பற்றியாவது, அவரது தாய் தந்தையரைப் பற்றியாவது நமக்கு விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. குருபரம்பரையில் கொடுத்திருக்கும் கால விவரம் மற்றை இரு ஆழ்வார்களுக்குக் கொடுத்திருக்கும் விவரம் போலவானது. மற்ற இரு ஆழ்வார்களும் ஞான விளக்கை அவரவர் வழிப்படி ஏற்றிக் கொண்டனர். இவரோ "திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், அருக்கனணிநிறமும் கண்டேன், என்னுடைய கடல் வண்ணத் திருமாலிடம் இவை யாவும் கண்டேன்" எனக் குதூகலத்துடன் ஆரம்பிக்கிறார். உடனே தொடர்கிறார். "அவனுடைய அடிகளைக் கண்டபின் ஏழ்பிறப்பும் அப்பொழுதே அறுத்துக் கொண்டேன்" என்று கூறுகிறார். மேலும் விஷ்ணுவின் குணாதிசயங்களைச் சொல்லப் புகுகிறார். 11–ல் எம்பெருமான் நன்கோதும் நான்கு வேதத்துள்ளான். அருவி நீர் போலவும் கடல் நீர் போலவுமான திருமேனியுள்ளவும் திருப்பாற்கடலில் யோக நித்திரையிலுள்ளவனும் சேஷசயனத்திலிருப்பவனும், சகல சாஸ்திரங்களை நன்கு ஓதியுணர்ந்தவர்கள் கடைந்தெடுக்கப்பட்ட பொருள் ஆவான், நம் முயற்சியால் அறியமுடியாதவன் என்று 12–ல் அவனை அறிபவர்கள் வேதத்தை இடைவிடாது ஓதுகிறவர்களாயும் இந்திரியங்களை வெளி விஷயங்களில் செலுத்தாமல் ஞான மென்னும் தாழ்ப்பாளையிட்டுக் கொண்டவர்களாயும் எப்பொழுதும் நன்றாகத் தியானித்துக் கொண்டிருப்பவர்களாயும் இருப்பர் என்றும் கூறுகிறார்.

வேங்கடத்தைப்பற்றி முதலாவதாக 14–ல் குறிப்பிடுகிறார்; அங்கு முடி சூடிய விண்ணோர்களால் தொழப்பட்டவனும் நான்கு வேதங்களிலும் உறைகின்றவனுமானவன் வேங்கடத்தில் இருக்கின்றான் என்று. 16–ல் திருவல்லிக்கேணியிலிருக்கும் நாதனைக் குறிப்பிட்டு "ஒரு அல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன்" என்கிறார். 26–ல் எம்பெருமான் தன் இருதய கமலத்திலும் அனந்தாழ்வான் மேலும், காஞ்சியிலும், திருப்பதியிலும் வெஃகாவிலும் வேளுக்கைப்

பாடியிலும் வசிக்கிறன் என்கிறர். அதேபோல் 30–ல் "எம் பெருமான் வசிக்கும் இடங்கள் திருப்பாற்கடல், குடந்தை வேங்கடம் எனது இருதய கமலம், பரமபதம், வேதங்கள், பாடகம், ஆதிசேஷன் என்பன" என்கிறர். 31–ல் மேற்கூறிய இடங்களைக் குறிப்பிட்டு மறுபடியும் இவையே இரணியனுடைய மார்பைப் பிளந்த நரஸிம்மாவதாரம் செய்தவனும் கண்ணையே செவியாகக் கொண்ட ஆதி சேஷனை படுக்கையாக உடையவனும், நான்கு வேதத்திலுள்ளவனும் கங்கையை சிரஸில் ஏற்றுக் கொண்ட சிவனைத் தன் உடலின் ஒரு பாகமாகக் கொண்டவனும் திருப்பாற் கடலிலுள்ளவனுமான அப் பெருமானுடைய கோயில்கள் என்கிறர். இதே பொருளில் திரும்பவும் 32-ல் கூறுகிறர். அ—து குருந்த மரத்தை முறித் தொழித்த கண்ணனே திருப்பாற்கடலில் உள்ளவனும், வேங்கடத்திலிருப்பவனும் ஆதிசேஷன் மேலிருப்பவனும் பரமபதத்தில் இருப்பவனும், கடல் போன்ற சாஸ்திரங்களில் உள்ளவனும் சாஸ்திரங்களில் கூறியபடி இருதய கமலத்தில் மனத்தைச் செலுத்தி யோகம் செய்யும் யோகிகளின் நெஞ்சிலே வசிப்பவனும் ஆவான். ஆகவே வேங்கடம் கோபாலனுக்கு வாசஸ்தலமான இடமாகிறது. 39,40-ல் வேங்கடத்தைக் குறிப் பிடுகையில் அது திருமாலுக்கு உகந்த இடம் என்றும் அத் திருமலையில் இருப்பவனே உலகத்தையெல்லாம் தன் ஒரு அடியால் அளந்தவன் என்றும் கூறுகிறர். 45–ல் வேங்கடத்தில் யானைக் கூட்டங்கள் இருப்பதைக் கூறி விட்டு, அம் மலையில் இருப்பவன் உலகத்தை வராக ரூபமாய்க் கொண்டு பூமியைத் தன் கோரப்பல்லின் மீது எடுத்துக் கொண்டு வந்த பெருமான் என்கிறர். இந்த 45–வது பாவின் ஈற்றடியில சொன்ன பொருளையே விவரித்து 45–57 வரை விஷ்ணு ராம, கிருஷ்ண அவதாரங்களில் செய்த கூற்றுகளை விஸ்தரிக்கிறர். 58-ல் வேங்கடத்தைக் குறிக்கும் போது அதிலிருக்கும் பெருமாள் முன்பு ஒரு நாள் வாமனவதாரம் எடுத்துத் தனது புத்தி சாதுர்யத்தால் மகாபலியிடமிருந்து பூமியைப் பெற்றுக் கொண்டவன் என்கிறர். 59–ல் ஆழ்வார் "நான் முக்திக்குச் சரியான வழி தேடிக் கொண்டேன். ஏனெனில் நான் விஷ்ணு வுக்குச் சேவை செய்வதில் ஒன்றி விட்டேன்" என்கிறர். 61,62,63ல் விஷ்ணுவின் லீலைகளையும் அவனுடைய நித்திய வாசஸ்தலங்களையும் விவரிக்கிறர்.

**"பண்டெல்லாம் வேங்கடம், பாற்கடல், வைகுந்தம்**
**கொண்டங்குறைவாற்குக் கோவில் போல் — வண்டு**
**வளங்கிளரும் நீள்சோலை வண் பூங்கடிகை**
**இளங்குமரன் தன் விண்ணகர்" (61)**

'' விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர்வேங்கடம்
மண்ணகரம் மா மாட வேளுக்கை—மண்ணகத்த
தென் குடந்தை தேனுர் திருவரங்கம் தென்கோட்டி
தன் குடங்கை நீரேற்றுன் தாழ்வு'' (62)

'' தாழ் சடையும் நீள்முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னுணுந்தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலை மேலெந்தைக்கு
இரண்டுருவுமொன்ருயிசைந்து'' (63)

61ல் கூறப்படும் தலங்கள் வேங்கடம், திருப்பாற்கடல், வைகுந்தம் ஆகியவை. இவை இளங்குமரனது பழைய வாசஸ்தலங்கள். 62—ல் மாபலியிடமிருந்து நீர்த்தானம் பெற்ற பெருமான் வசிக்கும் இடங்கள் விண்ணகரம், வெஃகா, வேளுக்கைப் பாடி, குடந்தை, திருவரங்கம், திருக்கோட்டியூர் ஆகியவை, 63ல் விவரிக்கிருர் '' திருமலையில் இருக்கும் என் அப்பன், சிவன் விஷ்ணு ஆகிய இரு வடிவங்களிலும் காணப் படுகிருன். சடை முடியனுயும். நீள்முடியனுயும், சுற்றிலும் நாகவாபரணங்கள் உள்ளவனுகவும், பொன் அரை ஞாண் உள்ளவனுகவும், ஒரே வடிவத்தில் அமைந்து காணப்படுகின்ருன் என்கிருர்.

64-ல் கச்சியில் வெஃகாவில் சயனித்துக் கொண்டுள்ள எம்பெருமானைக் கூறுகிருர். அடுத்த மூன்று பாக்களில் விஷ்ணு வைப்பற்றிக் கூறப்படும் செயல்களை வர்ணிக்கிருர். 68-ல் வேங்கடப் பெருமானைக் குறிப்பிடும் போது முன்னொரு கால் விளாமரத்தின் வடிவம் கொண்ட அசுரனைக் குறித்து ஒரு கன்றை வீசியெறிய, விளாம் பழங்கள் உதிர்ந்தன. இச்செயல் செய்த கண்ணன்தான் இங்கு எழுந்தருளியுள்ளான் என்று சந்தேக மறச் சொல்லி இது விஷ்ணு ஸ்தலம் தான் எனக் குறிப்பிடுகிருர். 71—ல் கீழே 68-ல் கூறிய சம்பவங்களைக் குறிப்பிடுகிருர். 72-ல் வேங்கடத்தை '' இளங்குமரர் கோமானிடம்'' என்கிருர். 75-ல் வேங்கடத்தை '' ஆயன்— பொருப்பு'' என்கிருர். அதாவது கண்ணனுடைய மலை என்கிருர். 76-ல் நிச்சயமாகச் சொல்லுகிருர்'' வெஃகாவி லிருக்கும் எம்பெருமானுக்குப் பூக்களால் அர்ச்சனை செய்து, கைகளால் வணங்கினுல் தீவினைகள் போம்; இதற்காக மலைகள் மேல் நின்றுகொண்டோ, தண்ணீரில் முழுகிக் கொண்டோ பஞ்சாக்னி மத்தியில் நின்று கொண்டோ தவம் செய்ய வேண்டா'' என்று. 77-லிருந்து 88—வரை விஷ்ணுவுக்கு ஒரே

நிலையிலிருந்து பக்தி செலுத்துவது தான் தீவினைகள் ஒழிப்பதற்கும், முக்தி அடைவதற்கும் வழி என்கிறார். 89ல்.

" முடிந்த பொழிதில் குறவாணர் ஏனம்
படிந்து ழகால் பைந்திணைகள் வித்தத்—தடித்தெழுந்த
வேய்ங்குழை போய் விண்திறக்கும் வேங்கடமே
மேலொருநாள்
தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு "

அஃது வேங்கடத்திலிருப்பவனே முன்னர் புல்லாங்குழலை வாயில் வைத்து மதுரமான கீதம் வரும்படி ஊதிய கிருஷ்ண பகவானே யாகும் என்கிறார்.

90-93ல் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன 94ல் ஆழ்வார் எம்பெருமானைத் தனக்காக ஆக்கிக் கொள்ளுகிறார்; எவன் பலதிருத்தலங்களில் நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும் படுத்துக்கொண்டும் இருக்கின்றானோ, எவன் விவேக உணர்ச்சி என்னும் விளக்கால் தன் ஹிருதயத்தில் காணப்படுகிறானோ அவனை ஆக்கிக் கொள்கிறார் என்று கூறுகிறார். 97—ல் " பிரம்மா, ருத்திரன் ஆகியோரால் எண்ணத்தான் ஆகுமா திருமாலைப் பற்றி "? என்கிறார். 99-100-ல் தனக்கு விஷ்ணுவினிடத்தில் இருக்கும் அபிமானத்தைச் சொல்கிறார். அதில் 99-ல் விஷ்ணு எட்டுகைகளைக் கொண்டு எட்டு ஆயுதங்களோடு அட்டபுயகரம் என்னும் காஞ்சியிலுள்ள எம்பெருமானைத் துதிக்கிறார். இத்துடன் பேயாழ்வார் இயற்றிய மூன்றாந்திருவந்தாதி முடிவடைந்தது.

**இவ்வாழ்வார்களுடைய மத உணர்ச்சியில் ஒற்றுமை :**

இம் மூவாழ்வார்களும் முதலாழ்வார்கள் எனப்படுவர் ஏனெனில் இவர்கள் ஒரே சமயத்தில் இருந்தவர்கள் ஆதலாலும் ஆழ்வார்களுள் முதன்மையானவர்களாக இருப்பதாலும் அவ்வாறு அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு அடுத்த ஆழ்வாரும் இவர்களுடைய காலத்தவரே என்றும் இந்நால் வரும் அச்சமயத்தில் திகழ்ந்தார்கள் என்றும் மேலும் கவனிப்போம். இம்மூவருடைய நூற்றந்தாதிகள் பொருள், குணம், நயம் முதலியவற்றில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக அமைந்திருக்கின்றன. இதை வைத்துக் கொண்டே அம்மூவரும் சம காலத்தினரென்றும் ஒரே விதமான சமயச்சூழ்நிலையில் இருந்தார்கள் என்றும் கருதலாம். ஒவ்வொரு நூற்றந்தாதியையும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு பொதுவான கருத்துடையது. ஒவ்வொரு செய்யுளிலும்

விஷ்ணுவைப்பற்றி நேராகவோ மறைமுகமாகவோ குறிப்பிட்டு அவர் ரக்ஷகத் தொழிலைச் செய்யவேண்டி பல விதமான ரூபங்களையும் எடுத்துக் காட்டி, இவற்றால் ஏற்படும் ஒரே முடிவு "விஷ்ணு தான் யாவற்றையும் ரக்ஷிக்கக் கூடிய முழுமுதற் கடவுள், அவனைத் தவிர வேறொருவரும் ரக்ஷிக்கவல்லர்கள் அல்ல" என்பது. மோக்ஷத்திற்கு கீழ்படியான சில நலன்கள் மற்ற தேவதைகள் மூலம் அடையக் கூடுமாயினும், அந்தத் தேவதைகள் விஷ்ணுவால் சிருஷ்டி செய்யப்பட்டவர்களே தவிர அவர்களாகவே உண்டாகவில்லை. அவர்கள் யாவரும் விஷ்ணுவின் பாகமேயாவார்கள்; விஷ்ணுவே எல்லா வஸ்துக்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறான். ஆகவே விஷ்ணு தான் முழு தான பலனை கொடுக்கக் கூடும். விஷ்ணுவினுடைய மற்றைய அவதாரங்களைவிட கிருஷ்ணாவதாரத்தைப் பற்றி ஆழ்வார்கள் குறிப்பிட்டு மெய்சிலிர்க்கிறார்கள். இதன் பிறகு மற்ற அவதாரங்களைப் பற்றியும் அடிக்கடி குறிப்புகள் வருகின்றன. இவ்வாறு கிருஷ்ணாவதார ஈடுபாட்டிலும் சரி, மற்றைய அவதார ஈடுபாடுகளிலும் சரி, இவர்கள் ஒவ்வொரு ரஹஸ்யத்தையும் கூறும்போது இம்மூவரும் ஒரே மாதிரி குறிப்பிடுகிறார்கள். இதை வைத்தே அம்மூவரையும் ஒரே சமய சூழ்நிலையில் இருந்தவர்கள் என்று சொல்லலாம். இவர்கள் விஷ்ணு பக்தர்கள். ஆகவே வைஷ்ணவ க்ஷேத்திரங்களைத் தங்கள் பாக்களில் பாடியிருக்கிறார்கள். வைஷ்ணவ க்ஷேத்திரங்கள் நூற்றெட்டு என்று வழக்காயினும் இம்மூவரும் 108 தலங்களையும் பாடினதாகக் கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் சிற்சில தலங்களைப் பாடியுள்ளனர். ஆனால் இம்மூவரும் ஒரு மிக்க திருப்பதியை மற்றைய எல்லா க்ஷேத்திரங்களைக் காட்டிலும் (ஸ்ரீரங்கம் உள்பட) அதிகமாகப் பாடியுள்ளனர். ஆகவே வைணவ உரையாடர்கள், இம்முதலாழ்வார்களைக் குறிப்பிடும்போது, இவர்களுடைய பிரபந்தங்கள் வேங்கடத்திலிருக்கும் திருமாலைப் பற்றிய பாடல்களே என்று கருதுகிறார்கள்.

**இம்மூவர் அனுசரித்த வழிபாட்டு முறை :**

இம்மூவரும் தெய்வத்தை வழிபடும் முறையில் வேதத்தில் கூறியபடி செய்யும் கிரியைகள் தான் சிறந்தவை என்றும் வேதத்தில் சொல்லியபடி நித்திய கர்மாக்களைச் செய்த படியே தெய்வத்தை அணுகுவது யாவற்றிலும் சிறந்த, கைகண்ட முறையாகும் என்றும் கருதுகின்றனர். ஆனால் இவ்வகைப் பட்ட வேதமார்க்கமான தெய்வ வழிபாடு பிராமணர்

களிடையே கூட, ஒரு சில தேர்ந்தவர்கட்கு மட்டுமே கைகூடும், மற்ருேர்க்கு இது சிறிது எளிதன்று என்று அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள். ஆக பகவானை வழிபட இருக்கும் சுலபமான, அதிகக் கஷ்டமின்றி பயிற்சியில் வந்து விடும்படியான வேறு வழிகளைச் சுட்டிக் காட்டினுர்கள். பகவானிடத்தில் மெய்யன்போடு அளிக்கும் பூஜை தான் முக்கியமானது. அதற்குண்டான விஸ்தாரமான வெளிப்படை ஹோமாதிகள் முக்கியமல்ல என்பது அவர்கள் கருத்து. இதையே மேலும் அநேக இடங்களில் இப்பரந்த வேதச் சடங்குகளைக் குறிப்பிட்டு இவைகளை நெறிதவராது இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது, அவ்விறைவன் விஷ்ணுவைத் தவிர வேறு ஒருவர் இல்லை என்பார்க்கு உகந்தது; இவ்வாறு செய்தல் யாவருக்கும் அரிது; எனவே ஏனையோருக்கு உகந்தது பகவத் கீதையில் காட்டும் வழியாகிய பக்தி மார்க்கமும் பாஞ்சராத்திரத்தில் கூறப்படும் வழியும் ஆகும் இவையே மிகுந்த பலத்தைக் கொடுக்கக் கூடியவை என்பன போன்ற கருத்துக்களைச் சொல்லியுள்ளனர். இம்முறையும் செய்ய இயலாதார், பூ, தூபதீபம் இட்டு துதி செய்தல் என்பதையாவது செய்யட்டும் என்றனர். அதாவது ஒவ்வொரு தனி வீட்டில் இருப்பவரும் சரி, ஒரு தனிப்பட்டோன். சென்று வழிபடும் தேவதையின் கோவிலிலும் சரி, இம்மாதிரியான புஷ்ப தூபத்தாலும், துதிகளாலும் பக்தன் பக்தி செலுத்துவது உகந்த வழி என்றனர். இவ்வழியும் கடைபிடிக்க இயலாது இருக்கும் பாமரர்கள் அவன் திவ்ய நாமத்தையே சதாமனனம் செய்து கொண்டிருப்பது மிகவும் எளிதான வழி எனக் கருதினுர். அவனுடைய திருநாமங்களில் மிகமுக்கியமானது அஷ்டாக்ஷரத்தால் ஆகிய நாமம். அதாவது 'நாராயண' என்னும் நாமத்திற்கு முன் பிரணவத்தையும் "நம" என்னும் பதத்தையும் வைத்து, இறுதியில் 4—ம் வேற்றுமைத் தொகையைச் சேர்ப்பது. இதில் கவனிக்கத் தக்கது என்னவெனில் இச்சுலபமான மார்க்கத்தை அவரவர் உலகத்தில் எந்தஸ்திதியில் இருந்தாலும் அவரவர் தனித்தே ஒரு குருவின் உதவியின்றி இதை (அஷ்டாக்ஷரத்தை ஜபிப்பது) செய்யலாம். இவர்கள் காலம் வரை வேத விதிகளைத் தவருது அனுஷ்டித்து வந்த மிகவும் கடினமான பிராமணமதம் இந்துமதமாகத் திருத்தப்பட்டது. இத்திருத்தம் பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ஒரு விதத்தில் பார்த்தால் இப்பக்தி மார்க்கம் என்பது வேதத்தினின்று ஏற்பட்டது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாமற்போனுலும் உபநிஷத்துக்

களிலிருந்து உண்டானது எனக் கொள்ள நியாயம் இருக்கிறது. இதுபற்றி நாம் விவரிக்க வேண்டாம். திருப்பதி கோவிலைப் பற்றி விமரிசிக்கையில் நாம் நம் மனத்தில் முக்கியமாகக் கொள்ள வேண்டியது என்னவென்றால் பக்தி மார்க்கத்துறை ஏற்பட்டு தெய்வ வழிபாடு எளிதான வழியில் மாறி பிராமண மதம் என்னும் கடின மதம் இந்து மதம் என்னும் சுலபமான மதமாக மாறியது தான். இவ்வாழ்வார்கள் காலத்தில் இம் மாற்றம் முற்றிலும் வேரூன்றி நித்திய வழிபாட்டில் வழங்கப் பட்டுவந்தது. அதே சமயத்தில் பாமரர்கள் வழிபட இதர மதங்கள் போட்டியிட்டன. அதாவது புத்த ஜைனமதங்களும் இந்த மாதிரியான வழிபாடுகளைப் புகுத்தினர். ஆனால் இம்மதங்களில் வழிபாடுகள் அடிப்படையான தத்துவங் களில் வேறுபாடு கொண்டிருந்தன. தெய்வத்தைத் தொழு வதோ அல்லது சேவை செய்வதோ மோக்ஷத்தைக் கொடுக்க வல்லது அல்ல ஆனால் உயிரின் தத்துவத்தை உணர்த்துதல் செய்வதும், உயிருள்ள வரை நல்வழியில் பொருந்தியிருப்பது மான ஒரு ஞானத்தை உணர்த்தும் மார்க்கம். இம்மதங்களில் ஈசன் இருக்கிறான் என்னும் தத்துவமோ அவனை வழிபட்டால் மோக்ஷம் கிட்டும் என்னும் தத்துவமோ கிடையாது. முதலாம் திருவந்தாதியில் பொய்கையாழ்வார் கூறுகிறார். "இனிமேல் நரகத்தின் வாயிலை யார் அடைவார்கள்? அதன் கதவுகளை நன்றாக அடையுங்கள். ஏனெனில் இந்த ஜம்புத்வீபத்தில் இருப்பவர்கள் விளாமரத்தில் இருக்கும் அசுரனை வீழ்த்த ஒரு கன்றை அம்மரத்தில் எறிந்து அக்கனிகளைக் கீழே சிதற வைத்த அக்கிருஷ்ண பரமாத்மாவின் திருவடிகள் தான் நமக்குச் சொந்தம்" இதனால் அக்காலத்தில் இப்பக்தி மார்க்கம் எவ்வளவு வலிவு அடைந்து விட்டது. என நமக்குத் தெரிகிறது. மேலும் இப் பக்தி மார்க்கம் எந்தக் காலத்தில் மிகப் பிரபல மடைந்தது என்றும் எந்தச் சூழ் நிலையில் அப் பிராபல்யம் அடைந்தது என்றும் ஒருவாறு நமக்குத் தெரிகிறது.

**சிவ—விஷ்ணு மூர்த்தி திருப்பதியின் அம்சம்:**

இவ் வாழ்வார்கள் வைணவர்கள் என்று முன்பே கூறினோம். அவர்கள் திருப்பதியில் இருக்கும் மூர்த்தியைக் கூறுகையில் சிவ விஷ்ணு சேர்த்தி இருப்பதைக் குறிப்பிடுகிறார்கள். வேறு சில இடங்களில் உள்ள மூர்த்திகளில்—மூர்த்தியில்ஒரே சிவனுடைய ஆயுதங்களும் விஷ்ணுவினுடைய ஆயுதங்களும் இருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளில் முதன்

மையானது. திருப்பதியில் உள்ள மூர்த்தி. எளிதாகப் பார்க்கும் போது இந்த மூர்த்தி ஹரி ஹரன் எனப்படும் சிவனும் விஷ்ணுவும் சேர்ந்த மூர்த்தி என்று சொல்லத் தோன்றும். ஆனுல் நாம் திருப்பதியில் இருக்கும் மூர்த்தியைப் பற்றிய வாதத்தில் இப்போது இறங்க வேண்டாம். இது பற்றி பிறகு கவனிப்போம். ஆனுல் ஆழ்வார் பாடல்களிலிருந்து பொதுவாக ஒருவருக்கு ஏற்படும் எண்ணம் இம் மூர்த்தி ஹரிஹர மூர்த்தியின் உருவமேயாம் என்பது. இந்த மாதிரி வீஷ்ணுவை ஹரியும் ஹரனும் உடைய உருவமாகச் சொல்லுவது இவ் வாழ்வார்கள் மட்டுமல்ல; இதர ஆழ்வார்களும் இப்படியே கூறியுள்ளனர்: முக்கியமாய் நம்மாழ்வார் கூறியதை முன்னமே எடுத்துரைத்திருக்கிரேும். ஆகவே அக்காலத்தில் விஷ்ணுவை இம் மாதிரி எடுத்துரைப்பது மரபு எனலாம். ஆகவே இம் மூவர்களுடைய பாக்களில் சிலவற்றை பொறுக்கி எடுத்து அதில் சிவனைத் தனியாகவோ அல்லது சிவன் பிரம்மா இரு வரையும் சேர்த்தோ மூர்த்தியின் உருவத்தில் இருக்கிற தென்ருல் அதன் அர்த்தம் நம்மாழ்வார் கூறியது போல் இவர்கள் அவனுல் (விஷ்ணுவால்) ஆக்கப்பட்டவர்கள்; வர்கள் அவனுடைய உடம்பில் ஒவ்வொரு பாகத்துக்குச் சொந்தமானவர்கள், அவர்களும் தங்கள் முறைகளை மேலான விஷ்ணுவிடம் தான் சொல்லவேண்டும் என்று. முதலாம் திருவந்தாதியில் சொல்லுகையில் பொன்மேனியனும் சடை முடியவனும் நின்று ஒரு காலால் உலகை அளந்தவனும், இவர்கள் இருவராக வெவ்வேறு வடிவத்தை கொண்டவர் களே யானுலும், முதல்வனுனவன் இன்ெருருவனுடைய சரீரத்தில் வாழ்க்கை கொண்டவனுக இருக்கிருன் என்று. இதையே இவ்வாழ்வார் 28-ல் சொல்லும் போது "கார் வண்ணத்து ஐய! உன் கையில் வலம் புரியும் சக்கரமும் உள்ளன மார்பில் தாமரையாள் இடைவிடாது இருக்கிருள் வேதத்தை ஓதிக் கொண்டு இருக்கும் பிரமன் உன் நாபி கமலத்தில் இருக்கிருன். திரிபுரமெடுத்த சிவன் உனதுடம்பில் ஒரு பாகத்தில் உள்ளான்" என்று கூறுகிருர். இம் மாதிரி கருத்து கொண்ட பாக்கள் மற்றைய இரு ஆழ்வார் கள் பாடலிலிருந்தும் எடுத்துக் கூறலாம். இதனுல் ஏற்படுவது. விஷ்ணுவைப்பற்றி ஒரு பாகம் சிவன்; ஒரு பாகம் விஷ்ணு என்று கூறு மிடங்களைக் கொண்டு அவன் ஹரி ஹரன் என்று கொள்ளக் கூடாது; மூர்த்தி ஹரியினுடையதேயாயினும் அம் மூர்த்தியில் ஹரனும் இதர தேவதைகளும் அடங்கியிருக் கிருர்கள் என்று தான் கொள்ள வேண்டும்.

**இவைகளிலிருந்து தெளிவது வேங்கடத்திலிருக்கும் மூல மூர்த்தி விஷ்ணுதான் :**

இம் மூர்த்தியைப் பற்றி ஆழ்வார்கள் விவரித்திருப்பதைப் பரிசீலனை செய்யப் போனுல், சில இடங்களில் (அதாவது ஏறக்குறைய ஆறு இடங்களில்) விவரித்திருப்பதிலிருந்து இம் மூர்த்தி சிவன்-விஷ்ணு இரண்டுங் கொண்ட ரூபம் எனத் தோன்றுமேயாயினும் கொஞ்சம் கூர்ந்து நோக்கின் அவர்கள் வேங்கடத்தில் வழிபடும் தெய்வம் சந்தேகமில்லாமல் விஷ்ணுவே யல்லது வேருெரு தெய்வம் இல்லை எனத் தெரியவருகிறது. மேலும் சிவன், விஷ்ணுவின் அம்சமாக வரும் இடங்களில் சிவன் மாத்திரம் இன்றி, பிரம்மா, லக்ஷ்மி, விஷ்ணுவின் ஆயுதங்கள் எல்லாமே விஷ்ணுவின் உடம்பில் உள்ள பாகங்கள் என்னும் அர்த்தத்தில் அமைந்திருக்கின்றன. இம்முன்னூறு பாக்களில் சுமார் 35 இடங்களில் வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வருகிறது ; இவைகளைப் பற்றி முன்னமே விவரமாக பரிசீலனை செய்து உள்ளோம். சில குறிப்புகள் பொதுவானவை ; சில திருப்பதியில் இருக்கும் ஒரு சில அம்சங்களைப் பற்றி கவியின் வர்ணனை ஆனுல் சில பாக்கள் கூறும் கருத்துக்கள் இம்மூர்த்தி விஷ்ணுவே தவிர வேறு ஒரு மூர்த்தியும் இல்லை என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாகக் கூறுகின்றன. பொய்கையாழ்வார் 33லிருந்து 40 வரை திருப்பதியைப் பற்றியே பேசியிருக்கிருர், முதலில் கூறும்போது வெண் சங்கு ஊதினவன் இருக்கும் திருப்பதிக்கு வேதத்தில் வல்லுனர்கள் எல்லா திசைகளிலிருந்தும் வந்து துதி செய்கின்றனர் என்று கூறுகிருர், இங்கு வெண் சங்கை ஊதுபவன் விஷ்ணுதான். அடுத்ததில் வேங்கடத்தை மாலின் இருப்பிடம் என்றும் அந்த இடத்தின் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் அசுரர்கள் பயமடைந்தனர். என்று 39.ல் வேங்கடத்தில் நின்று கொண்டிருக்கும் கடவுளைக் குறிப்பிட்டு அவனே பாற்கடலில் பள்ளிக் கொண்டிருப்பவனும். கம்சனைக் கொன்றவனும் வராஹ அவதாரத்தில் பூமியை பாதாளத்திலிருந்து கொண்டு வந்தவனுமாவன் என்று இதில் வரும் குறிப்புகள் யாவும் விஷ்ணுவைத்தவிர வேறு ஒருவரையும் குறிப்பதாகக் கொள்ளமுடியாது, 40-ல் வேங்கடத்தைக்குறிப்பிடுகையில் அசுரர்கள் அரசனுடைய வீழ்ச்சியில் சந்தோஷப்பட்டவனுடைய மலை என்கிருர். 68-ல் வேங்கடத்திலிருக்கும் பகவானை, விண்ணகத்தாய், மண்ணகத்தாய், வேங்கடத்தாய், நூல் வேத பண்டகத்தாய் என விளிக்கிருர். இவையெல்லாம் விஷ்ணுவினுடைய அடைமொழிகள் என்பது பிரசித்தம். 76-ல் இன்னும் வெளிப்படை

யாகச் சொல்லுகிறார். திருவேங்கடத்திலிருக்கும் கடவுள் தான் உலகத்தை அளந்தவன் என்று 77ல் வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் திருக்கோவலூரும் அவன் (விஷ்ணு) நின்று, இருந்து, கிடந்து, நடந்து செயல்படுகின்ற தலங்கள், அதாவது இந்நான்கு விதமானதோற்றங்களும் ஒருவனையே குறிக்கும் என்று. 82-ல் குறிப்பாக துவாதசி நாள் தோறும் பெண்கள் தூபம் போடுவதால் உண்டான புகை எங்கும் பரந்து ஆகாயத்தையே மறைக்கிறது என்று, துவாதசி நாள் அன்று விஷ்ணுவுக்கு உற்சவம் நடப்பது என்பது ஆகம நூல்களினால் கூறப்படும் சிறப்பு அம்சம். 99—ல் வேங்கடத்தில் உள்ளவனை வெள்ளத்தினுள்ளானும் (அதாவது திருப்பாற்கடலில் உள்ளானும்) எனக் கூறப்படுவதால் விஷ்ணுவையே நிச்சய மாகக் கூறிப்பிடுகிறது.

இரண்டாம் திருவந்தாதியில் 25—ல் வேங்கடத்திலிருக்கும் கடவுளை இலங்கையின் மேல் படையெடுத்து இராவணனைக் கொன்றவன் என்கிறார். 45—ல் இருப்பதும் கொஞ்சம் பொது வாக இருக்கிறது. ஆனால் 46-ல் நிச்சயமாக வேங்கடத் திலிருப்பவன் விஷ்ணு தான் என்பதை தெளிவுபடுத்துரைக்க அவனே ஸ்ரீரங்கம், திருக்கோட்டியூர், திருநீர்மலை ஆகிய தலங்களில் இருப்பவன் என்கிறார். 48—ல் இருக்கும் குறிப்பு நேர் முகமானதாக இல்லை; ஏனெனில் மலையைச் சுற்றி அடர்ந்த சோலைகள் உள்ளன என்பது திருப்பதியைக் குறிக்கும் அல்லது மதுரைக் கருகில் உள்ள திருமாலிருஞ்சோலையைக் குறிக்கும். ஆனால் அந்தலத்தில் இருக்கும் மூர்த்தி விஷ்ணுதான் எனத் தெளிவாகச் சொல்லுகிறார். 53, 54—லும் வேங்கடத்தைப் பற்றிச் சொல்லுகிறார். முதல் பாவில் அதை இளங்கிரி எனக்குறிபிட்டு அதையே வேங்கடம் என விவரிக்கிறார். அடுத்த பாவில் வேங்கடமும் திருமாலிருஞ்சோலையும் ஆகிய இவ்விரு இடங்களிலும் பகவான் நின்று கொண்டு காட்சி அளிக்கிறார் என்கிறார்; ஆகவே இங்குள்ள மூர்த்திகள் ஒரே பகவானைக் குறிக்கும் எனக் கொள்ளல் வேண்டும். இப்பாவின் கடைசியில் பிரார்த்திக்கிறார்.—"வெள்ளத்திளங் கோயில் கைவிடேலென்று" இந்தப் பாக்களில் வரும் இளம் கிரி, இளம் கோவில் என்ற சொற்களைக் கொண்டு இம் மூர்த்தி சுப்பிர மணியன் என்கிறார்கள்; ஏனெனில் "இளம்" என்னும் அடை மொழி சாதாரணமாக சுப்ரமணியனுக்குக் கூறும் அடைமொழி இச்சொற்களை அங்கு பிரயோகப்படுத்தப்பட்டிருக்கும் சூழ் நிலையிலிருந்து அர்த்தம் கொடுத்தால் ஒரு வேளை அந்த அர்த்தத்தை ஏற்கும். ஆயின் இங்கு பிரயோகப்படுத்தப்

பட்டிருக்கும் இடத்தை நோக்கின் அவ்வர்த்தம் நிலைக்காது. 72, 75-களில் வேங்கடத்தைப்பற்றி பொதுவான குறிப்புகள் காண்கின்றன.

இப்பொழுது மூன்ருவது திருவந்தாதியை நோக்கின் இதில் முன்னைவிட மிக அதிகமான குறிப்புகள் வேங்கடத்தைப் பற்றி இருக்கின்றன; மேலும் இவ்வாழ்வார் திருப்பதியிலிருக்கும் மூர்த்தியைப் பற்றி பல தகவல்கள் கொடுப்பது அம்மூர்த்தி விஷ்ணு தான் என்பதை சந்தேக மறத்தெளிவு படுத்துகிறது. 14-ல் முதன்முதலாகக் கவர்ந்தைக் குறிப்பிட்டு, வேங்கடத்திலிருக்கும் எம்பெருமானை "நாற்பால வேதத்தான், வேங்கடத்தான், விண்ணோர் முடிதோயும் பாதத்தான்" என்கிருர். 26—ல் வேங்கடமும் இன்னும் அநேக திருத்தலங்களும், தன் மனமும் எல்லாம் குறிப்பிட்டு இவ்விடத்தை பகவான் உறையுமிடம் என்கிருர். மற்றவை யாவும் விஷ்ணுவின் தலங்கள்; ஆகவே வேங்கடமும் அவ்வாறே. 30—ல் வேங்கடமும், பாற்கடலும், விண்ணும் குடந்தையும், பாடகமும், ஆதி சேஷனும், திருத்துழாய் மாலையும் மாதவனுக்கு இருப்பிடம் என்கிருர். 32—லும் அநேகமாக இந்த இடங்கள் குறிப்பிடப் பட்டு மேலும் நூற்கடல் (கடல் போன்ற சாஸ்திரங்கள்), நூல் போன்ற தாமரை, யோகிகளின் இதய கமலம் ஆகியவைகளையும் குறிப்பிட்டு, மேலும் வேங்கடத்திலிருப்பவன் திருமாலே என்பதை சங்கையறத் தெரிவிக்க இவன் தான் முன்னுள் "குருந்தொசித்த கோபாலகன்"—குருந்த மரத்தை முறித்த கண்ணபிரான் என்கிருர். 39, 40-ல் வேங்கடத்தைக் குறிப்பிடுகையில் அதில் இருக்கும் தெய்வமே உலகத்தை அளந்தவன் என்கிருர். 45—ல் வேங்கடத்தைப் பற்றிப் பேசுகையில் வராஹவதாரத்தில் பூமியை கோரப்பல்லின் மீது எடுத்து வந்தவனுடைய திருமலை என்கிருர். 58-லும் இம்மலையைப் பற்றிப் பேசும் போது அங்கிருக்கும் எம்பெருமான் பலியிடமிருந்து மூன்றடி மண் வாங்கினவன் என்கிருர். 61, 62-ல் வேங்கடத்தோடு அநேக தலங்களைச் சொல்லி "இளங் குமரன் தன் விண்ணகர்" வேங்கடம் திருப்பாற்கடல் ஆகியவை அவனது இருப்பிடங்கள் என்கிருர். அதே மாதிரி 62-ல் வாமனுவதாரத்தில் விஷ்ணு பலியிடம் நீர்தானம் பெற்றதைக் குறிப்பிட்டு அவன் இருக்கும் இடங்களுள் வேங்கடத்தைக் குறிப்பிடுகிருர். 70, 72, 73 வேங்கடத்தைப் பற்றி குறிப்பிடுகின்றன. 68-ல் கன்றை விளாமரத்தில் எறிந்து விளாம்பழத்தை உதிர்த்த கதையைச் சொல்லுகிருர். 69, 70-ல் குறிப்புகள் பொதுவாக அமைந்துள்ளன. 71-ல் மறுபடியும் கன்றை

எறிந்த கதை வருகிறது. 72-ல் இளங்குமரர் கோமானிடம்" என்று வேங்கடத்தைக் குறிப்பிடுகிறார். 73-ல் "வடமுக வேங்கடம்" (வடதிசையில் உள்ள திருவேங்கடம்) என்று சொல்லி "குடநயந்த கூத்தனாய்" (கண்ணன் ஆசையோடு குடக்கூத்தாடி) கதையைச் சொல்லுகிறார். 75-ல் வேங்கடத்தை "ஆயன் ...பொருப்பு" (இடையர்களில் முக்கியமான கண்ணபிரானுடைய கோவில்) என்கிறார். 89-ல் ஸ்பஷ்டமாகத் திருவேங்கடத்தை "தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு" (மதுரமான புல்லாங்குழலை தன்னுடைய வாயால் ஊதிய கண்பிரா)னுடைய திருமலை என்கிறார்.

**வேங்கடம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் வைணவர்களுக்கே உகந்த திருக்கோயில் :**

மேற் கூறிய பரந்த கூற்றுக்களால் தெரிவது யாதெனில் இம் முன்னூறு பாக்களில் இவ்வாழ்வார்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் இத் தலத்தை வைஷ்ணவர்கள் வழிபடும் தலம் எனக் கருதினார்கள். அத்தலத்தில் நடக்கும் வழி பாடுகளை ஊன்று கவனித்து சிறிய அம்சங்களைக்கூட பாக்களில் கூறியிருப்பதால் இத் தலத்தைப்பற்றி அவர்கள் நன்கு அறிவார்கள் எனத் தெரிகிறது. சில இடங்களில் இவர்களுடைய பாக்கள் விஷ்ணுவைக் காட்டிலும் சிவனைப்பற்றிக் கூறுவதாக அர்த்தம் கொண்டாலும், அந்தந்த சந்தர்ப்பத்தைத் தழுவி அவைகள் விஷ்ணுவையே குறிக்கும் என்று கொள்ளல் வேண்டும். முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் இப் பாக்களுடைய சரியான பொருள் அந்தந்த சந்தர்ப்பத்தைத் தழுவியதாக இருக்கவேண்டும். மேலும் ஒரே ஒரு பாவை வைத்துக் கொண்டு ஒரு முடிவு கொள்ளாமல் அவர்களுடைய பூர்ண கிரந்தத்தில் என்ன அம்சம் சொல்லப் பட்டிருக்கிற தென்று கவனித்து அதன்படி அப்பாவிற்குப் பொருள் கொளல் வேண்டும். இந்த அடிப்படை கொள்கைகளை வைத்துக் கொண்டு பார்த்தால் இத்தலம் விஷ்ணுவினுடையதே தான் என இவ்வாழ்வார்கள் கருதினார்கள். மேலும் அவர்கள் அங்கு சென்று விஷ்ணுவுக்கே வழிபாடு செய்கிறோம் என்ற பூர்ண நம்பிக்கையுடன் வேங்கடவனைத் தொழுதார்கள்.

அத்தியாயம் 4

# சிலப்பதிகாரத்தில் திருப்பதி

**சிலப்பதிகாரத்தில் உறுதிச்சான்று :**

மேற்கூறிய ஆழ்வார்கள் கூறிய நிலைமைக்கு எதிர்பாராத இடத்தில் உறுதிச்சான்று கிடைத்து இந்த பிரச்னையை சந்தேகத்துக்கு இடமில்லாமல் செய்கிறது. தமிழ் இலக்கியமாகிய சிலப்பதிகாரம் ஆக்கியவர் இந்து பிராமணர் அல்லர்; அவர் வேறு மதத்தைத் தழுவியவர்; அவர் புத்த மதத்தைத் தழுவியவர். அவர் புத்தமதத்தை தழுவியவராயிருந்தாலும் ஜைனமதத்தைத் தழுவியராயிருத்தாலும் அவர் இந்தியர், அறிவுடையவர்; தன் மதத்தைச் சேராத இதர மதங்களில் இருக்கும் விஷயங்களை பக்ஷ பாதமின்றி கருதும் பண்புடையவர், அவர் இவ்விலக்கியத்தில் திருப்பதி விஷ்ணு ஸ்தலம் என்று குறிப்பிட்டிருப்பது இவ்விஷயத்தை சந்தேகத்திற்கு இடமில்லாமல் செய்து இருக்கிறது. தற்காலத்திய அறிஞர்கள் கூறும் வேற்று கொள்கைக்கு முரணாக உள்ளது. இவ்வறிஞர்கள் இராமானுஜர் காலத்தில் சில அவைஷ்ணவர்கள் இயற்றிய கூற்றுக்களைத் தான் பின்பற்றியிருக்கிறார்கள். இந்த விஷயத்தை மேலும் விரிவாக பராமர்சிக்க வேண்டியிருப்பதால் இதை பிறகு ஆராய்வோம். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகள் மனதில் இத்தலம் விஷ்ணுவின் தலம் தான் என்பதில் சந்தேகமே எழவில்லை. XI—ல் வரும் 41-53 வரிகள் பின் வருமாறு.

**" வீங்கு நீரருவி வேங்கடமெனனு**
**மோங்குயர் மலயத்துச்சி மிசை**
**விரிகதிர் ஞாயிறுந்திங்களும் விளங்கி**
**யிருமருங் கோங்கிய விடைநிலை தானத்து**
**மின்னுக்கோடியுடுத்து விளங்கு விற்பூண்டு**
**நன்னிறமேக நின்றது போலப்**
**ப்கையணங்காழியும் பால் வெண்சங்கமும்**
**தகை பெறுதாமரைக் கையினேந்தி**
**நலங்கிளவாரமரர் விற்பூண்டு**
**பொலம் பூ வாடையிற் பொலிந்து தோன்றி**
**செங்கணெடியோ னின்ற வண்ணமும் "**

வேங்கடத்தின் ஒங்குயர் மலையின் உச்சிமீது ஒடைகள் பிரவாகத்தோடு இருக்கும்; சூரியனும் சந்திரனும் தங்கள் ஒளியை

வீசிக் கொண்டு இருக்கிறார்கள். இது மின்னலுடன் கூடிய கருமேகம் வான வில்லால் அலங்கரிக்கப்பட்டது போல் இருக்கிறது. அம்மலைமேல் செங்கண்மால் பீதாம்பரத்தோடும் உயர்ந்த மாலைகளோடும் ஒரு தாமரைக் கையில் சக்கரமும் மற்றொரு கையில் பால் வெண்மையான சங்கமும் கொண்டு கம்பீரமாக நிற்கிறார் ". இவ்வரிகளில் கூறப்படும் சந்தர்ப்பத்தை நோக்கின் இளங்கோ அடிகள் தான் என்ன கருத்தை உறைக்கிறார் என்பதை அவர் பூர்ண ஞானத்துடன் சொல்லுகிறார் என விளங்கும். இச்செய்யுளை மலை நாடு (மலையாளம்) விருக்கும் ஒரு பிராமண தேசாந்திரி வாயிலாக வெளிப்படுத்துகிறார் அப்பிராமணர் ஸ்ரீரங்கம், திருப்பதி ஆகிய தலங்களிலுள்ள விஷ்ணு கோவில்களில் தரிசிக்க எண்ணி பாண்டிய நாட்டின் வழியாக பிரயாணம் செய்து சோழ ராஜ் யத்தின் தலை நகரான உறையூரின் வெளியில் ஒரு தோப்பில் இருந்து கொண்டு கூறுகிறார். அதே தோப்பிற்கு அவ்வமயம் கோவலனும் அவன் மனைவியும் ஜைன முனிவர் கௌண்டி அடிகளும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து அங்கு வந்தனர். கோவலன், தனது தகப்பனார் மாசட்டு வணிகன் என்பவனால் கொடுக்கப்பட்ட பெரியதொரு ஐச்வர்யத்தை சோழநாட்டுத் தலை நகரில் மாதவி என்னும் மிக்க அழகு வாய்ந்த தேவ தாசியோடு உறவாடிக் களித்துத் தோற்று, அவ்வைச்வர்யத்தை மறுபடியும் மதுரைக்குச் சென்று வணிகம் செய்து திரும்பப் பெறலாம் என்னும் நோக்கத்துடன் வந்திருக்கிறான். அவனும் தன் வாழ்நாள் வீண் போனதே என நொந்து தன் மனைவியை புறக்கணித்தோமே என்று தன் மனத்தில் குற்றம் தோன்றி தன்னை விடாது வரும் மாதவியையும் அழைத்துக் கொண்டு, மதுரையை நோக்கி ஏகுகையில் உறையூரில் வந்து தங்க லாயினான். உறையூரிலிருந்து மதுரைக்குப் பல வழிகள் உண்டு ஆனால் அக்காலங்களில் இப்பொழுது போலவே வழியில் திருடர் விலங்குகளால் பயம் உண்டு. ஆகையால் அவன் மதுரைக்குப் போகும் வழியைப் பற்றி விசாரிக்கலாயினான்; அத்தருணத்தில் தான் அங்கு இளைப்பாறும் அந்தணன் வந்திருப்பதை அறிந்து அவரிடம் சென்று தான் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து பாண்டிய தேசம் வழியாக சோழ நாட்டுத் தலைநகரம் வந்திருப் பதை அறிவித்து மேலும் நடுவில் ஒரு விபத்தும் ஏற்படாமல் வந்தது பாண்டிய நாட்டரசன் அரசைப்பற்றி புகழலானான். அந்தணரும் பாண்டிய தேசத்தில் மதுரையிலிருந்து உறை யூருக்கு ஒரு கேடுமின்றி வந்ததை பாண்டிய அரசன் நல்ல ஆட்சியால் தான் என்பதை ஒரு பாட்டால் அறிவித்தான்.

கோவலனும் அவரை யார் எனக் கேட்க அவரும் தான் ஒரு என்றும் பாண்டிய தேசம் மூலமாக ஒரு கேடுமின்றி வந்திருப்ப தைத் தெரிவித்து, ஸ்ரீரங்கம், திருப்பதி ஆகிய க்ஷேத்திரங்களுக்கு தலயாத்திரை செய்யப் போவதையும் சொன்னார் அவர் வந்த வழி மிகவும் பயங்கரமான வழியானதால் தான் ஒரு தீங்குமின்றி அங்கு வந்து சேர்ந்தது பாண்டிய அரசின் நல்ல ஆட்சி முறை யால் தான் எனக் கூறினார். அதைக் கேட்டு கோவலன் தான் எந்தப் பாதை மூலம் மதுரைக்குப் போக வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான். இதைப்பற்றி மேலும் கவனிக்க அவசியம் இல்லை. ஸ்ரீரங்கம், திருப்பதி, திருமாலிருஞ் சோலை ஆகிய விஷ்ணுவின் தலங்களைப் பற்றிக் கூறும் விவரங்கள் அக்காலத்தில் திருப்பதி விஷ்ணுத்தலமாக புகழுடன் திகழ்ந்தது வேதவிர வேறு இல்லை; அப்புகழ் மேற்கில் மலை நாட்டுவரை பரவியிருந்தது. மலை நாட்டவர்கள் கூட திருப்பதிக்கு யாத்திரையாக வந்தார்கள் என ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. மேலும் வைஷ்ணவரல்லாத ஒருவர், இத்தலத்தைப் பற்றி கோவலன் வாயிலாக பாக்கள் மூலம் தெரிவிப்பதால் திருப்பதி விஷ்ணுஸ்தலம் என்னும் நியாயம் ஊர்ஜிதமாகி விட்டது. இதையே தான் நாம் முதலாழ்வார்களுடைய பாக்களிலிருந்து விரிவாக ஆராய்ந்து முடிவெடுத்தோம். இப்பொழுது திருமழிசை ஆழ்வார் (பக்திசாரர்) என்பவருடைய நூலில் சொல்லியிருப்பதைக் கவனிப்போம்.

அத்தியாயம் 4

# திருமழிசையாழ்வார் நூற்களில் திருப்பதி

**திருமழிசையாழ்வார் : அவர் வாழ்க்கையும் காலமும்**

திருமழிசையாழ்வார் ஒரு சேழ்ப்பாரற்றுக் கிடந்த ஒரு குழந்தையாக இருந்த பொழுது அக் குழவியை ஓர் பாய் முடைபவன் எடுத்து தன்னதாக வளர்த்துவந்தான். ஆகையால் அவர் நான்கு ஜாதிக்கும் கீழ்பட்டவராகக் கருதப்படுகிறார். அவருடைய பிறப்பின் கதையை கூறும் பரம்பரையான வரலாறு பின் வருமாறு : பார்கவரிஷிக்கும் அவர் பத்தினிக்கும் வெகு நாட்கள் கழித்து ஒரு யாகம் செய்த பின்னர் ஒரு குழவி உண்டாயது. அக் குழவி பூர்ணகர்பம் ஆவதற்கு முன் பிறந்ததாலும் அதற்கு சரியான உரு ஏற்படாததாலும் அதை ஒரு பிரம்புச் செடியின் மத்தியில் வைத்து விட்டுப் போக அதை அப் பாய்முடைபவன் கண்டெடுத்தான். ஒரு வேளை இக் கதை மூலம் அவருக்கு உயர்ந்த ஜாதியில் உதித்த பெருமையை கொடுக்க ஏற்பட்ட கற்பனையாகவும் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் நாம் நிச்சியமாகச் சொல்லலாம். அதாவது அவரே தன்னுடைய நூலில் நான்கு வர்ணங்களிலும் பிறந்தவன் அல்லேன் என்கிறார். எப்படியிருப்பினும் முதலாழ்வார் களைப்போல் அவரது பிறப்பைப் பற்றிய வரலாறு நமக்குக் தெரியாது. ஒரு வேளை நான்கு குலங்களுக்கும் அப்பாற்பட்ட குலத்தில் பிறந்தவராக இருக்கலாம். இருப்பினும் அவருக்கு பிறப்பிலருந்தே ஆன்மீக ஞானம் வெகுவாக இருந்தது, முதலாழ்வார்களைப் போல் உண்மை தத்துவங்களை உணர்ந்து உலகத்துக்கு உரைக்கும் ஆற்றல் உடையவராயிருந்தார். குரு பரம்பரையில் இவரை சென்னைக்கு அருகில் இருக்கும் பூ விருந்த வல்லியின் சமீபத்தில் இருக்கும் திருமழிசை என்னும் கிராமத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் இவருக்கு திருமழிசை யாழ்வார் எனப் பெயர் உண்டாகியது. குரு பரம்பரையில் இவரைப்பற்றிக் கூறுகையில் அதிசயிக்கத்தக்கதும் அமானுஷ்ய மானதுமான செயல்கள் செய்தார் என்று கூறுவது அவர் சரித்திரம் சரியாகத் தெரியாததால் ஏற்பட்ட குறிப்பு எனக் கொளல் வேண்டும். அல்லது அவர் அசாதாரண தன்மையை வெளிப் படித்தியிருக்கலாம் அவர் இயற்றிய நூல்களிலிருந்து அவரைப் பற்றி சில விஷயங்கள் நாம் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக அவர் பிறந்த குலத்தைப் பற்றி அவரே சொன்னதை மேலே கூறியுள்ளோம். இதுவே நம்மால் பூர்ணமாக நம்பும்படியான அவர் வாழ்க்கையைப்பற்றி கிடைக்கும் தகவல். பௌராணிகமான தகவல்களை விட்டு விட்டுப்பார்ந்தால் அவர் விஷ்ணு பக்தர் என்றும் அப்பக்தி பிறவியின் அருளினுல் மட்டுமேயல்லாது விரிவாக சாஸ்திரங்கள் பயின்றதன் பயனுக கிடைத்தது என்னலாம். அவர் இதர சமயங்களை அறவே தள்ளி விஷ்ணுவே சரணம் புக்கத்தக்கவன் என்னும் கொள்கையைக் கொண்டார் என்னலாம். அவரே கூறுகிருர்:—

**'' அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்**
**சிறியார் சிவப்பட்டார் செப்பில்—வெறியாய**
**மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்.**
**ஈனவரே யாதலாயின்று.**

அ—து சமணர்கள் உண்மை அறியாதவர்கள். பவுத்தர்கள் பிரமைப்பட்டவர்கள். சைவ மதத்தார்கள் நீசராகியொழிந்தார்கள். விஷ்ணுவின் திருவடிகளைத் தொழாதவர்கள் கீழ்பட்டவர்களே யென்று. இதையே வேருெரு விதமாகவும் சொல்லியிருக்கிருர்.

**'' சாக்கியங் கற்ருேம் சமண் கற்ருேம் சங்காரு**
**ராக்கிய வாகம நூலாராய்ந்தோம்—பாக்கியத்தால்**
**செங்கட் கரியானைச் சேர்ந்துயாங் தீதிலமே**
**எங்கட் கறிவ தொன்றில்.**

அ—து புத்தர் நாட்டிய பௌத்தமதத்தைக் கற்ருேம் ஜீனர் மதத்தையும் கற்ருேம். ஆகமங்களை சங்கரன் மூலம் கற்ருேம். ஏதோ பாக்கியத்தால் செங்கண் கரியானை (விஷ்ணுவைப்) பின்பற்ற நிச்சயத்துள்ளோம். எங்களை தீது அணுகாது. நமக்கு சாத்தியம் இல்லாதது எதுவும் இல்லை என்று, இதைத்தவிர இவர் தான் பிறந்த ஊரிலேயே பல காலம் ஜீவித்திருந்த பொழுது முதலாழ்வார்கள் தல யாத்திரை செய்து கொண்டு வரும்பொழுது இவரை இவ்வூரில் சந்தித்தனர். இம் மூவரும் இவ் வூரை அணுகுகையில் அங்கு ஒரு தேஜோ மயமான ஒளி வான் நோக்கி கிளம்ப அதைக் கண்டு தங்கள் யோக மகிமையால் இது என்ன என்பதையறிந்து மேலும் தவத்திலிருக்கும் ஆழ்வார் நன்கு உளரா என அவரைப் பார்க்காமலிருக்கையிலேயே கேட்டனராம். ஆழ்வாரும் மூவரையும் நேரிடையாகப் பார்க்காமலேயே அவர்கள் பெயர்களைக் கூப்பிட்டு அவர்கள் நன்கு உளரா அவர்கள் தலையாத்திரை நன்கு நடக்கின்றனவா ? என வினவினுராம்.

இவ்வாறு யதேச்சையாய் ஏற்பட்ட நட்பு அவர்கள் காலாந்தரம் நீடித்திருந்தது. முதலாழ்வார்கள் பிரிந்துபோய் கொஞ்சம் நாட்கள் கழித்து இவரும் காஞ்சிக்குச் சென்று பொய்கையாழ்வார் அவதரித்த வெஃகாவில் போய் தங்கி பரமனுக்கு பணி புரிந்து வந்தார். இவ்வாறு இருக்கும் பொழுது இவரிடம் கணி கண்ணன் என்னும் ஒரு சூத்திரன் வந்து சேர்ந்தான். இக் கணி கண்ணனுடைய தாய் தந்தையர் ஆழ்வாரின் குழவிப் பருவத்தில் அவருக்குப் பால் புகட்டியதாக மரபு. கணி கண்ணன் அவ்வூர் அரசனிடம் பணி புரிந்தாலும், ஆழ்வாரிடம் மிகுந்த கனிவோடு சேவைகள் செய்தான். அவ்வரசனது அரண்மனையில் வேலை செய்து வந்த வயது முதிர்ந்தவனும் ஏழையானவளுமான ஒரு பெண்மணி இவ்வாழ்வாருக்கும் அவருடைய கிரஹத்தை சுத்தமாக்கி வைத்தல் ஆகிய சிற்றொண்டுகளைச் செய்து வந்தாள். அவளும் ஆழ்வாரை பிரார்த்திக்க ஆழ்வார் அவளுக்கு குறையா அழகும் தேயா இளமையும் அனுக்கிரஹித்தார். அவள் யௌவனத்வையும் அழகையும் கண்ட அரசன் அவள் மேல் மையல் கொண்டான். அரசன் அவளை நோக்கி உனக்கு இத் தேயா அழகு எவ்வாறு உண்டாயது என வினவ அவளும் ஆழ்வாருடைய அனுக்ரஹித்தினால் உண்டானது என்று கூறி மேலும் அரசர் ஆழ்வாரை அடைய வேண்டுமாயின் கணி கண்ணன் உதவி புரிவான் என்று சொன்னாள். உடனே அரசன் கணி கண்ணனைக் கூப்பிட்டு ஆழ்வாரை அரசவைக்கு அழைத்துவர உத்திர விட்டான் கணி கண்ணன் மனு கணமே சொன்னான் "ஆழ்வார் அரசர் அவைக்கு வரமாட்டார் அவரை நான் அழைத்து வரும் பொருப்பையும் எடுத்துக் கொள்ளமாட்டேன்" என்றும் சினங் கொண்ட அரசன் அரச கட்டளையை மீறிய கணி கண்ணனை தேசத்தை விட்டு வெளியே போக உத்தரவிட்டான். கணி கண்ணனும் ஆழ்வாரிடம் இதைக் கூறி தேசத்தை விட்டுப் போக ஆயத்தமானான். ஆழ்வார் இதைப் பொறுக்காது தானும் அவன் பின்னே தொடர்ந்தார் அது மட்டு மில்லாமல் எம் பெருமானையும் கூட வரும்படி சொல்லி, அம் மூவரும் நாட்டை விட்டு வெளியே ஏகினர். இவ் வதிசய சம்பவம் பல்லவ ராஜனுக்கு புத்தி புகட்ட அவன் உடனே அவர்களிடம் ஓடிச் சென்று நாட்டிற்குத் திரும்பி வரவேண்டுமென்று மன்றாட அவர்களும் அன்றிரவு "ஒரிக்கை" என்னுமிடத்தில் தங்கி விட்டு மறு நாள் தங்கள் இடங்களுக்குத் திரும்பினார்கள். இதற்குப் பிறகு அரசனும் ஆழ்வாரை மிக்க மரியாதையுடன் தொழுதான். அவரும் அக்கோவிலிலுள்ள கடவுளும் அவனுக்கு தொழுவதற்குரியவர்களாக ஆனார்கள்.

காஞ்சியில் பல காலம் தங்கி விட்டு ஆழ்வார் தென்னாட்டில் தலையாத்திரை செய்யும் பொருட்டு சிதம்பரம் மார்க்கமாக கும்பகோணம் சென்றார். சிதம்பரத்தில் ஓர் முக்கிய நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் காலை ஆழ்வார் பிராமண வீதி வழியாகப் போகையில் அவ்வந்தணர்கள் தாங்கள் செய்யும் யாகத்திற்கு ஓதும் வேதத்தை அவரைக் கண்டதும் நிறுத்தி விட்டார்கள் எல்லோரும் மௌனமாக ஆகி விட்டார்கள் அவரும் அத்தருணம் யாக சாலைக்குள் நுழைந்தார். ஏனென்றால் அவர் ஜாதியில் இழிந்தவராதலில் அவர் காதில் வேத கோஷம் படக் கூடாது என்று. பிறகு அவர்க்ளுக்கு, ஆழ்வார் ஓர் உயர்ந்த விஷ்ணு பக்தர் எனத் தெரிய, மீண்டும் விட்ட இடத்திலிருந்து வேதம் ஓத ஆரம்பிக்க முயலுகையில், அவர் களுக்கு விட்ட இடம் மறந்து விட்டது. ஆழ்வாருக்கு அவர் களுடைய சங்கடம் தெரியவந்தது. ஆகவே தன் ஜாதிக்குத் தக்க வேதத்தை வாயால் கூறக் கூடாதா கையால், ஒரு நெல்லை நகத்தால் இரண்டாகப் பிளந்து காண்பித்து அவர்கள் விட்ட இடத்தை நினைவு மூட்டினார். அந்தணர்களும் மேற்கொண்டு காரியங்களை நடத்திக் கொண்டு போனார்கள். கொஞ்சம் நாட்கள் கழித்து அந்த அந்தணர் குழாமில் உள்ளவர்கள் ஆழ்வார் விஷ்ணு பக்தர் என்பதை ஒத்துக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் நம்பும்படி ஆழ்வார் எம்பெருமானை எதிரிகள் முன் தரிசனம் கொடுக்குமாறு சொல்ல, அவ்வாறே நடக்க எதிரிகள் தலை குனிந்து அவரை வணங்கி அவர் ஓர் உண்மை விஷ்ணு பக்தர் தான் என்று கொண்டாடினார்கள். இதற்கு பிறகு, ஆழ்வார் அவ்வூரை விட்டு கும்பகோணம் முதலிய பல தலங்களுக்கு யாத்திரை செய்து, நீண்ட ஆயுள் காலம் வாழ்ந்து இறுதியெய்தினார்.

ஆழ்வாருடைய வாழ்நாளில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றிமேலே கூறியவை நமக்கு வியப்பைத் தருபவையாயிருப் பினும் அவர் காலத்தை நிர்ணயிக்க ஒரே ஒரு சங்கதி (அதாவது அவர் காஞ்சி அரசன் காலத்தில் இருந்தவர்) என்பது மட்டும் நமக்கு வழிகாட்டியாயிருக்கிறது. இவ்வரசனைப் பற்றியும் நமக்கு முழுவிவரம் தெரியவில்லை; நமக்குத் தெரிவதெல்லாம் இவர் காலத்தில் வெஃகா வென்னுமிடத்தில் விஷ்ணு "யதோத்தகாரி" — சொன்னவண்ணம் செய்தவர் என்னும் பெயருடன் கோயில் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. தொண்டமான் இளந்திரையன் என்ற காஞ்சி அரசனைப் புகழும் பெரும் பாணாற்றுப் படையில் காஞ்சியைப் பற்றி விவரிக்கையில் அங்கு வெவ்வேறு மதத்தினரும் தம் தம் இஷ்டதெய்வத்தைத்

தொழ கோயில்கள் இருந்ததெனக் கூறுகையில் முக்கியமாக வெஃகாவிலிருக்கும் கோயிலைத் தனிச்சிறப்புடன் கூறுகிறார்.

**மலர் தலையுலகத் துள்ளும் பலர் தொழ**
**விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்—**

பெரும் பாணாற்றுப் படை 410.11 வரிகள். இவ்வரிகளிலிருந்து இத் தொண்டைமான் காஞ்சி இளந்திரையன் என்றறிஞ எழும். ஆழ்வாரின் சரித்திரத்தைப் பற்றி இன்னொரு வரலாறு. அவர் அவ்வமயம் இருந்த எல்லா மதங்களையும் கற்றுணர்ந்து, ஒரு சமயம் சைவ மதத்தைத் தழுவியவராயிருந்தார் என்றும் பல விதங்களில் வல்லுனருயிருந்தார் என்றும் தெரிகிறது. பேயாழ்வார் அவரை வாதத்தில் வென்று சைவ மதத்திலிருந்து திருப்பி வைஷ்ணவராக்கினார் என்பது அந்த வரலாறு. அவர் நூல்களிலிருந்து இவ்வரலாற்றிற்குத் தக்க சான்று கிடைக்கவில்லை; ஆனால் இந்நூல்களின் போக்கை கவனித்தால் ஒரு சமயம் இவர் இம்மாதிரி மாறினாரோ எனத் தோன்றும். இவ்வரலாற்றின் விவரங்களை விட்டு விட்டாலும் இவர் முதலாழ்வார்கள் காலத்தவரென்றும் காஞ்சிக்குச் சொல்ப தூரத்தில் இருந்தவர் என்றும் பல்லவ ராஜனை காஞ்சி இளந்திரையன் காலத்தினர் என்றும் ஊகிக்க இடம் இருக்கிறது. திவ்ய பிரபந்தங்களில் இவருடைய நூற்கள் இரண்டும் முதலாழ்வார்கள் பாடிய அந்தாதி மாதிரி இவரும் நான்முகன் திருவந்தாதி என்ற (96 பாட்டுகள்) அடங்கிய ஒரு நூலும் நூறுக்கு மேற்பட்ட (120 பாக்கள்) திருச்சந்த விருத்தம் என்னும் நூலும் இயற்றியுள்ளார். நாம் இப்பொழுது இவ்விரண்டு நூற்களையும் தான் விசாரிக்க வேண்டும்.

**ஆழ்வாரது கொள்கை :**

முன் கூறிய முதலாழ்வார்களைப் போலவே விஷ்ணுவே சர்வ ரக்ஷகன் என்பது இவர் சித்தாந்தம். மேலும் மற்ற மூவரைப் போல இந்நம்பிக்கைக் கொண்டது மட்டுமேயன்றி மேலும் அதில் ஒரு ஆவேசத்தோடு கொள்கை கொண்டவர். மூவாழ்வார்கள் இதர தெய்வங்களான பிரம்மா, சிவன், இந்திரன் ஆகியோர்களைத் தொழுவதில் ஒரு கால் கொஞ்சம் தணிந்து கொடுப்பார்கள். இவரோ அந்த மாதிரி ஒன்றும் செய்யமாட்டேன் என உறுதியாகக் கூறுகிறார்.

**“ இடமாவது என்னெஞ்சம் இன்றெல்லாம் பண்டு**
**படநாகணை நெடிய மாற்குத்—திடமாக**
**வையேன் மதிசூடி தன்னோடு அயனை நான்**
**வையேனுச் செய்யேன் வலம் ”**

(நான் முகன் நூற்றந்தாதி 66)

அதாவது இப்பொழுது என் மனம் அவனை இருப்பிடமாக உள்ளது. எவன் அநந்தசயனமாக உள்ளானே அவனே என் மனத்தில் உள்ளான். அவனுடன் சமமாக மதி சூடிய சிவனையும் அயனை (பிரம்மாயும்) வைக்க மாட்டேன். இது நிச்சயம் என்கிறார். இதிலிருந்து விஷ்ணுதான் சர்வ ரக்ஷகன் என்பதை இவர் திடமாக நம்புகிறார் என்பது சந்தேகமறத் தெரிகிறது. இந்த நூற்றந்தாதியிலிருந்து இன்னும் அநேக பாக்கள் இதே கருத்தைக் கொண்டதாய் உள்ளன என எடுத்துக் காட்டலாம்; இருப்பினும் இவ்வளவு தீவிரமாக இருக்காது. இவர் மற்ற ஆழ்வார்களைப் போல விஷ்ணுவிடத்தில் திட நம்பிக்கை வைத்திருந்து மற்றவர்கள் ரக்ஷணை செய்யக் கூடிய சக்தி குறைந்தவர்கள்: விஷ்ணு ஒருவனே சர்வ ரக்ஷகன் என 26-ல் இதையே விவரிக்கிறார்:

**மற்றுத்தொழுவரொருவரையும் யானன்மை**
**கற்றைச்சடையான் கரிகண்டாய் – எற்றைக்கும்**
**கண்டுகொள் கண்டாய் கடல் வண்ணா! யானுன்னைக்**
**கண்டு கொள்கிற்மாறு.**

(நான் முகன் திருவந்தாதி—26)

அதாவது நான் விஷ்ணுவைத்தவிர வேறொருவனையும் தொழுவதில்லை என்பதற்கு சடைமுடியன் சிவனே சான்று என்கிறார். முன்னமேயே 6-வது பாட்டில் இதரமதத்தவர்கள். "பின்பற்றும் மதங்கள் கீழ்பட்டவை என்றும் அதில் ஜினர்கள் புத்தர்கள், சைவர்கள் ஆகியவர்களை முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிறார். 14, 15–ல் இதையே சொல்லுகிறார். 14–ல் நாராயணனே எனது இறைவன். நாராயணனே என்னை நரகத்திற்குப் போவதிலிருந்து தவிர்க்கிறான். அவனுடைய பெயரை மனனஞ் செய்யாமல் இதரர்களுடைய தப்பான கொள்கைகளைப் பின்பற்றி நிலை தடுமாறி இருப்பது என்னே விந்தை?" என்கிறார். 15-ல் மற்றைய கடவுள்களாலேயே போற்றப்படும் விஷ்ணுவின் திருவடிகளில் பூக் கொண்டு அர்ச்சிப்பார்கள். மார்க்கண்டேயனுக்கு நீல கண்டன் அளித்தவரம் போல சிரஞ்சீவத்துவம் கிடைக்கும் என்கிறார். இதில் மார்க்கண்டேயன் சிவனை உபாசித்து பிறவா வரம் என்னும் மோக்ஷம் பெறாமல் இறப்பு என்பதை நீக்குக் கொண்டது குறிப்பிடப்படுகிறது. 17-ல் சொல்லுகிறார் சிவன் தக்ஷிணா மூர்த்தி வடிவமாக நான்கு ரிஷிகளுக்கு உபதேசித்தது என்னவெனில் தானே உலகத்தை அளந்தவனும், ஆலிலை மேல் கண் வளர்கின்றவனுமான விஷ்ணுவைத் தொழுகிறேன் என்பது. இம் மாதிரியே இதே கருத்துக்களைக் கொண்ட அநேக பாக்களில் புராணங்களில்

வரும் கதைகளை ஆதாரமாகக் கொண்டு தனது தத்துவங்களை உணர்த்துகிறார். 96-ல் அவர் தன் திருவந்தாதியை முடிப்பது:

**"இனியறிந்தேன் ஈசர்க்கும் நான் முகற்கும் தெய்வம்**
**இனியறிந்தேன் எம் பெருமான் உன்னை—இனியறிந்தேன்**
**நாரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை**
**நாரணன் நீ நன்கறிந் தேன் நான்"**

(நான்முகன் திருவந்தாதி—96)

இனி நான் நன்கு உணர்ந்தது என்னவென்றால் நீயே எனக்கு இறைவன். நீயே சிவனுக்கும் நான்முகனுக்கும் (பிரமனுக்கும்) தெய்வம். எக்காலத்திலும் நான் தெரிந்து கொண்டது நீயே இவ்வுலகத்திலுள்ளவற்றிற் கெல்லாம் காரணம் இதற்கு முன் அறியப்பட்ட பொருள்கள்; இனிமேல் அறியப்படும் பொருள்கள் எல்லாம் நீயே; நீயே நற் காரியங்கள். நீதான் நாராயணன். இதை நான் நன்கு உணர்ந்தேன்" என்று தன் திடமான கொள்கையைச் சொல்லி முடிக்கிறார்.

மேலே கூறியவற்றிலிருந்து ஆழ்வாருடைய திடமான கொள்கை மும் மூர்த்திகளில் சிவன், பிரும்மா இருவரும் நாராயணனுடைய ஒரு பாகம் என்பது. ஆகவே இத்திருவந் தாதியை ஆரம்பிக்கையில் நாராயணன் நான்முகனை (பிரும்மாவை)ப் படைத்தான். நான்முகனும் சிவனை தன்னைப் போலவே நான்கு முகத்தோடு படைத்தான். இந்த தத்துவத்தை இந்த அந்தாதி மூலம் உலகத்திற்கு அறிவிக்கப் போகிறேன் என்கிறார். இதைத் தொடர்ந்து விஷ்ணுதான் ரக்ஷகன் என்பதை இன்னும் தெளிவாக 2-ல் சொல்கிறார்.

**"தேருங்கால் தேவன் ஒருவனே யென்றுரைப்பார்**
**ஆரு மறியார் அவன் பெருமை—ஓரும்**
**பொருள் முடிவும் இத்தனையே எத்தவத்தாற்கும்**
**அருள் முடிவதாழியான் பால்"**

(நான்முகன் திருவந்தாதி—2)

எல்லாம் உணர்ந்த ஞானியர் தேவன் ஒருவனேயென் றுரைப்பர். அவனது பெருமை யாரும் அறிய மாட்டார். ஆராயப்படும் பொருள்களின் முடிவும் இதுவே. எந்த தவம் செய்தாலும் அவனுடைய அருளால்தான் பயன் சித்திக்கும் என்று 4-ல் சொல்லுகிறார்.

**'' ஆறு சடைக்கரன்தான் அண்டர் கோன் தன்னோடும்**
**கூறுடைய னென்பதுவும் கொள்கைத்தே—வேறொருவல்**
**இல்லாமை நின்றானை எம்மானை எம்பொருட்டும்**
**சொல்லானைச் சொன்னேன் தொகுத்து.**

(நான்முகன் திருவந்தாதி—4)

அதாவது கங்கையைச் சடையில் தரித்த சிவனும், தன்னுடைய உடம்பில் ஒரு பகுதியானவன் என்று 42, 43-ல் தெளிவாக சிவனும் பிரம்மாவும் வேங்கடத்தில் வந்து தொழுவார்கள் என்று சொல்லுகிறார். 54-ல் பொதுவாகக் கூறுகிறார்.

**'' தேவராய் நிற்கும் அத்தேவும் அத்தேவரில்**
**மூவராய் நிற்கும் முது புணர்ப்பும்—யாவராய்**
**நிற்கின்ற தெல்லாம் கொடுமா வென்றுவாதர்**
**கற்கின்ற தெல்லாம் கடை ''**

(நான்முகன் திருவந்தாதி—54)

அதாவது அவன் பல தெய்வங்களாகக் காட்சியளிக்கிறான். அவர்களுள் திருமூர்த்தியாகக் காட்சியளிக்கிறான். மற்றவர் எல்லாரும் அவனே. இதை அறியாதார் எதைக்கற்றவராயினும் கல்லாதவர் என்று. 73—ல் சொல்லுகிறார் உலகத்தை உண்டுமிழ்த்தவனும் சக்கரத்தைக் கையில் உடையவனுமான, அவனுடைய பெருமையை யாரறிவர். அவனுடைய உடலை நீலகண்டனும் எண்கண் கொண்ட பிரம்மாவும் பார்த்ததில்லை என்று 75—ல் சொல்லுகிறார். சிவன் தன் சக்தியால் ஆன மட்டும் புஷ்பத்தால் விஷ்ணுவை பூஜிக்கிறான். ஆனால் அவனுக்கு விஷ்ணுவின் கிருபை கிடைக்கவில்லை. இது ஒன்றிலிருந்தே சிவனால் விஷ்ணு அர்ச்சிக்கத் தகுந்தவன். அவனைத்தவிர வேறொருவரும் ஆராதிக்கத் தகுந்தவரில்லை எனக் கருதினான். ஆகவே மற்ற மதங்களில் தொழுபவர்கள் விஷ்ணுவுக்கு கீழ் பட்ட தேவதைகளையே பூஜிக்கிறார்கள் '' என்று.

இதனால் அவர் விஷ்ணு பக்தர் என்பது தெரிகிறது இவர் வேங்கடத்தைப்பற்றி சொல்லுவதை கொஞ்சம் கவனிப்போம். வேங்கடத்தைப் பற்றி இந்நூலில் அநேக இடங்களில் குறிப்புகள் வந்திருக்கின்றன. முதன் முதலாக 31-ல் வேங்கடத்தையும் திருக்கோட்டியூரையும் குறிப்பிடுகிறார். 39-ல் வேங்கடம் என்ற பெயர் வருகிறது. 40—ல்

**'' வெற்பன்று வேங்கடம் பாடினேன். வீடாக்கி**
**நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற**
**நூல் வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்**
**கார் வலையிற்பட்டிருந்தேன் காண் ''**

—(நான்முகன் திருவந்தாதி—40)

அதாவது என் நினைவில் வேங்கடவன் ஓயாமல் இருக்கிறான். நூல்களினால் (வேதங்களினால்) போற்றப்படும் லக்ஷ்மிக்கு நாதனுவான். அவனுடைய திருவடிகள் என்கிற வலையில் அகப்பட்டு நிற்கிறேன் என்று. 41-ல் சுவாரசியமான விஷயம் விவரிக்கிறார்.

**காணலுறுகின்றேன் கல்லரு முத்துதிர**
**ஓண விழவி லொலிய திர—பேணி**
**வருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்**
**திருவேங்கட மதனைச் சென்று**

(நான்முகன் திருவந்தாதி—41)

அதாவது நான் உன்னை வேங்கடத்தில் சென்று காணலுறுகின்றேன். ஆனால் நீயோ வேங்கடத்தை விட்டு என் மனத்துள்ளே புகுந்தாய் என்று சொல்லுகிறார். இப்பாவில் கவனிக்கத்தக்க விஷயம் (1) மலையருவிகள் ஓடிவருவது முத்துக்கள் உதிர்வது போல இருக்கிறது. அதாவது அருவிகள் ஓசை கேட்கிறது. (2) இன்னொரு விதமான ஓசை வேங்கடத்தில் சாதாரணமாகக் கேட்பது ஓணம் (சம்ஸ்கிருதம்—சிரவணம்) நாட்களில் நடக்கும் விழாக்களின் சப்தம். இந்நக்ஷத்திரம் விஷ்ணுவுக்கு முக்கியமானது. மேலும் விஷ்ணுவினுடைய அவதார நக்ஷத்திரமும் கூட. ஆனால் ஓணத்தில் நடக்கும் உற்சவம் திருப்பதியிலும் சரி, ஸ்ரீனிவாஸப் பெருமாள் இருக்கும் எந்தக் கோயிலிலும் சரி மிகவும் விசேஷமானது. பூர்வபத்திர (புரட்டாசி) மாதத்தில் வரும் சிரவண நக்ஷத்திரம் திருப்பதியில் வருஷம் முழுவதற்குள் ஒரு விசேஷதினமாகும், 42-ல் பாடுகிறார்.

**சென்று வணங்குமினோ சேனுயர் வேங்கடத்தை**
**நின்று வினைகொடுக்கும் நீர்மையால்—என்றும்**
**கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்**
**அடிக்கமல மிட்டேத்து மங்கு**

(நான்முகன் திருவந்தாதி—42)

அதாவது ஆழ்வார் எல்லாரையும் வேங்கடத்திற்குப் போய் தொழுதால் கர்ம வினைகள் யாவும் போம்; ஏனெனில் நான்முகனும் முக்கண்ணப்பனும் அவன் திருப்பாதங்களில் பூ இட்டு வணங்கினார்கள் என்று 43—லும் பிரம்மாவும் சிவனும் பூஜை செய்ததையே சொல்லுகிறது. 44-ல் சுவாரசியமாகச் சொல்லுகிறார். இளையோர்களே வேங்கடத்திற்குப் போய் தொழுங்கள். அங்கு ராவணுன ராக்ஷஸன் பிரம்மாவிடம் வரம் கேட்கையில் இளங்குமரன் (வேங்கடவன்) பிரம்மாவின்

மடியில் குழந்தைபோல் தலையை வைத்துக் கொண்டு வந்திருப்பவன் பத்து தலை களையுடையவன் எனப்பத்து விரல்களை காட்டி எச்சரித்த திருமால் இருக்கிறுன் என்கிறுர். இதில் அடங்கிய கதையாவது ராவணன் கோர தவம் செய்து பிரம்மாவிடம் வரம் கேழ்க்க வரும் பொழுது, திருமால் குழந்தை வடிவம் எடுத்து பிரம்மாவின் மடியில் படுத்துக் கொண்டு அவரை எச்சரித்தார் என்று. இதே கதையை பொய்கையாழ்வார் முதல் நூற்றந்தாதியில் 45—லும் பேயாழ்வார் மூன்றும் திருவந்தாதியில் 77—லும் கூறியிருக்கிறுர்கள். இதற்கு ஆதாரம் புராணங்களில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயின் இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் திருப்பதியில் நின்று கொண்டிருப்பவனை இளங்குமரன் (சம்ஸ்கிருதம்-குமார) என்று சொல்லுவது. குமரன் சாதாரணமாக பாலசுப்ரமணியனைச் சொல்லுவதால், இத்தலம் சுப்ரமணியனுடைய தலம் என்று சொல்லுவார்கள். ஆனல் இப்பாட்டு அந்த சந்தேகத்தை நன்கு நிவர்த்திக்கிறது, இதையே பேயாழ்வார் நூற்றந்தாதியிலிருந்தும் எடுத்துச் சொன்ளும். 45-ல் வேங்கடத்தைப்பற்றி சாதாரண குறிப்பு இருக்கிறது. 46, 47, 48—ல் வேங்கடத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் விசேஷம் யாதெனில் 46-ல் குரவர்கள் யானைக்கூட்டங்களைச் சூழ்ந்து கொண்டு அவைகளைப் பிடிப்பது சொல்லப்பட்டிருக்கிறது, 47—ல் வேங்கடம் மரங்களுக்கும் குரங்களுக்கும் வேடர்களுக்கும் பேர் போனது எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. 48-ல் வேங்கடம் தேவர்களாலும் தொழப்படும் இடம் என்கிறது. வேங்கடம் என்பது கர்மத்தினுல் ஏற்படும் வினைகளைப் போக்கும். வேங்கடத்திலிருப்பவன். சக்கரத்தினுல் தானவர்களைக் கொன்று தேவர்களைக் காத்தான் என்பதினுல் அங்கிருப்பவன் நிச்சயமாக விஷ்ணுவே தான். 90-ல் மறுபடியும் பொதுவாக வேங்கடத்தைக் குறிப்பிட்டிருக்கிறுர். இத்திருவந்தாதியைப் பொருத்த வரையில் இவைகள் தான் வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள். இந்நூலில் திரும்பவும் திரும்பவும் வருவது என்னவென்ருல் திருப்பதி விஷ்ணுவுக்கு உகந்த இடம் என்றும் அங்கு இருக்கும் மூர்த்தி விஷ்ணுவே தான் வேறெருவரும் இல்லை என்றும், மேலும் சில இதர தேவதைகளும் அதனுள் முக்கியமாக பிரம்மா, சிவன் இருவரும்—குறிப்பிடப்பட்டு அவர்கள் அவன் உடலில் ஒரு பாகத்திலுள்ளவர்களேயாவார்கள். இருப்பினும் விஷ்ணுவையே தொழ வேண்டுமேயன்றி வேறெருவரையுமன்று என்று.

இப் பகுதியை முடிக்கு முன் சில ரஸமான குறிப்புகள் சொல்ல வேண்டியிருக்கின்றன. ஆழ்வார் இதர மதங்களைப் பற்றி ஏற்கனவே தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை முன்பே கவனித்தோம்.[1] முக்கியமாக இரண்டு இடங்களிலும் மேலும் பொதுவாக சில இடங்களிலும்—கீதையைப்பற்றி குறிப்பிடுகிறார். 50-ல் "ஆற்றங்கரையில் பள்ளி கொண்டிருக்கும் கண்ணன்" என்றும் "கடல் கிடக்கும் மாயன்" என்றும் சொல்லி அவனே என் மனதில் வீற்றிருக்கிறான் என்கிறார். இம் மாதிரியே 71-ல் கடவுளை மாயன் எனக் குறிப்பிட்டு "ஆயன்துவரைக் கோனாய் நின்ற மாயன்" (அதாவது) இடையனும் துவாரகை மன்னனும் நின்ற மாயன் என்று சொல்லி "அன்றோதிய வாக்கதனைக் கல்லாதவர் உலகத்தில் ஏதிலராம் மெய் ஞானமில்" (அதாவது) பாரத யுத்தத்தில் உபதேசம் செய்த கீதையைக் கல்லாதவர்களுடைய ஞானம், மெய்ஞானமாகாது என்கிறார். 54-லும் இந்தக் கருத்தையே பொதுவாகச் சொல்லி விஷ்ணுவினுடைய ஏற்றத்தைச் சொல்லுகிறார். 60—ல் விஷ்ணுவை "கேட்பாற்கரும் பொருளாய் நின்ற வரங்கனே" என்கிறார். அதாவது திருவரங்கத்தில் இருப்பவன் சுருதி (வேதம்) அறிந்தவர்களுக்குக் கூட அவன் அருள் இல்லாமல் அறியமுடியாதவன் என்கிறார். 75-ல் சொல்லுகிறார் நாவினால் அவனைத் தவிர வேறு ஒரு மனிதனைப் பாடமாட்டேன். அவனே சிவபிரான் மிக்க பிரயாசையுடன் பூக் கொண்டு பூஜை செய்தும் அவனுக்கு அருள் கொடுக்கவில்லை என்கிறார். 76- ரஸமானது. இதில் "கேட்டமனு" அதாவது மனுவை சுருதி என்கிறார். மேலும் சுருதி என்ற சொல் வருகிறது. இதை உரையாடர்கள் யஜுர் வேதத்தில் ஒரு பகுதியான தைத்தரீய சம்ஹிதையைக் குறிப்பது என்றும் இது பக்தி மார்க்கத்தைக் கூறும் பாஞ்சராத்திரத்தைக் கூறும் என்றும் கூறுகின்றனர்.

> **"பாட்டும் முறையும் படுகதையும் பல் பொருளும்**
> **ஈட்டிய தீயும் இருவிசும்பும்—கேட்ட**
> **மனுவும் சுருதி மறை நான்கும் மாயன்**
> **தன் மாயையிற் பட்டதற்பு"**
>
> (நான்முகன் திருவந்தாதி—76)

அதாவது, விஷ்ணு தன் மாயையால் இவைகளையெல்லாம் ஜனங்களுக்கு உறைத்தார் என்கிறார். 88-ல் சொல்லுகிறார்—அவனை சதாமனதால் தியானித்துக் கொண்டிருப்பவர்களுடைய சகலதுக்கங்களையும் அவன் போக்குகிறான். இதரதேவதைகளை

வழிபடுபவர்கள் காலம் எல்லாம் வீணுகிறதே என்று. 96–ல் (செய்யுள் முன்னமே கொடுக்கப்பட்டிருக்கிறது) ஆழ்வார் விஷ்ணுவிடம் தனக்குள்ள விசுவாசத்தைச் சொல்லுகிறுர். ''நீயே சிவனும் பிரம்மாவும்'' எனத் தெரிந்து கொண்டேன். நீதான் எனக்கு நாதன் என்பதும் தெரிந்து கொண்டேன். நீதான் உலகத்தில் யாவைக்கும் காரணம் என்பதையும் தெரிந்து கொண்டேன். வித்தைகளின் முடிவு நீயே. வித்தைகளுக்கும் நற்காரியங்களுக்கும் கோடி நீயே. நீ தான் நாராயணன். இதை நான் நன்கு அறிந்து கொண்டேன். என்கிருர்.

இப்பொழுது நாம் இவ்வாழ்வாருடைய மற்ருெரு நூலை எடுத்துக் கொள்வோம். இது மிக அழகிய விருத்த நடையில் உள்ளதும். 120 பாக்களைக் கொண்டதுமான திருச்சந்த விருத்தம் என்பது. இந் நூலில் ஆழ்வார் தனக்கு வைஷ்ணவ சித்தாந்தத்தை நன்கு உணர்ந்து எழுதியிருப்பது தெரிய வருகிறது. இங்கு வைஷ்ணவசித்தாந்தத்தை நன்கு உணர்ந்து விரிவாகப் பகர சுருதி (காதால் கேட்பது) என்னும் வேதம், உபநிஷத், மற்றும் வேதாங்க நூல்கள் யாவும் நன்கு கற்றறிந் திருக்க வேண்டும். இதைத்தவிர, சுருதியில் சொல்லியதை விஸ்தரிக்கும் இதிஹாஸங்களும், புராணங்களும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். கடைசியாக பாகவதர்கள் எழுதிய பாஞ்சராத்திரம் என்னும் நூலை நன்கு கற்றிருக்க வேண்டும். இப் பாஞ்சராத்திரம், விஷ்ணுதான் சகல தேவதைகளுக்கும் மேலானவன் என்பதும் அவன் அருள் பெற செய்யும் வழிபாடு முறைகளும் கடைசியாக இவ்வளவு செய்தாலும். முக்திபெற அவனுடைய அருள் பெற அவனுடைய அருள் ஒன்றே வேண்டும் மற்றவை பயன்படா என்னும் தத்துவத்தைப் சொல்லுகிறது. இவ்வர்த்தங்களை இவர் முதலாழ்வார்களைப் போல் நான்முகன் திருவந்தாதியில் பொதுவாகச் சொல்லி யிருந்தாலும் இந் நூலில் இவரது கொள்கைகளை மிக விஸ்தார மாகவும் குறிப்பாகவும் சொல்லுவதால் இதை இவருடைய வைஷ்ணவ சித்தாந்திற்கு ஒரு திறவுகோல் போல் அமைந் திருக்கிறது எனச் சொல்லலாம் படியிருக்கிறது. வைஷ்ணவ சித்தாந்தத்தை விவரிக்கும் போது, வேங்கடத்தைப்பற்றியும் சில குறிப்புகள் வருகின்றன அவைகளை இப்பொழுது ஆராய்வோம்.

இந் நூல் முதல் பாதியில் வைஷ்ணவர்களது முக்கிய கொள்கையான விஷ்ணு தான் சகல தேவதைகளுக்கும் மேலானவர் என்பதை நிலை நிறுத்துகிருர். இதை வேதத்தைப்

பிரமாணம் என்றும் நம்புகிற பெரியோர்களின் பிரமாணங்களினுல் நிலை நாட்டுகிருர். இவர் இந்த பகுதியில் பாஞ்சராத்திர கொள்கைகளான பர, வியூஹ, விபவ, முதலிய தத்துவங்களைத் தெளிவாகக் கூறுகிருர். 17-ல்

**" ஏகமூர்த்தி மூன்று மூர்த்தி நான்கு மூர்த்தி நன்மைசேர்**
**போகமூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி எண்ணில் மூர்த்தியாக**
**நாகமூர்த்தி சயனமாய் நலங்கடல் கிடந்து மேல்**
**ஆகமூர்த்தியாய வண்ணம் என் சொல்லாதி தேவனே**

(—திருச்சந்த விருத்தம் 17)

அதாவது நீ ஒருருவம் உடையவன், மூன்று உருவம் உடையவன் நீ நான்கு உருவம் உடையவன். அம்மாதிரியே பக்தர்கள் வழிபடுவதற்குத்தக்க அநேக உருவம் படைத்தவன், அவரவர்கள் செய்த புண்ணியத்திற்குத் தக்க நீ அவர்களுக்கு உருவம் எடுத்துக் காட்டுகிருய், ஆகவே நீ எண்ணிறந்த உருவம் கொண்டுள்ளவன். பரமனே! நீ முழுமுதற் கடவுள் எனினும் நாக சயனத்தில் பள்ளி கொண்டு எப்படி பக்தர்களுக்குத்தக்கபடி பல உருவங்கள் கொள்ளுகிருய் என்று. இம்மாதிரி இப்பாஞ்சராத்திரக் கொள்கைகள் இவ்வாழ்வார்களுடைய நூற்களில் ஆங்காங்கே பொதிந்து கிடைப்பதால் அவைகளைத் தனித்தனியே பிரித்து இவை இவைதான் பாஞ்சராத்திரக் கொள்கைகள் என்று சொல்லுவது சுலபமான காரியம் அல்ல. ஆனுல் வைஷ்ணவத்தைப் பின்பற்றுவர்களுக்கு இவ்வர்த்தங்கள் சகஜமாகத் தெரிந்துவிடும் மேலும் ஆழ்வார் நூலிலிருந்து அவருக்கு சைவ ஆகமும் புராணங்களில் கூறப்படும் இந்து தர்மங்களும் நன்கு தெரியும் எனத் தெரிகிறது. இம்மாதிரியான வித்வத்தினுல் ஏற்பட்ட பல கொள்கைகளின் ஐக்கியம் தான் வேத பிரமாணம். இதுவே இப்பொழுது நாம் தழுவும் இந்து மதமாக மாறிற்று என ஒருவகையாகக் கூறலாம். இம்மாதிரியான பொது விவாதத்தில் இன்னும் விவரிக்க இது இடமன்று. ஆனுல் ஒன்று: பாஞ்சராத்திரக் கொள்கைகள் சமீபத்தில் தோன்றின என்னும் வாதம் சார்பற்றது. இக்கொள்கைகளும் புராதனமானவை. வேதகாலத்தில் யாகங்களால் மோக்ஷம் அடையக்கூடும் என்று சொன்ன அதே சமயத்தில் இந்த கொள்கைகளும் கூடவே கடைபிடிக்கப்பட்டு வந்தன எனக்கூறில் விரோதமில்லை. கீதையில் சொல்லிய அநேக கொள்கைகள் இவ்வாழ்வாரின் நூல்களில் சிதறிக் கிடக்கின்றன. இவரும் சரி, மற்றைய ஆழ்வார்களும் சரி

கீதையில் காட்டிய வழியாகிய கர்மம்: ஞானம் பக்தி மார்க்கங்களை சந்தேகமறக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாழ்வார் இவ் வழிகளையெல்லாம் சொல்லி கடைசியாக மோக்ஷம் வேண்டின் அவன் அருள்தான் தேவை அவன் அருளால் தான் மோக்ஷம் சித்திக்கும் என்ற முடிவுக்கு வருகிறார். அதாவது ஒருவன் கரும ஞான, பக்தி மார்க்கங்களில் எந்த நிலை எய்தினாலும் சரி மோக்ஷம் சித்திக்கவேண்டுமானால் அவனுடைய அருளுக்கு பாத்திரமாவது ஒன்றே தான் வழி என்பது. இவர் மறுபடியும், மறுபடியும் சொல்லுவது வேத முறைப்படி செய்யும் யாகாதிகள் மோக்ஷத்தைக் கொடுக்கா, மோக்ஷம் வேண்டுமானால் அவனது அருள் ஒன்றால் தான் அது சித்திக்கும் என்று. ஆகம விதிப்படி பகவானுக்குச் செய்யும் சேவைகள் பலவிதம்; ஆகம நூல்களில் சர்யை (சேவைகள்) அத்தியாயங்களில் இதைப் பற்றி விரிவாக உரைக்கப்பட்டிருக்கின்றன; கடவுளின் வெவ்வேறு மூர்த்தங்களுக்குச் செய்யும் கிரியைகள் என்ன; வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் மூர்த்திகளுக்குச் செய்யவேண்டும் வழிபாடுகள் என்ன என்பதையெல்லாம் இந்நூற்களில் காணலாம், வைதீகமான முறைப்படி இவ்வழிகளைக்கைப்பற்ற வேண்டின் வேதத்தின் ஞானமும் வேதத்தில் சொல்லிய பலயாக யஞ்ஞாதிகள் செய்யும் முறைகளும் தெரிந்திருக்க வேண்டியிருக்கிற படியால் இதைப்பின்பற்ற யாவரும் அருகரல்லர், இம்மாதிரி முறைகளை அனுசரிக்க முடியாதவர்களுக்கு வேறு தொழும் முறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன; பலன் கொடுப்பதில் அம்முறைகள் ஒரு படியும் குறைந்தனவல்ல. மேலும் இம்மாதிரியான விதிகள், இத்தொழுகைக்கு ஹேதுவான கோவில்கள் கட்டுவித்தல், இம்மாதிரி சேவைகள் நடத்த திரவியாதிகள் கொடுத்து அவைகள் சரிவர நடக்கின்றனவா என கவனித்தல் ஆகியவை ஆகும், மூர்த்தி ரூபத்தில் பகவானைத் தொழுவதானது, சரீரத்தினால் பாடுபட்டுச் செய்தாலும் சரி, வேறு எவ்வகையினாலானாலும் சரி, அவ்வழிபாடு பகவானிடத்தில் முழுமனதோடு ஈடுபட்டுச் செய்தால் வேதம் ஓதுபவர்கள் வேத விதிப்படி செய்யும் முறைகளில் கிடைக்கும் பலனுக்கு ஒரு விதத்திலும் குறையாத மோக்ஷ சாம்ராஜ்யத்தைக் கொடுக்க வல்லது.

இம்மாதிரியான கொள்கையை ஆழ்வார் மனதில் கொண்டு இதையே 180 பாக்களில் கோர்வையாக விவரித்திருக்கிறார். முதல் நாற்பது பாக்களில் பாஞ்சராத்திரக் கொள்கைகளை விவரிக்கிறார். அவற்றுள் முக்கியமாக பாஞ்சராத்திரக் கொள்கை என்பது முன்னமேயே சொன்ன 17-வது பாவில்

சொல்லப்பட்டு அதையே ஏறக்குறைய அதே முறையில் 39-வது பாவில் கூறியிருக்கிறார். இதையே மறுபடியும் 31, 34-ல் சொல்லுகிறார்: வேதத்திலும் ஆகம நூல்களிலும் சொல்லிய படி பரமாத்ம ஸ்வரூபத்தைச் சொல்லி அடுத்த பாகத்தில் குலம், கல்வி, திறமை இவைகளில் குறைந்தவர்கள் அவை நிறைந்த பெரியோர் காணும் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைய வழிகாட்டுகிறார். வேதம் முதலிய தெரிந்த பெரியோர்கள் கடவுளை வழிபடுவதற்கு வகுத்துக் கொண்டமுறை கடின மானதும் மற்றவர்களால் பின்பற்ற முடியாதனவுமானவை, ஆனால் இம் முறைகளுக்கு ஒரு விதத்திலும் குறைவில்லாத பயன் தரும் வேறு வழிகளால் அவனை அடைய முடியும் என விவரிக்கிறார். இது தான் பகவானுக்குச் செய்யும் சேவைகள் (கைங்கர்யங்கள்); இவைகள் பல விதப்படும். இந்த பாகத்தில் வெவ்வேறு மூர்த்திரூபமாக வெவ்வேறு கோவில்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளை வழிபடும் முறைகளை எளிய முறையில் சொல்லி, இவ் வழிகளை ஒவ்வொருவரும் சிரத்தை யுடனும் பக்தியுடனும் பின்பற்ற வேண்டு மென்கிறார். இவ்வாறு பொது விதிகளைச் சொல்லி மேலும் ஸ்ரீரங்கம், கும்பகோணம், காஞ்சீபுரம் ஆகிய தலங்களில் உள்ள விஷ்ணுவின் மூர்த்திகளினிடம் தனது பிரேமையை வெளியிடுகிறார். மேலும் ஆங்காங்கே சொல்லுகிறார்:— இம்மாதிரியான கைங்கரியங்களை பிரம்மருத்திராதிகள் கூட தங்கள் நித்திய கர்மங்களைச் செய்ய உரிமைப் பெற பரமாத் மாவுக்குச் செய்யவேண்டு மென்கிறார். மேலும் சொல்லுகிறார்: ஒருவன் இக்காரியங்களை பக்தி சிரத்தையுடன் செய்வானே யாகில் அவன் எக்குலத்தவனாயிருப்பினும் கடவுளின் அருள் அவனுக்கு நிச்சயம் கிடைக்கும், மேலும் சிரத்தா பக்தியுடன் செய்யும் இக்காரியங்களால் ஒவ்வொருவனும் மோக்ஷத்திற்கு அருகதை உடையவனாயிருப்பானேயாயினும், கடவுளின் அருளை நிர்ப்பந்தப்படுத்தி வாங்கவோ, உரிமைக் கொண்டாடவோ முடியாது என்கிறார். அவ்வருள், எம்பெருமானுடையதயை ஒன்றினால் மட்டும்தான் கிடைக்கும் என்கிறார். ஆகவே கடைசி பாகத்தில் அவர் கூறுவது ஒருவன் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் வழிபாடுகள் செய்யினும், தன்னால் ஆவது ஒன்றுமில்லை; அவன் தான் கண் திறந்து அருள் சுரக்க வேண்டும் என்று அவனிடம் பாரத்தைப் போட்டு விட்டு இருக்கவேண்டும் என்கிறார். இந்த சமயத்தில் தான் அவர் நான்கு குலங்கள் ஒன்றிலும் பிறவாதிருத்தலையும், வேத சாஸ்திரங்கள் பயிலாதிருத்தலையும் புலன்களை அடக்காதிருப்

பதையும் வெளிப்படுத்துகிறார். ஆகவே வேறு வழியின்றி அவன் திருவடிகளே தஞ்சம் என்று முழுமனதுடன் அவனைத் தொழுவதில் ஈடுபடுகிறார். 90—ல் கூறுகிறார் :—

**'' குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்**
**நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்**
**புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்**
**இலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனெம் மீசனே.**

இதைச் சொல்லி மேலும் கடைசி 30 பாக்களில் கடவுளின் அருளையும் அதன் சிறப்பையும் சொல்லி, இனி அவன் விதித்த வழி தான் மோக்ஷம் தரும், தன்னாலாவதொன்றுமில்லை என்ற மனோ நிலை எய்துகிறார். மேலும் கடவுளின் திருவடிகளே சம்சாரம் என்னும் கடலைக் கடக்க ஏற்ற மரக்கலம், இதைத் தவிர வேறொன்றில்லை என்கிறார். 100, 101-ல் தன்னால் ஆன வரையில் அவனுடைய திருவடிகளை சதா தியானம் செய்ய முயற்சிக்கிறேன்! ஆனால் பகவானும் அதை அப்படியே கருத வேண்டும் என்கிறார். 103-ல் மேலும் சொல்லுகிறார் : மார்பில் திருவைத் தரித்தவனும், ருக்வேதத்தில் பாடப்பட்டிருப்பவனும் கார்முகில் வண்ண மேனியனுமான அவன், அவனது நாமங்களை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்க எனக்கு அனுக்கிரஹிக்க வேண்டுமென்கிறார், கடைசியாக முடிக்கிறார் : என்னை வெவ்வேறு பிறப்புகள் எடுக்கப்பண்ணி உழன்று கொண்டிருப்பதிலிருந்து பிரித்து எடுத்து என் மனத்தை அவனிடத்திலேயே நிலைநாட்டப் பண்ணி என்னைக் காத்தருள்கிறார் '' என்கிறார்.

இந்நூலில் கவனிக்கப்படவேண்டிய இதர விஷயங்களாவன இவர் இதர தேவதைகளை கீழ்மைபடுத்திப் பேசுகிறார். அவர்களது உருவம் வெறுக்கத்தக்கதாயுள்ளதால் அவர்களை கடவுள் என்று அழைக்கும் முறைக்கு அருகதையில்லாதவர்கள். ஆகவே யாவரும் விஷ்ணுவைத்தொழுது பிறப்பு என்பதை அழிக்கவேணும் என்கிறார். 72-ல் லக்ஷ்மி, பூமி இருவரும் அவருடைய நாச்சிமார்கள் என்கிறார்- பிரும்மா அவருக்குப் பிறந்தவன். பிரும்மாவினுடைய மகன் தான் உமாதேவியை தனது உடம்பின் பாதியில் வைத்திருப்பவனும் எருதை வாகனமாக உடையவனுமான சிவன். இதற்கு ஆதாரம் வேதம் என்கிறார். வேதத்தில் பரமாத்மா என்று சொல்லப்பட்டவனும், சாஸ்த்திரார்த்தங்களை உணர்ந்து முக்கண்ணனும், இந்திரனும் பிரும்மாவும் தொழுகின்றவனுமான பகவா (விஷ்ணு)னுடைய தாமரைத்திருவடிகளில் என் மனது செல்கிறது என்று. 90—ல்

குறிப்பாகச் சொல்லுகிறார் "நான்கு குலங்களில் பிறந்தேன் இல்லை; நான் வேதங்கள் கூறும் நல்ல விஷயங்களில் எனக்குத் தேர்ச்சியில்லை. ஐம்புலன்களை அடக்குவதில் எனது மனம் பிடிபடவில்லை. ஆசை என்னும் வலையில் சிக்கிக் கொண்டு உழல்கின்றேன். இப்படியிருந்தும் எனக்கு உன் திருவடிகளே எப்பொழுதும் என் மனதில் இருக்கிறது" என்று. இச்சுயசரித விளக்கம் அவருடைய கீழ் ஜாதி பிறப்பையோ அவருடைய தெரியாத ஜாதி பிறப்பையோ சொல்லி, அப்பிறப்பினுல் வந்த தாழ்மையால் தான் மோக்ஷம் அடைய வேதத்தில் விதித்த மார்க்கத்தை பின்பற்ற முடியாததைச் சொல்லுகிறது. ஆகவே இதைத் தவிர்த்து வேறு மார்க்கங்களை அனுஷ்டிக்க முற்படுகிறார். இம்மார்க்கங்களை தான் தனது நூலில் விளக்கம் தந்து தானே அனுஷ்டித்து வந்த முறைகள்—அவனுடைய நாமாவை சதா ஜபித்துக் கொண்டிருத்தல், அவனுக்குச் செய்யும் பணிவிடைகளில் பூர்ண மனதோடும் குறையாத பக்தி சிரத்தையோடும் செய்தல் ஆகிய இவைகளை விளக்கம் தருகிறார். அவர் எல்லா வழிகளையும் நன்கு ஆராய்ந்து கடைசியில் அவனுடையதையே தான் நிலைக்கட்டும் என்று துணிந்து அவனுடையே திருவடிகளையே தஞ்சமென்று புக்கு அவனுடைய அருளை நாடி நிற்கிறார்.

இதுவரை நாம் ஆழ்வார்களைப்பற்றிச் செய்த ஆராய்ச்சியின் மூலம் அவர்கள் காலத்தில் மதங்களின் நிலை எவ்வாறிருந்தது என்பதை ஒருவாறு அறியலாம். இந்நால்வர் தொகுத்த நூல்களிலிருந்தே கடவுளை ஓர் உருவத்தின் மூலம் வழிபடுவதும் அவனுக்குச் சேவைகள் செய்வதுமே மனித குலத்திற்கு ஏற்ற வழி. இவ்வழியால் சம்சாரம் என்னும் பிறப்பு, வளர்ப்பு, மூப்பு, இறப்பு ஆகிய இவற்றைக் கடந்து விடலாம் என உரைக்கிறார்கள். இந்நான்கு ஆழ்வார்கள் மேலும் கருதினது அந்த முழுமுதற் கடவுள் என்பது விஷ்ணு ஒருவரே தான். அவர்கள் காலத்தில் இருந்த இதர மதங்களின் தேவதைகள் கீழ்பட்டவர்கள் என்று. தெய்வத்திற்குத் தொண்டு புரிவது என்பது, முதன் முதலாக வேதங்கற்று, வேதச் சடங்குகள் செய்து வழிக்காட்டுவது. ஏதோ சிலபேர்கள் தான் இந்த வழிகளை கைப்பற்ற முடியும். இவ்வழியைக் கைப்பற்ற முடியாத ஏனையோர்கள் சுலபமான வழிகளைக் கைப்பற்றலாம்; இவ்வழிகளும் அவரவர் திறமைக்கும், வாய்ப்புக்கும் தக்க பலவகையாக இருக்கும். கடைசியாக இவ்வெல்லாவழிகளைவிட மிக மேம்பட்டதும் எல்லோராலும் சுலபமாகச் செய்யக் கூடியதுமானது அவனது நாமத்தை சதா மனனம் பண்ணிக் கொண்டிருப்பது;

ஆயின் இப்படிச் செய்யும் சேவைகளுக்கு முதல் அங்கமும் கடைசி அங்கமும் ஆவது சிரத்தையும் முழுமனதோடு செய்யும் பக்தியுமேயாகும். பக்தியின் மூலம் எச்சேவை செய்யினும் மோக்ஷம் கட்டாயம் சித்திக்கும். ஆனால், அம்மோக்ஷம் நாம் செய்யும் தொண்டுகளுக்குக் கொடுக்கப்படும் கூலி அல்ல; கடவுள் நம் தொண்டுகளால் மனம் உவந்தால் கருணை காட்டி நம்மை அழைத்துக் கொள்வான் என்ற ஒரு திட நம்பிக்கை. இதைத்தான் வைஷ்ணவர்கள் **பிரபத்தி** என்கிறார்கள். அதாவது "என்னால் இனிச்செய்ய வேண்டியது ஒன்றுமில்லை; உன்னையே சர்வ ரக்ஷகன் என்று அடைக்கலம் அடைந்தேன்; கடாக்ஷித்தருள வேண்டும்" என்றிருக்கும் மனோநிலை இம்மாதிரி மனோநிலை உண்டாக்குவதுதான் ஆழ்வார்களின் நூல்களிலிருந்து தெளிவாகும் உண்மை; இவைகளை நாம் இந்நூல்களிலிருந்து எடுத்து தொகுத்துப் பார்ப்போமாயின் இவைகளே வைஷ்ணவ ஆகமங்களாகிய பாஞ்சராத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் வழிகளுக்கு ஒவ்வொரு பகுதியிலும் இணையீடுகளாயிருக்கும்; இப் பாஞ்சராத்திரம் பாகவதர்களால் இயற்றப்பட்டது. இப் பாகவதர்கள் கொள்கையாவது பகவான் வாசுதேவனே (ஸ்ரீகிருஷ்ணனே) முழுமுதற் கடவுள்; அவன் ஒருவனே தன்னருளால் நம் இடர்களை நீக்கி நமக்கு மோக்ஷம் கொடுக்க வல்லவன் என்று இவர்களது கருத்துயாகங்கள் செய்வதற்கு விலங்குகளைப் பலியிடுவது அவசியம் அல்ல; ஆகையால் யாவரும் அஹிம்சையைக் கைகொளல் வேண்டும் என்பது. இக்கருத்துக்கள்தான் ஆழ்வார்கள் பாடல்களிலும் முழுக்க முழுக்க இருக்கிறது; ஆகவே பாகவதர்கள் என்னும் ஒரு குழுவினரால் அனுஷ்டிக்கப்பட்ட இக்கருத்துக்கள், ஆழ்வார்கள் மூலம் யாவராலும் கடைபிடிக்கக்கூடிய ஒரு சிறந்த முறையாக மாறி செயற்பாட்டில் சில அம்சங்களில் மாறுதல் இருந்தாலும் பொதுவாக முக்கிய அம்சங்களில் ஒற்றுமையுடன் தழுவப்பட்டன.

மேலே கூறியவைகளோடுகூட கீதையின் கொள்கைகளை அறிந்திருந்தனர்; புராணங்களை நன்கு உணர்ந்திருந்தனர். ஆகவே இல்வாழ்வாரது காலங்களில் தற்காலிக இந்துமதம் வேதத்தில் கூறப்படும் பிராம்மண மதத்தோடு உறவாடி ஒருகை ஓங்கி இருந்தது எனச் சொல்லலாம். இவ்விரு மதங்களும் வேறுபட்ட மதங்கள் அல்ல. ஒரே கொள்கை, ஒரே மதம் இவற்றின் வேறுபாடுகள் ஒரு மதத்தில் ஒரு இடத்தில் அதிகமாக வற்புறுத்துதல் இன்னொரு மதத்தில் மற்றோர் இடத்தில் அதிக நோக்கு; ஆனால் இரண்டும் அடிப்படையில் ஒரே மதம்தான்.

இப்படியாக தொழுவதற்குரிய வகைகளை வகுத்து இதையே ஜனங்களுக்கு மனோரஞ்சிதமாயிருக்கும் வகையில் கடவுளைக் கண்ணாலே கண்டு களிக்கவும் ஏழை எளியவர்களும் சுலபமாக அறியவும் கடவுளை அர்ச்சா ரூபத்தில் தோற்றுவித்தார்கள். மனக்கண் முன் இருக்கும் எண்ணங்களை புறக்கண்ணாலும் புலன்களாலும் போற்றக் கூடிய உருவங்களாக சிருஷ்டித்தனர். பொது இடங்களில் தொழிவதற்குத்தக்க மூர்த்திகளை உருவாக்கி அவற்றில் தத்துவார்த்தங்களை உணரும்படி நிர்மாணிக்க அவைகள் வைக்கப்பட்ட கோவில்களுக்கு தலயாத்திரை போவதும் அம்மூர்த்திகளுக்கு பக்தி சிரத்தையுடன் சேவைகள் செய்வதும் இம்மதத்திற்குரிய சிறப்பு அம்சங்களாக நிலவின. இந்த வழக்கங்களை இவ்வாழ்வார்களின் நூல்களில் நெடுகக் காணலாம். ஆழ்வார்களின் நூல்களில் திருப்பதி என்னும் வேங்கடத்தைப் பற்றி மாத்திரம் குறிப்புகள் வருவதென்பதில்லை. வைஷ்ணவ ஸ்தலங்கள் எனப்படும். அனேக ஸ்தலங்களும் இவ்வாழ்வார்களால் போற்றப்பட்டன. திருப்பதியைப் பற்றி கூறுமிடங்களில் நாம் கவனிக்க வேண்டியது; அங்கு வருட முழுவதும் நடக்கும் பூஜைகள் மிக பிரபலமடைந்திருந்தது. துவாதசி பூஜைகளும் சிராவணத் திருவிழாவும் இவைகளைப் போன்ற மற்ற உற்சவங்களும் ஏற்கனவே இவர்கள் காலத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டு செவ்வனே நடைபெற்று வந்தன எனத்தெரிகிறது. இதையும் மாமூலனார் என்னும் சங்கப் புலவர் சொன்ன மொழியையும் காஞ்சிபுரம் முதலிய முக்கிய இடங்களில் அநேக மூர்த்திகளைத் தொழுவதைப் பற்றி ருத்ரன் கண்ணன் சொன்ன வார்த்தைகளையும் ஒன்று சேர்த்து கவனித்தால் கோவில் வழிபாடும் பக்தி மார்க்கத்தில் கோவில்களில் பூஜைகள் செய்வதும் ஏற்கெனவே நடைமுறையில் வந்ததெனத் தெரிகிறது. பிற்காலத்தில் இராமாநுஜர் உலகுக்குத் தந்த வைஷ்ணவ மதம் ஆழ்வார்கள் காலத்திலேயே வேரூன்றி இருந்ததாகத் தெரிகிறது. மேலும் இராமாநுஜர் இயற்றிய நூல்களில் காணப்படும் வேதம், கீதை, பாஞ்சராத்திரம் ஆகியவைகளின் ஆதார மேற்கோள்கள் ஆழ்வார்களின் நூல்களிலும் பரவிக் கிடக்கின்றன. இப்பொழுது நாம் ஆழ்வார்களின் நடுநாயகமாய் விளங்கும் நம்மாழ்வாரைப் பற்றி சிந்திப்போம்.

அத்தியாயம் 6

# நம்மாழ்வாரும் ஆழ்வார்களில் அவருடைய இடமும்

முன்னமேயே நாம் கவனித்தோம் — முதலாழ்வார்கள் என்னும் மூவரும், அவர்களுக்குப் பிறகு திருமழிசையாழ்வாரும் ஒரே சமயத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் பரம்பரையாக ஒரு சரித்திரத்தில் இந் நால்வரும் காஞ்சியில் வெஃகா என்ற இடத்தில் ஒருவருக்கொருவர் அறிமுகப் படுத்திக் கொண்டனர் என்றும் மேலும் திருமழிசைப்பிரானை பேயாழ்வார் தான் சைவ மதத்திலிருந்து வைஷ்ணவ மதத்திற்கு திருப்பவைத்தார் என்பதையும் கவனித்தோம். பரம்பரையாக வந்த சரித்திரக் கூற்று ஒரு பக்கத்தில் இருக்க அதற்கு நாம் கௌரவம் கொடுக்காமல் இருந்தாலும் இவர்களுடைய நூல்களின் அமைப்பு, கருத்துக்கள் இவைகளை ஆராய்ந்தால் இவர்கள் நால்வரும் ஒரே சமயத்திலோ அல்லது ஒருவர்க்கொருவர் சொல்ப கால வித்தியாசத்திலோ வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஆகவே, அக்காலத்தைப் பற்றி நமக்கு இப்பொழுது தெரிந்த விஷயங்களைக் கொண்டு அவர்கள் சமகாலத்தில் இருந்தவர்கள் எனவே கருதலாம். இவர்களுக்குப் பிறகு வருபவர் நம்மாழ்வார்; எல்லா ஆழ்வார்களைவிட சிறந்தவர் என வைஷ்ணவர்களால் கருதப்படுபவர்; அவருடைய நூல்கள் வேதங்களில் தெரிந்து கொள்ள வேண்டியவைகளை தமிழில் ஆக்கப்பட்டவை. அவருடைய திருவாய்மொழி என்பது வேதத்தின் தமிழ் ஆக்கம் எனக் கொள்ளலாம். திருவாய்மொழி (சம்ஸ்கிருதம் ஸ்ருதி) என்பதே அதே அர்த்தத்தைக் கொடுக்கும். சங்க இலக்கியங்களில் "வாய்மொழி" என்பது சம்ஸ்கிருதத்தில் "ஸ்ருதி" என்று சொல்லப்படும் வார்த்தைக்கு நேரான அர்த்தம் எனக் காண்கிறோம்; சாதாரணமாக உபநிஷத்துக்கள். "ஸ்ருதி" பாகத்தில் சேராது; இருப்பினும் பொதுவாக "ஸ்ருதி" என்பது வேதத்தையும் வேதத்தை அறிந்து கொள்ள அதற்கு உபப்ரமாணங்களான உபநிஷத்து இத்தியாதிகளையும் சேர்த்து கூறுகிறார்கள். தமிழ் ஆதிகிரந்தங்களில் வேதத்தையும் உபநிஷத்துக்களையும் வெவ்வேறாகப் பிரித்து வேதத்தை "வாய்மொழி" என்றும் உபநிஷத்துக்களை "மறை" என்றும் பேதம் காட்டினார்கள். ஆனால் இப்பொழுது "மறை" என்பது

பொதுவாக வேதத்திற்கு சம்பந்தமான நூல்களையெல்லாம் குறிப்பிடுகிறது. ஆயினும் 8-வது நூற்றுண்டில் கூட திருமங்கை யாழ்வார் நூல்களில் இவ் வேறு பாட்டைக் காண்கிறோம். ஆகவே "திருவாய் மொழி" என்பதற்கு நேரான ஸம்ஸ்கிருத வார்த்தை "ஸ்ரீ ஸ்ருதி" என்னலாம். அதாவது "சுருதி"க்கு முன் "திரு"வின் நேரான "ஸ்ரீ"யைச் சேர்த்து சொல்லுவது. தமிழ் இலக்கிய பூர்வமாக நம்மாழ்வார் நூல்களைக் கவனிப் போமாயின் அவை முதலாழ்வார்களின் (நால்வர்—திருமழிசை யாழ்வார் உள்பட) இலக்கியச் சுவையிலிருந்து மாறி கடைசி யாக திருமங்கையாழ்வாருடைய இலக்கியச் சுவைக்கு போவதற்கு நடுத்தரமாயுள்ளது. முதல் மூன்று ஆழ்வார்களும் தங்கள் பாக்களை வெண்பாவில் அமைத்துள்ளனர். தொல் காப்பியத்தின் உரையாடர் கூட பொய்கை ஆழ்வாரின் பாக்களை "வெண்பா"வுக்கு மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். அவைகளில் இரண்டு இவருடைய முதல் திருவந்தாதியிலிருந்து.

திருமழிசையாழ்வார் நாலாயிரத்தில் 216பாக்களால் இரண்டு பிரபந்தங்கள் செய்தார். அதில் 96 பாக்கள் கொண்ட நான்முகன் திருவந்தாதி முதலாழ்வார்களைப் போல "வெண்பா"வில் அமைந்துள்ளது. 120 பாக்களைக் கொண்ட மற்றொரு பிரபந்தம் "திருச்சந்தவிருத்தம்" என்பது. "விருத்தம்" என்னும் பாக்களால் ஆகியது. இவை கேட்க இனிமையாயும் சங்கீதத்தில் அமைக்கக் கூடியதாயும் இருக் கிறது. ஆகவே இவ்வாழ்வார் ஒரு நூலில் முதல் மூன்று ஆழ்வார் களுடன் கைப்பிடித்துக் கொண்டு மற்றொரு கையை பின் வருபவர்களுக்குக் கொடுக்க இரண்டாவது நூலை விருத்தத்தில் பாடினார் என்னலாம் மேலும் இம் முதலாழ்வார்களைத் திருமங்கை யாழ்வார் "செந்தமிழ் பாடுவார்" என்கிறார்.

**"வெந்திறல் வீரரில் வீரரொப்பார்**
**வேதமுரைத்து இமையோர் வணங்கும்**
**செந்தமிழ் பாடுவார் தாம்வணங்கும்**
**தேவரிவர் சொல் தெரிக்கமாட்டேன்"**

(—பெரிய திருமொழி—II, 8, 2.)

ஆகவே இம்முதலாழ்வார்களின் நூல்கள் இயற்கையைத் தழுவி பாடுவதாகவும் தன்னுணர்ச்சி சேராத விவரணங் களாகவும் இருக்கின்றன. மேலும் நம்மாழ்வாரும் இதர ஆழ்வார்களும் உணர்ச்சி பொங்கிய கற்பனைகளோடு கூடிய நடைமுறைகளை கைப்பற்றினார்கள். அவர்களுள் நம்மாழ்வார் இம்முறைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார். அவர்

கையாண்ட முறை பின் வரும் ஆழ்வார்களுக்கு கை காட்டியா யிருந்ததோடு பக்தி மார்க்கத்தை விஸ்தரிக்கும் இலக்கியங்களில் இம்முறைகள் இன்னும் நன்று விருத்தியாக்கப்பட்டன. முதலாழ்வார்கள் பொதுவாக புராணம் முதலிய சமஸ்கிருத இலக்கியங்களில் அறிவு படைத்திருந்தனர். திருமழிசை ஆழ்வாரும் பக்தி மார்கத்தில் மேற் கூறிய இலக்கியங்களில் அறிவு படைத்திருந்ததோடு பாஞ்சராத்திர ஆகம சாஸ்திரங் களிலும் வேதத்திலும் தொடர்பு கொண்டதாகத் தெரிகிறது. நம்மாழ்வார் இவருக்கு மேலே போய் அவருடைய பரந்த நூல்களில் வேதத்திலும், குறிப்பாக வேதத்தில் விஷ்ணு பக்தி வரும் இடங்களிலும் பூர்ண ஞானம் படைத்திருந்ததைச் காண்பிக்கிறார்; ஆகவே அவரை இந்த விஷயத்தில் வேதத்திற்கு தமிழ் உரை எழுதியவர் என்றே சொல்லாமலாயிருக்கிறது. ஆகவே அவருடைய நான்கு நூல்களும் ஒவ்வொன்று ஒவ்வொரு வேதத்தை தமிழில் சொல்லுவதாகக் கொள்ளப்படுகிறது. கம்பன் இவரை வேதந் தமிழ் செய்த பெரியோர் என புகழ்மாலை சூட்டியது மிகப்பொருத்தமானதேயாகும்.

**நம்மாழ்வாரும் வேங்கடமும்**

இங்கு நாம் நம்மாழ்வார் கூறிய கொள்கைகளை விவரிக்கப் போவதில்லை. வேங்கடத்தைப் பற்றி அவருடைய நூல்கள் வாயிலாக அவர் தெரிந்திருந்த விஷயங்களைப் பற்றி ஆராய் கிறோம். நாலாயிர பிரபந்தங்களில் அவருடைய நூல்களாவன; (திருவிருத்தம்—ருக் வேதத்தின் சாரம் (2) திருவாசிரியம்—யஜுர் வேதத்தின் சாரம் (3) பெரிய திருவந்தாதி—அதர்வன வேதத்தின் சாரம் (4) திருவாய் மொழி என்னும் மேன்மையான பிரபந்தம் சாமவேதத்தின் சாரம் ஆகும். இதில் மூன்றுவதானது வெண் பாவால் ஆனது. முதலாவது விருத்தப்பாக்களால் ஆனது. இரண்டாவது, தமிழுக்கே சிறப்பான ஒருவகை பாக்களால் ஆனது. கடைசியானது அனேகமாக விருத்தப்பாக்களால் ஆனது. ஆகவே இலக்கிய நோக்கோடு பார்போமாயின் இவரது நூல்கள் முதலாழ்வார்களுக்கும் கடையாழ்வார் களுக்கும் நடுவில் உள்ளதாயிருக்கிறது. நமக்கு இவர் நூல்களில் முக்கியமான அம்சம் வேங்கடத்தைப் பற்றிக் கூறும்விதம் வேறு வகைப்பட்டது என்பது. முதலாழ்வார்களின் நூல்களை பல வகையில் ஒத்திருக்கிற பெரிய திருவந்தாதியில் கூறப் பட்டிருக்கும் வேங்கடம் முதலாழ்வார்களின் கூற்றைப் போலவேயிருக்கிறது. மற்றைய நூல்களுக்குப் போகையில் இவ்வாழ்வார் தமிழ் இலக்கியத்தில் செயற்கை முறையையும்

சுலபமாய் அறிய முடியாத உயர் நடையையும் கையாண்டிருக்கிருர் எனக் காணலாம்.

அடுத்தபடியாக இவர் திருப்பதியிலிருக்கும் விஷ்ணுவின் கோவிலைப் பற்றி சொல்லியிருப்பதைக் கவனிக்கலாம். முதலாழ்வார் திருமழிசையாழ்வார் போல் அல்லாமல் இவ்வாழ்வார் திருப்பதியைப் பற்றி கூறும்போது ஓர் இலக்கிய ஓவியக்காரருக்கு வேண்டிய வகைகளைக் கையாண்டிருக்கிருர். பிற்காலத்தில் "கலம்பகம்" என்ற ஒருவகை நூல்களை இயற்றியவர்களைப் போல் இவரும் ஒவ்வொரு திருக்கோயிலைப் பற்றியும் வெறுமனே பெயர்மாத்திர அளவில் குறிப்பிட்டிருக்கிருரே தவிர கோவில் வழிபாடுகளைப் பற்றி விஸ்தரிப்பது இரண்டாம் பக்ஷமாகக் கொண்டுள்ளார். ஆயினும் இவர் திருவாய்மொழியில் திருப்பதியைப்பற்றி ஒரு பத்துபாக்கள் பாடியிருக்கிருர். இவைகளில் திருப்பதியைப் பற்றி கொஞ்சம் விஸ்தாரமாகவே சொல்லியிருக்கிருர் என்னலாம். இங்கு திருப்பதியிலிருக்கும் பெரிய கோவிலைக் குறிப்பிட்டிருக்கிருர். இன்னும் ஓரிரண்டு பத்துக்களில் திருப்பதியைப் பற்றி குறிப்பிட்டிருப்பினும் இம்மாதிரி வெளிப் படையாக சொல்லவில்லை. இருப்பினும் அக்குறிப்புகள் அந்தக் கோவிலைப் பற்றித்தான் சொல்லுகின்றன என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத விஷயம் இத்தலத்தின் மஹிமையைப் பற்றி பிறர் வாயிலாகக் கேட்டு எழுதியிருக்கிருர் எனக் கொள்ளலாமேயொழிய இதர ஆழ்வார்கள் போல அத்தலத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டதால் உண்டான அறிவுரை எனக் கொள்ள இடமில்லை. திருவிருத்தத்தில் ஏழு இடங்களில் திருப்பதியைப் பற்றி குறிப்பிடுகிருர். இவைகளில் சிலர்களை விளித்து சில பூந்தோட்டங்கள் நவரத்னங்களால் பகல் வேளையில் ஜ்வலிக்கும் மலைகளையுடைய திருப்பதியிலிருக்கும் பூந்தோட்டங்கள் மாதிரி இருக்கின்றன என்கிருர். திருவாசிரியத்தில் திருப்பதியைப் பற்றி நேரான குறிப்பு இல்லை. திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய பிரபந்தங்களில் திருப்பதியைப பற்றி நேரான குறிப்பு இல்லை. திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய பிரபந்தங்களில் திருப்பதியைப் பற்றி நேரான குறிப்பு இல்லாமல் இருப்பினும் பெரிய திருவந்தாதியில் 7-வது பாட்டில் இலக்குமியை மார்பில் உடையவனை விஷ்ணு என்று சொல்லுமிடம் "ஸ்ரீநிவாஸ" அல்லது திருப்பதியிலிருக்கும் எம்பெருமானைக் குறிக்கிறது என்னலாம்.

இம்மூன்று பிரபந்தங்களும் ஒரு கிரமத்தை அனுசரித்து ஆழ்வார் எம்பெருமானை நோக்கி அவன் அருள் தன்மேல் விழ

வேண்டும் என விண்ணப்பம் செய்கிறார். ஆகவே இவர் சம்சாரத்தில் உழல்கின்ற இவ்வுயிரை பிறவிக்கடலை நீக்கித்தர வேண்டும் என்று ஆரம்பித்து, ஆத்மாக்களை இத்துயர் கடலிலிருந்து மீட்பதையே நோக்குடையவனும் இதற்காகவே இப்பூமியில் பலபிறவிகள் எடுத்தவனுமான சர்வேஸ்வரனுக்கு விண்ணப்பம் செய்கிறார். திருவிருத்தத்திலிருக்கும் 103 பாக்களும் இக்கருத்தையே கொண்டதாக உள்ளன. இக்கருத்தை ஆழ்வார் வெவ்வேறு இலக்கிய அமைப்புகளில் தனது மொழியிலிருக்கும் பாண்டித்தியத்தை பூராகக் கொட்டிக் காண்பித்திருக்கிறார். இந்நூறில் ஆழ்வார் முக்தாத்மாக்களானவர்கள் எப்பொழுதும் பகவானுடைய சமீபத்திலேயே இருந்து கொண்டு எப்பொழுதும் அந்நிலையாகிய பேரின்பத்தை அனுபவிக்கிறவர்களையும் தன்னைப் போன்ற பத்தாத்மாக்கள் சம்சாரமாகிற சேற்றில் உழன்று கொண்டு இருப்பவர்களையும் ஒப்பிட்டு மிகக்லேசமிட்டு தானும் இவ்வுலக வாசனையை அறவே விட்டு அம்முக்தாத்மாக்களில் ஒருவனாக சேர்த்துக் கொள்ள கிருபை பண்ண வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கிறார். பகவானுடைய கல்யாண குணங்களை முறையே பாடி, அப்படி பாடுவதாலும் தன்முயற்சியால் ஆவது ஒன்றுமில்லையென்று அவன் மேலே பாரத்தைப் போடுவதாலும் தான் வீடு பெறப்படும் என்று வழி காட்டுகிறார். இவ்வழியை ஒவ்வொருவரும் தனது சொந்த முயற்சியால் மட்டுமே பின்பற்ற முடியும் என்று சொல்லி தனக்கு அம்மாதிரி வழிகாட்ட ஒரு வாய்ப்பு கிடைத்ததை பயன்படுத்துகிறார். இவர் இப்படி பயன் படுத்தும் மார்க்கத்தைத் தான் பின்வரும் நூல்களில் விஸ்தரிக்கிறார். திருவிருத்தத்தில் இவர் பேசுவதாவது: இவ்வுலகில் இச்சரீரத்தால் நாம் செய்யக் கூடிய கிரியைகள் என்ன, பரமனுடைய கல்யாண குணங்கள் எத்தகைத்து என்று அறிந்து கொள்ளுதல் இவ்வனுபவத்தையடைய வேண்டி நாம் பின்பற்ற வேண்டியவை கர்ம, பக்தி ஞான மார்க்கம் ஆகியவை ஆகும். இதைப் பற்றி திருவிருத்தத்தில் மேலும் பேசுகிறார் : பகவானைப் பொருத்தமட்டில் ஒருவனுடைய அனுபவத்தில் வந்தது கடுகளவே ஏனெனில் பரமனின் குணங்கள் அனந்தம் என்று. இக்கருத்துக்களைத் தான் முதல் மூன்று நூல்களில் விளக்குகிறார். முதலாவதில் கடவுளைத் துதி செய்து மோக்ஷத்திற்கு வழிகாட்ட அவனது அனுதாபத்தைப் பெற முயற்சிக்கிறார், இரண்டாவதில் கடவுளின் கல்யாண குணங்களையும் அவன் இவ்வுலகில் தன் தர்மத்தைச் செய்யும் வழியையுந் தெரிவிக்கிறார் ; மூன்றுவதில் இவ்வுலகத்தில் சம்சாரமாகிற பந்தத்தை நீக்கி

கைங்கரியம், ஞானம், பக்தி, சரணுகதி ஆகிய மார்க்கங்களைக் கையாண்டு எப்படி ஒருவன் நற்கதி அடைவது என்பதைச் சொல்லுகிருர். மூன்ருவது நூலில் ஒரு முடிவுக்கு வருகிருர்: கடவுள் தன்னுள்ளே புகுந்துள்ளான்; அவனேதான் உள்ளேயிருந்து திருவாய் மொழியாகட்டும், மற்றைய நூல்களாகட்டும் அந்நூல்களை இயற்றியது; ஆழ்வார் தன்ஞலேயே ஒரு கவிதையும் பாட அருகதையல்லன் என்னும் கருத்து. இவ்வாழ்வாரின் பாடல்களில் முழுக்க முழுக்க வருகிற கருத்து (அதே மாதிரி மற்றைய ஆழ்வார்களின் நூல்களில் வருகிறது) விஷ்ணு தான் முழுமுதல் கடவுள்; அவனே பலவித ரூபங்களையெடுத்து உலகில் தன்னுடைய காரியங்களைச் செய்கிருன் என்பது. மற்றையோர்களால் தொழப்படும் ஏனைய தெய்வங்கள் இந்த பரம் பொருளின் ஒவ்வோர் அம்சமாகும்; அவர்களுக்கு செய்யும் பூஜைகளும் நேராக இவனுக்கே செய்யாவிடினும் கடைசியில் இவனுக்கே அர்ப்பணமாகிறது. இதுதான் அடிப்படையான கருத்து; இதுவே அநேக இடங்களில் இந்நூல்களில் வருகின்றன. பெரிய திருவந்தாதி 68, 71, 72—ல் இதே கருத்துக்களைத் தெரிவிக்கிருர்.

**கல்லும் கனை கடலும் வைகுந்தவாஞடும்**
**புல்லென் ஞெழிந்தன சொல் ஏபாவம்—வெய்ய**
**நெடியன் நிறம் கரியான் உள்புகுந்து நீங்கான்**
**அடியே னதுள்ளத்தகம்** —68

**இனிநின்று நின்பெருமை யானுரைப்ப தென்னே**
**தனி நின்ற சார்விலாமூர்த்தி—பனி நீர்**
**அகத்துலவு செஞ்சடையான் ஆகத்தான் நான்கு**
**முகத்தான் நின்னுந்திமுதல்** —71

**முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே**
**முதலாகும் மூன்றுக்கும் என்பர்—முதல்வா**
**நிகரிலகு காருருவா நின்னகத் தன்றே**
**புகரிலகு தாமரையின் பூ** —72

—பெரிய திருவந்தாதி

இப்பாக்களில் முதல் நான்கு ஆழ்வார்கள் சொல்லுவதைப் போலவே விஷ்ணுவின் உடம்பில், சிவன் மார்பிலும், பிர்ம்மா நாபீ கமலத்திலும் இதர தேவதைகள் இதர இடங்களிலும் இடம் பெற்று, இவர்கள் எல்லோரும் அவன் உடம்பில் இருக்கிருர்கள்; மேலும் அவன் தான் இத்தேவதைகளுடைய அந்தராத்மாவாயிருந்து அவர்களுக்கு உயிரைக் கொடுத்து அவர்கள் தத்தம் வேலைகளைச் செய்யப் பண்ணுகிருன்.

திருவாய் மொழியில் 16 இடங்களில் திருப்பதியைப் பற்றி குறிப்பு வருகிறது. இக்குறிப்புகளும் மற்றைய மூன்று நூல் களிலும் சொல்லப்பட்டிருக்கும் மாதிரியே இருக்கின்றன. ஒரு பத்துப் பாட்டுக்கள் திருப்பதியைப் பற்றி முழுக்க அமைத்து இருக்கிறார். மேலும் இரண்டு பத்துக்களில் திருப்பதி என்னும் பெயர் சொல்லாமல் இருப்பினும் அங்கிருக்கும் சந்தர்ப்பத்தை நோக்கின் அவை திருப்பதியைத் தான் குறிக்கின்றன என்பது விளங்கும். இவைகளில் எல்லாம் முன் கூறிய கருத்துக்கள் தான் முழுக்க முழுக்க பரவியிருக்கின்றன. திருவிருத்தத்தில் இவர் ஏற்படுத்திக் கொண்ட இலக்கிய வழியையே இதில் மிக நன்றாக கையாண்டிருக்கிறார்; இவ்விலக்கிய மரபையே வட இந்தியாவிலும் சரி, தென்னிந்தியாவிலும் சரி இவருக்குப் பின் வந்தவர்கள் விஷ்ணு வைத்தொழுவதற்கு அனுஷ்டித்தார்கள். என்னலாம். சிருங்கார ரஸம் என்பது கையாளப்படும் முக்கிய அடிப்படை கருத்து: தலைவி தலைவனோடு கூடியிருக்க மனம் உருகி இருப்பது தான் சாதாரணமாக வரும் ரூபம்; சில சமயங் களில் தாயன்பு, அதாவது தாய் குழந்தையின் சேஷ் டைகளைக் கண்டுகளித்தல், தலைவி மனம் உருகுவதைக் கண்டு தாயானவள் இரக்கமுற்று கூடவருந்துதல் ஆகிய இவை களும் அனுஷ்டிக்கப்படும் ரூபங்கள். இந்த பிரயோகங்கள் திருவாய் மொழியில் பரவலாகக் காணப்படும். தமிழ் இலக்கிய நூல்கள் எல்லாவற்றிலும் சிருங்கார ரஸத்தை அடிப்படை யாகக் கொண்டு கடவுளைத் தொழுதல் என்னும் மரபு இத் திருவாய் மொழியிலிருந்து ஆரம்பித்தமரபேயாகும். குஜராத் தில் வல்ல பாசாரியருடைய வைஷ்ணவ மதத்திலும் சரி, வங்கத்தில் சைதன்யருடைய வைஷ்ண மதத்திலும் சரி, அடிப் படை மரபு மேலே சொன்னதே தான். இவர்கள் மதங்கள் ஒவ்வொரு விஷயங்களில் வித்தியாசப் படுமே ஒழிய அடிப்படை தத்துவங்களில் நம்மாழ்வார் நூல்களில் காணப்படுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

V-2-9-ல் பரமனுக்கு விருப்பமான பூஜையை விவரிக்கிறார்.

**மேவித் தொழுதும் மினீர்கள் வேதப் புனிதன் இருக்கை**
**நாவில் கொண்டச்சு தன் தன்னை ஞானவிதி பிழையாமே**
**பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து**
**மேவித் தொழுமடியாரும் பகவரும் மிக்க திவ்வுலகே**

V-2-9

அவன் நாமங்களை ஜபிப்பது, அவன் கலியாண குணங்களைச் சொல்லுவது, ஞானிகள் சொன்ன விதிப்படி பூவும், தூபம்,

தீபம், சாந்து, அர்க்கிய பாத்தியாதிகள் இவைகளையெல்லாம் கொடுத்து அவனுக்கு திருப்தி செய்வித்தல்.

தன்னுடைய பக்தியைப் பற்றி III 9, 1–ல் சிறப்பிக்கிறார்.

**" சொன்னால் விரோத மிது ஆகினும் சொல்லுவன் கேண்மினோ**
**என்னாவியின் கவியாலொருவர்க்குங் கொடுக்கிலேன்**
**தென்னா தெனாவென்று வண்டுமுறல் திருவேங்கடத்து**
**என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே**

III–9–1

அதாவது தனக்குக்கவி பாடுவதில் திறமையிருப்பின் அதைத் திருவேங்கடத்துள்ளானுக்கே உபயோகப்படுத்துவேன்; வேறொருவருக்கும் அல்ல என்று இந்தப் பத்துப் பாட்டுக்களிலேயே சொல்லுகிறார்.

**" கொள்ளும் பயனில்லை குப்பை கிளர்ந்தன்ன செல்வத்தை**
**வள்ளல் புகழ்ந்து நும்வாய்மையிழக்கும் புலவீர்காள்;**
**கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் என்**
**வள்ளல் மணிவண்ணன் தன்னைக்கவி சொல்பவம்மினோ**

III–9–5

அதாவது வள்ளல்களைப் புகழ்ந்து பெறும் செல்வம் ஒருவித பயனும் படாது. மணிவண்ணனைப் பாடினால் அவன் எல்லாம் தருவன் என்று இதில் வள்ளல்களைப் புகழ்ந்து பாடி செல்வம் பெறுவது அக்காலத்து வழக்கம் என்று தெரிகிறது. " வள்ளல் " என்றும் சொல் வருவதால் இவர் பாடிய காலத்தில் புலவர்கள் பரிசு பெறும் வழக்கத்தைச் சுட்டிக்காட்டுவதால் இவருடைய காலத்தை நிர்ணயிக்க ஹேதுவாயிருக்கிறது.

இம்மாதிரி இன்னொரு சந்தர்ப்பத்தையும் கூறக்காணுவோம் அவர் காலத்தில் பொதுவாக பகவானுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்னும் அவா இருந்தது; இதை V–2-3-ல் சொல்லுகிறார்.

**" திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து**
**பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்பவெள்ளம் பெருக்**
**கரிய முகில் வண்ணனெம்மான் கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்**
**இரியம்புகுந்திசைபாடி எங்குமிடங்கொண்டனவே**

V-2–3.

இதே கருத்து திரும்பவும் திரும்பவும் வருகிறது. பொய்கை ஆழ்வார் முதல் திருவந்தாதியில் 87-ல் சொன்னதையே இவர் திருப்பிச் சொல்லுகிறுர் போலிருக்கிறது. இவைகளில் ஒற்று மையான கருத்துக்கள் இருப்பதைக் கண்டால், இவரது காலத்தில் பக்தி மார்க்கம் வழியாகக் கடவுளைத் தொழுவது என்பது மற்றைய மார்க்கங்களை விட எடுப்பட்டிருந்தது என்பது தெரிகிறது. இம்மாதியான விவரணங்களை ஒன்று சேர்ந்து நோக்கில் இவ்வாழ்வார்கள் காலத்தில், ஹிந்து சமூகம் மற்றைய மார்க்கங்களைக் காட்டிலும் பக்தி மார்க்கம்மூலம் கடவுளைத் தொழுவது ஆகியவை கொஞ்சம் அதிகமாகக் கடைபிடிக்கத் தொடங்கின என்னலாம். மேலும் V–2–3–ல் ஆழ்வார் கூறுகிறுர் கலியுகம் நீங்கி கிருதயுகம் வந்துவிட்டது. தேவர்கள் எல்லாரும் கடல் வண்ணனை (திருமாலை) பக்தி சிரத்தையுடன் துதிக்கிறுர்கள் என்று புளகாங்கிதம் அடைகிறுர். மேலும் சொல்லுகிறுர் V-2-9 (முன்பு மேலே கூறப்பட்டது) எல்லாரும் வேதப் புனிதன் இருக்கையில் வந்து தொழுங்கள். அச்சு தன் நாமத்தை ஞான விதி பிழையாமல் சொல்லுங்கள். கரையேறுங்கள் என்கிறுர். பூவும் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் கொண்டு அடியார்கள் (துறவிகள் உள்பட) அர்ச்சிக்கிறுர்கள் என்னுமிடத்து இவர் உலகில் தர்மநெறி மீண்டும் திரும்பிவிட்டதை மகிழ்கிறுர். இதற்கு அடுத்தபாவில்.

**"மிக்க உலகுகள் தோன்றும் மேவிக்கண்ணன் திருமூர்த்தி**
**நக்க பிரானுேடயனும் இந்திரனும் முதலாக**
**தொக்கலமரர் குழாங்கள் எங்கும் பரந்தனதொண்டீர்**
**ஒக்கத் தொழுகிற்றீராகில் கலியுகமொன்றுமிலையே**

V–2–10

இதே கருத்தை விவரிக்கிறுர்—இப்பரந்த உலகத்தில் கண்ணன் மாத்திரம்அல்லாது திருமூர்த்திகள்,இந்திரன் முதலாலோர்களும் உளர்; ஆகவே இவர்களுக்குப் பூஜைகள் செய்து கலியுகத்திலுள்ள பாவங்களிலிருந்து வெளியேறுங்கள் என்கிறுர்.

திருப்பதியின் சரித்திற்கு முக்கியமான இன்னெரு அம்சம் என்னவெனில், கடவுள் ஒருவனே, அவன் தான் விஷ்ணு, விஷ்ணு தன்னுடைய அநேக ரூபங்களில் உலகில் தோற்றமளிக்கிறுன் என்ற கருத்து இவ்வாழ்வாரின் நூல்களில் பரந்து உள்ளன. இக்கருத்து இவருடைய நூல்களில் பரந்து உளதாயினும் சில இடங்களில் குறிப்பாகச் சொல்லப்படுகிறது. பொதுவான கருத்து யாதெனில் உலகத்திலுள்ள விதம் விதமான பல்வேறு வஸ்துக்களும் அம்முழு முதற்கடவுளின்

சரீரத்தில் அடங்கியவை யாகும்; பல் வேறு ஆத்மாக்களுக்கும் அவனே சரீரி என்னும் கருத்து. இந்தப் பொதுவான கருத்துக் களைக்கூறும் பொழுது ஆழ்வார் சில இடங்களில் குறிப்பாக பிரம்மா, சிவன், இந்திரன் ஆகிய தேவர்களும் அவனுடைய சரீரத்தில் அடங்கியுள்ளார்கள் என்கிறார். சிவனுக்கு விஷ்ணுவின் மார்பிலும் பிரம்மாவுக்கு நாபியிலும் இடம் அளித்திருக்கிறார். இம்மாதிரி குறிப்பாக பிரமன் சிவன் இந்திரன் ஆகியோர் அவனுடைய சரீரத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்னும் கருத்து முதலாழ்வார்கள் கூறிய கருத்தையே பிரதிபலிக்கிறதாகும்; இதில் ஒரு விசேஷம் என்ன வெனில் இவர்கள் "ஸ்ரீ" யைப் போல் அவனுடைய சரீரத்தில் ஒவ்வொரு பாகத்தில் இருப்பவர்கள் என்று கருதினும், ஆழ்வார் இவர்களை விஷ்ணுவினுடைய திவ்யாயுதங்களான சங்கு சக்கராதிகளுக்குச் சமமாகக் கூறினார் இல்லை. இதை

> ஏறாளும் இறையோனும் திசை முகனும் திருமகளும்
> கூறாளும் தனியுடம்பன் குலங்குலமாய அசுரர்களை
> நீறாகும் படியாக நிருமித்துப் படைதொட்ட
> மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே
>
> —திருவாய்மொழி IV-8-1.

இந்த முழு நம்பிக்கையும், அதை பாக்களில் விவரிக்கையும் உற்று நோக்கில் திருப்பதியில் இருக்கும் மூர்த்தி ஒரு காலத்தில் சிவனாகவும் ஸ்கந்த சுப்ரமணியனாகவும் இருந்ததாகப் பரவும் வாதத்தை அடக்கி, அங்கிருக்கும் மூர்த்தி விஷ்ணுதான் அன்றி வேறொருவரும் இலர் என்பதை நிர்ணயிக்கிறது.

மேலும் IX–3,10—ல் இதையே கூறுகிறார்:

> "தாளதாமரையானுனதுந்தியான்
> வாள்கொள் நீள்மழு வாளியுன்னாகத்தான்
> ஆளராய் தொழுவாருமமரர்கள்
> நாளுமென் புகழ்கோ உன் சீலமே"
>
> IX-3-10

இவ்வாழ்வார் நூலின் ஆரம்பத்தில் கடவுளை வணங்குகிறார்; அவ்வணக்கம் ஆழ்ந்து பரவசமாக்குவதாயும் உளது. இதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தெய்வத்தின் வெவ்வேறு மூர்த்திகளை மனக்கண்ணால் காண்கிறார், கண்டு மேலும் மேலும் சென்று அவனிடத்தில் ஈடுபட்டு அவனோடு சேர்ந்து சாயுஜ்ய பதவியை அடைகிறார். இவர் இந் நிலைகளை பாக்களின் மூலம் பாடும் பொழுது இப்பாக்கள் தன்னால் பாடப்பட்டதல்ல, தன்னுள்ளிருக்கும் பரமனாலே பாடப்பட்டன; அவனுடைய

பரமதயையாலே இச் சுழன்று கொண்டிருக்கும் ஆத்மாவை கை கொடுத்துத் தூக்கிறுன் என்கிறுர்.

**" செஞ் சொற் கவிகள் உயிர் காத்தாட் செய்மின்**
**திருமாலிருஞ்சோலை**
**வஞ்சக்கள்வன் மாமாயன் மாயக் கவியாய் வந்து என்**
**நெஞ்சும் உயிரும் உள் கலந்து நின்றுர் அறியா வண்ணம்**
**என்**
**நெஞ்சம் முயிரு மவையுண்டு தானேயாகி**
**நிறைந்தானே "**
X-7-1

**" கண்ணு அசுரர் நலி வெய்த நல்ல அமரர் பொலி வெய்த**
**எண்ணுதனகன் எண்ணும் நன் முனிவர் இன்பம்**
**தலை சிறப்ப**
**பண்ணூர் பாடவின் கவிகள் யானுய் தன்னைத் தான் பாடி**
**தென்னு வென்னும் என்னம் மான் திருமாலிருஞ்**
**சோலையானே "**
X-7-5

(இப்பத்தில் மற்ற பாக்களையும் கவனிக்க)

இவர் தனது சுழன்று கொண்டிருக்கும் ஆத்மாவைத் தலை தூக்கி, அத்தால் அவனுடைய பெருமைகளைப் புகழ்கிறுர். இந்நிலை அவருக்குக் கிடைத்தவுடன், அவர் தான் விரும்பிய இறுதி நிலையை அடைந்து விட்ட தோற்றம் அடைந்து தானும் பரமனுக்கு சமமான நிலை எய்திய நிலையையடைந்து அவனுடைய சமீபத்திலியே எப்பொழுதும் இருப்பதும், அவனுடன் எப்பொழுதும் உண்பதும் உறங்குவதுமாகக் காலங் கழிப்பதில் பொழுது போக்குகிறுர். இந்நிலையை ஆழ்வார் அனுபவித்து தான் தன்னுடைய ஆத்மாவின் குறிக்கோளை அடைந்த திருப்தியை யடைகிறுர்.

இக் கூற்றில், ஆழ்வார் பரமனுக்கு தொழுகை செய்வது அவனுடைய பல ரூபங்களிலேயாகும்; அதாவது வியூக விபவ, அர்ச்சாரூபங்களான அவன் சமயத்திற் கேற்ப அவ்வப்போது எடுத்த ரூபங்களில், இப்பூ மண்டலத்திற் தோன்றி தன் பக்தர்களுக்கு அவர்கள் தொழுவதற்கு ஹேதுவாய் இருக்குமாறு தோன்றும் ரூபங்கள். ஆகவே ராமகிருஷ்ணுத்ய வதாரங்கள் ஒருபக்கமும், அர்ச்சாரூபத்தில் பல வேறு இடங்களில் திருக்கோயில் கொண்டுள்ள மூர்த்தங்கள் மற்றொரு பக்கமும் வைத்து அவனைப்பற்றி பல பாக்களில் தொழுகிறுர்.



ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி

(வஜ்ர கவசத்துடன்)



ஸ்ரீ வேங்கடேச ஸ்வாமி முத்தங்கி சேவை

**'' மேயான் வேங்கடம் காயா மலர் வண்ணன்**
**பேயார் முலையுண்ட வாயான மாதவனே ''**

X–5-6,

*இது மாத்திரமேயன்றி மற்ற ரூபங்களிலும் அவனைத் தொழுகிறார்.......*

**'' தெனதுயிரே மனமே வாக்கே கருமமே**
**ஒருமாஞெடியும் பிரியானென்னூழி முதல் வஞெருவனே ''.**

*இதுவும் தவிர இலக்கியத்தில் உயர்ந்த உணர்ச்சியைக் காட்டும் எல்லாவிதமான பாவங்களிலும் தன்னை ஆக்கிக் கொண்டு பாடுகிறார்.*

**'' திருமாலிருஞ் சோலையே திருப்பாற் கடலே**
**யென் தலையே**
**திருமால் வைகுந்தம்மே தண் திருவேங்கடமே**
**யெனதுடலே**
**அருமா மாயத் தெனதுயரே மனமே வாக்கே கருமமே**
**ஒரு மாஞெடியம் பிரியானென் னென் னூழி**
**முதல்வஞெருவனே ''**

X-7, 8

*ஆகவே இவ்வாழ்வார் பரமனுக்கு ஒரு ஆத்மா தொழுவது எப்படி அதன் மூலம் அவனை எவ்வாறு அடையலாம் என்னும் பக்தி மார்க்கத்தை மிகவும் அழகாகவும் விரிவாகவும் உரைக்கிறார் எனக் கொள்ளலாம்.*

அத்தியாயம் 7

# இதர ஆழ்வார்கள்

**இதர ஆழ்வார்கள் :**

நம்மாழ்வாருக்குப் பிறகு நாம் மீதி ஆழ்வார்கள் எழுவரைப் பற்றி கவனிப்போம். (1) மதுரகவியாரது 10 பாக்கள் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளது; அவையுள் அவர் நம்மாழ்வாரைத் தனக்கு குருவாக்கி அவருக்குத் தான் கடமைப் பட்டுள்ளதை இப்பாக்களில் விளக்குகிருர்; ஆகவே இவர் தன்னை நம்மாழ்வாரோடு ஐக்கியப் படுத்திக் கொண்டு விடுகிருர். இவருக்குப் பிறகு (2) குலசேகரர் (3) பெரிய ஆழ்வார்—இவருடைய நிஜப்பெயர் விஷ்ணு சித்தர் என்பதாகும் (4) இவருடைய மகள் ஆண்டாள். பத்தாவது தொண்டரடிப் பொடி ஆழ்வார் அல்லது சம்ஸ்கிருதத்தில் பக்தாங்க்ரி ரேணு எனப்படுவார். இவருக்குப் பிறகு திருப்பாணுழ்வார் (சம்ஸ் கிருதத்தில் யோகிவாஹ) என்பவரும் திருமங்கை யாழ்வாரும் 10, 11 ஆழ்வார்களைப் பற்றி இப்பொழுதே சொல்லி விடலாம். தொண்டரடிப் பொடி ஆழ்வார் பிரபந்தத்தில் 110 பாக்களால் ஸ்ரீரங்கத்தில் கோயில் கொண்டுள்ள ரங்கநாதனைப் பாடி இருக்கிருர். இவர் இவ்வூருக்கு அருகாமையில் பிறந்து ஆயுள் முழுவதும் இப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்திருக்கிருர். திருப்பாணுழ்வாரும் அம்மாதிரியே இவ்வூருக்கு அருகே பிறந்து ஸ்ரீரங்கம் கோவிலில் குடி கொண்டுள்ள பிரானுக்கே துதி செய்யா நின்ருர். மற்றைய நால்வரும் அதிகமான பாக்களைப் பாடியிருக்கின்றனர். அவற்றில் திருப்பதியைப் பற்றி குறிப்புகள் வருகின்றன. இவர்களுடைய தெய்வ வழிபாடும் நம்மாழ்வாருடையது போலவே விஷ்ணுவுக்கே அர்ப்பணம் செய்துள்ளனர்; ஆயினும் நம்மாழ்வாரைப் போல் இளம் பெண் காதலனுக்காக வருந்தும் பாவத்தைக் கொண்டு இவர்கள் தங்கள் பக்தியைக் காட்டவில்லை; தங்களுடைய நிச்சலனமான பக்தியை வேறு வழிகளில் காட்டுகிருர்கள். நம்மாழ்வார் அம்மாதிரியான உறவிஞலேயே பரமனிடம் தனக்கிருக்கும் பக்தி மேலீட்டைக் காண்பித்தது அவருக்கு இதர உறவுகளிஞல் காட்டக் கூடாது என்ற ஒரு எண்ணம் இருந்ததால் அல்ல; ஆகக் கூடி அவர் தான் கையாண்ட முறையைக் கையாண்டது அவருக்கு அதில் ஒரு ஊன்றுதல் இருந்ததால். ஆயின் பெரியாழ்வார் கையாண்ட முறை தாய் தந்தையார் குழந்தையின் சேஷ்டிதங்களைக் கண்டு

களித்தல் என்னும் முறையாகும். அவருடைய பெண்ணான ஆண்டாள் அனுபவித்தது ஸ்ரீரங்கத்திலிருக்கும் ரங்கநாதனுக்கே தன்னை அர்ப்பணமாக்கிக் கொண்டு கடைசியில் அவனையே மணந்து கொண்டாள். முதலாயிரத்தில் பெரியாழ்வாருடைய பாக்கள் 473 ஆகும்; இவற்றில் முதல் 10 பாக்கள் விஷ்ணுவைப் பொதுவாக தோத்திரம் செய்வதாகும். மீதியெல்லாம் விஷ்ணுவினுடைய கிருஷ்ணவதாரத்தைப் பற்றினதாகும்; அவை கிருஷ்ணனுடைய குழந்தைப் பருவத்தின் சேஷ்டைகளை மனதைத்தொடும் ஆதரவோடும் மிக்க விளக்கத்தோடும் விளக்குவதாகும்; கிருஷ்ணன் சிறுபிராயத்தில் கோகுலத்தில் தன் உண்மை சொரூபம் கம்ஸனுக்குத் தெரியாதபடி வளர்ந்து வந்த காலத்தில் செய்த விளையாட்டுக்களை மிகமிக அழகாக வர்ணிக்கிறார்.

**பெரியாழ்வாரின் திருமொழியின் சிறப்புகள் :**

அடுத்த நூறு பாட்டுக்கள் விதம் விதமான காரியங்களில் ஈடுபடுகின்றன. இதில் இரண்டு மூன்று பத்துக்கள் காமத்தால் பீடிக்கப்பட்ட இளநங்கை தலைவனுக்காகப்படும் மன வேதனையை விவரிக்கிறது. அம்மாதிரியே ஒரு தாய் தன் மகள் தன் இஷ்டத்திற்கு சந்த ஒருவனைக் குறித்து மனதில் கிலேசப் படுவதைப் பற்றி வருந்துகிறாள் என்பதை வர்ணிக்கிறார். அடுத்த நூறு பாட்டுகளிலும் அதற்கு அடுத்த நூறு பாட்டு களிலும் விஷ்ணுவை அவனது பரவியூக விபவாவதாரங்களில் ஏன் வணங்க வேண்டும் என்பதை விளக்குகிறார். விஷ்ணு இவ்வுலகத்தில் பல அவதாரங்களில் தோன்றிய போது அவர் செய்த சில சம்பவங்களை எடுத்துரைத்து அதை விவரிக்கிறார். இம்மூன்றாவது நூறில் கடைசி பத்துப் பாட்டுக்களில் ஹனுமான் ராமனிடம் தான் சீதையைப் பார்த்து விட்டு வந்ததை ஊர்ஜிதப் படுத்த சீதையுடன் பேசிய சம்பாஷணையில் சில பகுதிகளையும் மற்றும் பல சம்பவங்களையும் சொல்லுவதைக் கூறுகிறது. அடுத்த பகுதிகளில் கடவுளின் அருளை பூர்ணமாக அனுபவித்தவர்கள் அவ்வருள் தனக்குக் கிட்டாதா என்று ஏங்கிக் கிடக்கும் ஆத்மாக்களுடன் நடத்தும் சம்பாஷணை. அடுத்த மூன்று பத்துக்கள் திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமான்களைப் பற்றிச் சொல்லி அவனை நாம் துதி செய்ய வேண்டியதைப் பற்றிய சிறப்பை விவரிக்கிறது. அடுத்த பத்து லோகத்திலிருக்கும் சம்சாரிகள் அவனைத் தொழ வேண்டுவதற்குச் செய்ய வேண்டிய வழிகளை வரையறுக்கிறது அடுத்தபத்தில் குழந்தைகளின் பெயர்களை அவன் திரு நாமங்களாக ஏன் வைக்க வேண்டும் என்று சொல்லி அப்படிச்

சொல்லுவதால் அவனுடைய நித்திய சாந்நித்தியத்தை எப்பொழுதும் உணர்ந்து கொண்டிருப்போம் என்கிறார். அடுத்த மூன்றும் புண்ணிய ஸ்தலங்களான தேவ பிரயாகை, ஸ்ரீரங்கம் ஆகியவைகளைப் பற்றியானவை. நான்காவது பாகத்தில் தான் திடசித்தத்தோடு இருக்கையிலேயே அவனுக்கு சரணகதி பண்ணி தனது அந்திம தசையில் அவன் தன்னை தன் பக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கிறார். ஐந்தாவது பாகத்தில் அவன் ஏற்கனவே தன் பக்கத்தில் இருக்கிறன் என்றும் அவனுடைய பெருங்குணங்களை தான் ஏற்கனவே அனுபவித்ததையும் கூறுகிறார். மனித சரீரத்துக்கு உண்டாகக் கூடிய உபாதைகளுக்கு இனி தன்னிடத்தில் இடமில்லை என்று கூறி கடைசி இரண்டு பத்துக்களில் அவன் தனக்கு சேஷமானவன் என்றும் அவனிடத்தில் பல நன்மைகள் கிடைக்கப் பெற்றேன் என்றும் கூறுகிறார். ஒரு ஆன்மா அவனை உள்ளன்போடுதொழுது கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி அவனைத் தன்னுள்ளேயே பார்க்கிற நிகழ்ச்சியை விவரிக்க ஆழ்வார் விஷ்ணுவுக்குப் புனிதமான பல இடங்களைப் பற்றி குறிப்பிடுகிறார். ஸ்ரீரங்கம், திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், தனது சொந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இத்தலங்கள் இவருக்கு மிகவும் விருப்பமான தலங்கள். ஆனல் சில இடங்களில்—இரண்டு மூன்று இடங்களில் திருப்பதியைப் பற்றி குறிப்புகள் வருகின்றன; ஆகவே இவருக்கு திருப்பதியைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும்; அல்லது கேட்டாவது இருக்க வேண்டும். மிக தூரத்தில் இருக்கும் சில தலங்கள் விஷ்ணுவுக்குப் புனிதமானதாலும் வைஷ்ணவர்களால் விரும்பப்படுவதாலும் இவருடைய நூல்களில் அத்தலங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

ஆகவே இவர் இயற்றிய "திருவாய்மொழி" பெரியாழ்வார் திருமொழி என்னும் பெயர் பெற்று கடவுளிடத்தில் ஒரு ஆத்மா தொழுவது, ஒரு தாய் ஆனவள் தன் குழந்தையின் இளமைப் பருவத்தில் செய்யும் பல சேஷ்டைகளை கண்டு களித்து அதன் அன்பை அதன் மேல் சொறிவதாய் காண்பிக்கிறார். இவருடைய நூலில் பாகவதத்தில் மிக அழகாக வர்ணிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய பல கேளிக்கைகளில் ஈடுபட்டு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாழ்வாருக்கு விஷ்ணுவினுடைய இதர அவதாரங்களிலும் ஈடுபாடு உண்டு; முக்கியமாக ராமாவதாரத்திலும் ஈடு பட்டு பல பாக்களில் பாடி இருக்கிறார். இது மாத்திரமேயன்றி இதர அவதாரங்களைப் பற்றியும் பல பாக்களில் பாடி இருக்கிறார்.

இவருடைய 473 பாக்களில் திருப்பதியைப் பற்றி இரண்டு இடங்களில் தான் காணப்படுகின்றன. சரித்திர சம்பந்தமான குறிப்புகள் இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. ஒன்று திருப்பல்லாண்டிலும் மற்றொன்று IV, 4, 8-லும் இவர் காலத்தில் இருந்த பாண்டிய நாட்டு மன்னனான செல்வன் என்பவனுடைய புரோகிதனைப் பற்றியும் ஆகும்; இச்செல்வன், திருக்கோட்டியூர் என்னும் தலத்தில் இருக்கும் எம்பெருமானுக்குப் பல பணிகள் புரிந்ததும் அல்லாமல் ஆழ்வாரை பாண்டியனுடைய தலை நகரான மதுரைக்கு அழைத்துவர ஹேதுவாயிருந்தான். இப்பாண்டியனைப் பற்றியும் இவ்வாழ்வார் இரண்டு இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். முதலாவதாக IV-2-7.ல் தென் கூடல் என்னும் மதுரைக்குத் தலைவனான நெடுமாறனைக் குறிப்பிடுகிறார். இந்நெடுமாறன் கையில் வேல் ஏந்தியவனாகவும் எம்பெருமானிடம் ஈடுபட்டிருப்பவனாயிருப்பதாகவும் கூறியுள்ளார். இவருடைய நூற்களில் ருத்ரன், பிரமன், இந்திரன், முதலானோர்கள் தேவர்கள் என வழிபாடு செய்யப்பட்டவர்களாயிருப்பினும் பிறப்பு என்னும் சம்சாரக் கடலைத்தாண்டும் வரம் கொடுக்கக் கூடியவர்கள் அல்லர் என்னும் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறார்.

> **"எருத்துக் கொடியானும் பிரமனும் இந்திரனும் மற்றும்**
> **ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறி**
> **வாருமில்லை**
> **மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா மறு பிறவி தவிரத்**
> **திருத்தி உன்கோயிற்கடைப் புகப் பெய் திருமாலிருஞ்**
> **சோலையெந்தாய்"**
>
> (பெரியாழ்வார் திருமொழி V–3,6)

**ஆண்டாளின் நாச்சியார் திருமொழி**

அடுத்தபடியாக வரும் 143 பாக்கள் ஆண்டாள் அல்லது கோதை அல்லது சூடிக் கொடுத்தாள் (தான் தனக்கே சூடிக் களைந்த பூவை பரமனுக் களித்தவள்) அருளிச் செய்தவையாகும். இவள் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டவள் என்றும் பூமா தேவியின் அவதாரம் எனவும் கருதப்படுவாள். பெரியாழ்வார் இவளை நந்தவனத்தில் கண்டெடுத்து தனது குழந்தையாகவே பாவித்து வளர்த்தார். அவர் தனது ஊரான ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள கோவிலில் இருக்கும் எம்பெருமானுக்கு தினசரி பூக்களைக் கொய்து மாலையாக்கி வழங்குவது வழக்கமாயிருந்தது. தினந்தோறும் அவர் மாலையைத் தொடுத்து விட்டுத் தனது தினக் கடன்களை முடித்துவிட்டு வரப் போயிருக்கும் பொழுது

பகுத்தறிவு மிகுந்த ஸ்ரீ ஆண்டாள் ஆனவள் அம்மாலையைத் தன் மேலிட்டுக் கண்ணாடியில் சரியாக அமைகிறதா என்று பார்த்து விட்டு தந்தை வருமுன் முன் போலவே வைத்து விடுவாள். ஒரு நாள் கோதை அம் மாலையைத் தன் மேல் இட்டுக்கொண்டிருப் பதைப் பார்த்த பெரியாழ்வார் மிகவும் மனம் நொந்து தான் தன் பெண்ணிடம் இவ்வளவு வாஞ்சை வைத்ததால் தானே இவ்விபரீதம் விளைந்தது எனதுக்கித்து அன்று அம்மாலையை எம்பெருமானுக்குச் சாத்தாமல் இருந்துவிட்டார்; தானும் உபவாஸம் இருந்தார். அன்று இரவு அவருக்குக் கனவில் எம்பெருமான் தோன்றி தனக்கு அவர் பெண் தரித்துக் கொண்ட மாலையே உகப்பானது என்றும் வேண்டாம் என வைத்துவிட்ட அம்மாலையே சாத்த வேண்டும் எனத் தெரி வித்தார். அவரும் அவ்விதமே செய்யலாயினர். கோதை நன்கு வளர்ந்து இளம் பெண்ணான பிறகு கடவுளைத் தவிர வேறு எவரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொன்னாள், கடவுளின் அனுமதியின் பேரில் அவளை அழைத்துக் கொண்டு போய் ஸ்ரீரங்கத்தில் கோவிலுக்குள் விட்டு விட்டுவந்தார். அவளை ரங்கநாதனும் அங்கீகாரம் செய்து அவளை தன் மூர்த்தியில் அந்தர்யாமியாக்கிக் கொண்ட தாகச் சொல்லுகிறார்கள். இதில் அடங்கியிருக்கும் அற்புத நிகழ்ச்சி ஒரு புறம் இருக்க, இவளுடைய பாக்களில் ஒரு ஸ்திரி வயது வந்து விஷ்ணுவினிடத்திலேயே, முழுவதும் ஈடுபட்டு அதிலும் கிருஷ்ணாவதாரத்தையே நினைத்து நினைத்து உருகி பால கிருஷ்ணனுடைய லீலைகளிலேயே மனத்தை லயித்து இருக்கிற ஸ்திதியை விவரிக்கிறாள்.

**ஸ்ரீ ஆண்டாளுடைய நூல்களின் முக்கிய அம்சங்கள்:**

இவளுடைய முதல் நூல் 30 பாக்கள் கொண்ட திருப்பாவை யாகும். இது மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து விட்டு பரமனைத் தொழுவதைப் பற்றி யாகும். இது பால கிருஷ்ணனைப் பற்றிய பாக்கள் ஆகும். அடுத்த பத்து இளம் கன்னிகள் காம தேவனைக் குறித்து தொழுகை செய்வது. இப்பத்தில் திருப்பதியைப் பற்றி இரண்டு இடங்களில் குறிப்புகள் வருகின்றன. அடுத்த நான்கு பாகங்கள் கிருஷ்ணன் இளம் வயதில் செய்த குறும்புத்தனங்களைப்பற்றி பெண்கள் மணலினால் கட்டிய வீடுகளை உடைப்பது, அவர்கள் விளையாடும் பொழுது விளையாட விடாமல் தடுப்பது, அவர்கள் நீராடும் போது அவர்கள் கீழே வைத்து விட்டிருந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு மரத்தின் மேலேறி உட்கார்ந்து கொண்டு, அவர்கள் அவ்வாடைகளைக் கேட்க அவர்களை அழவிடுவது இம்

மாதிரியான அநேக குறும்புத்தனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்பாகத்தில் சாதாரணமாக இரண்டு மூன்று இடங்களில் திருப்பதியைப் பற்றி குறிப்புகள் வருகின்றன. VI பாகம் ஆண்டாள் கிருஷ்ணனைத்தான் திருமணம் செய்து கொள்வதாகக் கண்ட கனவைப் பற்றிச் சொல்லுவது. அடுத்த பத்து விஷ்ணு தன் கையிலேந்திய பாஞ்சசன்யம் என்னும் சங்கைப் பற்றக் கூறுவது. VIII திருப்பதியைப்பற்றி. இதில் ஒவ்வொரு பாட்டிலும் திருப்பதியின் பெயர் வருகிறது. ஆனால் அவையெல்லாம் சாதாரண பெயர் மாத்திரமேயன்றி முதலாழ்வார்கள் கூறியவாறு அங்கு நடக்கும் விபரங்களைப் பற்றி கூறுகிறதில்லை. ஒரு வேளை ஆண்டாள் அத்தலத்திற்குப் போகாதிருந்ததால் அதைப்பற்றி விரிவாகச் சொல்ல இயலாமல் இருந்திருக்கலாம்; ஆனால் அத்தலம் தொலைவிலிருக்கும் மிக்க புனிதமான தலம் என்றும் விஷ்ணுவுக்கு அர்ப்பணம் பண்ணப் பட்ட தலம் என்றும் கேள்வி பட்டதிலிருந்து இப் பாக்களைப் பாடியிருக்கிறாள் என்னலாம். அடுத்த பத்து திருமாலிருஞ் சோலையைப் பற்றினது: அடுத்த பத்தில் இருதரம் வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வரினும் இதில் ஒரு பெண் தன் நாயகனை நினைத்து ஏங்கி இருப்பதை தன் தோழிக்கு எடுத்துரைக்கிறாளாக அமைந்திருக்கிறது.

அடுத்த பத்தும் இதே தோரணையிலிருந்தாலும் இப்பொழுது ஒரு தாய் தன் பெண் காதல் நோயால் வருந்துவதைப் பற்றி மனம் நொந்து போகிறாள். அடுத்தபத்தில் அப்பெண் தன்னை கிருஷ்ணன் இருக்கும் இடத்துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று தாயை வேண்டிக் கொள்கிறாள். அடுத்த பத்தில் கிருஷ்ணன் உபயோகித்த வஸ்திராதிகள் தன் மேல் பட்டு அந்த உணர்ச்சியால் சமாதானம் ஆக முயலுகிறாள். ஆகவே இங்கேயும் ஒரு இளம் பெண் (ஆண்டாள்)ளுடைய ஆத்மாமிக்க வாஞ்சையுடன் அவனை அடைய பிரயத்தினங்கள் செய்து படிப்படியாக மேலே சென்று கடைசியாக தான் விரும்பிய பொருளை அடைகிறதாகக் காண்கிறோம். சில எழுத்தாளர்களும் உரையாடர்களும் இதை அதிமானுஷம் அதாவது மனிதருக்கு எட்டாத ஒரு காரியம் என்று சொல்லு கிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் தகப்பனார் வயது வந்த பிறகு முதிர்ந்த படிப்பு, ஞானம் இவைகளுடன் வழிபட்டு கடவுளை அடைகிறார். பெண்ணானவள் அவனிடத்திலேயே பாசம் வைத்து அவனுக்கே எல்லா தொழுகைகளும் செய்து அப்பக்தி மார்க்கத்தால் கடவுளை எய்துகிறாள். ஆராய்ச்சியாளர்கள் இம் முனிவர்களது வாழ்நாளைப் பற்றி ஆராயுங்கால், இத்தந்தை

பெண் ஆகிய ஆழ்வார்கள் கிட்டத்தட்ட நம்மாழ்வார் இருந்த காலத்துக்குச் சமீப காலத்தில் இருந்தார்கள் என வரையருக்கின்றனர். இலக்கிய அமைப்பை வைத்துக் கொண்டு நோக்கின் இவர்களின் பாக்களின் அமைப்பும் கருத்துக்களும் ஏறக்குறைய ஒரே மாதிரி இருப்பதால் இவ்வாழ்வார்கல் நம்மாழ்வார் காலத்தவராயிருப்பார்கள் எனத் தோன்றினும் பெரியாழ்வார் தனது நூலில் பாண்டிய மன்னனைப் பற்றிக் கூறுவதால் (முன்னமேயே இதைப்பற்றி கூறியிருக்கிறது) இவர் கி.பி. ஏழாவது நூற்றுண்டில் இருந்ததாக எண்ண இடம் உண்டாகிறது. ஆகவே இவ்விருவர்களும் அந்த காலத்தில் இருந்தவர்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். III, 8, 4—ல் வருவதை நோக்கின் அவர்கள் தகப்பன், பெண் என்பது விளங்கும்.

> **" ஒருமகள் தன்னையுடையோன் உலகம் நிறைந்த புகழால்**
> **திருமகள் போல வளர்த்தேன் செங்கள்மால் தான் கொண்டு போனுன்**
> **பெருமகளாய் குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்றவசோதை**
> **மருமகனைக் கண்டுகந்து மணுட்டுப் புறஞ் செய்யுங்கோவோ**

(பெரியாழ்வார் திருமொழி III-8—4)

இதில் பெரியாழ்வார், "ஒரு பெண்ணிற்குத் தந்தையாயிருந்தேன். அவளை இலக்குமி மாதிரி வளர்த்தேன். அவளை செங்கண்மால் தனக்கே உரியவள் எனத் தூக்கிக் கொண்டு போய்விட்டான்" எனத் தன் சுய சரிதத்தைச் சொல்லுகிருர். இவ்விடத்தில், இது வரும்பத்தில் ஆழ்வார்தான் தாயாகவும் பாவித்து மகள் தன்னை விட்டு தன் காதலன் (மால்) இடம் ஓடி விட்டதை நினைத்து உருகுகிருர். ஆயினும் தனக்குத் தெரியாமல் தன் சுய சரிதத்தை விவரித்திருக்கிருர்! ஆகவே அவரும் ஆண்டாளும் தந்தையும் மகளும் எனும் தொடர்பு நிலைக்கிறது.

**ஆழ்வார் குலசேகரர் :**

இவர்கள் காலத்துக்குப்பிறகு அடுத்தபடியாக வந்த ஆழ்வார் சேர தேசத்து மன்னரான குலசேகரர் ஆவர். ஆராய்ச்சியாளர்கள் இவர் காலத்தை பெரியாழ்வார் காலத்துக்குச் சமமாக ஆக்கி இவ்விருவரையும் நம்மாழ்வாருக்கு முன்னதாக இருந்ததாகச் சொல்லுகிருர்கள். ஆனல் ஆழ்வார் குலசேகரர், தென்னிந்திய மன்னவர்கள் மத்தியில் இருப்பு அவரை கி.பி. 7-வது நூற்றுண்டில் தான் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது. நாலாயிரத்தில் முதலாயிரத்தில் இவர் பாடியபாக்கள் 105. இவருடைய நூலை பெருமாள்



லயப்ப ஸ்வாமி (உபய நாச்சியார்களுடன்) (ஸ்ரீ வேங்கடேஸ்வரர்
உற்சவமூர்த்தியும் நாச்சிமார்களும்)



திருப்பதி மலையும் சுற்றுப்புறங்களும்

திருமொழி என்பர்; சேர தேசத்துமன்னர்கள் பெருமாள் என்னும் அடைமொழியால் அழைக்கப்பட்டதால் இவருடைய நூலுக்குப் பெருமாள் திருமொழி எனப் பெயர் இடப்பட்டது. மேலும் பெரியாழ்வார் திருமொழி, நாச்சியார் திருமொழி என்னும் பேர்களுக்கொப்ப இந்நூலை பெருமாள் திருமொழி என்பது பொருத்தமாகும். இவர் நூலில் முதல் மூன்று பாகம் ஸ்ரீரங்கம் கோவிலைப் பற்றியதாகும். பெரியாழ்வாரும், ஆண்டாளும் அவ்விடத்துக்குப் போய் முக்தியடைந்தாற்போல் இவருக்கும் அவ்விடத்தில் மிக்க பற்றுதல் உண்டு. இம்மூன்று பாகங்களில் இவர் ஸ்ரீரங்கத்திலிருக்கும் எம்பெருமானிடத்தில் இருக்கும் அபார பக்தியை வெளியிடுகிறார். இவர் அக்கோயிலில் இருக்க ஆசைப்படுவது அங்கு ஸ்ரீரங்கநாதனைத் தொழுபவர்களுடைய பாததுளிதன் மேல் விழுந்து கடைத்தேறுவேன் என்கிறார்; முதல் பத்து ஸ்ரீரங்கநாதனைக்குறித்து அழகான வர்ணனை. இரண்டாவது பத்தில் இவர் அங்கு போயிருந்து பக்தர்களின் பாததூளிகள் தன்மேல் படவேண்டும் என்று ஆசைப்படுகிறார். மூன்றாவது பத்தில் உலகத்தில் மற்றவர்களைப் பார்க்கில் தான் முழுவதும் வேறுபட்டவன். ஏனெனில் ஸ்ரீரங்க நாதனிடத்தில் தனக்கிருக்கும் பாரமைகாந்த்யபக்தி தனிப்பட்டதாகும் என்கிறார். இம் மூன்றிலும் தன்னுடைய பிருதுகளைத் தக்க இடங்களில் கூறுகிறார். இரண்டாவது பத்தில் கடைப்பாவில் தன்னை கொல்லி (கொல்லம்) காவலன்; கூடல் (மதுரை) நாயகன்; கோழிக்கோன் (திருச்சிக்கு அருகிலிருக்கும் சோழ தேசத் தலைநகரான உறையூர்) என்று குறிப்பிடுகிறார். அடுத்த பத்தில் 9—வது பாட்டில் தன்னைக் கொங்கர் கோன் (கொங்கு நாட்டரசன்) என்கிறார்.

**"அல்லிமா மலர் மங்கைநாதன் அரங்கன் மெய்யடியார்கள்**
**எல்லையில்லடிமைத் திறத்தினில் என்றும் மேவும்**
**மனத்தனாய்**
**கொல்லிகாவலன் கூடல் நாயகன் கோழிக்கோன்**
**குலசேகரன்**
**சொல்லினின் தமிழ் மாலை வல்லவர் தொண்டர் தொண்டர்**
**களாவரே.**

—பெருமாள் திருமொழி II—10.

**அங்கையாடி அரக்கனடியிணை**
**தங்குசிந்தை தனிப்பெரும் பித்தனாய்**
**கொங்கர் கோன் குலசேகரன் சொன்னசொல்**
**இங்குவல்லவர்க்கேதமொன்றில்லையே.**

—பெருமாள் திருமொழி III—10

இவைகளைச் சேர்த்து நோக்கின் இவர் தென்னிந்தியாவிற்காவது (அல்லது தமிழ் நாட்டிற்காவது) ஒருபெரும் தலைவன் எனத் தெரிகிறது. அடுத்தபத்து திருப்பதியைப்பற்றி யாகும். முன்னர் முப்பத்துக்களிற் சொன்னூர்ப்போல் இவர் திருப்பதியிலிருக்கும் எம்பெருமானுக்கு அளவிலாத சேவை செய்யவேணும்; அதன் பொருட்டு அவர் அம்மலையிலிருக்கும் ஏதாவது ஒரு வஸ்துவாகவோ, ஒரு பிராணியாகவோ ஆகவேண்டும்; நீர் பறவையாகவோ, மீனாகவோ, கோயிலில் கடைச் சேவகனாகவோ, சம்பகமரமாகவோ, கோயில் வாயில் படியாகவோ, ஏதேனுமாகவோ ஆகவேண்டும்; தேவலோகத்தில் இந்திர பதவி கிடைத்தாலும் திருப்பதியில் ஏதேனுமாக இருப்பதற்குச் சமமில்லை. அப்பதவியை தரிக்க மாட்டேன் எனச் சொல்லி தலைக் கட்டுகிறார். இதில் வரும் 11 பாக்களிலும் திருப்பதி என்னும் பெயர் காணப்படினும் அத்தலத்து பொது இயற்கையமைப்பைத் தவிர மற்றபடி அங்குள்ள திருமாலைப் பற்றியோ கடவுளுக்கு நடக்கும் தினசரி வழிபாட்டைப் பற்றியோ விவரங்கள் கொடுக்கவில்லை. இதில் நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியவர்கள் திருப்பதியைப் போற்றிய படியே இவரும் போற்றியிருக்கிறார். அடுத்த பத்து ஐந்தாவது பத்து இதில் கேரளத்திலிருக்கும் வித்துவக் கோட்டம்மானுக்கு தான் முழுவதும் ஈடுபட்டிருப்பதைச் சொல்லுகிறார்; இங்கு இவர் இந்த ஈடுபாட்டைச் சொல்லியிருப்பது மிகவும் அழகாகவும் நெஞ்சைத் தொடுவதாகவும் உள்ளது. முதல் பாட்டில் இவர் தான் எம்பெருமானிடம் இணைந்திருப்பதை ஒரு சிறிய குழந்தை தன் தாயாரிடம் அடி பட்டுக் கொண்டாலும் திரும்பவும் அவளிடமே வருவதற் கொப்ப ஆகும் என்கிறார். அடுத்த பாட்டில் கணவன் கொடூர மானவனானாலும் அவனிடம் ஒரு நல்ல பதிவிரதை எப்படி பணிந்து இருப்பாளோ, ஒரு நிலை தவறிய மன்னன் ஜனங்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்காவிட்டாலும் அவனிடம் பிரஜைகள் எப்படி விசுவாசம் வைத்திருப்பார்களோ; அம்மாதிரியே தானும் அவனிடத்தில் விசுவாசம் வைத்திருப்பதைச் சொல்லு கிறார். இம்மாதிரியே மற்றைய பாட்டுகளும் அமைந்திருக் கின்றன. முன் சொன்ன ராஜநீதி விவரம் திருக்குறள் 542-ஐ நினைவு படுத்துவதாக இருக்கிறது. அடுத்த பாகத்தில் தன்னுடைய மனமுவந்த தோத்திரங்களுக்கு அவன் கிருபை கூறவில்லையே என மனம் நொந்து போகிறார். இதை கோபிகள் கிருஷ்ணனிடம் தங்களுடைய வேண்டுதல்களுக்குத் தக்கபதில் அளிக்காமல் இருக்கிறாயே என்று கோபித்து கொள்ளும் பகுதி

யைச் சொல்லி தன்னுடைய அதிருப்தியை வெளிப்படுத்துகிறார். இங்கு தன்னை தேவகியினுடைய இடத்தில் இருத்தி அவள் கிருஷ்ணனைப் பெற்றெடுத்தும் அவனுடைய பால லீலைகளை அனுபவிக்க முடியவில்லையே என்று அங்கலாய்ப்பாய் காண் பிக்கிறார். அடுத்த மூன்றாவது பத்தில் இதற்கு எதிரில் கௌசல்யை ராமனை இளமையில் வளர்த்து அவனுடைய லீலையில் ஈடுபட்டதைக் கூறுகிறார். அடுத்தபத்தில் ராமன் காட்டுக்கு அனுப்பப் பட்டதைக் கூறி மனம் நொந்து தசரதன் இது தன் வினைப்பயன் எனக் கூறுவதையும் கூறி இந்நிலையை விளக்குகிறார். கடைசி பத்து சித்திரகூடம் (சிதம்பரத் திலிருக்கும் எம்பெருமானைப்) பற்றி வருணனை; இதில் ராமாயண கதையை சுருக்கமாகவும் ஒன்று விடாமலும் சொல்லுகிறார். ஆகவே இங்கும் ஒரு பக்தன் அனேக மனத்தத் தளிப்புக்கும் தோல்விக்கும் ஆளாகி கடைசியாக வைஷ்ணவர் களுக்கு முக்கியமான பகவத் சாக்ஷாத்காரத்தை அடைகிறான். இவருடைய நூலிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவது விஷ்ணு வுக்கு முக்கியமான க்ஷேத்திரங்களுள் முக்கியமானது திருப்பதி; இவர் ஒரு மன்னராயிருப்பினும் அத்தெய்வத்தினிடம் தான் ஒரு வாசற்படியாகவாவது இருந்து அவனை வழிபடுவேன் என்பது இவர் அத்தெய்வத்தினிடம் வைத்திருக்கும் உயர்ந்த அபிமானத்தை விளக்குகிறது.

**மற்றைய மூன்று ஆழ்வார்கள் :**

திரும்பவும் இம்மூன்று ஆழ்வார்கள் மதுரகவி, தொண் டர் அடிப்பொடி. திருப்பாண் ஆழ்வார் இவர்களைப்பற்றி கொஞ்சம் கவனிப்போம். நாலாயிரத்தில் மதுரகவி ஒரு பத்துப் பாட்டு பாடி இருக்கிறார். அதில் அவர் தனது குருவான சடகோபனை துதித்து, ஒரு நல்ல ஆசாரியன் கிடைத்தால் நமக்கு எல்லா விதமான உயர்ந்த பதவிகளும் கிடைக்கும் என்னும் சித்தாந்தத்தை வெளியிடுகிறார். தொண்டரடிப் பொடியார் அனேக பாடல்கள் பாடியுள்ளார் இருப்பினும் அவருக்கு ஸ்ரீரங்கத்தின் மேல் இருக்கும் பற்றுதல் அவர் நேராக வேறு ஒரு தலத்தையும் பாட இடம் கொடுக்கவில்லை. திருப்பாண் ஆழ்வார் ஸ்ரீரங்கத்துக்கு அருகே வசித்தவர்— ஸ்ரீரங்கத்துக்கு அருகில் உள்ள உறையூரில் வசித்தவர். இவர் பத்துப் பாட்டுக்கள் தான் பாடியுள்ளார். இப்பத்தும் ரங்க நாதனுக்கு அர்ப்பணம் செய்துள்ளது என்றாலும் அவையுள் இரண்டு இடங்களில் வேங்கடத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்; ஆகவே இவர் வேங்கடத்தை மிக உயர்ந்த ஸ்தானத்தில்

வைத்துக் கருதினர். வேங்கடத்தைப் பற்றி சொல்லும் இடங்கள் பொதுவானதாகும். இரண்டு இடங்களிலும் வேங் கடத்திலிருக்கும் மூர்த்தியும் ஸ்ரீரங்கத்திலிருக்கும் மூர்த்தியும் விஷ்ணுவின் மூர்த்தியேயாகும் எனக் கூறுகிறார்.

**திருமங்கை ஆழ்வார்—பெரிய திருமொழி:**

நாம் இப்பொழுது திருமங்கை யாழ்வாரின் பெரிய திருமொழியையும் மற்றைய நூல்களையும் பற்றி கவனிப்போம். இம்மற்றைய நூல்களில் இரண்டு பெரிய திருமொழி தொகுதியில் உள்ளன. அவை திருக்குருந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்பன. மூன்று நூல்கள் இயற்பா ஆயிரத்தில் உள்ளன—அவை திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல். இவையனைத்தும் சேர்த்து 1134 பாக்களால் ஆனவை. நாலாயிரப் பிரபந்தத்தில் மிக்கப் பரந்ததும் மற்ற ஆழ்வார்களை விட அதிகமான பாக்களை உடையதும் ஆனது இவருடைய நூல்கள். இவருடைய பாக்களின் அமைப்புகளும் பல் வேறுனவை; ஆகவே வைஷ்ணவர்கள் இவருடைய நூல்களை நம்மாழ்வாருடைய நூற்களை விரிவு படுத்துபவை எனக் கொள்ளுகிறார்கள். திருமங்கையாழ்வார் தஞ்சை ஜில்லாவில் கள்ளர் குலத்தில் பிறந்தவர். அவர் முக்கியமாக ராணுவத்தைச் சேர்ந்தவர்; அக்காலத்திற்கேற்ப சீர்காழித்தாலுக்காவில் சோழ அரசனுக்குக் கீழ் ஒரு சிறிய நாட்டிற்கு அதிபதியாக இருந் தார். இவர் அந்நாட்டில் ஒரு மருத்துவனுடைய வளர்ப்புப் பெண்ணிடம் மையல் கொண்டார். அப்பெண் தன்னை மணக்க வேண்டுமானுல் ஒரு வருட காலம் தினம் தோறும் 1008 பிராம் மணர்களுக்கு அன்னம் இட வேண்டும் என நிபந்தனை இட்டாள். இவரும் அதற்கு இணங்கி அவ்வாறே செய்யலானர். பணம் போதாத காலத்தில் வழிப்போக்கர்களை அடித்து அவர்களிடம் பணம் பறிப்பது கொள்ளையடிப்பது இப்படியான செயல்களைச் செய்து இக்காரியத்தை ஈடேற்ற முயற்சித்தார். ஒரு சமயம் விஷ்ணு தன்னுடைய பக்தனுக்கு தனது அருளைக் காண்பிக்கத் தானே திருமணம் செய்து கொண்டு திரும்பிவரும் ஒரு குழுவிற்கு தலைவனுக வைத்துக் கொண்டு மிக்க நகை நட்டுக்களுடன் வந்து கொண்டிருந்தார். ஆழ்வார் அவரிடமிருந்த நகைகளையெல்லாம் பிடிங்கிக் கொண்டதுமல்லாமல், அவர் காலில் போட்டுக் கொண்டிருக்கும் வளையங்களைத் தன் பற்களால் கடித்து பிடுங்க கீழே விழுந்து பாதத்தில் வாயை வைத்தவுடன் அவருக்கு ஞானேதயம் உண்டாகி நாராயணனுக்கே சரணுகதி பண்ண பாக்களை உருவாக்கினர். இவர் செய்த ஆயிரத்தில் முதற்பத்து

மேற்கூறிய பாக்களாகும். இதற்குப் பிறகு இவர் பாடிய வைஷ்ணவ கோயில்கள் அனேகமாக தென்னிந்தியாவிலும் சில வட இந்தியாவிலும் உள்ளன. இவைகளுக்கு திரவியங்கள் மூலமும் உடல் மூலமும் அனேக உபகாரங்கள் செய்யலானூர். இவருடைய நூல்களில் வரும் குறிப்புகளிலிருந்து இவருடைய காலத்தை மற்றைய ஆழ்வார்களைவிடச் சரியாக நிர்ணயிக்க முடிகிறது. முக்கியமாக இவ்வாழ்வார் இயற்றிய நூல்களின் அளவுகள் திருவாய் மொழி இயற்றிய நம்மாழ்வார் காலத்தை விட சரியாக நிர்ணயிக்க முடிகிறது இக்குறிப்புகளிலிருந்து இவர் காலத்தை பல்லவப்பெருமன்னன் நந்திவர்மன் காலம் என வரையறுக்கலாம்; இது கி. பி. 8-வது நூற்ருண்டு முழுவதாகும். இவர் நூலில் அனேக இடங்களில் வரும் சரித்திரக் குறிப்புக்கள் இதை உறுதிப்படுத்துகிறது. இவர் வடக்கிலுள்ள பல்வேறு கோவில்களை வழிபடுகிருர். முதலில் தேவ பிரயாக் பிறகு பத்ரிகாஸ்ரமம் மூலமாக கீழே இறங்கி சாளிக்கிராமத்தைப் பற்றி இரண்டு பத்துக்களில் பாடி நைமிசாரணியத்தைப் பிறகு பாடுகிருர். பிறகு இவர் சிங்கவேழ்குன்றம் என்னும் அஹோபில க்ஷேத்திரத்திற்கு வந்து பிறகு தமிழ் தேசத்திற்கு வருகிருர். இங்கு முதல் கோவிலாக இவர் வழிபடுவது திருவேங்கடம்; இதற்கு 4 பத்து பாட்டுக்கள் கொடுக்கிருர். இதற்கு வருமுன் அஹோபிலத்தைப்பற்றி பேசுகையில் அவ்விடம் போய்ச் சேருவதற்கு இயலாதது என்கிருர் இப்பொழுதும் கிட்டத்தட்ட அம்மாதிரியே இருக்கிறது. திருப்பதியைப்பற்றி நான்கு பத்துக்களும் அங்கிருக்கும் விஷ்ணுவை துதி செய்கிறதாக அமைந்திருக்கிறது. ஆனுல் இங்கு குறிப்புக்கள் ஏறக்குறைய பொதுவானதாகவும் சாதாரண வைஷ்ணவ மதசார்பானதாகவும் உள்ளது. முதல் பத்து இரண்டாவது பாவில் அங்கிருக்கும் மாலை வெண்மை நீலமானவனும் சிகப்பு நீலமானவனும் என்கிருர். இது சாதாரணமாக விஷ்ணுவைப் போற்றும் வர்ணனை: முதல் யுகத்தில் வெண்மை நிறமாகவும், இரண்டாவது யுகத்தில் தங்க நிறமாகவும், மூன்ருவது யுகத்தில் கறுப்பு நிறமாகவும் இருப்பார் என்பது, இதனுல் அங்கிருக்கும் மூர்த்தி விஷ்ணு என்பதைக் குறிப்பிடுகிருர். அவரை எண்கையுடையவனும் இமயத்திலிருப்பவனும் என்கிருர். இவ்விரண்டும் சேர்ந்து இது சிவனைக் குறிக்கிறா என ஐயம் தோன்றலாம். ஆனுல் அடுத்தவரியில் அவனே திருமாலிருஞ் சோலையில் இருக்கும் எம்பிரான் என்பதால் இவர் திருமால் தான் என்பதில் ஐயமில்லை.

**" வண்கையான் அமரர்க்கு நாயகன் வேள்வியில் சென்று மாணியாய்**
**மண்கையால் இரந்தான் மராமரம் ஏழும் எய்த வலத்தினன்**
**எண்கையான் இமையத்துள்ளான் இருஞ்சோலை மேவிய எம்பிரான்**
**திண்கைம் மாதுயர் தீர்த்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சே "**

—பெரிய திருமொழி I, 8,5.

மற்றைய குறிப்புகள் பொதுவானவை. உதாரணமாக நான்காவது பத்தில் 9-வது பாட்டு இம் மூர்த்தியை பிரம்மா, சிவன், இந்திரன் ஆகியோர் தொழுதார்கள் என்கிறது.

**" கூடியாடியுரைத்ததேயுரைத்தாய் என்னெஞ்ச மென் பாய் துணிந்து கேள்**
**பாடியாடிப் பலரும் பணிந்தேத்திக் காண்கிலா**
**ஆடுதாமரையோனுமீசனும் அமரர் கோனும் நின் றேத்தும் வேங்கடத்து**
**ஆடு கூத்தனுக்கின்றடிமைத் தொழில் பூண்டாயே "**

—பெரிய திருமொழி II 4, 9.

ஆயின் இப்பகுதியில் 5—வது பாட்டிலும் அதற்கடுத்த இரு பாக்களிலும் ஆழ்வார் தான் ஒரு சமயம் ஜைன, புத்த மதங்களில் மனம் ஈடு பட்டதாகவும் பிறகு வேங்கடத்து எம்பெருமானிடம் மனம் திரும்பியதாகவும் கூறுகிறார். ஆனால் இவர் ஒரு காலத்தில் புத்தமதத்தினராகவோ ஜைனராகவோ இருந்ததற்கு சான்று இல்லை. அது அச்சமயம் யாவருக்கும் இருந்த ஒருவகை மனப்போராட்டம் என்றே சொல்லலாம். இக்குறிப்பினால் அச்சமயத்தில் புத்தஜைன மதங்கள் தென்னிந்தியாவில் அனேக மக்களின் மனதைக் கவர்ந்தது என ஊகிக்க இடம் கொடுக்கிறது. திருவெவ்வளூர் (திருவள்ளூர்) தலத்தைப் பற்றி பாடுகிற பத்தில் 7-வது பாட்டில் சிவன் விஷ்ணுவின் சரீரத்தில் ஒரு பாகத்தில் உளன்; அவன் விஷ்ணுவின் வலது மார்பில் இருக்கிறான் என்னும் குறிப்பு வருகிறது இதே மாதிரி குறிப்புகள் அனேக இடங்களில் வருகின்றன; ஆகவே முதலாழ்வார்களும் மற்றைய முன்னூழ்வார்களும் கூறியதான உண்மை சிவன் இம்மூர்த்தியில் அடங்கியிருக்கிறான் என்பதையே இவரும் ஆமோதிக்கிறார். திருவல்லிக்கேணியைப் பற்றிப் பாடிய பத்துப் பாட்டில் கடைசி பாட்டில் ஒரு சரித்திரக் குறிப்பு அடங்கியிருக்கிறது. இதில் தென் தொண்டைமான் (தொண்டையர் கோன்) என்னும் அரசன் இக்கோயிலுக்கு தோட்டங்கள்

அமைத்து, உயரமான கட்டடங்களைச் சுற்றி மதிள்சுவர் எழுப்பி, நெடுக நடை பாதைகள் முதலியன அமைத்தான் என விளக்கமாகக் கூறுகிறது. இதனால் இந்த பல்லவ அரசன் இக்கோயிலைச் சுற்றி ஒரு நகரத்தை அமைத்தான் எனத் தெரிகிறது. இக்கோயிலில் இருக்கும் சில கல்வெட்டுக்களில் வைரமேக பல்லவனின் பெயர் வருவதால், இவன் நந்திவர்ம பல்லவனுடைய மகன் எனச்சொல்லத் தோன்றும். இந் நந்திவர்ம பல்லவன் இவ்வாழ்வார் காலத்தவன். ஆனால் இந்த 'தொண்டமான்' என்னும் சொல் முன் கூறப்பட்ட தொண்டமான் சக்கரவர்த்தி என்பவனைக் குறிக்கும்; ஏற்கனவே இவன் திருப்பதிக் கோயிலில் ஈடுபட்டு அக்கோயிலையும் சுற்றிலும் ஊரையும் அமைத்தான் என்பதை முதலாழ்வார்கள் கூறியது மூலம் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது இரண்டாவது பாகத்தில் எட்டாவது பத்தைக் கவனிப்போம். இதில் காஞ்சியில் உள்ள அஷ்டபுஜம் கோவிலைப் பற்றி பாடி இருக்கிறார். இக்கோயிலில் உள்ள மூர்த்தியின் சிறப்பு என்ன என்றால் இவருக்கு எட்டு திருக்கரங்கள் உள்ளன. இதைப் பற்றி திருவேங்கடத்தைப் பற்றி கூறும்போது சொல்லியிருக் கிறோம். இவ்வஷ்டபுஜத்தைப் பற்றிக் கூறும்பொழுது இத் தலத்தை "செந்தமிழ் பாடுவார்" தொழுதிருக்கிறார்கள் என்கிறார்.

**"வெந்திறல் வீரரில் வீரரொப்பார்**
**வேத முறைத்திமையோர் வணங்கும்**
**செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும்**
**தேவரிவர் கொல் தெரிக்க மாட்டேன்**
**வந்து குறளுருவாய் நிமிர்ந்து**
**மாவலிவேள்வியில் மண்ணளந்த**
**அந்தணர் போன்றிவரார்கொலென்ன**
**அட்டபுய கரத்தே னென்றாரே"**

– பெரிய திருமொழி II 8, 2.

இதில் செந்தமிழ் பாடுவார் என்பது பொய்கை பூதம் பேயாழ்வார்கள் எனப்படும் முதலாழ்வார்கள். இவர்கள் இங்கு தமிழ் பாக்களால் இறைவனை வணங்கினது தேவர்கள் வேதங்களை ஓதி வணங்குவதற்கொப்பாகும் என்கிறார். இந்தப் பத்தின் கடைசி பாட்டில் வைரமேகனைப் பற்றி குறிப்பு வருகிறது.

**மன்னவன் தொண்டையர் கோன்வழங்கும்**
**நீள்முடி வயிரமேகன்**
**தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி**
**அட்டபுயகரத்தாதி தன்னை**
**கன்னிநன் மாமதின் மங்கைவேந்தன்**
**காமரு சீர்க்கலிகன்றி குன்று**
**இன்னி சையாற் சொன்ன செஞ்சொல்மாலை**
**ஏத்தவல்லார்க்கிடம் வைகுந்தமே.**

—பெரிய திருமொழி II, 8, 10

*இவ்வைரமேகன், தந்தி துர்க வைரமேகன் எனப்படும் ராஷ்டிர கூட சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினவனும் பல்லவ நந்திவர்மனுக்குக் கூட்டாக இருந்தவனுமானவன் எனத் தெரிகிறது. அடுத்தபடியாக சிதம்பரத்திற்கு இவர் இரண்டு பத்துப் பாட்டுக்கள் பாடி இருக்கிறார். இதில் முதல் பத்தில் இரண்டு இடத்தில் நமக்கு வேண்டிய குறிப்புகள் வந்திருக்கின்றன. மூன்றாவது பாட்டில் கோவிந்தராஜப் பெருமாளை பல்லவ அரசன் வந்து தொழுததாகச் சொல்லுகிறது. இவன் நந்தி வர்மனாகாவாவது அல்லது அந்நாட்டை ஆண்டு வந்த அவனுடைய தந்தையாகவாவது இருக்கலாம். வைகுண்டப் பெருமாள் கோவில் கல்வெட்டுகளிலிருந்து தெரிவது தந்தை அந்நாட்டை ஆண்டபோது காஞ்சியின் மாஜனங்களால் பொதுக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டு நந்திவர்மன் காஞ்சிக்கு அரசனாக வந்தானென்று. அடுத்த பாட்டில் " கருமா கடலுள் " பள்ளி கொண்டவனே இத்தலத்திலும் பள்ளி கொண்டிருக்கிறான் சேஷசயனத்தின் மேல் என்று*

**" அருமா நிலமன்றளப்பான் குறளாய்**
**அவுணன் பெருவேள்வியிற் சென்றிரந்த**
**பெருமான் திருநாமம் பிதற்றிநுந்தம்**
**பிறவித்துயர் நீக்குது மென்கிற்பீர்**
**கருமா கடலுட்கி டந்தா னுவந்து**
**கவை நாவரவினணைப் பள்ளியின்மேல்**
**திருமால் திருமங்கையோடாடுதில்லைத்**
**திருச்சிதத்திர கூடஞ்சென்று சேர்மின்களே "**

—பெரிய திருமொழி III, 2, 4

*இரண்டாவது குலோத்துங்க சோழனும் (இப்பெருமானை இம்மாதிரியே வருணித்து உள்ளான்) அக்கோயிலையும் மூர்த்தியையும் அவ்விடத்தை விட்டு வெளியே கொண்டு போக உத்திரவிட்ட பொழுது சீர்காழி என்னும் ஸ்ரீராம விண்ண*

கரத்தைப் பற்றிவரும் பத்துப்பாட்டில் முன்னுழ்வார்கள் கூறிய படியே சிவன் வலமார்பிலும் பிரம்மா நாபியிலும் இலக்குமி இடமார்பிலும் திருமால் தரித்துக் கொண்டிருக்கிறுன் எனக் கூறப்படுகிறது.

" பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து
பிரமனைத் தன் னுந்தியிலே தோன்றுவித்து
கறைதங்கு வேற்றடங்கண் திருவைமார்பில்
கலந்தவன் தாளணைகிற்பீர் கழுநீர்கூடித்
துறைதங்குக மலத்துத்து யின்றுகைதைத்
தோடாரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி
சிறை வண்டுகளி பாடும் வயல் சூழ்காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே ".

கடைசிப் பாட்டில் திருமாலை அவனுடைய சிறப்புப் பெயர் களையெல்லாம் சொல்லி அவனுடைய திறமையை சந்தேகித்து விஞவிக்கும் எதிரிகளின் வாயை அடக்குவது போலும் தன் திறலை வெற்றியோடு நிலை நாட்டுவது போலும் அமைத்திருக் கிருர். இவ்விடத்தில் இந்நூல் சங்கத் தமிழில் ஆக்கியது என்னும் குறிப்பு வருகிறது. இச்சீர்காழியில் தான் ஆழ்வார் திருஞான சம்பந்தரோடு வாதத்தில் ஈடுபட்டார் என ஒரு பாரம்பரிய சொல் நிகழ்கிறது. ஆயினும் இது சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சியெனக் கொள்வதில் சில கஷ்டங்கள் உள்ளன. நான்காவது பாகத்தில் முதல்பத்தில் நாங்கை (திருநாங்கூர்) என்னும் தலத்தவர் அரசன் முழுப்படையோடு வந்தபோது அவனை முறியடித்ததாகக் கூறப்படுகிறது. இதைப் பற்றி பிறகு விவரமாக ஆராய்வோம். இதில் 3-ம் பத்தில் 8-வது பாட்டில் வேங்கடத்தில் இருக்கும் கடவுளை வேதத்தின் விளக்கு என்கிருர். இதில் 5-ம் பத்தில் 6-வது பாட்டில் நாங்கூர் வாசிகள் தென்னுட்டு அரசனுன பாண்டியனையும் வட அரசனையும் முதுகு காட்டும்படி ஓட வைத்தார்கள் எனக் கூறுகிருர். அதாவது பாண்டிய அரசனும் பல்லவனும் கூட்டாக சேர்ந்து, இந்த சமயத்தில் காவிரிக் கரையில் சாளுக்கியர் களோடு சண்டை போட்டதைக் குறிப்பிடுகிறது என்னலாம்.

" கொண்டையும் குறளும்புள்ளும் கேழலுமரியுமாவும்
அண்டமும் சுடரும் அல்லாவாற்றலு மாயவெந்தை
ஓண் டிறற்றென்னனேட வடவரசோட்டங்கண்ட
திண்டிறலாளர் நாங்கூர் திருமணிக் கூடத்தானே

—பெரிய திருமொழி IV 5, 6

7-வது பத்தில் முதல் பாட்டு நாங்கூர் மக்களைப் பற்றி பொதுவாக இம்மாதிரியே கூறுகிறார். 5-வது பாட்டில் திரும்பவும் வேங்கடத்தில் இருக்கும் மாலை மலை மேலுள்ள விளக்கு என்கிறார்.

IV பாகம் 9–வது பத்தில் 8-வது பாட்டில் திருமால் நான்கு யுகங்களிலும் கொள்ளும் வர்ணங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. V பாகம் மூன்றாவது பத்தில் திருவேங்கடத்திலுள்ள பெருமானை பாண்டவர்களுக்கு உதவி செய்த கிருஷ்ணன் எனக் கூறுகிறார். 5-வது பத்தில் முதல் பாட்டிலேயே வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வருகிறது; இப்பத்து ஸ்ரீ ரங்கத்தைப் பற்றி கூறுவதாயினும், அடுத்த பத்தில் வரும் வட மலையானைப் பற்றி சொல்லுவது வேங்கடத்தைப் பற்று கூறுவது எனக் கொள்ளல் வேண்டும். 8-வது பத்தில் ஸ்ரீரங்கத்தைப் பற்றிக் கூறும் பொழுது 9–வது பாட்டில் எம்பெருமான் தொண்டமானுக்கு திருமந்திரத்தை உரைத்ததைக் குறிப்பிடுகிறார்.

> **" துளங்கு நீண்முடியரசர் தம்குரிசில்**
> **தொண்டை மன்னவன் திண்டிறலொருவற்கு**
> **உளங்கொளன்பினோ டின்னருள் சுரந்து**
> **அங்கொரு நாழிகை யேழுடனிருப்ப**
> **வளங்கொள் மந்திரம் மற்றவர்க்கருளிச்**
> **செய்தவாறு அடியேனறிந்து உலகம்**
> **அளந்த பொன்னடியே யடைந்துய்ந்தேன்**
> **அணி பொழில் திருவரங்கத்தம்மானே "**
>
> —பெரிய திருமொழி V 8, 9.

இதில் வரும் தொண்டமான் சக்கரவர்த்திக்கு திருவேங்கடமுடையான் திருமந்திரத்தை ஓது வித்ததாகும். பத்தாவது பத்து 7–வது பாட்டில் நந்திபுரவிண்ணகரத்தை (நாதன் கோவில் — கும்பகோணத்திற்கருகில் இருக்கிறது)ப் பற்றிக் கூறுகிறார். இங்கு ஒரு நந்தி திருமாலுக்குச் சேவை செய்ததைக் கூறுகிறார். சரித்திர வாயிலாக இக்குறிப்பு பல்லவ அரசனான நந்திவர்மன் II என்பவனைப் பற்றியாகும். ஆறாவது பாகத்தில் ஆறாவது பத்து திருநறையூரைப் பற்றியதாகும்; இதில் ஒவ்வொரு பாட்டிலும் சோழ அரசன் கோசெங்கணைப் பற்றியும் அவன் சிவனை வழிபடுவதற்கு கட்டிய 70 கோவில்களைப் பற்றியும் கூறி இருக்கிறார். இச்சோழன் நாயன்மார்களில் ஒருவராகக் கருதப் படுகிறான். இவன் சிவனுடைய கிருபைக்காக இவ்வளவு செய்தும் கடைசியில் விஷ்ணுவுக்கும் இம்மாதிரியே செய்ய வேண்டும் எனத் தோன்றி அம்மாதிரியே விஷ்ணுவுக்கும் வழி படலானான். இவ்வரசன் மற்றைய இந்து

அரசர்கள் போல் இருமதஸ்தர்களுக்கும் நன்கொடையை நல்கினான் என நினைக்கலாம் போல் இருக்கிறது. 5—வது பாட்டில் இவ்வரசனை தென் தமிழ் தேசத்தவன் என்றும், வடநாட்டரசன் என்றும் கூறுகிறார். இதை எப்படிக் கொள்வது என்பது புரியவில்லை; ஆயின் வடநாடு என்பது பல்லவ நாட்டைக் கூறுவதாகக் கொள்ளலாம்.

VIII பாகத்தில் 3-வது பத்தில் முதல் பாட்டிலும் 7—வது பத்தில் 5—வது பாட்டிலும் வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வருகிறது. VII, 10, 4—ல் திருக்கோவலூர் பெருமானைப் போற்றி அவன் முதலாழ்வார்களுக்கு அருள் புரிந்ததைப் பாராட்டுகிறார். VIII 1—ல் கண்ணபுரத்திலிருக்கும் விஷ்ணுவை எட்டு புயங்கள் உள்ளவன் என்கிறார். அடுத்த பத்தில் 3—வது பாட்டில் வேங்கடத்தைப் பற்றி வெறும் குறிப்பு வருகிறது. IX 2, 5—ல் கொல்லி, கூடல் என்னும் சோழ பாண்டிய நாட்டு தலை நகரங்களைப் குறிப்பிடுகிறார். IX, 6, 1—ல் சிவன் விஷ்ணுவின் ஒரு பாகம் எனத் தீர்மானமாக வெளியிடுகிறார். IX, 7—4ல் வேங்கடத்தைப் பற்றி வெரும் குறிப்பு வருகிறது. 9-வது பாட்டில் ஜைன, புத்த மதங்களின் பொய்யான கொள்கைகளைத் தாக்குகிறார். IX, 8, 9-லும் அம்மாதிரி குறிப்பு வருகிறது. IX, 9, 9-ல் வேங்கடத்தைப் பற்றி சாதாரண குறிப்பு வருகிறது. IX, 10, 4-ல் விஷ்ணு தன் வலது மார்யில் எருதுமேல் ஏறுபவனும் மாளுசக்தி என்ற ஆயுதங்களைத் தரித்தவனுமான ஈசனுக்கு இடம் கொடுத்திருக்கிறார் என்றார்.

**"ஏறுமேறி யிலங்கு மொண் மழுப்பற்றும் ஈசர்க் கிசைந்து டம்பிலோர்**
**கூறுதான் கொடுத்தான் குலமா மகட் கினியான்**
**நாறு சண்பகம் மல்லிகை மலர்புல்கி இன்னிறவண்டு நல்நறும்**
**தேயல் வாய்மடுக்கும் திருக்கோட்டியூரானே"**
(IX, 10, 4)

X, 9, 4-ல் சிவன் விஷ்ணுவின் ஒருபாகம் என்கிறார்.

**மல்கிய தோளும் மானுரியதளும்**
**உடையவர் தமக்கு மோர் பாகம்**
**நல்கிய நலமோ நரகனைத் தொலைத்த**
**கரதலத்தமைதியின் கருத்தோ**
(X, 9, 4)

X, 1, 2-ல் வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வருகிறது. X, 6, 1-ல் கிருஷ்ணவதாரத்தைப் பற்றிச் சொல்லுகையில் விஷ்ணு லோகந்திற்கு நர நாராயண உருவம் கொண்டு தர்ம சாஸ்திரம்

அறிவித்தான் என்கிறார் ; இது பாஞ்சராத்திரத்தை உலகித்திற்கு கொடுத்ததைக் குறிக்கிறது.

" **எங்காணுமீ தோப்பதோர் மாயமுண்டோ**
**நரநாராயணனாய் உலகத்து அறநூல்**
**சிங்காமை விரித்தவனெம் பிரான்பெருமான்**
**அதுவன்றியுஞ் செஞ்சுடரும் நிலனும்**
**பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும் நெருக்கிப்**
**புகப்பொன்மிடறு அத்தனை போது**
**அங்காந்தவன் காண்மின் இன்று சூழ்ச்சியால்**
**அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவனே ".** (X, 6, 1)

XI, 5, 10-ல் வேங்கடத்தைப் பற்றி சாதாரணக் குறிப்பு வருகிறது. இதுவரை பெரிய திருமொழியை ஒருவாறு ஆராய்ந்தோம்.

**திருமங்கையாழ்வரின் இதரநூல்கள்**

இவருடைய இதர நூல்களில் ஒன்றான திருநெடும் தாண்டகம் என்றும் நூலில் இரண்டாவது பாகத்தில் விஷ்ணு அடையும் வர்ணங்களை விவரிக்கிறார். 9-வது பாட்டில் சிவன் விஷ்ணுவின் ஒருபாகம் என்கிறார் 16-வது பாட்டில் வேங்கடத்தைப் பற்றி குறிப்பு வருகிறது. சிறிய திருமடல் பெரிய திருமடல் ஒவ்வொன்றிலும் வேங்கடத்தைப் பற்றி ஒவ்வொரு குறிப்பு வருகிறது. பெரிய திருமடல் 122-வது குறளில் திருக்கோயிலூரில் எம்பிரான் முதலாழ்வார்களுக்குத் தந்த காட்சியை மிக்க அழகாக விவரிக்கிறார். 131-வது குறளில் கடவுளையே நான்கு வேதங்கள் எனவும், தென்பாண்டிய தேசத்துத் தமிழ் என்றும் வடநாட்டு மொழி என்றும் கூறுகிறார் இவைகளையெல்லாம் நோக்கின் இவ்வாழ்வார் முன்னாழ் வார்களைப் போல் அதே கருத்துக்களை வெகு நன்றாக உணர்ந்து அறிந்து வெளியிட்டிருக்கிறார். நமக்கு முக்கியமாக கவனிக்கப் பட வேண்டிய விஷயம் என்னவென்றால் தென்னிந்திய வைஷ்ணவக் கோயில்களைப் பற்றிப் பேசுகையில் பத்துப் பன்னிரண்டு இடங்களில் வேங்கடத்தைப் பற்றி சாதாரண மாய்க் குறிப்பதால் திருப்பதி ஒரு விஷ்ணுவின் கோவில் என்று கருதினார் எனச் சொல்லச் சந்தேகமில்லை. மேலும் சிவன் விஷ்ணுவின் ஒரு பாகம் என்பதைப் பல்வேறு இடங்களில் கூறுகிறார். இதில் முதலாழ்வார்கள் சொன்னதை இவர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஆகவே ஆழ்வார்கள் காலமாகிய கி.பி. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து (சங்ககாலம்) கடைசியாக எட்டாவது நூற்றாண்டு வரையில் ஒவ்வொரு ஆழ்வாரும் வேங்கடம் ஒரு விஷ்ணுவின் தலம் என்றே கருதினார்கள்.

## அத்தியாயம் 8

# பக்தி அக்காலத்தில் தலைமை இடம் பெற்றிருந்தது

### இலக்கியங்களில் வேங்கடம் விஷ்ணுவாலயம்

இதுவரை நாம் செய்த ஆராய்ச்சியிலிருந்து வைஷ்ணவ பரம்பரை ஒவ்வொரு இடத்தில் சில சந்தேகங்களைக் கிளப்புவதாயினும், ஒரேமுகமாக திருப்பதியில் இருக்கும் மூர்த்தி விஷ்ணுவே என்றுசொல்லிக் கொண்டிருக்கிறது. இது தவிர இலக்கிய வாயிலாக நோக்கின் இதற்கு மேலும் சான்றுகள் கிடைக்கின்றன. ஏற்கனவே சங்ககாலத்திலிருந்த மாமூலனார் திருப்பதியை வருடம் முழுவதும் அநேக உற்சவாதிகளுக்குப் பேர் போனது எனக் கூறியதை எடுத்துரைத்தோம். தொண்டமான் இளம் திரையன் காலத்தில் காஞ்சியிலும் உற்சவாதிகள் நடந்து கொண்டிருந்ததையும் எடுத்துரைத்தோம். ஆகவே அக்காலத்தில் விஷ்ணுவைத் தொழும் கோவில்கள் இருந்தன; மேலும் அக்காலத்தில் இப்பொழுது நடைபெறுவது போல் உற்சவங்கள் நடந்து கொண்டிருந்தன என்பது தெளிவாகிறது. அடுத்தபடியாக சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகள் (அவர் ஒரு பௌத்தமதஸ்தர்) திருப்பதியிலிருக்கும் கோவில் விஷ்ணுவின் கோவில் என்கிறார். தவிர, இவர் வைஷ்ணவ மதத்தினராய் இல்லாமல் இருந்தும் நான்கு வைஷ்ணவத் தலங்களை மிக மரியாதையுடன் கூறியிருக்கிறார். அவை திருவனந்தபுரம், திருமாலிருஞ்சோலை, ஸ்ரீரங்கம், திருப்பதியாகும். இவையுள், மலையாளத்தில் மாங்காடு என்னும் ஊரிலிருந்து வந்த ஒரு யாத்திரி வாயிலாகக் கூறப்படுகிறது என்னவென்றால், திருமாலிருஞ்சோலை, ஸ்ரீரங்கம், திருப்பதி என்னும் தலங்கள் மிகப் புனிதமானவை என்று. இந்த யாத்திரி தன் நாட்டை விட்டு தென்னிந்தியாவிலுள்ள முக்கிய தலங்களைத் தரிசிக்க யாத்திரையாக வந்த பொழுது இவ்வாறு கூறினான். இந்த சந்தர்பத்தில் இவர் திருப்பதியிலிருக்கும் கடவுளை மிக விரிவாகவும் அழகாகவும் விளக்கம்செய்வதிலிருந்து இந்த மூர்த்தி விஷ்ணுவினுடைய மூர்த்திதான் என்பதில் சந்தேகம் இல்லை. அடுத்ததாக இலக்கியத்தில் காணப்படும் குறிப்பு தெள்ளாறு நந்திவர்மன் எனப்படும் நந்திவர்மன் III ஆட்சியில் பெருந்தேவனார் என்னும் கவி பாடிய பாரத வெண்பாவில் ஆகும்.

**தேனோங்கு சோலைத் திருவேங்கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றும்-தானோங்கு
தென்னரங்கமென்றும் திருவத்தியூரென்றும்
சொன்னவர்க்குமுண்டோதுயர்**

—பாரத வெண்பா—பீஷ்மபர்வம் முதல் நாள் யுத்தம் 1—வது பாட்டு.

இவர் திருவேங்கடத்தை திருவத்தியூரென்னும் விஷ்ணு காஞ்சியோடு ஒப்பிடுவதாலும் பின்னையக்ஷேத்திரம் விஷ்ணுவுக்கான தலமாகையாலும் திருப்பதியும் விஷ்ணு ஸ்தலம் என்று சொல்லுகிறார். திருப்பதியிலுள்ள கல்வெட்டுகளில் முதல் முதலாக நமக்குத் தெரிவது தெள்ளாறு நந்திவர்மனுக்கு முன்னிருந்த தந்தி விக்கிரமவர்மனுடையது. ஆகவே கல்வெட்டு ஆரம்பமாவது முன்வரையில் அநேக நூற்றாண்டுகளாக வேங்கடத்திலுள்ள கோவில் விஷ்ணுவின் கோவில் எனப் போற்றப்பட்டு வந்துருக்கிறது.

**ஆழ்வார்கள் காலத்திய பொது விவரங்கள்**

நாம் இதுவரை திருப்பதி கோவிலின் வரலாற்றை அதன் ஆரம்ப காலம் முதல் கி.பி. 10-வது நூற்றாண்டு ஆரம்பம்வரை கவனித்தோம். முதலாக புராணங்கள் எல்லாம் இந்தப் புனித க்ஷேத்திரம் ஒரு ஸ்வயம்பு க்ஷேத்திரம் (தானாகவே உண்டானது), மனிதர்களால் உண்டாக்கப் பட்டது அல்ல என்பதை ஒரு மிக்கக் கூறுகின்றன. மேலும் இத்தலத்தை மனிதருள் முதல் முதலாகப் போற்றினவன் இக்கோவிலில் மிக்க பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டவனும் வேங்கடத்தைச் சுற்றியுள்ள நாட்டிற்கு அரசனுமான தொண்டமான் என்பவன். மேலும் நாம் அறிவது இவ்வரசன் வாழ்ந்து இத்தலத்துக்கு அரிய சேவைகள் செய்த காலம் கிருஸ்துவ சகாப்த ஆரம்பத்தில் அதாவது விக்கிரமாதித்யன் ஆரம்பித்த சம்வத் சகாப்தத்திற்கும் சாக என்னும் சகாப்த ஆரம்பத்திற்கும் நடுவில், அதாவது கி.மு 57-க்கும் கி.பி. 78—க்கும் நடுவில் என்னலாம் நாம் இந்த தேதியைச். சரியாக எடுத்துக் கொண்டாலும் இக்கோவில் மனிதர்களால் தொழ ஆரம்பித்தது கி.பி. முதல் நூற்றாண்டில் எனச் சொல்லலாம். இக்காலத்திலிருந்து நாம் முழுவதாக 8 நூற்றாண்டுகள் காலம் இக்கோயிலின் வரலாற்றை இலக்கிய ஆதாரங்கள் மூலம் கவனித்தோம். இந்த காலம் தென்னிந்தியாவில் சரித்திர ரீதியாக மூவேந்தர்களுடைய காலமும் அதற்குச் சரியான சங்கத் தமிழ் காலமும் அதன் பிறகு வந்த பிராகிருத் முறையைக் கடை பிடித்த முதல் பல்லவ ராஜாக்கள்

காலமுமாகும். இதன் பிறகு வந்த முதல் பல்லவராஜாக்கள் சம்ஸ்கிருத முறையைக் கடைபிடித்தவர்கள் இவர்கள் காலம் கி. பி. 4-வது நூற்றாண்டின் முதலிலிருந்து 6-வது நூற்றாண்டின் பின்பகுதி வரையில். 6—வது நூற்றாண்டின் மத்தியில் நாம் காஞ்சியில் ஆண்ட பெரும் பல்லவர்கள் காலத்திற்கு வருகிறோம். இந்த வம்சம் 6—வது நூற்றாண்டு நடுவிலிருந்து அபராஜித பல்லவன் காலம் வரையில் ஆண்டது. அப்பல்லவன் 9—வது நூற்றாண்டின் இறுதியில் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு பல்லவ அரசாட்சியும் அத்துடன் முடிவடைந்தது. மேற்கூறிய இந்த காலத்தில் கல்வெட்டுகள் இதர சாஸனங்கள் எல்லாம் மிகக்குறைந்தவை; ஆகவே இதற்குப் பிறகான காலங்களுக்கு நமக்கு கிடைக்கும் சரித்திர அத்தாட்சிகள் இக்காலத்திற்குக் கிடைக்கவில்லை. இப்படியாக கல்வெட்டுகள் மூலம் எழுதி வைப்பதற்கு தெரியாமலில்லை; அக்காலத்தில் இம் மாதிரி எழுதி வைப்பது பெருவாரியாக நடைமுறைக்கு வரவில்லை. இருப்பினும் விஷ்ணு நாராயணனுக்காக கட்டப்பட்ட ஒரு விஷ்ணு கோவிலில் சாருதேவி என்னும் முந்நாள் பல்லவ ராணியால் அக்கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பிராகிருதலிபியில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.* இம்மாதிரியே விஷ்ணு கோவில்களுக்கு சம்ஸ்கிருதலிபியை கையாண்ட முதல் பல்லவர்களால் கொடுக்கப்பட்ட தானங்களைப் பற்றியும் குறிப்புகள் இருக்கின்றன. இச்சம்ஸ்கிருதலிபியைக் கையாண்ட பல்லவ வம்சத்தை ஸ்தாபித்த சிம்ம விஷ்ணு என்பவன் பின்வரும் கல்வெட்டுக்களால் வைஷ்ணவன் என்றும் விஷ்ணுவைத் தொழுதவன் என்றும் கூறப்படுகிறது; மேலும் இவனுடைய வம்ஸத்தில் தோன்றிய பின்னவர்கள் விஷ்ணு கோவில்களுக்கு அனேக தான தர்மங்கள் செய்தும் விஷ்ணு வழிபாட்டு விருத்தி செய்வதுமான காரியங்களில் ஈடுபட்டார்கள்; அவர்களுள் முக்கியமானவன் சிறந்த நந்திவர்மன் II, பல்லவமல்ல. இவனுடைய மகன் நந்திவர்மனுடைய கல்வெட்டுகள் திருவல்லிக்கேணியிலிருக்கும் விஷ்ணு கோவிலில் இருக்கின்றன.** இருப்பினும் நாம் முன்னமே பார்த்தபடி திருப்பதி கோவில் இவர் காலத்துக்கு முன்னமேயே மிக பிரசித்தியடைந்து இருந்தும் இதற்கு முன்னுண்ட ஒரு அரசனும் திருப்பதியில் ஒரு கல்வெட்டாவது வைத்து ஆதரித்தான் என நமக்கு ஆதாரம் கிடைக்கவில்லை. பல்லவ ராஜ்யத்துக்குள்ளே தொண்ட மண்டலத்தின் ஒரு முக்கியமான பகுதியாய் இருந்தும் இத்தலத்தில் பல்லவர்களின்

* Epigraphica Indica Vol. VIII 143

** Epigraphica Indica VIII 291 (No. 29)

கல்வெட்டுகள் இல்லாதிருப்பது வியக்கத் தக்கது. இது, அக் காலத்தில் கோவில்களுக்கு தானங்கள் செய்து அவைகளை கல்வெட்டுகள் மூலம் எழுதி வைப்பது என்பது வழக்கத்திற்கு வரவில்லை. இந்த மாதிரி கல்வெட்டுகள் சோழ அரசன் ராஜ ராஜன் காலத்திலிருந்து தான் ஆரம்பித்தது. அதற்கு முன் கல்வெட்டுகள் மிகச்சிலவே; அவையும் சில சில சம்பவங்களை சம்பந்தமில்லாமல் கூறும். மேலும் அக்காலத்தில் வேங்கடம் அடைவதற்கு சரியான வழி இல்லாததால் மற்றைய இடங்களைப் போல் அவ்வளவு பிரசித்திடையாததாக இருந்தது இதனுல் கல்வெட்டுகள் இல்லை என்ற காரணத்தைக் கொண்டு அங்கு விஷ்ணு கோவில் இல்லை எனவோ கோவில் வழிபாடு நடக்கவில்லை எனவோ கொள்ளல் தகுதியாகாது.

**பழந்தமிழ் கடவுள்களுள் விஷ்ணு :**

தமிழ் இலக்கணங்களுள் பழைமையானதும் முதன்மையான துமான தொல்காப்பியத்தில் பொருள் அதிகாரம் அகற்றிணை 5 சூத்திரத்தில் தமிழ்நாட்டின் கடவுள்கள் நான்கு என வகுத்தார்

**மாயோன்மேய காடுறையலகமும்**
**சேயோன்மேய மைவரையுலகமும்**
**வேந்தன்மேய தீம்புனலுலகமும்**
**வருணன்மேய மெருமணலுலகமும்**
**முல்லைகுறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுவுமே**

—தொல் காப்பியம் பொருள் அகம் 5

இதில் நாட்டிலுள்ள பூமியை பொதுவாகப் பிரிக்கிறுர். பொருள் என்பது (சம்ஸ்கிருதம் அர்த்தம்) உலகத்தில் உயிர்களுக்கு ஒவ்வொரு அல்லது முக்கியமாக ஏதாவது ஒரு பொருளைப்பற்றி விளக்கி அவைகள் பொதுவாக வாழ்வதற்கு வேண்டிய நடை முறைகளை வகுக்குகிறது. அதில் முதல் முதலாக நிலத்தை நான்கு விதமாகபிரிக்கிறது. காட்டு நிலத்தைமாயோன் என்னும் கிருஷ்ண விஷ்ணுவால் போற்றப்படுகிறது; குன்று மலைகளை சேயோன் என்னும் குமரன் அல்லது சுப்பிரமணியன் (முருகன்) ஆல் போற்றப்படுகிறது; நன்கு நீரால் பொசியப்பட்ட உழவு நிலத்தை இந்திரனுல் போற்றப்படுகிறது; கடலோரத்தி லிருக்கும் மணல் வெளிப்பிரதேசம் வருணனுல் போற்றப் படுகிறது. இப்பெயர்களிலிருந்து எந்தக் கடவுளை அறிவிக்கிறுர் என்பது சந்தேகமில்லாமல் தெரிகிறது. இதே போல் யஜுர்

வேதத்தில் * விஷ்ணுவுக்கு உகந்த நிலங்கள் என அனேக இடங்களைக் குறித்து பொதுவாக விஷ்ணு மலைகளில் ஆட்சி புரிகிறவர் எனக் கூறுகிறது. ஆனால் தமிழ்பெரியார்கள் நிலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஐந்தாவது பாலை என்னும் நிலத்தையும் வரையறுத்தார்கள்; இப்பாலை நிலம் தனிப்பிரிவு எனக் கருதாமல் மற்றைய நிலங்களே கால வெப்ப வேறு பாடுகளால் மாறப்பட்டவை எனக் கருதினார்கள். ஆகவே விஷ்ணு வென்னும் தெய்வம் ஆதி காலத்திலிருந்தே தொல் காப்பிய நூற்காலத்திலிருந்தே தமிழர்களுக்கு தெரிந் திருக்கிறது.

இக்குறிப்புகள் எல்லாம் கேவலம் கடவுள்களின் பெயர்கள் மாத்திரம் இங்குச் சொன்னவை இத்தெய்வங்கள் எந்த எந்த நிலங்களுக்கு வழிபாடு படுபவர்கள் என்று. அவர்களைப்பற்றி வேறு ஒரு தகவல்களும் கொடுக்கவில்லை. புறநானூறு 56 பாட்டில் நமக்கு இன்னொரு விதமான தகவல் கிடைக்கிறது இந்நூல் ஒரு பாண்டியனைப்பற்றி நக்கீரர் பாடி அதில் அப்பாண்டியன் ஒரு பூங்காவில் இறந்த விதத்தைக் கூறுகிறது இப்புலவர் இம்மன்னனை வெவ்வேறு குணங்களோடு கூடிய நான்கு முக்கிய தேவதைகளுக்கு ஈடாக ஒப்பிடுகிறார்; அந்நான்கு தேவதைகளும் சிவன், பலபத்ரன் அல்லது பலராமன் கிருஷ்ண—விஷ்ணு, குமார சுப்ரமணியன் என்பவர்.

**ஏற்று வலனுயரிய வெரி மருளவிர்சடை**
**மாற்றருங்கணிச்சி மணிமிடற்றோனும்,**
**கடல் வளர் புரிவளை புரையுமேனி**
**யடல் வெந்நாஞ்சிற் படைக்கொடியோனு,**
**மண்ணுறு திருமணி புரையு மேனி**
**விண்ணுயர் புட்கொடிவிறல் வெய்யோனு,**
**மணி மயிலுயரிய மாறுவென்றிப்**
**பிணிமிகவூர்தியொண் செய்யோனு. மென**
**ஞாயங் காக்குங் கால முன்பிற்**
**றோவா நல் விசை நாவ்வர்** —புறநானூறு 56

இம்மன்னன் காலவறைக் கடங்கா இத்தேவதைகள் ஒவ்வொரு வருடைய குணங்களையும் தன்னிடம் கொண்டவன் என்கிறார். கோபத்தில் முதல் தேவதையான சிவ (காலதேவன் அல்லது அழிக்கும் கடவுளுக்குச் சமமானவன்; இரண்டாவது தேவ தைக்குச் சமமாக பல முள்ளவன்; மூன்றாவது தேவதைக்குச்

* கிருஷ்ண யஜுர் சம்ஹிதை காண்டம் III பிரச்னே 4

சமமாக புகழ் பெற்றவன்; நான்காவது தேவதைக்குச் சமமாக காரிய சித்தி செய்வதில் சமர்த்தன் எனப் புகழ்கிறார். இவ்வுவமைகள் கவிகளுடைய கல்பனசக்தியால் ஆனதாயினும் இத்தேவதைகளைப் பற்றிய வர்ணனைகள் முன் கூறிய இலக்கியங் களில் வரும் தேவதைகளைப் போற்றும் வர்ணனைப் போலவே உள்ளன, இதனால் அக்காலத்தில் தமிழ்நாட்டில் இத்தேவதைகள் தொழுவதற்கு அருகதையானவர்கள் எனக் கருதப்பட்டது. முதலாவதான தேவதை எருதை வாகனமாகக் கொண்டு, சடை முடியும், சூலமும், நீலகண்டமும் உடையன் என வர்ணிக்கப் படுகிறது; ஆகவே இங்கு சிவனைக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது கடலில் இருந்து எடுத்த சங்கத்தின் வண்ணத்தை யுடையவனும் சண்டைக்கு உரித்தான ஏரை உடையவனும் பனைமரத்தைக் கொடியில் உள்ளவனுமான கிருஷ்ணனது மூத்தவன் பலராமனைக் குறிக்கிறது. மூன்றாவது நன்கு சுத்தப் படுத்தப்பட்ட நீலக்கல்லின் நிறத்தையுடையவனும், கருடனைக் கொடியில் கொண்டவனும் மிகவும் தீரமுள்ளவனுமான கிருஷ்ணனைக் குறிக்கிறது. நான்காவது மயிலைக் கொடி யிலுள்ளவனும், எப்பொழுதும் ஜெயம் கொண்டவனும் மயிலை வாகனமாக உடையவனும் சிகப்பு நிறத்தையுடையவனுமான சுப்பிரமணியனைக் குறிக்கிறது. ஆகவே இப்பாட்டு எழுதிய காலத்தில் கிருஷ்ண விஷ்ணுவும், பலராமனும் உலகத்தை ஆளும் தேவதைகள் எனத்தெள்ளி அறிந்திருந்தார்கள்; அம்மாதிரியே மற்றைய இருதேவதைகளைப் பற்றியும். இங்கு கிருஷ்ண விஷ்ணுவைப் பற்றியும் பலராமனைப் பற்றியும் கூறியிருப்பது, தமிழ் இலக்கியங்களில் மற்றைய இடங்களில் கூறிய மாதிரியே யாகவும், கிருஸ்து பிறப்பதற்கு முன் சில நூற்றாண்டுகளில் தக்ஷிணத்திலும் மத்திய இந்தியாவிலும் காணப்பட்ட கல் வெட்டுகளில் கூறிய மாதிரியேயாகவும் இருக்கிறது. பாஞ் சராத்திர சித்தாந்தப்படி இவ்விரு விஷ்ணுவின் அவதாரங்கள் விஷ்ணுவின் நான்கு வியூகங்களில் ஒன்று ஆகும். இதுவே பக்தி மார்க்கத்திற்கு அடிகோல் ஆகும். நக்கீரருடைய குறிப்புகள் தேவதைகளைப் பற்றி பொதுவாகக் குறிப்பிட்டதே ஒழிய அத் தேவதைகள் இருக்கும் இடங்களைப் பற்றியோ வழிபாடு முறைகளைப் பற்றியோ சொல்லவில்லை.

### கோவில்களில் உள்ள தேவதைகளைப் பற்றிய குறிப்புகளும் அங்கு நடக்கும் உற்சவாதிகளும்

சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில் வரும் குறிப்புகள் கோயிலில் தொழப்படும் இத்தேவதைகளைப் பற்றி இன்னும்

விரிவாக விளக்கம் கொடுக்கிறது. சோழ நாட்டின் தலை நகரான காவிரிப்பூம்பட்டினத்திலும் பாண்டிய நாட்டின் தலை நகரான மதுரைமாநகரிலும் முக்கியமாக இந்நான்கு கடவுள் களுக்கும் இன்னும் சில சில்லரை தேவதைகளுக்கும் கோவில்கள் கட்டப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாவது பாகத்தில் 169-172 வரிகளில் இந்திரவிழாவைப் பற்றிக் கூறு கையில் இந்த நான்கு தேவதைகளுக்கும் தனிக்கோவில்கள் இருந்தனவென்றும் அங்கு தனி உற்சவாதிகள் நடந்தன வென்றும் கூறுகிறுர்.

**பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும்**
**மறுமுகச் செவ்வேள ணிதிகழ் கோயிலும்**
**வாள் வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீலமேனி நெடியோன் கோயிலும்**
**மாலைவெண்குடை மன்னவன் கோயிலும்**

—சிலப்பதிகாரம் V 179, 188

முதலாவது பிறப்பு என்பது இல்லாத சிவனுடைய கோவிலைக் குறிக்கிறது. அடுத்தது செந்நிறமும் ஆறுமுகமும் உள்ள குமார சுப்பிரமணியனுடைய கோவிலைக் குறிக்கிறது. அடுத்தது வெண்ணிறத்தோன், சங்கின் நிறமுடையவனுன பல தேவனுடைய கோவிலைக் குறிக்கும். அடுத்தது நீல நிறமுடைய பெரிய கிருஷ்ண விஷ்ணுவைக் குறிக்கும். இவர்கள் கோயில் கொண்டிருக்கிறுர்கள் என்றும் ஆகவே தொழுவதற்கும் உற்ச வாதிகள் நடத்துவதற்கும் அருகதை உடையவர்கள் எனக் கூறப்படுகிறது. மறுபடியும் 14 பாகம் 7–10 வரியில் கூறப்படுவது.

**நுதல் வழி நாட்டத் திறையோன் கோயிலும்**
**மூவணச் சேவலுயர்த் தோனியமும்**
**வேழி வல்லுயர்த்த வெள்ளை நகரமும்**
**கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்**

—சிலப்பதிகாரம் XIV 7, 10

இங்கும் மதுரையில் பொழுது புலரும்போது இக்கோயில் களில் மணிகள் அடிக்கும் சப்தம் கேட்கிறது. முதலாவது பெரியவனுன இக்கண்ணனுடைய கோயில். இரண்டாவது பெரியவனுன கருடக் கொடியோனுடைய கோயில். மூன்றுவது கையில் கலப்பையை வைத்திருக்கும் வெள்ளை நிறமுடையவனது கோவில். கடைசியாக சேவற்கொடி யோனுடைய கோவில். அந்நாட்களிலும் இக்காலத்தைப் போலவே இக்கோவில்களில்

நித்திய வழிபாடுகளும் உற்சவங்களும் நடந்தன எனத் தெரிகிறது. ஆகவே அந்நாளில் தொண்டமான் என்னும் அரசன் வேங்கடத்தில் விஷ்ணுவின் மூர்த்தியைக் கண்டெடுத்து அம் மூர்த்திக்குக் கோவிலும் கட்டி வழிபாடுகளும் செய்து வந்தான் எனில் இதில் வியக்கத் தக்கது ஒன்றும் இல்லை.

**சங்க காலத்தில் பாஞ்சராத்திரமும் விஷ்ணுவைக் குறித்த பக்தி மார்க்கமும் பூர்ணமாக இருந்தது :**

சிலப்பதிகாரத்தில் திருப்பதி கோவிலைப் பற்றி வரும் குறிப்பை முன்பே கவனித்தோம்; அதில் இளங்கோ அடிகள் திருப்பதியில் இருக்கும் மூர்த்தியைப் பற்றி மிக அழகாக விளக்கியிருக்கிறார். இந்தகுறிப்பு மலையாள தேசத்திலிருந்து வந்த ஒரு யாத்திரி தென்னிந்தியாவிலுள்ள மிக்க புனிதமான விஷ்ணுத் தலங்களைத் தரிசிக்கப் போகும்போது திருமாலிருஞ் சோலை, ஸ்ரீரங்கம், திருப்பதி ஆகிய தலங்களைக் குறிப்பிடுகிறார். இந்த யாத்திரி தான் மாங்காடு என்னும் கிராமத்திலிருந்து வந்த தாகவும், பத்மநாபஸ்வாமியின் பக்தனாய் இருப்பவனாகவும் சொல்லி மேற்கூறிய தலங்களை தரிசிக்கமிக்க ஆவலாய் இருப்ப தால் இந்த யாத்திரையை மேற்கொண்டதாகவும் கூறுகிறான். இந்த வார்த்தையும் அவன் அதைச் சொன்ன விதமும் கவனித் தால் அக்காலத்தில் இத்தலங்கள் விஷ்ணுத்தலங்களாக மிக்க பிரசித்தியடைந்து அத்தலங்களைத் தரிசிக்க வெகு தொலை விலிருந்து பக்த ஜனங்கள் யாத்திரையாக வந்து தரிசனம் செய்து தங்கள் விரதங்களை முடித்துக் கொண்டார்கள் எனத் தெரிய வருகிறது. இச்சிலப்பதிகாரத்தின் காலம் சில இடங்களில் சந்தேகம் உண்டாக்கினாலும் பொதுவாக சங்க காலத்துக்குச் சமமான காலத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமிருக்கிறது. இந்நூலில் திருப்பதியைப் பற்றி நேர் முகமாக குறிப்பு இருக்கிறது; ஆயின் இன்னொரு பெரும் காப்பியமான மணிமேகலையில் கிருஷ்ண விஷ்ணு, பலதேவர் இவர்களைத் தொழுவதைப் பற்றி பல இடங்களில் குறிப்புகள் இருக்கின்றன. இக்குறிப்புகளையும், பரிபாடலில் உள்ள விஷ்ணு வைக் குறித்துள்ள ஐந்து பாடல்களையும் சேர்த்துக் கவனித்தால் அக்காலத்தில் கிருஷ்ண விஷ்ணு, பலதேவர் ஆகியவர்களைத் தொழுவது சாதரணமாக எங்கும் காணப்பட்டதாயும், தமிழர்கள் பொதுவாக பாஞ்சராத்திர ஆகமமுறைப்படி விஷ்ணு வாசுதேவரை வழிபாடு செய்வது, அவ்வாகமத்தில் சொன்ன நான்கு வியூகங்கள், அவற்றில் இவ்விரண்டும் முதல் இரண்டு

வியூகங்கள், மற்றைய வியூகங்கள் பிரத்யும்னன், அனிருத்தன் என்பன, என்ற விஷயங்களை தெரிந்தவர்களாயிருந்தார்கள்.

**செங்கட் காரி கருங்கண் வெள்ளை**
**பொன்கண் பச்சை பைங்கண்மால்**

—பரிபாடல் III—11—82-83

(இக்குறள் பாஞ்சராத்திரத்தை சுருக்கமாக உரைக்கிறது)

இப்பாக்களில் திருமாலிருஞ் சோலையிலிருக்கும் விஷ்ணுவின் கோவிலைப் பற்றி குறிப்பு இருப்பது திருப்தியளிக்கிறது. ஆகவே இதனுல் சங்கக் காலம் என்னும் கி.பி. முதல் மூன்ருண்டுகளில் விஷ்ணுவை வழிபடுதல் என்பது மக்களிடையே நடைமுறையில் வந்து விட்டது. விஷ்ணுவின் கோவில்கள் நன்கு தெரிந்திருந்தன; தமிழ் நாட்டு தலைநகரங்களில் விஷ்ணுவை ஆராதித்தல் ஒரு அம்சமாக இருந்தது. இக்கோயில்களில் விஷ்ணுவின் ஆகமப் பெயர்களால் குறிக்கப்படும் வாசுதேவன், சங்கர்ஷணன் என்னும் கிருஷ்ண விஷ்ணு, பல தேவ விக்ரகங்கள் தொழப்பட்டு வந்தன. அது மாத்திரமேயன்றி பரிபாடலில் வரும் குறிப்புகளால் பாஞ்சாரத்திரத்தின் முக்கிய அம்சங்கள் தமிழ் நாட்டில் நன்கு அறியப்பட்ட தோடல்லாமல் காரியாம்சத்திலும் போற்றப்பட்டு வந்தன. ஆகவே பக்தி—விஷ்ணு பக்தியை இங்கு குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் நன்கு விருத்தியாக்கப் பட்டு இந்நாட்டில் நடைமுறையில் கையாளப் பட்டது.

முன்னமே ஆழ்வார்கள் காலத்தில்—அதாவது கி.பி. 3—வது முதல் 9—வது நூற்ருண்டுவரை பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட வைஷ்ணவ சமயம் நன்கு போற்றப்பட்டு மிக முக்கியத்தை அடைந்தது என்பதை குறிப்பிட்டோம் இக்காலத்தின் கடையில் பாஞ்சாரத்திர ரீதியில் விஷ்ணுவை ஆராதிப்பது பக்தி மார்க்கத்தின் ஒரு முக்கிய வழியாக அமைந்திருந்தது. இச்சமயத்தில் தான் நமக்கு வேங்கடத்தைப் பற்றி கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இதற்கு முன் கல்வெட்டுகள் பொதுவாக கோயில்களைப் பற்றி இதற்கு முந்தைய நூற்ருண்டுகளில் தெரியாமல் இல்லை. ஆனுல் திருப்பதியைப் பற்றி அக்கல்வெட்டுகள் இதற்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் மேற்கூறிய காரணங்களால் வேங்கடத்தில் இதற்கு முன் கோயில் இல்லை என வாதிப்பது அவநம்பிக்கையின் சிகரம் ஆகும்.

அத்தியாயம் 9

# தொண்டை மண்டலத்தின் வரலாறு

**தொண்டை மண்டலம், அதன் பழைய வரலாறு :**

கல்வெட்டுகள் தோன்ற ஆரம்பித்த காலத்தில் வேங்கடம் என்பது திருவேங்கடக்கோட்டம் அல்லதுதொண்டை மண்டலத்தைச் சேர்ந்தது என பொதுவாகக் கூறப்படுகிறது. தொண்டை மண்டலம் என்பது தொண்டையர் என்னும் ஜனங்களுடைய நாடு என்ருவது தொண்டைமான் அரசனுடைய ஆட்சியில் உட்பட்ட நாடு என்ருவது கொள்ளலாம். தமிழ்ப் பெயர்கள் உண்டான விதத்தை கவனித்தால் தொண்டமான் தொண்டையர்களுடைய சிற்றரசன் எனவே கொள்ள வேண்டும். ஆகவே இந்நாட்டுக்குப் பெயர் வந்தது அந்நாட்டு மக்களின் பொதுப் பெயரால் ஆனது எனக் கொள்ளலாம். தமிழ் இலக்கியங்களில் தொண்டை மண்டலம் என்ற நாட்டை **அருவா நாடு** எனக் கூறுவர் ; அந்நாட்டுக்கு வடக்கிலுள்ள நாட்டை (தொண்டை மண்டலத்திற்கு கீழ்படிந்ததும் அத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான நாட்டை) அருவா வ்டதலை அதாவது வட அருவா என்பர். இவ்விரு நாடுகளையும் ஒன்ருகச் சேர்த்துப் பார்த்தால் இதில் உள்ள மக்களை அருவாளர் (அதாவது அருவா + ஆளர்) எனக் கூறப்படுவர் (அதாவ்து அருவ்ா நாட்டு மக்கள்). ஆகவே் தொண்டை மண்டலத்திலுள்ள மக்கள் (இதில் வேங்கடக் கோட்டமும் அடங்கியது) ஒரு தனிப்பட்ட ஜாதியர் என்றும் அந்நாட்டின் பெயர் அம்மக்களின் பெயரால் வந்தது எனவும் கொள்ளலாம். பட்டினப் பாலையில் சோழ நாட்டுப் பேரரசன் கரிகாலனைப் புகழ்கையில் அம்மன்னனிடமிருந்து அருவ்ாளர் மக்கள் உத்தரவு பெற்ருர்கள் என்ருல் அவன் அம்மக்களை போரில் வென்று அந்நாட்டைத் தனதாக்கிக் கொண்டான் என்று அர்த்தம் ; அதாவ்து தொண்டை மண்டலம், சோழ மன்னன் கரிகாலன் காலத்தில் அவன் ஆட்சியின் கீழ் வந்தது. அந்நாடு சோழ நாட்டுத் தலை நகரத்திற்கு தூரத்திலிருந்ததால் மத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற எப்பொழுதும் முயன்று கொண்டு இருந்தது. ஆகவே கரிகாலனுக்கு இரண்டு தலைமுறைக்கு அப்புறம் சோழ நாட்டு அதிகாரம் வலுக்குறைய ஆரம்பித்தபொழுது தொண்டை மண்டலம் சோழ நாட்டிலிருந்து விடுதலை பெற்று பழையபடி

தனி அரசனுல் ஆளப்பட்டு வந்தது. நமக்கு சரித்திர வாயிலாக நிகழ்ச்சிக் குறிப்புகள் கிடைக்கும் மிகப் பண்டைய நாட்களி லிருந்து இந்நாடு 24 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு கோட்டம் என வகுக்கப்பட்டு இருந்தது; ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு கோட்டை கட்டப்பட்டு அங்கிருந்து ஆளுநர்கள் ஒரு மாதிரியான இராணுவ ஆட்சியோடு ஆண்டு வந்தார்கள்; மேலும் எதிரிகள் தோன்றிய காலத்தில் மக்கள் இக்கோட்டைக்குள் ஒதுங்கிக் கொண்டார்கள். 24 கோட் டைகள் இந்நாட்டில் இருந்ததாகவும் ஒவ்வொரு கோட் டைக்கும் ஒரு குறுமன்னன் இருந்ததாகவும் தெரிகிறது. இவை களுள் திருவேங்கடக் கோட்டம் என்பது ஒரு பிரிவு ஆகும். சாதாரணமாக இப்பிரிவுகள் எல்லாம் ஒரு மாதிரியான மத்திய ஆட்சியின் கீழ் அடங்கி இருந்தது. சரித்திர நிகழ்ச்சிகளைப்பற்றி நமக்குத் தெரிகின்ற காலத்தில் இம்மத்திய ஆட்சி காஞ்சியில் இருந்தது; ஆகவே காஞ்சி தொண்டைமண்டலத்தின் தலை நகரம் எனக்கொள்ளில் மிகையில்லை. ஆயினும் பாரம் பர்யமாக வந்த சில தகவல்களிலிருந்து சிலகாலங்களில் காஞ்சி தலைநகர மாயில்லாமல் இருந்தது. அக்காலங்களில் மதில்களால் சூழப் பட்ட புழல் என்னும் நகரம் தலை நகரமாயிருந்தது. இதுதான் தற்காலத்தில் ரெட்ஹில்ஸ் அல்லது புழலேரி எனப்படுவது. இது உண்மையோ அல்லவோ; ஆயினும் காஞ்சி மாநகரம் கி.மு. 2–வது நூற்ருண்டில் சமஸ்கிருத இலக்கண ஆசிரியர் பாதஞ் சலி இருந்த காலத்திலேயே மிகப் பிரசித்த பெற்ற நகரமாய் இருந்தது எனத் தெரிய வருகிறது. சோழர்கள் காலத்திலும் இப்பிரிவில் காஞ்சி தலைநிமிர்ந்து விளங்கா நின்றது; இதற்குப் பிறகும் இப்பிரதேசத்திற்கு காஞ்சி ஒரு சிகரம் வைத்த மாதிரி இருந்தது. ஆகவே தொண்டை மண்டலத்திற்கு காஞ்சி மிக முக்கிய நகரமாய் அமைந்தது மல்லாமல் காஞ்சியும் தொண்டை மண்டலமும் ஒன்றையொன்று மாற்றிச் சொல்லும் பெயர் வாய்ந்ததாய் இருந்தன.

**திருவேங்கடக் கோட்டம் :—பழைய காலத்திலிருந்தே தொண்ட மான் ஆட்சியிலிருந்தது :**

திருவேங்கடமலையால் புகழடைந்தும் அப்பெயரை அடிப் படையாகக் கொண்டதுமான திருவேங்கடக் கோட்டம் நான்கு பிரிவுகளாககப் பிரிக்கப்பட்டன. சித்தூர், சந்திரகிரி, திருச் சானூர், காளஹஸ்தி என்பன. இதனுல் இக்கோட்டம் எவ்வளவு விரிவுற்றது எனத் தெரிகிறது; இக்கோட்டம் தொண்டை மண்டலத்தின் மிகப் பழைய பிரிவு எனத் தெரிய

வருகிறது. முதலில் நிலத்தைப் பிரிவுகளாக்கின பொழுது ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு கோட்டை சிறப்பாய் அமைந் திருந்தது. இந்நாட்டுக் குறுமனன்ரை ராஜா என அழைப்பது வழக்கம்; ஆயினும் பிற்காலத்திய தமிழ் இலக்கியத்தில் இச்சிற்றரசர்களை குறுநில மன்னர் எனவும் முடிசூட்டு மூவேந்தர்களை மன்னர்கள் அல்லது ராஜாக்கள் எனவும் அழைப்பது மரபு ஆயிற்று. ஆகவே இச்சிற்றரசர்கள் தொண்டை மண்டலத்தின் ஓரோர் பாகங்களை அரசாண் டார்கள் என்பதில் வியப்பில்லை. முன்னமே, திருப்பதியி லிருக்கும் மூர்த்தியை நாராயண வனத்தின் சிற்றரசனான தொண்டைமான் நிலத்திலிருந்து தோண்டி யெடுத்து அதை ஒரு கோயிலில் பிரதிஷ்டை செய்தான் எனக்கண்டோம். அவனே அம்மூர்த்திக்கு தினசரி வழிபாடுகள் செய்தான் எனத் தெரிகிறது. ஆகவே புராணத்தில் வரும் கதை ஓரளவு வரலாற்றைத் தழுவியதாக இருக்க வேண்டும். ஆயின் புராணத்தில் சொல்லும் சம்பவங்களை நோக்கின் இக்கோவில் கி. மு. முதல் நூற்றூண்டிலோ கி. பி. முதல் நூற்றூண்டிலோ கட்டப் பட்டிருக்க வேண்டும். இதை நாம் சந்தேகிக்கவும் வேண்டாம்; ஏனெனில் அக்காலத்தில் நிலத்தை இம்மாதிரி பிரித்தார்கள்; தவிர கோவில் நிர்வாகமும் சரித்திர நாட்களில் நடந்து வந்தது. ஆகவே இக்கோவில் கிருஸ்துவ சகாப்த ஆரம் பத்தில் தொண்டைமான் என்னும் சிற்றரசனுல் கட்டப் பட்டது எனத்தெரிகிறது.

### தொண்டைமான்களுடைய பூர்வீக சரித்திரம், தொண்டைமான்களும் பல்லவர்களும்

இப்பிராந்தியத்தில் ராஜ்ய மாறுதல்கள் பின்வருமாறு நடந்திருக்க வேண்டும். இந்நாட்டவர்கள் சாதரணமாக நாகரீக மற்றவர்கள். இவர்களுடைய சிற்றரசர்கள் ஒவ்வொரு வரும் ஒரு கோட்டையை உரித்தாக்கி அங்கிருந்து ஆண்டு வந்தனர். நாளடைவில் இச்சிற்றரசர்கள் ஓர் மத்திய ஆட்சி யின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அம்மத்திய ஆட்சி காஞ்சி யிலிருந்து நடத்தப்பட்டது. சங்க இலக்கியங்களில் இரண்டு திரையன்களைப்பற்றி நமக்குத் தெரிகிறது. மூத்ததிரையன் வடக்கில் பவத்திரி, ரெட்டி பேலம் (கூடுர் தாலூகாவில்) ஆகிய இடங்களிலும் இளையவனுன இளந்திரையன் காஞ்சியிலும் அரசாண்டார்கள். இம்மாதிரி இம்மாநிலம் முழுவதும் காஞ்சியின் ஆட்சிக்கு உட்படக் கொண்டு வந்தது சோழர் களுடைய வெற்றிகளிஞலாவது அல்லது அதற்கு முன்னமே

யாவது நடந்திருக்கவேண்டும். காஞ்சியில் முன்னமே சோழ ராஜ்யத்தின் ராஜ பிரதி நிதியிருந்திருக்க வேண்டும்; தொண்டைமான் இளம் திரையன் அம்மாதிரியான ஒரு ராஜ பிரதிநிதி என நினைக்க இடம் இருக்கிறது.

இவனை சோழராஜனுக்கும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன் என ஒரு கதை சொல்லப்படுகிறது. இம் மாதிரியே வேங்கடத்தை அரசாண்ட தொண்டைமானையும் சோழராஜனுக்கும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன் என்றும் ஒரு கதை உலாவுகிறது. இளந்திரையனுடைய பிறப்பைப் பற்றிய கதை உரையாடர் நச்சினார்க்கினியவரால் கூறப்பட்டதால் இவனுடைய பிறப்பு நாகப்பட்டிணத்தில் தான் இருந்திருக்க வேண்டும்.

அது நாகர்களுடைய நகரம் அல்லது தலைமைப்பட்டினமாயிருந்திருக்க வேண்டும். இது எப்படியாயினும் திருப்பதியை ஸ்தாபித்த மூத்ததிரையனை இளந்திரையனோடு ஒன்றுக்கி கூறுவதற்குதக்க சான்றுகள் இல்லை. ஆகவே வேங்கடத்தில் வேங்கடேசப் பெருமாளுக்குக் கோயில் கட்டி வழிபாடுகள் உற்சவாதிகள் செய்ய ஏற்பாடுகள் செய்த தொண்டைமான் சிற்றரசன் திருவேங்கடக் கோட்டத்திற்கும் அதற் கருகிலிருக்கும் நாடுகளுக்கும் சிற்றரசனுயிருந்தவனுக இருக்கவேண்டுமெனத் தெரிகிறது; மாமூலனாரும் இதையே திருப்பதியில் விழாக்கள் கொண்டாடுவதைப் பற்றிக் கூறியிருக்கிருர். இது தொண்டை மண்டலத்திலுள்ள எல்லா பிரதேசங்களையும் ஒன்றுக்கி காஞ்சியில் மத்திய ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு முன்னேயே இருந்திருக்கவேண்டும். ஆகவே தொண்டை மண்டலமென்பது ஓர் இனத்தவரைக் கொண்டதாய் இருந்தது; அதில் 24 அல்லது மேற்கொண்ட சிற்றரசர்களைக் கொண்டதாய் இருந்தது; அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஓர் மத்திய அரசாட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டு காஞ்சி அரசின் கீழ் அரசு புரியலாயினர்.

இக்காலத்தில் தான் தொண்டைமான் இளந்திரையன் இருந்தான். இவன் காலத்திலிருந்து தான் கல்வெட்டுகள் ஆரம்பிக்கப்படுகின்றன; இக்காலத்தில் தான் ஆந்திர வம்சம் முழுத் திறமையோடு ஆட்சி செலுத்தி வந்தார்கள், இப்பிர தேசத்திலும் ஓரிரு ஆந்திர ராஜ பிரதிநிதிகள் மேற் கூறியவாறு மத்திய ஆட்சியோடு இணைக்கப்பட்டார்கள். இந்த இணைப்பு சோழ அரசர்களால் வெல்லப்பட்டு அதனுல் இப்பிரதேசம் உண்டானதாகும்;

அச்சோழ அரசர்களும் பயிர்த் தொழிலை கிரமமாக இங்கு புகுத்தி அக்காலத்திலிருந்து இங்கு கிருஷி செய்யும் நாகரீகம் பரவியது. இந்த காலத்தில் தான் ஆட்சி செய்த மன்னர்களின் பரம்பரையைப் பற்றி கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன; இவர்கள் தகப்பனும் மகனும் அல்லது முதல்வனும் அவனது பேரனுமாகக் கொள்ளலாம். இவற்றுள் முதல் அரசன் கிருஷித் தொழிலை அபிவிருத்தி செய்தல், ஏர்மாடுகளுக்கும், ஏர்கள் வாங்குவதற்கும் பணம் கொடுத்தல் ஆகியவைகள் செய்தான். இரண்டாவதானவன் அதே மாதிரி காரியங்களுக்கு உதவுதல் செய்தான்; அவனைத்தான் இம் மாநிலத்திற்கு அரசனுகக் கருதினுர்கள். அவனுடைய மருமகள் சாருதேவி விஷ்ணு நாராயணன் கோவிலுக்கு தானம் செய்ததாக கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே விஷ்ணுவுக்குக் கோவில்கள் அக்காலத்தில் இருந்தன. அக்கோவில்களில் விஷ்ணுவுக்குப் பூஜை செய்வதும் வழக்கத்தில் இருந்தது என்றும் தெரிகிறது.

சாருதேவி அக்கோவிலைக் கட்டவில்லை; ஒரு கோவில் ஏற்கனவே இருந்தது, அதற்கு சில தானங்கள் செய்தாள். ஆகவே அவனுக்கு ஒன்று அல்லது பல தலைமுறைகளுக்கு முன்னிருந்த ஓர் அரசன் அக்கோவிலைக் கட்டுவித்து அங்கு பூஜைகள் செய்வதற்கும், விழாக்கள் கொண்டாடுவதற்கும் வாகுபாடு செய்தான் என்பதில் சந்தேகம் இல்லை. இவைகள் உண்டான காலத்தில் காஞ்சியில் பல்லவ அரசு நிலைநாட்டப் பட்டு அப்பல்லவ அரசு தொண்டை மண்டலத்தில் ஆட்சி செய்யத்தொடங்கியது. இப்பல்லவர்கள் ஆளுநர்களாக ஆன பொழுது தங்களையும் தொண்டைமான்கள் எனக் கூறிக் கொண்டார்கள். அதாவது தொண்டையர்களுக்கு அரசன் அல்லது தொண்டையர்கோன் என்று தொண்டை மண்டலத்திலுள்ள தொண்டையர்களை ஆள ஆட்சி பீடத்துக்கு வந்தவர்கள் தங்களை தொண்டைமான்கள் எனக் கூறிக் கொள்வது சரியே.

சோழ மன்னனுக்கும் நாககன்னிக்கும் பிறந்த தொண்டைமான் இளவரசை தொண்டை என்னும் கொடியால் அலங்கரித்ததால் அத்தொண்டைக் கொடியை "பல்லவ" என்று கூறுதல் ஆயிற்ரு என்பது நாம் நிச்சயமாய்க் கூற இயலாமல் இருக்கிரேும்; ஆயினும் சில பழைய கல்வெட்டுகள் இந்த அர்த்தத்தைக் கொடுக்கிறது. இது எப்படியாயினும்

தொண்டைமான் இளம் திரையனுக்கு பிறகு உடனே பல்லவ ஆட்சி உண்டாயிற்று.

அவ்வாட்சியில் மூன்று வம்சங்கள் நாம் பார்க்கலாம்; இவர்களுடைய ஆட்சி முன் சொன்னபடி ஆரம்பித்து கி. பி. ஆருவது நூற்ருண்டு கடைசிவரை நிலவியது. இவ்வரசர்கள் தங்களைப்பற்றி வேறு இடங்களில் கல்வெட்டுக்கள் செதுக்கி வைத்திருந்தும் திருப்பதி கோவிலில் ஒரு கல்வெட்டு கூட செதுக்கவில்லையே என்னும் கேள்வி எழுகிறது.

பல்லவர்கள் காலத்துக்கு முன்னும் சரி அதற்கு வெகு காலத்துக்குப் பிறகு வந்த சோழர் காலத்திலும் சரி திருப்பதி சீக்கிரத்தில் அடையமுடியாத இடமாக அமைந்திருந்ததால் அக்கோவிலுக்குச் செய்யப்பட்ட தான தர்மங்களை கல்வெட்டுகளில் எழுதி வைப்பது என்னும் வழக்கம் கையாளப் படவில்லை. இதுதான் இதற்கு தகுந்த காரணமேயன்றி வேறு எக்காரணத்தையும் நாம் கூற முடியவில்லை. அங்கு கல்வெட்டுக்கள் இல்லாததால் அக்கோவிலே அக்காலத்தில் இல்லை எனக் காரணம் காட்ட முடியாது. அக் கோவில் அக்காலத்தில் இருந்தும் அவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருது; அப்படி அடைந்திருந்தாலும் கல்வெட்டு களினுல் வெளிப்படுத்த வேண்டும் என்னும் அவா ஜனங்களுக்கு இருந்திருது; மேலும் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப் படுத்துவது அக்காலத்தில் அதிகமாக வழங்கப்படவில்லை. பல்லவ காலத்திற்கு நாம் வரும் பொழுது கோவில் வழிபாடு என்பது எல்லோராலும் போற்றப்பட்டு ஒரு அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமாக ஆகிவிட்டது.

பல்லவ ராஜ்யத்தில் சிவன், விஷ்ணு இவர்களுக்கே யல்லாமல் ஹிந்துக்கள் வழிபடும் வேறு பல தேவதைகளுக்கும் கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டன. மகாபலிபுரத்தில் வராக குகையில் சிம்மவிஷ்ணுவும் அவனுடைய மனைவிகளும் சிலையில் காணப்படுகிருர்கள். அம்மாதிரியே அவன் மகன் மகேந்திர வர்மனும் அவனுடைய மனைவிகளும் சிலை வடிவத்தில் காணப் படுகிருர்கள். அங்கு இருக்கும் விஷ்ணு கோவில் இப்பொழுது காணப்படும் பெரிய கோவிலாக இல்லாவிடினும் சிறிய கோவிலாக இவர்கள் காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

புகழ்வாய்ந்த நரசிம்மவர்மன் தான் அந்த ஊரை நன்கு அமைத்து அதை அழகுபடுத்த ஆரம்பித்தான்; ஆனுல் அவன் அதை முடிப்பதற்குள் அங்கு ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதால்

அதை அவன் முடிக்கமுடியவில்லை. பேரரசன், நந்திவர்மன் பல்லவமல்ல என்பவன் விஷ்ணுவுக்கு காஞ்சிபுரத்தில் ஒரு பெரிய கோவில் கட்டினான்; மேலும் அவன் திருவல்லிக்கேணி, திருப்பதி கோவில்களுக்குச் செய்த நன்கொடைகளைப் பற்றி அவன் மகன் எழுதி வைத்திருக்கிறான். அவனுடைய பேரனான நந்திவர்மன் பெருந்தேவனாரை ஆதரித்தான். இப்பெருந்தேவனார் பாரதவெண்பா என்னும் நூலை இயற்றினார்; அதில் வேங்கடமும் காஞ்சியும் முக்கியமாக இடம் பெருகின்றன. ஆகவே நாம் நிருபதுங்கவர்மன் காலத்துக்கு வருமுன் விஷ்ணு கோயில்களைப் பற்றியும் அங்கு செய்யப்படும் பூஜைகளைப் பற்றியும் நமக்கு மறைமுகமான குறிப்புகள் கிடைக்கின்றன; சில இடங்களில் வேங்கடத்தைப் பற்றியும் குறிப்புகள் கிடைகின்றன. ஆழ்வார்கள் நூல்களைக் கொண்டே விஷ்ணு வழிபாடு பரவியிருந்தது எனக் கொள்ளல் வேண்டும். மேலும் மதசார்பற்ற ராஜீய விவகாரங்களிலிருந்தும் இதை ஊர்ஜிதப்படுத்தும் ருஜுக்கள் கிடைக்கின்றன. ஆகவே ஆழ்வார்கள் இதைப்பற்றிக் கூறியதை அலக்ஷியப்படுத்த வேண்டியதில்லை.

## கி. பி. 800 வரை தென்னிந்திய பொது வரலாறு

முதல் எட்டு நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவின் சரித்திரப்போக்கு பொதுவாக கீழ்க்கண்டவாறு இருந்தது எனச் சொல்லலாம். ஆந்திர அரசர்களது விஜயம் அவர்களது பொற்காலத்தில் வடக்கில் ஆஜ்மீர் புஷ்கரம் ஆகிய இடங்களிலிருந்து தெற்கே தற்கால மைசூர் ராஜ்யத்தின் மேற்கு பிரதேசங்கள் வரை பரவியிருந்தது; அவர்களுக்கு இரண்டாவது தலைநகரமாக கிருஷ்ணா நதிக்கரையில் அமராவதி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் இங்கிருந்து தென்பெண்ணைவரை தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆந்திர யஞ்ஞ ஸ்ரீ என்பவருடைய இந்த ஆக்கிரமிப்பு தமிழர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பை உண்டாக்கியது. ஆகவே ஆந்திர அரசர்களின் பலம் கி. பி. மூன்றுவது நூற்றாண்டில் குன்றவே, ஆந்திர தேசத்தின் கிழக்குப் பிராந்திய பிரதிநிதிகளில் சிலர் தொண்டை மண்டலத்தைப் பிடித்துக் கொள்ள பிரயத்தனப் பட்டார்கள். ஆந்திர சாம்ராஜ்யத்திலிருந்து இவர்கள்மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஆரம்பித்ததால், மக்களிடையே ஓர் இயக்கம் ஆரம்பித்து அதன் பயனாக நாகரீகம் குறைத்தலான மக்கள் தெற்கு நோக்கி ஓடினார்கள்; மேலும் அங்கே சென்ற இவர்கள் அங்குள்ள தென்னிந்திய அரசுகளைக் கவிழ்த்து அராஜகமான ஓர் நிலையை

உண்டாக்கினார்கள்; இதை பின் காலத்து கல் வெட்டுகள் நன்கு குறிப்பிடுகின்றன. இவ்வியக்கம் கள்வர் அல்லது களவர் இயக்கம் எனக் கூறப்பட்டு அது வேங்கடத்தை சுற்றிலுமுள்ள பிரதேசத்தில் ஆரம்பித்து தெற்கே பரவியது. சோழ ராஜ்யத்தில் அரசு புரிந்தவர்களால் இந்நிலையை சமாளிக்க முடியவில்லை. பாண்டிய அரசும் இதனால் நன்கு பாதிக்கப்பட்ட போதிலும் அவ்வளவு தூரம் பாதிக்கப்படவில்லை; இதனால் சுமார் 6 லிருந்து 8 தலைமுறைகளுக்கு நிலையான அரசுகள் இல்லாமல் இருந்தன. இந்த குழப்பமான நிலையில் 6-வது நூற்றாண்டின் இறுதியில் ஒரு புது பாண்டிய வம்சம் தங்களுக்கே உரித்தான அரசை மீண்டும் வசமாக்கிக் கொண்டு, சுமார் 200 வருஷ போர்களுக்குப்பின், தங்கள் ஆட்சியைச் செலுத்தலானார்கள். இக்காலத்திய வரலாற்றைப்பற்றிய குறிப்புகளிலிருந்து சோழர்களிடமும் ஒரு புது திருப்பம் தோன்றத் தொடங்கியது. இந்தக் காலத்தில் சோழ அரசு அவ்வளவு முழுவதாக முறியடிக்கப் படா விட்டாலும் அது மிகவும் வலியிழந்து தன் ஆதிக்கத்தை சில நூற்றாண்டுகள் வரை, செலுத்த முடியாமல் தவித்தது. இந்த இயக்கத்தின் மத்தியில் தான் பல்லவராஜ்யம் எனப்படும் அரசு காஞ்சியில் தோன்றி கிருஷ்ணா நதியிலிருந்து தென் பெண்ணை வரையிலுள்ள பிரதேசத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டிற்று. கொஞ்சம் நாட்கள் கழித்து தங்கள் தலை நகரத்தை மாற்றிக் கொண்டார்கள். காஞ்சி ஒரு முக்கியமான நகரமாக இருந்து முதல்முதலில் தொண்டை மண்டலத்திற்கு தலைநகராக இருந்தது. அடுத்த சில நூற்றாண்டுகளில் தென்னிந்திய அரசுகளில் தலைமை வாய்ந்த பேஷடல்வா என்னும் அரசு காஞ்சியைத் தலைநகரமாக வைத்துக் கொண்டு ஆளத் தொடங்கியது. இதை தமிழ்நூல்களில் வடதேசத்து அரசு எனக் குறிப்பிடுகிறார்கள்; தெற்கிலுள்ள மும்முடி மன்னர்களிலிருந்து வேற்றுமை காண்பிக்க, பல்லவர்கள் இந்த மேன்மையான நிலையை ஸ்தாபிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் சம்ஸ்கிருதத்தில் புலமை வாய்ந்த பல்லவ வம்ச கால்த்தில் நடந்தது. இந்தக் காலம் காஞ்சியில் விஷ்ணு கோபன் காலத்திலிருந்து (சமுத்திரகுப்தன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது) சிம்ம விஷ்ணுவின் தகப்பனை சிம்மவர்மன் II காலம் வரை வியாபித்திருந்தது. இந்த இரண்டு நூற்றாண்டுகளில் பல்லவ வம்சத்தவர் பல்லவ சாம்ராஜ்யத்தைத் தென்னிந்தியாவில் ஸ்தாபித்தார்கள்.

**பல்லவ அரசர்கள்**

I

பப்பா—கி. பி. 225—250

க்ாஞ்சி சிவஸ்கந்தவர்மன் I— 250—275

புத்தவர்மன் — 275–300 (சாருதேவியை மணம் செய்து கொண்டார்.

புத்தயாங்குரா — 300-325

விஷ்ணுகோபா I-325-350

ஸ்கந்தவர்மன் — 350–375

குமாரவிஷ்ணு அல்லது காலபர்த்திரு—375–400

புத்தவர்மன் II 400-425 | ஸ்கந்தவர்மன் III–or சூடு பல்லவ

குமாரவிஷ்ணு II 425–450 | வீரவர்மன் அல்லது வீரகூர்ச்ச

விஜய ஸ்கந்தவர்மன் IV அல்லது ஸ்கந்த சிஷ்ய 450–475

சிம்மவர்மன் I–475–500 இவ்வரசன் கங்கஹரிவர்மன் என்னும் அய்ய வரத்திற்கு முடிசூட்டி பாண அரசர்களை 450–ல் முறியடித்தான் | யுவமஹாராஜா விஷ்ணு கோபா II (குமார விஷ்ணு) ஆளவில்லை. காஞ்சியை சோழர்களிடமிருந்து மீட்டான்.

ஸ்கந்தவர்மன் V என்னும் கண்டத்தண்ட 500-525 கங்க மாதவ I ஐ 470–ல் ஸ்தாபித்தான். | சிம்மவர்மன் II ஆளவில்லை

நந்திவர்மன் 525–550 | விஷ்ணு கோபா III ஆளவில்லை

II

சிம்மவர்மன் II 550–575

சிம்மவிஷ்ணு அல்லது ஆவணி சிம்மபோத்தராசா

மஹேந்திரவர்மன் I 600–630

நரஸிம்மவர்மன் I 630–668
பாதாமியை மேற்கு சாளுக்கியர்களிடமிருந்து கைப்பற்றினன்—642

(மறுபக்கம் பார்க்க)

(பல்லவ அரசர்கள்—முன் பக்கம் தொடர்ச்சி)

மஹேந்திரவர்மன் II 668-670

பரமேஸ்வரபோதவர்மன் I 670–690
ரணரஸிக என்னும் நகரை நொறுக்கினன். பெரு
வள நல்லூர் சண்டையில் ஜெயித்தான்.

நரஸிம்மவர்மன் II 690-715

பரமேஸ்வரபோதவர்மன் II 715–717 — மஹேந்திரவர்மன்
இத்துடன் இந்த வம்சம்நின்றுவிட்டது. — III

சிம்மவர்மன் II 550-575

பீமவர்மன்

புத்தவர்மன்

ஆதித்யவர்மன்

கோவிந்தவர்மன்

ஹிரண்யவர்மன் (ரோஹிணியை மணந்தான்)

நந்திவர்மன் II 717–779
மன்னேக்குடி, சங்கரமங்கை ஆகிய இடங்களில்
பாண்டியர்களை சண்டையில் வென்றுன்
பாண்டியர்கள் கி. மு. 769க்கு முன்னதாக வென்றுதாகக்
குறிப்பிட்டிருக்கிறுர்கள்

தந்திவர்மன் 779-830. ராஷ்டிர கூடகோவிந்த III
என்பவனுல் தோற்கடிக்கப்பட்டு அவனுக்குக்கப்பம்
கட்டும் படி கி. பி. 801-ல் ஆனுன்.

நந்திவர்மன் III 830-854 சாஷ்டிரகூடன் அமோகவர்ஷன்
I என்பவனுடைய மகள் சங்கையை மணந்து கொண்டான்,

நிருபதுங்கா.854-880 பாண
அரசன் பாண வித்யாதரன்
இவனுக்கு கப்பம் கட்டினுன் — வீஜய கம்பா

அபராஜிதா— 880–898-ல் சோழ அரசன்
ஆதித்ய I என்பவனுல் தோற்கடிக்கப்பட்டு
இந்த ராஜ்யம் சோழ தேசத்தோடு சேர்க்கப்பட்டது.

**பல்லவப் பேரரசு காலத்திலும் திருப்பதியைப் பற்றி தகவல் இல்லை:**

சிம்மவர்மன் II-னுடைய மகன் சிம்மவிஷ்ணு காலத்திலிருந்து பல்லவ அரசு ஆண்டது. மேற்கண்ட வம்சா வளிப்படி பல்லவப் பேரரசு தென்னிந்தியாவில் அரசு செலுத்திற்று இவ்வரசு தக்ஷிணத்தில் பாதாமியில் இருந்த சாளுக்கியர்களுடைய ராஜ்யத்தின் தெற்கு எல்லைவரைபரவியிருந்ததால் எப்பொழுதும் அவ்வரசிடமிருந்து எதிர்ப்பு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது. கிருஷ்ண, துங்கபத்ரா நதிகள் வடக்கிலும் வடபெண்ணை தெற்கிலுமான இடையிலுள்ள நாடு இவ்விரு ராஜ்யங்களாலும் ஸ்வாதீனமாக்கிக்கொள்ள சண்டைகள் நடந்தன. இதற்கு முன்னறே தமிழ், ஆந்திரதேசங்களுக்கு ஓயாத சண்டை இருந்தது. பல்லவர்கள் காலத்திலும் வலு குறையாமல் பலத்த சண்டையாகவே இருந்தது. தென்னாட்டில் பரவி அட்டூழியம் செய்து கொண்டிருந்த கள்வர்களிடமிருந்து நாட்டை திரும்பவசமாக்கிக் கொண்டது பாண்டியர்களாகும். ஆகவே பாண்டியர்கள் தென் தேசத்தின் ஆதிக்கத்தை பல்லவர்களிடமிருந்து பிடுங்கிக்கொள்ள முயற்சித்தார்கள். இம்முயற்சிகள் வெவ்வேறு வம்சங்களுக்குள்ள ராஜீய வேற்றுமைகள் மாத்திரமேயன்றி இனவேற்றுமை கலாசார வேற்றுமை இவைகளால் உண்டானது துவேஷங்களால் தீப்பற்றி எரியத் தொடங்கின. பல்லவப் பேரரசு சிம்மவிஷ்ணு காலத்திலிருந்து நந்திவர்மன் II–காலம்வரை தங்கள் ராஜ்யத்தை ஒருங்கப் பிடித்துக் கொண்டு இம்முயற்சிகளை வீணாக்கினர். ஆயினும் பல்லவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்க்க பாண்டியர்கள் பல்லவ சாம்ராஜ்யம் தோன்றியதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய வலிமையை விருத்தி செய்து கொண்டு அவர்களை அடிக்கடி எதிர்க்கலானார்கள். இப்பல்லவ–பாண்டியப் போர்கள் பல்லவ ராஜ்ய வரலாற்றின் ஓர் முக்கிய அம்சமாய் இருந்து வந்து கடைசியாக இவ்விரு அரசுகள் தென்னிந்திய வரலாற்றில் அனேகமாக ஒரே சமயத்தில் மறையத் தொடங்கின. பல்லவ அரசர்கள் முக்கியமாக போர்களில் ஈடுபட்டு இருந்தாலும் ராஜ்ய நிர்வாகத்தில் அக்கறை காட்டினார்கள். நாட்டிற்கு உதவும் பொதுத் துறைப் பணிகளிலும் மத சம்பந்தமான காரியங்களில் ஈடு பட்டு நன்கொடை கொடுப்பதிலும் இவர்களுடைய பணிகள் மிகச் சிறந்தவை எனவே சொல்ல வேண்டும். இருப்பினும் இவர்கள் வேங்கடத்திலிருக்கும் திருக்கோவிலுக்கு குறிப்பிடும்படியாக ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. இக்கோவில் வரலாற்றின் ஆரம்பத்திலேயே மிக்க புகழ்பெற்றதாய்

இருப்பினும் இவர்கள் அக்கோவிலுக்கு ஒன்றும் செய்யாதது வியக்கத்தக்கதாக இருக்கிறது. இதற்கு ஒரு காரணம் வேங்கடமானது. பல்லவர்களுக்கும் அவர்களது வடக்கு எல்லைக்கு அப்புறம் ஆண்ட அரசர்களுச்கும் இருந்த பூசல்களால் எல்லையிலுள்ள இந்த தலத்தை அவர்கள் கவனிக்க முடியாமல் இருந்திருக்கலாம். பல்லவ நாட்டை வென்று அங்கு வெற்றிக் கொடி நாட்டிய முதல் சோழமன்னன் வட எல்லையில் மிக்க கடும் போர் புரிய வேண்டியதாய் இருந்தது. கல்வெட்டுகளின் மூலம் நாம் அறிவது என்ன வென்றால் அச்சோழமன்னன் சுவர்ணமுகி ஆற்றங்கரையில் காளஹஸ்திக்கருகில் உள்ள தொண்டை மாணுற்றூர் என்ற இடத்தில் நடந்த போரில் அவன் உயிர் இழந்தான் என்று. இந்த இடம்தான் ஆந்திரர் களுக்கும் தமிழர்களுக்கும் எல்லை சண்டைக்கு காரணமா யிருந்து பிற்காலத்தில் பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் எல்லைச் சண்டைக்குக் காரணமாயிருந்தது. வேங்கடம் அக் காலத்தில் மிக்க சிரமத்தோடு அடைய வேண்டிய தலமா யிருந்தது ஒரு பக்க மிருக்க, இச்சண்டைகள் மற்றொரு காரணமாயிருந்ததால் இத்தலத்தை யாத்திரிகள் அதிகம் நாடவில்லை; தமிழ் நாட்டிலுள்ள மற்றதலங்களைவிட மிக்க குறைவாகவே நாடினார்கள் எனக் கொள்ளக் குறைவில்லை.

**சரியான குறிப்புகள் இல்லாததற்குக் காரணம் :**

தல யாத்திரை செய்யும் ஒரு பக்தனோ, பிச்சைக்காரனோ, ஏழை குடும்பஸ்தனோ கோவிலுக்கு வந்தால் அவன் அங்கு எந்த குறிப்பும் வைத்து விட்டுப் போகமாட்டான். அரசர்களின் குடும்பங்களோ, கீர்த்தியும் முக்கியத்துவமும் உடைய பெரிய உத்தியோகஸ்தர்களோ வந்தால்தான் அவர்கள் தாங்கள் கோவிலுக்குச் செய்த நன்கொடைகளைப் பற்றி குறிப்புகள் எழுதி வைத்து விட்டுப் போவார்கள். முற்கூறிய காரணங் களால் எல்லைச் சண்டைகள் இருக்கும் பொழுது இம் மாதிரியான வருகை தருதல் அனேகமாக முடியாத காரியமாய் இருக்கும். மேலும் இக்காலத்தில் கோவிலில் கல்வெட்டுகள் பொறிக்கப்படுவது பிரபலமடையவில்லை. குறிப்புகள் இல்லை யென்பதால் கோவில் மறைந்து விட்டது எனவோ அதன் முக்கியத்துவம் குறைந்து விட்டது என்று கொள்ளவோ முடியாது. அடுத்து இரண்டு நூற்றாண்டுகளும் அனேக மாறுதல் களுக்கு காரணமாயிருந்ததால் இக்காலத்திலும் இம்மாதிரியான குறிப்புகள் அதிகப்படியாகக் கண்டெடுத்து கோவிலைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளுவதற்கு ஹேதுவில்லை. சோழவம்சத்தினர்

அரசு நன்கு தழைத்தோங்கிய பின்தான் முக்கியமான கல்வெட்டுகள நமக்கு கிடைக்கின்றன.

**விஷ்ணு-பூஜைகளும் விஷ்ணு கோவில்களும் :**

இந்த பகுதியை முடிக்குமுன் கல்வெட்டு, சாஸனங்கள் ஆகிய இவைகளால் விஷ்ணு கோவில்களைப் பற்றியும் விஷ்ணு பூஜைகளைப் பற்றியும் இக்காலத்தில் இந்நாட்டில் நாம் அறிவதைப் பற்றி விளக்குவோம். "பிரிடிஷ் மியூசியம் பிளேட்ஸ்" என்னும் சாஸனத்தில் சாருதேவியின் சாஸனம் புராதனமானது. (Epig Indica VIII to 143). இது பிராகிரித் லிபியில் இருக்கிறது. மகாராஜா விஜயஸ்கந்தவர்மன் காலத்தில் யுவமகா ராஜ விஜய புத்தவர்மன் மனைவியும் புத்தயாங்குரா என்பவனின் தாயுமான சாருதேவியின் சாஸனம். தாலூரா என்னுமிடத்தில் நாராயணன் கோவிலுக்குக் கொடுத்த நன்கொடையைப் பற்றிக் கூறுகிறது. அடுத்தது சிம்மவர்ம னுடைய நன்கொடையை பற்றிக் கூறுகிறது. Epig Indica VIII to 159). இதில் ஆரம்பத்தில் விஷ்ணுவை "பகவத்" என்று கூவி வணக்கம் தெரிவித்துவிட்டு, இந்நன்கொடை மேன் மாதூரா என்னும் இடத்தில் வெளியிடப் பட்டதென்றும் அது மகாராஜா ஸ்கந்தவர்மன் பேரனும் மகாராஜா விஷ்ணு கோபனின் பிள்ளையுமான சிம்மவர்மனுல் கொடுக்கப்பட்ட தென்றும் தெரிவிக்கிறது. அடுத்தது விஷ்ணு பக்தனும் பரம பாகவதனென்று சொல்லப்படுபவனுமான யுவமஹா ராஜா விஷ்ணு கோபனது உருவப் பள்ளி நன்கொடை எனக் கூறப்படுவது. (Ind Antiquary V P 50) இதில் கண்டு கூர கிராமத்திலிருக்கும் விஷ்ணு ஹாரன் கோவிலுக்குக் கொடுத்த நன்கொடை. அடுத்தது குணதரனுடைய மகேந்திரவாடி சாஸனம் (Ep Ind VI P 152 ff). இந்த சாஸனம் மஹேந்திர வர்மனுல் செய்யப்பட்டது. அக்கோவில் மஹேந்திரபுரம் (மகேந்திரவாடி) என்னும் ஊரில் உள்ள மகேந்திர தடாகத்தின் கரையில் உள்ள மகேந்திர விஷ்ணுகிருஹ என்பது அடுத்தது விசித்திரசித்தன் என்னும் மகேந்திரவர்மனுடைய மண்டகப் பட்டு சாஸனம் (Ep. Ind. XVII P 14) அதில் மகேந்திரவர்மனுல் பிரும்மன் ஈஸ்வரன் விஷ்ணு இவர்களுக்குக் கட்டப் பட்ட குகைக் கோயிலைப் பற்றிக் கூறுகிறது. அடுத்தது நந்திவர்மன் II பல்லவ மல்லனுல் கட்டப்பட்ட வைகுந்தப் பெருமாள் கோவிலில் இடப்பட்ட சாஸனங்கள். இக் கோவில் காஞ்சிபில் உள்ளது. இச்சாஸனங்கள் நந்திவர்மன் அரியா சனத்துக்கு வந்த சூழ்நிலையை விளக்குகிறது. (South Ind Ins IV P. 10 ff). அடுத்தது கோவிஜய நந்தி விக்கிரமவர்மன்/

எழுதிய தண்டன் தோட்டம் சாஸனங்கள் (S. Ind. Ins. II P 517) இதில் உள்ளூரில் இருக்கும் சிவ, விஷ்ணு கோவில்களில் பூஜை நடத்தும் கிரமத்தைப் பற்றியும் மஹாபாரதம் வாசிப்பதைப் பற்றியும் அதற்காக ஒதுக்கிய திரவியங்களைப் பற்றியும் விவரிக்கிறது. இதே மாதிரி மகாபாரதம் வாசிப்பதற்காக ஒதுக்கப் பட்ட திரவியத்தைப் பற்றி 3, 4, தலைமுறைகளுக்குமுன் பரமேஸ்வரவர்மன் I காலத்தில் எழுதிய "கூரம் ப்ளேட்ஸ்" என்ற சாஸனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது அடுத்த குறிப்பு மகாபலிபுரத்திலுள்ள ஆதி வராகப்பெருமான் கோவிலில் உள்ளது. இதை நந்திவர்மன் II, பல்லவ மல்லன் தனது 65-வது ஆட்சி ஆண்டில் எழுதி வைத்தான் (Epig coll 666 of 1922), அடுத்தது திருவெள்ளரை சாஸனம் என்பது. இது தந்திவர்மனால் திருச்சிக்கு அருகில் உள்ள புண்டரீகாக்ஷப் பெருமாள் கோவிலில் பொறிக்கப்பட்டிருக்கிறது (Epig coll 541 of 1905 Ep. Ind. XI 156). அடுத்தது தந்தி போத்தரசர் என்பவனால் உத்திரமல்லூர் வைகுண்டப் பெருமாள் கோவிலில் தனது 9–வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது (Ep. coll 74 of 1898). அடுத்தது அதே அரசன் திருவல்லிக்கேணி கோவில் கர்ப்ப கிருஹத்தில் பொறித்த சாசனம். இது தந்திவர்ம மகாராஜன் 25–வது ஆட்சி ஆண்டில் எழுதப்பட்டு அதில் அவன் கோவிலுக்குக் கொடுத்த நன்கொடையைக் குறிக்கிறது Epig Ind. VIII P 291). அடுத்தது அதே அரசனுடைய 21–வது ஆட்சி ஆண்டில் உத்திரமல்லூர் வைகுண்டப் பெருமாள் கோவிலில் பொறிக்கப்பட்டது. (Ep. coll 61 of 1896). அடுத்தது திருவேங்கடக் கோட்டத்துப் பிரிவு குடவர் நாட்டில் திருச்சோஹினூர் திருவிளங்கோவில் பெருமானடிகளான விஜய – தந்திவிக்கிரமனது 51–வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது (Ep. coll 262 of 1904). இவ்வரசன் நந்திவிக்கிரமன் II உடையபிள்ளை தந்திவர்மன் என்பவனை குறித்தால் இக்குறிப்பே இப்பிராந்தியத்தில் பல்லவர்களால் குறிக்கப்பட்ட முதல் சாஸனமாகும். அடுத்தது காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் கோவிலில் பொறிக்கப் பட்டிருக்கிறது. இது தெள்ளாறு சண்டையில் ஜெயித்த தந்தி போத்தராயருடைய 18–வது வருஷத்தில் பொறிக்கப்பட்டது. இவன் தான் நந்திவர்மன் III ஆகும் (Ep. coll 12 of 1895; Madras Christion College Mag. VIII P. 102) அடுத்தது மதுராந்தகம் தாலூகாவில் திருமுக கூடலில் இருக்கு வெங்கடேசப்பெருமாள் கோவிலில் நிருபதுங்கவர்மன் 24-வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது. (Ep. coll 179 of 1916) இது விஷ்ணு

கோவிலுக்குக் கொடுத்த பொன் நன்கொடையைக் குறித்து அதை சிய்யபுரம் (காஞ்சிக்கு அருகிலுள்ள சீவரம்) குழுவினர் பெற்றுக் கொண்டதைக் குறிக்கிறது. இந்த சாஸனங்கள் பரவின இடங்களில் இருப்பதும் அநேக விஷ்ணு கோவில்கள் குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனித்தால் விஷ்ணு பூஜை பிரபலமடைந்திருந்து நாட்டில் ஒரு முக்கிய மதமாக விளங்கியது என்பது தெரிகிறது. ஆயினும் இக்குறிப்புகள் யாவையிலும் திருவேங்கடத்தைப்பற்றியும் அதிலுள்ள விஷ்ணு கோவிலைப் பற்றியும் ஒரு குறிப்பும் இல்லாதிருப்பது வியக்கத்தக்கது; இதற்குமுன்னேயே காரணங்கள் கூறியுள்ளோம்.

**தெலுங்கு சோளர்களும் தொண்டை மண்டலமும்:**

நாம் இப்பொழுது கருதும் நாடு வட தொண்டை மண்டலம் என்பது இது காஞ்சிக்கு வடக்கிலுள்ளது. கிருஷ்ண நதிவரையிலுள்ள நாடாகும். இந்நாட்டின் சரித்திரம் தமிழ் நாட்டின் எல்லை எது வரை என்பதைக் குறிப்பதில் பலவித விவாதங்கள் ஏற்பட்டன, முன்னமேயே சொன்னோம்—பல்லவர்கள் வருகைக்கு முன் ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் இந்நாட்டைப்பற்றி தகராறு இருந்ததைப்பற்றி. பல்லவ சாம்ராஜ்ய ஆரம்ப காலத்தில் இந்த நாடு அவர்களுக்கு சொந்தமாயிருந்ததால் அவர்கள் தெற்கு நோக்கியே தங்கள் ராஜ்யத்தை விருத்தி செய்யத் தொடங்கினார்கள். பல்லவப் பேரரசர்கள் கி.பி. 6-வது நூற்றாண்டின் பின் பகுதியில் வந்ததிலிருந்து இந்நாட்டிலும் ஒரு மாறுதல் ஏற்படலாயிற்று. இதற்குமுன் இப்பகுதி பாண நாடு அல்லது தமிழில் பெரும் பாணப்பாடி எனக் கூறப்பட்டு அதற்கு மேற் பகுதியில் கங்கர்களுடைய நாடு இருந்தது. ஆனால் இந்த சமயத்தில் இந்த பிரதேசத்தில் வடமேற்குப் பகுதியில் ஒரு புதிய அரசு உதயமாகி சீக்கிரத்திலேயே ஆந்திரர்களுடைய உப அரசாகிய தென்மேற்குப் பகுதியை பிடித்துக் கொண்டது. இவர்கள் தான் சாளுக்கியர் என்பவர்கள் இவர்கள் இந்த இடங்களை பிடித்துக் கொண்டு வாதாபி என்னும் தற்கால பாதாமி (பீஜபூர் தாலூகாவில்) தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள் இந்த பிரதேசங்களில் ஆந்திரர்களுக்குப் பிறகு தங்களுக்கே உரிமையுண்டு என்று பல்லவர்கள் கருதியதால் சாளுக்கியர்கள் இப்பிரதேசத்தைக் கைப்பற்றியது தங்கள் தேசத்தைத் தாக்கிய ஓர் ஆக்கிரமிப்பு எனப் பல்லவர்கள் கருதினார்கள். இதன் பயனாக இவ்விரு அரசுகளுக்கும் சண்டைகள் நடந்து கொண்டேயிருந்து, அதன் பயனாக இந்த ராஜ்யங்களின் எல்லைக்கோடு முன்னும் பின்னுமாக

ஒவ்வொரு சண்டையின் முடிவைப் பொருத்து ஊசலாடிக் கொண்டிருந்தது. இவ்விருபேரரசுகளும், ஏறக்குறைய சமபலத்துடன் ஒன்றையொன்று எதிர் நோக்கி நின்றிருந்தும் முழுவெற்றி ஒன்றிற்கும் ஏற்படாமலிருக்க, இரு நாடுகளுக்கும் நடுவிலுள்ள மாநிலங்கள் அவர்கள் கைகளில் மாறிமாறி அகப் பட்டுக் கொண்டன. மேலும் அந்நிலங்கள் தங்கள் சுயநலத்தை யொட்டியே ஏதாவது ஒரு பேரரசோடு ஒட்டிக் கொண்டு அதற்கு கீழ் அடங்கியிருக்க வேண்டியிருந்தது. இப்பேரரசுகள் நீண்ட போர்களால் கைகளைத்தவுடன் இந்நிலங்களில் சுயராஜ்யம் தலையெடுக்க ஆரம்பித்தது. சாளுக்கியர்கள் வலிவுகுன்றி இறுதிகாலத்தை எய்திக் கோண்டிருக்கும் பொழுது ராஷ்டிர கூடர்கள் இன்னும் தங்கள் பேரரசை நிலை நாட்டு வதற்குமுன், இந்நடு நாடுகள் தங்கள் வலிமையைக் காட்ட ஆரம் பித்தன. பாணர்கள் கொஞ்சம்கொஞ்சமாக மறைய ஆரம்பித்த னர்; அவர்களுடைய நாடும் பல்லவ நாட்டுடன் இணைக்கப்பட் டது. வடக்குப் பிரதேசம் மாத்திரம் ஒரு சிற்றரசின் கீழ்அடங்கி யிருந்தது. இச்சிற்றரசு சோழ அரச வம்சத்தை சேர்ந்தது எனச் சொல்லிக் கொண்டது. ஒரு வேளை சோழ அரசர்களின் ஒரு கிளை நெடுங் காலத்துக்கு முன்வடக்குப் பிரதேசத்தில் போயிருந்திருக்கலாம் ; ஆயின் இவர்கள் 7–வது நூற்றுண்டில் தான் பிரபலமடைந்தார்கள். அவர்களுடைய நாடு ''ஏழாயிரம் நாடு'' என்று கூறப்பட்டது. இதன் தலை நகரம் கடப்பையா யிருந்தது இவர்கள் தங்களை தெலுங்கு சோளர்கள் எனச் சொல்லிக் கொண்டார்கள். இவர்கள் கடப்பைக்கு கிழக்கில் உள்ளதும் அதில் காளஹஸ்திக்கு அருகில் உள்ள பொட்டப்பி நாடு (நமது வரலாற்றுக்கு முக்கியமான நாடு)வை உள்ளடக்கும் கொண்டதுமான மறாராஜவாடி ஏழாயிரம் என்னும் நாட்டை ஆண்டார்கள். பொட்டப்பியோடு ஒரு சமயம் மிக்க நெருக்க சம்பந்தம் கொண்ட இச் சோழர்களுடைய நாடு பல்லவப் பேரரசு தலை சாய்ந்தவுடன் நம் கவனந்திற்கு வருகிறது.

**சோழ–சாளுக்கிய எல்லையில் புது அரசுகள் தோற்றல் :**

முன்னமேயே கூறப்பட்டபடி சாளுக்கியர்களுக்கும் பல்லவர் களுக்கும் இடையே நடந்த சண்டைகளில் முதலில் சாளுக்கி யர்கள் பக்கம் வெற்றி உண்டாயிற்று. அவர்கள் பல்லவ நாட்டின் பெரும் பகுதியைப் பிடித்து விட்டதால் புலிகேசின் என்ற சாளுக்கியன் தன்னுடைய தம்பி ஒருவனை பல்லவ ராஜ்ய எல்லை யிலிருந்து கிருஷ்ணை நதிக்கும் இடைய உள்ள நாட்டிற்கு ராஜபிரதிநிதியாக நியமித்து கிழக்கு சாளுக்கிய நாட்டிற்கு

அடி கோலினுன். 8-ம் நூற்றுண்டின் மத்தியில் ராஷ்டிர கூடர்கள் சாளுக்கிய நாட்டை கைப்பற்றிக் கொண்டபொழுது, இந்த ராஜ பிரதிநிதியின் நாடு ராஷ்டிர கூடத்தோடு சேராதது மன்றி தங்கள் நாட்டின் சுய ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்டு ராஷ்டிர கூடர்களுக்கே பலவீனத்தையும் ஆபத்தையும் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தார்கள். இரண்டு நூற்றுண்டு களுக்குப் பிறகு பெரிதாகிக் கொண்டுவந்த ராஷ்டிரகூட சாம்ராஜ்யம் அதன் சாளுக்கிய சிற்றரசன் ஒருவனுல் பிடிக்கப்பட்டு அச்சிற்றரசன் பிற்காலத்திய சாளுக்கிய வம்சத்தை ஸ்தாபித்தான். அப்பொழுது கிழக்கு சாளுக் கியர்கள் அதே சமயத்தில் பலமிழந்து ஒரு சிறு அரசாக ஆகிவிட்டது இருப்பினும் தெலுங்கு சோழர்களுடைய நாட்டிற்கு வடக்கி லுள்ள நிலங்களில் இவர்கள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். ஆகவே இவர்கள் அப்போதைக்கப்போது பல்லவ ராஜ்யத்தின் வட எல்லையோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். பல்லவ அரசு முறியடிக்கப்பட்டு சோழர்கள் பேரரசாக முடி சூட்டிக் கொண்ட பொழுது இந்நாடுகளையும் அவர்கள் கவனிக்க வேண்டியதாயிற்று. மேலும் மைசூரிலுள்ள கங்கர்கள் என்பவர்களையும் நொலம்பர்கள் என்னும் ராயலசீமையிலுள்ள பல்லவர்களுடைய ஒரு பகுதியையும் கூட கவனிக்க வேண்டிய தாயிற்று. ஆகவே சோழர்கள் தொண்டைமண்டலத்தை வெற்றி கொண்ட பொழுது இவ்வரசுகளையெல்லாம் சண்டை மூலமாகவும் சமாதானம் மூலமாகவும் ஒவ்வொன்றுக தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவர வேண்டியதாயிற்று. இவற்றுள் தமிழ் சோழர்களும் சாளுக்கியர்களும் நாம் கவனிக்கும் இந்த பிரதேசத்தின் வரலாற்றில் மிக முக்கிய பங்கு எடுத்துக் கொண்டதை விவரிப்போம்.

**சோழர்கள் தென்னிந்தியாவில் பேரரசு ஆயிற்று :**

6-வது நூற்றுண்டு இறுதியிலிருந்து பல்லவர்கள் இருமுக போட்டியிட வேண்டியிருந்தது. ஒன்று வடஎல்லையில் சாளுக் கியர்களுடன்; மற்றொன்று தென்எல்லையில் பாண்டியர்களுடன். சில சமயம் தெற்கு அரசு வடக்கு அரசுடன் ஒன்று சேர்ந்து பல்லவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. இக்கஷ்டங் களுக்கும் இடையே, விரோதிகள் சில சண்டைகளில் வெற்றி பெற்றிருந்தும், பல்லவர்கள் தங்கள் ராஜ்யத்தை ஒன்று சேர்த்து வைத்திருந்தார்கள். சோழர்களை ஜெயித்த சிம்ம விஷ்ணு காலத்திலிருந்து நந்திவர்ம பல்லவனுடைய ஆட்சி இறுதிவரை இந்த ராஜ்யம் சிதருமல் இருந்தது. பல்லவமல்லன் பாண்டியர்களுடன் மிகுந்த சிரமத்துடன் சண்டை போட

வேண்டியிருந்தது; இதில் அவன் வெற்றி கண்டது அவன் ராஷ்டிரகூட வம்சத்தில் திருமண உறவு வைத்துக் கொண்டதின் பயனால். இவன் காலத்திற்குப் பிறகு பல்லவ அரசு க்ஷீணிக்க ஆரம்பித்தது. வடக்கில் ராஷ்டிர கூடர்கள் தாங்கள் பிடித்த நாடுகளை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டிய காலம், மேலும் அவர்கள் மால்வ அரசர்களுடன் ஒரு பக்கமும், கிழக்கு சாளுக்கியர்களுடன் மறு பக்கமும் சண்டைபோட வேண்டி இருந்த காலம் இவைகள் சேர்ந்து வடக்கில் பல்லவர்களுக்கு அதிக கஷ்டம் இல்லாமல் இருந்தது. ஆயினும் பாண்டியர்களுடன் சண்டை வலுக்க ஆரம்பித்தது. பாண்டியர்கள் சிங்களத்தவர்களை சண்டையில் புகாதபடி பார்த்துக்கொண்டு பல்லவர்களை மிக வேகமாக நெருக்கினார்கள். கடைசியில் பாண்டிய மன்னன் வரகுணன் II தலைமையில் பல்லவர்களை முறியடித்து தென்னாற்காட்டில் பெரும் பாகத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அவ்வமயம் பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் கலகம் தோன்ற சிங்களவர்கள் மீண்டும் பாண்டியர்களைத் தாக்கினார்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல்லவர்கள் தங்கள் சிற்றரசுகளான கங்கர்கள் முதலானவர்களுடன் ஒன்று சேர்த்து பாண்டியர்களைத் துரத்தி காவிரி ஆற்றங்கரையை தனதாக்கிக் கொண்டனர். இந்தச் சண்டையில்தான் சோழ அரசின் பெயர் பல்லவர்கள் பக்கம் தோன்ற ஆரம்பித்தது. இதற்கு வெகு சீக்கிரத்தில் ஒரு பத்து ஆண்டுகளுக்குள் சோழ அரசன் அப்பொழுதிருந்த நிலையில் அதிருப்தி கொண்டு மேற் கூறிய சேனைகள் அனைத்தையும் தன் ஆதிபத்தியத்தில் வைத்துக் கொண்டு பல்லவர்களையே தாக்கினான். இதில் அவனுக்கு பூர்ண வெற்றி கிடைக்கவே சோழர்கள் தெந்நாடுகளின் முக்கிய பேரரசாகத் திகழத் தொடங்கிற்று. பாண்டியர்கள் உள்நாட்டுக் கலகங்களிலும் சிங்களப்படையெடுப்புகளிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தி வந்தமையால் இந்த வரலாறுகளில் கவனம் செலுத்தவில்லை. பல்லவர்கள் பாண்டிய சாம்ராஜ்யத்தோடு சளைக்காமல் போர்புரிந்து தலை நிமிர்ந்து நின்றது. ஆயினும் கடைசி சண்டையில் அதனுடைய பலம் குன்றிப் போய்விட்டது. மேலும் அரண்மனைப் புரசல்களும் கீழ்ப்பட்ட சிற்றரசுகளின் விசுவாசமின்மையும் சேர்ந்து அதை ஒரு சிறிய அரசாக ஆக்கியது. இதைக் குறித்து உண்டான சண்டைகள் நமக்குந் தெளிவாக விளங்கவில்லை, ஆயினும் பல்லவர்களுடைய கல்வெட்டுகள் பல்வேறு இடங்களிலிருந்து எடுக்கப்பட்டதிலிருந்து மூன்று நான்கு பல்லவ அரசர்களின் பெயர்கள்

தெரிகின்றன. ஆயினும் இவர்களுக்கு மத்திய அரசு என்று ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அபராஜிதாவிற்குப் பிறகு அரசு உரிமைக்கு உள்ள புரசல்கள் இருந்திருக்கின்றன. ஆகவே சிற்றரசுகள் ஒத்துழையாமையால் ஒரு சிற்றரசன் மிக கவனமாக இருந்து பல்லவ சாம்ராஜ்யத்தை பிடித்துக் கொண்டான். அப்படிப்பட்ட சிற்றரசன் விஜயாலயா என்னும் சோழமன்னன். இவன் மிக்க பலத்தையுடையவனாய் இருந்து பல்லவ ராஜ்யத்தை பிடித்துக் கொண்டாலும் உடனே பல்லவப் பேரரசின், முடிமன்னனாகக் கூறிக் கொள்ளவில்லை. இவனுடைய பிள்ளை ஆதித்தியன் இச்சண்டையில் மிகத் தீவிரமாக இறங்கி, இருள் நிறைந்த இக்காலத்தில் தீபம் பிடித்தாற்போல், தொண்டைமண்டலம் நாடு முழுவதும் தனது (அதாவது சோழ அரசுக்குக்) கீழ் கொண்டுவந்தான். இது சரியான வார்த்தை. தகப்பனார் தென்னிந்தியாவில் சோழ சாம்ராஜயத்திற்கு அடிகோலிவைத்தாலும் பல்லவர்களை தன் ஆதிக்கத்தின் கீழ் முழுவதும் கொண்டுவரவில்லை. ஆதித்தியன் அரசு பூண்ட காலத்தில் தகப்பனுடைய வெற்றிகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு, வடக்கில் மீண்டும் படையெடுத்து பல்லவ ராஜ்யத்தை சோழ ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு சோழ சாம்ராஜ்யத்தின் ஆரம்பித்திற்கு நன்கு அடிகோலினான்.

**பல்லவர்கள் கல்வெட்டுகளில் கோவில் நிர்வாகத்தைப் பற்றி :**

திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள கல்வெட்டுகளில் பல்லவர்களால் இடப்பட்டது பதினொன்று ஆகும். இவற்றுள் முதலிரண்டும் தந்தி விக்கிரம தேவனுடைய ஆட்சியைப்பற்றிக் கூறுகிறது. முதலாவது அவனுடைய 51-வது ஆட்சி ஆண்டில் இடப்பட்டது. இது ஏறக்குறைய 833–34 கி. பி. ஆகும். அதாவது கடைசி ஆழ்வாரான திருமங்கை ஆழ்வார் காலத்திற்குப் பிறகு சுமார் ஒரு தலைமுறைக்குப் பிறகு எனச்சொல்லலாம். இவ்விரு கல்வெட்டுகளும் திருவேங்கடத்திலிருக்கும் திரு இளம் கோவில் மூலவருக்கு நந்தா விளக்கு ஒன்று எறிவதற்கு கொடுத்த நன்கொடை கூறுகின்றன. முதலாழ்வார்கள் கூட வேங்கடத்தை இளங்கோவில் எனக் கூறினார்கள் என்பது நினைவிலிருக்கும். இக்கல்வெட்டுகள் திருச்சானூர் கோவிலில் இருப்பதால் இளங்கோவில் வேங்கடம் மலையிலிருக்கும் கோவிலைக் குறிக்கிறதா எனச் சந்தேகம் எழும். இருப்பினும் இக்கொடை மலைமேலிருக்கும் கோவிலுக்குக் கொடுத்து விட்டு கல்வெட்டை மாத்திரம் இக்கோவிலில் எழுதி வைத்தார்கள் எனக் கொள்ளலாம். இக் கல்வெட்டு

களால் அக்காலத்திலேயே அந்நாட்டில் கோவில் நிர்வாகம் பூர்ணமாக அமைந்திருந்தது என அறியலாம். மேலும் வரும் சாஸனங்களிலிருந்து இது இன்னும் நன்கு தெரியவரும். இங்கு திருச்சோஹினூர் என்பது திருவேங்கடக் கோட்டத்திலிருக்கும் ஹுடவர் நாட்டைச் சேர்ந்தது எனக்கூறப்பட்டிருக்கிறது. இந் நன்கொடை சோழ அரசின் கீழ் இருந்த ஒரு நிர்வாகிகொடுத்த நன்கொடை எனக் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்தும் இதைச்சார்ந்த பல்வேறு கல்வெட்டுகளிலிருந்தும் நமக்குத் தெரிவது திருவேங்கடக் கோட்டம் தொண்டமண்டலத்தைச் சேர்ந்தது என்பது. தொண்டமண்டலத்தை பின்னர் ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்பர் என்றும் இது நான்கு நாடுகளைக் கொண்டது என்றும் அதில் குடவர் நாடு என்பது திருப்பதியை சுற்றிலுமுள்ள கிராமங்களை குறித்தது என்றும் கொஞ்ச தூரத்திற்கு அப்பால் உள்ள சந்திரகிரியைச் சுற்றிலுமுள்ள கிராமங்களை வைகுந்த வளநாடு எனக் கூறினர் என்றும் தெரிகிறது. கொஞ்சம் மேற்கே சித்தூருக்கு அருகிலுள்ள நாட்டைதுய்ய நாடு என்றும் திருப்பதிக்குக் கிழக்கே காளஹஸ்தியைச் சுற்றிய பிரதேசத்தை ஆற்றூர் நாடு என்றும் (காளஹஸ்திக்கு அருகிலுள்ள ஸ்வர்ணமுகி மேலிருக்கும் தொண்டைமான் ஆற்றூர் அல்லது தொண்டைமான் பேராற்றூர் என்ற ஊரிலிருந்து வந்த பெயர் ஆகும்) கூறினர். இதைத் தவிர கோவிலின் நிர்வாகம் மிக்க சிறப்பாயிருந்ததன் பயனாக வெகு தூரத்திலிருந்து வந்தவர்கள் கூட தங்கள் நன்கொடைகளையும் தொகைகளையும் தகுந்த நிர்வாகிகளிடம் கொடுத்து வெகு நாட்கள் எறியக் கூடிய நந்தா விளக்கு ஒன்றை அவர்கள் ஏற்றுவார்கள் என்ற பரிபூர்ண நம்பிக்கையுடன் திரும்பி போவது முடிந்தது எனத்தெரிகிறது. இக்கிராம நிர்வாகம் ஒன்று இருந்தது என்றும் அதற்கு ஒரு காரியதரிசி (ஸ்ரீகார்யம்) இருந்தார் என்றும் அவர் தான் எல்லா வேலைகளையும் செய்து வந்தார் என்றும் தெரிய வருகிறது. 4—வது கல்வெட்டும் திருச்சோஹினூர் கோவிலில் இருக்கிறது. இதில் ஸ்ரீகார்யத்திடம் தங்கத்தை நன்கொடை கொடுத்திருப்பதாகவும் இதை வெளியில் நன்கு பறையறிவிக்கி வேண்டும் என்றும், அவர்களுடைய கணக்கு ஏடுகளில் ஊர்ணியோகம் (அதாவது நகரமக்கள் ஆக்ஞைப்படி) என்று எழுத வேண்டும் என்றும் காணப்படுகிறது. இக்கொடை இளங்கோவிலில் இருக்கும் கடவுளுக்கும், மந்திரஸாலாவில் இருக்கும் கடவுளுக்கும் திருவேங்கடத்திலிருக்கும் கடவுளுக்கும் உபயோகப்படுத்த வேண்டும் என்று. நெ. 6, இக்கோவிலில்

இரு பிராமணர்களுக்கு சாப்பாடு போட ஏற்பாடு செய்யப் பட்டது என்று கூறுகிறது. நெ. 7 சாகா 820 (கி. பி. 898) கிராமத்தில் நிலத்திலிருந்து **புறவு** (வரும்படி) 1000 **காடி** என்றும் அதில் கிராம நிர்வாகத்திற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறது. ஆகவே அக்காலத்திய கிராம நிர்வாகம் பிற் காலத்தில் இன்னும் விரிவாகக் கூறப்பட்டபடியே அமைந் திருந்தது. நெ. 8, 9 பல்லவ கல்வெட்டுகளில் சேர்ந்திருந்தாலும் அவைகளை இதற்கடுத்த காலத்திற்கே சேர்த்திருக்க வேண்டும். இவைகோ பார்த்தி வேந்திரவர்மனது 14–வது ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது. இப்பிருது சோழ சிற்றரசன் ஆதித்யா II (கரிகாலன்) என்பவனைக் குறிக்கிறது. அவன் தனது ஆட்சியில் 14-ஆண்டுகள் இருந்தான் என நிச்சயமாகக் கூறமுடியாது. ஆயினும் சமீபத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் அனேக சான்று களைக் கவனித்தால் ஆதித்யா II-க்கு மேற்கூறிய பிருது இருந்த தென்றும் சுந்தர சோழன் காலத்தில் அவன் பிள்ளையாகிய ஆதித்யா II வடக்குப் பிரதேசத்தை ஆண்டான் என்றும் கொள்ளலாம். இவ்விரு கல்வெட்டுகளில் பார்த்தி வேந்திரவர் மனுக்கு அடங்கிய கடவ (பல்லவ) சிற்றரசன் சக்திவிடங் கனுடைய மனைவி சமவ்வை கொடுத்த நன்கொடைகளை விவரிக்கிறது. இம்மாதை பல்லவப் பேர்கடை (அதாவது பல்லவ சிற்றரசின் கீழ் ஒரு பெரிய நிர்வாகி அல்லது பெரிய நிர்வாகி யான பல்லவ சிற்றரசன் என இருவகையாகக் கொள்ளலாம்) யின் புத்திரி எனக் கூறப்பட்டிருக்கிறது. சக்தி விடங்கன் என்பது ஒருவனின் பெயர் அவன் பல்லவ வம்சத்தவன். அவன் பல்லவப் பேர்கடை என்னும் ஸ்தானத்தை வைத்துக் கொண்டிருந்த ஒரு கன்னட சிற்றரசின் மகளை மணந்து கொண்டான். இம்மாதின் பெயர் காடவன் பெருந்தேவி. இந் நன்கொடை வேங்கடத்தில் நின்று கொண்டிருக்கும் எம்பெருமானுக்குக் கொடுக்கப்பட்டது. அம்மாது வெள்ளி யால் ஒரு விக்கிரகம் செய்து அதற்கு உயர்ந்த நகைகள் செய்து (இவைகளுக்கு குறிப்புகள் இருக்கின்றன) இவ்வாபரணங்களின் எடை 47-களஞ்சு பொன் எனக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நன்கொடையைச் செய்து, கடவுளுக்கு நீராட்டம் செய்து கோவில் அதிகாரிகளிடம் 3000 குழி நிலத்தை (கடிகா என்னும் கோலால் அளப்பது) 16 அளவு கொண்ட கடிகைகளாகவும் 3 பட்டி நிலமாகவும் அளந்து கொடுத்தாள். இவை அனேகர்களிடமிருந்தது பெறப்பட்டன, அவர்களுள் திருச் சோஹினூரிலுள்ள சபையும் ஒன்று ஒரு மடத்தின் நிர்வாகியான லக்ஷ்மண நம்பி எனப்பவரும் ஒருவர்,

இளங்கோவிலுள்ள கடவுளும் ஒன்று. இவைகளை அவ்வவை களுக்கேற்ற பணத்தைக் கொடுத்து வாங்கினார்கள். சபைக்கு இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்து, அதே மாதிரி கடவுளுக்கும் கொடுத்து (வரி இல்லாமல் இருக்க) நிலத்தை குறிப்பிட்ட நாட்களில் கோவிலில் செய்யும் சேவைகளுக்காக கோவிலுக்குக் கொடுக்கப்பட்டது. இச்சேவைகள் சரிவர நடக்கின்றனவா எனக்கவனிக்க திருவேங்கடத்திலிருக்கும் **மட** அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வூரிலிருக்கும் **சபை** எடுத்துக் கொண்டு கவனித்துக் கொள்ளும். இவ்வேற்பாடு சூரியன், சந்திரன் இருக்கும் நாள் வரை இருக்க வேண்டும்; மேலும் இது ஸ்ரீ வைஷ்ணவர்களால் கவனிக்கப்படவேண்டும் இதற்கடுத்த நன்கொடையும் இம்மாதிரியானதே, இதில் 4176 குழி நிலங்களை **மட** அதிகாரியின் மேற் பார்வைக்கு நன்கொடை கொடுத்து, அதில் வரும் வரும்படியைக் கொண்டு மார்கழிமாதம் சுக்ல பக்ஷம் துவாதசியன்று நடக்கும் உற்சவத்தை நடத்த வேண்டியது. அடுத்த இரண்டு கல்வெட்டுகளும் பல்லவ அரசர்கள் செய்த நன் கொடையாயிருந்தாலும் பிற்காலத்திற்கு சம்பந்தப்பட்டதாகையால் இதைப்பற்றி பின்னர் கவனிக்கப் படும். ஆயினும் பல்லவர் காலத்திற்கு அப்புறம் கொஞ்ச நாட்களில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டதாலும் அப்பொழு திருந்த நிர்வாகத்தைப் பற்றி கூறுவதாலும் இவைகளை இங்கு கூறினோம். இதிலிருந்து இந்த கல்வெட்டுகளால் நமக்குத் தெரியப்படுவது என்னவென்றால் திருவல்லிகேணி கல்வெட்டுகள் வெட்டிய தந்திவர்மன் பல்லவன் காலத்திலிருந்தே கோவில் நிர்வாகத்திற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கோவில் நிர்வாகம் நன்கு அமைக்கப்பட்டிருந்ததோடு அல்லாமல் இக்கோட்டத்தைக் கவனிக்கத்தேவையான அரசும், கிராமப் பொதுக் குழுக்களும் அக்கிராமங்களில் கணக்குகள் சரிவர கண்காணிப்பதும் கிராம சபை நிலங்களை மேற்பார்வை யிடுவதும் அவைகளை விற்பனை செய்வதும் பணம் வாங்கிக் கொள்ளுவதும் அவைகளுக்கு வரியில்லாமல் செய்வதும் அவை களை பொது நிலங்கள் எனக்கருதி அவைகளைக் குறிப்பிட்ட காரியத்துக்கு உபயோகிக்கப்படுத்துவதும் ஆகிய பல்வேறு காரியங்களைக் கவனித்து வந்தனர். கோவில் நிர்வாகம் அப்பொழுது தான் ஆரம்பிக்கப்பட்டதென்று இக்கல்வெட்டு களிலிருந்து கருத முடியாது' ஆகவே ஆதாரங்கள் அதிகமா யில்லா திருப்பினும், கோவில் நிர்வாகம், பூஜைகள் எல்லாம் நன்கு அமைக்கப்பட்டிருந்தன எனக்கருதுவதில் தப்பில்லை.

அத்தியாயம் 10

# சோழ வம்சத்துக் கல்வெட்டுகள்

**திருச்சானூரில் சோழக் கல்வெட்டுகள்: பராந்தகன் I-ம் பராந்தகன் II-ம்**

சோழ வம்சத்துக் கல்வெட்டுகளை நாம் கவனிக்கும் போது திருச்சானூர் கோவிலில் பராந்தகன் I-னுடைய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. பல்லவ அரசன் விஜயாலயனைத் தோற்கடித்து சோழ ராஜ்யத்தை ஸ்தாபித்த பிறகு அவனுடைய பிள்ளை ஆதித்தன் இன்னொருதரம் படையெடுத்து தொண்டமண்டலம் முழுவதையும் சோழ ஆதிக்கியத்தின் கீழ் கொண்டுவந்ததை முன்னமே சொல்லப்பட்டது. அவனுடைய பிருதுகள் ஒன்றிலிருந்து அவன் காளஹஸ்திக்கு அருகில் அவனுடைய வடகோடியில் தொண்டைமான் ஆற்றூர் என்னுமிடத்தில் இறந்ததாகத் தெரிகிறது. ஆகவே அவன் இறப்பதற்குமுன் வடக்கிலுள்ள திருவேங்கடக் கோட்டம் உள்பட தொண்டமண்டலம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான் என ஊகிக்கலாம். அவனுடைய மகன் பராந்தகன் கி. பி. 906—ல் அரசு ஏற்றி மிக்க நீண்ட ஆட்சியான 48 வருட காலம் ராஜ்யத்தை ஆண்டான். இது அவனுடைய ஆட்சியை கி. பி. 952-53 வரை கொண்டு போகும். ஆகவே பராந்தகன் காலத்தில் தொண்டமண்டலம் சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆகவே திருச்சானூரில் அவனுடைய இரு கல்வெட்டுகள் இருப்பது பற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை. முதலாவது அவனது 29-வது ஆட்சி ஆண்டு—கி. பி. 935—ல் வெட்டப்பட்டது. அதில் ஒரு அதிகாரி திருச்சானூர் சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி திருக்கோயிலில் ஒரு நந்தா விளக்கு எரிய வைப்பது பற்றியும் அது சூரிய சந்திரான் இருக்கும்வரை நடக்க வேண்டியது பற்றியும் சொல்லுகிறது. இதற்கு அவ்வதிகாரி பணம் கொடுத்தார். அந்த அதிகாரி சேரநாட்டில் கொடுங்கலூரைச் சேர்ந்தவர் என்பது தெரியவருகிறது. அவர் அவ்வூர் வழக்கப்படி 40 களஞ்ச பொன் நிறுத்துக் கொடுத்தார். இந்த கைங்கரியத்தை "எம்பெருமான் அடியார்கள்" கவனத்தின் கீழ்நடத்த ஏற்பாடாகியிருந்தது. இவனுடைய ஆட்சியில் மற்றொரு சாஸனம் ஒரு நந்தா விளக்கை ஏற்றுவிப்பதைப்

பற்றியதாகும். இது மிகவும் சிதைந்து விட்டதால் இதை நன்கு அறிந்து கொள்ள முடியவில்லை. முன்னமேயே கூறப்பட்ட பார்த்திவேந்திரவர்மன் காலத்து இரண்டு சாஸனங்கள் (பார்த்தி வேந்திரன் பராந்தகன் II-ன் மகன்) பராந்தகன் I காலத்தி லிருந்த ஆசாரங்கள் அவனுக்கு 2, 3, தலை முறைகள் கழித்தும் கூட அதே மாதிரி இருந்து வந்தன. ஆகவே சண்டைகளுக்கு இடையில் சோழ அரசின் செல்வாக்கு குறையாமல் இருந்து வந்தது. பராந்தகனுடைய ராணி ஒரு சேர நாட்டு இளவரசி. ஆகவே சேர நாட்டிலுள்ள கொடுங்காலூரிலிருந்து ஒரு பக்தன் திருப்பதியில் தன் நன்கொடையை கொடுத்தான் என்பது வியக்கத்தக்கதில்லை. இக்கொடுங்காலூரான் சேர அரசனுடைய ராஜ்யத்தில் ஒரு அதிகாரியாயிருந்து தன்னுடைய சுற்று பிரயாணத்தில் ஒரு சமயம் திருப்பதிக்குச் சென்று மேற்படி நன்கொடையை சமர்ப்பித்து இருக்க வேண்டும். இந்த சாஸனத்திலும் சரி இதற்கு முன் ஒரிரு சாஸனங்களும் சரி இவ்விடத்தைத் திருச்சோஹினூரின் ஒரு பாகமாகிய ஜோஹி மல்லவரத்தின் பெயர் தான் திரிந்து அப்பெயர் ஆயிற்று. என்னலாம்; ஜோஹி என்பது தமிழில் சோஹூ என ஆயிற்று. சமஸ்கிருதத்தில் யோக என்பது தமிழில் யோகு என்றுவது போல் பிரபந்தத்திலும் இந்தத் திரிபைக் காண்கிறோம், மேலும் இது சோஹூ எனத்திரிந்திருக்கலாம். ஆயினும் இந்தத் திரிபு முடிவானதாகச் சொல்ல முடியாது. முதலில் திருச்சகனூர் என்று அழைக்கப்படுமுன் அவ்விடத்தை ஜோகி மல்லவரம் அழைத்ததற்குச் சான்று இருக்க வேண்டும். அத்தலம் திரு பராசரேஸ்வரம் திருந்தி திரு பலாதீஸ்வரம் என அழைக்கப் பட்டது. மேலும் அத்தலம் முன்னதாக ஜோகி மல்லாவரம் எனத் தெலுங்கில் அழைக்கப்பட்டதா? அப்படியானால் எப்பொழுது ஏன் அழைக்கப்பட்டது எனத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இடத்தை புராணங்களில் வரும் பராசரர் நினைவாகவும் பக்கத்திலிருக்கும் ஊரை அவருடைய பேரனை மஹரிஷி சுகர் நினைவாகவும் வைத்திருப்பது சரியே. ஆயினும் பொது வழக்கில் வந்துள்ள பெயர்கள் ரொம்ப நாளாக இருந்ததா என்பது முதலில் தெரிய வேண்டும். இந்த கோவிலுக்கு நேரில் போன போது இதனுடைய சரியான விவரம் தெரியலாயிற்று. சிவனுடைய கோவில் திருச்சானூரி லிருந்து கொஞ்சம் தூரத்திலிருக்கிறது; மேலும் அந்தக் கோவில் முன்னிருந்ததைவிட மிகவும் குறைந்து ஒரு சிறிய கிராமத்தின் நடுவில் காணப்பட்டது. கர்ப்பகிரஹமும் அதன் முன் வழியுமே இப்பொழுது இருக்கிறது. இதை ஒட்டியே

பக்கத்திலிருக்கும் சில வீடுகளும் அவற்றுள் கோவில் பூஜாரியுடைய வீடும் தான் இப்பொழுது எஞ்சி நிற்கின்றன. சமீபத்தில் சில மாடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கர்ப்பக் கிரஹத்தில் ஆவுடையார் மேல் லிங்கம் இருக்கிறது. ஆவுடையாரில் ஒரு லிங்கமும் ஒரு யோகி தபஸ் செய்வதும் சித்திரமாக வரையப் பட்டிருப்பது காண்பிக்கப்பட்டது. சிவன் எப்பொழுதும் லிங்கமாகத்தான் காணப்படுவார். இந்த மூர்த்தியைப் பற்றித் தெரிய வேண்டுமானால் ஆவுடையார் மேல் இருக்கும் சித்திரத்தை வைத்துக் கொண்டு தான் பார்க்க வேண்டும். இதை வைத்துப் பார்த்தால் இந்த இடத்திற்கு யோகி மல்லவரம் எனப் பெயர் வந்தது விளங்குகிறது. யோகியான அர்ஜுனனுக்கு சிவன் ஒரு மல்லனாக அதாவது வல்லவனாகத் தோன்றி அவனுடைய பலத்தை பரீக்ஷை செய்து அதன் பின்னர் அவனுக்கு பாசுபதாஸ் திரத்தைக் கொடுக்கிறார். ஆகவே இம்மூர்த்தத்தைக் கொண்டு இவ்வூருககு யோகி மல்லாவரம் எனப் பெயர் வந்தது சரி யென்பது விளங்குகிறது. ஆகவே அந்த மூர்த்தியின் பெயரை வைத்து அந்த ஊருக்குப் பெயர் வந்தது பொருத்த மாயிருப்பினும் அது அந்த கோவில் ஆரம்பத்திலிருந்து வந்த தாயிருப்பினும், அதற்கு மறு பெயராக பராசரேஸ்வரம் என்னும் தெய்வீகப் பெயரையும் வைத்து அதன் மூலம் பராசரருடைய பெயரை நிலை நாட்டியிருக்கலாம். மேலும் இவ்விடம் பராசரருடைய பெயரோடு சேர்க்கப்பட்டு சிவனும் அங்கே தோன்றுவது அந்தரிஷி இங்கு தபஸ் செய்திருக்கலாம் மேலும் இரு கிராமங்களும் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருக்கலாம். இப்பொழுதும் இவ்விரு கிராமங்களுக்கும் நடுவிலுள்ள இடைவெளி மிகக் குறைவே. ராஜ்ய வியவ ஹாரங்களுக்கு இவ்விரு கிராமங்களும் ஒன்றாகவே கருதப் பட்டிருக்க வேண்டும்.

**ராஜ ராஜனுடைய கல்வெட்டுகள் கி. பி. 985—1016 :**

ராஜ ராஜனுடைய ஆட்சிக்கு வந்தால் நமக்கு அநேக கல் வெட்டுகள் அதாவது ஐந்து Nos 14—லிருந்து 18—வரை (தேவஸ் தான சாஸனங்கள் Vol I) கிடைக்கின்றன. இவற்றுள் சில வீரநரஸிம்ம யாதவராயரின் கட்டளையின் பேரில் பழைய கல் வெட்டுகளின் நகல்கள் பொறிக்கப்பட்டவை. இவை ஒரு திருப்புல்லாணி தாஸர் என்பவரால் வெங்கடேஸ்வரருடைய திருக்கோவில் உள் சன்னதி சீர்திருத்தப்பட்ட பொழுது பொறிக்கப்பட்டவை. இதைப்பற்றி பிறகு சொல்லுவோம்.

இப்பொழுது ராஜ ராஜன் I-னுடைய ஆட்சியின் பொழுது பொறிக்கப்பட்ட சாஸனங்களைக் கவனிப்போம். நெ. 14 ராஜ ராஜனுடைய 16-வது ஆட்சி ஆண்டு பி பி. 1001—ல் எழுதியது. இதில் திருவேங்கட தேவப் பெருமாளுடைய திருவபிஷேகத்திற்கு (தலையங்கிக்கு) ஒரு தங்கத்தால் செய்யப்பட்ட தட்டைடதேவி அம்மனுர் (ராணி) நன்கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது, இவளை சேர அரசனுன சேரமான் என்பவனுடைய பெண் என்றும் பொன் மாளிகையில் இறந்த அரசனுடைய மனைவியென்றும் சொல்லப்படுகிறது. இந்த பிருது சுந்தர சோழன் என்னும் பராந்தகன் II (ராஜ ராஜனுடைய தகப்பனுர்)ருக்கு கொடுக்கப்பட்டது. இவன் ஒரு சேர நாட்டு அரச குமாரியை மணந்து கொண்டான், ஆனுல் இவள் ராஜ ராஜனுடைய தாயார் இல்லை. இவள் ராஜ ராஜனுடைய ஆட்சி காலத்தில் இருந்தாள்; அரண்மனையில் ராணி—அம்மையாக கௌரவத்துடன் குறைந்தது 31—வருஷம் வசித்து வந்தாள். அவளுடைய நன்கொடை 51—களஞ்ச தங்கம் கொண்டது அதில் 4 புஷ்பராகம் (ruby) 6 வைரம், 28 நன் முத்துக்கள் கொண்டது. இதில் ஒரு வித சந்தேகமும் இல்லாமலிருக்க அவளை பராந்தக தேவி அம்மன் (பராந்தகனுடைய ராணி) எனக் கூறப்பட்டிருக்கிறது. நெ. 15-ம் ராஜ ராஜனைப்பற்றுக்கிறது அதில் அக்காலத்து வழக்கத்துக் கிணங்க வரலாற்று முகவுரையுடன் ஆரம்பிக்கிறது. அதில் ராஜ ராஜனுடைய ஒரு பிரஸஸ்தியை (மெய்க்கீர்த்தியை) விவரித்து அவனுடைய வெற்றிகளைக் கூறுகின்றது. அதில் சோள தேசத்து அதிகாரியும் காவிரி தென் கரையில் உள்ள ஆவூர் கூற்றம் என்னும் ஊரைச் சேர்ந்தவனுமான ஒருவனுடைய நன்கொடைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. அவன் பெயர் அருளாக்கி என்றும் மூவேந்த வேலன் என்னும் பிருதோடு கூடினவன் என்றும் தெரிகிறது. இதில் மீதி விவரங்கள் சிதிலமாகி விட்டன. நெ. 16-ல் 29—வது ஆட்சி ஆண்டைக் குறிப்பிட்டு திருவேங்கடமுடையானுக்கு ஒரு நந்தா விளக்கு சமர்ப்பித்ததைக் கூறுகிறது. இதில் 29-என்னும் நெம்பர் வந்திருப்பினும் அதன் சந்தர்ப்பத்தைக் கவனித்தால் அது அரசனுடைய ஆட்சி ஆண்டைக் குறிப்பதாகக் கொள்ளமுடியாது. அடுத்த கல் வெட்டு திருச்சானூரில் கிடைத்தது. அதில் இதே அதிகாரி 40—களஞ்சு பொன் கொடுத்து ஒரு நந்தா விளக்கை சமர்ப்பித்ததாகத் தெரிகிறது. இதிலும் எழுத்துக்கள் சிதிலமாகி விட்டன. அடுத்தது ராஜ ராஜனுடைய 23-வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது. இது ஜோகமல்லா வரத்திலுள்ள பராசரேஸ்வரர்

கோவிலில் உள்ளது. இது சோழ தேசத்தில் நென்மலி நாட்டில் உள்ள அருவைக் கோவை என்னும் பிராம்மண அக்கிரகாரத்தி லுள்ள ஒரு சோழ தேசத்து பிராம்மண அதிகாரியால் கொடுக்கப்பட்ட நன்கொடை. அவனுடைய பெயர் கோடி நம்பி அங்காடி என்றும் அவனுக்குப் பிருது கங்கை கொண்ட சோழ பிரம்மமாராயன் (மகாராஜா கங்கை கொண்ட சோழ பிராம்மணன்) என்றும் தெரிகிறது. இவன் 26 களஞ்சு பொன் கோவிலில் கட்டி அதை வைத்துக் கொண்டு உத்திராயண சங்கராந்தியன்று பெருமாளுக்கு தைலக்காப்பு சமர்ப்பிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ததைச் சொல்லுகிறது. ராஜ ராஜன் காலத்திய இந்த சாஸனங்கள் அவனுக்குக் கீழுள்ள அதிகாரிகள் கொடுத்த நன்கொடைகள் மலையின் மேல் பெருமாளுக்கும் திருச்சானூரிலுள்ள விஷ்ணு சிவன் கோவில் களுக்கும் செய்ததை விவரிக்கின்றன. நெ, 15–ல் இவ்வர சனுடைய வெற்றிகளைப்பற்றி சாதாரணமாகவும் நெ. 18-ல் மெய்க்கீர்த்தி என்னும் பிருதுகளைப் பற்றியும் கூறுகின்றன. இவ்வரசனின் ஆட்சி கி.பி. 985–லிருந்து 1016 வரை சாஸனங்கள் இவ்வளவே.

**ராஜேந்திர சோழனின் கல்வெட்டுகள் கி. பி. 1011-1044 :**

பிறகு அவனுடைய பிள்ளை ராஜேந்திர சோழனின் இரு கல் வெட்டுகள் காணப்படுகின்றன. ஒன்று மலையின் மேலுள்ள கோவிலிலும் மற்றொன்றுமலையடிவாரத்தில் கபிலேஸ்வரர் கோவிலிலும் காணப்படுகின்றன. இதில் பிரஸஸ்தி (அரசனின் வெற்றிச் செயல்களைப் பற்றி) ஒன்றுமில்லை. நேரிடையாக ராஜேந்திரனுடைய 7-வது ஆண்டு என ஆரம்பிக்கிறது. வருடத்தில் இத்தனுவது நாள் என்பது விடப்பட்டிருக்கிறது சிற்பியின் கவனக் குறைவால். சாதாரணமாக வருடத்தை முதலில் கூறி பிறகு தேதியைக் கூறுவது வழக்கம். இங்கு வருடத்தைக்கூறி அன்றைய நாளைக்குறிப்பிட்டிருக்கிறது. இத்தனுவது நாள் என்னும் நம்பர் விடப்பட்டிருக்கிறது. இதற்குச் சரியான வருடம் கி. பி. 1018 ஆகும். இது மிகவும் முக்கியமான சாஸனம். திருவேங்கட முடையானுடைய கோவிலில் பூஜைகள் சரிவர நடந்து வருகின்றனவா என்பதை விசாரிக்க நடத்திய அதிகார பூர்வமான விசாரணை. விசாரணை நடத்தியவர் கொத்தமங்கலம் ஊரின் முதல்வர். இங்கு திருவேங்கடக் கோட்டம் ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் பெரும் பாணப்பாடியில் ஒரு பாகம் எனக்கூறப்பட்டிருக்கிறது. இந்த விசாரணை குடவர் நாட்டிலுள்ள திருச்சுகனூரில் நடத்தப்

பெற்றது. திருச்சுகனூர் இங்கு தேவதானம் (அதாவது கடவுளுக்குக் கொடை) எனக் கூறப்பட்டிருக்கிறது, அவ்வதிகாரி தானே கோவிலுக்காக கொடுத்த ஒரு வீட்டின் முன் கூடத்தில் தன் சபையை வைத்து கோவில் நிர்வாகத்தைப்பற்றி விசாரணை நடத்தினர். அவர் அந்த விசாரணையை "வகை செய்வது" என்னும் நில அதிகாரி (குடவூர் நாட்டைச் சேர்ந்தவர்)யை வைத்துக் கொண்டு நடத்தினர். இந்நில அதிகாரி சிறுத நாட்டுப் பெருமகன் என் அழைக்கப்படுகிருர் அதாவது சிறு தானம் என்னும் வர்க்கத்தினருக்கு முதல்வர் எனக் கொள்ளல் வேண்டும், இவர் பெயர் கடப்பான் கொடையன் அதாவது கடப்பான் கொடை என்னும் ஊரைச் சேர்ந்தவன். மேலும் விசாரணையில் "தேவர்காண்மி" என்னும் கோவில் ஊழியர்களும் கலந்து கொண்டார்கள். இந்த விசாரணையில் தெரிய வந்தது என்ன வென்றல் திருக்கோவிலுக்கு ஒன்று தானமாகக் கொடுக்கபட்ட சிறு முண்டியம் என்னும் கிராமத்தின் சபை கோவிலுக்கு வழங்கப்பட்ட பொன்னை வாங்கிக் கொண்டு, கோவிலில் நந்தா விளக்காக 24 விளக்குகள் (ஒரு விளக்கு கற்பூரத்தால் எரியப்பட வேண்டும்) எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க ஒத்துக் கொண்டார்கள் என சாஸனத்தில் இருக்கிறது. அதில் திரு முண்டியம் சபையார் 2 விளக்குகள் தான் எரித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே முதல் பாகத்தில் 20 களஞ்சு திருமுண்டியம் ஊரிலிருப்பவர் களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியது. மேலும் கோவில் பொக்கிஷத்திலிருந்து 3 களஞ்சு எடுத்து திருச்சுகனூர் சபைக்குக் கொடுக்கவேண்டியது. இவைகளை வைத்துக்கொண்டு அச்சபை மலை மேலுள்ள கோவிலில் எல்லா விளக்குகளையும் சரிவர எரியவைக்க வேண்டியது எனத் தீர்மானம் ஆயிற்று. அதிகாரியால் கொடுக்கப்பட்ட இத் தீர்மானத்தை திரு முண்டியம் சபை அங்கீகரித்தது. திருச்சுகனூர் கோவிலில் பொக்கிஷதாரரும் அங்கீக்கரித்தார்கள். திருச்சுகனூர் சபை யாரும் சூரிய சந்திராள் இருக்கும் வரை எல்லா விளக்கு களையும் எரிய வைக்க கோவில் சிப்பந்திகளை ஒப்புக் கொள்ளச் செய்தார்கள். இதுவே ஶ்ரீவைஷ்ணவர்கள் ஏகமனதாகச் சொன்ன தீர்ப்பு.

மற்றைய கல்வெட்டு மலையடி வாரத்தில் கபில தீர்த்தம் எனப்படும் கபிலேஸ்வரர் கோவிலில் இருக்கிறது. இதில் கோட்டூர் தலைவன் என்பவனும் ராஜேந்திர சோழ பிரம்மமாராயன் என்னும் பிருது கொண்டவனும் மேலும்

முனயாதரையன் என அதிகார பிருது கொண்டவனுமான ஒருவன் எழுப்பிய வீட்டைப் பற்றிக் கூறுகிறது. இக் காலத்திலிருந்து குலோத்துங்கன் I காலம் வரை நமக்கு கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. இது கி. பி. 1018–லிருந்து குலோத்துங்கன் I-னுடைய மூன்றுவது ஆண்டு கி. பி. 1073 வரை சுமார் அரை நூற்றுண்டுகாலத்தைக் குறிக்கும்.

**குலோத்துங்க சோழன் I-என்னும் சாளுக்கிய சோழனின் கல்வெட்டுகள் : விக்கிரம சோழனின் கல்வெட்டுகள் :**

ஜோகி மல்லாவரம் பராசரேஸ்வரா கோவிலில் இருக்கும் நெ. 21 கல்வெட்டிலிருந்து நாம் குலோத்துங்க சோழனுடைய ஆட்சிக்கு வருகிறோம். இவனுடைய ஆட்சி கி. பி. 1070-லிருந்து கி. பி. 1148 வரையில். தனக்கு குலோத்துங்கன் எனப் பெயர் வைத்துக் கொண்ட இவன் கீழ் சாளுக்கிய வம்சத்து சிற்றரசனும் சோழ இளவரசி மதுராந்தகியின் பிள்ளையும் ஆவான். ராஜேந்திர சோழன் I–னுடைய பெண் மதுராந்தகியானவள் கீழ் சாளுக்கிய ராஜராஜனுடைய மனைவியாவாள். இந்த கீழ் சாளுக்கிய ராஜ ராஜன் ராஜராஜனுடைய பெண்ணிற்கும் கீழ் சாளுக்கிய இளவரசன் விமலாதித்தியனுக்கும் பிறந்தவன். ஆகவே குலோத்துங்கன் ஒரு சோழ சாளுக்கிய அரசு பதவிக்கு வாரிசானவன் சோழ சாம்ராஜ்யத்தை கைப்பற்றிக் கொண்டான். இவன் சோழ அரசர்களுள் திறமைவாய்ந்தவன் சோழப் பேரரசர்களில் ஒருவன் எனக் கருதப்படுகிறுன். திருப்பதியைச் சுற்றிலுமுள்ள கல்வெட்டுகளிலும் மற்றும் சில அவனுடைய முதலாண்டுகளில் பொறிக்கப்பட்ட சாஸனங்களிலும் அவனுடைய எல்லா சாளுக்கிய பிருதுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில அவனுக்குக் கீழ் இருந்த சிற்றரசர்களுடைய பிருதுகள். அவற்றுள் "சமாதிகத பஞ்சமகாசப்த" என்னும் விநோதமான பிருது கீழ் சாளுக்கியர்களால் அவ்வம்சத்து முதல்வனை குப்ஜ விஷ்ணுவர்தன் காலத்திலிருந்து உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அது சிற்றரசர்களுக்கு நாதங்கள் எழுப்பும் பாட்டு வாத்தியங்களை (bands) எடுத்துக்கொண்டு செல்லுவதற்காகக் கொடுத்த பிருது ஆக ஆரம்பித்தது. புதிதாக பதவியில் உயர்த்தப்பட்டவர்களுக்கு மரியாதைக்காகக் கொடுக்கப்பட்ட ஒரு கௌரவம் ஆவது இம்மாதிரியான வாத்தியத்தை எடுத்துக்கொண்டு செல்லுவது. இதில் முதலாவதான நெ. 21—வாலும் I-ல் இவ்வரசனை மஹா மண்டலேஸ்வர (ராஜ்யத்தில் ஒரு பிரிவுக்கு தலைவன்),

சாளுக்கியவம்சத்திற்கு அணிகலன் போன்றவன், வெங்கி நாட்டரசன், கோதாவரி ஆற்றின் நாயகன் காணுபாக்கத்தின் உயர் தலைவன் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இவை யெல்லாம் கீழ் சாளுக்கியர்களுக்கே உரித்தான பிருதுகள் ஆகும். பின் வருபவை அவனுக்கு சொந்தமானவை. கரவாள பைரவ—கத்தியால் அச்சத்தை உண்டாக்குபவன். அதற்கப் புறம் வெங்கடநாத புரந்தர அல்லது வெங்கடநாதபுர (திருப்பதி)த்திற்கு அரசன். மேலும் அவன் கடகபுரம் (ஒரிஸ்ஸாவில் கலிங்க நாட்டு தலைநகரான கட்டக்) என்னும் கோட்டையை முறியடித்தவன். இந்த பிருதுகளுக்கெல்லாம் கடைசியாக முன் சொன்ன மஹாமண்டலேஸ்வர என்னும் பிருது வருகிறது. மேலும் இவனை மஹாராஜா ஸ்ரீ வீர ராஜேந்திர சோழன் எனவும் அழைக்கப்பட்டு அவனுடைய மூன்ருவது வருடத்தை குறிப்பிடுகிறது. இதில் வீர என்பது அவன் வீரமுள்ளவன் எனக்குறிப்பதே தவிர அவனுடைய பெயரின் ஒரு பாகம் இல்லை. இதே வீர என்னும் அடைமொழி இவனுடைய சிறு தகப்பன் சோழவீர ராஜேந்திரனுக்கும் இருந்தது. இந்தக் கல்வெட்டில் இரண்டு நந்தா விளக்கு எரிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கொடுக்கப்பட்ட நன்கொடை குறிப்பிட்டு இருக்கிறது. நெ. 22 திருப்பதியில் இருக்கிறது. அது மிகவும் சிதிலமாயிருப்பதால் அதிலிருந்து ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அதில் ஸ்ரீ ராஜேந்திரதேவ என வருவது அனேகமாக ராஜேந்திர குலோத்துங்கனைக் குறிப்பிடுகிறது. என்னலாம் அடுத்தது ஜோக மல்லாவரம் சிவன் கோவிலில் இருக்கிறது. மிக முக்கிய மானது. ஏனெனில் குலோத்துங்கனுடைய எல்லா பிரஸஸ்தி களையும் கூறுகிறது. அதில் சிற்றரசனுக இருக்கிற காலத்திலும் அவன் இயற்றிய பெரும் வெற்றிச் செயல்களைக் கூறுகின்றன. அது குலோத்துங்கனுடைய 24-வது ஆட்சி ஆண்டு அதாவது கி. பி. 1094 வருடத்திய கல்வெட்டாகும். அதில் ஒருவர் கோவிலில் நான்கு நந்தா விளக்குகள் எரிய ஏற்பாடு பண்ணு வதற்கு ஒரு விளக்குக்கு 32 பசுக்கள் வீதம் 128 பசுக்களை கோவிலில் கர்ப்ப கிரஹத்தில் சேவை செய்யும் சில சைவ பிராமணர்களுக்குக் கொடுத்து அவர்களும் அவைகளை வாங்கிக் கொண்டார்கள். இந்த சாஸனத்தின் சாரம்சம் இதுதான். இங்கு இந்த மண்டலத்தை ராஜேந்திர சோழமண்டலம் எனக் கூறப்பட்டிருக்கிறது. தொண்டைமண்டலம் என்ருே ஜெயங் கொண்ட சோழ மண்டலம் என்ருே கூறவில்லை. மண்டலத்தின் பிரிவுகள் முன்போலவே கூறப்பட்டிருக்கின்றன.

24 நெ. அதே கோவிலில் இருக்கிறது. முதல் பாகம் மறைந்து விட்டது இக்கல் வெட்டு அவனுடைய 35-வது ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்டது. அதில் கண்ணன் வாஸுதேவன் என்னும் சோழ பிரம்மமாராயன், இருட்டை ஒழித்தவன், தன் வலிமையால் சில சம்பாதித்தவன் என்றெல்லாம் கூறப்பட்டவன் கொடுத்த நன்கொடையைப் பற்றிக் கூறுகிறது. அவன் முன்னைப்பூண்டி என்றும் சிவபாதசேகர நல்லூர் என்றும் கூறப்படுகிற ஒரு தேவதான கிராமத்தில் ஐந்து மடைபொன்னிற்கு கொஞ்சம் நிலத்தை வாங்கி அதற்கு வரி செலுத்துவதிலிருந்து நீக்கிக் கொண்டான். இதில் முக்கியம் என்னவென்றால்இதற்கு செய்து கொண்டமுறை ஆகும். கண்ணன் வாஸுதேவன் மாகாணி என்னும் சிறு வட்ட அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொண்டான். அதற்குபதில் அரசனிடமிருந்தே வந்தது. அரசன் வாய் வார்த்தையாகச் சொன்ன தீர்ப்பு அக்கிராமம் முழுவதும் வரிக்கட்டுபாடு இல்லாத கோவிலுக்குக் கொடுத்த நன்கொடை நிலம் ஆகும் என்று. இத்தீர்ப்பை தீர்வை இலாகாவிலுள்ள பல்வேறு அதிகாரிகள் கையொப்ப மிட்டார்கள். ஏழு அல்லது எட்டு பெயர்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகவே 35—வது ஆட்சி ஆண்டில் அந்த நிலம் வரித்தீர்வையற்ற கோவில் நிலமாக ஆகியது. 25 நெ. ம் அதே கோவிலில் இருக்கிறது. இது குலோத்துங்கனின் 41-வது ஆண்டில் பொறிக்கப்பட்டது. இது நன்றாகப்பாது காக்கப்படவில்லை; எனினும் அதில் ஒரு நிலத்தை மஹாதேவனுக்கு அதாவது கோவிலுக்கு விற்றதைக் குறிக்கிறது. இதில் கூறப்பட்ட மற்ற விஷயங்கள் இக் கோவிலைப்பற்றியும், காலஹஸ்தீஸ்வரர் கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு குளம் வெட்டு வதைப்பற்றியும். இதில் கையொப்பமிட்டவர்கள் பெயர்கள் கூட போய்விட்டன. நெ. 26 மலைமேலுள்ள கோவிலில் இருக்கிறது. இதில் இப்பொழுது மீதம் இருக்கும் பொறிப்பிலிருந்து தெரிவது குலோத்துங்கனுடைய பெயரைச் சொல்லி அவனுடைய பிரஸஸ்திகளையும் சொல்லுகிறது. மற்றவை அழிந்து விட்டன. நெ. 27—ம் அக்கோயிலிலேயே இருக்கிறது. அதில் எஞ்சியிருக்கும் பிரஸஸ்தி பாகத்திலிருந்து, இது குலோத்துங்கன் ஆட்சியைத்தான் குறிக்கிறது என நிச்சயமாகக் சொல்லலாம். ராஜேந்திரன் என ஆரம்பிக்கும் பிருதுகளோடு கூடிய ஒரு அதிகாரியின் மனைவி பெருமாளுக்காகக் கொடுத்த பால், தயிர் நன்கொடையைப் பற்றிக் கூறுகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இக்கோவில் பெருமாளை "திருவாய்ப்படி திருமலை ஆழ்வார்" எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது மலை மேலிருக்கும்

இடைச்சியர்களுடைய ஊர். ஆகவே குலோத்துங்கன் I காலத்தில் இப்பெருமாளை ஆழ்வார்கள் கிருஷ்ண விஷ்ணுவின் அம்சம் எனக்கருதினார்கள் எனக் கொள்ளலாம். இக்கோயில் மலைமேலுள்ள கிருஷ்ணன் கோயில் என எந்த சரியான தேதியில் கருதப்பட்டது என்பது இந்த சாஸனத்திலிருந்து தெரியவில்லை நெ. 28-ம் திருப்பதியில் இருக்கிறது அதுவும் குலோத்துங் கனுடைய காலத்திய சாஸனம். நெ. 29, 30-ம் அவன் காலத் தியதே ஆனால் அவைகளுள் விசேஷமாக ஒன்றுமில்லை. நெ. 31, 32 ஐக்கூட இதே மாதிரி சொல்லலாம் குலோத்துங்கனுடைய ஆட்சி காலத்திய மொத்தம் 12 கல்வெட்டுகள். இவைகளால் தெரிவது அவனது நாளில் இந்த பிரதேசம் சோழர்களுடைய ஆட்சிக்குக் கீழ் இருந்தது. குலோத்துங்கன் சிறிய சாளுக்கிய சிற்றரசனாயிருந்த காலத்திலிருந்து அவனுடைய ஆட்சியின் வெகு காலம்வரை இது மாதிரி இருந்திருக்கிறது. இங்குள்ள திருப்பதி யிலுள்ள விஷ்ணு கோவில், திருப்பராசரேஸ் வரத்திலுள்ள சிவன் கோவில், காளஹஸ்தியிலுள்ள கோவில் எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. இவருக்குப் பின் வந்த விக்ரமசோழன் காலத்திய கல்வெட்டு ஒன்றுதான். இவன் கி. பி. 1118-ல் ஆட்சிக்கு வந்து 17, 18 வருஷங்கள் ஆட்சிபுரிந்தான். ஆகவே இவன் ஆட்சி 1118-லிருந்து 1135 வரை நீடித்திருந்தது. இந்த ஒரு சாஸனத்தில் விக்ரமசோழன் குலோத்துங்கசோழன் பூண்ட பிருதுகள் அனைத்தையும் பூண்டிருக்கிறான். இது இவனுடைய 16-வது ஆட்சி ஆண்டு கி. பி. 1134-ல் இருந்தும் கூட இப்பிருதுகளைப் பூண்டு இருக்கிறான். இப்பிரதேசம் இங்கும் ராஜேந்திரசோழமண்டலம் எனக்கூறப்பட்டிருக்கிறது. இதில் திருப்பராஸரேஸ்வரம் கோவிலில் வைகாசி மாத உற்சவத்திற்கு எண்ணை விளக்குகள் எரிய விடுவதற்காகக் கொடுத்த நன்கொடையைக் கூறுகிறது. இந் நன்கொடை முன்னைப்பூண்டி என்னும் தேவதான ராமத்திற்கு வடக்கி லிருக்கும் ஒரு நிலப்பரப்பு.

ஆகவே கி. பி. 1017–லிருந்து கி. பி. 1135 வரை மலைக் கோவிலிலும் திருச்சானூரிலிருக்கும் சிவ, விஷ்ணு கோவில் களிலும் காளஹஸ்தியிலிருக்கும் பெரிய சிவன் கோவிலிலும் அனேக கல்வெட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆகவே இக் கோவில்கள் முன்னதாகவே இருந்திருக்க வேண்டும் அனேக மக்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றனவென்றும் சில சோழ அரசனிடம் இருந்த உயர் அதிகாரிகள் நன்கொடைகள் கொடுத்தார்கள் என்றும் தெரிகிறது. இவற்றுள் முக்கியமான நன்கொடைகள் யோக மல்லாவரத் (திரு பராசரேஸ்வரம்)

திலிலுள்ள சிவன் கோவிலுக்குக் கொடுக்கப்பட்டதென்றும் பெரிய தொகையாகவோ, கட்டடங்களாகவோ மலை மேலிருக்கும் விஷ்ணு கோவிலுக்கோ, திருச்சானூர் விஷ்ணு கோவிலுக்கோ கொடுக்கப்படவில்லை யென்றும் தெரிகிறது. இந்நன்கொடைகளில் அனேகம் தனி மனிதர்களால் கொடுக்கப் பட்டதால் இவற்றிலிருந்து பாரபக்ஷத்துடன் இக்கொடைகள் அரசாங்கதால் வழங்கப்பட்டன என்று சொல்ல முடியாது. ஆயினும் ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது பொது ஜனங்களிடம் பொதுவாகவும் அரசாங்கத்திலிருக்கும் உயர் அதிகாரிகளிடம் நிச்சயமாகவும் சிவ வழிபாடு செய்வது பற்றி அதிக ஆவல் இருந்தது எனத் தெரிகிறது. இதை வைத்துக் கொண்டு அக்காலத்தில் சைவசமயத்தைப் பரப்ப ஒரு பெரிய கிளர்ச்சி நடந்தது எனவோ விஷ்ணு வழிபாட்டையும் விஷ்ணு கோவில்களையும் இழிவு படுத்த முயற்சி இருந்தது எனவும் கொள்ள நியாயம் இல்லை. ஆனால் ஒரு விஷயம் நோக்க வேண்டியது அவசியம். அதாவது கங்கை கொண்ட சோழமா மன்னன் காலத்துக்குப் பிறகு கல்வெட்டுகள் ஒரு அரை நூற்றாண்டுக்குக் காணப்படவில்லை. பிறகு நாம் கல் வெட்டுகள் பார்க்கும் காலம் சோழ சாளுக்கிய இளவரசன் குலோத்துங்கன் காலத்திலாகும். இக்கல் வெட்டுகளிலிருந்து நமக்குத் தெரிவது அவைகள் சோழப் பேரரசால் அதிகமாக போற்றப்படவில்லை. இது ஒரு வேளை சோழர்களுக்கும் மேற்கு சாளுக்கியர்களுக்கும் இடையே இருந்த சண்டைகளால் ஒரு வேளை இருந்திருக்கலாம்.

ராஜ ராஜன் தன் ராஜ்யத்திற்கும் எல்லை ராஜ்யங்களுக்கும் ஒற்றுமையும் சமாதானமும் கொண்டு வர பாடுபட்டான். ஏனெனில் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் சோழ ராஜ்யத்தின் தெற்கு தென்கிழக்கு எல்லையிலும் வரப்போகும் பெரும் போருக்கு ஆயத்தம் ஆகவேண்டியிருந்தது. இதைப் பற்றி முன்பே சொன்னோம். கிழக்கு சாளுக்கியார்களுடன் விவாக சம்பந்தத்தால் ஏற்பட்ட ஒரு சமாதானத் தொடர்பு இந்த வரப்போகும் சண்டைக்கு ஆயத்தமாக்க ஒரு அடிகோலி போலும். ராஜராஜன் பின் வரப்போகும் சண்டையை எதிர் பார்த்துத்தான் இந்த மாதிரி ஒப்பந்தங்களையும் மற்றைய விவ காரங்களையும் செய்துகொண்டான் என்பதில் சந்தேகம் இல்லை; ஏனெனில் தன் இளவரசனும் மகனுமான கங்கை கொண்ட சோழனை வடமேற்கு எல்லை முனைக்கும் அங்கு நடக்கும் சண்டைக்கும் தலைவனாக நியமித்தான்; அதன்படி அப்பகுதியில் இவன் ஒரு பெரிய ராஜ பிரதிநிதியாக சண்டை புரிவதில் முழு

முயற்சியோடு ஈடுபடச் செய்தான். ராஜேந்திரன் என்னும் கங்கை கொண்ட சோழனும் இம்முனையில் மிகத்தீவிரமாக சண்டை போட வேண்டியிருந்தது, இந்த சண்டை இவனுடைய மூன்று பிள்ளைகளாலும் நடந்தது. இம்மூவரும் ஒருவர் பின் ஒருவராக சோழ ராஜயத்தின் அரசனாக முடிசூடிக்கொண்டனர். இதன் பிறகு சோழ சாளுக்கிய இளவரசான குலோத்துங்கன் சோழ சாம் ராஜ்யத்தைத் தன் வசமாக்கிக் கொண்டான், இந்த சண்டைக் காலத்தில் எல்லை முனையில் இருந்த மாவட்டங்களும் அவற்றுள் முக்கியமாக திருப்பதியும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களும் அடிக்கடி கைமாறின. ஆகவே அப்பிர தேசங்களைப் பாதுகாக்க தனி முயற்சிகள் தேவையாயிருந்தன. இதைச் செய்ய ஒரு வழி அப்பிரதேசத்தை சோழ ராஜ்யத்தின் வடக்குப் பிரதிநிதிகளிடம் பிரத்தியேக கவனத்திற்கு ஒப்படைப்பது. அப்பிரதிநிதி சோழ வம்சத்திற்கு நெருங்கிய வனுயிருந்ததால் இதில் ஒரு தவறுதலும் இல்லை. இந்த மண்டலத்தை கீழ் சாளுக்கியர்களின் கவனத்திற்கு விட்டு அக்கீழ் சாளுக்கியர்களின் தென் பிரதேச பிரதிநிதியின் கவனத்தில் விடப்பட்டது. ஆகவே சோழ சாளுக்கிய இளவரசன் குலோத்துங்கன் சண்டை நடக்கும் மத்திய பிரதேசமான இவ்விடங்களுக்கு அதிபதி ஆனுன். கங்கை கொண்ட சோழனுக்குவாரிசான இவன், சோழ ராஜ்ய வசம் இருந்த மைசூர் ராஜ்யம் முழுக்கவும் சைன்யங்களுடன் சென்று பெல்லாரி ஜில்லாவில் ஹம்பிக்குப் பக்கத்தில் கம்ப்ளி என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து சாளுக்கியர்களுடைய பிரதேசத்தில் நுழைந்து அதற்கு மத்தியிலுள்ள கோல்ஹாப்பூரை அடைந்தான். அங்கு நடந்த சண்டையில் அவன் வீழ்ந்தான். அவன் தம்பி மேலும் சைன்யங்கள் கொண்டு வந்து எதிரிகளை ஓடச் செய்தாலும் அந்த இடத்தை தன் வசம் நிறுத்திக் கொள்ள பெரும் முயற்சி செய்யவேண்டியதாயிற்று. அவனுக்குப் பிறகு வந்த வீரராஜேந்திரன் இதே சண்டைய இன்னும் அதிக விஸ்தாரமான பிரதேசத்தில் போடவேணடியதாயிற்று வீர ராஜேந்திரன் மேற்கு சாளுக்கியர்களை (குந்தவர்களை) கூடல சங்கமத்தில் தோற்கடித்து அங்கிருந்து வீர ஜெயத்தோடு விஜயவாடாவிற்கும் அதற்கு வடக்கிலும் சென்றதாகத் தெரிகிறது. இந்த காலத்திய கல்வெட்டுகள் ஆந்திரதேசத்தில் திராக்ஷராமாவிலும் மற்றும் அருகிலுள்ள இடங்களிலும் காணப்படுகின்றன. அதிலிருந்த இப்பிரதேசம் சாளுக்கிய மன்னன் சோமேஸ்வரன் கீழ் அவன் மகன் விக்கிரமாதித்தியனுல் ஆளப்பட்டது. அதே சமயத்தில் சாளுக்கியர்கள் ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவனை காம்பளியில் ராஜ பிரதிநிதியாக

நியமித்ததாகத் தெரிகிறது. இவைகளிலிருந்து நமக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிவது இவ்விரு சாம்ராஜ்யங்களுக்கும் இடையே பெருத்த சண்டை நடந்து கொண்டிருந்தது. அச்சண்டை தொண்டை மண்டலத்திலுள்ள திருவேங்கடக் கோட்டத்திலும் மிக மும்முரமாக இருந்தது. ஆகவே இந்த சமயத்தில் ஜனங்கள் பயமின்றி தங்கள் காரியங்களை கவனிப்பதும், அதிகாரிகள் விசாரணைகள் நடத்துவதும் கோவில்களுக்கு நன்கொடைகள் கொடுப்பதும் அவைகளை சாஸனங்கள் மூலம் எழுதிவைப்பதும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதனால் தான் கங்கை கொண்ட சோழன் ராஜேந்திரனுடைய ஆட்சியின் முற்பகுதியிலிருந்தே குலோத்துங்கனுடைய மூன்றுவது வருடம் வரையில் இப்பிரதேசத்தில் கல்வெட்டுகள் காணப்படவில்லை. இது குலோத்துங்கன் சோழ சாம்ராஜ்யத்திற்கு தலைமை வகிக்க ஆரம்பித்த பிறகும் இருந்திருக்கவேண்டும். குலோத்துங்கனும் அவன் காலத்துக்குச் சரியாக சாளுக்கிய விக்கிரமாதித்திய VI-னும் யுத்தம் செய்வதையே நாட்டின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். பலநாட்கள் இவ்வாறு போரிட்ட பின்னர் அவர்களுடைய ஆட்சியின் பின்பகுதியில் கிட்டத்தட்ட ஒரு தலைமுறை காலம் கழித்து இச்சண்டைக்கு முடிவு காண்பது அரிது என்றும் அது நீடிப்பது ஜனங்களுக்கு மிக்க துன்பத்தை விளைவிக்கிறதென்றம் இவ்வரசர்கள் கண்டு கொண்டனர். இதன் பின் இப்பேரரசுகள் ஒரு சமாதானத்திற்கு வந்தனர். அதன்படி மைசூர் பீடபூமி சாளுக்கியர் வம்சம் இருப்பது என்றும் இரு பேரரசுகளும் தங்கள் ராஜ்ய எல்லைகுள்ளேயே இருந்து கொண்டு ராஜ்யத்தை சமாதான முறையில் நடத்திக் கொண்டு போவதென்றும் உடன்படிக்கை எடுத்துக் கொண்டார்கள். குலோத்துங்கன் கி. பி. 1110-ல் இறந்தான் விக்கிரமாதித்தியன் மேலும் ஆறுவருஷம் இருந்து மறைந்தான். சோழ ராஜ்யத்தில் மேலும் மேலும் தக்க அரசர்கள் தோன்றி ராஜ்யத்தை செழிக்கச் செய்தனர் விக்கிரமாதித்தியனுக்குப் பிறகு சாளுக்கிய சாம்ராஜ்யத்தில் தக்க அரசர்கள் தோன்ற வில்லை. ஆகவே இந்த ராஜ்யம் படிப்படியாக பலம் குன்றி மறைந்தது. விக்கிரம சோழன் கீழ் சாளுக்கிய பிரதேசத்திற்கு சோழ நாட்டு ராஜ பிரதிநிதியாக இருந்தான். பிறகு அவன் தெற்கு நோக்கிச் சென்று சோழ சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றினான். ஆகவே இந்த காலம் முழுவதும் இந்த சோழ ராஜ்யம் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது.

அத்தியாயம்—11

# வைஷ்ணவ ஆச்சார்யர்களுடைய காலம்

**கல்வெட்டுகள் இல்லாத கால இடைவெளி :**

விக்கிரம சோழன் இறந்த பிறகு ராஜராஜன் III ராஜ்யத்தை ஏற்றுக் கொண்ட சில வருஷம் வரை இந்த பிரதேசத்தில் சில தலைவர்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களை தனியாக ஆட்சியாளத் தொடங்கினர்கள். இவர்களில் இரண்டு தனிக் கூட்டங்கள் குலோத்துங்கன் III ஆட்சியின் இறுதியிலும் ராஜராஜன் III ஆட்சி காலத்திலும், நம் கவனத்தைக் கவர்கின்றன. இவர்கள் பிறகு அவர்கள் பிரதேசங்களுக்கு தனி அரசர்களானர்கள். இவர்கள் தனி அரசர்களாக ஆக்கிக் கொண்டதால் அந்த காலத்தில் கல்வெட்டுகள் இல்லாதிருந் திருக்குமோ எனக் கருதினல் இதைப்பற்றி நாம் உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாது ; இந்த பிரதேசம் சோழர்களுக்கும் மேற்கு சாளுக்கியர்களுக்கும் அந்தந்த காலத்திற்கேற்ப தன் விசுவாசத்தை தெரிவித்துக் கொண்டது. இந்த சங்கடத்தால் அங்கேயுள்ள தனிச் சிற்றரசர்கள் தங்கள் சுயேச்சாதிகாரத்தை நிறுவ ஆரம்பித்தனர். மேலும் சோழர்கள் தெற்கில் போரில் ஈடுபட்டு இருந்தாலும் ஒய்சனர்களுடைய நடவடிக்கைகளாலும் இந்த சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன. காலக்கிரமத்தில் ஒய்சனர்கள் சோழ ராஜ்யத்தில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்த ஆரம்பித்தனர்.

**ஆசார்யர் நாதமுனிகள் முதல் ஆசார்யர் :**

10-ம் நூற்றுண்டின் முதலில் பல்லவ அரசு ஒடுங்கிற்று வரும் இரண்டு நூற்றுண்டுகளில் வைஷ்ணவ ஆசாரியர்கள். தங்கள் கொள்கைகளைப் பரப்புவதில் மிக்க ஈடுபட்டு இருந்தார்கள். ஆழ்வார்களின் பிரபந்தங்கள் நன்கு தொகுக்கப் பட்ட நூல் எனக் கருதுவது முடியாது. மேலும் நமக்கு வந்திருக்கும் பிரபந்தங்கள் அக்காலத்தில் இவ்வளவு பிரபல மடைந்திருக்காது. ஆயினும் ஆழ்வார் ஆசார்யர்களுடைய சரித்திரங்களைப்பற்றி பாரம்பர்யமாகச் சொல்லும் குரு பரம்பரையில் காணப்படுவது திருமங்கையாழ்வார் தனது ஜீவதசையில் ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் இப்பிரபந்தங்களை ஒவ்வொரு மார்கழிமாதமும் பாடுவதற்கு ஏற்பாடு செய்தார் என்று. ஏதோ சிற்சில இடங்களில் சில தனி ஆசிரியர்கள் சில

சில மாணாக்கர்களுக்கு உபதேசம் செய்தார்களே ஒழிய, வைஷ்ணவ சம்பிரதாய நூல்களை ஒரு பரந்த ஏற்பாடாக சொல்லிக் கொடுக்க வழி இல்லாமல் இருந்தது. இதற்கு அவசியம் இருந்தது. அதைப் பூர்த்தி செய்ய கூடிய சீக்கரத்தில் முயற்சி செய்யவும் வேண்டியிருந்தது. இந்த முயற்சியின் ஆதிகர்த்தாவாக விருந்தவர் வைஷ்ணவ ஆசார்ய கோஷ்டியில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் நாதமுனியாவர். இவர் தென்னாற்காட்டில் காட்டு மன்னார் கோவிலில் பிறந்து அவ்விடத்தில் சிலகாலம் இருந்து மற்றைய காலத்தை தென்னாற் காடு கங்கை கொண்ட சோழபுரத்திற்கருகிலிருக்கும் குருகைக் காவலப்பன் கோவில் என்னும் ஊரில் செலவழித்தார். முதலில் இவர் வைஷ்ண மதஸ்தவராயிருந்து தனது ஊர் சுற்றுப் புரத்திலுள்ள சில சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து கொண்டிருந்தார். ஒரு சமயம் சில வைஷ்ணவ யாத்திரிகள் ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்களை சேவித்துக் கொண்டு வருகையில் இவருடைய இடத்துக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது இவர் தமது சிஷ்யர்களுக்கு யோகாப்பியாசம் சொல்லிக் கொடுப்பதும் தானே அதில் ஈடுபட்டிருப்பதுமாயிருப்பதைக் கண்டனர். அப்பொழுது அவர்கள் இவரெதிரில் திருவாய்மொழியிலிருந்து ஒரு பத்தைச் சொல்ல, அதனுடைய அர்த்தத்தை யோசித்து பக்திபரவசராய் அவர்களைத் திரும்பவும் அப்பத்தைச் சொல்லச் சொன்னார். அவர்கள் அதைச் சொல்ல இவரும் அதை நன்கு கிரகித்துக் கொண்டார். மேலும் அது நம்மாழ்வார் செய்த ஆயிரம் பாக்களில் ஒரு பத்து தான் எனவும் அவைகளை திருக்குடந்தையில் பெருமாளுக்கு எதிரில் சொல்லும் போது கவனித்து பாடம் பண்ணின பத்து என்பதையும் அவர்கள் வாயிலிருந்து கேட்டு மிகுந்த ஆவலுடன் மற்றைய பாக்களையும் தெரிந்து கொள்ள எண்ணினார். அந்த யாத்திரிகள் அவருக்கு மேலும் உதவி செய்ய முடியவில்லை. ஏற்கனவே இவர் நம்மாழ்வாரைப் பற்றியும் திருவாய்மொழியைப் பற்றியும் கேட்டிருக்கவே, திருக்குடந்தைக்குச் சென்றார். அங்கும் இவர் அப்பத்துப் பாக்கள் தவிர வேறொன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அங்குள்ளவர்கள் திருநெல்வேலியி லிருக்கும் ஆழ்வார் திருநகரி (நம்மாழ்வார் பிறப்புஸ்தலம்) க்குப் போனால் அங்கு இருப்பவர்கள் இவருக்கு உதவலாம் என்றார்கள். ஆகவே இவர் ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். அங்கும் அங்குள்ளவர்கள் ஒருவருக்காவது திருவாய்மொழி முழுவதும் தெரிந்ததாக தெரியவில்லை, ஆகவே நம்மாழ்வார் யோகத்தில் தவம் கிடந்த புளியமரத்திற்கு எதிரில் அவர் யோக சமாதியில்

அமர்ந்திருந்தார். திடீரென்று அங்கு ஒருவர் வந்து தனக்கு திருவாய்மொழி முழுவதும் தெரியுமென்றும்அதை அவருக்கு நம்மாழ்வாரின் நேர் சிஷ்யரான மதுரகவியிடமிருந்தே கேட்டறிந்ததாகவும் சொல்ல அவரிடம் அம்முழு பிரபந்தத்தையும் இவர் பெற்றுக் கொண்டார். உடனே நாதமுனிகள் இப்பிரபந்தத்தை ஸ்ரீரங்கத்திற்குக் கொண்டுவந்து அங்கு வருடாந்திர மார்கழி மாதஉற்சவத்தை மீண்டும் துவக்கி வைத்தார். நடுவில் நம்மாழ்வார் விக்கிரகத்தை வருடந்தோறும் ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டு வருவது. மழை, வெள்ளம் இவைகளால் நிறுத்தப்பட்டு அந்த உற்சவமே நிறுத்தப் பட்டிருந்தது. இப் பெரும் காரியத்தைச் சாதித்த இவர் திவ்ய தேசயாத்திரை செய்ய பிரயாணம் மேற்கொண்டார். குருபரம்பரை பிரகாரம் இவர் இமயமலைவரைச் சென்று வழியில் அனேக விஷ்ணு தலங்களை தரிசனம் செய்து கொண்டு திரும்புகையில் ஸ்ரீ அஹோபிலம், திருப்பதி ஆகியதலங்களையும் தரிசித்தார் திருப்பதியை விட்டுச் செல்லுகையில் அங்கு பகவானுக்கு நடக்கும் வழிபாடு செவ்வனேயில்லையென மிகவும் மனம் வருந்தினர். நாதமுனி அவர்களுடைய சரித்திரத்திலிருந்து இதைத்தவிர வேறு விஷயங்கள் நம்முடைய கவனத்துக்கு வரவில்லை. இவர் கலி 3684க்குச் சரியான கி. பி. 582-83-ல் பிறந்ததாகக்கருதப்படுகிறது. ஆயின் இந்த வரலாற்றில் வரும் சம்பவங்களைக் கவனித்தால் இத்தேதி மிகவும் முன்னதான தென்று தெரியவரும். மேலும் குரு பரம்பரையில் இந்த தேதி கொடுத்திருப்பினும் அவருடைய ஜீவிய காலத்திற்குத்தக்க வரலாற்றைக் கொண்டு வர அவர் திருவாய்மொழியை யோக சாதனம் மூலமாக நம்மாழ்வாரிடமிருந்து நேராக சித்திக்க 340 வருடங்கள் எடுத்துக் கொண்டார் எனக் கூறுகிறது. இந்த 340 வருடம் அதாவது 3 அல்லது 4 நூற்றாண்டுகள் கடைசி ஆழ்வாருக்கும் ஆசாரியர் நாதமுனிக்கும் நடுவில் இருந்த இடைவெளி எனக்கொள்ளலாம் இதை வைத்துக் கொண்டு பார்த்தால் இவருடைய காலம் 10-வது நூற்றாண்டின் முதலில் என ஏற்படும்.

**நாதமுனிகளின் பின் வந்த ஆசாரியர்கள் :**

**ஆளவந்தார், ராமானுஜர் :–** நாதமுனிகளின் பேரன் ஆளவந்தார் (யமுனைத்துறைவர், யாமுனாச்சாரியர் எனவும் அழைப்பர்). இவர் நாதமுனிகளின் இறுதி காலத்தில் பிறந்தார் இவருடைய ஜீவகாலத்தில் ராமானுஜரைப் பார்த்தார். மேலும் இவர் வைஷ்ணவர்கள் போற்றும் திவ்யதேசங்களுக்கு

க்ஷேத்ராடனம் பண்ணினர் அவற்றுள் திருப்பதியும் ஒன்று. இவரும் திருப்பதியில் பெருமாளுக்குச் செய்யும் ஆராதனம் குறைவுபட்டதாகக் கருதினர். முக்கியமாக நல்ல பூந்தோட்டம் இல்லாத குறையும் அதனால் பெருமாளுக்கு நித்திய புஷ்ப கைங்கரியங்கள் செய்வதில் குறையும் இருப்பதைக் கண்டு வருந்தினர். நித்திய புஷ்ப கைங்கரியம் பெருமாளுக்கு முக்கியமான அம்சமாயிருந்தத்தால் அவர் தன்னுடைய சிஷ்யர்களில் எவரேனும் திருப்பதியிலேயே சீதோஷ்ண ஸ்திதியைப் பொருட்படுத்தாமல் வாசம் சேய்து கொண்டு பெருமாளுக்கு உகந்தவாறு சேவை செய்ய முன்வருவார்களா என ஆராய்ந்தார். அவருடைய ஒரு பேரனே கிரஹஸ்தாஸ்ரமத்தை மேற்கொண்டு யுக்த வயசாய் இருப்பினும் தான் இந்த கைங்கரியத்தை மேற்கொள்ள முன் வந்து தானும் தன் குடும்பமும் தன்னுடைய கன்னிப் பெண்களான இரு சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு மலையின் மேல் வாசம் செய்ய ஆரம்பித்தார். இவர் பெயர் ஏதாயிருப்பினும் இவரை திருமலை நம்பி என அழைப்பர். இவர் அங்கு வாசம் செய்ய ஆரம்பித்து தெய்வ வழி பாட்டுக்கு உகந்த புஷ்பங்கள் தரும் பூங்காவை நிருமித்து மேலும் பெருமாளுக்கு நித்திய அபிஷேகாதிகளுக்கு வேண்டிய தீர்த்தத்தை அருகில் இருக்கும் ஆகாச கங்கையிலிருந்து தினம் தோறும் கொண்டு வரலானர். இவருடன் இருந்த இளைய சகோதரிகளில் ஒருவளை ஸ்ரீபெரும்பூதூரில் உள்ள கேசவசோமயாஜீ என்பவருக்கு மணம் செய்து கொடுத்தார். இவர்களுக்குப் பிறந்த குழந்தை தான் இராமானுஜர். ராமானுஜருடைய பிறந்த வருடம் கலி 4118-க்குச் சரியான கி.பி. 1017 என்பது பாரம் பரியமாக வரும் வரலாற்றுக் கூற்று. இவர் பிறந்த வருடத்தைத் தரும் ஒரு சுலோகத்தின்படி இதை சாகா 937 எனவும் கூறுவர். ஆகவே ராமானுஜருடைய ஜீவிய காலம் பெரும் பாகம் கி. பி. 11-வது நூற்றுண்டிலும் பிற்பாகம் 12-வது நூற்றுண்டில் கொஞ்ச காலமுமாக இருந்திருக்க வேண்டும், ராமானுஜருடைய ஜீவ காலத்தில் முக்கியமான சம்பவங்களில் அவர் திருப்பதிக்கு குறைந்தது இரண்டு தடவைகள் சென்றதை நாம் நன்கு கருத வேண்டும். சில வரலாறுகளில் அவர் நான்கு தரம் திருப்பதிக்கு சென்றதாகக் கூறப்படுகிறது. இதைப் பற்றி விவரமாக பின்னர் கருதுவோம். ஒரு தடவை அவர் திருப்பதிக்குப் போனது திருமலை நம்பிகளிடமிருந்து ஸ்ரீமத் ராமாயணம் படிப்பதற்காக. திருமலை நம்பியே ஆளவந்தாரிடம் ராமாயாணம் சொல்லக் கேட்டிருக்கிருர். இன்னெரு தரம் ராமானுஜர் திருப்பதிக்குப்

போனது அங்குள்ள சிற்றரசன் ஒருவனைக் கொண்டு கீழ்த் திருப்பதியில் ஸ்ரீ கோவிந்த ராஜருக்குக் கோவில் கட்ட ஏற்றுக் கொண்டபணி ஆகும். சிதம்பரத்தில் கோவிந்தராஜர் பிம்பத்தைத் அங்குள்ள அரசன் சமுத்திரத்தில் எறிந்துவிட ராமானுஜர் அப்பிம்பத்தை எடுத்து வந்து இக்கோவிலில் பிரதிஷ்டை செய்தார். ராமானுஜர் தனது ஜீவ காலத்தில் ஸ்ரீரங்கத்தில் தத்துவார்த்தங்களை பிரவசனம் பண்ணிக்கொண்டிருக்கையில் திருப்பதிக்கு இளமையும் ஆர்வமும் உள்ள ஒருவனை அனுப்பி புஷ்ப கைங்கரியம் நடத்த வேண்டும் எனக்கருதினார். குருபரம்பரையில் ஸ்பஷ்டமாக இல்லாவிடினும் திருமலை நம்பிகளுக்கு வயோதிகம் மேலிடவே அவரால் இந்த கைங்கரியங்களைச் செய்ய கஷ்டப்படுவதை நினைத்து இந்த ஏற்பாடு செய்ய நினைத்தார் போலும். அதற்குத்தக்க திருப்பதியிலுருந்து வந்த தன் சிஷ்யர்களுள் ஒருவனுன அனந்தாழ்வார் இந்த கைங்கரியத்தை மேற் கொள்வதற்கு தன் விருப்பத்தைத் தெரிவித்தார். திருப்பதியைப் பற்றிச் சொல்லும் அனந்தாழ்வாரால் எழுதப்பட்ட வெங்கடாசல இதிஹாஸமாலாவில் இவருடைய பெயர் அடிக்கடி வருகிறது. இந்த கிரந்தத்தை விரிவாக பிறகு கவனிப்போம். ராமானுஜர் காலத்தில் திருப்பதி கோவில் நிர்வாகமும் பூஜை புனஸ்காரங்கள் செய்வதில் ஈடுபாடும் ஒரு குறைவின்றி நன்கு நடக்கத் தொடங்கியது. இந்தக் காலத்தைப்பற்றிய கல்வெட்டுகளையும் பிறகு கவனிப்போம்.

**கோவில் நிர்வாகமும் பூஜாமுறையும் : சேவார்த்திகளின் பங்கு :**

ஆசார்யர்களுடைய ஜீவிய சரித்திரங்களைக் கவனிக்கும் பொழுது, அந்த காலத்தில் திருப்பதி புனித க்ஷேத்திரங்களில் பிரசித்தியடைந்ததாகவும் ஆகவே ஆசாரியர்கள் க்ஷேத்ராடனம் பண்ணும் பொழுது இக்ஷேத்திரத்திற்குச் செல்ல பிரயாசைப் பட்டார்களென்றும் தெரிகிறது. மேலும் இக்காலத்தில் இப்பிராந்தியத்திலுள்ள சிற்றரசனே அல்லது தனிப்பட்ட முறையில் பேரரசாகக் கருதிய ஒருவனே இங்கு வந்ததாகச் சொல்லப்படவில்லை. கோவில் வழிபாடும் அதற்கு வேண்டிய பொருள்களும் சேவார்த்திகளே தங்களுடைய சொந்த செலவில் செய்தார்கள். பொது ஜனங்களோ அல்லது அதிகாரிகளோ தங்கள் சொந்த திரவியத்தால் செய்வதை ஒருபெரும் பேராகக் கருதினர்கள். இது இந்தக் காலத்திய ஒரு பொதுவான நிகழ்ச்சி. சிற்சில சமயங்களில் அப்பிராந்தியந்திலுள்ள சிற்றரசர்களின் உதவியை நாடினுலும் அவர்களும் பொதுவாக தங்களுடைய தனிப்பட்டமுறையில் கோவிலுக்கு நன்கொடை

ஈர்ந்தார்களே ஒழிய தங்களுடைய ஹோதாவை வைத்துக் கொண்டு செய்தார்கள் என்பதற்கில்லை. சில சமயங்களில் அவர்கள் தங்கள் அதிகாரத்தை வெளிப்படையாக காண்பித்தார்களெனின் அச்சமயங்களில் கோவிலில் ஏற்பட்ட சூழல்களைச் சரிபடுத்தவோ இருதரத்தார்களுக்குள் ஏற்பட்ட சண்டைகளில் நியாயம் வழங்கவோ தான் ஈடுபட்டார்கள்.

**வேங்கடாசல இதிகாச மஹாத்மியத்தில் ராமானுஜருக்கு திருப்பதியில் தொடர்பு ஏற்பட்டதைப் பற்றி :**

முன் சொன்னதெல்லாம் குரு பரம்பரையில் கொடுக்கப் பட்டபடி. அனந்தார்யர் எழுதிய வேங்கடாசல இதிகாசமகாத்மியத்தில் ராமானுஜர் திருப்பதியில் செய்த நிகழ்ச்சிகளைப் பற்றி முழு விவரங்கள் கொடுப்பட்டிருக்கிறது. ராமானுஜருக்கு திருப்பதியின் தொடர்பு அவருடைய தாய்வழி மாமன் திருமலை நம்பி மூலம் ஏற்பட்டது. ஆளவந்தார் ஆஞ்ஞைப்படி திருமலை நம்பிகள் தனது இருகன்னி சகோதரிகளை அழைத்துக் கொண்டு திருப்பதிக்குப் போய் அங்கு பெருமாளுக்குச் சேவை செய்வதிலீடுபட்டார் என்று குருபரம்பரையில் கூறப்பட்டதை முன்பே சொன்னோம். அவர் அங்கேயே நிரந்தரமாக வஸிக்கத் தொடங்கி கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவருடைய ஒரு சகோதரியை ஸ்ரீபெரும்பூதூரிலிருந்த கேசவ சோமயாஜிக்கு விவாகம் செய்து கொடுத்தார். ஆகவே ஸ்ரீராமானுஜர் வைஷ்ணவ ஆசாரியராக போற்றப்பட்ட பிறகு முதன் முதலாக திருப்பதிக்குப் போனது அங்கு திருமலை நம்பிகளிடம் ஸ்ரீமத் ராமாயணத்தை சரணாகதி சாஸ்திரத்தின் விவரணம் எனக்கருதி அதன் உள்ளர்த்தங்களைத் தெளிவாக கற்கலானார். அவ்வமயம் அவர் திருப்பதியில் ஒரு வருடகாலம் திருமலை நம்பிகளுடன் இருந்து ஸ்ரீமத் ராமாயணத்தை நன்கு சேவித்து பிறகு ஸ்ரீரங்கம் திரும்பி வந்தார்.

**ராமானுஜர் திருப்பதிக்கு இரண்டாம் தரம் வருதல் :**

இரண்டாம் தடவை ராமானுஜர் திருப்பதிக்கு வருகை தந்தது கொஞ்ச காலத்திற்குப் பிறகு திருப்பதியில் பெருமாளுக்கு பூஜை செய்யும்முறை ஆதியிலிருந்து வைகானஸ ஆகமமுறைப்படி. இக்கோவில் முதல் அர்ச்சகர் கோபிநாத் என்பவர் காலத்திலிருந்து அவருடைய சந்ததிகள் இம்முறைப் படியே பூஜைகள் செய்து வந்தனர். காலம் செல்லச் செல்ல பல நூற்றாண்டுகளுக்குப் பின் இப்பூஜா முறைகளைப் பின்பற்றுவதில் வழுவேற்பட்டது. இதைக் கண்டு அப்பிரதேசத்து சிற்றரசன் அர்ச்சகர்களுக்கு தகுந்த தண்டனை கொடுக்கவே

அவர்களில் பலர் அவ்விடத்தை விட்டு வெளியேறினர். இதன் பயனாக கோவிலில் பூஜைகள் சரிவரச் செய்வதில் கொஞ்சம் பங்கம் ஏற்பட்டது. கோவிலிலும் இம்முறைகள் சரிவர நடக்கின்றனவா எனக் கவனிக்க மேற்பார்வையாளரும் இல்லாமல் போயினர். இதன் பயன் திருப்பதியிலும் அதன் சுற்றுப் புறத்திலும் உள்ள சில சைவர்கள் கோவிலைத் தனதாக்கிக் கொண்டனர். கோவிலில் தனக்குரிமை உண்டு என்பதை வெளியிட்டனர். இந்த ஆக்கிரமிப்பையும் உரிமைக் கொண்டாடுதலையும் எதிர்க்க வைஷ்ணவக் குழாங்களில் தகுந்தவர்கள் இல்லாதிருந்தனர். நாராயணவனத்தை தலை நகராகக் கொண்ட யாதவராயன் என்னும் சிற்றரசன் இவ்வழக்கை நன்கு ஆராய்ந்து ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டுமென்று ஆவல் கொண்டான். இத்தருணத்தில் அங்குள்ள வைஷ்ணவர்களுடைய கோரிக்கையினால் அவ்வரசன் ஸ்ரீரங்கத்திலிருக்கும் ராமானுஜரை திருப்பதிக்கு வர ஓலையிட்டு அவர் வந்ததும் சைவ ஆசாரியர்களுடன் வாதாடி அதன் பயனாக அக்கோயில் விஷ்ணு கோவிலா அல்லது சிவன் கோவிலா என்பதை நிச்சயம் கொள்ள எண்ணினான். ராமானுஜரும் அவன் கோரிக்கைக்கு இணங்கி திருப்பதிக்கு வந்து சைவ ஆசாரியர்களுடன் சபையில் வாதாடி அதன் முடிவாக அரசனுக்கு பூர்ண திருப்தி உண்டாகும் வகையில் அக்கோவில் விஷ்ணுவின் கோவிலேயொழிய சிவன் கோவில் அல்ல எனநிலை நிறுத்தினார். இந்த வாதத்தில் யாதவராயன் ராமானுஜருடைய திறமையில் மிகவும் லயித்துப் போனான். ராமானுஜரும் அவனுடைய உதவியால் சிதம்பரம் சிவன் கோவிலிலிருக்கும் கோவிந்தராஜ மூர்த்தியை கீழ் திருப்பதியில் கோவில் கட்டி அங்கே பிரதிஷ்டை செய்தார். இந்த சிதம்பரத்திலிருக்கும் கோவிந்தராஜ மூர்த்தியை கடலில் எறிந்து அந்த விஷ்ணு கோவிலை தகர்த்தெறிய சிவபக்தனான சோழமன்னன் இட்ட கட்டளையை மீறி ராமானுஜர் இந்த பணி செய்தார். அக்கோவிலில் இருந்த சில பக்தர்கள் உற்சவ மூர்த்தியை எடுத்துக்கொண்டு கீழ் திருப்பதிக்குக் கொண்டு வந்து சேர்த்தனர். ராமானுஜர் முயற்சியால் யாதவராயனும் மலையடிவாரத்தில் ஜனவாசம் இல்லாத ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு கோவிந்தராஜ மூர்த்திக்குக் கோயில் கட்டி கோவிலைச்சுற்றி ஒரு அக்ரகாரமும் நிருமித்து கோவிலில் பூஜைக்குச் செய்ய வேண்டிய நித்தியபடி ஏற்பாடுகளையும் செய்துவித்தார். ராமானுஜர் கோவிந்தராஜ மூர்த்தியை சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்குக் கொண்டு வந்தது

அவர் வேங்கடாசலபதி மூர்த்தியை விஷ்ணு என விவாதித்த சமயத்திற்கு கொஞ்சம் நாள் முன் தான். ராமானுஜர் திருப்பதி கோவிலில் பூஜைகளுக்கும் உற்சவங்களுக்கும் நன்கு நடக்க வேண்டிய பல முறைகளை விதித்து அவை நன்கு நடக்க ஆரம்பித்த பிறகே அவ்விடத்தை விட்டுத் திரும்பினர். வேங்கடாசல இதிஹாஸமாலாவின்படி திருமலை நம்பி ஜீவதசையில் திடகாத்திரத்தோடு இருந்ததாகவும் அதே மாதிரி அனந்தார்யர் என்னும் அவருடைய சிஷ்யரும் நன்கு திடகாத்திரத்துடன் இருந்ததாகவும் தெரிகிறது. திருமலை நம்பிகள் அதிக வயோதிகராய் போய் விட்டதால் அனந்தார்யர் அவருடைய மேற்பார்வையில் திருப்பதி கோவிலின் விவகாரங்களைக் கவனித்துக் கொண்டார்.

**ராமானுஜருடைய பிற்காலத்திய வருகைகள் :**

இதற்குப் பிறகு ராமானுஜர் அதிக வயதான பிறகு திருப்பதிக்கு வந்ததாகத் தெரிகிறது. வயதின் காரணமாக இது தான் அவருடைய கடைசி வருகை. அவருக்கு அப்பொழுது வயது 102. இது கலி வருஷம் 4220-க்குச் சரியான சாகா வருஷம் 1041 ஆகும். இந்த சமயம் அவர் கோவில் ஏற்பாடுகளில் மற்றும் சில சீர்திருத்தங்கள் செய்தார். கோவில் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளும் சுயநலம் அற்ற ஒரு சன்னியாஸியை நியமித்து அவருக்கு இரண்டு மூன்று பிரம்மச்சாரிகளை வெவ்வேறு காரியங்களை பார்த்துக் கொள்ளுவதற்கு நியமித்தார். பிரபந்தப் பாசுரங்களை முறைப்படி ஓதுவதற்கு ஏற்பாடு செய்து அதற்கென்று பிரத்தியேக ஒருவரை தலைமை வகிக்க நியமித்தார். இச் சன்யாஸியே பிறகு தலைமைச் சன்னியாஸியாகி சடகோபயதி எனக் கூறப்பட்டார். அவர் கீழ் நான்கு பிரம்மசாரிகள் கோவில் நிர்வாகத்தைக் கவனித்து கொண்டனர். இந்த ஏற்பாடுயாவையும் யாதவராயரின் மேற்பார்வையில் நடத்தப்பட்டன. யாதவராயரும் அக் காலத்தில் சுமார் 66-வயது ஆகிவிட்ட ராமானுஜருடைய சிஷ்யர் அனந்தார்யருடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். இதையெல்லாம் கவனித்தால் திருமலை நம்பி காலமாய் விட்டார் எனத் தெரிகிறது.

ராமானுஜர் இந்த சமயம் திருப்பதிக்கேயன்றி மற்ற பொதுவான விஷயங்களில் ஒன்றிரண்டு ஏற்பாடுகள் செய்தது தெரிகிறது. இதனல் அவர் அவருடைய அந்திம காலத்திற்கு வந்து விட்டார் என ஊகிக்கலாம். ராமானுஜர் திருப்பதி கோவிலுக்கு விஜயம் செய்த விருத்தாந்தங்களைப் பற்றி நாம்

அறிவது இவ்வளவே. குருபரம்பரையில் நாதமுனிகளும் அவருடைய பேரனை யாமுனாசாரியரும் திருப்பதிக்கு வந்து விட்டுப் போனதை வேங்கடாசல இதிகாசமாலாவிலும் காண்கிறோம். கல்வெட்டுகள் ஒன்றுமில்லாத குறையினால் இவ்விரு நூல்களிலும் கூறப்பட்ட சம்பவங்களையே வைத்துக் கொண்டு அவை சரித்திர ரீதியாக எப்படிக் கொள்ள வேண்டும் எனத் தீர்மானம் செய்ய வேண்டும்.

**குருபரம்பரை, இதிஹாஸ மாலையிலுள்ள விருத்தாந்தங்களை பரிசீலனை செய்தல் :**

இந்த பிரதேசங்களில் கல்வெட்டுகள் இல்லாதது. இப்பிரதேசங்கள் மத்திய ஆட்சியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பிராந்தியத் தலைவர்கள் கைகளில் மாறி அவர்கள் தங்களுடைய சுவதந்தரத்தை நிலைநிறுத்த ஈடுபட்டு இருந்ததினால் என்பதை முன்பே கண்டோம். இவ்வரலாறுகளில் வரும் யாதவராயன் என்பவன் இம்மாதிரியான ஒரு சுயேச்சைத் தலைவன். இவன் பிற்காலத்தில் இப்பிரதேசத்தில் கீர்த்தியோடு விளங்கிய யாதவராய வம்சத்தைச் சேர்ந்தவன். இவர்களுள் நன்கு போற்றப்பட்டவன் குலோத்துங்கன் III-க்கும் அவனுக்கு அடுத்த ராஜ ராஜன் III-க்கும் கீழ் சிற்றரசனாய் விளங்கியவனும் கீர்த்தி வாய்ந்தவனுமான நரஸிம்ம யாதவராயன். இதைப் பரிசீலனை செய்யுமுன் வேங்கடாசல இதிஹாஸ மாலாவில் வரும் நிகழ்ச்சிக்கு குறிப்புகளைப் பற்றி ஓரிரண்டு கேள்விகளை ஆரம்பத்திலேயே ஆராய்ந்து தெளிவான விடை கொள்ளல் வேண்டும். இந்நூலில் ராமானுஜர் திருப்பதிக்கு முதல் தரம் வந்தது திருமலை நம்பிகளிடம் ராமாயணத்தை விளக்கம் கேட்பதன் பொருட்டாகும். இதே சமயத்தில் இன்னொரு நிகழ்ச்சிக் குறிப்பு தோன்றுகிறது. அது ராமானுஜருடைய சீடனை விட்டலராஜன் திருப்பதிக்கருகிலுள்ள பாலமண்டியா என்னும் அக்கிரஹாரத்தை நன்கொடையாகக் கொடுத்தது. இது சரியாக இருந்தால் அவர் சோழ மன்னனின் கொடுமைக்கு அஞ்சி ஸ்ரீரங்கத்தை விட்டு மைசூர் (மேலக் கோட்டை)க்குப் போய் அங்கு கொஞ்ச காலம் தங்கி விட்டு பிறகு திரும்பி வந்த பிறகு தான் ராமாயண விளக்கம் கேட்டார் எனக் கொள்ளல் வேண்டும். இரண்டாவது தரம் அவர் திருப்பதிக்கு வந்தது சிதம்பரத்தில் கோவிந்தராஜர் கோவிலைத்தகர்த் தெரிந்த காலத்திற்குப் பிறகு ஆகும். மூன்றாவது முறை வந்ததற்குச் சரியான தேதிகள் காணப்படுகின்றன. வரலாற்றின் பொருட்டு நமக்கு ஏற்கனவே தெரிந்த ராமானுஜருடைய ஜீவசரித்திரத்தை

வைத்துக் கொண்டு இந்நிகழ்ச்சிக் குறிப்புகள் எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை கவனிக்க வேண்டும். குருபரம்பரையின் பிரகாரம் ராமானுஜர் சாகா 939-க்குச் சரியான கி.பி. 1017-ல் பிறந்தார். அதே குருபரம்பரை பிரகாரம் சாகா 1021—ல் திருநாராயண புரத்தில் திருக்கோவில் கட்டப்பட்டதென்றும் அவருடைய சீடனை வித்தலராயனுடைய உதவியால் பெருமாள் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்றும் தெரிய வருகிறது. இதற்கு சரியான வருடம் கி.பி. 1099. குரு பரம்பரையில் அவருடைய மூன்ருவது விஜயம் இந்த தேதியை கொண்டு தான் விவரிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த தேதிக்கும் மூன்ருவது விஜய தேதிக்கும் ஒற்றுமை தென் படுகிறது. நமக்கு ஏற்கனவே சரித்திர சம்பந்தமான விஷயங்கள் சில தெரிந்திருக்கின்றன. அவையுள் இரண்டு சரித்திரத்தில் நிரூபிக்கப்பட்ட சம்பவங்கள். இதனுள் முதலாவது ராமானுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியேறி மைசூரில் அரசுபுரிந்த விட்டல தேவராயனுடைய நல்லுதவி யால் அங்கு கொஞ்ச காலம் தங்க ஆரம்பித்தது. விட்டல தேவராயன் என்பது சம்ஸ்கிருதத்தில் விஷ்ணு தேவன் என்றும் கன்னடத்தில் பிட்டிதேவன் எனத் திரிந்து வந்ததுமான பெயராகும். ராமானுஜருடைய சம்பந்தம் ஏற்பட்ட பிறகு அவனுடைய பெயரை விஷ்ணு வர்த்தனன் என மாற்றிக் கொண்டான். இது அவனுடைய ஆதிப்பெயரின் மாற்றமே யாகும். இப்பெயரிலிருந்து அவன் வைஷ்ணவனுகி விட்டா னென்றும் வைஷ்ணவைத்தை பரப்புவதில் ஈடுபட்டவனென்றும் பொருள் கொள்ளலாம். குருபரம்பரையிலிருக்கும் நிகழ்ச்சிக் குறிப்பையே வைத்துக் கொண்டு பார்த்தால் வித்தல தேவ ராயன் என்னும் அரசன் தொண்டனூர் (இப்பொழுது French Rocks என்று சொல்லப்படும் ஸ்டேஷனுக்குச் சில மைல்கள் தூரத்திலுள்ளது) என்னும் ஊரில் வசித்து வந்த ராமானுஜருடைய உதவியை தன்னுடைய குடும்ப விஷயத்தைத் தீர்க்க நாடினுன். அவனுடைய மகளிர்களில் ஒருத்திக்கு பிசாசு பிடித்துக் கொண்டதென்றும் அரசரவையிலும் வெளியிலு முள்ள ஜைனர்களால் அப்பிசாசை ஓட்ட முடியவில்லை என்றும் தெரிகிறது. ராமானுஜர் மந்திர சக்தியால் அப்பிசாசை ஓட்டி அவ்வரசனுக்கு மனநிம்மதியைத் தந்தார். ஆகவே அவ் வரசனும் தனது ஜைனமதத்தை விட்டு அவருக்குச் சீடனுனன். இந்த சம்பவத்திற்குப் பிறகுதான் ராமானுஜருக்கு மேலக் கோட்டையில் பெருமாளுடைய சிலை பூமியில் புதைக்கப் பட்டிருப்பது தெரிய வந்து அச்சிலையைப் பிரதிஷ்டை செய்ய

ஒரு கோவில் கட்டி அதில் பிரதிஷ்டை செய்தார். முன் கூறப்பட்டது போல் இச்சம்பவம் நடந்தது கி.பி. 1099-ல். இந்த தேதி தான் கல்வெட்டுகளுக்கும் சரித்திரத்துக்கும் எதிராக இருக்கிறது. இந்த கி.பி. 1099-ல் விட்டலதேவன் ஒரு இளவரசனுகவே திகழ்ந்தான். அவனுடைய தந்தை சாளுக்கிய சாம்ராஜ்யத்தில் விக்கிரமாதித்திய VI என்னும் பேரரசனுக்குக்கீழ் சிற்றரசனுக இருந்து அப்பொழுதுதான் இறந்தான். அவனுக்குப் பிறகு அதே சிற்றரசப் பட்டத்திற்கு பிட்ட தேவனுடைய பெரிய சகோதரன் வந்தான். இவன் பட்டத்திற்கு வந்து சாளுக்கிய சாம்ராஜ்யத்தில் சிற்றரசன் என்னும் முறையில் ஆளத் தொடங்கியது கி. பி. 1106–க்கு முன்னதாக இருக்கமுடியாது. கி.பி. 1117-வருஷத்திய கல்வெட்டில் (Epigraphica Carnatica Hassan Vol. Belur 58 & 41) பேலூரில் ஸ்ரீ நாராயணனுக்கு கோவில் பூர்த்தி செய்து பெருமாள் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது எனக்காணப்படுகிறது இதற்கு ஒரு வருடம் முன்னுல் கி. பி. 1116-ல் விஷ்ணுவர்த்தனுடைய சேனைத் தலைவன் கங்கராஜா மைசூரிலிருந்து சோழர்களைத் துரத்தியடித்து தாலக்காட்டைப் பிடித்துக் கொண்டதாகக் கல்வெட்டு இருக்கின்றன (Epigraphica Carnatica Vol for Mysore Mala valli 31). ஆகவே ராமானுஜர் விஷ்ணுவர்த்தனை சிற்றரசனுகக் கண்டதென்றுல் அது கி.பி. 1106–க்குப் பிறகு தான் இருக்க வேண்டும். பிட்டி தேவனும் ராமானுஜருக்கும் ஸ்ரீ வைஷ்ணவத்திற்கும் இன்னும் பல வருஷங்கள் வரை ஒரு ஒத்தாசையும் செய்யும் செய்ய இயலாமல் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் அரசனுனவுடன் அவன் முழுகவனமும் தென் மைசூர் பாகத்தை சோழர்கள் பிடியிலிருந்து விடுவிப்பதில் ஈடுபட்டு இருந்தது. ஆகவே இந்த தேதியில் சுமார் 15, 16 வருட வித்தியாசம் இருக்கிறது.

**ராமானுஜர் ஜீவகாலத்தில் இருந்த சோழன் :**

இந்த விஷயத்தைப் பற்றி குரு பரம்பரைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னெரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது ராமானுஜர் சுமார் 25 வருஷ காலம் இங்கு தங்கியிருந்து பிறகு சோழ மன்னன் தனது உடம்பில் ஒரு கட்டி வந்ததின் பயனுகக் காலமானுன் என்ற செய்தியைக் கேட்டு ஸ்ரீரங்கத்திற்கு திரும்பவும் சென்ருர். சோழனுக்கு வந்த உபாதையை விஷ்ணுவே அவன் செய்த தவறுகளுக்கு தண்டனை மாதிரி வழங்கினுர் என்றும் அவனை கிருமிகாந்த சோழன் என்னும் அவப்பெயரால் அழைப்பது என்னும் வைஷ்ணவர்கள் கருதினுர்கள். ராமானுஜரை

ஸ்ரீரங்கத்திலிருந்து மைசூருக்குத் தப்பித்துக் கொண்டு போகும் சமயம் சோழ நாட்டு அரசன் குலோத்துங்கன் I ஆகத்தான் இருக்க வேண்டும். இவனை ஒரு வீர சைவன் என ஒரு பொழுதும் கருத முடியாது. அவன் சைவனாக இருந்திருக்கலாம்; சிவமதத்தில் அதிக பற்றுக் கொண்டிருந்திருக்கலாம் ; ஆனால் அவன் வீரசைவன் அல்ல என்பதற்கு அனேக சாஸனங்கள் எடுத்துக்காட்டாக இருக்கின்றன ; உதாரணமாக ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதருக்கு ஒரு உற்சவம் நடத்த இவன் ஏற்பாடு செய்த தாக ஒரு கல்வெட்டு இருக்கிறது. இது இவன் காலத்திய கல்வெட்டு என்பது மல்லாமல் இவன் தான் ஆளும் பேரரசன் எனக் கூறுகிறது. இதிலிருந்து தெரிவது ராமானுஜர் இருந்த ஸ்ரீ ரங்கத்திலேயே குலோத்துங்கன் பெருமாளுக்கு ஸ்ரீவைஷ்ண வர்கள் தங்கள் இஷ்டப்படி பூஜைகள் நடத்த உதவினது மல்லாமல் நித்தியப்படி பிரபந்தத்திலிருந்து சில பகுதிகளை ஓதுவதற்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுத் தான். இருப்பினும், அவன் சபைக்கு ஒரு சைவ சமயவாதி வந்த போது அவனுடன் வாதம் செய்ய ராமானுஜரை வரும்படி ஓலையிட்டான். அவர் தானே போவதற்குப் பதிலாக தனது சீடர்களில் இருவரை அனுப்பி வைத்தார். அவர்களுள் கூரத்தாழ்வான் என்பவர் ஒருவர். அவர் மிக்க அஞ்சாநெஞ்சம் படைத்தவர். ஆகவே "சிவன் தான் உயர்ந்தவன்" என்னும் வாதத்தை எதிர்த்துப் பேசுகையில் "சிவ" என்பது ஒரு அளவைக் குறிக்கும் அர்த்தத்தை வைத்துக் கொண்டு "துரோண" என்னும் அளவு "சிவ" என்னும் அளவை விடப்பெரியது என்றார். இது நேர் வாதம் அல்லாமல் அவமானச் சொல் எனக் கருதி அவ்விரு வைஷ்ணவச் சீடர்களையும் தண்டிக்கக் கருதி அவர்களுடைய கண்களைப் பிடுங்கி விட்டான். இதன் விளைவாக ராமானுஜர் இனி ஸ்ரீரங்கத்தில் தான் இருப்பது அபாயம் எனக் கருதி அவ் விடத்தை விட்டுப் போய் 25 வருஷ காலம் கழித்து அச்சோழன் இறந்த பிறகு தான் ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பி வந்தார். ஆகவே இந்த நிகழ்ச்சிகளை நோக்கிப் பார்க்கும் போது அவ்வரசன் குலோத்துங்கனைத் தவிரவேறு யாரும் இருக்க முடியாது என நிச்சயமாய்த் தெரிகிறது. அவன் சுமார் கி. பி. 1118–20–ல் இறந்திருக்க வேண்டும். ஏனெனில் அவனுக் கடுத்ததாக வந்த விக்கிரம சோழன் என்னும் வைஷ்ணவ பக்தன் கி. பி. 1118–ல் பட்டத்திற்கு வந்ததாகத் தெரிகிறது. ஆகவே ராமானுஜர் மேல் கோட்டையில் கோவிலைக் கட்டினது கி. பி. 1106-க்குப்

பிறகும் 1116-க்கு முன்னும் இருந்திருக்க வேண்டும். கி. பி. 1099-ல் கட்டினுர் என்பது நம்பத் தகுந்ததல்ல.

**திருநாராயணபுரம்-மேல் கோட்டையை ஸ்ரீராமானுஜர் ஸ்தாபித்த வருஷம் :**

குருபரம்பரை நூல்கள் சம்பவங்களுக்குப் பிறகு அனேக தலைமுறைகள் கழித்து எழுதப் பட்டவை. ஆகவே அவற்றுள் சரியான நிகழ்ச்சித் தேதிகள் குறிக்கப் பட்டிருக்க மாட்டா. ஆனுல் பொதுவாக நிகழ்ச்சிகளின் கிரமம் ஒன்று தவருமல் வந்திருக்கும். ஆகவே இவைகளை மனதில் வைத்துக் கொண்டு நோக்கின் ராமானுஜர் மைசூருக்குப் போய் அங்கு ஒரு கால் நூறு ஆண்டுகள் தங்கி இருந்தார் என்பது நூல்களிலிருந்து தெரிகிறது. அவர் அங்கு போய்த் தங்கியிருக்கக் கூடும். வைஷ்ணவ பிரசாரம் செய்தும் இருக்கக் கூடும். தன்னடியில் பல சீடர்களைச் சேர்த்திருக்கவும் கூடும். ஆயின் அங்கு போய் மேல் கோட்டையில் இப்பொழுது விளங்கும் பெரிய கோயிலாக இல்லாவிடினும் ஒரு சிறிய கோயிலையாவது அவ்விடத்து அதிகாரியினுடைய உதவியில்லாமல் கட்டியிருக்க முடியாது. ஆகவே ராமானுஜர் வித்தல தேவராஜனுடைய நட்பையும் விஷ்ணுவினிடத்தில் அவனுக்கிருந்த ஆர்வத்தையும் கொண்டு தான் அவர் அக்கோவிலைக் கட்டியிருக்க வேண்டும். அவ்வரசன் பேலூரில் விஷ்ணுவின் கோவிலை கி. பி. 1117-வில் கட்டினுன் என்பதற்கு சான்று இருப்பதால் மேல் கோட்டையில் உள்ள கோவிலை சில வருடங்களுக்கு முன்னுல் கட்டியிருக்க வேண்டும் எனக் கொள்ள வேண்டும். அதாவது கி. பி. 1099-ஐ விட கி. பி. 1115-ல் என வைத்துக் கொள்ளலாம். திருதீய பிரும்ம தந்த்ரஸ்வாமின் எழுதிய குருபரம்பரையில் சாகா 1021 என்னும் தேதியை இதற்குக் குறித்திருக்கிறது. பின் பழகிய ஜீயர் எழுதிய குரு பரம்பரையிலும் இதற்கு பகுதான்ய வருடத்தைச் சொல்லியிருந்தாலும் சாகா 1012 என்று சொல்லியிருப்பது சரியில்லை. ஏனெனில் பகுதான் யாவுக்குச் சரியான வருஷம் நிர்ணயிப்பதில் இவ்விரு அதிகாரி களுடைய நூல்களில் வித்தியாசம் இருப்பதில் வியப்பில்லை. ராமானுஜர் சோழனுடைய மறைவைக் கேட்டு அதன் பின்னர் ஸ்ரீ ரங்கம் வந்தார் என்ருல் அது குறைத்த பக்ஷம் கி. பி, 1118 பின் தான் இருக்கும். அது கி. பி. 1120-க்குக் பின்னரும் இருக்கலாம். இது சரியாயின் மேலக் கோட்டைப் கோயிலைக் கட்டினது கி.பி. 1115-க்குச் சுமாராக இருக்கும் என்பது ஒன்றுக் கொன்று ஒற்றுமையோடு காணப்படும்.

**ராமானுஜர் ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளிப்போய் வசித்தகாலம் :**

வேங்கடாசல இதிஹாஸ மாலாவில் கூறப்பட்டிருக்கும் விஷயம் ராமானுஜர் திருப்பதிக்கு முதல்தரம் விஜயம் செய்து ராமாயணத்தின் உள்ளர்த்தங்களை கேட்டருள வந்ததை திருப்பதிக் கருகிலுள்ள பாலமண்டியா என்னும் கிராமத்தை வித்தல தேவராயன் அவருக்கு நன்கொடை கொடுத்ததோடு இணைத் திருப்பது பொருத்தமாகவில்லை. ஆளவாந்தார் ஆஞ்ஞைப்படி அவருடைய எட்டு சிஷ்யர்கள் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களை ராமானுஜருக்குப் போதித்து கிரமமாக அவரை ஸ்ரீ ரங்கத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்ய பீடத்தில் அமர்த்த பிரயாசைப் பட்டார்கள். ஆகவே அவர் தன் சிறுபிராயம் முதற்கொண்ட இந்நூல்களின் சாரஅம்சங்களைக் கிரஹித்துக் கொண்டு ஸ்ரீ ரங்கத்தில் அக்ரஸ்தானம் வஹிக்கலானார். இந்த நிகழ்ச்சிகள் அவர் மைசூருக்குப் போய் தங்கியிருந்து திரும்பி வந்த பிறகு நடந்திருக்குமானால் அவருக்கு அப்பொழுது அதிக வயது ஆகியிருக்கும். ஆகவே அவர் வைஷ்ணவ சித்தாந்த நுட்பங்களை இளம் வயதிலியே கற்றறிந்த பிறகுதான் அவர் பெயரை வைஷ்ணவ ஆசாரிய ஸ்தானத்தில் ஏற்றப்பட்டிருப்பார். ஆகவே ராமானுஜர் திருப்பதிக்கு முதல் தரமாகப் போனது அவருடைய இளம் வயதிலியேயாயிருக்க வேண்டும். அதாவது அவர் காஞ்சீபுரத்தை விட்டு ஸ்ரீ ரங்கத்தில் தங்க ஆரம்பித்த முதலில் அவரை மற்றவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் முதல் ஸ்தானம் வகிப்பதற்கு தகுதியுள்ளவர் எனக்கொள்ளு முன் அவர் திருப்பதிக்குப்போய் ஸ்ரீமத்ராமாயணம் கேட்டிருக்க வேண்டும். அநந்தாழ்வார் ராமானுஜரிடம் போய் அவருடைய சிஷ்யராக ஆனது அவர் மைசூரிலிருந்து திரும்பி வந்த பிறகு இருக்கலாம். வித்தல தேவராயரிடமிருந்து நன்கொடையாக திருப்பதிக்கருகிலுள்ள பால மண்டியா என்னும் அக்ரஹாரத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது சந்தேகந்துக்கு இடமானது, ஏனெனில் இந்த கிராமம் அப்பொழுது ஒய்சனர் வசத்தில் இல்லாமல் இருந்தது. அநந்தார்யர் என்னும் ஸ்ரீ வைஷ்ணவர் அந்த அக்ரஹாரத்தில் வசித்துக் கொண்டிருக்கலாம். இதையெல்லாம் ஆராய்ந்தால் இதிஹாஸமாலா இரண்டு முரணான நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்துச் சொல்லியிருக்கிறது எனத்தோன்றுகிறது. திருமலை நம்பிகளுக்கு வயோதிகம் மேலிட்டதால் பெருமாளுக்குச் சேவை செய்வதில் கஷ்டம் ஏற்படுவதை மனதில் கொண்டு ராமானுஜர் அனந்தார்யரை திருப்பதிக்குப் போய் அங்கேயே வசித்துக் கொண்டு பெருமாளுக்குச் சேவை செய்ய

வேண்டுமென ஆஞ்ஞாபித்தார் என்பது தான்சரியான வார்த்தையாகும். ஆகவே கி. பி. 1120-லிருந்து பின்பிறமாக சென்று ராமானுஜர் ஒய்சனர் தேசத்தில் கழித்த 25 வருடத்தைக் குறைத்தால் அவர் ஸ்ரீரங்கத்திலிருந்து சோழனிடமிருந்து தப்பிச் சென்றது சுமார் கி. பி. 1095 ஆகும். ராமானுஜர் சரித்திரத்திலிருந்து பார்த்தால் இந்த தேதிகளுக்கு விரோதங்கள் ஒன்றுமில்லை. அவர் ஸ்ரீரங்கத்தை விட்டு கி. பி. 1095—ல் சென்று திரும்பவும் கி. பி. 1120—ல் ஸ்ரீரங்கத்தை அடைந்தார்.

**ராமானுஜர் திருப்பதிக்குச் சென்று வெற்றி பெற்றது :**

அவருடைய இரண்டாவது விஜயம் திருப்பதிக்கு வந்து வெற்றி வாகை சூடின விஜயம் ஆகும். அவரை யாதவராயர் ஓலையிட்டு அழைத்து வைஷ்ணவர்கள் சார்பாக சைவ பண்டிதர்களோடு வாதம் செய்து மலையிலுள்ள கோவில் சிவன் கோவிலா அல்லது விஷ்ணு கோவிலா என்பதைத் தீர்மானிக்க முற்பட்டான். இதை முன்பே சொன்னோம். மேலும் வைகானஸ ஆகம முறைப்படி கோவிலில் பூஜைகள் கொஞ்ச காலம் விடப்பட்டு அர்ச்சகர்களும் வெளியேறி விட்டதால் இந்த வாதம் ஏற்பட்டது என்பதையும் கூறினோம். வைஷ்ணவர்கள் போய் விடவே சைவர்கள் கோவிலில் பூஜைகள் செய்யலானார்கள். கோயிலையும் தங்களதாக்கிக் கொண்டார்கள். இச்சம்பவம் குலோத்துங்கன் I—னுடைய ஆட்சியின் பிற்காலத்தில் நடந்திருக்க வேண்டும். ஸ்ரீராமானுஜரை சோழ நாட்டிலிருந்து வெளியேற்றிய சைவ வெறியின் ஒரு சாயை தான் திருப்பதியிலும் பிரதி பலித்திருக்க வேண்டும். இந்த காலத்தில் தான் காளஹஸ்தி பெரிய சிவஸ்தலமாக ஆயிற்று. திருமலை நம்பியினுடைய மற்றொரு தங்கையின் பிள்ளையான கோவிந்த பட்டர் ராமானுஜருடனே சாஸ்திரங்கள் கற்றூர். எனினும் அவர் பிற்காலத்தில் சைவ மதத்தில் வெறி கொண்டு காளஹஸ்தியில் வசித்து வந்தார். அவருக்கு சைவ மதத்திலிருந்த வெறியானது திருமலை நம்பிகளாலும் கூட அவருடைய மனதை சைவத்திலிருந்து திருப்பி வைஷ்ணவத்திற்கு மாற்றிக் கொண்டு வரமுடியாமல் போய் விட்டது. ராமானுஜர் தன் முயற்சியால் அவரைத் திருத்தி அவரையும் அழைத்துக் கொண்டு போய் திருமலை நம்பிகளின் கீழ் ராமாயணம் கேட்டறிந்தார்கள் என்று குருபரம்பரைக் கூறுகிறது. ஆகவே இந்த பிராந்தியத்தில் வீர சைவத்தின் சாயை நன்று பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஆகவே திருப்பதி கோவிலில் அர்ச்சகர்கள்

கோவில் பூஜைகளைக் கவனிக்காமல் போய் விட்டதால் சைவர்கள் கோவிலைத் தங்களதாக்கிக் கொண்டு அங்கு பூஜை செய்யவும் தொடங்கினார்கள் என்பதில் வியப்பில்லை. மேலும் ராமானுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டுப் போன பின், திருப்பதியிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அதைரியமடைந்து எல்லா வைஷ்ணவர்களுக்கும் பொதுவாக விஷயங்களைச் சொல்லக் கூடிய நிதான மற்றவர்களாய் இருந்தார்கள். ராமானுஜர் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்து, விக்கிரம சோழன் என்னும் வைஷ்ணவ பக்தன் சோழ சிம்மாஸனத்தில் ஏறி, பொதுவாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தைரியம் உண்டான பிறகு தான் திருப்பதியில் இருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் கோவிலைத் தங்களதென உரிமை கொண்டாடினார்கள். இது ராமானுஜர் ஸ்ரீரங்கத்திற்கு திரும்பி வந்து தனது இடத்தை ஸ்திரம் பண்ணிக் கொண்ட பிறகு கொஞ்ச காலம் கழித்து தான் நடந்திருக்க வேண்டும். இதை வேறு வழியாகவும் யோசிக்கலாம். வேங்கடாசல இதிகாச மாலையின் படி ராமானுஜர் திருப்பதியிலிருந்தபொழுது தான் சிதம்பரத்தில் கோவிந்தராஜர் சந்நதியிலிருந்து கோவிந்தராஜர் விக்ரஹம் நீக்கப்பட்டது என்னும் செய்தி அவர் காதுக்கு எட்டிற்று. கோவிந்தராஜர் உற்சவர் விக்கிரஹத்தை சில ஸ்ரீவைஷ்ணவர்கள் சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்குக் கொண்டு சேர்த்த பொழுது அவர்கள் வாய் மூலமாக இச்செய்தியை அவர் கேட்டார். இந்த நிகழ்ச்சிக்கு சரியான தேதி கூறி விடலாம். ஏனெனில் இந்நிகழ்ச்சி ஒட்டக் கூத்தர் எனும் தமிழ்ப் புலவருடைய மூன்று நூற்களில் கூறப்படுகின்றன. ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன் II-என்னும் அரசனுடைய ஆசிரியனும் பொதுக் காப்பாளனுமாக இருந்தார். குலோத்துங்கன் II-விக்கிர சோழனுடைய மகன். இவன் கி. பி. 1135—ல் சிம்மாஸனம் ஏறினன். அவனுடைய அபிஷேகமும் அவ்வருஷம் நடந்திருக்க வேண்டும். ஆகவே கி. பி. 1135-ல் கோவிந்தராஜர் விக்கிரஹங்கள் திருப்பதிக்கு அகற்றப்பட்டிருக்க வேண்டும். அந்த சமயம் திருப்பதியில் ராமானுஜர் யாதவராஜன் என்னும் சிற்றரசனுடைய நன் மதிப்பைப் பெற்று அரசர் அவையில் அவருக்கு தனி கௌரவம் அளிக்கப் பட்டிருந்தது. இதைப் பயன்படுத்திக் கொண்டு அவரும் திருப்பதியில் அனேக காரியங்களைத் தன் மனோரதத்திற் கொப்ப சீர்திருத்தம் செய்தார். முக்கியமாக முன்னிருந்த மாதிரியே பூஜைக்குச் செய்ய வேண்டுவனவைகளைச் செய்து கோவிலில் வருடம் முழுவதும் நடக்க வேண்டிய பூஜைகளுக்கு எல்லா விதமான சாதனங்களும் செய்து உற்சாவாதிகள், நகர

சீர்திருத்தம் அர்ச்சகர்கள் முதலானவர்கள் கஷ்டமில்லாமல் வசித்து பெருமாளுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்ய அவர்களுக்கு வசதிபடுத்திக் கொடுத்தல் ஆகிய இம்மாதிரியான பல்வேறு காரியங்களிலும் ஈடுபட்டார். அப்பொழுதுதான் யாதவராயன் கோவிந்தராஜருக்குக் கோயில் கட்டி ஒரு அக்கிரகாரமும் நிர்மாணித்தான். இந்த அக்கிரகாரம் ராமானுஜபுரம் எனக் கூறப்படும் ஆகவே ராமானுஜர் இரண்டாவது தடவை திருப்பதி வந்தது அவர் ஸ்ரீரங்கம் வந்து ஒரு எட்டு, பத்து வருடங்கள் கழித்து இருக்க வேண்டும். அதாவது கி. பி. 1130-க்குப் பிறகு இருக்க வேண்டும். திருப்பதிக்கு அருகேயுள்ள நாராயண வரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட யாதவராயன் அவ்வளவு செல்வாக்குள்ள வனாயிருந்தால் அவன் செய்த காரியங்களை எழுதிவைத் திருப்பான்; முக்கியமாக கோவில் கல்வெட்டுக்கள் மூலம் எழுதி வைத்திருப்பான். ஆயின் யாதவராயன் காலத்திய கல்வெட்டுகள் ஒன்றும் இல்லை. இந்த காலத்திய ஒரே கல்வெட்டு நமக்குக் கிடைத்திருப்பது. விக்கிரம சோழனுடைய 16-வது ஆட்சி ஆண்டுக்குச் சரியான கி. பி. 1117-ல்பொறித்ததாகும். இதில் திருப்பலதீஸ்வரம் என்னும் ஸ்ரீ பராசரேஸ்வரம் என்றும் கூறப்படும் கீழ் திருப்பதியிலுள்ள சிவன் கோவிலைப் பற்றியதாகும். இதற்கு நாம் ஒரு காரணம் கண்டு பிடிக்க வேண்டும்.

**ராமானுஜருக்குச் சமகாலத்தவரான கட்டி தேவயாதவராயர்**

தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களை வைத்துக் கொண்டு பார்த்தால் ராமானுஜர் காலத்தில் ஒரு யாதவ ராயரைப்பற்றி குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. இவனுடைய உதவியால் தான் ராமானுஜர் கோவிலில் நித்திய வருஷத்திய உற்சவங்களை ஒழுங்கான முறையில் நடத்த அடிகோலினார். இது நடந்த முறை எப்படி என்பதை முன்னமே விவரித்தோம். முன் சொன்னபடி திருப்பதி கோவிலில் பூஜைகள் முதலான வைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் தனி மனிதர்களிட மிருந்தது. மொத்தத்தில் இவ்வேற்பாடுகள் வைஷ்ணவர்களால் கண்காணிக்கப்பட்டு வந்தது. முக்கியமாக அங்குள்ள வைஷ்ண வர்கள் பெருமாளிடம் ஈடுபட்டு இருந்ததினால் அவர்களாலேயே இந்த ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டுவந்தன. ஆரம்ப காலத்தில் சரித்திரக் குறிப்புகள் தோன்று முன்பு தொண்டமான் சக்கிர வர்த்தி கோவிலுக்காக சில கைங்கரியங்கள் செய்தான் என்பதைத் தவிர சரித்திர காலத்தில் ராஜாக்களோ

அரசாங்கமோ கோவில் பூஜைகளை ஒழுங்குபடுத்தி நடத்தினார்கள் என ஒரு வித குறிப்பும் நமக்குக் கிடைக்கவில்லை. வைகானஸ ஆகமத்தில் நன்கு தேர்ந்த ஒரு அர்ச்சக பரம்பரையோ அல்லது அம்மாதிரி சில குடும்பங்களின் பரம்பரைகளிலோ இருந்தவர்களே பூஜைகளைச் செய்து வந்தார்கள். நமக்குத் தெரிந்த சொல்பமான விஷயங்களைக் கொண்டு பார்த்தால் இந்த விஷயத்தைப் பற்றி விவரங்கள் ஒன்றுமில்லை. கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகள், அனேகம். அவை யாவும் தனிமனிதர்களால் கொடுக்கப்பட்டு ஸ்தானத்தார் எனப்படும் அவ்வூர் வாஸிகளால் ஆளப்பட்டு வந்தன. இந்த ஸ்தானத்தார்கைகளில் தான் கோவிலின் ஆட்சியும் இருந்தது. அனேகமாக எல்லா கிராமங்களிலும் கோவில் நிர்வாகம் போன நூற்றாண்டு வரையில் இந்தஸ்தானத்தார்கள் கையில் தான் இருந்தது. அரசனோ அரசாங்கமோ நிர்வாகத்தில் குறுக்கிடவேண்டுமென்றால் அதற்கு ஒரு நிர்பந்தம் ஏற்பட்டு ஒரு பெரிய தொல்லையோ, ஊர்வாஸிகளால் சமாளிக்க முடியாத ஒரு நிலையோ இருந்திருக்க வேண்டும். அம்மாதிரி ஒரு நிலைமை ஏற்படவே யாதவராயருடைய உதவியை நாடி மத்தியஸ்தம் பண்ணச் சொன்னார்கள். விக்ரம சோழனுடைய 17–வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இதற்குச் சரியான வருஷம் கி. பி. 1135 இதில் கட்டிதேவன் என்னும் யாதவராயனுடைய பெயர் வருகிறது. இவன் விக்ரம சோழனின் கீழ் கப்பம் கட்டும் ஒகு சிற்றரசன் அல்லது ஒரு பிரிவின் ஆளுநர் எனக் கருதப்படலாம். சில வருஷங்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு பிருது கொடுக்கப்பட்டிருக்கிறது குலோத்துங்க சோழயாதவராயன் என்று. அதாவது அவன் அதே ஸ்தானத்தில் விக்கிரம சோழனுடைய பிள்ளையும் சோழ ராஜ்ய பட்டத்தில் ஏறினவனுமான குலோத்துங்க II என்பவன் கீழ் இருந்தான் எனக்கொள்ளலாம். அவன் தன்னுடைய ஆட்சியை வெகு விசுவாசத்துடன் நடத்தினதால் மன்னனும் அவனிடத்தில் பிரீதியடைந்து அவனுக்கு இந்த பிருதைத் தந்து கௌரவப் படுத்தினர். இது ஒரு முக்கியமான விஷயம். இதை வைத்துக் கொண்டுப் பார்த்தால் அவன் ஏன் தன் பெயரால் கோயிலில் பூஜைகள் செய்ய ஏற்பாடுகள் செய்த கைங்கரியத்தை கல்வெட்டில் செதுக்கவில்லை எனப் புலப்படும். மேலும் அவன் கோவிலுக்குக் கொடுத்த நன்கொடைகளைப் பற்றியும் ஏன் கல்வெட்டுகள் செதுக்கவில்லை என்று புலப்படும். இவனுடைய ஆட்சியைப்பற்றி சம்பவங்கள் கிடைத்துள்ளவைகள் கி.பி. 1150 வரையில் போகின்றன.

ஆகவே இந்த கட்டி தேவன் தான் அந்த சமயத்தில் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு யாதவ நாராயணு என்னும் பிருதும் கொடுக்கப்பட்டது. இதில் அவன் வைஷ்ணவ மதச்சார்பைப் பற்றினன் எனக் கொள்ளவேண்டியதில்லை. கொஞ்ச நாட்கள் கழித்து ராஜ மல்லயாதவராயன் அல்லது புஜ பல சித்தரஸ என்னும் இவனுடைய பிள்ளையின் பெயர் வருகிறது. ஆனால் அவனைப்பற்றிய குறிப்புக்கள் குலோத் துங்கன் III வினுடைய ஆட்சியின் பிற்காலத்திற்கு நம்மை அழைத்துக் கொண்டுபோகிறது. ஆகவே விக்கிரம சோழன் குலோத்துங்கன் II இருவர்களுடைய கப்பம் கட்டும் சிற்றரசன் கட்டிதேவன் தான் ராமானுஜரை அழைத்து திருப்பதியில் ஏற்பட்ட வழக்கை தீர்க்கவேண்டிக் கொண்டது. அது மாத்திரம் இல்லாமல் ராமானுஜர் மூலமும் வைஷ்ணவக்குழாம் மூலமும் கோவில் வழிபாட்டையும் நிர்வாகத்தையும் சீர்திருத்தி சரியான வழியில் நடக்கும்படி பண்ணினன். இதில் கவனிக்க வேண்டியது ஒரு முக்கியமான விஷயம். சோழ மன்னனே சிவபக்தன் அதிலும் வீர சைவன். ஆகவே இவன் ஏற்கனவே மலையின் மேலுள்ள கோவிலுக்கும் கீழேயுள்ள கோவிந்தராஜர் கோவிலுக்கும். செய்திருக்கும் பணிகள் மன்னனின் விருப்பத் திற்கு நேர் எதிரானவை. அப்படியிருக்க தான் செய்தவைகளை கல்வெட்டுகளின் மூலம் பிரசித்தப்படுத்தினல் அவை கட்டாயம் மன்னனுக்கு வெறுப்பைக் கொடுக்கும் குலோத்துங்கன் II ஒரு இந்து மத சார்புள்ள மன்னனை தால் யாதவராயன் செய்த பணிகளை கண்டித்திருக்க மாட்டான் ஆனல் யாதவராயன் தான் செய்தகாரியங்களை மேலிடங்களில் தப்பாக நினைத்துக் கொண்டு விடக்கூடாதே என்று மனத்தில் உறுத்திக் கொண்டி ருக்கலாம். ஆகவே இந்த கட்டிதேவன் என்னும் யாதவராயன் அவ்வம்சத்து அரசர்களுள் முதல்வனுக நம் கவனத்துக்கு வருவது 12-வது நூற்றுண்டு ஆரம்பத்தில் பொறித்த கல்வெட்டால் நமக்குத் தெரிகிறது. இவன் தான் ராமானுஜர் காலத்தில் இருந்து அந்த நாட்டை ஆண்டவன்.

**இராமானுஜர் இரண்டாம் தரம் விஜயம் செய்தது-சுமாரான காலம்:**

மேற் கூறியவைகளை மனதில் வைத்துக் கொண்டு நோக்கின் ராமானுஜர் திருப்பதியில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்ட காலம் சோழ அரசன் குலோத்துங்கன் II பதவிக்கு வந்து சில வருஷங்களிலிருந்து ஆரம்பமாயிற்று. இது அவரது இரண்டாவது விஜயம். வேங்கடேச இதிஹாஸமாலாவின் படி அவர் மூன்றும் முறை அங்கு வந்ததாகவும் அப்பொழுது

அவருக்கு 102-வயது ஆயிற்று எனவும் தெரிகிறது. தான் இனி மேல் அடிக்கடி திருப்பதிக்கு வருவது சாத்தியமில்லை என நினைத்து தான் ஏற்கனவே செய்திருந்த ஏற்பாடுகள் நிலையாய் நடக்க எண்ணி இன்னும் சில ஏற்பாடுகள் செய்து விட்டு ஸ்ரீரங்கத்துக்குச் சென்றார். இதே நூலின்படி அவர் இன்னும் 2,3, தரம் திருப்பதிக்கு வந்து உடனே உடனே திரும்பி விட்டதாக தெரிகிறது. குரு பரம்பரைகளின்படி அவர் மனுஷாயுஸ் மஹாதசை காலமான 120 வருஷங்கள் வசித்து மறைந்ததாகத் தெரிகிறது: இதை அப்படியே அங்கீகரிக்கா விட்டாலும் அவர் நீண்ட காலம் அதாவது நூறு ஆண்டுகளுக்கு மேல் வசித்தார் எனக் கொள்ளலாம். தேதிகளில் சரியாக குறிப்பிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும் அவர் சுமார் கி. பி. 1050-லிருந்து 1150-வரை திடகாத்திரமாக இருந்தார் எனச் சொல்லலாம். முன் கொடுத்த குறிப்புகளைக் கொண்டு பார்க்கையில் அவரது 102-வது வருடம் கி. பி. 1119-க்குச் சரியானது. ஆனால் இது சரித்திரத்திற்கு விருத்தமானது. கி. பி. 1119-ல் அவருக்கு 102 வயதாயிருந்தால் அவர் இன்னும் 18 வருஷங்கள் வசித்து கி. பி. 1139-ல் மறைந்தார் எனக் கொள்ளவேண்டும். குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்ததற்கு சரியான தேதி இருக்கவே மேற்கூறிய தேதி சரியல்ல எனக் கொள்ளவேண்டும். முற் கூறியபடி 15,16 வருஷங்கள் கழித்து அவர் மறைந்தார் என வைத்துக்கொண்டால் அவர் கி. பி. 1155-ல் மறைந்திருக்கவேண்டும். இந்த தேதி சரியா யிருக்கும் எனத் தோன்றுகிறது.

நூற்றுண்டு காலத்துள் காணப்படும் கல்வெட்டுகளில் ராமானுஜர் அனந்தார்யர் இவர்கள் பெயரால் தோட்டங்களும் மற்றும் சில விஷயங்களும் கூறப்படுவதால் ராமானுஜர் அங்குச் செய்தவைகளைப் பற்றியாவது அனந்தார்யர் அங்கு இருந்ததைப்பற்றியாவது சரித்திரசம்பந்தமான நிகழ்ச்சிகளா என்பதைப் பற்றி சந்தேகிக்க இடமில்லை. திருப்பதி கோவில் கல்வெட்டுகள் 171, 173-ல் அனந்தாழ்வான்சந்தேகத்திற்கிடமின்றி கூறப்பட்டிருக்கிறது, 175–ல் திருநந்த வனம் ராமானுஜரால் நிர்மாணிக்கப்பட்டது எனத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ராமானுஜர் முதல் முதலாக யாதவ ராயனுல் தீர்ப்பு சொல்லப்பட்ட விஷயம் கோவில் விஷ்ணு கோவில்தான் என்பதை பிரசுரம் செய்து கோவிலுக்கு மஹா கும்பாபிஷேகம் பண்ணி, பழையபடி வைகான ஆகம விதிகள்படி பூஜைகள் செய்வதை திரும்ப கொண்டுவர வேண்டுமென்பதைச் செய்தார் அடுத்தபடியாக அவர் செய்தது—மூலவர் கர்ப்ப கிரஹத்துக்கு மேலிருக்கும் ஆனந்த நிலய விமானத்தை அதே ஆகமவிதிப்படி சீர்திருத்தங்கள் செய்தார். மூர்த்தியை சரியான நிலையில் எழுந்தருளப் பண்ணி, பத்மாவதித்தாயார் பிம்பம் ஒன்றை தங்கச் சங்கிலியில் சேர்த்து பெருமாள் கழுத்தில் சார்த்தினுர். இது முதல் பாகம், அடுத்ததாக அவர் கவனத்தைச் செலுத்தியது பெருமாளுக்கு வாரந்தவராமல் திருமஞ்சனம் செய்வித்து நெற்றியில் திருமண் காப்பு சாத்துவது. வாரத்திருமஞ்சனம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வைகானஸ ஆமகத்தில் ஆனந்த ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படி நடத்துவது. நெற்றியில் இடும் திருமண் காப்பு (ஊர்த்துவ புண்ட்ரம்) பச்சைக்கற்பூரத்தால் இடப்படவேண்டும். திங்கள், செவ்வாய் புதன் மூன்று நாட்களும் திருமண்ணுல் நாமம் சார்த்த வேண்டும். வியாழக் கிழமை பெருமாள் திருமேனியிலிருந்து வஸ்திரங்கள் ஆபரணங்கள் எல்லாவற்றையும் களைந்து விட்டு புஷ்பங்களால் அலங்கரிக்க வேண்டும். இந்த அலங்கார மாற்றம் செய்யும் பொழுது நாச்சியார் திருமொழி என்னும் பிரபந்த பாகத்தைச் சொல்ல வேண்டும் என விதித்தார். பூஜைகள் சரிவரச் செய்யவும் வைகானஸ ஆகம முறைப்படி நடத்தவும் அவர் இந்த காரியத்தை முதல் வைகானஸ பட்டர் ஆன பிம்பாதரர் என்பவருடைய வம்ஸத்தவர்களிடம் ஒப்பித்தார். அவர் தன் காலத்தில் அவ்வம்ஸத்தவரைக் கூப்பிட்டு தானே வைஷ்ணவ சமயத்தில் செய்கிற சம்ஸ்காரங்களைச் செய்து பிறகு

பெருமாளுக்குக் கைங்கரியம் செய்ய அனுமதித்தார். ஆழ்வார்களின் பிம்பங்களை கோவிலில் எழுந்தருளப்பண்ண அடிகோலினர். ஆயினும் அவ்வாழ்வார்களில் பலரே திருப்பதி மலைமேல் ஏறிச் செல்லுவது அபசாரமாகும் எனக் கருதவே ராமானுஜர் அவ்வாழ்வார்களின் பிம்பங்களைக் கீழ் திருப்பதியில் கோவிந்தராஜர் சன்னதியில் எழுந்தருளப் பண்ணினர்.

**கோவிந்தராஜர் கோவில் கட்டுதல் :**

ராமானுஜருடைய அதிமுக்கியமான சாதனை கோவிந்த ராஜர் கோவிலைக் கட்டுவது, திருமலையில் இருக்கும் கோவிலில் வீற்றிருக்கும், விஷ்ணுவின் திருக்கோலம் ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு வீற்றிருப்பதின் பிரதிபிம்பம் எனக்கருதப் படுகிறது. திருமலையில் நின்ற திருக்கோலத்தில் பெருமாள் சேவை சாதித்துக் கொண்டு ஸ்ரீ வைகுண்டத்தில் விஷ்ணுவுக்கு உண்டான கைங்கர்யபரர்களும் தேவதாம் சங்களும் இங்கேயும் சேவை செய்து கொண்டிருக்க வீற்றிருக்கிருர். சிதம்பரத்தில் கோவிந்தராஜப் பெருமாள் க்ஷீராப்தியில் (பால் சமுத்திரம்) அனந்தன் மேல் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பிம்பம். இதை வைத்துக் கொண்டுதான் சோழமன்னன் சிலேடையாகச் சொன்னது அந்த பெருமாளுக்கு இருப்பிடம் நடராஜர் சன்னதிக்கு எதிர்புரத்திலன்று; சமுத்திரத்திலன்ருே இருக்கவேண்டும் என்று. ஆகவே சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோவிந்தராஜனின் உற்சவமூர்த்தியை திருப்பதிக்குக் கொண்டு வந்த பொழுது, யாதவரயனும் அப்பெருமாளுக்குக் கோவில் கட்ட சம்மதித்து, அதில் க்ஷீராப்தியில் சயனத்தில் இருக்கும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பிம்பத்தை மூலவராக எழுந்தருளப் பண்ணினன். அந்த யாதவராயன் ஊர்க்கோடியில் கோவிலையும் கட்டி அதற்கு நான்கு பக்கங்களிலும் வீடுகளையும் கட்டி அவற்றை குணமுள்ள பிராமணர்களுக்கு வழங்கி அவ்வக் கிரஹாரத்திற்கு ராமானுஜபுறம் எனப்பெயர் வைத்து அங்கு ஜனங்கள் சுகமாக வாழவேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்தான். ஆகவே இந்த அக்கிரஹாரம் மிக முக்கியமான இடமாகத் திகழ்ந்தது. ராமானுஜர் கோவிலுக்குள் கோதாவின் (ஆண்டாளின்) சன்னதி ஒன்றை ஏற்படுத்தினர். அவ் வமயம் யாதவராயரும் வருடத்தில் இரு உற்சவங்கள் ஏற்படுத்தி அவை ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் நடத்தும்படி ஏற்பாடு செய்தான். இப்பணிகள் யாவும் செய்த பின்னர் யாத வராயர் திருமலை நம்பியையும் அனந்தார்யரையும் கீழ் திருப் பதியில்கட்டிய கிருஹங்களில் வந்து வசிக்கும் படி விண்ணப் பித்துக்கொண்டான்.



கபில தீர்த்தம் அல்லது ஆழ்வார் தீர்த்தம்




கபில தீர்த்தம்

**கோவிலுக்கு ஜலவசதி :**

மலையில் கோவில் நிர்மாணித்த பொழுதே ரங்கதாஸர் என்னும் பக்தரால் இரு கிணறுகள் வெட்டப்பட்டு அதிலிருந்து கோவில் உபயோகத்திற்கும், பூந்தோட்டத்திற்கும் வேண்டிய நீர் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் காலக்கிரமத்தில் அது நன்கு கவனிக்கப்படாமல் சீர்கெட்டு ஒரு பகுதி கீழேயும் இடிந்து விழுந்து விட்டது. ராமானுஜர் இவ்விரு கிணறுகளையும் நன்கு சீர்திருத்தினார். கிணற்றுப்படி ஓரத்தில் ஸ்ரீனிவாஸர் பூதேவி மூர்த்திகளை வைத்து கோவிலில் உபயோகப்படுத்தும் பூக்கள் முதலியனவைகளை பூதேவிக்கு உகந்தது என அக் கிணற்றில் போட்டுவிட வேண்டும் என நியமித்தார். கோவிலுக்கு வேண்டிய சுத்தமான ஜலம் கொண்டு வருவதில் கொஞ்சம் கஷ்டம் இருந்தது. திருமலை நம்பிகள் மலையில் வசிக்கத் தொடங்கினதிலிருந்து கோவிலுக்கு வேண்டிய சுத்த ஜலத்தை கொஞ்ச தூரத்திலிருந்து கொண்டுவந்தார். ஆளவந்தார் வந்த பொழுது திருமலை நம்பிகள் உடம்பு சரியில்லாமல் இருந்ததால் அவர் பாபனாசத்திலிருந்து ஜலம் கொண்டுவரும் நிலைமையில் இல்லாமல் இருந்தார். ஆகவே வரும் காலத்தில் இம்மாதிரியான அசந்தர்ப்பங்களைத் தவிர்க்க கோவிலிலுள்ள கிணற்றிலிருந்தே (ரங்க தாஸரால் தோண்டப் பட்டு திரு அரங்கில் உள்ளது) ஜலத்தை எடுத்து சமையல் சேவைகளுக்கு உபயோகிக்கலாம் என ஆளவந்தார் பெருமாளிடம் அனுமதி பெற்றார். இந்த கிணறு சுந்தரஸ்வாமி கிணறு எனப்பட்டு ஆளவந்தார் செய்து கொண்ட பிரார்த் தனைக்கிணங்க பெருமாளே இதில் உள்ள தீர்த்தம் பாபநாசத்தி திலிருந்து கொண்டு வரும் தீர்த்தத்துக்கு சமமானது என அனுக்கிரஹித்தார். புராணங்களில் கூறப்படும் பழைய வழக்குப்படி பெருமாளுடைய பிம்பம் ஒரு சூத்திர ரங்கதாஸா என்பவனால் ஒரு புளிய மரத்தடியில் கண்டெடுக்கப்பட்டது. ஆகவே தொண்டைமான் சக்கரவர்த்தி கோவிலைக் கட்டும் பொழுது இதை மனதில் வைத்துக் கொண்டு கட்ட ஆரம்பித்தான். மேலும் அங்கு இருந்த ஒரு சம்பக மரத்திலிருந்து பெருமாளுக்கு தினப்படி பூஜைக்கு புஷ்பங்கள் கிடைக்கப் பெற்றன. தொண்டைமான் கோவிலைக் கட்டும் பொழுது இவ்விரு மரங்களையும் கோவிலுக்குள் வைத்துக் கட்ட வேண்டியிருந்தது. ஆகவே இரு மரங்களும் வெகு நெருக்கத்தில் இருந்ததால் கோவில் மிகச் சிறியதாக இருக்க வேண்டியிருந்தது தொண்டைமானுக்கு மனதில் இது மிக்க குறையைக் கொடுத்துக்

கொண்டு இருந்தது. கொஞ்சகாலத்தில் அவ்விரு மரங்களும் கொஞ்ச தூரம் நகர்ந்து கொண்டு நடுவில் வெளி நிறைய இருக்கும்படி செய்து கொண்டன. கோவில் கட்டுவதிலும் தடங்கல் இல்லாமல் இருந்தது. இந்தக் கதையைக் கேட்டு ராமானுஜர் இவ்விரு மரங்களுக்கும் பூஜைகள் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்.

**பெருமாள் திருக்கரங்களில் நாக ஆபரணங்கள் :**

அடுத்ததாக ராமானுஜர் கவனத்துக்கு வந்தது வேங்கடேசப் பெருமாளுடைய கையை அலங்கரிக்கும் நாக ஆபரணம் (நல்லபாம்பு உருவத்திலுள்ள ஆபரணம்). அது பெருமாளுக்கு எப்படி வந்தது என விசாரித்தார். வீர நரஸிம்ஹன் என்னும் கஜபதி அரசன் ராமேஸ்வரத்தை நோக்கி தீர்த்த யாத்திரை செய்யும் பொழுது நடுவே திருப்பதியை வந்தடைந்தான். அப்பொழுது கோவிலுக்குத் தக்க கோபுரம் இல்லாமையைக் கண்டு அதைக் கட்ட உள்ளம் கொண்டு அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்ய உத்தரவிட்டு மேற்கொண்டு பயணம் ஆனான். அவன் திரும்பிவரும் பொழுது கோபுரம் முதல் பாகம் வரை கட்டி முடிந்திருந்தது. அப்பொழுது அவனுக்கு கனவில் ஆதிசேஷன் தோன்றி சொன்னது, அம்மலை முழுவதும் தனது உடலேதான், பெருமாளுக்கு கைங்கரியம் செய்யும் உற்சாகத்தில் மேலும் கோபுரங்கள் எழுப்பினால் தனக்குத்தான் அதைத் தாங்க முடியாத கஷ்டங்களைக் கொடுக்கும், ஆகவே அக்கஷ்டத்தைக் கொடுக்காமல் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்த ஸ்வப்னத்தைப் பற்றி பெரியவர்களிடம் ஆலோசித்து கோபரத்தை மேலும் கட்டாமல் அத்துடன் நிறுத்திக் கொண்டான். மேலும் ஆதிசேஷன் கனவில் தோன்றியதைப் போற்றி அவ்வாதிசேஷன் மாதிரியே ஒரு திருவாபரணம் பண்ணி அதை பெருமாளுடைய ஒரு கையில் அணிவித்தான். பெருமாளும் அதை அங்கீகரித்துக் கொண்டார். மேலும் ஆகாசராஜன் தன் மகளைப் பெருமாளுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கும் பொழுது இரண்டு நாக ஆபரணங்கள் கொடுத்தாரென்றும் ஒரு கதை இருக்கிறது. இதையெல்லாம்மனதில் வைத்துக் கொண்டு ராமானுஜர் வேங்கடேஸருடைய இரண்டு திருக்கரங்களிலும் தங்க நாக ஆபரணம் அணிவிக்க வேண்டும் என்று கூறினார்.

**நரஸிம்மருக்குச் சன்னதி ;**

ராமானுஜர் ஆரம்பித்த இன்னொரு சன்னதி நரஸிம்மருக்காக ஏற்படுத்தியது. புராணத்தில் வரும் கதைப்படி சிவபெருமான்.

விஷ்ணு நரஸிம்மனைக் குறித்து தவம் செய்ய அவரும் சிவனுக்குத் தோன்றி அவருக்கு வேண்டியவரத்தைக் கொடுத்தார். இச்சம்பவம் ஸ்வாமி புஷ்கரணியின் மேற்குக் கரையில் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஆகவே அந்த இடத்தில் சிவனுக்கு ஒரு சன்னதி கட்டுவதாக ஆரம்பித்தார்கள். வைஷ்ணவர்கள் புராணத்தைக் காட்டி அதிலேயே சிவனுக்கு அங்கே கோவில் கட்டக் கூடாது எனச் சொல்லியிருப்பதால் அக்கோவிலை கட்டுவதை ஆட்சேபித்தார்கள். அவர்களுடைய கதைப்படி பெருமாளுக்குக் கோவிலும் மற்றும் இதர தேவதைகளுக்குச் சன்னதிகளும் கட்டும் பொழுது சிவன் தனக்கும் மலையில் ஒரு சன்னதி ஒதுக்கும்படி கேட்டுக் கொண்டான். விஷ்ணு, இந்த விருப்பத்தைக் கேட்டு சிவனுக்கென்றே தனியாக மலையடி வாரத்தில் கபில தீர்த்தத்திற்கருகில் ஒரு சன்னதி நிருமித்துக் கொள்ள அனுமதித்தார். ஆகவே வைஷ்ணவர்கள் சிவனுக்கு மலை மேல் எங்கும் கோவில் கட்ட இடம் தரக்கூடாது அப்படித்தருவது மலையின் மகிமையைக் குறைக்கும் என ஆட்சேபித்தார்கள். ராமானுஜரும் இதை அங்கீகரித்து இனிமேல் வரும் காலத்தில் ஒரு தகராறும் வரக்கூடாது என நினைத்து கோவில் உள்ளேயே நரஸிம்மனுக்கு ஒரு சன்னதி நிருமித்தார். ஏனெனில் சாதாரண ஜனங்களுக்கு இந்த மூர்த்தி பயத்தையும் அச்சத்தையும் கொடுக்கும் என்னும் காரணத்தால். ஆகவே கோவிலுக்குள்ளேயே ஆனந்த விமான நிலயத்தின் கீழேயே நரஸிம்மனுக்கு சன்னதி ஏற்படுத்தி அங்கு பூஜைகள் செய்ய ஏற்பாடுகள் செய்தார். மேலும் நரஸிம்மர் குகைக்கு எதிரே மார்க்கண்டேயனுக்கு நரஸிம்மன் பிரத்தியக்ஷமானதாகச் சொல்லப்படுவதால் அந்த இடத்தில் நரஸிம்மனுக்கு ஒரு மூர்த்தி வைத்து பிரதிஷ்டை செய்தார். இந்த நரஸிம்ம குகை மூலமாக மலைக்குப் போக ஒரு ரகசிய வழி இருக்கிறது. இந்த நரஸிம்மமூர்த்திக்கு ஒரு கோவிலும் கட்டி அங்கு பூஜைகள் செய்யவும் ஏற்பாடு செய்தார்.

**அனந்தார்யருக்கு நிகழ்ந்த அற்புதங்களும் அவைகளை ஸ்மரிப்பதும் :**

ஸ்ரீனிவாசப் பெருமாள் அனந்தார்யருக்குச் செய்த இரண்டு அற்புத நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. முதலாவது பெருமாளுடைய முகவாய் கட்டையில் உள்ள சிறு துவாரம். வழங்கும் கதையின்படி இது அனந்தார்யரால் ஆக்கப்பட்டது என்பர். அனந்தார்யர் தனது நந்தவனத்திற்கு தண்ணீர் பாய்ச்ச ஒரு சிறு குளம் வெட்டிக் கொண்டிருந்தார். அவர்

தன்னுடைய கர்ப்பவதியான மனைவியிடம் மண் கூடையைக் கொடுத்து கொஞ்ச தூரத்தில் கொட்டி கொட்டி வரும்படி ஏவினார். பெருமாள் அவள் மேல் இரக்கம் கொண்டு ஒரு இளம் பிரம்மச்சாரி வடிவம் கொண்டு அம்மண்ணை தானே சுமந்து கொண்டு போய் கொட்டிவந்தார். அவளை அந்த கஷ்டத்திலிருந்து விலகச் சொன்னார். ஒரு இளம் பிரம்மச்சாரி தானும் தன் மனைவியும் பெருமாளுக்காகச் செய்யும் கைங்கரியத்தில் பங்கம் வரும்படி செய்கிறானே என அனந்தார்யர் அதிருப்தி கொண்டார். பலதரங்கள் வேண்டிக் கொண்டும் பிரம்மச்சாரி தான் செய்வதை நிறுத்தாதிருக்கவே, அவருக்கு மஹாகோபம் வந்து அப்பிரமச்சாரியை மண் வெட்டியின் நுனியால் ஓங்கி அடித்தார். அதன் பிறகு பிரம்மச்சாரி மறைந்து விட்டார். அன்றுமாலை வழக்கம் போல் கடவுளை தரிசிக்க அனந்தார்யர் உள்ளே போன பொழுது பெருமாள் முகத்தில் அப்பிரம்மச்சாரிக்குப் பட்ட இடத்திலேயே ரத்தப் பிரவாகத்துடன் காயம் தெரிந்தது. தான் செய்த அபசாரத்தை நினைத்து வெள்கி, உடனே ஓடிப் போய் ஓர் பச்சிலையைக் கொண்டு வந்து அதைப் பொடி செய்து காயத்தில் வைத்து அப்பினார். அதன் பிறகு ரத்தம் கொட்டுவது நின்றது. பெருமாளும் அனந்தார்யருடைய ஈடுபாட்டில் மிக்க திருப்தி கொண்டு தினப்படி காயம் பட்ட இடத்தில் நெற்றியில் இடப்படும் திருமண் காப்புக்கு உபயோகிக்கப்படும் பச்சைக் கற்பூரத்தையே வைத்து அப்ப வேண்டும் என்றும் மண் வெட்டியும் கோவிலுக்குமுன் யாவரும் பார்க்கக் கூடிய இடத்தில் மாட்டி வைக்கப்பட வேண்டும் என்றும் அனுக்கிரஹித்தார். அனந்தார்யர் காலத்தில் இன்னொரு அற்புதம் நடந்தது. அவர் கோவில் அருகில் ஒரு நந்தவனத்தை மிக்க பிரயாசையுடன் கவனித்துவந்தார். ஆனால் பூக்கள் பூக்கும் காலத்தில் எல்லாப் பூக்களும் ஒன்றாகப் பொறிக்கப்பட்டு, உபயோகிக்கப்பட்டு கீழே போடப்பட்டிருந்தன. இதனால் காலையில் பெருமாளுக்கு உபயோகிக்க கொஞ்சம் பூக்களே கிடைத்தன. மிகவும் கோபமடைந்து இதை யார் செய்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டுமென மறைவாக நின்று கவனித்துக் கொண்டிருந்தார். ஆறு, ஏழு தரம் தோல்வியடைந்த பிறகு ஓரிரவு ஓரிளங்குமரனும் அவனுக்குத் தக்க ஓர்யுவதியும் அந்நந்தவனத்தில் விளையாடிக் கொண்டும் பூக்களால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டும் இருந்தனர். உடனே அப்பெரியவர் இளைஞனைப் பிடிக்க ஓடினார். ஆனால் அவன் அவரை ஏமாற்றி கோவிலுக்குள் ஓடிப்

போய் மறைந்து கொண்டான். அவர் அந்த யுவதியைப் பிடித்து அங்குள்ள சம்பக மரத்தில் ஒரு கயிற்ருல் கட்டி விட்டார். அவள் தன்னை விடுவித்துவிட வேண்டுமென்றும் இளைஞனைத் தான் பிடித்து தண்டனை கொடுக்க வேண்டும், தன்னை அவர் பெண் போல் பாவிக்க வேண்டும் என மன்ருடினுள். அவரோ அவளை விடவில்லை. காலையில் கோவில் அர்ச்சகர்கள் கோயில் உள்ளே போன பொழுது ஸ்ரீநிவாஸர் நடந்த விவரங்களை அவர்களிடம் அறிவித்தார். அனந்தார்யர் இதைக் கேட்டதும் மிகவும் மகிழ்ந்து கூடை முழுவதும் பூக்களை நிறைத்து எடுத்துக் கொண்டு, பத்மாவதித் தாயாரையும் தலையில் தூக்கிக் கொண்டு போய் பெருமாள் முன் இரண்டையும் வைத்தார். இந்தக் கதையை ராமானுஜருக்கு அங்கிருந்தவர்கள் கூற, அவரும் புரட்டாசி உற்சவத்தில் 7-வது நாள் பெருமாளை அந்நந்தவனத்திற்கு எழுந்தருளப் பண்ண வேண்டுமென்றும் 8—வது நாள் தேர்த் திருவிழா அன்று அனந்தார்யருக்கு பூமாலை சார்த்த வேண்டும் என்றும் நியமித்தார்.

**புளிய மரத்தடியில் ஸ்ரீனிவாசர் பாதங்கள் :**

ராமானுஜர் செய்த அடுத்த காரியம், மலைக்குப் போகும் வழியில் பாதி தூரத்தில் புளிய மரத்தடியில் பெருமாள் திருவடிகளைப் பூஜிப்பது. திருமலை நம்பிகள் ஏற்கனவே ஆளவந்தார் நியமனப்படி திருமலையில் வாசஞ்செய்து கொண்டு பெருமாளுக்கு கைங்கரியம் செய்து கொண்டிருந்தார். ராமானுஜரும் திருப்பதிக்குச் சென்று திருமலை நம்பிகளிடம் ராமாயணங் கேட்டார். ஆயின் ராமானுஜர் மலைமேல் போய் வாசஞ் செய்வதில்லை என்று நியமம் வைத்துக் கொண்டிருந்ததால் அவர் கீழ் திருப்பதியிலேயே வசித்து வந்தார். ஆகவே தினமும் மலையின் மேல் ஏறி பாதி தூரம் செல்வார். திருமலை நம்பிகளும் மலையின் கீழ் இறங்கி பாதி தூரம் வந்து ஒரு பெரிய புளிய மரத்தடியில் உட்கார்ந்து அங்கேயே ராமானுஜருக்கு ராமாயணத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதனல் திருமலை நம்பிகள் கோவிலில் மத்தியான்ன சேவைக்குத்தங்க முடியாமல் கீழே இறங்கி வந்து ராமாயணம் சொல்லிக் கொடுக்க நேருகிறதை நினைத்து வருந்தினுர். அப்பொழுது அவருக்கு கனவில் பெருமாள் பிரசன்னமாகி அவர் எங்கிருப்பினும் மத்தியான்ன சேவை கோவிலில் நடக்கும்பொழுது அவர் எதிரே தோன்றுவதாக வாக்களித்தார். அதே மாதிரி தினமும் திருமலை நம்பிகளும் ராமானுஜரும் ராமாயண பாடம்

நடத்திக் கொண்டிருக்கையில் மலைமேல் மணி அடிக்கும் பொழுது, அவர்கள் எதிரில் பெருமாள் திருவடிகள் தோன்ற அங்கேயே புஷ்பங்கள், துளசி இத்தியாதிகளினுடைய வாசனையும் வரஆரம்பித்தது. ராமானுஜர் இந்த இடத்தை பூஜை செய்யத்தக்க இடம் என நியமித்து, மலைக்கு ஏறிப்போகிறவர்கள் அந்த இடத்தை அடைந்தவுடன் ஸ்ரீனிவாசருக்குப் பூஜை செய்வதும் கோவிந்த நாம சங்கீர்த்தனம் பண்ணுவதும் செய்ய வேண்டும் என வரையறுத்தார். சண்டாளர்கள் கூட பக்கத்தில் உள்ள சண்டாள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த பிறகு அந்த இடத்திற்குச் சென்று பூஜைகள் செய்யலாம் என விதித்தார்.

**ராமர், வராஹர் முதலிய மூர்த்திகளுக்கு பூஜைகள் செய்ய ஏற்பாடுகள் செய்தது :**

ராமானுஜர் கோவிலிலேயே ராமருடைய விக்கிரஹத்தை பிரதிஷ்டை செய்தார். ராமாயணத்தில் விபீஷணனுக்கு சரணுகதி கொடுத்த சம்பவத்தை நினைவு படுத்துவது இந்த விக்கிரஹம். வைகைக் கரையில் (சம்ஸ்கிருதத்தில் கிருதி மாலா என்பர்) மதுரைக்குத் தென்மேற்கில் கலவிங்கம் அல்லது குருவித்துறை என்னுமிடத்தில் விஸ்வம்பரர் என்னும் யோகி செய்த தபஸ்ஸின் பலனுக ஸ்ரீராமர் இந்த காட்சியோடு அவருக்கு காட்சியளித்தார். நாளடைவில் அந்த பிரதேசத்தில் அமைதிக் குறைவு ஏற்பட்டதால் ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த மூர்த்தியை எடுத்துக் கொண்டு வேங்கடாசலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். திருமலை நம்பிகளும் ராமானுஜருக்கு விபீஷண சரணுகதி பாகத்தை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் சமயம் இந்த விக்கிரஹத்தைத் திருப்பதிக்குக் கொண்டு வந்தார்கள். இந்நிகழ்ச்சியின் சேர்ப்பு அவர்களுக்கு வியப்பைத் தர, ராமானுஜர், அந்த ஸ்ரீராமர் விக்கிரஹத்தை அங்கே தோன்றிய வண்ணமே கோயிலில் எழுந்தருளப் பண்ணி சீதைக்கு ஒரு விக்கிரஹம் பண்ணி அதையும் சேர்த்து பிரதிஷ்டை செய்தார்.

அடுத்ததாக அவர் செய்தது ஸ்வாமி புஷ்கரணியின் மேற்குக் கரையில் உள்ளவராஹ ஸ்வாமிக்கு பூஜை செய்த பிறகு கோவிலில் ஸ்ரீனிவாசருக்கு பூஜை செய்ய வேண்டும் என்னும் பழைய வழக்கத்தை அனுசரிக்க வேண்டுமென வற்புறுத்தினுர். கோவிந்தராஜர் சன்னதியிலும் சரி ஸ்ரீனிவாசர் சன்னதியிலும் சரி கோவில் காலம் முடிந்து அர்ச்சகர்கள் வெளியே வரும்பொழுது விஷ்வக்சேனர் சன்னதியில் அவர்

களுக்கு பூமாலை மரியாதை செய்த பிறகே கோவில் கதவுகளை மூடவேண்டும் என்னும் விதியைக் கொண்டு வந்தார்.

**திருமலை நம்பிகள் நினைவுக்கு உற்சவம் :**

வேங்கடாசல இதிஹாஸமாலாவின் ஆறுவது பாகம் திருமலை நம்பிகள் அனந்தார்யர் இவர்கள் திருப்பதியில் சேர்ந்து கைங்கர்யங்கள் செய்ததைக்குறிக்கிறது. திருமலை நம்பிகள் எப்பொழுது எந்த சந்தர்ப்பத்தில் திருப்பதிக்கு போனார் என்பதைப்பற்றியும் அவர் அங்கு செய்து வந்த சேவைகளைப் பற்றியும் முன்னமே சொன்னோம். அவர் செய்த சேவைகளுள் ஒன்று தினப்படி திருமஞ்சனத்திற்கு கொஞ்ச தூரத்திலுள்ள பாபநாசத்திருந்து தீர்த்தம் கொண்டு வருதல். அவர் ஒவ்வொரு நாளும் நீர்க்குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியை சொல்லிக் கொண்டு வருவது வழக்கம். ஒரு நாள் அவர் வழக்கம் போல் திரும்பி வருகையில் தலையில் கனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவதைக் கண்டு பானையை எடுத்துப்பார்த்தார். அதில் ஜலமே இல்லாமல் இருந்தது. உடனே அவர் திரும்பிப் பார்த்தார். அங்கு ஓர் இளம் வேடன் ஓர் அம்பால் பானையில் துவாரம் செய்து விட்டு அதன் வழியாக வெளி வந்த ஜலத்தை குடித்து விட்டு இருந்தான். அவர் மிக்க சினங்கொண்டு அவனை, தெய்வத்துக்காகக் கொண்டு போகும் ஜலத்தை இந்தமாதிரி வீணுக்கலாமா எனக் கேட்க அவனும் அவர் கேழ்வியை மதியாதவன் போல் ''ஓ தாதாவே, ஜலத்தைப்பற்றி கலங்க வேண்டாம். இங்கு அருகில் சின்ன குளத்தில் சுத்த ஜலம் இருக்கிறது. அதிலிருந்து ஜலத்தை கோவிலுக்கு எடுத்துச் செல்லலாம்'' என்று சொல்லிவிட்டு அவரைத் தன்னுடன் கொஞ்ச தூரம் அழைத்துக் கொண்டுபோய் அங்கு ஆகாச கங்கையைக் காண்பித்து, ''இது தூய்மையான கங்கை ஜலமே. இதை நம் சேவைக்குக் கொண்டுவரலாம்'' எனக் கூறிவிட்டு மறைந்து விட்டான். பெருமாள் பக்தர்களிடம் காட்டும் தயையை நினைத்து ஆச்சர்யத்தால் மனம் உருகி முன்னைவிட அதிகமாக ஈடுபட்டு, அன்று முதல் பாபநாசத்திலிருந்து ஜலத்தைக் கொண்டு வருவதைத் தவிர்த்து ஆகாச கங்கையிலிருந்தே ஜலம் கொண்டுவர ஆரம்பித்தார். கடவுளே அவரைத்தாதா எனக் கூப்பிடவே, அவருக்குத்தாதார்ய என்னும் சிறப்புப்பெயர் வழங்கலாயிற்று. ஆகவே அவருடைய சந்ததிகளை தாதார்யர் அல்லது தாதாசார்யர்கள் எனக்கூப்பிடப் பட்டனர். திருமலை நம்பிகளுக்கு ராமானுஜன் என்று ஒரு

பிள்ளை இருந்தான். அவன் பால்யத்திலேயே இறந்து விடவே, வேறு ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொண்டார். அக்குழந்தைக்குக் குமார திருமலை நம்பி எனப்பெயரிட்டு சுருக்கமாக தாத என அழைக்கலானுர். இச்சிறுவன் எல்லாரிடமும் மிக்க சிநேக பாவத்துடன் பழகவே அவனைத் தோழப்ப என அழைக்கலாயினர். அக்குடும்பமும் தோழப்ப தாதாசாரியக் குடும்பம் என அழைக்கப்பட்டது. திருமலை நம்பிகளின் மறைவுக்குப் பிறகு அவர் ஞாபகார்த்தமாக ஒரு உற்சவம் ஆரம்பித்தார். இந்த உற்சவம் அத்யயன உற்சவம் முடிந்த மறுநாள் நடத்தப்படும். இந்த உற்சவத்தில் பெருமாளை மங்களகிரியில் எழுந்தருளப் பண்ணி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆகாச கங்கையிலிருந்து தீர்த்தத்தை திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழி ஒலிக்க எடுத்துக்கொண்டு வந்து அத்தீர்த்தத்தால் பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்து அவருக்குச் சடகோபம் சேர்த்தருளல் செய்வார்கள்.

**யாமுனசார்யர் மண்டபம் :**

அனந்தார்யர் திருப்பதிக்கு அருகிலிருக்கும் பாலமண்டியா என்னும் கிராமத்திலிருந்து ராமானுஜரிடம் போய் அவருக்குச் சிஷ்யராகி ராமானுஜர் வேண்டுகோளுக்கிணங்க திருப்பதிக்குச் சென்று சேவை செய்ய இணங்கினுர். அவருடைய முக்கியமான சேவை ஒரு நந்தவனத்தை ஆக்கி பெருமாளுக்கு நித்தியப்படி அதிலிருந்து புஷ்பங்கள் தொகுத்து சார்த்துவது. யாமுனசாரியர் திருப்பதியிலிருந்தபொழுது கோவிலுக்கருகில் ஒரு குடிலில் இருந்து கொண்டு அங்கிருந்து தினமும் பெருமாளுக்கு புஷ்ப கைங்கரியம் செய்து கொண்டிருந்தார். ஆகவே அக்குடிலில் ஒரு மண்டபம் கட்டி யாமுனசாரியருடைய பிம்பம் ஒன்றை அதில் பிரதிஷ்டை செய்தார். அனந்தார்யர் புஷ்பங்களை அம்மண்டபத்திற்குக் கொண்டு வந்து தொடுத்து கோவிலுக்கு எடுத்துக் கொண்டு போவது வழக்கம். அவருக்கு ராமானுஜன் என்று ஒரு பிள்ளை உண்டு. அவன் அவருக்கு இதில் ஒத்தாசை செய்வான்.

**திருப்பதியில் வாசம் செய்தல் முதலியவைப்பற்றி ராமானுஜர் வகுத்த நெறிகள் :**

ராமானுஜர் திருப்பதியில் ஆரம்பித்த மற்ற உற்சவங்கள் எல்லாம் 7–வது பாகத்தில் காண்கின்றன. திருப்பதியில் வசிப்பதைப் பற்றி அவர் சில நியமங்கள் விதிக்க வேண்டியிருந்தது. ஏனெனில் புராண மூலமாகவும் பிரபந்தங்கள் மூலமாகவும் தெரிவது என்னவென்றல் திருப்பதி மலைமேலேயே வசிப்பது



மலே மேல் செல்லும் நடை பாதை-கடைசி படிகள்



ஒரு பழைய கல் மண்டபம் (அநேகம் கட்டினவற்றுள் ஒன்று)

அம்மலையின் புனிதத் தன்மையைக் குறைப்பதானதாகும் என்பது. அவரும் தனது சொந்த வாழ்க்கையில் இக் கொள்கையைக் கைப்பிடித்தார். ஆகவே அவர் நியமித்தது பெருமாளுக்கு சேவைகள் செய்யும் கைங்கரிய பரர்கள் தான் மலையின் மேல் வசிக்கலாம். மற்றவர்கள் யாவரும் (சேவார்த்திகள் உள்பட) மலையடிவாரத்தில் தான் வசிக்க வேண்டும் என்பது. இரண்டாவது நியமம் மலையில் வசிப்பவர்களும் சரி சேவார்த்திகளும் சரி பெருமாளுக்கு அமுது செய்வித்த பிறகு அதைத்தான் உட்கொள்ள வேண்டும். மூன்றுவதாக மலையில் வசிப்பவர்கள் தனியாகத் தோட்டங்கள் கட்டி அதில் வரும் புஷ்பங்களை வீட்டு உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளக் கூடாது. எல்லா புஷ்பங்களும் கோவிலில் பெருமாளுக்குத் தான் உபயோகப்படுத்த வேண்டும். நான்காவதாக மலையின் மேல் யாராவது இறக்கும் தருவாயில் இருந்தால் அவன் இறக்கும் முன் மலையின் கீழ் கொண்டு வந்து விடவேண்டும். ஐந்தாவது மலையிலுள்ள ஜந்துக்கள் யாவும் பெருமாளிடம் பக்தி பூண்டனவாகும். ஆகவே, பிராணிகள், பறவைகள் ஒன்றையும் வேட்டையாடிக் கொல்லுவது கூடாது. ஆறுவது மலையின் மேல் போகிறவர்கள் வாகனத்தை உபயோகித்து அதில் உட்கார்ந்து போகக் கூடாது. பாதங்களுக்கு பாதரக்ஷையோ வேறு அணிகளோ உபயோகிக்கக் கூடாது. ஸ்வாமி புஷ்கரணியை மையமாகக் கொண்டு கபில தீர்த்தம் வரை ஒரு கோடு இட்டால் இது ஒரு யோசனை (7 அல்லது 8 மைல்கள்). இதை வைத்துக் கொண்டு ஒரு வட்டம் வரைந்தால் அதில் உள்ள பூமியில் வேறு ஒரு தேவதைக்கும் ஒரு கோவில் கட்டக் கூடாது. இந்த நியமங்களை ராமானுஜர் தொகுத்து திருமலை நம்பிகளும் அனந்தார்யரும் அவைகளை பெருமாளிடம் வைத்து அங்கீகாரம் பெற்றுர்கள்.

**பிரம்மச்சாரியை மேற்பார்வையாளராக நியமித்தல் :**

இந்த நியமங்களை சரிவரக் கடைப் பிடிக்கவும் பூஜைகள் சரிவர நடக்கிறதா எனப் பார்க்கவும் தன்னலம் அற்ற ஒருவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட வேண்டியிருந்தது. ஆகவே ராமானுஜர் ஒரு நல்ல குணதிசயங்களுடன் கூடிய பிரம்மச்சாரியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென நினைத்தார். அப்படிப்பட்டவர், சாஸ்திரங்கள் கற்றவராயும், அரசனுக்குத் தக்க முறையில் யோசனைகள் சொல்லக் கூடியவராயும், ஆசைகள் அற்றவராயும் இருக்க வேண்டும் என நினைத்தார். ஆகவே பரமேஸ்வர சம்ஹிதையில் சொல்லியபடி ஒரு பிரம்மச்

சாரியை நியமித்து அவரிடம் ஒரு ராமவிக்கிரஹத்தை ஆராதனம் செய்யும்படி கொடுத்து, அவரிடம் ஒரு ஹநுமான் முத்திரையும் கொடுத்தார். இந்த முத்திரையில் ஹநுமாருடைய சின்னம் பொறிக்கப் பெற்று அதனுல் கஜாஞவை மூடும் பொழுது முத்திரை வைத்து விட்டுவர வேண்டியது. மேலும் இரவில் கோவிலே பூட்டுவதற்கு சாவியையும் கொடுத்தார். திருமலே நம்பிகளும் அனந்தார்யரும் இருக்கும் ஜீவதசை வரையில் அவர்களுடைய யோசனேகளேக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். மேலும் அவருடைய கொடியில் மணி (கண்டா) சின்னம் வரையப்பட்டு அது அவருடைய தனிச் சின்னமாகக் கருதப்பட வேண்டும். யாதவராயரும் அவருடைய அதிகாரத்திற்குத் தக்க உதவி புரிய வேண்டும் என்று எல்லாம் வகுத்தார்.

**ராமானுஜருடைய கடைசி விஜயத்தின்போது செய்த கடைசி ஏற்பாடுகள் :**

ராமானுஜர் திருப்பதிக்குக் கடைசியாக விஜயம் செய்த போது தான் செய்த ஏற்பாடுகள் ஏறக்குறைய சரிவர நடந்து வருவதைக் கண்டார். திருமலே நம்பிகள் கொஞ்ச நாட்கள் முன் மறைந்துவிட்டார். அனந்தார்யருக்கும் வயதாகிக் கொண்டிருந்தது. ஆகவே பிரம்மச்சாரி சன்னியாசிக்குத் தான் வகுத்துக் கொடுத்த காரியங்கள் அவர் திறமைக்கு அதிகப்படியாக இருந்தது. ஆகவே அங்கு 3, 4 பேர்கள் கூட அவருக்குக் கீழ் வேலே செய்தால் அவர்களுக்கு குறைவர வேலேகள் இருக்கும் என நினேக்கவே, ராமானுஜர் அவருக்கு 2, 3 குமாஸ்தாக்கள் கொடுக்க எண்ணினுர். மேலும் நம்மாழ்வார் திருவாய் மொழியில் கூறியபடி ஓர் சிறப்பு சேவை ஆரம்பிக்க நினேத்தார். இதை உத்தேசித்து சடகோபயதி என்னும் சன்னி யாசியை நியமித்து அவரிடம் பிரம்மச்சாரி செய்த கொண்டிருந்த காரியங்கள் அனேத்தையும் ஒப்படைத்தார். அனந்தார்யருடைய சிஷ்யர்களில் நான்கு பேரைப் பொருக்கி அவர்கள் சந்நியாசிக்கு எல்லா ஒத்தாசைகளும் செய்ய வேண்டு மென நியமித்தார். யாதவராயரிடம் கோவில் நிர்வாகத்தைச் சரிவர கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் அனந்தார் யருடைய யோசனேயின் பேரில் இந்நிர்வாகம் நடத்தப்பட வேண்டும் எனக் கூறி ராமானுஜர் திருப்பதியைவிட்டு ஸ்ரீ ரங்கத்திற்குச் சென்றுர். ராமானுஜருடைய பிரதிநிதியாக சடகோபயதியும் திருமலே நம்பிகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து கோவில் நிர்வாகத்தை நடத்த வேண்டும். மேலும் அவர் நியமித்த நிர்வாகிகளில் ஒருவர் நாதமுனி, யாதவமுனி

வம்சத்தவர்களாகிய சடமர்ஷண கோத்திரத்தவராய் இருக்க வேண்டுமென்பது.

**பிரபந்தம் சொல்ல ஏற்பாடு :**

கொஞ்ச காலத்திற்குப் பிறகு ராமானுஜர் மறைந்தார். இதைக் கேட்டதும் அனந்தார்யர் பெருமாளிடம் விடைகேட்டு ராமானுஜருடைய பிம்பம் ஒன்றை பிரதிஷ்டை செய்து அத்யயன உத்சவத்தின் பொழுது ராமானுஜ நூற்றந்தாதியைப் பாட ஏற்பாடு செய்தார். ஒரு சமயம் ஸ்ரீரங்கத்தில் பிரபந்தத்தைப் பாடுபவரும் ராமானுஜருக்கு பிரபந்தத்தைச் சொல்லித்தருபவருமான ஸ்ரீரங்கராஜா என்பவர் திருப்பதிக்கு வந்தார். அவர் மூலஸ்தானத்திற்குச் சென்று திருவாய்மொழிப் பாடினார். அது முடிந்தவுடன் பெருமாள் அவரை முதலாழ் வார்கள் பாசுரங்களில் சிலவற்றைப் பாடச் சொன்னார். அம்மாதிரியே பாடிவிட்டு தீர்த்தம் பிரசாதம் வாங்கிக் கொண்டு திருமலை நம்பிகள் அனந்தார்யரிடம் திரும்பிவந்தார். அவருடைய விஜயத்திலிருந்து திருப்பதியில் அத்யயன உத்ஸவம் ஆரம்பமாகி, பெரியாழ்வார் திருமொழியும் ஓதப்பெற்றது. அதன் பிறகு அவர் ஸ்ரீரங்கத்திற்கு திரும்பிச் சென்றார். இந்த காரியத்தை மேலும் செய்ய ஒரு தனி அதிகாரி நியமிக்கப் பட்டார். ஸ்ரீரங்கத்தில் திருவாய்மொழி ஓதுபவர் "ஸ்ரீரங்க விஞ்ஞாபதிகார்ய" எனப்படுவர் அதேமாதிரி இவரை "ஸ்ரீ சைல விஞ்ஞாபதிகார்ய" என அழைக்கப்பட்டார். அதாவது பெருமாளுக்கு விண்ணப்பம் செய்யும் அதிகாரி என்று.

**வரலாற்றைப் பரிசீலனை செய்தல் :**

இதிஹாஸ மாலையில் திருப்பதியில் பூஜைகள் செய்வதற்காக ராமானுஜர் செய்த ஏற்பாடுகளைப் பற்றி இவைகள் கூறப் பட்டிருக்கின்றன. இவைகளில் பல இடங்களில் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் சில அற்புத நிகழ்ச்சிகள் கலக்கப் பட்டிருக் கின்றன. தெய்வ நம்பிக்கையுள்ள ,பக்த கோடிகள் இவ் வற்புதங்களை உண்மையானது என்றே நினைக்கையில் அவற்றைப் பற்றி பரிசீலனை செய்வது தகுதியன்று. நாம் அவற்றில் நம்பிக்கை வைக்கலாம். வைக்காமல் இருக்கலாம். ராமானுஜரும் அவருடைய காலத்தினவரும் இவைகளில் நம்பிக்கை வைத்தார்களா இல்லையா என்பதைப் பற்றி நமக்குத் தெரியாது. அற்புதங்கள் என்று சிலவற்றைச் சொன்னாலும் அவைகளை அடிப்படையாக வைத்து ஆரம்பித்த சில ஏற்பாடுகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே

அற்புதங்களைப் பற்றி மேலும் பரிசீலனை செய்யாமல் விட்டு விட்டு, கோவிலின் சரித்திரத்தில் ராமானுஜர் செய்த ஏற்பாடுகள் என்று சொல்லப்பட்டவை அவரால் ஏற்படுத்தப் பட்டதா என்பதை கவனிக்க வேண்டும். முன் சொன்னபடி ஒரு நூற்றுண்டுக்குள் இவர் ஏற்படுத்தியவைகள் கல்வெட்டு களாக திருப்பதியில் தோன்றின. இவைகள் பிற்காலத் தியவையல்ல. அதன் பிறகு நெடுங்காலத்திற்குப் பிறகுதான் திருப்பதி கல்வெட்டுகள் பிரபலமாக் தோன்றத் தொடங்கின. நடுவிலே ஏற்பட்ட கல்வெட்டுகள் கொஞ்சம். முன் சொன்னபடி ராமானுஜர் கோவில் வழிபாடுகளை சரிவர வகுத்ததில் முக்கிய ஸ்தானம் வகித்தார். அவர் அக்காரியங்களை அதற்கென்று கூறிய காலங்களில் செய்தார் என்பதற்கு தகுந்த சான்றுகள் இருக்கின்றன. வேங்கடாசல இதிஹாஸமாலா ராமானுஜர் காலத்திற்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான் தோன்றியது எனினும் அதுவரை ஓரான் வழியாக வந்த மரபுகளைத் தொகுத்துக் கூறுகிறது. மேலும் அது கோவிலில் நடக்கும் அனேக ஏற்பாடுகளைப்பற்றி விளக்கம் தருகிறது எனக் கூறலாம். ஆகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் இருந்தன. அவைகளின் ஆரம்பம் அற்புதங்களின் மூலமாக ஏற்பட்டிருக் கலாம். இல்லாமலும் இருக்கலாம். உதாரணமாக அனந்தார் யருக்கு ஏற்பட்ட இரண்டு அற்புதங்களை ராமானுஜர் காலத்தில் நம்பியிருக்கமாட்டார்கள் என தற்காலத்தியவர்கள் கூறலாம். ஆனுல் இது சரியல்ல பக்தர்கள் அற்புதங்களில் நம்புகிறுர்கள். அவைகளை வைத்து ஏற்பாடுகள் செய்தால், நாம் அந்த உற்சவாதிகளைத் தப்பிதம் என்றும் சரித்திர சம்பந்த மற்ற தென்றும் சொல்லமுடியாது. கோவிலின் சரித்திரத்தில் இந்த உற்சவாதிகள் அப்பொழுதிலிருந்தே நடைபெற்று வருகின்றன. வென்றும் ராமானுஜருக்குப்பிறகு இவைகளைப் பற்றிய சாஸனங்கள் இருக்கின்றன வென்றும் நிச்சயமாகத்தெரிகிறது. இதைப்பற்றி மேலும் மேலும் தக்க இடங்களில் விசாரிப்போம். ஆகவே இவ்வுற்சவாதிகளில் பல ராமானுஜர் காலத்திற்குமுன்ன தாகவே இருந்து வந்திருக்கின்றன வென்றும் சில அவர்தானே ஆரம்பித்ததென்றும் சில அவரால் நன்கு ஸ்திரப்படுத்தப்பட்ட தென்றும் நாம் கொள்ளலாம்.

அத்தியாயம் 18

# கடைசி சோழர்களும் அவர்கள் வம்சத்தவர்களும்

**நம் அறிவில் ஒரு மறைவு கி.பி. 1150—1235 :**

ராமானுஜர் திடகாத்திரமாய் இருந்தது 12-வது நூற்றுண்டு மத்திவரை என்று சொல்லலாம். ஆகவே அவருடைய இறுதி காலம் கி.பி. 1150-ல் வந்தது எனக் கொள்ளலாம். திருப்பதி பிராந்தியத்தில் சோழர்களுடைய முதல் கல்வெட்டானது ராஜராஜன் III-வனுடையது. இதன் வருடம் கி.பி. 1235. இதன் நடுவே சுமார் மூன்று தலைமுறைகள் மறைவு இருக்கிறது. ஒரு யாதவராயர் ராமானுஜருக்கு மிக்க உதவியாயிருந்து ராமானுஜருக்கும் கோவிலுக்கும் அனேக சேவைகள் செய்ததைப் பற்றி முன்பே கூறினோம். யாதவ கட்டிதேவன் என்பவன் விக்கிரம சோழன் கீழேயும் அவனுக்குப் பிறகு குலோத்துங்க சோழன் கீழேயும் சிற்றரசனுயிருந்தான் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனல் நமக்குக் கிடைத்திருக்கும் சாஸனங்கள்படி அவனைப்பற்றி கி.பி. 1140-க்கு பிறகு தெரியவில்லை. மேலும் கல்வெட்டுகளின்படி அவனுடைய பிள்ளைகளில் ஒருவன் விட்டு வைத்த கல்வெட்டுகளைக் கொண்டு பார்த்தால் அவன் கி. பி. 12-வது நூற்றுண்டில் 80 முதல் 90 வருஷம் வரையில் அக்கல்வெட்டை செதுக்கியதாகத் தெரிகிறது. மற்றைய பிள்ளைகளும் அவனுடையப் சிற்றரசை அவனுக்குப்பிறகு ஆட்சி புரிந்து வந்திருக்கலாம்; ஆயின் அவர்களைப் பற்றி கல்வெட்டுகள் மூலம் நமக்கு ஆதாரம் கிடைக்கவில்லை. ஆகவே இந்த பிரதேசத்தின் வரலாற்றில் யாதவராயனின் உயர்வு தாழ்வுகள் சம்பந்தப்பட்டிருந்தது. அவர்களுள் ஒருவன் வீர நரஸிம்மயாதவராயன்- இவன் சாளுக்கிய பிருதுகளை சூட்டிக் கொண்டு மிக்கபராக்கிரம சாலியாய் திருப்பதி உள்பட ஒரு பெரிய நிலப்பரப்பை ஆண்டு வந்தான். வீர நரஸிம்மன் உள்பட அனேகயாதவராயர் களுடைய பெயர்கள் திருப்பதியிலும் அதற்கு உள்பட்டு அருகிலுள்ள இடங்களிலுமுள்ள கல்வெட்டுகளில் அனேக இடங்களில் காணப்படுகின்றன. ஆகவே திருப்பதியின் வரலாற்றை நன்கு

அறியவேண்டுமாயின் யாதவராயர்களுடைய சரித்திரத்தை நன்கு அறியவேண்டும்.

**சிற்றரசுகளின் தோற்றம் அவர்களில் யாதவராயர்கள் :**

இப்பிரதேசத்தில் யாதவராயர்கள் மாத்திரமே தனியாக வந்து அரசாண்டார்கள் என்றில்லை. சில சாஸனங்களில் தெலுங்கு சோழர்கள் பெயர்கள் வருகின்றன. இவர்கள் பொட்டப்பி சோழர்கள் என்று அழைக்கப்பட்டு பழைய கரிகால சோழனின் வம்சத்தவர்களாகத் திகழ்ந்தனர் இன்னொரு வம்சம் தெலுங்கு பல்லவர்கள் என அழைக்கப்பட்டு அவர்கள் முக்கண்டி காடுவெட்டியின் வம்சமென்றும் சில சமயம் திரிநேத்ர பல்லவர்களின் வம்சம் என்றும் சொல்லிக் கொண்டார்கள் அவர்கள் காஞ்சி பல்லவர்களின் கோத்திரத்தையும் பிருதுகளையும் சூட்டிக் கொண்டார்கள். இந்த சிக்கல்களின் நடுவே ஒய்சனர்கள் சில சாஸனங்களில் தலையை நீட்டுகின்றனர். ஒய்சன வீரபல்லாலரின் பெரிய அதிகாரிகளில் இரண்டு மூன்று பேர்கள் திருப்பதி கல்வெட்டு களில் கூட வருகின்றனர். இதனால் அந்த சமயத்தில் ஒய்சன ஆட்சி இருந்ததோ இல்லையோ அவர்களுடைய செல்வாக்கு திருப்பதிவரை பரவியிருந்தது. இந்த சிக்கலை நாம் நன்கு ஆராய்ந்து தெளிவடைந்த பிறகு தான் திருப்பதியின் வரலாற்றை மேலும் கவனிக்க வேண்டும். ஆனால் இந்த காலத்தில் கல்வெட்டுகளின் மூலம் நாம் அறியக் கூடிய விஷயங்கள் மிகக்குறைவாயிருக்கிறது. என்பது வருந்தத் தக்கது.

கி. பி. 1133–லிருந்து கி. பி. 1163–வரை சோழசாம் ராஜ்யத்தை குலோத்துங்கன் II–ம் ராஜராஜன் II-ம் ஆண்டார் கள். ஆனால் ராஜ்யத்தில் நடந்த சம்பவங்களின் விவரங்கள் நமக் குக்கிடைக்கவில்லை. இதற்கு பிறகு சோழசாம்ராஜ்யம் இதே சோழவம்சத்தின் வேறொரு தலைமுறையில் வந்த ராஜாதி ராஜன் என்பவனால் கி. பி. 1163–1178–வரை ஆளப்பட்டது. அவனுக்குப்பிறகு கி.பி. 1178—1216-வரை குலோத்துங்கன் III–என்னும் பேரரசனால் ஆளப்பட்டது. அவனுக்குப் பிறகு வந்தவர்கள் ராஜராஜன் கி. பி. 1216–1246-வரையிலும் ராஜேந்திரன் III–1246–1267–வரையிலும் ஆண்டார்கள். கடைசியில் வந்தவன் பேருக்காக 1279–வரை சிம்மாசனத்தில் உட்கார்ந்தான். திருப்பதியைச்சுற்றிய பிரதேசத்தை விக்கிரம சோழன் என்னும் இளவரசன் ஆண்டான் என முன்பே சொன்னோம். இவன் முதலில் கொஞ்ச வருடங்கள் சோழ ராஜர்களின் இளவரசன் என்னும் முறையில் இருந்தாலும்,

சோழவம்சத்தில் மாறுதல் ஏற்பட்டு புதிய மன்னன் வந்தபோது அம்மன்னனும் இவனை தனது பிரதிநிதியாக நியமித்தான். ஏனெனில் இவ்விக்கிரம சோழனும் சோழமன்னர்களின் மற்றொரு தலைமுறையில் வந்தவனாய் கிழக்கு சாளுக்கியர்களின் வழியாய் வந்தவன். இவன் சோழமன்னனுக்குக் கப்பம் கட்டிக் கொண்டு ராஜ்யத்தை ஆண்டுவத்தான். அப்படிக் கப்பங் கட்டுபவர்கள் எப்படி பேரரசிடம் மிக்க அக்கரைவைக்க மாட்டார்களோ அம்மாதிரியே இவனும் அக்கரை காட்டவில்லை. மேலும் அப்பேரரசே தன் இருப்பைக் காப்பாற்றிக் கொள்ள சண்டைபோட வேண்டியிருந்தால் இவன் அவ்வரசை லக்ஷியம் பண்ணவில்லை. இந்த வாய்ப்பு உடனே ஏற்பட்டுவிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வந்தது. ஏனெனில் முதலில் தென்னாற்காட்டு மாவட்டத்தில் கப்பம் கட்டும் ஒரு சிற்றரசு தன் சுதந்திரத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தது. இச்சிற்றரசு கடலூர் பக்கத்தில் தன் சுதந்திரத்தை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்த ஆரம்பித்த கொஞ்ச நாட்கள் கழித்து மிக்க பிரபலமடைந்தது. இவ்வம்சத்தில் மிக்க பிரபலமானவன். கோப்பெருஞ்சிங்க எனப்படுபவன். இவனால்தான் ராஜ ராஜன் III-ன் கீழ் சோழப் பேரரசின் வலிமை குன்றிற்று. சோழ ராஜ்யத்திற்கு வடக்கே இந்த சிற்றரசு வலிமை பெற்றதால் அதற்கும் வடக்கேயுள்ள சிற்றரசுகள் தங்கள் சுதந்திரத்தை வெளிப்படுத்த வசதியாயிருந்தது. ஆகவே குலோத்துங்கன் II-ஆட்சிக்குப் பிறகு யாதவராயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக சோழப் பேரரசின் பெயரை தங்கள் சாஸனங்களில் பொறிப்பதை நிறுத்தி விட்டார்கள். ஆயினும் சில சமயங்களில் அவர்கள் பெயரையும் கூறுவார்கள். இதனால் திருப்பதியும் அதன் சரித்திரமும் யாதவராயர்களுடைய ஏற்றத் தாழ்வுகளோடு கலந்திருந்தது. ஆகவே அதை ஆரம்பத்தில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**கப்பம் கட்டும் குடும்பங்கள் :**

சோழர்களில் குலோத்துங்கன் I-க்கும் சாளுக்கிய விக்கிர மாதித்தியன் VI-க்கும் நடந்த சோழ சாளுக்கிய சண்டைகள் II-வது நூற்றுண்டின் இறுதியில் முடிவடைந்தது. அதன் பயனாக கி.பி. 1116-ல் இவ்விரு பேரரசுகளின் எல்லை நிர்ணயிக்கப் பட்டது. அப்போது இந்த கப்பம் கட்டும் சிற்றரசுகள் முன்னுக்கு வந்தார்கள். விக்கிரம சோழனுடைய அரசில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் இச்சிற்றரசுகளில் பலரின் பெயர்கள் காணப்படுகின்றன. அவனுக்கு அடுத்ததாக வந்த

குலோத்துங்கன் II காலத்திலும் இதே குடும்பங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. அவர்கள் உயர்ந்த ஸ்தானங்களை வஹித்தார்கள். ஆனால் இதில் ஒரு சிறிய வித்தியாசத்தைக் காணலாம். அவர்களை ஒரு ஆதிகார ஸ்தானத்திலிருந்து இன்னொரு அதிகார ஸ்தானத்திற்கு மாற்றினார்கள். ஆகவே அவர்கள் பேரரசின் கீழ் ஒரு பகுதி நிலத்திற்கு கப்பம் கட்டும் சிற்றரசர்களாக இருந்தார்களெனினும் இம்மாதிரி மாற்றுதல் இருக்கும் வரை அவர்களை பெரிய அதிகாரிகள் எனத்தான் கருதவேண்டும். குலோத்துங்கன் II ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திற்குப் பிறகிலிருந்து, சுமார் ஒரு முப்பது ஆண்டுகளுக்குள் இந்நிலையில் மாறுதல் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பபட்டு இவ்வதிகாரிகள் தங்கள் அதிகாரத்துக்கு கீழ் உள்ள நிலத்தை தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டு ஆளத் தொடங்கினார்கள். இம்மாதிரியாக இவர்கள் அதிகாரிகள் என்னும் ஸ்தானத்திலிருந்து தங்களது நிலப்பரப்பை சொந்தமாக்கிக் கொண்டு பேரரசுக்குக் கப்பம் கட்டும் அளவே மரியாதை கொடுத்து வரும் சிற்றரசுகளாக மாறினார்கள். இந்த மாற்றம் கொஞ்சம் கொஞ்சமாகவே நடைபெற்றது. அது குலோத்துங்கன் II ஆட்சியில் ஆரம்பித்து ராஜராஜன் II ஆட்சி வரையில் முடிவு கண்டது. இந்த காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. முன் கூறியபடி கங்கா எல்லை ஒரு தீர்மானத்துக்கு வந்ததாயினும் சோழர்களுக்கு அருகே வடக்கேயுள்ள பிராந்தியம் அந்த நிலைமையில் இல்லை. கிழக்கு சாளுக்கிய நாட்டில் மேற்கு சாளுச்கிய விக்கிரமாதித்தியன் வல்லமை சண்டைக் காலத்தில் சீக்கிரமாகப் பரவிற்று. விக்கிரம சோழன் காலத்தில் இப்படி பிடிபட்ட நாடுகள் யாவும் விடுவிக்கப் பட்டன. சோழ அதிகாரிகளால் ஆட்சி புரிந்த பிரதேசங்கள் விக்கிரம சோழனை அரசனாக வணங்கின என்றாலும் அனேக குடும்பங்கள் கப்பம் கட்டும் சிற்றரசுகளாக முக்கியத்துவம் அடைந்தன. இக்காலத்திய கல்வெட்டுகளில் வரும் குடும்பங்களில் சில: ஒரு பல்லவக் குடும்பம் கூடல் (கடலூர்) என்னும் தென்னாற்காடு நகரத்தில் திகழ்ந்தது. அதற்குச் சற்று வடக்கே சாம்பவராயன் என்பவனுடைய குடும்பம் பாலார் ஆற்றங் கரையோரமாக வேலூருக்கும் அதற்கு வடபகுதிகளிலும் திகழ்ந்தது. திருக்கோவலூருக்கருகில் மலையமான் என்பவனுடைய குடும்பம் திகழ்ந்தது. இவர்களை சேடிராயர்கள் எனவும் அழைப்பர். செஞ்சிக்கருகில் செஞ்சியார் என்னும் கூட்டம் திகழ்ந்தது. இவர்களுக்கெல்லாம் வடக்கே சில தலைவர்களை தொண்டை மண்டலத்து சாளுக்கிகள் என அழைத்தனர். இவர்

களும் விக்கிரம சோழனின் கீழ் படிந்தவர்கள் தான். இவர்களுக்கு வடக்கே பொட்டப்பி சோழர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் வடக்கே சில தலைவர்கள் காங்கேயர்கள் என அழைக்கப்பட்டார்கள். அதற்கப்புறம் மகா மண்டலேஸ்வர கட்டி தேவர் என்பவர் வருகிறார். அதற்கும் வடக்கே கொள்ளிப் பாக்க நாயகன் வருகிறான். இந்த கட்டிதேவன் என்பவன் யாதவராய வம்சத்தவன்; சசிகுலசாளுக்கியின் வம்சத்தில் பிறந்தவன். அவர்களுள் நாராயணதேவன் என்பவனை வீரராஜேந்திரன் ஆட்சியின் கல்வெட்டுகளில் காண்கிறோம். இச்சிற்றரசு குடும்பங்கள் எல்லாம் குலோத்துங்கன் ஆட்சியிலும் அதற்குப் பிறகு ராஜராஜன் காலத்திலும் இருந்தார்கள். இடமாற்றம் இருந்ததினால் மாத்திரம் சில மாறுதல்கள் காண்கிறோம். ஆகவே இதிலிருந்து நாம் காண்பது சோழப் பேரரசுக்கும் பிராந்திய ஆட்சிக்கும் நடுவே அனேக சிற்றரசுகள் தோன்றி அவை முதலில் நடுத்தர சிற்றரசுகள் என ஆரம்பித்து கடைசியில் அந்தந்த பிராந்தியங்களுக்கு சுயேச்சை பெற்ற அரசுகளாகவும் சோழ அரசின் ஆதிக்கத்தை பின்னணியில் எறிந்தவைகளாகவும் ஆயின.

**இக்காலத்தில் யாதவராயர்களின் வம்சம் :**

கப்பம் கட்டும் சிற்றரசுகளில் திருப்பதியோடு அடிக்கடி திகழும் குடும்பம் யாதவராயர்கள் குடும்பம். ஆரம்பத்தில் இவர்கள் சோழப் பேரரசின் பெரிய அதிகாரிகளாய் மிக்க செல்வாக்குடன் சாம்ராஜ்யத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்தார்கள். அவர்களுள் வீரநரஸிம்ம யாதவராயன் என்பவன் மிக்க புகழ்படைத்தவன். இவன் அனேக பிருதுகளைக் கொண்டதால் சிறு பதவியிலிருந்து படிப்படியாக பெரிய பதவிக்குவந்தது தெரிகிறது. இதனைத்தவிர இன்னும் சில யாதவராயர்களும் இருந்தார்கள். இவர்கள் பெயர்களோடு இன்னும் சில வம்சத்தினவர்களும் இடம் பெறுகிறார்கள். கண்டகோபாலர்கள், தெலுங்கு சோழர்கள், இன்னும் பலர் இம்மாதிரி இடம் பெற்றனர். ஒரே சமயத்தில் திருப்பதி கல்வெட்டுகளில் இம்மாதிரி பல வம்சத்தினர்களுடைய பெயர்கள் காணப்படுவது, அவர்கள் யாவரும் சோழ, அல்லது பாண்டிய சாம் ராஜ்யத்தில் உயர்ந்த பதவி வஹித்தவர்கள் என்றும் கோவிலுக்கு அனேக நன்கொடைகள் கொடுத்தார்கள் என்பதையும் குறிக்கிறது. இதனால் இவர்கள் திருப்பதி பிரதேசத்தை ஆண்ட சிற்றரசனோடு கூட்டாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் யாதவராய வீரநரஸிம்மன்,

இன்னும் ஒன்றிரண்டு பேர்களுடைய சாஸனங்களிலிருந்து பார்த்தால், நன்கொடை கொடுத்த அதிகாரிகள் திருப்பதி பிரதேசத்தை ஆண்ட சிற்றரசனேடு கூட்டாக இருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆகவே நாம் இந்த வம்சத்தில் வருகிறவர்களின் பெயர்களையும் அவர்கள் காலத்தையும் நன்கு அறிந்தால் அவர்களைச் சரியாக புரிந்து கொள்ளமுடியும்.

கட்டிதேவ யாதவராயன் என்பவன் தான் யாதவராயர்களுக்குள் ராமானுஜருக்கு பல விதங்களில் ஒத்தாசை செய்தான் என்று முன்பு சொன்னேம். முக்கியமாக திருப்பதி மலைக்கோயிலை சைவர்கள் தங்களது எனச் சொன்ன போதும் அதற்கு பிறகு கோவிலுக்கு செய்த ஏற்பாடுகள் செய்த போதும் அவன் பல விதத்தில் உதவினன். அவன் தான் ராமானுஜருக்கு உதவி கீழ் திருப்பதியில் கோவிந்த ராஜர் கோவிலைக்கட்டி அக்ரஹாரமும் அமைத்தான். அந்த அக்ரஹாரத்தை ராமனுஜருக்கு மரியாதை செய்யும் பொருட்டு ராமானுஜபுறம் எனப் பெயரிட்டான் ஆயினும் கட்டி தேவன் இவைகளைச் செய்ததைக் குறித்து ஒரு கல்வெட்டுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. அவனைப்பற்றிய தகவல்களிலிருந்து விக்கிரம சோழனின் 17-வது ஆட்சி ஆண்டிலும் குலோத் துங்கனின் 16-வது ஆட்சி ஆண்டிலும் இருந்ததாகத்தெரிகிறது. அதாவது கி.பி. 1135-லிருந்து 1139—வரை அவன் கட்டாயம் இருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 1139—லிருந்து கி. பி. 1235-வரை கல்வெட்டுகள் நமக்குக் கிடைக்கவில்லை யாதலால் நமக்கு வரலாற்றில் ஒரு மறைவு இருக்கிறது. இந்தக் காலத்தில் தான் ராஜராஜன் II—ம் அவனுக்குப்பிறகு ராஜாதிராஜனும் குலோத்துங்கன் III-ம் ஆட்சிபுரிந்தார்கள். ராஜாதிராஜனுடைய ஆட்சிமுழுவதும் குலோத்துங்கனுடைய ஆட்சி முதல் சில வருஷங்கள் ஆகிய இந்தகாலத்தில் பாண்டிய அரசு பதவிக்கு உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்தது. அதில் சோழர்கள் ஒரு பக்கமும் அதற்கு எதிர்பக்கமாக சிங்களவர்களுமாக நின்றூர்கள். ஆகவே இக்காலம் முழுவதும் சோழ மன்னர்கள் கவனம் முழுவதும் தெற்கு நோக்கியிருந்தது. ஆயினும் ராஜ ராஜன் II-னுடைய ஆட்சியில் சில காலம் நாட்டில் அமைதி பரவியிருந்தது. அடுத்தபடியாக குலோத்துங்கன் III-னுடைய 7-வது ஆட்சி ஆண்டிலும் ராஜராஜன் III-னுடைய 11, 15, ஆட்சி ஆண்டுகளிலும் அதாவது கி. பி. 1185-1231-வரை நம் கவனத்திற்கு வரும் மற்றொரு யாதவராயன் திருக்காளத்தி தேவ யாதவராயன் ஆகும். இவனே இதே பெயரையுடைய

தெலுங்கு சோழனென தப்பி நினைத்துவிடக் கூடாது. அவனுடைய ஒரு பிள்ளை பெயர் சிறிய பிள்ளை என்றும் வீர ராக்ஷஸ யாதவராயன் என்னும் பிருதோடும் கி. பி. 1193-ல் வருகிறான். கட்டி தேவனுடைய ஒரு பிள்ளை ராஜமல்ல யாதவராயன் குலோத்துங்கன் III—னுடைய 31 வது ஆட்சி ஆண்டிலும் ராஜராஜன் IV—னுடைய 21-வது ஆட்சி ஆண்டிலும், அதாவது கி. பி. 1209-1237-ல் வருகிறான். அவனுடைய பிள்ளை காசண்மாய் என்னும் புதுவகைப் பெயருடன் ராஜராஜனுடைய 19—வது ஆட்சி ஆண்டில் வருகிறான். அவனுக்குப்பிறகு வீர நரஸிங்க யாதவராயன் வருகிறான்.

**யாதவ வீர நரஸிங்கனும் அவருடைய வம்சத்தவர்களும் :**

இவன் பெயர் சோழ சாம்ராஜ்யத்தில் குலோத்துங்கன் III ஆட்சியிலும் ராஜ ராஜன் III ஆட்சியின் முதல் பாகத்திலும் தொண்டை மண்டலம் முழுவதும் ஆளும் ஒரு முக்கிய அதிகாரியாக வருகிறது. அவன் செலுத்திய அதிகாரத்தைக் கவனித்ததால் அவன் ராஜ பிரதிநிதிகளுள் மிக முக்கிய மானவனாகவும் சோழ சாம்ராஜ்யத்தின் வடபாதி முழுவதிலு முள்ள மற்றைய சோழ ராஜ பிரதிநிதிகளின் மேல் தன் அதி காரத்தை செலுத்துபவனாகவும் இருந்தான் எனத்தெரிகிறது. அவனைப்பற்றி நமக்குத் தெரியப்படுத்தும் முதல் சாஸனம் குலோத்துங்கன் III-னுடைய 31-வது ஆட்சி ஆண்டு அதாவது கி. பி. 1209 வருடத்தியதாகும். கடைசி சாஸனம் ராஜராஜன் III-னுடைய 14-வது ஆட்சி ஆண்டு அதாவது கி. பி. 1230 ஆகும் ; அதற்குப்பிறகு ஜடாவர்ம சுந்தரபாண்டியன் I னுடைய 12-வது ஆட்சி ஆண்டு அதாவது கி. பி. 1262-63ல் ஒரு சாஸனம் கிடைக்கிறது. ஆகவே அவன் தன் அதிகார பீடத்திலிருந்து கி. பி. 1209-லிருந்து 1253 வரையிலாவது ஆட்சி செலுத்தினான் எனத்தெரிகிறது. திருப்பதி கோவிலில் அவனது கல்வெட்டுகள் அனேகம். மேலும் அவன் கோவிலுக்காக அனேக பெரிய காரியங்களை செய்திருக்கிறான். மேலும் மூன்று யாதவராயர் களுடைய பெயர்களும் வருகின்றன. கட்டி தேவ II என்பவன் கி. பி. 1224-27 வரை ராஜராஜன் III காலத்திலும் திருவேங்கட நாத யாதவராயன் 8-வது விருந்து 12-வது வரை (அவனுடைய காலத்தையே எடுத்துக் கொண்டு கூறுவது) யிலும் இருந்தனர். இத்திருவேங்கடநாத யாதவராயர் காலத்தை 8-வது லிருந்து 12—வது வரை என்பதை வீரநரஸிங்கினுடைய ஆட்சி ஆண்டு களாகக் கூடக்கொள்ளலாம். இவன் வீரநரஸிங்கனுடைய

மருமகப்பிள்ளை என்பது கல்வெட்டு 102-ல் அவனைப்பற்றி கூறுகையில் மருஹனுர் என்பதால் கொள்ளலாம். இதைப்பற்றி மீண்டும் கவனிக்கலாம். இவனுக்குப் பிறகு ஸ்ரீரங்கநாத யாதவராயன் கி. பி. 1236—1255 வரை இருந்தான். ஆகவே இந்த தேதிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு பார்த்தால் கடைசி மூன்று யாதவராயர்களும் வீரநரசிங்கன் அதிகாரம் செலுத்திய காலத்தில் இருந்தனர் எனத்தெரிகிறது. இவர்கள் யாதவர்களுடைய அரச வம்சத்தில் ராஜ குமாரர்களாய் இருந்திருக்கலாம் ஆயினும் அவர்கள் வீரநரஸிம்மனுடைய ஆட்சியின் கீழ் சிறிய ராஜ பிரதிநிதிகளாயிருந்திருக்க வேண்டும். இப்பொழுது கல்வெட்டுகளிலிருந்து அவர்கள் திருப்பதிக்குச் செய்த சேவைகளைப் பற்றி கவனிப்போம்.

**சோழ அரசாட்சியில் யாதவராயர்களுடைய கல்வெட்டுகள் :**

இந்த யாதவராயர்கள் குலோத்துங்கன் III-னுடைய காலத்தினவராயினும் அவனுடைய ஆட்சிக்கு அடங்கினவராயினும் திருப்பதி கல்வெட்டுகளில் குலோத்துங்கன் III ஆட்சி காலத்தில் இருந்ததை ஸ்பஷ்டமாகக் கூறவில்லை. குலோத்துங்கனுடைய ஆட்சியின் முற்பகுதியிலும், பிறகு அவனுடைய ஆட்சியின் பெரும்பாகத்திலும் அவன் தெற்கே பாண்டியர்களோடும் சிங்களவர்களோடும் சண்டைகளில் ஈடுபட்டிருந்ததால் இந்த மாதிரி கூறுததற்குக் காரணம். அவன், பிறகு தன்னுடைய பராக்கிரமங்களால் சாம் ராஜயத்தின் எல்லா பாகங்களையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தானுயினும், ராஜயத்தின் வடபகுதிகளிலுள்ள சிற்றரசுகளை அவ்வளவு முழுமையாக தங்கள் . கடமைகளை நன்கு உணர்ந்து பார்க்குமளவுக்கு கீழ்படியச் செய்யவில்லை. இதன் பயன், வடக்கிலிலுள்ள சிற்றரசுகள் சுயேச்சை மன்னர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டார்கள். எங்கெங்கே தேதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த கல்வெட்டுகள் இவன் காலத்தனவாயின் அவற்றைக் கவனிப்போம். தேவஸ்தானம் கல்வெட்டுகள் வால் I–ல் முதலாவது நெ. 43 ராஜராஜன் III-னுடைய 5—வது வருடத்தைக் குறிக்கிறது. அதாவது கி.பி. 1221—திருச்சானூரில் ஒரு குளம் வெட்டுவதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு அக்குளத்தில் இருக்கிறது. இதை கஜானு அதிகாரி பாண்டிய தரையன் என்பவன் வெட்டினுன். இதில் கொடுத்த நன்கொடையானது கோவிலுக்குக் கொடுத்த நிலப்பரப்பு. நெ. 35 ராஜராஜனுடைய 7—வது ஆட்சி ஆண்டில் யோக மல்லாவரம் கோவிலைக் குறிக்கிறது. இதையும் அதே

அதிகாரி (அவனுடைய மாப்பிள்ளை வீரநரஸிங்க தேவ யாதவ ராயன்) தான் செய்தான். இதில் கூறப்பட்டிருக்கும் நன்கொடை யாதவராயர்கள் பக்கம் நின்று அந்த யாதவராயர்களுக்காக உரத்தி என்னும் ஊரில் நடந்த போரில் உயிரை நீத்த நாராணப் பிள்ளையை கௌரவிக்கக் கொடுத்த நன்கொடை பாண்டிய தரையன் அந்நிலப்பரப்பை பொன் கொடுத்து வாங்கி நாராயண என்னும் குளத்தை வெட்டி அதைக் கோவிலுக்கு சமர்ப்பித்து அதை அர்த்தஜாம பூஜைக்கும் ஸ்வாமி (உற்சவரை) வெளியில் உலாகொண்டு வருவதற்கும் உதவுவதற்கு என்று வரையறுத்தான். இந்த நன்கொடை கொடுத்ததை பிள்ளையார் யாதவராயர் அதாவது வீரநரஸிங்க யாதவராயர் கொடுத்த ஓலையால் ஆதாரப்படுத்தி அதையும் அப்படியே கோவிலை நிர்வாகம் செய்யும் வைஷ்ண பிராம்மணர்களும் ஸ்வீகரித்தார்கள். இங்கு வீரநரஸிங்க யாதவராயன் அந்த அதிகாரியினுடைய மருமகனாக விளங்குகிறார் என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். உரத்தியில் நடந்த போர் ராஜ ராஜனுடைய 7–வது ஆட்சி ஆண்டுக்கு முன் நடந்திருக்க வேண்டும். இந்தப் போரை யாதவராயர்கள் ஒரு பக்கம் நின்று எதிரிகளோடு போர் புரிந்திருக்க வேண்டும். நெ. 36-ம் அதே கோவிலிலிருந்து வருகிறது. அது ராஜராஜனின் 9–வது ஆட்சி ஆண்டில் பொறித்தது. இது ஸ்வாரஸ்யமானது. ராஜராஜன் 1-வது 23–வது ஆட்சி ஆண்டில் ஒரு ஜெயம் கொண்ட பிரம்மமா ராயன் என்பவன் 26 களஞ்சு பொன் நன்கொடை கொடுத்து அதை வைத்துக் கொண்டு ஒவ்வொரு வருடமும் உத்தராயண சங்கிர மணத்தின் பொழுது அபிஷேகம் செய்ய வேண்டியது என்று சாஸனம் செய்தான். ஆனால் அது நடத்தப்படவில்லை. இதை வீரநரஸிங்க யாதவராயனுக்குத் தெரியப்படுத்தின பொழுது அவனும் அதை விசாரித்து உண்மை அறிந்து பொக்கிஷத்திலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து அந்த உற்சவத்தை வருடந்தோரும் கிராம சபையார் நடத்த வேண்டிய தென்று உத்தரவிட்டான். அடுத்த கல்வெட்டும் அதே வருடத்தியதே. முன் சொன்ன உத்தராயண சங்கிர மணத்திற்குக் கொடுத்த நன்கொடையைக் கூறி அதிலிருந்து வரும் வரும்படியை எவ்வாறு செலவிட வேண்டுமென்று கூறுகிறது. சபையிலுள்ளவர்களும் அதை வாங்கிக் கொண்டு தங்களுடைய செயல் பாகத்தை அதில் விளக்கியிருக்கிறார்கள். அடுத்தது நெ. 38 ராஜராஜனுடைய 14-வது ஆட்சி ஆண்டில் பொறித்தது. இதுவும் அதே கோவிலில் அதே அதிகாரி பாண்டிய தரையன் என்பவனால் பொறிக்கப்பட்டது. இவனை பிற மதஸ்தர்களுக்கு

ஸிம்மம் போலானவனும் கோவிலுடைய மடத்திற்கு பார்வை யாளனுனவனுமான ஆண்டார் என்பவனுடைய பிள்ளை எனக் குறிப்பிடுகிறது. இதில் வீரநரஸிம்ம தேவன் குளத்திற்கு கொடுக்கப்பட்ட நிலப்பரப்பை குறிப்பிட்டு அவன் பேரால் அக்குளம் மராமத்து செய்யப்பட்டு அவனுடைய மாமனுரான பாண்டிய தரையனுல் சரி செய்யப்பட்டது எனக்குறிப்பிடுகிறது. அவனுடைய நிலத்திலிருந்து வரும் நெல் தானியம், தங்கம் இவற்றை மூவதனமாக வைத்துக்கொண்டு கோவிலில் சில உற்சவங்கள் செய்ய குறிப்பிட்டிருக்கிறது. அந்நிலத்தை ஊரதிகாரிகளான ஊரவர்களுக்குக் கொடுத்து அவர்களும் அதைப் பெற்றுக் கொண்டு எக்காலமும்வரும் வரும்படி யிலிருந்து உற்சவங்களை நடத்துவதாக உறுதியளித்தார்கள். இதை முன்னைப் பூண்டியை நிர்வகிக்கும் அதிகாரிகள் ஒப்புக் கொண்டு யோக மல்லாவரம் மஹாசபைக்கு எதிரில் கோவில் கணக்கர் கையொப்ப மிட்டார். அடுத்த கல்வெட்டில் முன் சொன்ன கோவில் கணக்கர் கணேசருக்கு ஒரு பிம்பம் செய்து பிரதிஷ்டை செய்தார். இதுவும் யோக மல்லவரத்திலிருக்கிறது. ஆனுல் பூரணமாக இல்லை. நெ. 40-லிருந்து கோவிந்தராஜர் கோவிலுக்கு வருகிறோம். சிதம்பரத்தில் கோவிந்தராஜர் கோயிலை சோழமன்னன் வெளிப்படுத்த ஆஞ்ஞையிட்ட பொழுது பக்தர்கள் கொண்டுவந்த உற்சவ மூர்த்திகளை எழுந்தருளப் பண்ண ராமானுஜர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனுகவும் ஒரு யாதவராயன் உதவியாலும் திருப்பதியில் கோவிந்தராஜர் கோவில் கட்டப்பட்டதை முன்னமே சொன்னேம். இக் கல்வெட்டு ஆரம்பத்தில் "அரசனுடைய வாய்க்கட்டளைப்படி" எனக் கூறுகிறது. இது ராஜ ராஜன் III-னுடைய 19-வது ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது. அதில் குறிப்பிட்டிருப்பது கார்த்திகை மாதத்தில் ஒரு நாள் பெரிய நாட்டவர் (அப்பிரதேசத்திலுள்ள பெரிய சபை) இளங் கோவிலில் (இப்பொழுதிருக்கும் அலர்மேல் மங்கை கோவில்) கூடி ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அத்தீர்மானத்தின் படி பெரிய நாட்டார் திருமங்கை ஆழ்வாருக்கு நித்திய நைவேத்தியத்திற்கு வேண்டியன செய்ய வேண்டியது என்று. திருமங்கை யாழ்வாரை காராளர் கற்பகம் (காராளர் என்னும் கள்ளர்களுக்கு கற்பக விருக்ஷம் போன்றவர்) என்று கூறுகிறது. திருமங்கை யாழ்வாருக்கு கோவிந்தராஜர் கோவிலில் ஒரு சன்னதி கட்டப்பட்டு இருப்பினும் அங்கு நித்திய பூஜைக்கு வேண்டியன செய்ய மறந்து விட்டதால் இதைப் பூர்த்தி செய்ய சில பேர்கள் ஒன்று கூடி இதை ஒழுங்கு படுத்தினர்கள். இதில்

ஒரு விசேஷம் என்னவென்றால் இதில் முதல் பெயர் ஸ்ரீ சடகோபதாசர் (நம்மாழ்வாரின் ஒரு பக்தர்), கொல்லி காவலதாசர் (முதல் பாகம் ஆழ்வார் குலசேகரரைக் குறிக்கும்) மூன்றாவது அறுவர் அனைய கோவில் பிள்ளை, கடைசியாக கலிக்கன்றிதாஸ (இதில் முதல் பாகம் திருமங்கை யாழ்வாரின் ஒரு பெயரேயாகும்) இதற்கென்று சில நிலங்கள் கொடுக்கப் பட்டன. இதை சாகுபடி செய்பவர்கள் ஒவ்வொரு பட்டிக்கும் குறிப்பிட்ட அளவு நெல்லைக் கொடுத்துவிட வேண்டும். இந்நெல்லை கோவிந்த பெருமாள் பேரில் மலையிலிருக்கும் திருவேங்கடமுடையான் கஜானா பொருப்பாளர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இது திருக்கடவூர் ஊராட்சி யினருடைய சாஸனம். இது ஏறுகுறையில்லாமல் எப்பொழுதும் செய்ய வேண்டிய நன்கொடை. இந்த நன்கொடை பெரிய நாட்டின் ஊராட்சியினரான பெரிய நாட்டவர்களுடைய அனுமதியைப்பெற்று வேலன் என்னும் கணக்கனுடைய கையெழுத்தையும் கொண்டது. நெ. 41 ஒரு முக்கியமான சாஸனம். இது ராஜ ராஜன் காலத்தியது என நன்கு தெரிகிறது. அதில் யாதவராயனைப் பற்றியும் முன்னே விழுந்த நாராயணனைப் பற்றியும் கூறியிருக்கிறது. இந்த நாராயணப் பிள்ளை உரத்தி சண்டையில் விழுந்ததை முன்னர் சொன்னோம். நெ. 42 திருப்பதி கோவிலில் இருக்கிறது இது அல்லுன் திருக்காளத்தி தேவனுடைய 6-வது வருஷத்தைக் குறிக்கிறது. இதில் பெரும் பாகம் அழிந்து விட்டாலும் இது மதுராந்தக பொட்டப்ப திருக்காளத்தி தேவனால் கொடுக்கப் பட்ட நன்கொடை எனத் தெரிகிறது. இப்பொழுது சுந்தர பாண்டியன் I-காலத்திய கல்வெட்டுகளுக்குப் போவோம்.

**ராஜராஜனின் III-ன் ஆட்சியும் சோழ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும் :**

சோழ குலோத்துங்கன் III கி. பி. 1216 லோ கொஞ்சம் நாள் பிறகோ ஆட்சியிலிருந்து விலகினான். அவனுக்குப் பிறகு ராஜராஜன் III அந்த வருடத்தில் கூட்டு அரசனாகவோ, தனி அரசனாகவோ தோன்றினான். ராஜராஜனுடைய ஆட்சி அந்த வருடத்திலிருந்து கி. பி. 1246 வரை சந்தேகத்துக்கிடமின்றி நடந்தது. அவனுடைய ஆட்சி அந்த வருஷத்திற்குப் பிறகுகூட இருந்தது என்பதற்குச் சாஸனங்கள் மூலம் சான்றுகள் இருக் கின்றன. கி. பி. 1246-லிருந்து ஒரு ராஜேந்திரன் III என்கிறவன் பெயரை கல்வெட்டுகளில் காண்கிறோம். அவன் ராஜ ராஜனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தானா என்றாவது அவர்கள் இருவருக்கும் என்ன உறவு என்பதும் நமக்கு சரியாகத் தெரிய

வில்லை. ஆனால் அக்காலத்து கல்வெட்டுகளிலிருந்து நமக்குத் தெரிவது அவன் ராஜராஜன் III-னுடைய சகோதரனாய் இருந்திருக்கலாம் என்றும் ராஜராஜனுடைய வலிவிழந்த ஆட்சியில் இழந்த வலிவையும் பெருமையும் அவன் சோழ வம்சத்துக்கு கொஞ்சம் திரும்பக் கொண்டு வந்து சேர்த்தான் என்றும் கொள்ளலாம். குலோத்துங்கன் III காலம் முழுக்க நடந்து கொண்டிருந்த பாண்டியப் போர்கள் அவன் காலத்துக்குப் பிறகும் நடந்து கொண்டிருந்தன; இது அவனால் பாண்டியர்களுக்கு கடுமையான தண்டனை கொடுத்தும் அதை மீறி இவை நடந்தன. பாண்டியர்கள் அடைந்த படுதோல்வியின் காரணமாக அவர்கள் சோழர்களை நொறுக்குவதென்று தீர்மானம் செய்து கொண்டார்கள். ஆகவே ராஜராஜன் III ஆட்சிக்கு வந்த ஆரம்பத்திலிருந்தே பாண்டியர்கள் கைகளில் மிகுந்த அவமானத்தை அடைய நேர்ந்தது. இது அவன் ஆட்சி முழுவதும் நீடித்து இருந்தது. குலோத்துங்கன் III-னுடைய கடைசி காலத்தில் அவனுக்கு எதிரியாயிருந்தவன் ஜடா வர்ம குலசேகர பாண்டியன். இவனுக்குப் பிறகு மாரவர்ம சுந்தர பாண்டியன் கி. பி. 1216—ல் சிம்மாசனம் ஏறினான். மாரவர்மன் பட்டத்திற்கு வந்த உடனே சோழ தேசத்தின் மேல் படையெடுத்து அத்தேசத்தை ஜயித்தானென்றும் தஞ்சாவூர். உறையூர் ஆகிய தலைநகரங்களை தீக்கிறையாக்கினானென்றும் சொல்லப் படுகிறது. அவன் ஆட்சி கடைசிவரையிலும் அதற்கு அப்புறம் அவனுக்குப் பிறகு வந்த மாரவர்மன் சுந்தர பாண்டியன் II ஆட்சியிலும் சோழ ராஜ்யமும் சோழ அதிகாரமும் கீழ் ஸ்தாயியில் போய் விட்டது. இந்த வெளி நாட்டு ஆக்கிரமிப்பை பயன்படுத்திக் கொண்டு சோழ ஆட்சியில் அதிருப்தி கொண்ட கப்பம் கட்டும் சிற்றரசுகள் தங்கள் சுயேச்சாதிகாரத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். முதலாக காடவர்கள் கடலூரில் முதலில் தங்கள் தலைநகரை வைத்துக் கொண்டு கொஞ்ச காலத்திற்கு பிறகு சேந்தமங்கலத்திற்கு மாற்றிக் கொண்டு இந்த தாக்குதலில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு வடக்கேயிருந்த சில சிற்றரசுகள் சோழ ராஜ்யத்தின் மேல் விசுவாசம் வைத்திருந்தார்கள் ஆதலால் அவர்கள் காடவர்களையும் அவர்கள் கூட்டாளிகளையும் சண்டையில் போரிட்டார்கள். அவர்கள் வீரநரஸிங்க யாதவ ராயனும் அந்த பிராந்தியத்தில் இருந்த சில தலைவர்களும் ஆவார்கள். இந்த சண்டை சோழ நாட்டு அரசை பழைய ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்காகப் போரிட்டார்கள் எனக் கூறமுடியாது. காடவர்கள் தங்களை மட்டம் தட்டி விடப்

போகிறூர்களே என்று மத்திய ஆட்சியை பேருக்கு மாத்திரம் ஆதரித்தார்கள். அவனுடைய இரண்டாவது மூன்றுவது ஆட்சி ஆண்டில் சோழ நாட்டுப் பேரரசினுடைய நிலைமை மிக்க கேவல மாகி விட்டது. அப்பொழுது சோழ வம்சத்துக்கு உறவினராகிய ஒய்சன அரசர் நரஸிம்ம II அவனுடைய உதவிக்கு வந்து காடவர்களால் சிறையில் வைக்கப்பட்ட அவனை விடுவித்திரா விட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விட்டிருக்கும். ஆகவே தெற்கிலிருந்து பாண்டியர்களாலும் வடக்கிலிருந்து காடவர் களாலும் தாக்கப்பட்ட சோழ மன்னனுடைய நிலைமை மிக்க சீர்குலைந்து கிடந்தது. ஆகவே அடுத்த சில வருடங்கள் வரை ஒய்சனர்கள் எப்பொழுதும் அவனுடைய நாட்டுப் பாது காப்பிற்கு அதிக கவனத்தைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதன் பயனுக ஒய்சனர்கள் ஸ்ரீரங்கத்திற்கருகில் கொள்ளி டத்தின் வடகரையில் கண்ணனூர் என்னும் ஊரில் ஓர் கோட்டை கட்டி அந்த ஊரை நன்கு பந்தோபஸ்து செய்து விக்கிரமபுரம் என்று பெயர் கொடுத்து அதைத் தலைநகர மாக்கிக் கொண்டார்கள். ஒய்சனர்களுடைய ஒத்தாசையால் தான் ராஜராஜன் தன்னுடைய பெயரைக் கொஞ்சமாவது காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. நாம் ராஜேந்திரன் III-னுடைய ஆட்சியைக் கவனிக்கும் போது அவன் சோழப் பேரரசு இன்னெரு அரசுக்கு அடிமைபோல் நடக்க வேண்டி யிருக்கிறதேயென்னும் எண்ணத்தால் நடத்தப்படுபவன் போல் சோழர்களுடைய உயர் நிலையையும் அதிகாரத்தையும், ஒய்சன, பாண்டியக் கும்பல்களிலிருந்து மீட்டு நிலைநிறுத்துவதற்குப் பாடுபடுபவன் போல் நடக்கலானுன். ஆயின் அந்தக் காலம் ஓயாச் சண்டையும் அமர்க்களமுமாயிருந்ததால் சோழர்கள் நிம்மதியாக இருக்க வகையில்லாமல் இருந்தது.

**ஜடா வர்ம சுந்தர பாண்டியன் :**

இந்த சூழ்நிலையில் மாரவர்ம சுந்தர பாண்டியன் II-க்குப் பிறகு ஜடா வர்ம சுந்தர பாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அவன் மிக்க பலமுள்ளவன், பராக்கிரமசாலி. அவன் சோழ நாட்டின் மேல் போர் தொடுத்தான் ; ஆனுல் உண்மையாகவே அப்போர் ஒய்சன அரசர்களை நோக்கித் துவக்கப்பட்டது. அவ்வமயம் ஒய்சனர்கள் சோழர்கள், பாண்டியர்கள் இருவரிடமும் உறவுத்தொடர்பு கொண்டவர்கள். சுமார் ஒரு பத்து வருட காலத்திற்குள் அவன் ஒய்சனர்களையும், சோழர் களையும், காடவ சிற்றரசனையும், இன்னும் வடக்கில் மிக்க பலத்துடன் காஞ்சியை ஆண்ட சிற்றரசனையும் போரில் தோற்

கடித்தான். இன்னும் வடக்கே சென்று சோழ நாட்டு வடக்கு எல்லை மாகாணங்களை தன்கீழ் ஆக்கிக்கொண்டான். இவன் வெற்றி கொண்டது கிருஷ்ணநதி வரையிலுள்ள நாடாகும். ஆகவே நெல்லூரில் வீரர்களுக்கு வெற்றிக் குளிப்பு விழா ஒன்று நடத்தினன். ஆகவே தன் ஆட்சிகாலத்தில் சோழ ராஜ்யத்தைத் தன் வசமாக்கிக் கொண்டான்; சோழ ராஜ்யத்தின் கீழுள்ள சிற்றரசர்கள் பாண்டியனுடைய அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு அவனுக்கு விசுவாசம் செலுத்துவதே நல்லதென்று நினைத்து நடந்தனர். ஆகவே அவன் காலத்து கல்வெட்டுகள் யாவும் அவனுடைய அதிகாரத்திலில்லாவிட்டாலும் அவனுடைய பெயரையாவது வைத்து பொறிக்கபட வேண்டி யிருந்தன. திருப்பதியிலுள்ள கல்வெட்டுகள் யாவும் அவன் எப்படி சோழ நாட்டை தன்னுடைய பூர்ண அதிகாரத் துக்கு உட்படுத்தினன் என்பதைக் காட்டுகிறது.

**சுந்தர பாண்டியனுடைய கல்வெட்டுகள் :**

இந்த கல்வெட்டுகள் வால்யூமில் இவனுடைய முதல் கல்வெட்டு திருப்பதி மலையில் நெ. 43 ஆகும். குறிப்பு களிலிருந்து நேரிடையாக அது சுந்தர பாண்டியனுடையது என்று சொல்லுவதற்கில்லை; இதில் இருக்கும் குறிப்பு ஒரு யாதவராயன், நாயனரிடமிருந்து வந்த ஒரு தகவலை ஆதரவாக வைத்துக் கொண்டு இட்ட ஒரு ஓலை. ஆகவே இந்த யாதவராயன் வீரநரஸிங்கயாதவராயன். நாயனர் சுந்திர பாண்டியன் என ஊகிக்க வேண்டும். இந்த ஓலையை குடவூர நாட்டு ஆட்சி சபை பெற்றுக் கொண்டது. தொண்டப்பாடி பற்று, அகரப்பற்று, வாரியவிமானத்தான் என்பவர்களால் வாங்கிக் கொள்ளப்பட்டது. இந்த வாரிய விமானத்தான் ஏதோ சில காரியங்களை மேல் பார்வையிடுபவன் எனத் தெரிகிறது. பிறகு அவர்கள் மூன்ருவது வருடத்திலிருந்து திரு இளங்கோவில் என்னும் திருச்சானூரிலிருக்கும் வைஷ்ணவ கோவிலில் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுகிறது. அது கோவிலுக்கு கொடுத்த நன்கொடைகளைப் பற்றிக் கூறுகிறது. விவரங்கள் அழிந்து விட்டன. அடுத்தது நெ. 44 அதே இடத்திலிருந்து கிடைத்திருக்கிறது. இதிலும் நாயனரிட மிருந்து வீரநரஸிங்க தேவனுக்கு வந்த ஒரு தகவல் இதில் சுந்தரபாண்டியனுடைய 12 வது ஆட்சி ஆண்டு என்றிருப்பதால் அவனுடைய அதிகாரம் பூர்ணமாக அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி ஒரு நிலப்பரப்பு சர்வமான்யமாகக் கொடுக்கப்பட்டு, அதிலிருந்து வரும் வரும்படியை ஒரு மூலதனமாக்கி அம்

மூலதனத்திலிருந்து வரும் வரும்படியைக் கொண்டு பெருமாளுக்கு ஒருவகை நைவேத்தியம் செய்ய ஏற்பாடு சொல்லப்பட்டிருக்கிறது. நெ. 46 அவ்விடத்திலிருந்தே கிடைத்திருக்கிறது, அதில் சுந்தர பாண்டியனைப் பற்றி ஸமஸ்கிருதத்தில் தெளிவாக பிரஸஸ்தி சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி அவன் சில தீரச்செயல்கள் புரிந்து பெற்ற பலன்களை இக்கல் வெட்டில் தெரிவிக்கின்றன. அவனை சோமகுலத்தின் ஆரம் என்றும், மதுரைமா நகரின் மாதவன் என்றும், கேரள நாட்டரசனை வென்றவனென்றும், லங்காபுரியை ஒழித்தவனென்றும், இரண்டாம் ராமனென்றும், சோழவம்சம் என்னும் மலையைப் பொடி செய்த ஆயுதம் என்றும். காடகர்களுக்கு கூடபாகலா என்னும் ஜ்வரம் என்னும் எதிரிகளின் கோட்டைகளை ஒழித்தவன் என்றும் வீரகண்ட கோபாலன் என்னும் காட்டை வேகும்படி பண்ணின காட்டுத்தீ என்றும் (இங்கு வீர என்பது ஒரு அடைமொழி இதில் அழிந்தவன் விஜயகண்டகோபாலன்) மாபெரும் காஞ்சி நகருக்குத் தலைவனென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதற்கப்புறம் பொதுப் பிருதுகள் மஹாராஜாதிராஜா, பரமேஸ்வரா, திருபுவன சக்கரவர்த்தி கொடுலகப்பட்டு கடைசியில் சுந்தர பாண்டியன் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சாஸனம் பெருமாளுடைய (சுந்தர பாண்டியனுடைய) 14 வது ஆட்சி ஆண்டைக்குறிக்கிறது. நன்கொடைபாகம் போய்விட்டது. 46 நெ வேறு விதமான பிரஸஸ்தி வருகிறது. அது சுந்தர பாண்டியனுடைய வீரத்தை மாத்திரம் கூறுகிறது. இதில் விசேஷம் என்னவென்ருல் அவன் கொன்ற விஜய கண்ட கோபாலனுக்கும், ராஜ்யத்தைக் கொடுத்த வீரகண்ட கோபாலனுக்கும் வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது. இதிலும் நன்கொடைபாகம் போய்விட்டிருக்கிறது. நெ 48-ல் சுந்தர பாண்டியன் ஒரு ஆந்திரேஸ்வரன் என்பவனைக் கொன்றதைப் பற்றிக் கூறுகிறது. இதன்பின் ஒரு ஸ்லோகம் வருகிறது. அதன்படி அவன் விஜயகண்ட கோபாலனையிருக்கலாம். நெ 49—ல் சுந்தர பாண்டியன் காஞ்சியிலுள்ள கோவிலின் மேல் ஒரு கலசம் வைத்ததைக் கூறுகிறது. நெ. 50 அனேகமாகப் போய்விட்டதால் அதிலிருந்து ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை; ஆயினும் அதில் ஆந்திரேஸ்வரனைக் கொன்ற பிறகு வீரர்களுக்கு வெற்றிக் குளிப்புவிழா நடத்தியது கூறப்பட்டிருக்கிறது. நெ. 51—ல் ஒரு தமிழ்பாட்டு வருகிறது. அதன்படி நெ. 50—ல் கூறிய விவரங்களையே கூறி வடகாஞ்சி மண்டலத்தைக் குறிக்கிறது. இது முன் சாஸனத்தில் ஆதி

காஞ்சி எனக் கூறப்பட்டது. அது முன் கூறிய அதே நிகழ்ச்சியைக் கூறுகிறது. நெ. 52-ல் முன் மாதிரியே அழிந்திருக்கிறது. ஆயினும் அதில் காடகன் அதாவது கடலூர், சேந்தமங்கலம் இவைகளுக்கு சிற்றரசனான கோபபெருஞ்சிங்காவையும், ஒரு வீராபிஷேகத்தையும் கூறுகிறது. நெ. 53-ல் ஒரு கணபதியைப் பற்றி குறிப்பு வருகிறது. இது காகடீய அரசனான கணபதியைக் குறிக்கிறது. நெ. 54-ல் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியனைக் குறிப்பிட்டு அவனுடைய பிரஸஸ்தியைச் சொல்லுசிறது. இந்த பிரஸஸ்தியில் வீரகண்ட கோபாலன் பெயர் வருகிறது. நெ. 55-ல் பிரஸஸ்தியின் ஒரு பகுதி தான் காணப்படுகிறது. அதில் கர்நாடகராஜன் ஒருவனை ஓட்டம் எடுக்கச் செய்ததையும் இன்னொரு அரசனை திரும்ப ஸ்தாபனம் பண்ணினதையும் குறிக்கிறது. இவைகள் தான் சுந்தர பாண்டியனைப் பற்றி குறிப்புகள் வரும் சாஸனங்கள். இச்சாஸனங்கள் யாவும் மலைக்கோயிலில் காணப்படுகிறதாலும், அக்கோயிலின் பல பாகங்களில் பொறிக்கப்பட்டிருப்பதாலும் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுடைய ஆட்சியை இந்தப் பிராந்தியத்திலுள்ள அரசர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு வெளிப்படையாக அவனுடைய ஆதிக்கத்தை அறிவித்துக் கொண்டார்கள் என்பது தெரிகிறது ஆகவே சுந்தரபாண்டியனுடைய அதிகாரம் உண்மையாக காஞ்சிக்கு வடக்கிலுள்ள பகுதிகளில் நிலவியது.

தேவஸ்தான சாஸனங்கள் Vol I-ல் அடுத்த இரண்டு கல்வெட்டுகள் நெ. 57, 58, மலையடிவாரத்தில் கபில தீர்த்தம் என்னும் குளத்தின் கரையில் ஒரு ஆழ்வார் கோவில் கட்டுவதைக் குறிக்கிறது. முதல் சாஸனத்தில், ஆழ்வார் கோவிலில் கூடம், தாழ்வாரம் ஆகியவை ஒருவாறெடுத்தகை அழகியான் என்பவனால் கட்டப்பட்டது எனப்பட்டிருக்கிறது. இவன் பாண்டிய தேசத்தில் மிளாலைக் குற்றம் என்னும் நடு நாட்டில் துஞ்சலூரிலிருந்து வந்தவன் எனத் தெரிகிறது. அடுத்தசாஸனம் ஒரு சம்ஸகிருத ஸ்லோகம்; இதில் அங்கு எழுந்தருளப்பண்ணியிருக்கும் ஆழ்வார் மனித சமூகத்திற்குச் செய்திருக்கும் சேவையையும் வேதத்தின் உள்பொருள்களை தமிழில் ஆக்கியதையும் சொல்லுகிறது. இது நம்மாழ்வாரைக் குறிக்கிறது என்பது வெளிச்சமாயிருக்கிறது. ஆனால் ஆழ்வார் பெயர் போய்விடுட்டிருக்கிறது சாஸனமும் பூர்ணமாக இல்லை. இந்தப் பகுதியில் இவ்விருசாஸனங்களையும் ஏன் சேர்த்திருக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. ஒரு வேளை அது அந்த

காலத்தைக் குறிப்பிடலாம் ; ஆனால் அதற்கு தக்க சான்று இல்லை.

**திருப்பதியில் கண்ட கோபாலனின் கல்வெட்டுகள் :**

இந்த வால்யூமில் அடுத்த பாகத்தில் அனேக குடும்பங்களிலுள்ள அனேக தலைவர்களைப்பற்றிக் கூறுகிறது. தெலுங்கு பல்லவர்கள், யாதவராயர்கள் ஆகியவர்களைப் பற்றிக் கூறுகிறது. இவர்கள் இந்த காலத்தவர்களானதாலும், இந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாயிருந்ததாலும் இவர்களைப் பற்றி இந்த காலத்தில் கிடைத்த விவரங்களை இங்கே சேர்த்துப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் முதல் குடும்பம் தெலுங்கு பல்லவர்கள் ; இவர்களில் இருவர் இந்த காலத்தில் முன்னணியில் நிற்கிறார்கள். சில தமிழ் சாஸனங்களிலிருந்து அவர்கள் ஸந்தேகமில்லாமல் சகோதரர்கள் விஜயகண்ட கோபாலன், வீரகண்ட கோபாலன் என்பவர்கள். அவர்கள் காஞ்சியையும் அதற்கு வடக்கிலிலுள்ள மாநிலங்களையும் ஆண்டவர்கள் எனத் தெரிகிறது. இவர்களுள் ஒருவனான விஜயகண்ட கோபாலன் என்பவன் கி. பி. 1250-51-ல் நடந்த போரில் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனால் கொல்லப்பட்டான். இவனுடைய ராஜ்யத்தை இவன் சகோதரனான வீரகண்ட கோபாலனுக்குக் கொடுத்து விட்டதாக பல சாஸனங்கள் கூறுகின்றன. விஜயகண்ட கோபாலனுடைய சாஸனங்கள் அவன் இறப்பதற்கு முன் கிட்டதட்ட ஒரு பத்து வருடங்களில் பரவிக்கிடக்கின்றன. அவனுக்குப் பிறகு வந்த வீரகண்ட கோபாலன் கி. பி. 1251-லிருந்து நெடுங்காலம் (நூற்றாண்டின் இறுதிவரை) ஆண்டான். இவர்களுக்கும் இவர்களுக்குச் சமானகாலத்தில் இருந்த வீரநரஸிங்க யாதவராயருக்கும் உள்ள சம்பந்தம் இந்த சாஸனங்களிலிருந்து தெரியவில்லை. ஆயினும் இந்த சிற்றரசர்கள் தங்கள் தனிச் சார்பிலேயே திருப்பதிக் கோவிலுக்கு நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த அதிகார பதவிகள் வகித்திருந்தும் அவற்றைப் பயன்படுத்தாது நன்கொடை கொடுத்தார்கள். இச்சாஸனங்களில் தேதிகள் கொடுக்கப்பட்ட இடங்களில் சிற்றரசர்களின் பெயர்களையே குறிக்கப் பட்டிருக்கின்றனவே. ஒழிய அவர்களுக்கு மேலிருந்த பேரரசனினின் பெயர் கொடுக்கப்படவில்லை. இதில் முதல் கல்வெட்டு நெ. 59 என்பது மலைக்கோவிலில் உள்ளது. அது 9–வது வருடத்தைக் குறிக்கிறது. அதில் முதல் பாகம் போய்விட்டது. பிறகு கோபாலதேவன் என்னும் பெயர் வருகிறது. இது விஜயகண்

கோபாலனைக் குறிக்கிறது. இதில் கொடுத்த நன்கொடை விஜயகண்ட கோபாலனுடைய வாயிற்காப்பான் காஸ்யப கோத்திரம் அம்மையப்பனால் கோவிலில் ஒரு நந்தா விளக்காக 33 பசுக்களும் ஒரு எருமையும் கொடுத்ததைக் குறிக்கிறது. நெ. 60—ல் 9-வது வருஷத்தைக் குறிப்பிடுகிறது. ஆனால் அரசனின் பெயர் போய்விட்டது. இதில் வல்லவராயன் என்னும் ஒரு மாநிலத் தலைவன் பெயர் வருகிறது. இது ஒரு வேளை திருக்காளத்தி தேவனாய் இருக்கும். நெ. 61 விஜயகண்ட கோபாலனைக் குறிக்கிறது. இதில் அவனது 14—வது வருடத்தைக் குறிக்கிறது. இது கோவிந்தராஜன் கோவிலில் இருக்கிறது. மலையில் உள்ள பெருமாளுக்கு வைகாசி உற்சவத்தில் சில உணவு சேவைகள் செய்ய ஏற்பாடுகள் கூறப்பட்டிருக்கிறது. இதில் வரும் நன்கொடை கோவில் கஜானாவிற்குக் கொடுக்கப்பட்டது. அனேகமாக மலைக்கோவில் கஜானாவைக் குறிக்கிறது. நெ. 62 மலைக்கோவிலில் இருக்கிறது. சிங்கதேவன் என்னும் வில்லவராயனைக் குறிக்கிறது. இவனுக்கு நேர் கீழ் உள்ள சுந்தரத்தோளுடையான் என்னும் மெய் காப்பான் கொடுத்த விளக்கு நன்கொடையைக் குறிக்கிறது. நெ. 63-ம் மலைக்கோவிலில் இருக்கிறது. இதில் அரசப் பெருமானுடைய பேரரசி பெருமாண்டி தேவி அரசியார் கொடுத்த நன்கொடையைக் குறிக்கிறது. நன்கொடை கொடுத்தது என்ன என்பது மறைந்துவிட்டது. இது ஆரம் பத்தில் வருடத்தைச் சொல்லுவதால் விஜயகண்ட கோபாலனைக் குறிக்கலாம். ஆனால் மிகுதி பாகம் போய் விட்டது. நெ. 64—ம் மலைக்கோயிலில் உள்ளது. அதில் ஒரு விளக்குக்கு வேண்டிய பசுக்கள் நன்கொடையாகக் கொடுக் கப்பட்டதைக் குறிக்கிறது (ஒரு அணையாவிளக்குக்கு வேண்டிய பசுக்களே இதிலும் குறிப்பிட்டிருக்கிறது) நெ. 65 இதே கோவிலில் உள்ளது. திரிபுராந்தக என்னும் அரசன் பெயர் வருகிறது. நெ. 66-ல் ஒரு பிரம்ம செட்டியும் ஒரு பிரம்மமா ராயனும் வருகிறார்கள். மற்றவையெல்லாம் அழிந்து விட்டன. நெ. 67 இதே கோவிலில், உள்ளது. இதில் விஜயகண்ட கோபாலன் பெயர் தெளிவாக வருகிறது, இதிலும் ஒரு பகுதி போய்விட்டது. அமரக்கோன் என்னும் ஒரு எண்ணெ வியாபாரி, நாராயணபுரத்தில் வசிக்கும் கட்டாரியின் மகனாயிருக்கலாம், 2 பசுக்களையும் ஒரு எருமையையும் ஒரு நந்தா விளக்குக்காக கொடுத்ததையும், கொஞ்சம் திரவியத்தை ஒரு கற்பூர விளக்குக்காக்க கொடுத்ததையும் குறிக்கிறது. நெ. 86-ம் அம்மாதிரியே விஜயகண்ட கோபாலனைக் குறிக்கிறது. இதன் படி 450 பணம் நன்கொடை கொடுக்கப் பட்டதையும் அதை

ஸ்ரீ வைஷ்ணவர்கள் பாதுகாப்பில் வைத்ததையும் குறிக்கிறது. நெ. 69 அம்மாதிரியே விஜயகண்டகோபாலன் அரசு புரிந்த காலத்தில் கொடுக்கப்பட்ட நன் கொடையைக் குறிக்கிறது. நெ. 70-ம் அம்மாதிரி நன்கொடையும், மேலும் 440 வராஹன்களையும் சாலியர்கள் என்னும் தரிநூல் நெய்பவர்கள் கொடுத்ததைக் குறிக்கிறது. இவர்கள் விக்கிரமபுரத்தைச் சேர்ந்தவர்கள். ஆத்ரேய கோத்திரத்தினர் நெ. 71-ம் அதே மாதிரி சாலியர்களால் கொடுக்கப்பட்ட நன்கொடை. நெ. 72-ம் அதுவே அது விஜயகண்டகோபாலன் காலத்தைக் குறிக்கிறது. இதில் சாலியர்களின் கோத்திரம் விஷ்ணு கோத்திரம் எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நெ. 73 மிகவும் சிதலித்துப் போய்விட்டதால் அதில் சொல்லியிருப்பது என்ன எனத்தெரியவில்லை. நெ. 74 முக்கியமானது. ஏனெனில் அதில் திருவேங்கடமுடையானுக்கு சித்திரையிலும் புரட்டாசியிலும் நடக்கும் உற்சவங்களைக் குறிக்கிறது. இவ்விழாக்கள் பலகாலமாக நடந்து கொண்டிருக்கின்றன. புரட்டாசி உற்சவம் ஆழ்வார்களாலேயே கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஆண்டாள் திருப்பாவையில் கூறியபடி அன்ன சேவை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வேங்கடாசல இதிஹாஸ மாலாவின்படி இவ்விழாவை ராமானுஜர் ஆரம்பித்ததாகவும் அதற்கு முன் அது நடக்கவில்லை எனவும் தெரிகிறது. இச் சேவைக்கு **கண்டகோபாலன் மாடை** என்னும் சில பொன் நாணயங்கள் கொடுக்கப்பட்டு அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு வருட சிலவுகளைச் செய்ய வேண்டியது எனக்குறிக்கப் பட்டிருக்கிறது. நெ. 75 சிதலித்துப் போய்விட்டது. நெ. 76, 77 இரண்டும் விஜயகண்டகோபாலன் காலத்தைக் குறிக்கிறது. நெ. 76-ல் உத்திராஷாட (உத்திராடம்) நக்ஷத்திரத்தில் ஒரு அணையா விளக்கு ஏற்றவும், நெ. 77 ஒரு திரவிய நன் கொடையையும் குறிக்கிறது. மற்ற விவரங்கள் போய் விட்டன. நெ. 78, ஐந்தாவது வருடத்தையும் புரட்டாசி மாதத்தையும் குறித்து மூன்று மாட நன்கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. நெ. 79 விஜயகண்டகோபாலன் காலத்தைக் குறித்து ஒரு பாண்டியன் பெயரால் (சுந்தர பாண்டியனுயிருக்கும்) இடப்பட்ட ஒரு நந்தவனத்தைக் குறிக்கிறது. 200 குழி நிலம் நன்கொடை கொடுக்கப் பட்டதைக் குறிக்கிறது. அதில் வரும் ஒரு இடத்தில் ராமானுஜரையும் எம்பெருமானாரையும் குறிப்பிட்டு, சில சிலவுகளுக்காக 500 வராஹப்பணம் நன்கொடை கொடுக்கப் பட்டதைக் குறிக்கிறது. நெ. 80 தமிழ் பாட்டாக உள்ளது.

அது ராஜாகண்டகோபாலனை புகழ்கிறது. அவன் நன் கொடையை நீட்டி வாங்கினவர்களுக்கு அவன் கொடுக்காத கொடை இல்லை என்று அவன் வள்ளல்தனத்தை புகழ்ந்து இருக்கிறது. ஆகவே நெ. 52—லிருந்து நெ. 80 வரையாவும் மலைக்கோவிலில் உள்ளன. அவை கண்ட கோபாலன் (விஜய கண்டகோபாலன் என்பது நன்கு விளங்கும்) காலத்தையே குறிக் கின்றன. நாம் முன் கூறியபடி இந்த அரசு ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய முதல் வருடத்திலேயே முடிவுக்கு வந்து விட்டது. அவனது ஆட்சி எவ்வளவு பெரியதாயிருந் தாலும் நமக்குக் கிடைக்கும் குறிப்பு ஒரு 10 அல்லது 12 வருடங்கட்கு தான் இருக்கிறது. இவை கி. பி. 1251 முன் காலத்தைக் குறிக்கிறது. நாம் இப்பொழுது இதர அரசுகள்—யாதவாராயர்கள் காலத்துக் குறிப்புகளைப் பார்ப்போம்.

---

## அத்தியாயம் 14

# யாதவராயர்கள்

**திருப்பதியில் யாதவராயர்களின் சாஸனங்கள் :**

தேவஸ்தான சாஸனங்கள் வால்யூம் 1—ல் யாதவராய சாஸனங்கள் நெ. 81-லிருந்து நெ. 117 வரையிலும் மற்றும் பல வகை சாஸனங்கள் நெ. 177 வரையிலும் கிடக்கின்றன. இதற்குப் பிறகு விஜய நகர சாம்ராஜ்ய சாஸனங்கள் காண்கின்றன. நாம் முதலில் யாதவராயர் சாஸனங்களை எடுத்துக் கொள்ளு வோம். முதல் சாஸனம் திருப்பதிக் கோயிலில் இருக்கிறது. இது திருக்காளத்தி தேவனுல் பொறிக்கப்பட்டது. இதில் இவனுக்கு யாதவராயர்களுக்குறிய எல்லா பிருதுகளும் கொடுக்கப்பட்டிருப்பதால் இவனை அதே பெயரையுடைய தெலுங்கு சோழர்களோடு சேர்த்து குழப்பம் கொள்ளக் கூடாது. இதில் ஒரு சர்வ மான்ய கிராமத்தை திருவேங்கட முடையான் கோவிலுக்கு நன்கொடை கொடுத்ததைக் குறிக் கிறது. இதில் சோழப் பேரரசின் பெயரும் கொடுக்கப் படவில்லை; நேர் முறையாக வருடமும் கொடுக்கப்படவில்லை; வெறுமனே ஆட்சியின் 19-வது ஆண்டு எனக்குறிக்கிறது. ஆனல் அது அவனுடைய 19-வது ஆண்டா அல்லது அவனுக்கு மேற்பட்ட ஒரு பேரரசனுடைய 19-வது ஆண்டா என்பது விளங்கவில்லை. இப்பொழுது நெ. 82-க்குப் போவோம். இதில் பெயர் அழிந்து விட்டிருந்த போதிலும் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவன் திருபுவனுடைய ஆட்சியைத் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. சோழனுடைய பெயர் போயிருந்தாலும் அவனுடைய பதினைந்தாவது வருடத்தைக் குறிக்கிறது. வீரராக்ஷஸ யாதவ ராயனுல் கொடுக்கப்பட்ட நன்கொடையைக் குறிப்பிடுகிறது. ஆனல் அவனுடைய தனிப்பெயர் கொடுக்கப்பட்டிருந்த இடம் மூளியாகி விட்டது. இதர கல்வெட்டுகளில் வீரராக்ஷஸராயன் என்பவனைத் தான் குறிப்பிடுகிறது எனக்கூறலாம். இவன் சிங்கப்பிள்ளை என்றும், இளவரசன் சிங்கன் என்றும் கூறிப் பட்ட திருக்காளத்தி தேவனுடைய மகனைக் குறிப்பிடுகிறது என்னலாம். குலோத்துங்கனுடைய பதினைந்தாவது வருடம் கி. பி. 1193—க்குச் சரியானது. முன் சாஸனத்தில் கூறப் பட்டிருப்பது குலோத்துங்கனுடைய பத்தொன்பதாம் வருடம் எனக்கொண்டால் அது கி. பி. 1197—ஐக் குறிக்கும்; அதாவது

அவனுடைய மகனுக்கு நான்கு வருடங்கள் கழித்தது என்பதாகும். திருக்காளத்தி தேவனுடைய சாஸனங்கள் குலோத்துங்கன் III-னுடைய ஏழாவது வருடத்திலிருந்து ராஜராஜனுடைய பதினைந்தாவது வருடம் வரை பரவியிருப்பதால் இதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. இச்சாஸனங்கள் கி. பி. 1185-லிருந்து கி. பி. 1231 வரை பரவியிருக்கின்றன. அடுத்த நெ. 83 வீரராக்ஷஸனுடைய ஆட்சியையும் நாற்பத்தியோருவது ஆண்டையும் குறிக்கிறது. இதில் நாற்பது என்னும் வார்த்தை போய் விட்டது. இந்த நாற்பத்தியோருவது வருஷம் குலோத்துங்கன் III-னுடைய ஆட்சியைக் குறிக்குமாயின் இதற்குச் சரியான வருடம் 1219 ஆகும். இதைப்பற்றி நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனினும் முன் சாஸனம் குலோத்துங்கனுடைய ஆட்சியை வெளிப்படையாகக் கூறுகிறது. அடுத்தபடியாக நாம் இக் கோவிலுக்கு மிக முக்கியமாக விளங்கிய யாதவராயன், வீரநரஸிங்கராயனுடைய சாஸனங்களுக்கு வருகிறோம். இவனுடைய சாஸனங்கள் பன்னிரண்டாவது ஆண்டில் ஆரம்பித்து ஐம்பத்தியோருவது ஆண்டுவரை செல்லுகிறது. இவனைப்பற்றி சில சாஸனங்கள் வேறு இடங்களில் காணப்படுகின்றன. அவை குலோத்துங்கன் III-னுடைய முப்பத்தோருவது ஆண்டிலிருந்து ராஜராஜன் III-னுடைய பதினைன்காம் ஆண்டுவரை இருக்கின்றன. இந்தக் காலம் கி. பி. 1209-லிருந்து கி. பி. 1230 வரை பரவியிருக்கிறது. இவனுடைய ஒரு சாஸனம் ஜடா வர்ம சுந்தர பாண்டியனுடைய பன்னிரண்டாவது வருடம், அதாவது கி. பி. 1263–ஐக் குறிக்கிறது. ஆகவே அவன் இக்கோவிலுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டது கி. பி. 1209-லிருந்து கி. பி. 1263 வரை ஐம்பத்தி நாலு அல்லது ஐம்பத்தி ஐந்து வருடங்கள் ஆகும். ஆயினும் இவனுடைய சாஸனங்களில் மிக்க அதிகமான தேதி ஐம்பத்திஒராவது ஆண்டு ஆகும். அவன் குலோத்துங்கன் III, ராஜராஜன் இவர்களுடைய ஆட்சிகளில் வசித்தான் என்பது நிச்சயமாகத் தெரிந்திருப்பினும் அவனுடைய சரியான தேதிகளைப்பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாது. இந்த வால்யூமில் நெ. 90 கோவிந்தராஜர் கோவிலில் இருக்கிறது. இது ஐம்பத்தோருவது ஆண்டைக் குறிக்கிறது என்பதால் இது வீரநரஸிங்கனைத் தான் குறிக்கிறது. ராக்ஷஸ வருஷம் எனக்குறிப்பிட்டிருக்கிறது. இதற்குச் சரியான வருடம் கி. பி. 1255. இதற்கு முன் சாஸனம் நெ. 89 அவனுடைய ஐம்பதாவது வருஷம் எனக்குறிப்பிட்டு விக்கிரம வருஷம் எனக்குறித்திருக்கிறது. இது ஒன்றுக்கொன்று

சரியாயில்லை. ஆகவே கொடுத்திருக்கிற வருடப்பெயர் சரியில்லை எனக்கொள்ள வேண்டும். பஞ்சாங்க ரீதிப்படி வருடத்தை நிர்ணயிக்கப் போதுமான விவரங்கள் கொடுக்கப்படாததால் இதற்கு மேலும் செல்ல முடியவில்லை. ஏனெனில் இச்சாஸனங்களில் ஆட்சி ஆண்டு மாத்திரம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாதம், தேதி முதலியவைகள் கொடுக்கப்பட்டிருந்தால் வருடத்தை சரியாகத் தெரிந்து கொள்ளலாம்; ஆனுல் அவைகள் கொடுக்கப்படவில்லை. அவனுடைய ஐம்பத்தியோருவது வருடம் கி. பி. 1255 ஆனுல் அவனுடைய ஆட்சி கி. பி. 1204–ல் ஆரம்பித்திருக்க வேண்டும். அவனுடைய கடைசி வருடம் கி. பி. 1263 சுந்தரபாண்டியனுடைய பன்னிரண்டாவது ஆண்டு ஆனதால் அவனுடைய ஆட்சி ஐம்பத்தி ஒன்பது வருடம் பரவியிருந்தது.

இந்த நீண்ட காலம் வியப்பைத்தரவேண்டியதில்லை; ஏனெனில் அவனுடைய ஆட்சி குலோத்துங்கன், ராஜராஜன், சுந்தரபாண்டியன் ஆகியவர்களுடைய ஆட்சிகாலங்களில் பரவியிருந்தது. இவ்வரசனின் முதல் சாஸனம் திருப்பதியில் இருப்பது. அதில் அவனுடைய பன்னிரண்டாவது வருடத்தைக் குறிப்பிட்டு அதில் அவனுடைய ராணியார் யாதவராய நாச்சியார் அறுபத்தி நான்கு பசுக்களையும் இரண்டு எருமைகளையும் கோவிலில் இரண்டு அணையா விளக்குகளுக்காகக் கொடுத்ததைக் கூறியிருக்கிறது. இது அக்கோவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ரக்ஷணையில் வைக்கப்பட்டது. நெ. 85–ம் அந்த ராணியின் சாஸனம்; ஆனுல் பதினைந்தாம் வருடத்தைச் சேர்ந்தது. இதில் கோவிந்தராஜனுக்கு அணையா விளக்கு ஒன்று நன்கொடை வழங்கப்பட்டதாகவும் அதற்காக முப்பத்திரண்டு பசுக்களும் ஒரு எருமையும் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நெ. 86–ம் கோவிந்தராஜன் கோவிலிலிருக்கும் கல்வெட்டு. இது வீரநரஸிங்கனுடைய முப்பதாவது வருடத்தைக் குறிக்கிறது. இதுவும் ராணியால் கொடுக்கப்பட்ட நன்கொடை. திருவேங்கடமுடையானுக்கு ஏற்கனவே ஒரு கிராமத்தில் ஒரு பகுதி சொந்தமாயிருந்தது. ராணி முழு கிராமத்தையும் சர்வமான்யமாக்கிக் கொடுத்தாள் (வரிவிகிதங்கள் இல்லாமல்) இப்பொழுது கொடுக்கப்பட்ட பாகம் ஆனி மாதத்தில் கோவிந்தராஜனுக்கு நடத்த அவளே ஆரம்பித்துவைத்த ஒரு உற்சவத்திற்கும் ஒரு சதுர வடிவமான பெரிய தேர் ஒன்றை அவளே பெருமாளுக்காகக் கட்டுவதற்கு வேண்டிய செலவிற்கும் கொடுக்கப்பட்டது. இதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து அதில் சொத்தில்

தேய்வுக்கும் வீணுவதற்கும் வேண்டியதற்கு ஒரு பகுதி சேர்த்துக் கொடுத்தாள். நெ. 87 மலைக்கோயிலில் இருக்கிறது. இது அவனுடைய முப்பத்தி நான்காவது ஆண்டில் செதுக்கப் பட்டது. இதில் மலைகுனிய நின்றான் என்னும் திருவேங்கட நாதன் (வீரநாராயண சதுர்வேத மங்கலத்தைச் சேர்ந்தவன்) ஒரு அணையா விளக்குக்காகக் கொடுத்த நன்கொடை. மலைக் கோவிலில் இருக்கும் நெ. 88 ஒரு முக்கியமான சாஸனம். இது யாதவராயனுடைய நாற்பதாவது ஆண்டைக் குறிக்கிறது. இதில் ஆரம்பத்தில் அந்த வருடத்தில வந்த திருப்புல்லாணி தாஸன் என்னும் ஒரு தேசாந்தரி கோவிலைப் புனருத்தாரணம் செய்ய திருப்பணி ஏற்றுக் கொண்டான் எனக்கூறுகிறது. இதில் அவன் அரசனுடைய அனுமதியை நாட அரசனும் அனுமதியைத் தந்து அனுமதிப்பத்திரத்தில் கோவிலின் வடக்கு சுவரில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுகள் யாவற்றையும் பிரதி செய்ய வேண்டும் என்றும் அதன் பின் தான் சீர் செய்ய வேண்டும் என்றும் விதித்தான்.

இதிலிருந்து கோவிலின் உள்பாகம் தான் சீர் செய்யப் பட்டதென்றும், உள் சுவர்களில் உள்ள கல்வெட்டுகள் தான் கோவிலின் வெளிச்சுவர்களில் பிரதி செய்யப்பட்டதென்றும் தெரிகிறது. அவ்வாறு பிரதி செய்யப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்று ராஜராஜனுடைய மாற்றுந்தாயும் பராந்தகன் II-னுடைய ராணியும் "தங்கக்கூடத்தில்" இறந்தவள் எனப் போற்றப் படுபவளும், சேரநாட்டு மன்னனுடைய மகளும் ஆன சோழ ராணியின் நன்கொடை ஒன்றைக் கூறுகிறது.

இது ராஜராஜனுடைய பதினான்காவது வருஷத்தைக் குறிப் பிடுகிறது. அப்பொழுது அவன் கொடுத்த நன்கொடை யாவது ஐம்பத்திரண்டு கழஞ்சு தங்கத்தில் ஆறு சிகப்பு கற்களும் நான்கு வைரங்களும், இருபத்தி எட்டு முத்துக்களும் வைத்து இழைத்த ஆபரணம் என்று கூறப்பட்டிருக்கிறது. நெ. 89 ஐம்பதாவது வருடத்தைக் குறிக்கிறது. ஆனால் வருடம் தப்பிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் விளக்குகளையும் மாலைகளையும் நன்கொடை கொடுத்ததைக் கூறுகிறது. நெ. 90 ஐம்பத்தி ஒன்றாவது வருடத்துக்குச் சரியான கி. பி. 1255-க் குறிக்கிறது. இதுவும் முன் சாஸனமும் கோவிந்தராஜர் கோவிலில் இருக்கின்றன. இதில் யாதவநாராயணன் பேரில் ஒரு நந்தவனம் நிர்மாணிப்பதைக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்நந்தவனத்திற்கு வேண்டிய தண்ணீர் திருப்பதியிலிருக்கும் பெரிய ஏரியிலிருந்து வரும் ஓடையை மடக்கி ஒரு தாமரைக் குளம் ஏற்படுத்தி அதிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒரு நிபந்தனை என்ன வென்றால் ஏரியிலிருந்து வரும் தண்ணீர் தங்கு தடையின்றி வரும்வரை அதை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டு மென்றும் நீர்மட்டம் குறைந்து விட்டால் நீர் இறைப்புச் செய்து உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு விசேஷமான ஷரத்து என்னவென்றால் தண்ணீர் வடியும் வாய்க்கால்களை விஷ்ணுவின் சங்கு சக்கரங்கள் பொறிக்கப்பட்ட கற்களால் குறிப்பிட்டு வைக்கப்படக் கூடாது என்று. இந்த மாதிரியான தடை ஏன் விதிக்கப்பட்டது என்பது விளங்கவில்லை. ஏரியின் கீழ் உள்ள மற்றொரு நந்தவனத்தைப் பற்றியும் குறிப்பு இருக்கிறது. அதற்கும் தண்ணீர் இம்மாதிரியே கொண்டுவர வேண்டியது என விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரு நந்தவனங்களும் மலையின் மேலுள்ள பெருமாளுக்குச் சேவை செய்யும் அதிகாரி களின் மேற்பார்வையில் இருக்க வேண்டியது என்றும், நந்தவனங்களைக் கவனித்துக் கொள்ளுவதும், புஷ்ப சேவையும் நிரந்தரமாக நடத்தப்பட வேண்டுமென்றும் விதிக்கப் பட்டிருக் கிறது. அடுத்தது நெ. 91 இதில் தேதி ஒன்றும் கொடுக்கப் படவில்லை. ஆயினும் வீரநரஸிம்ம யாதவராயனின் பெயரைக் குறிப்பிட்டு அவன் தன்னையே தங்கத்தால் நிறுத்து, அந்த தங்கத்தைக் கொண்டு கோவில் விமானத்தைத் தங்கத்தால் தகடு செய்து மூடவேண்டுமென்றும் எதிரிகளை வென்று உலகம் முழுவதையும் தன்னதிகாரத்தின் கீழ்க்கொண்டு வந்ததைப் பற்றியும் பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. துலாபாரம் நடந்தது நெ. 88—ல் கூறிய திருப்பணிகள் செய்யப்பட்ட பொழுது நடந்தது. நெ. 92 கோவிந்தராஜர் கோவிலில் இருக்கிறது. இதில் யாதவ நாச்சியாரைப் புகழ்ந்து ஒரு பாட்டு வருகிறது. இதில் அவ்வம்மையை தாமரையாளான ஸ்ரீ மஹா லக்ஷிமிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மற்ற விவரங்கள் அழிந்து விட்டன. இதிலிருந்து அவன் கோவிலுக்கு ஒரு நன்கொடை கொடுத்தது விளங்குகிறது. இவ்வரசனுடைய கல்வெட்டு நெ. 93 மலைக் கோயிலில் இருக்கிறது. அதில் நெல்லூர் என்னும் விக்கிரமசிம்மபுரத்தைச் சேர்ந்த தெய்வப் பெருமாள் என்பவன் கோவிலுக்கு ஒரு அணையா விளக்கை நன்கொடையாக் கொடுத்ததைக் கூறுகிறது. இதற்கென்று ஏற்பட்ட பசுக்களையும் ஒரு காளையையும் அவன் தானம்

செய்தான். நெ. 94 ஒரு சிதிலமான கல்வெட்டு. இதில் நெல்லூரைச் சேர்ந்த ஒருவன் கோவிலுக்கு வழங்கிய நன்கொடைக் கூறுகிறது. சாஸனத்தில் ஒரு நாயனர் பிள்ளை வீரநரஸிம்மன் பெயர் வருகிறது. இது இளவரசன் வீர நரசிங்கனைத் தான் குறிக்கிறது. நெ. 95 திருச்சானூர் கோவிலில் இருக்கிறது. இதில் ஒரு நிலத்தை தானம் செய்யப் பட்டதைக் கூறுகிறது. ஆனல் மற்றபடி அழிந்து போய் விட்டது. நெ. 96-ம் அவ்விடத்திலிருந்தே வருகிறது. அதில் வீரநரஸிங்கனுடைய மாமனாரான பண்டிதராயரைக் குறிப்பிடு கிறது. இவனுடைய பெயர் இன்னும் பல சாஸனங்களில் வருகிறது. இதில் ஒரு ஏரியின் கீழ் உள்ள சில நிலங்களைச் சீர்திருத்தம் செய்து பயிர் செய்வதற்கு ஏற்றபடியாக்கினதைச் சொல்லுகிறது. நெ. 97—ம் அந்த இடத்திலிருந்தே வருகிறது. அவனையே குறிக்கிறது. மறுபடியும் ஒரு நிலத்தை தானம் செய்ததைக் கூறுகிறது. நெ. 98-ல் வருடம் 1230 என்றும் அதற்கு எதிராக கீலக வருடத்தையும் குறிக்கிறது. 1230 என்பது சாகா 1230 ஆக இருக்கவேண்டும். இவ் வருடத்திற்குச் சரியாக கீலக வருடம் தான் வருகிறது. இதில் நாராயண சதுர்வேதமங்கலத்தைச் சேர்ந்த வீர சிகாமுகச்சேரியிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோவிலுக்கு சில நாட்களில் வரும் யாத்திரீகர்களுக்கு சாப்பாடு போடுவதற்குச் செய்த ஏற் பாட்டைக் கூறுகிறது. இந்த சாஸனம் கோவிந்தராஜர் கோவிலிலுள்ள ஆண்டாள் சன்னதியிலிருக்கிறது. இச்சன்னதி ராமானுஜருடைய ஆஞ்ஜையால் கட்டப்பட்டு வெளி பிராகாரத்தில் இருக்கும் ஒரு சிறிய சன்னதி. இத்துடன் வீர நரஸிம்மயாதவராயருடைய காலத்திய சாஸனங்கள் முடிவடை கின்றன.

**யாதவராயனுடைய அதிகாரம் மேற்பார்வையிடுதல் மட்டும் :**

இந்த சாஸனங்களிலிருந்து நமக்கு விளக்குவது என்ன வெனில் வீர நரஸிங்கராயன் என்னும் யாதவ அரசன் இந்த கோவிலின் மேல் மிகுந்த ஆர்வம் காட்டி தன் பெயராலேயே செய்வதாயும் தன் மனைவியின் பெயரால் செய்வதாயும் ஆன அனேக சேவைகளைச் செய்ய ஏற்பாடுகள் செய்தான். இச் சேவைகளில் முக்கியமானது கோவில் விமானத்தை அலங்கரிக்க தான் துலாபாரம் செய்தது ஆகும். இது திருப்புல்லாணி தாஸன் என்னும் யாத்திரி அவ்விமானத்தைச் சீர்திருத்தம் செய்த பிறகு செய்ததாகும். புருஷன், மனைவி இருவருமாக மலைக் கோவிலுக்கும், கோவிந்தராஜர் கோவிலுக்கும்,

திருச்சானூர் கோவிலுக்குமாக எல்லா கோவில்களிலும் சில உற்சவங்களையும் சேவைகளையும் ஏற்படுத்தினார்கள். இந்த யாதவராயனின் ராணி கோவிந்தராஜருக்கு ஒரு ரதம் செய்ததைப் பற்றி சாஸனம் இருக்கிறது.

அவன் ஆட்சியில் இருந்த போது ஒரு சிறிய நாட்டின் ராஜ பிரதி நிதியாக மாத்திரம் இருந்தான் இல்லை என்பதை முன்னமே கவனித்தோம். அவன் திருப்பதியைச் சுற்றிலுமுள்ள நாடு அல்லாமல் அதை விடப்பெரியதும் சோழ நாட்டின் பெரும் பகுதியானதுமான நாட்டின் மேல் ஆட்சி செய்தான். இந்த ஸ்திதியில் தான் இந்த நன்கொடைகளைக் கோவிலுக்குக் கொடுத்தான். சுந்தர பாண்டியனின் பன்னிரண்டாவது ஆண்டு கல்வெட்டு (கி. பி. 1263-க்குச் சரியானது) ஒன்றில் இந்த யாதவ நரஸிங்கதேவனின் கட்டளைப்படி ஒரு சர்வமான்யம் கொடுக்கப் பட்டது எனப் பொறிக்கப்பட்டிருக்கிறது; ஆயின் யாரால் இந்த நன்கொடை கொடுக்கப்பட்டது எனக் குறிக்கப்பட வில்லை. ஆயினும் இந்த நன்கொடையைக் கொடுத்தது இந்த யாதவராயனால் அங்கீகரிக்கப்பட்டது எனக்குறிப்பு இருக்கிறது.

அதாவது பாண்டியப் பெருமன்னன் கீழும் இந்த யாதவராயர் சோழக் கடைமன்னர் இருவரிடம் பெற்றிருந்த செல்வாக்கைக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. இத்துடன் வீரநரஸிங்கனிடம் விடைபெற்றுக் கொள்வோம்.

இவனுடைய அதிகாரம்மிக்க அதிகமாயிருப்பினும் சரி, அவனுடைய நன்கொடைகள் பெரியனவாயிருப்பினும் சரி எப்படியிருப்பினும் இவன் கோவில் விஷயத்தில் வெறும் மேல் பார்வையிடுவதும் நிர்வாகத்தை நன்கு கவனித்துச் செயல் படுத்துவதோடு இருந்ததே தவிர கோவிலின் முழுநிர்வாகமும் முன்னே இருந்தது போல் அவ்விடத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் கையிலேயே இருந்து வந்தது.

**திருவேங்கட நாத யாதவராயர் :**

அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டிய யாதவராயர் பெயர் கல்வெட்டுகளில் அவருடைய வருடத்தை மாத்திரம் காண்பிக்கின்றனவே தவிர வேறு வெளிப்பட்ட அதிகாரியின் பெயரைக் குறிப்பிடவில்லை யாகையால் அவரைப்பற்றி நிர்ணயிப்பது கொஞ்சம் கடினமாக இருக்கிறது. இருப் பினும் அவரைப்பற்றிய சில சாஸங்களிலிருக்கும் விவரங்களை

வைத்துக் கொண்டு அவருடைய காலத்தை ஒருவாறு நிர்ணயிக்க முடியும்.

முதலாவது, தேவஸ்தான கல்வெட்டுகள் வால்யும் I—ல் நெ. 99 மலைக் கோவிலிலிருந்து வருகிறது. இது திருவேங்கட நாத யாதவராயருடைய எட்டாவது வருஷத்தியதாகக் கூறப் பட்டிருக்கிறது. இந்த சாஸனத்தில் இல்லத்தூர் நாட்டி லிருக்கும் போங்களூர் என்னும் கிராமம் திருவேங்கட முடையானுக்கு சர்வ மானியமாக்கி விட்டதாக பொறிக்கப் பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையை வெளியிட்டது நாயனர் அதாவது யாதவராயரேயாகும். இதை சர்வமான்யமாக்க எழுதிக் கொடுத்த சாஸனம் ஒன்பதாவது ஆண்டில் ஆடி மாதத்தில் கையொப்பமிடப்பட்டது. இந்த சர்வமான்யத்தின் நோக்கம் என்னவெனில் சிங்கய்ய தண்ட நாயகன் ஏற்படுத்திய ஆடி மாத உற்சவத்தை நரசய்ய தண்டநாயகன் பேரில் தடையின்றி பிரதி வருஷம் ஆடிமாதம் நடத்தி வைப்பதற்காகவும் அவன் பெயரில் பெருமாளுக்கு ஒரு தளிகை சமர்ப்பிப்பதற்காகவும் என்று.

சதாரணமாக சிற்றரசு கட்டவேண்டிய கப்பத் தொகைகள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம் மாதிரியான விளக்கம் இன்னும் அனேக சாஸனங்களிலும் காணப்படுகின்றது. இவைகள், தங்கமாகக் கொடுப்பதும் சிறிய தொகைகளுக்கு தானியமாகக் கொடுப்பதுமாகும். இம்மாதிரி கொடுக்கப்பட்ட நன்கொடைகளுள் ஒன்று காணிக்கை என்பது. திருத்தாயார் காணிக்கை என்றும் திருமருகனார் காணிக்கை என்றும் காணப்படுகின்றன. இவை மதிப்பிற்குரிய தாயாருடையவும் மதிப்பிற்குறிய மருமக னுடையவும் பெயரால் செலுத்திய காணிக்கைகள் ஆகும்.

இவை ஒருமாதிரியான கப்பத்தொகை ஆகும். ஆயினும் திருத்தாயார் திருமருகனார் என்பவர் யாவர் என்பது இந்த சாஸனத்திலிருந்து தெரியவில்லை. நமக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியது சிவகண தண்ட நாயகன் என்பவன் யார் என்பது. ஏனெனில் இவன் பெயரால் இந்த விழா நடைபெருகிறது. இதை மேலும் வரும் இரண்டு சாஸனங்களை வைத்துக் கொண்டு ஆராய்வோம்.

அடுத்த சாஸனம் நெ. 100 கோவிந்தராஜர் கோவிலி லிருந்து வருகிறது. இது இந்த யாதவராயருடைய

பன்னிரண்டாவது வருடத்தைக் குறிக்கிறது. இதில் ஒரு நிலத்தை சில விஷயங்களுக்காக சர்வமான்யம் செய்து நன்கொடையாக கொடுக்கும்படி அவருக்கு வந்த அதிகார அறிக்கையைக் குறிப்பிடுகிறது.

இதில் சொல்லப்பட்ட சில விஷயங்களில் ஒன்று யாதவ நாராயணன் சந்தி (யாதவ என்பது சாஸனத்தில் மறைந்து விட்டது) இதில் இரண்டு விஷயங்கள் கவனத்திற்குரியவைகள். முன் கல்வெட்டில் கூறிய மற்றைய இரண்டையும் போல் இங்கு நாம் ஒரு அக்கன் காணிக்கையைக் காண்கிறோம். அதாவது அக்காவினுடைய நன்கொடை, மற்றைய நன்கொடைகளைப் போல் ஒன்றாகும். மற்றொன்று மிக்க நிகழ்ச்சி விளக்கம் தருவதாவது. இதுவல்லாளதேவன் அல்லது பல்லாளதேவன் என்பவனால் விதிக்கப்பட்டவரி. இவ்வரி வல்லாளதேவனுக்கா விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டதெனக் கொள்ளலாம் அதாவது இக்கட்டணம் பல்லாள தேவனுக்குக்கட்டும் ஒருவகை கப்பம் எனக்கொள்ள வேண்டும். நெ. 101–கோவிந்தராஜர் கோவிலிலிருந்தே வருகிறது. இது பன்னிரண்டாம் வருடத்தைச் சேர்ந்தது. இதுவும் முன்னதைப் போலவே ஒரு அதிகார உத்தரவு ஆகும். நெ. 102-மலைக் கோயிலிலிருந்து வருகிறது. இது கொஞ்சம் முக்கியமானது. இதில் திருமலையிலிருக்கும் ஸ்தானத்தார்களைக் குறிப்பிட்டு அவர்களிடம் ஸ்ரீமன் மஹாபிரதானி இம்மடி ராகுத்தராயன் சிங்கயதன்னாயகன் தானே முறையிட்டுக் கேட்டுக் கொண்டதைக் கூறுகிறது. இம்முறையீட்டின்படி அவன் ஆடி மாதத்தில் ஒரு உற்சவமும் சிதகரகண்டன் என்னும் பிரஸாத தளிகை சிங்கய்ய தன்னாயகன் பெயரால் பெருமானுக்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது.

இதற்காக இவனுடைய மருமகன் திருவேங்கடநாத யாதவ ராயர் இல்லத்தூர் நாட்டிலிருக்கும் பொங்களூர் என்னும் கிராமத்தை சர்வ மானியமாக நன்கொடை கொடுத்தான். இந்தப் பொங்களூரை சிங்கண்ண நல்லூர் என மறுபெயரிட்டு அதிலிருந்து வரி முதலியவை கட்டுவதை நீக்கி விட்டான்.

மேலும் அவ்வூர் எல்லையைக் குறிக்க விஷ்ணு சக்கரம் பொறித்த கற்கள் அவ்வூர் எல்லையைச் சுற்றி நடப்பட வேண்டு மென்றும் அவ்வூரிலிருந்து வரும் வரும்படியைக் கொண்டு கோவிலுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டு மென்றும் ஆஞ்ஞையிடப்பட்டது. இவ்விரண்டும் தவிர

திருப்பதியில் வீரநரஸிங்கப் பெருமாளுக்கும் திருமங்கை ஆழ்வாருக்கும் தளிகை பண்ணி சமர்ப்பிக்க வேண்டியது என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சிதகரகண்டன் மடத்தில் முப்பத்திரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அன்னம் இட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இச்செலவுகள் யாவையும் செய்து போக மீதி வருவாயில் மலைமேல் சிங்கய்யன் பெயரில் ஒரு பூந்தோட்டமும் தண்ணீர்ப் பந்தலும் அமைக்க வேண்டும் என்றும் வேறு ஏதாவது தர்ம கைங்கரியங்களுக்குச் செலவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவைகளை ஸ்ரீவைஷ்ணவர்கள் மேல் பார்வையில் நடத்தப்பட வேண்டும் என்றும் இவை அழியாம லிருக்க கல்வெட்டாகவும் செப்புத் தகடு சாசனமாகவும் பொறிக்கப்பட வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டது.

**சிங்கய்ய தண்டநாயகன் ஒரு ஒய்சன அதிகாரி :**

இச்சிங்கய்ய தண்டநாயகனுக்கு இம்மாடி ராகுத்த என்னும் பிருதும் மகாபிரதானி என்னும் அதிகாரப் பெயரும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவன் பெயரால் செய்யப்படும் தளிகை சேவை சிதகரகண்டன் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆகவே அவனுக்கு சிதகர கண்ட என்னும் பிருதும் இருந் திருக்க வேண்டும். இம் மஹாபிரதானி, சிதகரகண்ட என்றும் இம்மாடிராஹுத்த என்றும் சிறப்புப் பெயர்களோடு கொண்ட தண்டநாயகன் யார்? திருப்பதியில் இவ்வளவு முன்னணியில் வரக்காரணம் யாது.

சித்கரகண்ட (எதிரிகளை ஒடுக்குபவன்) என்பது கன்னட வார்த்தையாகும். தண்டநாயக என்பது பொது வழக்கில் தன்னயக் என மாறி வருவது கன்னட ராஜ்யத்தில் உயர் ஸ்தானத்திலிருக்கும் பெரிய மனிதர்களுக்குக் கொடுக்கும் சிறப்புப் பெயர். இது அந்த ராஜ்யத்தில் பொது அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் இருதரத்தாரருக்கும் கொடுக்கப்படும் சிறப்புப் பெயர். மகாபிரதிநிதி என்பது ஒய்சன அரசர்களின் கீழ் பிரசித்தமான அதிகாரி. இப்பெயர் விஜய நகர சாஸனங் களிலும் காணப்படுகின்றது. ஆனால் இப்பெயர் தமிழ் நாட்டு சாஸனங்களில் காணப்படவில்லை. அம்மாதிரியே தன்னயக் என்பதும் தமிழ் நாட்டில் காணப்படுகிறதில்லை. சிங்கய்ய தன்னயக என்பவன் உண்மையாக ஒய்சன அரசன் வீர பல்லாளனின் கீழ் ஒரு அதிகாரியாக இருந்தான். இவ்வீர பல்லாளனின் ஆட்சி 1292–லிருந்து 1342 வரை பரவியிருந்தது.

வீரபல்லாளன் தன் ஆட்சியின் ஆரம்பத்தில் பெருமாள் தண்டநாயக என்னும் பிராமணரை மந்திரியாக நியமித்தான் இப்பெருமாள் தண்டநாயகன் ஒய்சன மன்னன் நரஸிம்மன் III என்பவனிடம் சிறப்பிக்கும் வகையில் ஒரு அதிகாரியாயிருந்தான். அவன் குமாரன் ஒரு மாதவ தண்டநாயகன் தகப்பன் மாதிரியே வீர பல்லாளன் ஆட்சியில் பெரும் பதவி பெற்றிருந்தான். இவன் ஆட்சியின் ஆதியில் கி. பி. 1310–II-ல் இருந்ததாகத் தெரிகிறது.

இவனுடைய தகப்பனுரின் தேதி கி. பி. 1292—க்குச் சமீபமாக உள்ளது. இம்மாதவ தண்டநாயகனுக்கு இருபிள்ளைகள் இருந்தனர். அவர்கள் கேடய்ய தண்டநாயகன் என்றும் சிங்கய்ய தண்டநாயகன் என்றும் அழைக்கப்படுபவர்கள். இவர்கள் அம்மாதிரியே பல்லாளர் III-ன் கீழ் பெரும் பதவி பெற்றிருந்தனர்.

தற்போதைய மைசூர் ராஜ்யத்தில் படிநால்கு நாடு என்னும் ஜாகீரை இம்மாதவ தண்டநாயகன் தான் வசமாக்கிக் கொண்டானே தவிர அவன் தகப்பனுர் இல்லை. இவன் இந்நாட்டில் தற்போதைய குண்டுலுபெட் தாலுகாவிலுள்ள தெருக்கணும்பி என்னும் கிராமத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். இவர்கள் யாவரும் ஒய்சன அரசர்களின் கீழ் பெரும் பதவி வகித்த பிராம்மண அதிகாரிகள். அவர்கள் அரசனுக்கு அடுத்தபடியாக சர்வ அதிகாரங்களையும் வகித்தார்கள் என்பதற்காக அவர்கள் யாவருக்கும் மகாபிரதானி என்னும் சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டது. அவர்கள் பிற்காலத்தில் மலையடி வாரத்திலுள்ள தன்னுயகன் கோட்டை என்னும் இடத்தில் சார்பு உற்றவர்களால் இருந்து அதன் காரணமாக அவர்களை தன்னுயகன் கோட்டைத் தலைவர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

இது எல்லாம் பின்னுல் வரப்போகிறது. தற்போது இவர்கள் ஒய்சன அரசர்களுள் கடைசி பெருமன்னனுன வீர பல்லாளனிடம் அதிகாரிகளாக திகழ்ந்தார்கள்.

**சிங்கய்ய தண்டநாயகனுக்கும் திருவேங்கடநாத யாதவராயனுக்கு உள்ள தொடர்பு :**

இவர்களுள் பெருமாள் தண்டநாயகனைப் பற்றி தெரிய வேண்டியது அவசியமில்லை. அவன் வீர பல்லாளன் III அவனுடைய தகப்பனுர் இவர்களுடைய ஆட்சிகளில் சிறப்பான பெரிய அதிகாரியாய் இருந்தார் எனத் தெரிந்து கொள்வது

போதும். அவனுடைய தேதி 13-வது நூற்றுண்டின் கடைசி 10 வருஷங்களில் எனக் கொள்ளலாம். அவனுடைய மகன் மாதவ தண்டநாயகன் கி. பி. 1310-11 ஐச் சேர்ந்தவன். அவன் தனது தகப்பனுரின் அதிகாரத்தை வீர பல்லாளனின் கீழ்ச் செலுத்த லானுன். அவன் தெருக்கணும்பி ஜாகீரை வசமாக்கிக் கொண்டான். அவனுடைய பிள்ளைகள் இருவர், கேடயய தண்டநாயகன், சிங்கண தண்டநாயகன் என்பவர்கள். இவ்விரு பெயர்களும் திருப்பதி சாஸனங்களில் வருகின்றன. மைசூர் சாஸனங்களிலிருந்து இவ்விருவர்களுடைய காலமும் கிடைக் கின்றன. இவற்றுள் ஒரு சாஸனம் கேடய்ய தண்டநாயக னுடைய தேதியை கி. பி. 1321–22 என்றும் இன்னொரு சாஸனம் சிங்கணன் தேதியை கி. பி. 1338 என்றும் காண்பிக்கிறது. அதிக நுட்பமாய் இதை ஆராயாமல் நாம் இவவிருவரும் தங்கள் தகப்பனுர் இடத்தை முறையாக கைக் கொண்டார்கள் என்றும் இவர்கள் 14-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் நாற்பது வருடங்கள் ஒய்சன மன்னன் வீரபல்லாளனுடைய நம்பகமான உத்தியோகதர்கள் ஆக இருந்தார்கள் என்றும் கொள்ளலாம். தகப்பனுர் பாட்டனுருடைய தேதிகளை மனத்திற் கொண்டு பார்க்கப்புகின் அவர்களுடைய தேதியை 14–வது நூற்றுண்டின் மத்தியில் கொண்டுபோவது முடியாத காரியம். வீரநரஸிங்க தேவனைப்பற்றி பேசுகையில் அவனைப்பற்றி தெரிந்த கடைசி தேதியானது சுந்தரபாண்டியனது 12-வது வருடமாகும். இதற்கு சரியான வருடம் கி.பி. 1263-64. இந்த தேதியுடன் திருப்பதி சாஸனங்கள் நெ. 9-ல் காணப்படும் தேதியை ஒப்பிட்டுப் பார்த்தால் அவனுடைய ஆட்சி சுமார் 59 வருடங்கள் நீடிந்திருந்ததாகக் கொள்ளலாம்.

ஆகவே கி. பி. 1263–64 என்பது அவனுடைய ஆட்சியின் கடைசி பகுதியைக் குறிக்கிறது. சிங்கண தண்ட நாயகனுடன் கூடிய திருவேங்கடநாத யாதவராயன் வீரநரஸிங்கனின் வாரிசாக அடுத்தபடி அரசை ஏற்றுன் என்பதை நிச்சய மாகச் சொல்ல சரியான ருசு எதுவும் இல்லை. திருப்பதி சாஸனங்கள் திருவேங்கடநாதனைக் குறிப்பிடுகையில் அவனு டைய 9–வது 12-வது ஆண்டுகளைக் குறிக்கின்றன. இவைகளைக் கொண்டு நாம் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

திருப்பதி சாஸனங்களில் நெ. 102 மலைக்கோவிலிருந்து வருகிறது. இதில் அவரை மருகனுர் அல்லது மருமகப்பிள்ளை எனக் கூறப்படுகிறது. அவன் யாருடைய மருமகப்பிள்ளை ? சாது சுப்ரமணிய சாஸ்திரி கூறுவது அவனுடைய மருமகப்

பிள்ளை சிங்கண தண்டநாயகன் ஒன்று தண்டநாயகன் ஒரு பிராமண அதிகாரி என்பது அவருக்குத் தெரியாததால் இதைப்பற்றி அவர் விவரித்திருப்பது குழப்பமடைவதாகவும் முன் பின் முரணாகவும் காண்கிறது. தமிழில் உள்ள சாஸனத்தைப்படித்தால் மருகனார் என்பது சிங்கணனைக் குறிக்காது; அது திருவேங்கட நாதனைத் தான் குறிக்கிறது. எனத் தெரிய வருகிறது. இவ்வார்த்தையால் இவனுக்கும் சிங்கணுவுக்கும் உள்ள உறவு உரிமையைக் காண்பிக்கிறது என வைத்துக் கொண்டால் அப்பொழுதும் இவன் தான் சிங்கணுவுக்கு மருமகப்பிள்ளையாயிருக்க வேண்டும். ஆனால் இச்சாஸனத்திலிருக்கும் வார்த்தைகளின், அமைப்பைப் பார்த்தால் மேற்கூறிய அர்த்தம் சரிப்பட்டுவராது. திருவேங்கட நாத யாதவராயர் ஒருவேளை வீர நரசிஸிங்கனுக்கு மருமகப்பிள்ளையாயிருக்கலாமோ? அதமமாக எடுத்துக் கொண்டால் மருகனார் திருவேங்கட நாத யாதவராயர் என்பதால் திருவேங்கடநாதன் அச்சமயத்தில் அரசு பதவியிலிருக்கும் யாதவராயருக்கு மருமகனுயிருந்திருக்கலாம். சிங்கண நாயகனுக்குத் தெரிந்த தேதி கி. பி. 1338.

அது மிகவும் பிற்பட்ட தேதியாயிருக்கலாம். ஆகவே இந்நூற்ருண்டின் ஆரம்பத்திலேயே அவனுடைய தகப்பனார் ஓய்சன மன்னனிடம் முதல் அதிகாரியாயிருந்த பொழுது இவனும் ஒரு ஓய்சன அதிகாரியாய் ஆரம்பித்தான் எனக் கொள்வதில் தவறில்லை. இருப்பினும் வீரநரஸிங்கனைப்பற்றி நமக்குத் தெரிந்த கடைசி தேதியிலிருந்து இது 30 வருடங்கள் தள்ளியிருக்கின்றன.

ஆகவே அவன் வீர நரஸிங்கனுடைய மருமகனுய் இருந்திருக்கலாம் என ஹேஷ்யம் கொள்ள இடம் இருக்க, வேறுருசுக்களின்றி இதை நாம் நிச்சயமாக கூற இயலாது. இதர ஹேஷ்யங்கள்படி அவன் வீரநரஸிங்கனுடைய ஒரு தெரியாத அதிகாரியினுடைய மருமகனுய் இருக்கலாம்; அந்த அதிகாரி திருப்பதியிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களில் அதிகாரம் செலுத்தி வந்திருக்கலாம்.

இது சரியானதல்ல. ஏனெனில் வீரநரஸிங்கன் இன்னும் ஆட்சி பீடத்தில் இருந்து வந்தான். எப்படியாயினும் அவன் சிங்கணுவினுடைய மாமனாராக இருந்திருக்க முடியாது. அவர்களுடைய பரஸ்பர உறவு முறையைப் பற்றி இவ்வளவு தான் சொல்ல இயலும். ஆயினும் தேசீய விவகாரங்களில் அவர்களுக்கிருந்த உறவு முறையைப்பற்றி தெரிந்து கொள்ளுவது

அவசியம். சுப்ரமணிய சாஸ்திரி சொல்லுகிறார். சிங்கணவும் அவனுடைய மூத்த சகோதரன் கேடய்யாவும் ஒய்சன அரசாங்கத்தில் பெரிய அதிகாரிகளாய் இருந்து கொண்டு அதே சமயத்தில் யாதவராயர்கள் கீழும் வேலை பார்த்தார்கள் என்று. நமக்கு இந்த விஷயங்களைப்பற்றி தெரிந்தவைகளை வைத்துக் கொண்டு நோக்கின் இது அறவே முடியாத நிலைமை என்பது தெரிகிறது. மிகவும் பராக்கிரமசாலியான வீரநரஸிங்கன் கூட தன்னை ஒரு சுயேச்சை மன்னன் என்று சொல்லிக்கொண்டு இருந்தாலும் அவனுக்கு கேவலம் ஒரு கப்பம் கட்டும் சிற்றரசனுக்குறிய அந்தஸ்துக்கு மேற்பட்ட உரிமைகள் கிடையாது என்பதைப்பற்றி விவாதிக்க இடமில்லை.

இருப்பினும் அவன் வெளிப்படையாகதான் சுயேச்சை மன்னன் எனச்சொல்லிக் கொள்ளவில்லை. பராக்கிரமசாலி யான வீரநரஸிங்கனே செய்ய முடியாத காரியத்தை அவனுக்குப் பின் வந்தவர்கள் (சமீபத்திலோ, கொஞ்சநாட்கள் தள்ளியோ) செய்ய முடியாது; அவர்களுக்கு மேலிருந்த பாண்டிய அரசு இல்லையென வைத்துக்கொண்டால் ஒழிய அவர்கள் தங்களை சுயேச்சை மன்னர்கள் எனக் கூறிக்கொள்ள முடியாது.

சோழ சாம்ராஜ்யம் ஏற்கனவே சீர்குலைந்து விட்டது; ஆயினும் இச்சிற்றரசுகள் பாண்டிய சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தன. பாண்டிய ராஜ்ய சாம்ராஜ்யம் இன்னும் சீர் குலையவில்லை; கடைசியான பேர் பெற்ற மாரவர்மகுலசேகர பாண்டியனும் அவனுடைய தளகர்த்தர்களும் பாண்டிய, சோழ ராஜ்யங்களின் மேல் அரசு புரிந்து வந்தார்கள்.

அவர்களுடைய ஆட்சி வேங்கடத்திலும் அதைச் சுற்றிலு முள்ள பிரதேசங்களில் பூர்ண அதிகாரத்தோடு நடந்து வந்தது எனக் கூற இயலாது. ஆயின் இந்த ஒய்சன அதிகாரிகள், முக்கியமாக சிங்கணநாயகன் இந்த பிரதேசத்தில் வந்ததின் நியாயம் என்ன? இதை அறிய கொஞ்சம் சரித்திரத்தில் பின் நோக்கிச் செல்லுவோம்.

### தென்னிந்தியாவின் ராஜீய நிலைமை—முகம்மதிய படையெடுப்புகள்:

வீரநரஸிங்க யாதவராயனுடைய கடைசி வருஷத்திற்குக் கொஞ்சம் வருஷங்கள் கழித்து பாண்டிய ராஜ பரம்பரையில் மாறுதல் ஏற்பட்டது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் மறைந்து விட்டான். அவனுடைய ஸ்தானத்தில் மாரவர்மன் குலசேகரன் அமர்ந்தான் அவன் சுமார் நாற்பது வருடங்கள்

அரசாண்டு கி. பி. 1309—10-யில் மறைந்தான். அவனுக்கு தளபதிகளாக அனேக பாண்டியர்கள் இருந்தார்கள்.

ஜடாவர்மனுக்கும் இவனுக்கும் நடுவில் ஒரு ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் II இருந்திருக்கலாம். நம்முடைய விஷயங்களுக்கு இது பிரதானமில்லை. மாரவர்மன் குலசேகர பாண்டியன் ஆண்டபொழுது அவனுடைய அதிகாரம் தமிழ் நாட்டின் நிகரில்லா மன்னன் எனத் தழைத்தோங்கியிருந்தது.

இதை பாண்டிய, சோழ ராஜ்யங்கள் பூர்ணமாய் அங்கீகரித்திருந்தார்கள். சரித்திரத்தில் அவன் அடிக்கடி சோழ ராஜ்யத்தின் தலைநகரான முடி கொண்ட சோழபுரம் அல்லது ஜயம் கொண்ட சோழ புரத்தில் வசித்து வந்தான் எனக் காண்கிறோம். அவனுடைய மகன்களில் வீரபாண்டியன் என்னும் ஒருவனுவது கொங்கு நாட்டிலும் அதற்கு கிழக்குப்பகுதியிலுமுள்ள இடங்களிலும் சுறு சுறுப்பாக இருந்தான். இப்படி இருக்கும் பொழுது ஒரு சமயம் அவன் ஒய்சனர்களோடு உரச வேண்டி வந்தது. ஆகவே ஒய்சனத்துருப்புகள் சில சமயம் கொங்கு நாட்டு எல்லைவரை வந்து அவனுடன் சண்டைபோட வேண்டியிருந்தது.

ஆகவே இருதரத்தார்களுக்கும் நடுவிலுள்ள எல்லைக்கோடு நிரந்தரமானதாக இல்லாமல் அடிக்கடி மாறிக்கொண்டு இருந்தது. எல்லைச் சண்டைகள் அடிக்கடி நடந்தன. வீர பாண்டியன் கி. பி. 1292–93-ல் அரசனுனன். கிட்டத்தட்ட அதேசமயம் வீரபல்லாளன் ஒய்சன ராஜ்யத்தின் அரசு பீடத்தில் ஏறினன். இவன் அரசு ஏற்ற பிறகு ஒய்சன ராஜ்யத்தின் தமிழ், கன்னட பிரிவுகள் ஒன்ருக இணைக்கப் பட்டன. இதற்கு முன் இவ்விருபிரிவுகளும் இவனுக்கு முன்னிருந்த இரு சகோதரர்களால் ஆளப்பட்டுவந்தன.

நரஸிங்க என்பவன் மைசூர் தேசத்தையும் அதற்கு அப்பாலும் உள்ள இடங்களை யாண்டு வந்தான். அவன் சகோதரன் ராமநாதன் என்பவன் தமிழ் நாட்டில் ஒய்சன ஆட்சிக்குக் கீழ் இருந்த பிரதேசங்களையாண்டு வந்தான். ராம நாதன் தன் ராஜ்யத்திற்கு இரண்டு தலைநகர்களை ஆதரித்தான். ஒன்று சோழ ராஜ்யத்தில் பழைய ஒய்சனத் தலைநகரான விக்கிரமபுர அல்லது கண்ணனூர் என்பது. மற்றையது வடக்கில் சேலம் ஜில்லாவில் பாரமஹல் பிரதேசத்தில் உள்ளது. இதை குந்தாணி அல்லது ஹொஸர் குந்தாணி என அக்காலத்தில் கூறி வந்தார்கள்.

ராமநாதன் இறந்த பிறகு அவனுடைய புதல்வன் விஸ்வநாதன் இரண்டு மூன்று வருடங்கள் ஊன்றுதல் வாழ்க்கையை நடத்திவிட்டு நமது பார்வையிலிருந்து விலகுகின்றான். அவனுக்குப் பிறகு வீரபல்லாளா ஒய்சன சாம்ராஜ்யம் முழுவதற்கும் ஒப்பற்ற அரசனாக திகழ்கின்றான். இது சோழர்களுக்குப் பின் வந்த பாண்டியர்களுள் முக்கியமான மாரவர்மன் குலசேகரன் அவனுடைய தளபதிகள் இவர்களிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. மேலும் இந்நிலைமை ஒரு சங்கடத்திற்கு உள்ளாகியது. ஏனெனில் முகம்மதியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தக்காணத்தை போரில் வென்று தனதாக்கிக் கொண்டார்கள்.

அலாவுதீன் கில்ஜியின் வீரன் கி. பி. 1306–ல் தேவகிரியை எதிர்த்ததிலிருந்து இந்நிலைமை ஏற்பட்டது. இதற்குப் பிறகு முகம்மதியர்கள் பல போர்கள் நடத்தி கடைசியாக தேவகிரியை கில்ஜியின் சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார்கள். அடுத்தபடியாக அவர்கள் வாரங்கலில் உள்ள காகடிய அரசர்களை எதிர்த்து இரண்டு போர்களுக்குப் பிறகு கி. பி. 1309–ல் அவ்வரசை ஒழித்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தென்னிந்தியாவின் பேரில் கண்ணோட்டம் இட்டார்கள்.

அலாவுதீனின் ஆஞ்ஞையின் பேரில் அவன் தளகர்த்தன் மாலிக்கபூர் என்பவன் ஒய்சனர்கள் மீது தாக்கினது ஒரு சம்பவமாகும். தாக்கும் சைன்யம் சோளாபூருக்கருகில் தேவகிரி அரசனின் தளகர்த்தன் தாளவாய் பரசுராம்தேவன் என்பவனின் ஜாகீரில் இருந்து கொண்டு அங்கிருந்து ஒய்சன ராஜ்யத்தின் தலைநகரின் மேல் படையெடுத்தது. ஒரு சில குதிரை சைன்யம் வேகமாக ஓடி வந்து அத்தாக்குதலை நடத்திற்று. அதுவும் வெற்றி கண்டது. ஏனெனில் அவ்வமயம் ஒய்சன சைன்யங்கள் கொங்கு நாட்டின் தெற்கு எல்லையில் வீரபாண்டியனின் கை ஓங்காமல் இருக்க அவனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தது.

முகம்மதியர்கள் தாக்குதல் வெற்றி பெற்றிடவே அவர்கள் ஒய்சனத் தலைநகரை கொள்ளையடித்து, ஊரில் கொஞ்ச பாகத்தை வீணாக்கி விட்டு மேலும் அரபிக்கடல் கரையோரம் வரை தங்கள் தாக்குதலை அதிகரித்துக் கொண்டு சென்றார்கள். இதற்கு பிறகுதான் இச்சைன்யங்கள் தென்னிந்தியாவில் படையெடுத்து அனேக கோயில்களை (ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, ராமனாதபுரம்) உள்பட கொள்ளையடித்த பிறகுதான் தமிழ் நாட்டிலிருந்து திரும்பினார்கள்.

முகம்மதியர்களால் ஏற்பட்ட ஹானி இத்துடன் தீர்ந்து விட்டது எனக்கொள்வதற்கில்லை. ஒய்சன ராஜ்யத் தலைநகரை தோற்கடித்த பிறகு வீரபல்லாளன் சமாதானம் நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. அவனுக்குச் சாதகமாக ஒரு விண்ணப்பம் எழுதி அதில் மாலிக்கபூரின் சிபாரிசையும் சேர்த்து தலைமை ஸ்தானத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த ஓலையை ஒய்சன சிற்றரசன் தான் எடுத்துக் கொண்டு போனான். அவனை தலைமை ஸ்தானத்தில் மிக்க ஆதரவுடன் வரவேற்று, ஒய்சன ராஜ்யத்தை முகம்மதிய சாம்ராஜ்யத்தின் கப்பம் கட்டும் சிற்றரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சிற்றரசனும் தக்க மரியாதைகளுடன் திரும்ப அனுப்பப் பட்டான். ஒரு ஒய்சன சாஸனத்தின்படி (Epicar VII Ch. 68 Sewells' Hist. Ins. of South India P 178) கி. பி. 1313–ல் சிற்றரசன் ராஜ்யத்திற்கு திரும்பி வந்தபொழுது பெருங் கொண்டாட்டமாக நடத்தினார்கள். இப்படி தன் ராஜ்யத்தை சீர்குலைக்கும் படியான இம்முஹம்மதிய ஆபத்திலிருந்து ஒய்சன மன்னன் தப்பித்துக் கொண்டான். இப்படித் தற்காலிகமாக மிக்க திறமையுடன் நடந்து கொண்ட பிறகு, தன் தளவாடங்களை ஒழுங்குபடுத்தி, தனக்கு இனி வரப்போகும் ஆபத்துக்களை எதிர்க்க ஒரு வலிமையுள்ளவனாக ஆக்கிக் கொண்டான்.

**ஒய்சன ஆட்சியின் கீழ் திருப்பதியும் அதன் சுற்றுப்புறமும் :**

இதையடுத்த ஆண்டுகளில் தான் அவன் தன் நாட்டின் எல்லைப் புறத்தைத்தாண்டியுள்ள பிரதேசங்களில் விஸ்தரிக்கலானான். அப்பொழுது அவனை திருப்பதிக்குக் கொண்டு வந்து விட்டிருக்கவேண்டும். கி. பி. 1311-ல் மாலிக்கபூர் திரும்பிப் போன சில வருடங்கள் தலை நகரில் கலவரங்கள் இருந்து கொண்டிருந்தன. கி. பி. 1316–ல் முபாரக் அரசனைவரை இக்கலவரங்கள் இருந்து கொண்டிருந்தன.

இந்த ஐந்து வருடங்களில் தென்னிந்தியாவில் முகம்மதியர்களால் ஏற்பட்ட அவஸ்தை கொஞ்சம் குறைந்திருந்தது. முபாரக்கினுடைய ஆட்சி குறைந்த நாட்களேயாயிருந்தாலும் மிக்க மெச்சத்தகுந்ததாக இருந்தது. அவன் ஆக்ஞையின்படி தென்னாட்டை படையெடுத்ததில் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிடைத்தது. அவனுடைய தளபதி வெற்றியுடன் தலை நகருக்குப் போய் முபாரக்குப் பிறகு ஏற்பட்ட கலவரங்களில் மும்முரமாக கலந்து கொண்டான். தக்ஷிணத்

தையும், தென்னிந்தியாவையும் அவர்கள் வழியே விட்டு விட்டான்.

முபாரக் அரசு புரிந்த காலத்தில் மராட்டிய ராஜ்யமான தேவகிரி முகம்மதிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிற்று, மேலும் முபாரக் தன் நிலைமையை வலுப்படுத்த மராட்டிய தேசத்தில் முக்கியமான இடங்களில் முகம்மதியப் படைகளை முகாம் வைத்தான். இது ஒய்சனர்களுக்கு தங்களுடைய ராஜ்யத்தின் வட எல்லைக்கு நேரான ஆபத்தைத் தருவது எனக்கருதினர். ஆகவே ஒய்சனமன்னன் தனது வட எல்லை மூலமாக இடைவிடாது ஆபத்து வரக்கூடுமென்று அல்லும் பகலும் அத்திசையில் தன் முழுக்கவனத்தையும் செலுத்த லானான். தெற்கில் அவன் இஷ்டப்படி காரியங்களை நடத்த அனுகூலமாயிருந்தது. மாலிக்காபூரின் படையெடுப்பால் தமிழ் நாடு மிகக்கஷ்டப்பட்டது. அவ்வமயம் திருவாங்கூர் மன்னன் ரவிவர்மன் குலசேகரன் கொஞ்சம் ஒத்தாசைக் கொடுக்க தமிழ் ராஜ்யம் முகம்மதிய உபத்திரவத்திலிருந்து கொஞ்சம் தலை தூக்கலாயிற்று. ஆயினும் நிரந்தரமான ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை. ஆகவே தமிழ் நாட்டை படையெடுக்க பக்கத்திலுள்ள எந்த அரசாவது எண்ணம் கொண்டால் அதைத் தடுப்பார் இல்லை.

ஒய்சனர் ஒருவர் அப்படி பக்கத்தில் இருந்த அரசு. இந்த விவரங்களை மனத்தில் வைத்துக் கொண்டு ஒய்சன மன்னன் திருவண்ணாமலையின் மீது ஒரு கண் வைத்தான். அவ்விடத்தில் அவன் தகுந்தவாறு ஸ்தாபித்துக்கொண்டால் தன்னுடைய ராஜ்யத்தையும் தக்கவாறு கவனித்துக் கொள்ளலாம். மேலும் முகம்மதியர்கள் பிற்காலத்தில் தமிழ் நாட்டை நோக்கி படையெடுத்தால் அதைத் தடுக்கலாம். மேலும் ஒய்சன நாட்டை முன் போல் முகம்மதியர்கள் வடக்கிலிருந்து படை யெடுத்தால் தனக்கு திருவண்ணாமலையில் பதுங்கிக்கொள்ள சௌக்கியமான இடமாயிருக்கும்.

இம்மாதிரி எண்ணங்களுடன் எடுத்த நடவடிக்கைகளின் பயன்தான் திருப்பதியில் சிங்கணநாயகன் அல்லது சிங்கய்ய தண்ட நாயகன் காணப்படுவது. திருப்பதி சாஸனங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவது என்னவெனில் சிங்கய்யநாயகன் அங்கு எதிர்ப்பு முறையில் வரவில்லை. அங்குள்ள சிற்றரசினுடைய தயவையாவது அவன் அதிகார முறையில் கட்டளையிடுவதும், தன் பெயரை வைத்து உற்சவங்கள் ஆரம்பித்தல். நகரங்

களுக்குத் தன் பெயரை வைத்தல், தன் நலத்தை உத்தேசித்து கோவிலில் சேவைகள் செய்ய ஏற்பாடுகள் செய்தல் ஆகிய இத்யாதி காரியங்களைச் செய்யலானான்.

இங்கு சிங்கண தண்டநாயக ஒரு சிறப்புற்ற மேலதிகாரி ஸ்தானத்திலிருந்து கட்டளைகள் இடுவதும் அவைகளை அவ்வூர் சிற்றரசன் தலை மேற்கொண்டு நிறைவேற்றுவதுமாக இருக்கிறது. திருப்பதி சாஸனம் நெ. 99-ல் திருப்பதியில் ஒரு தளிகைவிடுவதும் கூறப்பட்டிருக்கிறது. இது சிங்கய்ய தண்டநாயகனால் ஏற்படுத்தப்பட்டு ராசய்ய தண்டநாயகன் என்னும் இன்னொரு அதிகாரியின் நலனுக்காகச் செய்யப்பட்டது.

இதற்காக பொங்கலூர் என்னும் கிராமத்தை கோவிலுக்கு சர்வமான்யமாக நன்கொடை கொடுக்கப்பட்டது. இந்த கட்டளையை ஒரு கடிதம் மூலம் தெரியப்படுத்தி மேலும் இந் நன்கொடையை கல்லிலும் பொறிக்க வேண்டும், செப்புத் தகட்டிலும் எழுதப்படவேண்டும் அப்படிச் செய்தால் அது சாஸ்வதமான நன்கொடை எனத் தெரியவரும் என்று கூறப்பட்டிருக்கிறது. நெ. 102—ல் இதற்கு எதிராக திருப்பதி ஸ்தானத்தார்கள் சொல்லுகிறார்கள். இந்த உற்சவத்தை ஆடி மாதத்தில் நடத்துவதாகவும் ஒரு வித கரகண்டி என்னும் தளிகை நடத்துவதாகவும் இரண்டும் சிங்கய்யதேவனின் சிறப்புக்காக நடத்துவதாகவும் என்று. இந்த சமயம் சர்வ மான்யகிராமம் ஆன பொங்கலூர் சிங்கய்ய நல்லூர் எனப் பெயரிடப்பட்டு அந்த அதிகாரியை கௌரவப்படுத்துகிறது.

அது இன்னும் அனேக காரியங்கள் செய்கின்றன; ஆனால் எல்லாம் அவனைக் கௌரவப் படுத்துவதற்காக கோவிலில் வீர நரஸிங்கப் பெருமாளுக்கும் திருமங்கை யாழ்வாருக்கும் தளிகை பண்ண ஏற்பாடு பண்ணப்பட்டது. சிதகரண்ட மண்டபத்தில் இருக்கும் மடத்தில் 32 வைஷ்ணவர்களுக்கு உணவு அளிக்கப் படவேண்டும். ஆகவே இம்மண்டபம் சிங்கய்யனால் கட்டப்பட்டிருக்க வேண்டும். அல்லது பிறர் களால் அவனைக் கௌரவிக்கக் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு பூந்தோட்டமும் ஏற்படுத்தி அங்கு ஜலம் சேகரித்து வைக்க ஒரு தண்ணீர்ப் பந்தலும் ஏற்படுத்த வேண்டும்.

இந்த நன்கொடைகள் யாவும் வழக்கம் போல் அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களால் கவனிக்கப்பட வேண்டும். இங்கு திருவேங்கடநாத யாதவராயர் தான் அக்கிராமத்தை முழுவதும்

ஒரு சர்வமான்ய கிராமமாக மாற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்தார் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் நிஸ்ஸந்தேக மாகத் தெரிவது என்னவென்றால் திருவேங்கடநாத யாதவராயர் ஓர் கீழ்தர அதிகாரியின் ஸ்தானத்தில் இருந்து கொண்டு சிங்கய்ய தண்டநாயகன் என்னும் உயர்நிலை அதிகாரியினுடைய கட்டளைகளை நிறைவேற்றுகின்றான் என்பது.

இந்நிலைமை இப்படி ஏற்பட்டது என்றால் அதன் அர்த்தம் இந்த பிரதேசம் ஒய்சள ஆட்சியினர்களின் கீழ் அவர்களுடைய ரக்ஷணையில் கொண்டு வரப்பட்டது என்பது. இவ்வதிகாரிகள் முதலில் அந்த ஜில்லாவை வென்று தங்கள் தலைவர்களின் அதிகாரத்தை ஸ்தாபிப்பதில் ஈடுபட்டார்கள். இதை நாம் நெ. 100-ல் நன்கு பார்க்கிறோம். இதில் வல்லாளதேவர் வரி என்று குறிப்பு வருகிறது. இது வல்லாளதேவர் பேரில் விதிக்கப் பட்டு, அவைகளை நேராக வல்லாள தேவருக்கோ அல்லது அவருடைய பெயரை வைத்து வேறு காரணத்துக்கோ உபயோகப் படுத்திக் கொண்டார்கள். ஆகவே அவன் ஒரு பேரரசனாக இருந்து அவனுடைய அதிகாரத்தை பின்பற்றுபவர் களாயிருந்தால் தான் இது நடந்திருக்கும். மேலும் இந்த வரி அந்த அரசனுக்குக் கட்டும் கப்பமாயிருந்து அந்தக் கப்பத்தைக் கொண்டு வல்லாளனுடைய அரசுடைமையின் கீழ் ராஜ்யத்தை நடத்த ஹேதுவாயிருந்தது.

வல்லாளனுடைய இந்த நிலைமையைத் தெரிந்து கொள் வதற்கு அப்பொழுதிருந்த நிலைமையை கவனிப்போம். துக்ளக் கி. பி. 1320-ல் டில்லியில் அரியாசனத்தில் அமர்ந்த வுடன் அவர்களுடைய கவனத்தை தக்காணம் கவர்ந்தது. ஆகவே கி. பி. 1323-ல் தென்தேசத்தை நோக்கி ஒரு படையெடுப்பு ஏற்படும் பயம் இருந்தது. ஆயினும் முகம்மது துக்ளக்கின் முகாமில் காலரா வந்துவிடவே இப் படையெடுப்பு நடக்க வில்லை. முகம்மது துக்ளக் இதை மறந்து விடவில்லை.

மறு வருடமே தக்காணத்தை நோக்கி படையெடுத் திருப்பான். ஆயினும் அவனுடைய தகப்பனார் வங்காளத்தில் ஏற்பட்ட ஒரு எதிர்ப்பை அடக்க அங்கு போயிருந்ததால் இவன் சீக்கிரமாக டில்லிக்குப் போய்த் தங்க வேண்டியிருந்தது. அவனது தகப்பனார் எதிரிகளை வென்று திரும்பும் பொழுது தான் கொலை செய்யப்பட்டார். ஆகவே முகம்மது அரியாசனம் ஏறினான். ஏறின கொஞ்ச நாட்களில் அவன் தென் தேசத்தை நோக்கி வர காரணம் ஏற்பட்டது.

ஏனெனில் அவனது ஒன்றுவிட்ட சகோதரன் தற்போதைய நைஜாம் இராஜ்யத்தையும் தென்மஹாராஷ்டிர ராஜ்யத்தையும் ஆளுபவனுமாய் இருந்து கொண்டு முகம்மதுக்கு எதிராக எழுந்தான். அவனுக்கு அப்பொழுது கிடைத்த வெற்றி சாதாரணமாக அவனை மேலும் தெற்கு நோக்கி வரச் செய்திருக்கும். கி. பி. 1327—ல் அவன் மறுதரம் ஒரு படையெடுப்பு எடுத்தான். அதன் பயனாக ஒய்சளத் தலைநகரம் முன்னைவிட மிகக் கடுமையாக சிதையுண்டு போயிற்று.

ஆகவே பல்லாளன் திருவண்ணாமலைக்குப் போய் அதையே ஏறக்குறைய தனது தலைநகரமாக ஆக்கிக்கொண்டான். ஏனெனில் அது ஆயத்தங்களுக்கு மத்தியமான இடமாகவும் வடக்கிலிருந்து தெற்கு போகும் பொழுது நெடுஞ்சாலையில் உள்ளதாகவும் விஷயங்களை தெரியப் படுத்தவோ தெரிந்து கொள்ளவோ வேண்டி நேர்வழியில் இருந்ததாகவும் இருந்ததால் அந்த இடத்தை தலைநகராக்கிக் கொண்டான்.

திருவண்ணாமலையையும் அதைச்சுற்றிலுமுள்ள இடங்களில் அவனுக்கு ஒரு செல்வாக்கும் அதிகாரமும் இருந்ததால்தான் அவன் அந்நகரைத் தலைநகரமாக ஏற்படுத்திக் கொண்டானே யொழிய அந்நகரையே தன் வாசஸ்தலமாக ஏற்படுத்திக் கொள்ளவோ மறு தலைநகராக ஏற்படுத்திக் கொள்ளவோ அவன் நோக்கம் இல்லை.

ஒய்சனர்கள் மெதுவாகவும் படிப்படியாகவும் இந்த பிரதேசங்களை வென்று கொண்டுவந்தது, அந்த சாஸனங் களின்படி சிங்கய்ய தண்டநாயகன் திருப்பதி பிரதேசங்களில் வந்ததை நிரூபிக்கிறது.

**திருவேங்கடநாதனின் பின்னர் வந்த ஸ்ரீரங்கநாத யாதவராயர் சிங்கணதண்ட நாயகனின் சமகாலத்தவன் :**

இவ்விஷயத்தில் மேலும் சொல்லப் புகுமுன் திருப்பதி கல்வெட்டுகள் முதல் வால்யூமில் கீழ்கண்ட நெம்பர் களில் வரும் மற்றொரு யாதவராயரையும் கவனிப்போம். நெ. 103 ஸ்ரீரங்கநாத யாதவராயரின் மூன்றாவது வருஷத்தைக் குறிக்கிறது. அதில் சில திருவேங்கடமுடையானுடையதானதும் காடாயுள்ளதுமான சில நிலப்பரப்புகளை 200 பணத்துக்கு விற்றுவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு சரியாக நீர்ப்பாசனம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அடுத்த நெ. அதே மன்னன் அதே வருடத்தில் எழுதியது.

அதில் இந்த சிங்கண நாயகனைக் குறிப்பிட்டு அவனுடைய தகப்பனாரை தக்க பிருதுகளுடன் மாரப்ப சிங்கநாயகன் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்படி சில ஜீயர்கள் (வைஷ்ணவ சந்நியாசிகள்) கோவிலுக்குச் சொந்தமான சில சொத்துக்களை மேல் பார்வை பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அவைகளில் ஒரு மடத்தையும் நந்தவனத்தையும் வாங்கிக் கொண்டு அவன் பெயரில் ஒரு நன்கொடையாகக் கொடுத்து நடத்தப்பட வேண்டிய ஏற்பாடுகள் செய்ததையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த கல்வெட்டின்படி பெருமாளும் தாயாரும் நந்தவனங்களில் ஒன்றிற்கு சில உற்சவங்களில் எழுந்தருளப் பண்ணவேண்டுமென்றும் அவைகளுள் ஒரு உற்சவ காலத்தில் யாத்திரிகர்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் வண்சடகோபன் (ஆழ்வார் பெயரையிட்ட) நந்தவனத்திற்கு பெருமாளை எழுந்தருளப்பண்ண வேண்டுமென்றும் அதற்காக தனியாக ரூ. 100 பணம் கொடுக்கப்பட்டதென்றும் கூறுகிறது. இவைகள் யாவும் ஸ்ரீவைஷ்ணவர்கள் மேற்பார்வையின் கீழ் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முக்கியமான அம்சம் யாதெனில் ஸ்ரீரங்கநாத யாதவராயனுக்கு சிங்கண நாயகனின் தொடர்பு மிக்க ஆரம்பத்திலேயே அதாவது மூன்றாவது வருடத்திலேயே உண்டாயிற்று என்று. அடுத்த நெ. 105 யாதவராயரின் 9 வது ஆண்டைக் குறிக்கிறது.

ஆனால் அதில் வேறு முக்கியமான விஷயம் கிடையாது. இவ்விரண்டும் மலைக்கோவிலிலிருந்து வருகின்றன. அம்மாதிரியே நெ. 106-ம் அக்கோவிலிலிருந்தே வருகிறது. அது அவனுடைய 19—வது வருடத்தைக் குறிக்கிறது. அதில் பெருமாளை ஒரு உற்சவத்தின் நான்காம் நாள் சேடிராயன் பூந்தோட்டத்திற்கு எழுந்தருளப்பண்ணி அங்கு பிரஸாதம் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டு அதற்கு வேண்டிய பணத்தை கஜானாவில் கட்டியும் ஆயிற்று. நெ. 107—ம் அந்தக் கோவிலிருந்து வருகிறது.

அதே யாதவராயனைக் குறிக்கிறது. ஆயின் அவனுடைய ஆட்சி ஆண்டும் வருடப்பெயரும் குறிக்கப்பட்ட இடம் மறைந்து விட்டது. இவை இருந்தால் அவனைப்பற்றி சரியான வருடம் தெரிந்திருக்கும். ஆயின் அதில் கொடுக்கப்பட்ட மற்ற பஞ்சாங்க குறிப்புகளை நோக்கின், இதில் குறிப்பிட்டிருக்கும் வருடம் கி. பி. 1330 அல்லது 1333 ஆக இருக்க வேண்டும்.

பின்னரு சரியான வருடமாயிருக்கலாம். இதுவும் ஒரு விதமான அன்ன சேவைக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் குறிக்கிறது. இதில் பாதி பாகம் சிதிலமாகிவிட்டது.

ஆயினும் இருக்கும் பாகத்தில் காணப்படும் குறிப்புகளை நோக்கின் ஸ்ரீ ரங்கநாத யாதவராயன் சுமார் கி. பி. 1330 அல்லது 1333-ல் வாழ்ந்தான் என்றும் அதே சமயம் சிங்கண தண்டநாயகனும் வாழ்ந்தான் என்றும் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே யாதவ ஸ்ரீ ரங்கன், யாதவ திருவேங்கடநாதனைப் பின் தொடர்ந்தான் என்றும் இருவரும் ஒய்சன சிங்கண தண்டநாயகனுடைய காலத்திலிருந்தவர்கள் என்றும் தெரிகிறது. நெ. 108 கோவிந்தராஜர் கோவிலிலிருந்து வருகிறது.

இதன் படி அவ்வூரிலுள்ள ஆட்சித் தலைவர்களுக்கும் யாதவ ராய விழுப்பரையன், சோழ விழுப்பரையன், திரிகர்த்தராயன், இன்னொரு விழுப்பரையன் (இதன் முன் பகுதி போய்விட்டது), இன்னும் சில நெசவாளர்கள், எம்பெருமான் அடியார்கள் இவர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையைப் பற்றிக் கூறுகிறது. (எம்பெருமான் என்பது ராமானுஜரையும் குறிக்கலாம்). இதன் மற்றைய பாகங்கள் மறைந்து விட்டன. நெ. 109 மலைக்கோவிலிருந்து வருகிறது. இதில் ஸ்ரீ ரங்கநாதனைக் குறித்து இரு ஸ்லோகங்களால் வர்ணனை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அவனுடைய பதினாறும் வருஷத்தைக் குறிப்பிட்டு அவன் ஜெயித்த விரோதிகளைக் கூறுகிறது. நெ. 110-ம் அக்கோயிலிலிருந்தே வருகிறது. அதில் ஒரு சசிகுலசாளுக்கி சங்கிராம ராமனைக் குறிப்பிடுகிறது. இது ஒரு யாதவ ராயனைக் குறிப்பிட வேண்டும்; ஆயின் ஸ்ரீ ரங்கநாத யாதவ ராயனைத்தான் குறிப்பிடுகிறதா என்பதில் ஐயமுண்டு.

இதில் கொடுக்கப்பட்டிருக்கும் தேதி சக வருஷத்தில் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆயின் 100 என்னும் எண்ணுக்கு முன்னுள்ள எண்கள் அழிந்து விட்டன. ஆயின் 181 என்பது கடைசியில் காணப்படுகிறது. அது 1100 அல்லது 1200 ஆக இருக்கலாம். அல்லது வேறு நூற்றாண்டைக் குறிக்கலாம். ஆனால் விகாரி என்னும் வருஷத்தின் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால் இது சக வருஷம் 1281 அல்லது கி. பி. 1359-ஐக் குறிக்கிறது என்னலாம். ஸ்ரீ ரங்கநாத யாதவராயரின் கடைசி காலமாயிருக்கலாம்; ஆயின் இதில் வரும் குறிப்பு அவரைப் பற்றியதுதானா என்பது நிச்சயமாகத்

தெரியவில்லை. நெ. 111, 112 அதே கோவிலிலிருந்து வருகின்றன. அவைகளுள் சிதகரகண்டன் மடத்து சிங்கண தண்டநாயகன் பெயர் காணப்படுகிறது.

**மற்றைய அரசர்கள் யாதவராயர்களாயிருக்கக்கூடும் :**

நெ. 113 கொஞ்சம் முக்கியமானது; ஆயின் இதன் முக்கியமான பாகங்கள் போய்விட்டன. இதில் திருபுவன சக்கரவர்த்தி நாயனார் யாதவராயர் என்னும் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயின் இந்த யாதவராயரின் சரியான பெயர் கொடுக்கப்படவில்லை. இவன் ஒரு யாதவராய அரசன் என்பது மட்டுமே நாம் நிச்சயமாகச் சொல்லலாம். வருஷமும் மாதமும் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவை போய்விட்டன. மாதமும் 29-ந் தேதியுமே காணப்படுகின்றன.

அதன் பிறகு மஹாநாயக எர்ரமாஞ்சி பெரிய பம்மநாயக அதாவது எர்ரமாஞ்சியின் மூத்த பம்மநாயகனைப் பற்றி குறிப்பு வருகிறது. அவனைப் பற்றி வரும் பிருதுகள் விஜயநகர பிருதுகள் எனத்தெளிவாகத் தெரிகின்றன. அவன் பசுக்களையும் ஒரு எருதுவையும் நன்கொடையாகக் கொடுத்து திருவேங்கடமுடையானுக்கு ஒரு நந்தா விளக்கு ஏற்ற ஏற்பாடு செய்தான். இதில் அவன் "வஸந்தத்திற்கு" வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது.

ஒருவேளை அவன் வசந்த உச்ஸவத்தின் போது (சித்திரை மாதத்தில்) வந்திருக்கலாம். நெ. 114-ம் அதே மாதிரியான கல்வெட்டாகும். அதில் முன்கூறிய பிருதுகளோடு கூடிய ஒரு ஸ்ரீமான் மஹாநாயங்காசாரியாரைக் குறிப்பிட்டு, ஒரு பாபு நாயகர் பெம்மநாயகர் ஏற்றிவைத்த அணையாவிளக்கைக் குறிப்பிடுகிறது. நெ. 115-ல் யாதவந்ருபா என்று வெறுமனே வருகிறது. நெ. 116, நெ. 117 மலைக்கோயிலிலிருந்து வருகின்றன. அவை கொஞ்சம் விசேஷமுடையவை. முதல் கல்வெட்டில் மலையிலிருக்கும் பெருமாளுக்கு ஒரு வைகுண்டஹஸ்தம் சமர்ப்பித்ததாகவும், இது ஒரு அஹோபலராயன் என்பவனால் கொடுக்கப்பட்டதாகவும் பெருமாள் கையை வைத்துக் கொண்டிருக்கும் முத்திரையால் யாவருக்கும் மோக்ஷம் அளிக்கிறது என்னும் உறுதி கொடுத்திருப்பதால் அதற்கு தன்னுடைய கிருதக்ஞையைத் தெரிவிப்பதற்காக இதை அளித்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. அடுத்த சாஸனமும் இதே மாதிரியான குறிப்புதான்.

ஆனால் இங்கு கூறப்பட்டிருப்பவன் தஞ்சைக்கு அதிபதியான ஒரு யாதவ மன்னன் ஔபலராயன் என்பவன். இவனுடைய உண்மை நிலைமை என்ன என்பது தெரியவில்லை. இவன் யாதவ ராயர்களுடைய சந்ததியைச் சேர்ந்தவனா, அவன் பெயர் தஞ்சையுடன் ஏன் இணைக்கப்பட்டிருக்கிறது என்கிற கேள்வி களுக்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

**இன்னும் பல வகைப்பட்ட சாஸனங்கள் :**

நெ. 118-லிருந்து பலவகைப்பட்ட சாஸனங்கள் ஆரம்பிக் கின்றன. இவைகள் எல்லாம் கோவிலுக்குச் செய்யும் சேவை களுக்காக கொடுக்கப்பட்ட தானங்கள், ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் இவைகளைப் பற்றிக் குறிக்கின்றன. இவைகளில் பெரும்பாலானவை மிகவும் சிரழிந்து விட்டதால் அவைகளைப் பற்றி புரிந்து கொள்ளுவது கடினமாயிருக்கிறது. அவைகளுள் சிலவற்றில் கொஞ்சம் விவரங்கள் இருந்தாலும், முழுவிவரங்கள் இல்லாததால் இவைகளையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவைகளுள் முதன்முதலாக கொஞ்சம் முக்கியமானது நெ. 150. இது சிறியதாயிருந்தாலும் விக்கினமில்லாமல் இருக் கிறது. ஆனால் இதன் அர்த்தம் சரியாக விளங்கவில்லை. இதில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அதைச் சேரனை வென்றவன் மண்டபம் எனக்கூறுகிறது. ஒருவேளை ரவிவர்ம குலசேகரன் படையெடுப்பைக் குறிப்பிடலாம். அவனைக் கூறுகையில் "அஞ்சல்கள் செல்வதற்கு ஆக்ஞைகள் இடுபவன்" எனக் கூறப்பட்டிருக்கிறது. நெ. 171-ம் 172-ம் மலைக்கோயிலிருந்து வருகின்றன. முதல் சாஸனம் "உடையவரை"க் குறிப்பிட்டு ஒரு நன்கொடையைப் பற்றிக் கூறுகிறது. கடைசி வரியில் அனந்தாள்வான் பெயர் காணப்படுகிறது.

அடுத்தது அனந்தாள்வானின் பேரன் ஒருவனைக் குறிப்பிடு கிறது. அவன் ஆரம்பித்த ஒரு சேவையை அது கூறுவதாயிருக் கலாம். நெ. 173, ஆசார்ய புருஷர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களுள் அனந்தாள்வார்பிள்ளை என்பவரின் பெயருடன் அவர் மலையில் ஏற்படுத்திய நந்தவனமும் குறிப்பிடப்பட்டிருக் கிறது. நெ. 175 அதே மாதிரி "ராமானுஜ" நந்தவனத்தைக் குறிப்பிடுகிறது.

வேங்கடாசால இதிஹாஸ மாலாவில் அனந்தாள்வார் முதன்மையாக ஏற்படுத்தி கவனித்து வந்த நந்தவனம் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டது நினைவிலிருக்கலாம். நெ. 176-ல்

திருப்பதிக்கும் அவுலாலிக்கும் எல்லைக் கோட்டைக் கூறுவதாகத் தெரிகிறது. இதை அவிலாலி என்று மற்ற இடங்களில் கூறுகிறார்கள். நெ. 177-ல் பூவைநகரில் உள்ள காமவல்லி என்பவளைக் குறிப்பிடுகிறது. அவனுடைய தாய் அவனுடைய இளம் வயதில் போதித்த 32 வகை தானங்களுள் ஒன்று ஒரு குளம் வெட்டினதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் நாம் இப் பல வகைப்பட்ட சாஸனங்களின் முடிவுக்கு வந்து விடுகிறோம். இனிவரும் சாஸனங்கள் விஜயநகர ஆட்சியைப் பற்றி குறிப்பிடுகின்றன.

அத்தியாயம் 15

# தொண்டமான் சக்கரவர்த்தி—திருப்பதியை ஸ்தாபித்த மானிட அரசன்

திருப்பதியைப் பொருத்த வரையில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் கீழ் நாம் பழங்காலத்தை விட்டு தற்கால சரித்திரத்தில் புகுகிறோம் எனக் கொள்ளலாம். இதுவரையில் திருப்பதியின் வரலாறு அரைகுறையான கல்வெட்டுகளிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இவைகளை வைத்துக் கொண்டுதான் அக்காலத்திய சரித்திரத்தைத் தொகுக்க முடியும். நமக்குத் தெரிந்த விஷயங்களும் ஏறக்குறைய இவைகளின் படியே தான் இருக்கின்றன.

சுமார் 14-வது நூற்றுண்டின் முன்பாகம் வரை பழங்காலம் எனவும் அதன் மத்தியிலிருந்து தற்கால வரலாறு எனவும் கொள்ளலாம். இதுவரையில் அகப்பட்ட கல்வெட்டுகளையும் விஷயங்களையும் அலசி ஆராய்ந்த பிறகு இவ்விஷயங்களைத் திரும்பவும் சுருக்கமாகக் கொண்டு அவற்றிலிருந்து திருப்பதியின் வரலாற்றைப் பற்றி நாம் அறிந்தவைகளை திரும்பவும் சொல்லுவோம். இக்கோவிலின் வரலாறு கிருஸ்துவ சகாப்தத்தின் ஆரம்பத்தில் ஆரம்பமாகிறது எனக் கொண்டாலும் இந்தக் கோயிலை எந்த மனிதன் ஆரம்பித்தான் என்பதற்குத் தகுந்த நிச்சயமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

இக் கோவில் தானாகவே உண்டானது ஸ்வயம்பு ஸ்தலம் எனினும் வரலாற்றின்படி இலக்கியத்தில் வரும் தொண்டமான் சக்கரவர்த்தி என்பவன்தான் மானிட ஸ்தாபகன் எனக் கொள்ளவேண்டும். அனேக விதங்களில் அவனை அந்தப் பிராந்தியத்தின் அரசன் என்றும் அவன் தலைநகரம் மலைக்கு அருகில் இருந்தது என்றும் அம்மலையை தலைநகரத்திலிருந்து ஒரு சுரங்கப் பாதை மூலம் அடைய முடியும் என்றும் நாம் அறிகிறோம். ஆகவே அவன் மலைக்கு அருகாமையில் உள்ள நாராயண வனத்திலிருந்தோ அல்லது வேறு ஒரு இடத்திலிருந்தோ அந்நாட்டை ஆண்டு வந்தான் எனக் கொள்ளல் வேண்டும்.

**திருப்பதியிலிருக்கும் கோவிலின் வைஷ்ணவ அம்சங்கள் :**

அவனைப் பற்றி வழங்கும் மற்றொரு மரபு என்னவென்றால் அவன் சோழ அரசனுக்கும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன் என்பவது. அதாவது அந்நாக கன்னிகை அத்தேசத்து அரசரின் பெண் எனக் கொள்ளல் வேண்டும். கோவிலில் வழிபாட்டுக்கு வேண்டிய ஒழுங்குகள் எல்லாம் அவனாலேயே ஆரம்பிக்கப் பட்டது எனக் கொள்ள முடியாது. ஏனெனில் அங்கு ஏற்கனவே இரண்டு பக்தர்கள், ஒரு பிராம்மணனும் ஒரு சூத்ரனும் பெருமாளுக்குத் தாங்களாகவே சேவை செய்து கொண்டிருந்தார்கள். அதில் அவ்வைகானஸப் பிராம்மணன் ஆராதனம் முதலிய சேவைகள் செய்து கொண்டும் சூத்திரன் வழிபாட்டுக்கு வேண்டிய வெளிச் சேவைகள் (முக்கியமாக புஷ்பங்கள் முதலியவைகள் வைகானஸ முறைப்படி பூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளைக் கொண்டு வந்து கொடுத்தல்) செய்தல் இவைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த காலத்தை நிர்ணயிக்க நமக்கு ஆதாரமாயிருப்பது புராணங்கள்தான். அவைகளின்படி இந்த காலம் விக்கிரம சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து சக சகாப்தத்தின் ஆரம்பம் வரையில் உள்ள இடைக் காலத்தில்தான் இருந்திருக்க வேண்டும். அதாவது கி. பி. முதல் நூற்றாண்டாவது கி. மு. முதல் நூற்றாண்டாவது ஆக இருக்க வேண்டும். மற்றையபடி சங்ககால இலக்கியங்கள் மற்றைய தென்னிந்திய சரித்திர நிகழ்ச்சிகள் இவைகளிலிருந்தும் அக் காலத்திலேயே இந்தக் கோவில் இருந்ததாகவும் மற்றபடி நித்தியபடி பூஜைகளுக் கேயல்லாமல் மற்றும் முக்கியமான வருடாந்திர உற்சவங்கள் நடத்தவும் ஏற்பாடுகள் இருந்தன என்றும் தெரிய வருகிறது. நமக்குத் தெரிந்தவரையில் இதைப் பற்றி முதன் முதலாக எழுதியவர் கவி மாமூலனார் என்பவர். இவர் சங்க இலக்கியத்தில் முக்கியஸ்தானம் வகித்தவர்.

அவர் தனித்துச் சொன்னதாவது திருப்பதி வருடாந்திர உற்சவங்களுக்குப் பேர்போனது என்று. நக்கீரருடைய ஒரு பாட்டிலிருந்து பழங்காலத்தில் வணங்கிய தெய்வங்களுள் விஷ்ணுவும் ஒன்று என முன்னமே சொன்னோம். மேலும் பெரும் பாணாற்றுப் படையில் தொண்டமான் இளந்திரையன் காலத்தில் காஞ்சியில் ஒரு கோவில் இருந்ததாகக் குறிப்பு வருகிறது. ஆகவே திருப்பதியில் அப்பொழுது ஒரு கோவில் இருந்திருக்கலாம் என்னும் யூகம் சரியானதன்று என்று நினைக்க ஹேதுவில்லை. இக்கவிகளுக்கும் பாட்டுகளுக்கும் பிறகு நாம்

வைஷ்ணவ ஆழ்வார்களுள் முதலாழ்வார்களைச் சந்திக்கிறோம். இவர்களுள் முதல் மூவரை பின்னர் வந்த ஆழ்வார்களால்கூட செந்தமிழ்க் கவிகள் எனப்போற்றப்பட்டனர்.

அவர்கள் இயற்றிய முன்னூறு பாட்டுகளும் திருப்பதியில் உள்ள விஷ்ணுவின் கோவிலைப் பற்றியதாகும் என வைஷ்ணவர்கள் கருதுகின்றனர். சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் மேலே ஒன்று படுத்திக் கூறியுள்ளோம். இக்கூற்றுகளை கூர்ந்து ஆராய்ந்தால் இந்தக் கோயிலை விஷ்ணுக் கோவில் தான் என அக்காலத்தில் கருதினர்கள் என்றும் மேலும் அங்குள்ள மூர்த்தி விஷ்ணுவின் மூர்த்தியேயென்றும் அம்மூர்த்திக்கு இதர மூர்த்திகளுக்கே சிறப்பாயுள்ள சில அம்சங்களிருப்பினும் விஷ்ணுவின் மூர்த்தியேயென்றும் கருதினது நன்கு புலப்படும். இம்மூர்த்தியின் சிறப்பு அம்சங்களை விரிவாக முதலாழ்வார்கள் மற்றுமன்றி பின் வந்த ஆழ்வார்களும் தங்கள் பாக்களில் பாடினார்கள்.

வைஷ்ணவ ஹிந்துத்வத்தில் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவனும் இவ்வம்சங்களைப்பற்றி கூறப்படும் விவரணங்களில் திருப்தியடைந்து விடுகிறான்; மற்றையவர்கள் தெய்வவழிபாடுகள் அல்லாத மார்க்கத்தில் ஆராய்ந்தால் இவ் வம்சங்கள் வியப்பைக் கொடுப்பனவாகவும் சாதாரண அனுபவத்தில் காணப்படாதனவாகவும் இருக்கும். சாதாரண நியாயத்தின்படி பார்ப்போமாயின், இம் மூர்த்தி செயற்கை (மனிதனால் செய்யப்பட்டதென்றும்) இக் கோவில் மனிதனால் கட்டப்பட்டதென்றும் வைத்துக் கொண்டால், இக்கோவிலை ஸ்தாபித்தவனுடைய மனத்தில் தோன்றிய வாறு இந்த மூர்த்திக்கு உருவத்தைக் கொடுத்தான் என்னலாம். ஒரு நிமிஷம் அந்த காலத்தைப்பற்றி யோசிப்போம். அக் காலத்தில் பொது ஜனங்கள் ஜைன, புத்தமதங்களில் ஈடுபட்டு இருந்தார்கள்.

ஆகவே அவர்களை அந்த மதங்களின் ஈடுபாடிலிருந்து திருப்ப அவர்களது மனதுக்குப் புரியும் வகையில் கோயில்களைக் கட்டி, அங்கு தெய்வங்களை வைத்து அவர்களை அதைத் தொழுவதில் ஈடுபடும்படி செய்வதில் ஊக்கம் காட்டினார்கள். ஆகவே அந்த சமயத்தில் வைஷ்ணவத்திற்கும் சைவத்திற்கும் சமய வேறு பாடுகளோடு பூசல்களோ இருக்க நியாயம் இல்லை.

அந்தக் காலம் இவ்விரு நாஸ்திக மதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிராமண மதம் ஒருவகை மாற்றம் படைத்து ஹிந்து மதமாகத் திகழ்ந்தது. இதை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால் அக்காலத்தவர்கள் விஷ்ணு, சிவன் இவர்களுக்குள்ள ஒற்றுமையையும் அடிப்படையான ஒருமைப் பாட்டையும் உணர்த்தியிருப்பார்களே ஒழிய இவ்விருவர்களின் இடையே உள்ள வேற்றுமைகளை வெளிப்படுத்தியிருக்க மாட்டார்கள்.

ஆகவே இம் மூர்த்தியின் சில அம்சங்கள் அம் மூர்த்தியின் உண்மை ஸ்வரூபத்தை ஸ்தாபிப்பதில் பேதங்கள் ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருப்பது தவிர்க்க முடியாததாகும். அப்படியிருப்பினும் ஆதிகாலத்திலிருந்தே இக்கோவில் விஷ்ணுவின் கோவில் என்றும் இம் மூர்த்தி விஷ்ணுவின் மூர்த்தியே என்று எல்லாரும் கருதியது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மாமூலனர், நக்கீரர் ருத்திரன் கண்ணன் ஆகிய சங்கப் பெரியோர்கள் இவர்களுக்குப் பின் வந்த முதல் நான்கு ஆழ்வார்கள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் இறுதியாக உள்ள மற்றைய ஆழ்வார்கள் யாவரும் இதே உண்மையைக் கூறியுள்ளார்கள்.

இது மட்டுமல்ல. இவர்களுடைய சம காலத்திலிருந்த சைவ அடியார்களும் நாயன்மார்களும் சிவ பக்தர்களாய்த் திகழ்ந்து சிவனைப்பற்றி மிக்க ஆர்வத்துடன் எழுதியுள்ளார்கள். அவர்கள் சிவனைத் தொழுவதற்கு உகந்த இடங்களைக் குறிப்பிட்டு வருகையில் ஓரிடத்திலாவது திருப்பதியிலிருக்கும் கோவில் சைவக்கோவில் என்று கூற முன்வரவில்லை.

சமீபத்திலிருக்கும் காளஹஸ்தி முக்கியமான சிவஸ்தலங்களில் ஒன்றாகும். இத்தலத்தை முக்கியமான எல்லா சிவபக்தர்களும் தரிசித்து அத்தலத்தைத் தங்கள் பாக்களில் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் காளஹஸ்திக்குப் போய் அங்கிருக்கும் கோவிலைப் பாடியிருப்பதால் அவர்களுக்குத் திருப்பதியைப் பற்றித் தெரியாது என்றாவது அதைப்பற்றி கேட்கப்படவில்லை என்றாவது சொல்லுவதற்கில்லை.

அப்படியிருப்பினும் அவர்கள் திருப்பதியை ஒரு புண்ணிய ஸ்தலமாகக் கருதி குறிப்பிடவில்லை; அதை ஒரு சிவன் கோவில் என்றாவது விவரிக்கவில்லை. முன்னமேயே இந்துக்களின் கொள்கைப்படி சில சமயத் தொடர்பில்லாத குறிப்புகள் சொல்லியிருக்கிறோம். அதன்படி திருப்பதி ஒரு விஷ்ணு கோவில் தான் என்று தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் சிலப்பதி

காரத்தில் நூலாசிரியர் ஒரு ஹிந்து பிராமணர் அல்லர். அவர் மிகத் தெளிவாக சொல்லியிருப்பது திருப்பதியில் இருக்கும் கோவில் ஒரு விஷ்ணு கோவில் என்று. அம்மாதிரியே 9-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் 'பாரத வெண்பா' என்னும் நூலை எழுதியவர் அக்காலத்தில் திருப்பதியும் காஞ்சியும் விஷ்ணுவுக்காக தொழப்படும் இடங்கள் என்று, இக்கோவிலைப் பற்றி முதன் முதலாகத் தோன்றும் கல்வெட்டுகள் பாரத வெண்பாவைத் தொகுத்தவருடைய காலத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளுக்கு முன்னுல் எழுதியதாகும். அதில் திருப்பதியை விஷ்ணுவின் கோவிலென குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அக்கோவில் இருக்கும் மூர்த்தி, எப்படிப்பட்டவராயினும் சரி, அம்மூர்த்திக்கு அமைக்கப்பட்டிருக்கும் குறிகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் சரி, வைஷ்ணவர்களுக்கு இவ்விடம் ஒரு புண்யஸ்தலமாக கருதப்பட்டது, மேலும் இந்த கோவில் ஒரு வைஷ்ணவ கோவில் என்று கி. பி. 8 நூற்றுண்டுகளாக கருதப்பட்டு வந்தது.

**ஆசாரியர்கள் காலத்தில் திருப்பதி :**

ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு ஆசார்யர்கள் காலத்திற்கு வருகிருேம். இவர்கள் ஆழ்வார்களுடைய உபதேசங்களைப் பரப்பினர். குருபரம்பரையின்படி முதல் ஆசாரியர் நாதமுனிகள் திருப்பதிக்கு விஜயம் செய்ததைப்பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன இவருக்கு அடுத்தபடியாக இவருடைய பேரன் யாமுனுசாரியர் தன் ஆயுள் காலத்தில் இக்கோவிலுக்கு விஜயம் செய்தது அல்லாமல், அங்கு நடத்தப்படும் புஷ்ப கைங்கரியங்கள் சரிவர நடத்தப்படவில்லையென்று கண்டு, ஒரு மனுேதைரியமுள்ளவன் திருப்பதியிலேயே தங்கி இந்த கைங்கரியத்தைச் செய்ய வேண்டுமென்று இச்சைப்பட்டார். இதன் காரணமாகத்தான் பேரன்களில் ஒருவரான திருமலை நம்பிகள் தனது தகப்பனுருடன் திருப்பதியில் போய் வசிக்கலானுர். அப்பொழுது அவருடன் அவருடைய சகோதரிகளான இருகன்னியாப் பெண்களும் வசித்து வந்தனர்.

இவ்விருவர்களுள் ஒருவருக்குத் தான் பிற்காலத்தில் வைஷ்ணவ ஆசார்யராகத் திகழ்ந்த ராமானுஜர் பிறந்தார். திருமலை நம்பிகள் திருப்பதியிலேயே நிரந்தரமாக வசிக்கலானுர். இப்பொழுதும் திருப்பதியில் வசிக்கும் சிலர் அவருடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களெனச் சொல்லிக் கொள்ளுகிருர்கள்.

தன்னுடைய பாட்டனாரான யாமுனாசாரியரிடமிருந்து தான் படித்த ராமாயணத்தின் தத்துவார்த்தங்களை ராமானுஜருக்குக் கற்றுக் கொடுக்க அதன் பொருட்டு ராமானுஜரும் தன் மாமனிடம் தினம் சென்றார் என்பதிலிருந்து திருமலை நம்பிகள் திருப்பதியிலிருந்தது நன்கு தெரிய வருகிறது.

ஆகவே ஓராநோர் வழியாக வந்த மரபே நமக்குத்தக்க சான்றாய் இருப்பினும், மேற்கூறிய சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளுவது என்னவென்றால் இந்தக் கோவில் ஆரம்பத்திலிருந்து விஷ்ணுவினுடைய கோவில் என்றும் வைஷ்ணவர்கள் இந்த ஸ்தலத்தை ஒரு புனிதமான ஸ்தலமென்று கருதி அங்கு யாத்திரை செய்தார்களென்றும், சில வைஷ்ணவர்கள் இந்தக் கோவிலை தங்களது சொந்த கண்காப்பில் வைத்துக் கொண்டு, அதிக ஜனநடமாட்டம் இல்லாத அக்காலத்திலேயே, அக்கோவிலின் நிர்வாகத்தை தங்கள் சக்திக்குத் தக்கவாறு நன்கு கவனித்து வந்தார்கள் என்றும் தெரிகிறது. இக்கோவிலின் நிர்வாகம், ராமானுஜர் வரும்வரை இம்மாதிரியே இருந்து வந்தது.

**ஆசாரியர் ராமானுஜரும் திருப்பதி கோவிலும் :**

ராமானுஜர் காலத்தில் தான் இக்கோவிலின் சொரூபத்தைப் பற்றி பல விதமாக அபிப்பிராயங்கள் கொள்ளப்பட்டு இதனால் ஒரு பெரிய விவாதமே நடைபெறலாயிற்று. இராமானுஜர் காலத்திலோ அல்லது அவருக்கு ஓரிரண்டு தலைமுறைகளுக்கு முன்னரோ தான் இந்துக்களிடையே வகுப்பு பேதங்கள் தனித்தனியாகத் தோன்ற ஆரம்பித்து வெவ்வேறு பிரிவுகளாகத் திகழ ஆரம்பித்தன. இதன் ஒரு வளர்ச்சி என்னவெனில் ஒரு சாரார் சிவன் தான் உத்தமமானவன் எனக் கூற அதை மறுத்து மற்றொரு சாரார் விஷ்ணு தான் மேலானவன் எனக் கூறலானார்கள். புத்த, ஜைன மதங்கள் முன் நூற்றாண்டுகளிலிருந்த செல்வாக்குடன் மக்களிடம் திகழவில்லையாகையால், இம்மாதிரியான கட்சி வாதங்கள் ஓயாமல் நடக்க ஆரம்பித்தன. மேலும் சில வரலாற்றின் சூழ்நிலைகளில் இம்மாதிரியான வாதங்கள் பலம் பெற்று வளர்ந்தன. தமிழ் நாட்டில் சோழர்கள் முக்கியமாக ஆட்சி செய்த காலத்தில் தான் ராமானுஜரும் திகழ்ந்து வந்தார்.

சோழ அரசர்களுள் பெரும்பாலர் தனிப்பட்ட முறையில் சைவர்கள். அவர்களுள் சிலர் வீர சைவர்கள். தனிப்பட்ட முறையில் சிவபக்தர்களாயிருப்பினும் அரசர்கள் என்ற

முறையில் பொது விஷயங்களில் ஒரு சார்பான கொள்கைகள் கடைப்பிடிக்கவில்லை. அவர்களால் முடிந்தவரையில் வைஷ்ணவர்களையும் அவர்களது கோவில்களையும் ஆதரித்தார்கள். ஒவ்வோர் சமயத்தில் மதவிஷயமாய் சச்சரவுகள் ஏற்படுமாயின், இவ்வரசர்களும் அவைகளில் ஈடுபட்டார்கள்.

அச்சமயங்களில் அவர்களது ஆதரவு தங்களது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவர்கள் பக்கத்தில் தான் சாயும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் இம்மாதிரியான பூசல்கள் அக்காலத்தில் இருந்தன என்பது தான். மதுரை அரசன் ஒரு சமயம் ஒரு சைவ சமயாசாரியரால் உண்டாக்கப்பட்ட ஓர் சச்சரவில் பெரியாழ்வாரைக் கூப்பிட்டு வாதாடச் சொன்னதாக ஒரு மரபு. அம்மாதிரியே ராமானுஜருடைய கொள்ளுப் பாட்டனரான யாமுனாசாரியரைப் பற்றியும் பரம்பரையாக வந்த ஒரு நிகழ்ச்சி.

சோழ மன்னர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சைவ மதத்திற்கு பெரும் ஆதரவு கிடைத்தது. குறிக்கப்பட்ட வரலாறுகளின் படி ஆதித்யன் என்று சோழ மன்னர்களில் இரண்டாம் மன்னன் காவிரிக்கரைகளில் நெடுக 300 சிவன் கோவில்கள் கட்டினன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. 300 என்பது சரியான எண்ணே அல்லவோ அவன் அநேக சிவன் கோவில்கள் கட்டினன் என்பது உண்மை. ஆகவே அக்காலத்தில் சைவ மதத்திற்குப் பின் பற்றுதல் அதிகம் இருந்தது. மேலும் அதன் ஆதிக்கம் உயர்ந்திருந்தது என்பது நன்கு புலன் ஆகிறது. இதைக் கண்டு வைஷ்ணவர்களும் தங்களை ஒரு கக்ஷியினராக ஆக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டனர்.

ஆயினும் அவர்களுக்கு ஆரம்பத்தில் அரசர்களின் சிறப்பான ஆதரவு கிடைக்கவில்லை. ஆயினும் அவர்கள் தங்கள் மத்தியில் முக்கியமான ஆசாரியர்களைச் சேர்த்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களது செல்வாக்கை மிகை படுத்திக் கொண்டார்கள். காலக்கிரமத்தில் சமயத்திற்கேற்ப ராமனுஜர் ஆசாரியர்களில் முதன்மை ஸ்தானத்தை வஹிக்க வேண்டியதற்குத் தக்க தகுதியை உண்டாக்கிக் கொண்டார். அதன் பயனாக அவர் தனது கொள்பாட்டனர் யாமுனாசாரியாரின் ஸ்தானத்தில் ஸ்ரீ ரங்கத்தில் உட்கார்ந்து தனது செல்வாக்கைச் செலுத்த ஆரம்பித்தார். ராமானுஜர் காலத்தில் சோழ நாட்டை குலோத்துங்கன் I என்பவன் ஆண்டு வந்தான்.

அவன் மத விஷயத்தில் பரந்த நோக்கம் கொண்டவனு யிருந்தும் இம்மத சச்சரவுகளையும் அவைகளை மிகைபடுத்தினவர் களையும் தங்கள் பூசல்களை அறவே நிறுத்தும்படி செய்ய முடிய வில்லை.

இம் மாதிரியான ஒரு வாதத்தில் எழுந்த சில சம்பவங்களின் பயனுக ராமானுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டுப் போக வேண்டி யிருந்தது. என்று முன்பே சொன்னேம். ஆகவே ராமானுஜர் இருந்த காலமானது கட்சிகளும் கட்சி வாதங்களும் தோன்றி வலுத்து வந்த காலமாகும்.

அக்காலத்தில் பரந்த நோக்கம் கொண்ட மன்னர்களும் கூட இக்கட்சி வாதங்களில் கலந்து கொள்ள வேண்டியதாயிற்று. ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் வைஷ்ணவர்களுக்கு ஆசாரியரா யிருந்த காலத்தில், அவர் தனது சிஷ்யர்களிடம் மிக்க தன் மதிப் போடிருந்த சமயத்தில் தான் திருப்பதியில் மூர்த்தியின் தன்மையைப் பற்றிவாதம் எழுந்தது.

**ஆசாரியர் ராமானுஜரும் திருப்பதியும் ;**

ராமானுஜருடைய ஜீவிய சரித்திரத்தில் முக்கியமான திருப்பம் அவர் மத வெறியினுல் தூண்டப்பட்டவர்களிடமிருந்து தப்ப, ஸ்ரீரங்கத்தை விட்டு அயல் நாட்டுக்கு வெளியேறின தாகும். எனினும் இதற்குச் சரித்திர பூர்வமாக தக்கசான்று இருப்பதாகச் சொல்லமுடியாது. இந்த விஷயத்தைப் பற்றி நாம் முன்னமே கூறியிருப்பதால் இதைப் பற்றி மறுபடியும் இங்கு விரிவாகப் பேச வேண்டியதில்லை.

குலோத்துங்கன் பரந்த நோக்கமுள்ள மன்னனுய் இருந்தும் இந்த சமயச் சண்டையில் அவன் சிவமதத்தைத் தழுவிய மன்னனேயாவான் ; விவாதம் அவனுல் ஏற்படுத்தப் பட்டதல்ல; எனினும் அவன் அங்குள்ள முக்கியமானவர்களை விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு கூப்பிடவேண்டியது அவசிய மாயிற்று. விவாதம் என்னவென்றுல் ஒரு சைவ மதாசாரியர் இந்து மதத்தின்படி சிவன் தான் மேலானவன் எனக்கூறி அதை யாராவது எதிர்த்து தக்க மேற்கோள்களுடன் நிராகரிக்கலாம் எனக் கூறினுர்.

பார்க்கப் போனுல் இது மிகவும் விவாதிக்க வேண்டிய விஷயம். அரசர்களுடைய பொருப்பு ஒரு வாதத்தில் வாதி பிரதிவாதி இரு திறத்தாரையும் தனது அவைக்குத் தருவித்து அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கட்சியை அவையிலிருப்பவர்

களுடைய நோக்கத்திற்கு எடுத்துறைத்து தங்களது கட்சியை நிலைநிறுத்துவது. குலோத்துங்கன் ராமானுஜரை சைவ விவாதிகள் இருக்கும் இடத்திற்கு கூப்பிட்டு அனுப்பினது இதைத் தவிர வேருெரு நோக்கமும் இல்லை. ஆயின் அங்கு நடந்தது மதவெறியினுலேற்பட்ட ஒரு சம்பவம் இல்லை.

கூரத்தாழ்வான் சமயத்திற்கு ஏற்பதாயில்லாமல் சொன்ன ஒரு வசை வார்த்தை அரசனை மிக்க கோபம் அடையச் செய்தது தான் காரணம். ஆகவே ராமானுஜர் நாட்டை விட்டு ஓடி விட வேண்டியதாயிற்று. குலோத்துங்கன் I இறந்த பின் தான் அவர் திரும்பவும் வர முடிந்தது. இந்த சம்பவத்தால் நாம் அறிவது அக்காலத்தில் மதக் கிளர்ச்சிகள் இருந்தன என்றும் அவை குலோத்துங்கன் காலத்திலும் அவனுக்குப் பின்னர் வந்தவர்கள் காலத்திலும் இருந்தன என்று.

திருப்பதியின் சுற்றுப்புறத்திலுள்ள கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு நாம் தெரிந்து கொள்வது என்னவென்ருல் சோழ ராஜனின் சைவ அதிகாரிகள் சைவ மதத்திற்கு அதிக சலுகைகள் காட்டினுர்கள்; அதன்படி திருச்சானூரிலுள்ள சிவன் கோவிலுக்கு அனேக தானங்கள் செய்தார்கள். ஆயின் அதே சமயத்தில் வைஷ்ணவ அதிகாரிகளும் மற்றவர்களும் மலைமேலும் மற்றும் அங்குள்ள சுற்றுப்புறத்திலுள்ள கோவிலுக்குச் செய்த நன்கொடைகள் மிகவும் சொற்பமானவை. இருப்பினும் குலோத்துங்கன் திருப்பதியில் உள்ள பெருமாளை "திருவாய்ப் பாடி திருமலை ஆழ்வார்" என்கிருன். அதாவது முதலாழ்வார்கள் கூறியபடி கிருஷ்ண பகவான் எனக் கூறுகிருன்.

ஆகவே அக்காலத்தில் இந்த பிராந்தியத்தில் சைவம் மேற்பட்டுக் கிடந்தது; ராமானுஜருடைய ஒன்று விட்ட சகோதரன் சைவ மதத்தைத் தழுவி காளஹஸ்தியில் வசித்து வந்தான்; அவனை திருமலை நம்பிகள் மிக்க பிரயாசைப்பட்டு வைஷ்ணவ மதத்தில் திரும்பச் சேர்த்துக் கொண்டார்.

அதே காலத்தில் துரதிர்ஷ்டவசமாக திருப்பதியில் வசித்து வந்த, கோவில் சேவையில் ஈடுபட்டு வந்த சில வைஷ்ணவ குடும்பங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் கோவில் சேவைகள் நன்கு கவனிக்கப் படாமல் இருந்தன. கோவிலும் நன்கு கவனிக்கப்படாமல் இருந்தது. இந்த எதிர் பாராத நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சில செல்வாக்குள்ள

சைவ மதஸ்தர்கள் இந்தக் கோயிலை ஒரு சிவனது கோவில் என ஒரு வழக்கைக் கொண்டு வந்திருக்கக்கூடும்.

அந்நாட்டு அரசன் தன் சொந்த பொருப்பினாலேயே இவ் வழக்கை தீர்க்க முடியாததால், இதற்கு ஒரு தீர்மானமான முடிவு காண எண்ணி வைஷ்ணவ சம்பிரதாயத்திற்குத் தலைவரான ராமானுஜரை அழைத்து, வைஷ்ணவர்களுடைய கட்சியை எடுத்துரைத்து தங்கள் கட்சியை நிரூபிக்க விண்ணப் பித்தான். இம்மாதிரியான அனேக வாதங்கள் அக்காலத்தில் நடந்தன. அம்மாதிரியே கையிலிருக்கும் விஷயத்தின் கௌரவத்திற்குச் சம்பந்தமில்லாமல் இதுவும் ஒரு சாதாரண வாதமாயிருந்திருக்கும்.

ஆனால் இதில் வைஷ்ணவர்கள் சார்பில் தோன்றியவர் மாபெரும் தலைவராயிருந்தமையால் இந்நிகழ்ச்சி பெருமை யடைந்தது. அவ்விடத்து வைஷ்ணவர்களால் இந்நிகழ்ச்சிக்கு மிகை படுத்திய முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. கடவுளின் அதிசயமான உடன்பாடு கூட இதில் சேர்ந்து நிருபணம் நடந்தது எனக் கூறப்படுகிறது. இந்நூலின் முன் பக்கங்களைப் படித்தவர்களுக்கு இம்மூர்த்தியின் உருவமும் தொழும் வழி பாட்டில் உள்ள சில அம்சங்களும் நோக்கப்படின் சைவர்கள் பக்கம் வாதிக்கக் கூடிய ஒரு கட்சி இருக்க ஹேது உண்டு.

யாதவராயனுடைய அவையில் நடுநிலைமை வகித்த சபை யோர்கள் நடுவில் யாதவராயனுக்கும் சபையோர்களுக்கும் திருப்தியாகும் முறையில் கோவில் வைஷ்ணவக் கோவில்தான் என சுலபமாக எடுத்துக் காட்டினார் ஸ்ரீ ராமானுஜர். அக் காலத்தில் சமூகத்தில் வைஷ்ணவர்களுக்கும் ஸ்மார்த்தர் களுக்குமோ சரி, அல்லது சைவர்களிடமும் கூட வேற்றுமை மனப்பான்மை இல்லாமல் இருந்தது; ஒருவர்க்கொருவர் துவேஷம் பாராட்டவில்லை; ஆகவே இந்த வாதம் இந்த விதத்தில் எழுந்தது ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் இல்லை.

ராமானுஜர் அக் கோவிலை விஷ்ணுவின் கோவில் தான் என நிரூபித்த பிறகு அவரையே கோவில் விஷயங்களை நன்கு ஆராய்ந்து விஷயங்களை சரியான நிலைமையில் அமைக்க வேண்டு மென கேட்டுக் கொள்ளப்பட்டது. சாதாரணமாக எதிர் பார்க்கக் கூடியது தான். ராமானுஜரும் திருப்பதியில் தங்கி பூஜாகிரமங்களை அனேக விதங்களில் இப்பொழுது நடப்பது போலவே அமைத்தார், அவர் அமைத்த நிர்வாகம் இரு தெளிவான வகையாகப் பிரிவுபட்டிருந்தது. முதலாவது,

ஏற்கனவே அதுவரையில் ஸ்வாமிக்கு நடந்து வந்த பூஜா கிரமத்தை புனருத்தாரணம் செய்தார். இரண்டாவதாக அதுவரை அனுஷ்டிக்கப்படாத அனேக புதிய சேவைகளை ஆரம்பித்து வைத்தார். முதல் பாகத்திற்கு ராமானுஜர், புராணம், பிரபந்தம் ஆகிய நூல்களிலிருந்தும் மற்றைய நூல் களிலிருந்தும் அவ்வமயம் அவருக்குக் கிடைத்து தற்சமயம் சிதலிப் போன ஆகம நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்து பூஜாமுறைகளை வகுத்தார்.

அவர் புதிதாகப் புகுத்திய அமைப்புகள் கோவில் நிர்வாகத்தை தகுந்த முறையில் அமைப்பதைப் பற்றினதாகும். திருமலை நம்பிகள் அவர் ஜீவிய காலம் வரையிலும் அவருக்குப் பிறகு அனந்தாழ்வாரும் கோவிலைப் பற்றிய வியவகாரங்களுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டார்கள்; மேலும் கோவில் சேவைகளின் பொருட்டு சில நந்தவனங்கள் நிறுவினார்; கோவிலுக்குச் சில சேர்க்கைகள் செய்தார். மேலும் சில விஷ்ணுவின் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்தார்.

கோவில் நிர்வாகத்தையும் நிரந்தரமாக சுயநலமற்றவர் களிடம் ஒப்படைக்க இரண்டு மடங்களை ஏற்படுத்தி அவை களுக்கு சன்னியாசிகள் அல்லது பிரம்மச்சாரிகளை தலைமை வகிக்கும்படி செய்து அவர்களிடம் கோவில் நிர்வாகத்தைக் கொடுத்தார். இதில் இன்னமும் தெரிந்து கொள்ள விருப்ப முள்ளவர்கள் ஸ்ரீவேங்கடேச இதிஹாஸமாலையில் விவரங்களைக் காணலாம். இந்நூல் கொஞ்சம் நாட்கள் கழித்துத் தொகுத்த தாயினும் ஏறக்குறைய அக்காலத்திலிருந்து நடந்து வந்த ஏற்பாடுகளைப் பிரதிபலிக்கிறது. ராமானுஜரும் அனந்தாழ் வாரும் இருந்ததற்கும், அனந்தாழ்வார் அமைத்த முக்கிய நந்தவனத்தை ராமானுஜரின் பெயரிட்டு அழைத்ததற்கும் கல்வெட்டுகள் மூலம் நமக்கு சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

இவை ராமானுஜர் காலத்திற்கு, இரண்டு மூன்று தலைமுறை களுக்குள் பொறிக்கப்பட்டவை. பிரபந்தங்களை ஓதுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஸ்ரீரங்கத்தில் போல் அத்யயன உற்சவம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மலைக்கோவிலில் திருப்பாவை உற்சவம் நடத்துவதற்கும் அம் மாதிரியே கோவிந்தராஜர் கோவிலில் கோதாவின் சன்னதியில் உற்சவம் நடத்துவதற்கும் செய்த ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்களை யாதவராயரும் மற்றவர்களும் எழுதிய கல்வெட்டு களிலிருந்து அறிகிறோம்.

ராமானுஜர் இக்கோவிலின் பூஜாக்கிரமங்களை ஒழுங்குபட அமைத்தார்; சிவன் கோவிலை விஷ்ணு கோவிலாக மாற்றவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள இவை தக்க சான்றுகளாகும்.

இதுவரை நாம் எடுத்துக் காட்டிய மேற்கோள்களிலிருந்து நெடுங்காலமாக இக்கோவில் விஷ்ணுவின் கோவில் ஆக இருந்தது, இதை நிர்மாணிக்கும்பொழுதே விஷ்ணுவின் கோவில் என ஆரம்பித்தனர். அதன் பிறகு நீளநெடுக விஷ்ணுவின் கோவில் என்று இந்தக் காலம்வரை கருதப்பட்டது என நன்கு தெரிகிறது. இதற்கு எதிராக லோகா பிரமமான வழக்குகளை ஆரம்பிக்கலாம்; ஆனால் இந்த மாதிரியான விஷயத்தில் அவை சரிப்பட்டதாகா; ஒரு தனிப்பட்ட விஷ்ணு பக்தனோ, அல்லது விஷ்ணு பக்தர்களின் குழாமோ விஷ்ணுவின் விக்கிரகத்தை தனது அல்லது தங்களது மனோநிலைக்குத் தக்கவாறு உருப் படுத்தித் தொழுதார்கள்.

அதுவே தவிர வேற்றுமைப்படாத ஒரே வகையான விஷ்ணுவின் பிம்பத்தை உருப்படுத்தித் தொழுதார்கள் எனச் சொல்லுவதற்கில்லை. மேலும் இம்மாதிரியான விஷயங்களில் ஒராளோர் வழியாக வந்த பரம்பரைச் சான்றுகள் தப்பிதமில்லை என நம்புதற்குரியதாய் இருக்குமே யொழிய பகுத்தறிவைக் கொண்டு காட்டப்படும் மேற்கோள்கள் அத்தனை சரியாயிருக்க முடியாது. கோவிலில் ஒழுங்கு ஏற்பட்டு பூஜைக்குத் தக்க முறைகள் அங்கீகரிக்கப்பட்டதும் கோவிலைப் பற்றிய விஷயங்கள் நன்கு நடைபெற்று வந்தன. ராமானுஜர் மறைந்த காலத்தி லிருந்து அனேக விதமான நன்கொடைகள் கொடுக்கப்பட்டன; பூஜைக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த ஏற்பாடுகள் ராமானுஜரால் வகுக்கப்பட்டவை. அவையே இப்பொழுதும் கையாளப்பட்டு வருகிறது.

**வைஷ்ணவ மதஸ்தர்களின் கீழ் கோவில் நிர்வாகம்:**

கோவில் கல்வெட்டுகளின் சாராம்சங்களை கீழே விரிவாக உரைத்தோம். அவைகளிலிருந்து கோவில் நிர்வாகம் எப் பொழுதும் தீவிர பக்தர்கள் கையிலேயே இருந்து வந்தது. அந் நிர்வாகத்தை வகுத்தவர்களும் மதத்தில் அதிக பற்றுள்ளவர் களாயிருந்தார்கள். கோவிலில் நடக்க வேண்டிய சேவைகளும் அந்த ஊரிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய ஆதிக்கத்தில் வைக்கப்பட்டன. ஆயின் இவை பொதுஜனக் குழு ஒன்றின் மேற்பார்வைக்கு அடங்கியவை. இக்குழு பொது நிர்வாகத் தைக் கவனித்து வந்தது. வேண்டிய காலத்தில், ஆளுநர்கள்,

அரசர்கள் அல்லது ராஜ பிரதிநிதிகள் தலையிடவும் செய்தார்கள். அரசாங்கம் சில சமயங்களில் தலையிடவும் செய்தது. அதன் தலையீடு தேவையாகவும் இருந்தது. காரியங்கள் ஒழுங்கு தவரியிருந்த போது அவைகளைச் சரிவரபடுத்த அரசாங்கம் தலையிட்டு ஒழுங்கு முறையில் கொண்டு வருமேயல்லாது அதற்கு மேல் செல்லாது. ஒழுங்கு முறை வந்தவுடன் அரசாங்கம் விலகிவிடும்; நிர்வாகம் பழையபடியே அமைந்து விடும். ஆகவே இக் கோவிலைப் பொருத்தவரையிலும் சரி (மற்றைய கோவில்களிலும் இதே நிலைமை அமைந்து வந்தது) நிர்வாகம் வைஷ்ணவக் குழுவினிடமே இருந்து வந்தது.

அரசாங்கத்தின் நிலை என்னவெனில் காரியங்கள் அமைதி யாகவும் திருப்தியாகவும் இருக்கிறது என கோவில் நிர்வாகத் தாரால் கருதப்படுகிறதென்றால் தலையிடாது. அதில் ஒழுங்கு முறை தவரினால் அப்பொழுது தான் தலையிடும். ராமானுஜரின் ஜீவிய காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு வரை நமக்கு கல்வெட்டுகள் தான் கிடைக்கின்றன.

இவைகள் சொல்லும் கதைகள் யாவும் மேலே கூறிய வகையில் சிறிதளவு கூட தவறாமல் இருந்து வந்தது. அந்த இரு நூற்றாண்டுகளும் முழுவதும் அமைதியாக இல்லை. அரசர்கள் மாறினார்கள்; நாடே வேறு அரசின் கைக்கு மாறிற்று. ஆயினும் கோவிலின் நிர்வாக அமைப்பும் பூஜா நியமனங்களும் இம் மாறுதல்களால் ஒரு தங்கு தடையின்றி ஒரே மாதிரியே நடந்து வந்தன. கி. பி. 1310—ல் முகம்மதியர்கள் படையெடுத்தார்கள்.

அதன் பிறகு சுமார் அரை நூற்றாண்டு காலம் அமைதியின்மையைத் தந்தது. ஆயினும் இது சமூகத்தின் மூலம் பரவி நிர்வாகத்தைப் பாதிக்கவில்லை. இதில் ஒரு விசேஷம் கோவில்கள் யாவற்றையும் படையெடுக்கும் கொள்ளைக் கூட்டங்கள் அனேகமாக பாதித்தார்கள். மொத் தத்தில் ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் உள்ள கோவில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தும் திருப்பதியும் அதைச் சார்ந்த கோவில்களும் பாதிக்கப்பட வில்லை.

திருப்பதியும் அதைச் சார்ந்த கோவில்களும் கொஞ்சம் சீக்கிரம் அடைய முடியாத இடத்தில் இருந்ததாலும் படை யெடுப்பவர்களின் வழிக்கு இவ்வூர் தூரத்தில் இருந்தாலும்

இவ்விடம் கஷ்டத்திற்கு உள்ளாகாமல் இருந்தது என்னலாம். ஆகவே விஜயநகர சாம்ராஜ்யம் நன்கு அமைந்து அந்த ராஜ்யத்தின் ஆதிக்கம் இப்பிரதேசங்களில் பரவும் பொழுது, திருப்பதி கோவில் நன்கு அமைந்து பூஜா கிரமங்களிலும் சேவைகளும் முன்பே நிறுவிக்கப்பட்ட படி நடந்து கொண்டிருந்தன. சரித்திராசிரியன் நோக்கத்தின்படி இதுவரை கூறப்பட்ட திருப்பதியின் வரலாறுகளின் ஆரம்ப கால வரலாறு இத்துடன் முடிவடைகிறது. விஜயநகர சாம்ராஜ்யத்தின் வருகையிலிருந்து மலைக்கோவிலின் புதிய சகாப்த வரலாறு ஆரம்பமாகிறது எனக் கொள்ளலாம்.

அத்தியாயம் 16

# விஜய நகர ஆட்சியில் திருப்பதி

**ஓய்சனர் வீரபல்லாளர் III காலத்தில் திருப்பதியைச் சுற்றிலுமுள்ள நாட்டின் நிலைமை :**

திருப்பதியின் கோவிலைப் பற்றி மேலும் சொல்லப் புகுமுன் விஜய நகர சாம்ராஜ்யம் தோன்றிய விதத்தைப்பற்றி கொஞ்சம் ஆராய வேண்டும். மேலும் இச்சாம்ராஜ்யம் தோன்றிய தன் விளைவாக ஆட்சியின் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாறுதல்களையும் அறிய வேண்டுவது அவசியம். ஆகவே சரித்திரத்தில் கொஞ்சம் பின் நோக்கிப் போய் விஜய நகர சாம்ராஜ்யம் உருவாகுவதற்குமுன் ஏற்பட்டமாறுதல்களைப் பற்றி கொஞ்சம் உற்று நோக்குவோம். தேவஸ்தான அதிகாரிகள் தயாரித்த கல்வெட்டுகளில் மிகப் பழமையானது சளுவமங்கு ; குமார கம்பன உடையார் என்னும் மதுரையை கொண்டவன் இவர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன ; இப்மிகப்பழைய கல்வெட்டுகளின் காலம் கிட்டத் தட்ட கி. பி. 1359 ஆகும் இதற்கு முன் வால்யூமில் நெ. 178–ன் படி ஒரு சாஸனம் இருந்திருக்கலாம். அதில் புக்கராயனின் பெயர் மட்டும் வருகிறது. ஆயின் அவனுக்கு முன்வரும் பிருதுகள் முதலியவற்றை கவனித்தால் இந்த அரை குறையான சாஸனம் புக்கர் I-ஐ தான் குறிக்கிறதா எனச் சந்தேகம் தோன்றுகிறது. புக்கனைப் பற்றீய பிருதுகள் ஒரு புறம் இருக்க குமார கம்பணன் சளுவமங்கு இவர்கள் பெயர்கள் தோன்றியிருந்தால் புக்கன் பெயரையே குறித்ததாக வைத்துக் கொள்ளலாம் (இந்த சாஸனத்தின் தேதி முன்னர் சொன்ன தேதிக்கு முன்னதானது எனத்தீர்மானமாகத் தெரிந்தால் தான் வேறு விதமாகக் கொளல் வேண்டும்). ஆகவே விஜய நகர சாம்ராஜ்யத்தைப் பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் முதற்குறிப்புகள் கி. பி. 1359–க்கு சரியான காலத்திற்குடையதாகும். இந்த தேதிக்குள் விஜய நகர ராஜ்யம் அநேகமாக நன்கு ஸ்தாபிக்கப்பட்டு விட்டது எனக்கருதலாம் அவர்களுடைய ஒரே விரோதி வடக்கு திக்கில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பாமினி ராஜ்யத்திலிருந்து அதன் இரண்டாவது அரசன் முகம்மது ஷாவால்கொடுக்குப்படும் உபத்திரவங்கள் தான். இத்தருணம் துக்ளக் சாம்ராஜ்யத்தின் தென் பிரதேசங்களை திரும்பவும் கைப்பற்றுவதைப்பற்றி டில்லி அரசு அறவே மறந்துவிட்டது. திருப்பதி கல்வெட்டுகளில்

இந்தத் தேதிக்கு முன்னதாகக் கிடைத்த கடைசி சாசனம் கி. பி. 1338—ல் ஒரு சிங்கண தண்ட நாயகனைக் குறிப்பதாகும் என முன்பே பார்த்தோம். இதைத் தவிர இந்த அதிகாரி திருப்பதியைச் சுற்றியுள்ள இடங்களோடு சம்பந்தப்பட்டிருப் பதை மற்றும் இதர சாஸனங்களிலிருந்து அறிகிறோம். மேலும் இவனை அவ்வூர் சிற்றரசர்கள் ஒரு மேலதிகாரிக்குக் கொடுக்க வேண்டிய கௌரவங்களைக் காண்பித்ததையும் நாம் பார்த் தோம். இந்த சிங்கண நாயகன் ஒய்சன நாட்டு மன்னன் வீரபல்லாளனின் கீழ் வேலை செய்தவனே என்றும், அதே வீர பல்லாளனின் கீழ் சிங்கண நாயகன் தவிர அவன் மூத்த சகோதரனும், அவன் தகப்பனும் பாட்டனும் பணியாற்றி னார்கள் என்பதையும் பார்த்தோம். ஆகவே திருப்பதியில் சிங்கண நாயகனுடைய ஸ்தானத்தைக் கவனித்தால் திருப் பதியைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் சுமார் கி. பி. 1292—லிருந்து 1342—க்குள் இந்தக் கடைசி ஒய்சனன் ஆன வீரபல்லாளன் உடைய ஆதிக்கத்திற்கு வந்தது என்பது தெரிகிறது. அவனுடைய ஆட்சியில்தான் அல்லாவுதீன் தலைமையின் கீழ் தக்ஷிணத்தை முகம்மதியர்கள் முதன் முதலாகப் படை எடுத்தார்கள். இதன் பிறகு தான் முகம்மதியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டார்கள். ஆகவே வீர பல்லாளன் திருப்பதி பிரதேசத்தைத் தன் கீழ் கொண்டு வந்தது இம்முகம்மதியப் படை எடுப்புகளின் நேரான விளைவு என்பது தெளிவாகிறது. இதற்கு இரண்டு தலைமுறை காலத்திற்கு முன்பே சோழ வம்சத்தவர்கள் தங்கள் நாட்டை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பொழுது ஒய்சனர்கள் தெற்கே சென்று அவர்களுக்கு அம்முயற்சியில் ஒத்தாசை செய்தார்கள். இந்தக் காலத்தைப்பற்றி நாம் கொஞ்சம் விவரமாகப் பார்ப்போம்.

**தெற்கில் ஒய்சனர்கள் பரவுதல் :**

ராஜராஜசோழன் III—னுடைய ஆட்சியின் ஆரம்பத்தி லேயே அவனுக்கு ஒய்சனர்களுடைய உதவி வேண்டியிருந்து அவர்களைத் தருவித்தான் என்றும் நரஸிம்மன் II இதன் பொருட்டு தெற்கு நோக்கிச் சென்று ஒரு பக்கம் பாண்டியர் களின் ஆக்கிரமிப்பிலிருந்து காத்தும் இன்னொரு பக்கம் பெரும் பலம்கொண்ட தொண்டமண்டலம் சிற்றரசன், தென்னாற் காட்டிலிருந்தே கோப்பெருஞ்சிங்கன் இவர்களுடைய கிளர்ச்சியை அழிக்கவும் உதவி செய்தான் என்பதை முன்பே பார்த்தோம்.

கி. பி. 1316-லிருந்து கி. பி. 1352-53 வரை சோழ அரசு ராஜராஜன் III-ஆட்சியின் கீழ் வலிவு குறைய ஆரம்பித்ததோடல்லாமல் ராஜ்யத்தின் உள்ளே பல்லவச் சிற்றரசன் கோப்பெருஞ் சோழனும் அவன் பக்கத்தில் உள்ளவர்களும் கொடுத்த உபத்திரவம் ஒரு பக்கம் இருக்க தெற்கே தலையெடுத்தோங்கும் பாண்டிய அரசு தாங்கள் குலோத்துங்கன் III-மற்றும் ஏனைய சோழர்களிடம் பட்ட அவமானங்களைப் பழி தீர்க்கும் வகையில் படையெடுப்பை நடத்தினார்கள்.

இம்மாதிரி வடக்கே உள்நாட்டுக் கலகம் தெற்கே பாண்டிய அரசின் படையெடுப்பு ஆகிய இரண்டு தீக்களுக்கும் நடுவே அகப்பட்டுக்கொண்ட எறும்பு போல் சோழ அரசு தன்னுடைய தலைமை ஸ்தானத்தில் பராக்கிரமும் திறமையும் கொண்ட ஒரு அரசனைக் கொண்டிருந்தால் தன்னை ஒருவாறு காப்பாற்றிக் கொண்டிருந்திருக்க முடியும்.

ராஜராஜன் III முன்னிருந்த பல பெரிய சோழ அரசர்கள் தங்கள் ராஜ்யத்தைத் திறமையுடன் காப்பாற்றியது இங்கு கவனிக்கத்தக்கது. ஆயின் இந்த இக்கட்டான சமயத்திற்கு ராஜராஜன் III ஏற்ற அரசன் அல்ல. அவனது ஆட்சியின் ஆரம்பத்திலேயே ராஜபீடத்திற்கு வாரிசு என்று வேறொருவன் முன்வந்ததால் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், சோழ சாம்ராஜ்யத்தின் ஒர்மையில் மிக்க அக்கறை காட்டுபவனும், தற்காலிகமாகவாவது சோழ ராஜ்யத்தின் மதிப்பை உயர்த்துபவனாகவும் உள்ள ஒரு திறமை சாலியானவன் ஆட்சிக்கு வந்திருந்தால் அவன் ராஜ்யத்தை நன்கு வைத்திருக்கக் கூடும்.

ராஜராஜன் கோப்பெருஞ் செங்கோவினால் எதிர்க்கப்பட்டபொழுது குடும்ப சம்பந்தமும் ராஜீய நிலைமையும் ஒருங்கு சேர்ந்து ஒய்சன அரசர்களை மலையிலிருந்து கீழ் இறங்கி ராஜராஜனுக்கு உதவியாக வரச் செய்தது என்னலாம். சோழ ராஜ்யம் அப்பொழுது இருந்த நிலையில் ஒய்சனர் ஒருதரம் தலையிட்டு சோழர்களை ஆட்சியில் அமர்த்தினது அந்த ராஜ்யத்தில் சமாதான நிலைமையை உண்டாக்கும் எனக்கருதுவது சரியல்ல. ஆகவே இம்மாதிரி ஒரோர்தரம் தலையிடுவதைவிட வேறு ஸ்திரமான காரியம் செய்து சோழர்களைப் பதவியில் நிறுத்துவது வேண்டுமா எனக் கருத வேண்டியிருந்தது. ஆகவே சோழர்களை பதவியில் நிறுத்த இதைவிடச் சிறந்த முயற்சி செய்ய வேண்டியதின் அவசியம் தெரிந்தது.

நரஸிம்மன் II, அவன் குமாரன் சோமேஸ்வரன் ஆகிய இருவரும் சோழர்கள், பாண்டியர்கள் ஆகிய இருதரத்திலும் நெருங்கிய உறவுமுறை கொண்டவர்கள். ஆகவே அவர்கள் தென்தேசத்தில் மாற்றுத் தலைநகரம் ஒன்று அமைத்து அவசியம் ஆனபொழுது சோழர்களின் உதவிக்கு சீக்கிரம் கிடைக்கும்படி தயாரான நிலைமையில் இருந்தனர். ஆகவே ஒய்சன மன்னனான சோமேஸ்வரன் கொள்ளிடக்கரையிலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்திலும் ஸ்ரீரங்கத்திற்கு எதிர்புரமாகவும் உள்ள கண்ணனூர் என்னும் கிராமத்தைத் தன் தலைநகரமாக்கிக் கொண்டு அங்கு ஒரு நல்ல சேனையையும் கொண்டுவந்து வைத்துக் கொண்டான்.

அந்த ஊரை விக்ரமபுரம் எனப்பெயரிட்டு அங்கேயே தன்னை முடிசூட்டிக் கொண்டான். சோழர்களுக்குத் தங்கள் சிற்றரசுகளிடமிருந்து ஏற்படும் பூசல்களைத் தடுக்க இது உதவியாயிருந்தது. எனினும் பாண்டியர்களிடம் அது பெரும் பகையை ஏற்படுத்தி அவர்களை மிகக் கடும் எதிரிகளாக ஆக்கிற்று.

இதன் பயனாக பாண்டியர்களை சோழர்கள் நாட்டுக்குள் வராமல் தடுக்க பெரும் முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவு ஒய்சன மன்னன் தன் நிலையை நன்கு ஸ்திரப்படுத்திக்கொண்டு அயல் நாடுகளிலும் தன் பலம் தெரியப்படுத்தும் நிலையில் இருந்தான். நரஸிம்மன் III-ஐப்பற்றிய சில சாஸனங்களிலிருந்து அவன் ராமேஸ்வரத்தில் ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டினான் என்றும் மேலும் புதுக்கோட்டை ராஜ்யத்தின் வழியாக பாண்டிய ராஜ்யத்தை சுற்றிவளைத்துக் கொண்டான் என்றும் தெரிகிறது.

கீர்த்தி வாய்ந்த ஜடாவர்ம சுந்தரபாண்டியன் பாண்டிய அரியாசனத்தில் அமர்ந்த பொழுது, அவன் வடக்கு நோக்கி போர் தொடங்கி, சோழ தேசத்தில் எதிரிகளைத் தோற்கடித்து மற்றும் சோமேஸ்வரன் கோப்பெருஞ்சிங்கன் அவர்களையும் வென்றான். மேலும் அவன் தன்னை காஞ்சியில் எதிரிகளை வென்று ஜெயித்ததின் காரணமாக முடிசூடிக் கொண்டான்.

அவன் அதே மாதிரி வடக்கே நெல்லூரிலும் முடிசூட்டிக் கொண்டு திரும்பி வந்து தன் மிக ஓங்கிய புகழைச் சிறந்த முறையில் கொண்டாடும் முறையில் சிதம்பரத்திலும், ஸ்ரீரங்கத்திலும் முறையே முடிசூட்டிக் கொண்டான். இதன் பயன் ஒய்சனர்களுக்கு தென்னிந்தியாவில் படுதோல்வி

கிட்டியது ; ஆயினும் சோழர்களுக்கு வடக்கேயுள்ள சிற்றரசர்களின் எதிர்ப்பலிருந்து கொஞ்சம், ஆறுதல் கிடைத்தது.

எனினும் சோழர்கள் இழந்த மதிப்பு போனது போனது தான் ; அம்மாதிரியே அவர்களுடைய இழந்த பிரதேசங்களையும் திரும்ப பெற முடியவில்லை. மேலும் சோழர்கள் அல்லது பாண்டியர்களது சாஸனங்களில் வெளிப்படையாகச் சொல்லப் படா விட்டாலும் சுந்தரபாண்டியன் I-னுடைய படையெடுப்பின் காரணமாக சோழராஜ்யத்தின் முடிவு ஏற்பட்டு விட்டது என்று நன்கு தெரிகிறது.

ஏனெனில் சுந்தரபாண்டியனின் சந்ததிகள் சோழராஜ்யத்திலும் அவன் மறைந்தவுடனேயே ஆளத் தொடங்கினுர்கள் எனத்தெரிகிறது. ஓய்சனர்களோ வெனில் ஆதியில் சுந்தர பாண்டியனிடம் தோல்வியடைந்து கஷ்டப்பட்டதுமல்லாமல் தற்காலிகமாக தமிழ் தேசத்தில் அவர்களது நாட்டையும் இழந்தார்கள்.

ஆனுல் சீக்கிரமாகவே இழந்த நாட்டில் ஒரு பாகத்தைத் திரும்பவும் அடைந்தனர். சோமேஸ்வரனின் இரு பிள்ளைகளும் அவன் மறைந்தவுடன் ஒரே சமயத்தில் ராஜ பீடத்தில் ஏறினுர்கள். அவர்களுள் மூத்தவனுன் நரசிம்மன் III என்பவன் தனது சொந்த நாட்டை ஹலேபீட்பேலூர் என்னும் ஊர்களிலிருந்து ஆண்டான்.

அதே சமயத்தில் இன்னொரு ஓய்சன அரசன் சாஸனங்களில் காணப்படும் வீரராமனுதன் என்னும் பெயரோடு ஓய்சனர்களின் தமிழ் நாட்டு பிரதேசங்களில் ஆண்டு வந்தான். இவன் விக்கிரமபுரத்தையே தன் தலைநகராகவும் இன்னொரு குந்தாணியை சேலம் ஜில்லா பாரமகால பிரதேசங்களிலும் வைத்துக் கொண்டான் என சாஸனங்களில் காணப்படுகிறது.

ராமனுதனது ஆட்சி சுமார் கால் நூற்றுண்டு நீடித்திருந்ததாகத் தெரிகிறது. அவன் இறந்ததும் அவனுடைய பிள்ளை ராஜ்யத்திற்கு வந்தானென்றும் இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு நம் கவனத்திலிருந்து மறைந்து விட்டானென்றும் தெரிகிறது. ஆகவே இதன் பிறகு ஓய்சன ராஜ்யம் நரஸிம்மன் III-னின் ஆட்சியில் ஒன்றியணைக்கப்பட்டது எனத் தெரிகிறது.

**வீரபல்லாளன் III ஆட்சியில் ஒய்சனர்களின் அதிகாரம் திருப்பதி வட்டாரத்தில் பரவுதல் :**

நரஸிம்மனின் ஆட்சியில் அவன் கவனம் முழுவதும் வடக்கில் தேவகிரியில் உள்ள யாதவர்கள் நாட்டின் எல்லையைக் கடந்து வராதபடி தடுப்பதிலும் தெற்கில் கூடுமானவரை அதிகமான பிரதேசங்களை தன் சாம்ராஜ்யத்தில் சேர்ப்பதிலும் கூர்ந்திருந்தது. ஆயின் அவனுடைய ஆட்சியின் அதே காலத்தில் மதுரையில் பெரிய பாண்டிய மன்னன் மாரவர்மன் குலசேகரன் ஆண்டுவந்தான். முகம்மதிய படையெடுப்பின் முன்னிருந்த பெரும் பாண்டிய மன்னன் இவனே.

இவ்விரு வல்லரசுகளும் ஒருவர்க்கொருவர் சளைக்காமல் இருக்கவே அவர்கள் போர் என்னும் ஆட்டத்தில் சீக்கிரமாக இறங்கி விடவில்லை. மாரவர்மன் குலசேகரனுடைய பராக்கிரமங்கள் தஞ்சை ஜில்லாவில் காணப்படுகின்றன. இவன் ஜெயங்கொண்ட சோழபுரத்தையும் கங்கை கொண்ட சோழ புரத்தையும் தனது தலைநகராக ஆக்கிக் கொண்டதிலிருந்து அவன் வடக்கு எல்லைகளில் ஒய்சனர்களின் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதில் முனைந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. ஒரு வேளை லிக்கிரமபுரத்தில் தங்கள் ஸ்தாபனத்தை திரும்பவும் நிலை நிறுத்தியிருக்கக் கூடும்.

சோழ சாம்ராஜ்யத்தின் வடக்கு தெற்கு பாகங்களின் நடுவே ஒய்சனர்கள் இம்மாதிரி புகுந்ததின் விளைவுதான் அந்த ராஜ்யத்தின் வட பகுதி மத்திய அரசனிடம் விசுவாசக் குறைவு காட்டி அந்த ராஜ்யத்திலிருந்து பிறிந்து தனி ராஜ்யம் ஏற்படுத்தியதற்கு ஏதுவானது. இத்தருணத்தில் இம்மாதிரி பிரிந்த பாகம் தனது சுராஜ்யத்தைப் காப்பாற்றிக் கொள்ளுவதென்பது தனி முறையில் கஷ்ட சாத்தியமாகும், இன்னொரு பலமுள்ள அரசு அதற்குக் கை கொடுத்தால்தான் அது கொஞ்சம் தலை நிமிர்ந்து நிற்கும்.

இந்த சமயத்தில்தான் சோழ சாம்ராஜ்யம் சிதறுண்ட பொழுது யாதவராயர்கள் வேறு அரசின் உதவியோ படையெடுப்போ இல்லாமல் தங்கள் சுயேச்சாதிகாரத்தை நிலை நிறுத்தத் தொடங்கினார்கள்; இருப்பினும் ஒய்சனர்களின் உதவி கொஞ்சமாவது இல்லாமல் இருந்திருக்காது. முன்னமேயே திருப்பதியின் சாஸனங்களை ஆராய்கையில் இரு ஒய்சன தளகர்த்தர்கள் முன்னர் நிற்பதைப் பார்த்திருக்கிறோம். இவர்களுடைய காலம் வீரபல்லாளன் III அவன் பிள்ளை

நரஸிம்மன் III இவர்களுடைய காலத்திற்குச் சரியானதாக இருந்தது. இந்த வீரபல்லாளனால் தான் ஒய்சன ராஜ்யத்தின் தென்பாகத்தைத் திரும்பவும் பெறமுடிந்தது.

ஆகவே அவன் இந்த பாகத்திலேயே இருந்து கொண்டு பாண்டிய மன்னனான மாரவர்மன் குலசேகரனுடன் யுத்தம் அடிக்கடி செய்ய வேண்டியதாயிருந்தது. இதன் பயனாக திருப்பதி பிராந்தியத்தில் பின் வந்த யாதவராயர்கள் வீர பல்லாளனின் ஆதிக்கத்தை ஒருவாறு அங்கீகாரம் செய்து நடந்து கொண்டதில் ஒன்றும் வியப்பில்லை. மூன்று தலைமுறை யாக அவனது பிரதம அதிகாரியாக ஒய்சனர்களிடம் வேலை பார்த்து வந்தவர்கள் இங்கும் தங்கள் அதிகாரத்தை செலுத்தினார்கள் என்பதால் இது நன்கு விளங்கும். இவ்வதி காரிகள் ஒய்சன சாம்ராஜ்யம் முழுவதும் அதிகாரம் செலுத் தினது மல்லாமல் மைசூரின் தென்பாகத்தில் ஜாகீர் வைத்திருந் தார்கள்.

இந்த பாகம் ஒய்சன ஆட்சி மங்கின பொழுது ஒரு தனி தேசமாகத் திகழ்ந்தது. நரஸிம்மன் III-ன் ஆட்சியின் பின் பாகத்திலும் அவனுடைய பிள்ளையின் ஆட்சியின் முன் பாகத்திலும் பெருமாள் தண்டநாயகன் பிரதமராகத் திகழ்ந்தான். அவனுக்குப் பிறகு அவனது குமாரன் மாதவ தண்ட நாயகனும் அவனுக்குப் பிறகு அவனுடைய குமாரர்கள் கேட்டய்ய தண்டநாயகன், சிங்கண தண்ட நாயகன் என்ற இருவர்களும் பிரதமராகத் திகழ்ந்தார்கள். இந்த இருவருடைய பெயர்களும் திருப்பதி சாஸனங்களில் காணப்படுகின்றன. மாதவதண்ட நாயகன் மைசூர் ராஜ்யத்தின் தென் எல்லையில் உள்ள ஜாகீரை விருத்தி செய்து அதற்கு தெரகணாம்பியைத் தலைநகராகச் செய்து ஜாகீரை இன்னும் விருத்தி செய்து தண்ணாயகன் கோட்டை என்னும் சிற்றரசை ஸ்தாபித்தான்.

மைசூரின் தெற்கு எல்லை மிகவும் முக்கியமானதும் மிகவும் கவனத்துடன் கண்காணிக்க வேண்டியிருந்ததும் ஒய்சனர் களுக்கும் பாண்டியர்களுக்கும் உள்ள பூசல்கள் தான் காரணம். இதனால் கொங்கு நாட்டு எல்லை முழுவதும் இரு தரப்புக்கும் தொல்லை மூட்டுவதாய் இருந்தது. முகம்மதியர்கள் தென்னிந்தியாவில் முதன் முதலாகப் படையெடுத்த பொழுது அமீர்குஸ்ரே என்னும் சரித்திர ஆசிரியனுடைய குறிப்பின்படி ஒய்சனப் படைகள் தென் எல்லையில் மாரவர்மனுடைய பிள்ளை வீரபாண்டியனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தான் எனத் தெரிகிறது.

இந்த வீரபாண்டியன் தனக்கென்று ஒரு ராஜ்யம் நடத்திக் கொண்டிருந்தானென்றும் அதன் எல்லை இந்த கொங்குநாட்டு எல்லை என்றும் தெரிகிறது. இந்த எல்லை ஒய்சள ராஜ்யத்தின் ஒரு பகுதியில் இருந்து கொண்டு வெளிப்படையெடுப்புக்கு சாதகமான முறையில் அமைந்திருந்தது.

ஆயின் எதிரியின் படையெடுப்பை நன்கு முறியடிக்க இந்த எல்லைக் கோடு தொண்டைமண்டலம் வரை நீட்டி இந்தக் கோட்டை எல்லா பாகங்களிலும் காப்பாற்ற வேண்டிய தாயிற்று.

**முகம்மதியர்களின் தென்னாட்டுப் படையெடுப்பு :**

மேலும் செல்லுமுன் இப்பிரதேசத்தில் முகம்மதிய படையெடுப்பினால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியும் அதனால் இந்த எல்லைக்கு ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியும் விசாரிப்போம். முதலில் முகம்மதிய தளகர்த்தன் மாலிக்காபூர் என்பவன் தேவகிரியை தலை நகராக உள்ள தக்ஷிண ஹிந்து ராஜ்யமான யாதவராஜ்யத்தையும் இன்னும் கிழக்கே முறையே ஹனும கொண்டா, வாரங்கல் ஆகிய ஊர்களைத் தலை நகராகக் கொண்டவாரங்கல் தேசத்தையும் போரில் வென்று டெல்லியிலுள்ள சாம்ராஜ்யத்திற்கு அடிமையாக்கினான். அதன் பின்னர் மாலிக்காபூர் தன்னிடம் மிக்க பிரியம் வைத்துள்ள அலாவுதீனுடைய அனுமதியைப் பெற்று மேலும் தெற்கு நோக்கிப்படையெடுக்கலானான்.

அதன் நோக்கம் தென்னாட்டுக் கோவில்களிலுள்ள சொத்துக்களைக் கொள்ளையடித்து டில்லிக்குக் கொண்டுபோய் சேர்ப்பதும் அக்காலத்தில் போர்முனையில் மிக்க வலிமை வாய்த்ததெனக் கருதப்பெற்ற தென்னிந்திய யானைகளை வசப் படுத்தி எடுத்துக் கொண்டு போவதும் என்று.

மேற் கண்டவாறு அனுமதிபெற்றுக் கொள்ள மாலிக்கா பூருக்கு ஒருவித கஷ்டமும் ஏற்படவில்லை. ஆகவே தன் சைன்யத்தை நண்பனும் கப்பம் கட்டுபவனுமான தேவகிரி ராஜாக்களின் பிரதேசங்கள் மூலம் போக ஏற்பாடுகள் செய்து கொண்டான். விந்திய சாத்பூர மலைக்கணவாய்களைத் தாண்டி தக்காணத்தில் அவனுடைய சேனைகள் வந்தவுடன் தேவகிரி அரசும் சேனைகளும் படையெடுக்கும் சேனைகளை வரவேற்று தேவகிரிக்கு அழைத்துக் கொண்டுபோனார்கள்.

இளைப்பாறி சேனைகளை மாற்று அணிவகுத்துக் கொண்ட பிறகு பரஸ்தேவா தால்வி என்று முகம்மதிய சரித்திர ஆசிரியர்களால் கூறப்படும் சேனாதிபதியின் தலைமையின் கீழ் திரும்பவும் தெற்கு நோக்கிப் போக ஆயத்தமாயிற்று. யாதவர்களுடைய தளகர்த்தனை தாளவாய் என்று அழைப்பது வழக்கம். இந்த சேனாதிபதியின் இந்துப் பெயர் பரசுராம் தேவ் என்பது. இவன் அந்த சைன்யத்தை தெற்கே அழைத்துக் கொண்டுபோய் தனது சொந்த ஜாகீரான ஷோலாபூர் வரை அழைத்துச் சென்றான். அங்கு அந்த சைன்யம் இளைப்பாறி விட்டு மாற்று அணிவகுப்பு செய்து கொண்டு மேலும் எதிரியின் பிரதேசத்தில் புகுவதற்கு ஆயத்தமாயிருந்தது.

இந்த தருணத்தில் ஷோலாபூரிலிருந்து ஒரு குதிரையாட் படை ஓய்சனர்களுடைய ராஜ்யத்திற்குள் புகுந்தது. கி. பி. 1309–10 நடந்த இந்த படையெடுப்பே ஓய்சனராஜ்யத்திற்குள் முதல் படையெடுப்பாகும். ஓய்சனர்களுடைய சைன்யம் வெளியேறி இருந்தது. இருப்பினும் ஓய்சனர்கள் முற்றுகையைத் தடுக்க ஓரளவு முயற்சி செய்தார்கள்.

அந்த முற்றுகையில் தலைநகரம் மிக்க சேதம் அடைந்தது. படையெடுக்கும் முகம்மதியர்கள் மேலும் மேற்கு நோக்கி அரபிக் கடலையடைந்தார்கள். அவர்கள் திரும்பி வந்த பொழுது பெரும் திரவியங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு திரும்பினார்கள். ஓய்சனர்கள் முதலில் கொஞ்சம் எதிர்ப்பைக் காட்டி பிறகு பணிந்து விடவே முகம்மதிய தளகர்த்தனும் அவர்களை தகுந்த முறையில் வரவேற்று மேலும் ஓய்சன ராஜனை அரசனுக்குத்தக்க மரியாதையுடன் நடத்தவேண்டும் மென்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தான்.

அவ்வேண்டுகோளை ஓய்சனச் சிற்றரசனே எடுத்துக் கொண்டு டில்லிக்குச் செல்ல அல்லாவுதீனும் அவனை அன்புடன் வரவேற்று பின்னர் அவன் திரும்பும் பொழுது ஓய்சனர்களுடைய நாடு தனக்குக் கீழ்படிந்த ஒரு சினேகிதனுடைய நாடு எனக்கருத வேண்டும் என்ற உத்தரவைத் தந்து அனுப்பினான். இது முடிந்தபிறகு மாலிக்காபூர் தெற்கு நோக்கி படையெடுத்துக் கொண்டு போனான். ஏற்கனவே ஓய்சனர்கள் அவன் பக்கத்தில் இருப்பது அவனுக்கு தைரியம் தந்தது.

அவன் எந்தப்பாதை வழியாகச் சென்றான் என அறிந்து கொள்வது திருப்பதியின் வரலாற்றுக்கு முக்கியமாகும். அவன்

கிழக்குப் பாதையை உபயோகித்து வந்தால் திருப்பதிக்கு வெகு சமீபத்தில் வந்திருக்கக் கூடும். அவனுடைய படையெடுப்பில் திருப்பதியைப் பற்றிய சம்பவங்களும் நடந்திருக்கக்கூடும். ஆனால் அப்படி நேரவில்லை. இந்த படையெடுப்பில் திருப்பதிக்கு ஒரு ஹானியும் ஏற்படாததும் தவிர இதற்குப்பின் ஏற்பட்ட படையெடுப்புகளிலும் திருப்பதிக்கு ஒரு கெடுதியும் நேரவில்லை. இந்த படையெடுப்பு பெங்களூர் மூலமாக சேலம் ஜில்லாவிற்கும் அதற்கு பிறகு திருச்சி மூலமாக மதுரை ராமேஸ்வரம் முதலான இடங்களுக்கும் நடந்தது என்று ஊகிக்கத்தக்க சான்றுகள் இருக்கின்றன. இந்த வழியின் மூலமாகச் சென்றதால் திருப்பதியை தனியே விட்டு அதைப் படையெடுப்பகளிலிருந்து மீட்டது என்னலாம்.

இந்த படையெடுப்பைப்பற்றி நாம் நேரிடையாக தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் பொதுவாகச் சொல்லுமிடத்தில் இந்த படையைப்பு தீவிரமான எதிர்ப்பு ஒன்றுமில்லாததால் தெற்கு நோக்கி வேகமாகச் சென்றது. மாரவர்மன் குலசேகரனுடைய புதல்வன் வீரபாண்டியனை போரில் வென்று ஸ்ரீரங்கம், சிதம்பரம் ஆகிய இடங்களைச் சூறையாடி, பிறகு மதுரைக்குச் சென்றது.

மதுரை மாநகரைத் துகள் செய்துவிட்டு மேலும் ராமேஸ்வரம் வரையில் சென்றுவிட்டு ஒரு வருட காலத்திற்குப் பிறகு டில்லிக்குத் திரும்புகையில் 350 யானைகளின் மீது ஏற்றிக்கொண்டு போகும்படியான செல்வமும் மற்றும் சக்கரவர்த்திக்குப் பயன்படும்படியான அநேக போர்க் கருவிகளும் எடுத்துக்கொண்டு போனார்கள். மாலிக்கபூர் டில்லிக்குத் திரும்பியதும் அங்கு கஷ்டங்களும் கலகங்களும் ஏற்பட்டு கடைசியாக அலாவுதீன்கில்ஜீ இறந்து போனான். ஒன்றிரண்டு அரண்மனைக் கலகங்களுக்குப் பிறகு அலாவுதீனுடைய பிள்ளை முபாரக் அரசு பீடத்தில் அமர்ந்தான்.

இந்த அரசு மாற்றத்தின் காரணமாக கீழ்ப்பட்ட பிரதேசங்கள் அதிலும் முக்கியமாக புதியனவைகள் எதிர்க்க ஆரம்பித்தன. தேவகிரியில் ராம்தேவ்வினுடைய மருமகன் ஹார்பல்தேவை என்பவன் முபாரக்குக்கு எதிராகக் கிளம்பினான். முபாரக் ஒரு சைன்யத்துடன் வந்து ஹார்பல்தேவை நன்கு முறியடித்து தேவகிரி பிரதேசத்தை தக்ஷிண பீடபூமியில் தனக்கடங்கிய முதல் அரசாக ஆக்கினான்.

அந்த ராஜ்யத்தை நன்கு தன் பிடியில் வைத்துக் கொள்ள எண்ணி அந்நாட்டின் முக்கியமான இடங்களில் அனேக அமீர்களை அவர்களின் சைன்யங்களோடு இருக்க நியமித்தான். இதைக்கண்ட ஒய்சனர்கள் தங்களுக்கு ஏற்கவிருக்கும் அபாயத்தை அறிந்து எவ்விதமான எதிர்ப்பையும் தாக்க தாங்கள் ஆயத்தமானூர்கள். முபாரக் தலைநகருக்குத் திரும்பிய பிறகு தனது அருமை அடிமையும் குஜராத்தி ஹிந்துவாய் இருந்து இஸ்லாம் மதத்தைத் தழுவினவனுமான குஸ்ரோவை தெற்கு திசையில் படையெடுக்க அனுப்பிவைத்தான்.

அவனும் தெற்கில் படையெடுத்துமில்லாமல் தென்னிந்தியாவில் நெடுநாட்கள் காலங்கழிக்க ஆரம்பித்தான். டில்லியில் அரண்மனைச் சூழ்ச்சி ஒன்று நடந்ததால் அவன் உடனே டில்லிக்குப்போக வேண்டியதாயிற்று. தென்னிந்தியாவை தனக்குத்தானே நடத்திக் கொள்ளும்படி விட்டு விட்டு வெகு வேகமாக டில்லிக்குச் சென்றுன். கில்ஜிவம்சம் மறைந்து துக்ளக்வம்சம் தோன்றிய வரையில் தென்னிந்தியாவில் அமைதி நிலவியது. மறுபடியும் கி. பி. 1323-ல் முகம்மது பின் துக்ளக் இளவரசனுக இருக்கும் பொழுது தென்னிந்தியாவை நோக்கிப் படையெடுத்தான். அவன் தெற்கு நோக்கி கொஞ்சம் தூரம் வந்த பிறகு தென்னிந்தியாவின் எல்லையைக் கடக்குமுன் அவன் சைன்யத்தில் காலரா ஏற்பட்டதால் அவன் திரும்ப வேண்டியதாயிற்று. ஆனுல் முகம்மது துக்ளக் மறப்பவனல்ல.

அவன் சிம்மாசனம் ஏறின பிறகு தெற்கை ஜெயிப்பதற்காக ஒரு சைன்யத்தை அனுப்பிவைத்தான். இந்த படையெடுப்பும் இதற்கு முன் வந்த படையெடுப்புகளின் பாதையாகவே வந்தன. மேலும் சங்கதிகள் சொல்லியனுப்பவும் நடுவழிகளில் நியமிக்கப் பட்ட ஆட்சியாளர்களையும் அப்போதைக்கப்போது நன்கு கவனிக்க வேண்டியிருந்தது. ஆகவே முதலில் ஒய்சனர்கள் மீது படையெடுப்பு எடுக்க வேண்டியிருந்தது. ஒய்சனர்களின் தலைநகரான ஹலேபிட் இந்த சமயம் முன்னைவிட அதிக சேதம் அடைந்தது.

இந்த பலப்பரீக்ஷையின் பயனுக ஒய்சனர்கள் படையெடுப் பவர்களிடம் விசுவாசம் காட்ட நேர்ந்தது. மேலும் அந்த சைன்யம் வெற்றியுடன் தெற்கு நோக்கிச் சென்றது. இதன் காரணமாக மிக்க தூரத்திலுள்ள மதுரையில் தனது தளகர்த்தன் ஜலாலுதீன் ஆசன்ஷா தலைமையில் ஓர் ராஜ்யத்தை நிறுவுவதற்கு முகம்மதினுல் முடிந்தது.

இந்த முகம்மதிய அரசு மதுரையில் சொல்பகாலம் அதாவது ஐம்பது வருடம்தான் நிலைத்திருந்தது. இந்த சமயம் முகம்மது துக்ளக் தென்தேசத்தில் படையெடுத்தது அத் தேசத்தை ஜயித்து வசம் செய்து கொள்ளுவதற்காக அல்ல. தெற்கு தக்காணத்தில் ஆளுபவன் முகம்மதின் தகப்பனார் இறந்த பிறகு முகம்மதிற்கு எதிராக டில்லி அரசுக்கு உரிமை கொண்டாடினான். கலகம் உண்டாக்கினான்.

பஹாஉத்தின் குஷ்டாஸ்ப் அல்லது முகம்மதிய சரித்தி ராசிரியர்கள் அழைப்பது போல் குர்ஷாஸ்ப் என்பவன் துக்ளக் வம்சத்தில் ஒரு இளவரசன்; முகம்மதின் தகப்பனார் கியாஸுடின்னுடைய மருமகன்; இவன் அரசவம்சசத்தில் வளர்க்கப்பட்டு நாளடைவில் பட்டத்தில் ஏற்றுவதற்கு தக்க முறையில் நடத்தப்பட்டான் எனத் தெரிகிறது. முகம்மது தானே அரசு பீடத்தில் உட்காருவதற்கு சூழ்ச்சி செய்து தனது தகப்பனது இறுதியைக் கொண்டுவந்தான் எனச் சந்தேகிக்க இடமிருக்கிறபடியால், அந்த மருமகனும் நைஜாம் ராஜ்யங் களிலுள்ள குல்பர்காவுக்கு அருகில் சாகர் என்னுமிடத்தில் தலைநகரை வைத்துக்கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கிளர்ச்சி பண்ணி எழுந்ததில் வியப்பில்லை.

ஆகவே இந்த தென் தேச படையடுப்பு அவனுக்கு தண்டனை விதிக்கும் வகையில் அமைந்திருந்தது. அவனும் முதன் முதலாக காம்ப்ளி அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அவ்வரசன் தனது வாக்குறுதிக் கிணங்க தன்னுயிரைக் கொடுத் தாவது தன்னிடம் சரண் அடைந்தவனைக் காக்கும் இயல் புடையவன்.

ஆகவே அவ்வீரன் அவனை ஓய்சள ராஜா தான் தகுந்த பாதுகாப்பு அளிக்க முடியும் என அங்கு அனுப்பிவிட்டு, படை யெடுக்கும் சைன்யங்களுடன் சண்டையிட்டு இறந்தான். காம்ப்ளி ராஜ்யமும் மறைந்தது. படையெடுக்கும் சைன்யம் மேலும் சென்று ஹலேபீடை ஒரு பாகத்தில் வீணாக்கிவிட்டு, முன் கூறியபடி மேலும் தெற்கு நோக்கிச் சென்றது. ஜலாலுதீன் ஆசன் ஷா என்னும் தளகர்த்தன் மதுரையிலிருந்து கொண்டு முதலில் முகம்மது பின் துக்ளக் பேரில் ஆண்டு வந்தான்.

ஆனால் கி. பி. 1335-ல் தன் ராஜ்யம் ஸ்வதந்திரம் அடைந்து விட்டதாகக் கூறிக் கொண்டான். அந்த சமயம் வங்காளத்தில் ஆட்சிபுரியும் மன்னன் ஏற்கனவே முகம்மதின் தகப்பனார்

காலத்திலேயே அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்து, தற்போது முகம்மதுக்கு எதிராக கலகம் செய்ய ஆரம்பிக்கவே அவனை அடக்குவதற்கு முகம்மது வங்காளத்திற்குப் போயிருந்தான். இவ்வாறு வங்காள சுல்தானுடன் போரில் இறங்கியிருந்தது நல்ல வாய்ப்புள்ள தருணம் என்று அதைக் கை நழுவ விடாமல் மதுரை சுல்தானும் மத்திய அரசுக்கு எதிராக கலகம் செய்ய ஆரம்பித்தான்.

மதுரை மிக தூரத்தில் இருந்ததால் முகம்மது நேரிடையாக வந்து கலகத்தை அடக்க முடியாமல் இருந்தான்; மேலும் அவன் தன் தலை நகருக்கு அருகாமையிலுள்ள இடங்களில் காரியங்களைக் கவனிக்க வேண்டியயிருந்ததால் தெற்கு திசையை அவன் மறந்திருக்க வேண்டியிருந்தது. முகம்மதுக்கு தொல்லைகள் அதிகமாகவும் பலவிதமாகவும் ஏற்படவே அவன் தெற்கே எழும்பிய கிளர்ச்சியை அடக்க தானே செல்ல முடியாதலால், ஜலாலுதீனுடைய சுதந்திர ஆட்சி எதிர்ப்பு இல்லாமலிருந்தது.

**மதுரையில் முகம்மதிய சுல்தான் ஆட்சியைக் குறித்து ஓய்சனர்களின் கொள்கை :**

மதுரையில் சுல்தான் ஜலாலுதீன் ஆஸன்ஷாவின் கீழ் ஏற்பட்ட அரசு தென்னிந்தியாவில் முகம்மதிய ஆதிக்கம் விரிவடைய ஒரு காலவரம்பாய் அமைந்திருந்தது. முதலில் அவன் ராஜ பிரதிநிதியாக இருந்து பிறகு மதுரையில் ஒரு தனிப்பட்ட அரசனாக ஆனது இந்து மதத்திற்கு ராஜ நீதி. கலாசாரம் இவைகளில் தீங்கிழைக்கும் வகையில் அமைந்து பெரும் தீமையை விளைவித்திருக்கும். இந்நிலைமை அக்காலத்து இதர அரசுகளுக்கும் இவ்வாறே தோன்றியிருக்க வேண்டும்; முக்கியமாக அவ்வரசுகளுள் ஓரோன்று தங்களைச் சுற்றியுள்ள நாட்டைப்பற்றி பொறுப்பு கொண்டு மதம், கலாசாரங்கள் பழுதடைவதைப்பற்றி கவலை கொண்டு இப்புது எதிர்ப்பைப் பற்றி யோசிக்கலாயின.

கி. பி. 1335 சுமாருக்கு இந்து அரசுகளுள் கொஞ்சம் ஏறக் குறைய வலிமை வாய்ந்ததும், மதம், கலாச்சாரம் இவைகளைப் பற்றி கவலை கொண்டதுமாயுள்ள வல்லரசு ஓய்சன அரசு தான். ஏற்கனவே பாண்டிய சோழ அரசுகள் சீரழிந்துவிட்டன; வேறு எந்த அரசும் அவர்களில் ஒவ்வொன்றின் ஈடாகவோ இரண்டுக்கும் இருந்த பெருமையை உடைத்ததாகவோ இன்னும் தோற்றவில்லை. இதன் விளைவு அந்தக் காலத்தில் முகம்மதிய

அரசின் ஆதிக்கத்தைத் தடுத்து அதை ஒரு வரம்புக்குள் வைக்கத்தகுந்த திறமை இந்து அரசுகளுக்குள் ஒய்சன ராஜ்யம் ஒன்றிற்கே அமைந்திருந்தது.

ஆகவே இந்த காரியத்தில் மும்முறமாக ஈடுபடுவது என்பது ஒய்சன அரசன் வீர பல்லாலன் III என்பவனுடைய தனிப் பொறுப்பாயிற்று. ஆனால் அவன் நிலைமை மிக்க சங்கடமானது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவன் தானே டில்லியிலுள்ள கில்ஜி என்னும் முகம்மதிய அரசுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசன் என ஒப்புக் கொண்டான். கில்ஜிகளின் சாம்ராஜ்யத்திற்குப் பிறகு துக்ளக் வம்சம் டில்லியை ஆண்டது. ஆகவே இந்த வம்சத்தவர்கள் கில்ஜி வம்சத்தவர்களின் ராஜ்ய வாரிசு ஆவார்கள் எனக் கொள்வதில் தவறில்லை.

சிற்றரசர்களிடத்திருந்து கில்ஜி வம்சத்தவர்களுக்குக் கிடைத்த மரியாதைகளும் கிடைக்கும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆயின் எதிர்ப்பு காண்பிக்க ஒரு சிற்றரசன் கிளம்பிய உடன் முகம்மது துக்ளக்குக்கு இந்த பரஸ்பர உறவுகள் தளர்வடைந்து உபயோக மில்லாமல் போய்விட்டன. மதுரையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சுல்தானுடன் விசுவாச முறையை மேலும் கடைபிடிக்க வேண்டிய நிர்ப்பந்த மில்லாதவனாக ஆனான்.

துக்ளக்கும் தான் டில்லிக்கு எதிராகக் கிளம்பியதைத் தடுக்க முயற்சியெடுக்கவில்லை என்பதைக்கண்டு கொண்டான் அம்மாதிரியே வருங்காலத்திலும் நடவடிக்கை எடுக்க மாட்டான் என உணர்ந்தான். ஆயின் அவன் ராஜ்யத்தின் வட எல்லையில் தக்காணத்தில் காரியங்கள் வேகமாக நடை பெற்றுக் கொண்டிருந்தன. கிளர்ச்சிக்குப் பின் கிளர்ச்சியாக உண்டாகி ஒரு புதிய முகம்மதிய ராஜ்யம் உருவாகிக் கொண்டிருந்தது. இந்த நிலைமை கி. பி. 1335-ல் மிகத் தெளி வாகத் தெரியாவிட்டாலும் முறையே குஜராத், மால்வா பிரதேசங்களில் முகம்மதிய ராஜ்யங்கள் உருவான மாதிரியே தக்காணத்திலும் முகம்மதிய ராஜ்யம் உருவாகிக் கொண்டிருப்பதை சிலர் நன்கு உணர்ந்தார்கள்.

இவ்வாறு துக்ளக்கின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து தக்காணத்தில் முகம்மதிய ராஜ்யம் உருவாவது ஒரு பக்கம் மதுரையில் சிறியதாயினும் நல்ல சிற்றரசனின் தலைமையில் ஒரு முகம்மதிய அரசு நன்கு ஸ்தாபிக்கப்படுவது மற்றொரு பக்கம் ஏற்படுவதை கவனித்தால் ஒய்சனர்களின் நிலைமை

கவலைக்கிடமாயிருந்தது. துக்ளக் இச்சமயத்தில் தனது அரசுரிமையை உபயோகித்து ஒய்சனரிடமிருந்து விசுவாச பிரமாணம் கேட்பான் என்பது ஒரு பெரிய கவலைக்கிடமான விஷயமாய் இல்லாமல் இருப்பினும் மேற்கூறிய முகம்மதிய அரசுகள் உருவாவது நிச்சயமாக கவலைக்கிடமானது ஆகும்.

ஆனால் முகம்மதிய சிற்றரசர்களே டில்லிக்கு எதிராகக் கிளம்பும் பொழுது இந்து சிற்றரசர்களும் அவர்களைப் பின் பற்றுவதில் வியப்பில்லை. எவ்வாறுயினும், முகம்மதினுடைய சாம்ராஜ்யம் சீர்குலைந்த பொழுது எஞ்சியிருந்த இந்து ராஜ்யங்கள், பின்னர் டில்லியிலிருந்து ஆண்ட பேரரசர்களின் கீழ் நடக்க வேண்டிய நிர்பந்தமில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒய்சன மன்னன் என்ன செயல் முறை கடைபிடிப்பான் என்பது அவன் அத்தருணத்தை எடையிட்டு அதற்குத் தக்க முறையில் நடந்து கொள்ளுவதும் அவனுடைய வீர தீரங்களைப்பற்றியதும் ஆகும்.

அலாவுதீனிடம் கீழ்படிந்து தனக்குச்சாதகமான ஒப்பந்தம் கொண்டிருந்தும் கி. பி. 1327-ல் முகம்மது-பின்-துக்ளக்கினால் அனுப்பப்பட்ட சைன்யத்தால் படுதோல்வி அடைந்தான் அதன் காரணமாக அவனது தலைநகரம் அழிந்து அவனுக்குப் பல இன்னல்களும் விளைந்தன.

அலாவுதீன் தனது சேனைத் தலைவனிடம் இட்ட கட்டளையின் படி தன் ராஜ்யத்தை டில்லிக்கு வெகுதூரத்திலுள்ள இடங்களுக்கு விஸ்தரிக்க விருப்பமில்லை யென்றும் விந்தியமலைக்கு தெற்கில் உள்ள பிரதேசங்களைத் தன் ராஜ்யத்துடன் இணைக்க வேண்டாம் என்றும் கூறி அனுப்பினான். அதற்கு எதிராக முகம்மது தென் ராஜ்யங்களை ஜெயித்து தன் ராஜ்யத்துடன் இணைத்துவிடுவது தன் நோக்கம் என்பதை வெளிப்படையாகவே கூறினான்.

கி.பி.1327ல் ஏற்பட்ட ஆக்கிரமிப்பினால் தன் தேசத்திலேயே தனக்கு அமைதியிருக்காது என்பதை வீர பல்லாளன் நன்கு அறிந்து கொண்டான். இதை நோக்கம் வைத்துக் கொண்டே அவன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கலானான். கி. பி. 1328-லிருந்து அவன் திருவண்ணாமலையை தலைநகராக்கிக் கொண்டான். ஏற்கனவே தலைநகராயிருந்த ஹலேபிட் அல்லது பேலூர் உபயோகப்படாததால் மாத்திரம் இந்த ஏற்பாட்டை மேற்கொள்ளவில்லை. திருவண்ணாமலை ஒரு முக்கியமான மையஸ்தானமாக அமைந்திருந்தாலும்,

விரோதிகள் தென்படின் சமயோசிதமாக அங்கிருந்து வெகு சுலபமாகவும் சாதகமான சூழ்நிலையிலும் தன் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள சாதகமாயிருக்கும் என்னும் நோக்கத்தாலும் ஆகும்.

திருவண்ணாமலையின் ஸ்தான விசேக்ஷம் என்னவெனில், கீழ்ப்பாகமாக தெற்கு நோக்கிப் போகும் பாதையில் ஏறக்குறைய அமைந்திருப்பதாலும், அங்கிருந்து முகம்மதியர்களுடைய சலனங்களின் மேல் கண்காணிப்பு வைத்து அவர்கள் உள்ள டங்கியமத்தியபாதையை உபயோகித்து தெற்கு நோக்கி வரினும் அதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள சௌகரியமாக இருத்ததாலும் ஆகும். திருவண்ணாமலைக்குப் பின்பாகமும் அதற்கு வடக்கே அமைந்ததாகவும் இருக்கும் இடங்கள் ஏறக்குறைய அவனுடைய ஆதிக்கத்தில் இருந்தன.

மதுரையில் அரசு புரிந்து வந்த முகம்மதிய மன்னன் ஏற்கனவே தன் நாட்டின் வடக்கு எல்லையென மதித்து கண்ணனூரை கோட்டை கொத்தளங்களுடன் கட்டியமைத்துக் கொண்டான். ஆகவே இம்முகம்மதிய அரசனை எதிர்க்க வேண்டின், திருவண்ணாமலைக்கு வடக்கு பிரதேசத்தில் தன் மண்டலாதிபதிகளும் தன்னுடைய இதர முழு பலமும் தன் விருப்பம் படி கிடைக்கும்.

மேலும் இந்த பலத்தைக் கொண்டே வடக்கேயிருந்து மத்திய பாதை வழியாக இம்முகம்மதிய அரசனுடன் தொடர்பு கொள்ளுவதைத் தடுக்கவும் உபயோகப்படலாம். தற்சமயம் சிங்கண நாயகன் கீழ் செய்த ஏற்பாடுகளும், தெற்கு எல்லை பிரதேசங்களை அவனுடைய தகப்பனார் மாதவ தண்டநாயகன் தலைமையில் உறுதிப்படுத்தினதும் தெளிவுபடுத்தியது என்னவென்றால் மதுரையில் சுல்தான் தனி அரசு புரிய ஆரம்பித்த பின், என்னேரத்திலும் தென் எல்லையை அச்சுல்தான் படையெடுத்தால் அதைத் தடுக்கவே செய்த ஏற்பாடுகள் என்பதாகும்.

இந்நோக்கத்தைக் கொண்டே வீரபல்லாளன் திருவண்ணாமலைக்குச் சென்று அந்நகரையே பேலூர், ஹலே பீட்டை விட முக்கிய தலை நகராக ஆக்கிக் கொண்டான். கிழக்குத் தொடர்ச்சிமலையடிவாரத்திலிருந்து கடற்கரை வரையிலுள்ள நிலம் முகம்மதியர்களைத் தாக்கவும் அவர்கள் எதிர்ப்புகளைத் தடுக்கவும் மிக முக்கிய அரங்கமாக அமைந்திருந்தது. மேலும் இந்நிலம் தேசத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு போக்குவரத்துகளுக்கு சாதகமாக இருந்தது. இதற்குப்பிறகு

சுமார் ஏழுவருடகாலம் மதுரையிலுள்ள அரசு முகம்மது துக்ளக்கின் ஆதரவில் ஒரு பிரதிநிதித்வம் கொண்டிருந்த பொழுது அவன் மிக்க முன் ஜாக்கிரதையுடன் இருந்து தனது செயல்களை ரகசியமாகவும் எதிரிகளுக்கு சந்தேகம் தோன்ருத வகையிலும் செய்ய வேண்டியிருந்தது.

ஆனுல் மதுரை அரசு முகம்மதின் ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொண்டு தன்னை சுதந்திர மன்னன் எனக் கூறிக் கொண்ட பொழுதும், முகம்மது தனது இயற்கை வேகத்துடன் வந்து மதுரை அரசை மடக்கி புத்தி புகட்ட நடவடிக்கை எடுக்காதிருக்கவே இவன் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மதுரை சுல்தானை ஒரு சிறிய பகுதிக்குள் மடக்கி அவன் ஆட்சியை ஒடுக்கவோ அல்லது ஒழிக்கவோ வேண்டிய தக்க முயற்சிகளை மேற் கொண்டான்.

இது முழுவதும் முடியா விட்டால் அதை மிகச்சிறிய அரசாக்கிவிட முயற்சி கொண்டான். இதற்கு முதல் முயற்சியாக அவன் சோழ சாம்ராஜ்யத்தின் மேல் தன் அதிகாரத்தை செலுத்தலானுன்; அதன் பிறகு புதுக்கோட்டை ராஜ்யத்தின் வழியாகவும் ராமநாதபுரம் ஜில்லா வழியாகவும் தனது அதிகாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக பலப்படுத்திக் கொண்டு அதன் பலனுக முகம்மதிய சுல்தானை மதுரை—திருச்சினுப்பள்ளி பாதையிலும் கொள்ளிடத்திற்கு கொஞ்சம் வடக்கிலும் மாத்திரம் செயல்படும் வகையில் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

பல்லாளன் இந்த செயல்களை மிக்க வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தது தனது ராஜ்யத்தை முழுவதுமாக ஒழிக்கவே செய்யும் காரியங்கள் என மதுரை சுல்தானுக்கே நன்கு புரிந்தது. ஏனெனில் முகம்மதினுடைய உதவி தனக்கு தென் தேசத்தில் கிட்டாது என்பதனுலும் தக்காணத்தினுடைய நிலைமை வடக்கிருந்து வரும் உதவியைத் தடுக்க தகுந்த உறுதியைத் தருகிறது என்பதினுலும் இந்த எண்ணிக்கை நிறைவேற ஹேது இருந்தது.

இதையொட்டி தான் 'முகம்மதியசரித்திராசியர்கள் ஒய்சனர்கள் மதுரை சுல்தானுடைய ராஜ்யத்தை மதுரைக்குள் மாத்திரம் அடக்குவது எனக்காரியங்கள் செய்யலானுர்கள் எனக்குறை கூறுகின்றனர். ஆகவே சுமார் ஒரு வருடகாலம் முயற்சிசெய்து இக்காரியத்தை அனேகமாக வெற்றிதரும் வகையில் செயலாற்றினுன். அவன் சுமார் 1,25,000 துருப்புகள் கொண்ட ஒரு சைன்யத்தைத்திரட்டிக் கொண்டு திருச்சியில் போய் அமர்ந்தான்.

இதன் பயன் முகம்மதிய சைன்ய முகாமான கண்ணனூரை, சுல்தானுடைய தலைநகரான மதுரையிலிருந்து பிரித்து முகம்மதிய சைன்யத்தின் இரு பிரிவுகளையும் தோற்கடிப்பது, அதன் பயனாக தென்னிந்தியாவில் முகம்மதிய ஆதிக்கத்தை ஒழிப்பது என்ற முயற்சியில் ஈடுபட்டான். ஆயின், தென்னாட்டில் இந்து சமூகத்தின் துரதிர்ஷ்ட வசமாக அவன் வெற்றிக்கொடி நாட்டும் தருணத்தில் அவன் எதிரிகள் வசம் சிக்கிக்கொண்டான்.

அப்பொழுதும் அவன் மதுரையிலிருந்து வந்த முகம்மதியர்களின் ஆக்ரோஷமான எதிர்ப்பை தகர்த்தான். ஆயினும் ஒரு எதிர்ப்புக்குழு அவன் மேல் விழுந்து அவனைக் கொன்றது. அப்பொழுது அவனுக்கு 80 வயது என முகம்மதிய சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி ஒய்சள அரசு விரிவடைந்திருந்ததைத்தான் திருப்பதியிலிருக்கும் இரண்டு மூன்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. அவைகளில் ஒய்சள அதிகாரிகளும் சகோதரர்களுமான கேடய்ய தண்டநாயகனையும் சிங்கண தண்டநாயகனையும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள்தான் சேலம் ஜில்லாவில் தன்னாயகன் கோட்டையை தலைநகராகக் கொண்டு ஆண்ட வம்சத்தினரின் முதல்வர்கள். திருச்சியருகில் நடந்த சண்டையின் விபரீத விளைவின் பயனாக சாதாரணமாக இந்து சமயமே ஒரேயடியாக ஒழிந்திருக்க வேண்டியது. ஆயின் அச்சமயம் துக்ளக் சாம்ராஜ்யம் மிக்க குழப்பமான நிலையில் இருந்தது. முகம்மது துக்ளக் தன்னை எதிர்த்து நிற்கும் மாகாண பிரதிநிதிகளோடு சுமார் பத்து வருஷங்கள் ஓயாமலும் வெற்றியில் இமியேனும் நிச்சயம் இல்லாமலும் போர்புரிய வேண்டியிருந்தது.

கடைசியாக அவன் வெற்றி பெறாமலே உயிர் துறந்தான். இந்த இடைக்காலத்தில் தென்னிந்தியா தனக்குத்தானே ஆண்டுகொள்ள விட்டுவிடப்பட்டது. துக்ளக் தன் முழுபலத்துடன் இருந்த சமயத்தில் தக்காண சுல்தான்கள் அவனுடைய போக்கு வரத்துக்களைமிக்க உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்து.

தற்சமயமும் கி. பி. 1346-ல் ஒன்றாக ஐக்கியப் படுத்திக் கொண்ட இந்த சுல்தான்கள் எப்பொழுதும் துக்ளக்கின் நடவடிக்கைகளிலேயே நோட்டம் கொண்டிருந்தார்களாதலின் அவர்கள் அமைதியாக தென்திசை நோக்கி படையெடுக்க

வேண்டியிருந்தது. இது அக்காலத்தின் கோலம்! ஆகவே மேலும் வருகிற நிகழ்ச்சிகளில் ஒய்சன ராஜ பிரதிநிதிகளும் அதிகாரிகளும் இந்த சூழ்நிலையை நன்கு பயன் படுத்திக்கொண்டு வீரபல்லாளன் எடுத்துக்கொண்ட காரியத்தை பூர்த்தி செய்ய ஆரம்பித்தினர். இதன் பயன் தென்னுட்டில் ஓர் ஐக்கிய இந்து சாம்ராஜ்யம் நிறுவப்பட்டது இதுவே பிற்காலத்தில் விஜயநகர சாம்ராஜ்யமாக ஆயிற்று.

**ஒய்சன அரசின் புத்துயிர்ப்பும் அதன் விளைவாக விஜய நகர சாம் ராஜ்யம் தோன்றுதலும் :**

விஜயநகர சாம்ராஜ்யம் நிறுவனத்திற்குமுன் நடந்த சம்பவங்களைப் பார்த்தால் முகம்மதிய படையெடுப்புகளுக்குப் பிறகு ஒய்சன ராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் துளிர்த்து விரிவடைதலாயிற்று என்பது நன்கு விளங்கும். கி. பி. 1327-ல் முகம்மது துக்ளக் படையெடுப்புக்குப்பின் இந்த புத்துயிர்ப்பு கிடைத்தது நன்கு விளங்கும். துக்ளக்கின் தென்னுட்டு விஜயத்தின் போது அவன் நேராக திருச்சியையும் ஸ்ரீரங்கத்தையும் (முக்கியமாக ஸ்ரீரங்கத்தை) நோக்கி வந்தான். ஆகவே கிழக்குப் பகுதிகளிலுள்ள இடங்களை அவன் சும்மனே விட்டு விட்டான்.

இதனுல் திருப்பதி அவன் கைகளில் சிக்காமல் இருந்தது. தெற்கே அவன் படையெடுப்பின்போது நடந்த சம்பவங்களை நோக்கின் இது நன்கு விளங்கும். ஸ்ரீரங்கத்தில் கோவில் வரலாற்றைப்பற்றி விடாமல் குறிப்பிட்டிருக்கும் **கோவில் ஒழுகு** என்னும் நூலில் அந்த சமயம் என்ன நடந்தது என விரிவாகக் குறிக்கிறது.

ஒரு சமயம் ஸ்ரீரங்கவாசிகள் ஓர் பெரிய வருட உற்சவத்தை நடத்தினர். அவ்வமயம் ஸ்ரீரங்கநாதனுடைய விக்கிரகத்தை கொள்ளிடத்தின் நடுவில் எழுந்தருளப்பண்ணி அங்கு பெருமாளுக்கு நடத்த வேண்டிய அனேக சேவைகளில் ஈடு பட்டிருந்தனர். இவ்வுற்சவத்தின் நடுவில்தான் திடீரென எதிர்பார்க்காமல் கண்ணனூரிலிருந்து வரும் பாதையில் கொள்ளிடக்கரையோரமாக முகம்மது துக்ளக்கின் குதிரைப் படை தோன்றி படையெடுக்க ஆரம்பித்தது. அப்படை ஆற்றில் இறங்கி அங்கு கூடியிருக்கும் ஜனங்களுடன் கை கலக்கு முன் பெருமாளின் பக்கத்தில் இருந்த பக்தர்களில் சிலர் ஸ்ரீ ரங்கநாதரை எப்படியாவது காப்பாற்ற வேண்டியது என ஆர்வங் கொண்டு அதன் படியே பெருமாளை ஒரு பல்லக்கில் எழுந்தருளப்பண்ணி, அப்பல்லக்கை லோகாசாரியர் என்னும்

நடுத்தர வயது உள்ளவரும் வலிமை பொருந்தியவருமான பக்தர் நடமாட்டமில்லாத சந்துக்கள் வழியாக ஓட்ட ஓட்டமாய் தூக்கிக் கொண்டு புதுக்கோட்டை வழியாக தப்பித்துக் கொண்டு போய் விட்டார். திருக்கோட்டியூர் திருமாலிருஞ் சோலையில் கொஞ்சம் நாள் தங்கினர். அனேக மாக நடுப்பாதைகளை விட்டு விலகி நிற்காது ஏகினர்.

பின்னால் குதிரைப்படை சப்தம் வரும் பொழுதெல்லாம் மறைந்து கொண்டும் மற்ற நேரங்களில் வேகமாகவும் போய் விக்கிரஹத்தை ஜாக்கிரதையாக திருவாங்கூர் தேசத்திற்குள் சேர்த்துக் கொண்டனர். அங்கிருந்தும் மேலும் சென்று கள்ளிக் கோட்டையில் விக்கிரஹத்தைப் பத்திரமாக எழுந்தருளப்பண்ணி அங்கேயே கொஞ்சகாலம் தங்கியிருந்தனர். படையெடுக்கும் சைன்யங்களிடமிருந்து ஏற்பட்ட பீதி கொஞ்சம் குறைந்தவுடன் அவர்கள் விக்கிரஹத்தை ஓர் பத்திரமான இடத்தில் கொண்டுபோய் சேர்த்து விட்டால் அங்கு தங்குதடையின்றி கொஞ்சகாலம் இருந்து விட்டு நற்சமயம் வாய்த்த போது திரும்பவும் ஸ்ரீரங்கத்துக்கே எழுந் தருளப்பண்ணி அங்கே கோவிலில் பிரதிஷ்டை செய்துவிட வேண்டுமென்று எண்ணினர். அவர்கள் திருப்பதிக்குப் போய் விட்டால் அது பத்திரமான இடம் என்று நினைத்து கள்ளிக் கோட்டையை விட்டு நகர்ந்து மைசூரிலுள்ள தெருகணும்பி என்னும் ஊரில் கொஞ்ச காலம் சௌக்கியமாகத் தங்கி காலம் கழித்தனர். அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்டு நெடுஞ்சாலை வழியாக மைசூர் பீடபூமியிலிருந்து மதருஸ் மாகாணத்தில் இறங்கி, சித்தூர் ஜில்லாவிலுள்ள புங்கனூர் வரையில் வந்து சேர்ந்தனர்.

அங்கு போன பிறகு அங்கே முகம்மதிய துருப்புகள் இங்கு மங்கும் போய்க்கொண்டிருப்பதைக் கண்டனர். திகிலடைந்த அவர்கள் திருப்பதிக்குப் போக இயலாது எனக் கருதி பின் நோக்கி நடந்தனர். தெருகணும்பிக்கு அடுத்தபடியான சரணாலயம் மேலக்கோட்டை எனத் தோன்றியதால், விக்ரஹத்தை மேல்கோட்டை கோவிலுக்குள் மறைவாக எழுந்தருளப்பண்ணி சேவை செய்து வந்தனர். பாதைகள் போக்குவரத்துக்கு அனுகூலமானவுடன் விக்ரஹத்தை ரஹஸ்ய மாக திருப்பதிக்குக் கொண்டு போயினர். அங்கு ஜாக்கிரதை யாகப் பாதுகாக்க ஒரு அர்ச்சகரும் அவருடைய மைத்துனனும் அவருடைய குமாரனான ஒரு சிறிய பையனும் நியமிக்கப் பட்டிருந்தனர்.

திரும்பவும் முகம்மதிய துரும்புகளால் எதிர்ப்பு இருக்கக் கூடும் எனக் கேள்விப்பட்டு, அர்ச்சகர் தன்னையும், விக்கிரஹத்தையும் ஒருங்கே ஒரு கயிற்ருல் இணைத்து தனது மைத்துனனைத் தன்னை மலைச்சரிவில் மெதுவாகவிடச் சொன்ஞர் அச்சரிவு மேற்குப்' புறத்தில் உள்ளதாகவும் அடியில் ஒரு சமதரைப் பிரதேசத்தில் கொண்டு போய் நிறுத்துவதாகவும் இருந்தது.

அவ்விடம் சாதரணமாக மனுஷ சஞ்சாரமில்லாமல் இருந்தது. அங்கு இம் மூவருடைய சேவையை மேற்கொண்டு அங்கு அவ்விக்ரஹம் சிலகாலம் தங்கி இருந்தது. சில காலத்திற்குப் பிறகு அவ்வர்ச்சகர் இறந்தார்; அதற்குக் கொஞ்ச காலம் கழித்து அவருடைய மைத்துனனும் இறந்தார். அதற்குள் சிறிய பையனுக இறங்கியவன் இப்பொழுது வயது வந்த பெரிய மனிதனுக ஆனுன்.

ஒரு சமயம் ஒரு வேடுவன் யதேச்சையாக இந்த இடத்தைக் கண்டதும் இச்செய்தியை நாராயண வரத்திலிருக்கும் அப்பிரதேசத்து சிற்றரசனுக்குத் தெரியப்படுத்தினுன். இச்சிற்றரசர்கள்தான் தென்னிந்தியாவில் முகம்மதிய ராணுவ ஸ்தலங்களைக் குறைப்பதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்கள்.

மேலும் இவர்கள் தான் விஜயநகரந்திலிருந்த குமார கம்பணுவின் சைன்யத்தில் இருந்து கொண்டு விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள். மேலும் கோபணுர்ய என்னும் மந்திரியின் ஆதரவுடன் இவர்கள் பெருமாள் விக்கிரஹத்தை திரும்பவும் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் திரும்பவும் கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள். இக்கதையிலிருந்து அக்காலத்தில் திருப்பதியும் அதைச்சுற்றிலுமுள்ள இடங்களின் ஸ்திதியைப் பற்றியும் அவ்விடங்களின் அரசு நிலைமைகளைப் பற்றியும் தெளிவாகத் தெரிகிறது.

நாட்டில் பலவித கலவரங்களிருப்பினும் திருப்பதிதான் மிகவும் அமைதியான இடம் என்றும் தெருக்கணும்பியிலிருந்து மைசூர் வழியாக திருப்பதிக்கு செல்லலாம் என அவர்கள் திட்டமிட்டது அப்பிரதேசம் முகம்மதிய ஆக்கிரமப்பினுல் மிகவும் பாதிக்கப்படவில்லையென்றும், நெடுஞ்சாலைகள் அமைதிகுன்றியிருப்பினும் அவர்கள் அம்மாதிரி திட்டமிட்டது ஒரு மனுேதிடத்தை காண்பித்தது என்றும் தெரிந்து கொள்ளலாம்.

கி.பி. 1328-ல் ஏற்பட்ட முகம்மதிய ஆக்கிரமிப்பினுல் ஸ்ரீரங்க நாதனை வெளியே கொண்டுபோக வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆகவே தற்போதையநிலை அதற்குக் கொஞ்ச காலம் கழித்துத் தான் இருக்கவேண்டும் அக்காலத்தில் சிங்கணநாயகனுவது அவனுடைய தலைமுறையாவது ஆட்சி புரிந்து கொண்டு இருக்கவேண்டும். இவன் பதுடா என்னும் முஸ்லிம் ஆசிரியன் சொல்லுவதிலிருந்தும் திருப்பதியைச் சுற்றிய இடங்களும் மேற்கே தெருகனும்பி வரையிலும் அதற்கும் மேற்கேயுமுள்ள இடங்களும் இவர்களுடைய ஆட்சியிலிருந்தது எனத் தெரியவருகிறது.

ஆகவே முகம்மதிய ஆக்ரமிப்புக்குப் பிறகு இருந்த கலவரமான காலங்களில் திருப்பதி ஓர் அமைதியான இடமாக இருந்ததால் ஸ்ரீ ரங்கநாதனுடைய விக்ரஹத்துக்குக் கூட சரணுலயம் கொடுக்க ஹேதுவாயிருந்தது. இந்த காரணத்தினுலேயும் ஒரோர் சமயங்களில் பதுங்கிக் கொள்ள நல்ல இடமாயிருப்பதாலும் வீரபல்லாளன் திருவண்ணுமலையைத் தனக்குத் தலை நாராக்கிக் கொண்டான் என்னலாம்.

திருவண்ணுமலை ஓர் அமைதியானயிடம் என்பது மட்டுமன்றி அவசர காலங்களில் திருப்பதியை சரணுலயமாகக் கொள்ளஹேதுவாக இருந்தது; மேலும் மதுரை சுல்தானை எதிர்த்து தக்க நடவடிக்கைகள் எடுக்க ஒரு தக்க கேந்திரமாக இருந்தது. கி. பி. 1358-க்குப் பிறகே மதுரை சுல்தானுடைய நாணயம் சிலாவணியாகாமல் நின்றது அதே சமயம் விஜயநகர சாம்ராஜ்யம் நிலை நாட்டப் பெற்றது என்னலாம்.

கி. பி. 1369-73-ல் ஸ்ரீரங்க நாதனை ஸ்ரீரங்கத்தில் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டது எனக் கோவில் சாஸனம் கூறுவதற்கு விஜய நகர சாம்ராஜ்யம் நிறுவப்பட்டது. அனுகூலமான ஓர் இடைச்சம்பவம் என்னலாம். தலைநகரை ஸ்தாபித்த தேதியைத் தவிர மேற்கூறிய 1369-73-ம் வருடங்களே விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த வருடம் என நன்கு கூறலாம்.

குமார கம்பணு வெற்றிகரமாக நடத்திய போருக்குப்பின் மதுரையில் தலை மட்டமாக்கப்பட்ட கோயிலை புதுப்பித்தான்; அதே சமயம் ஸ்ரீரங்கம் பெருங்கோவிலை புனருத்தாரணம் செய்தது தான் எடுத்துக் கொண்ட சபதத்தை வெற்றிகரமாக

பூர்த்தி செய்ததற்கு ஓர் அறிகுறியாம். அதன் விளைவாக விஜய நகர சாம்ராஜ்யத்தை நிறுவினதாக ஆகும்.

திருப்பதியில் நாம் காணும் சாஸனங்கள் நம்மைக்கிட்டத் தட்ட இந்தத் தேதிக்கே கொண்டு போய் சேர்க்கின்றன. அதன்படி முதன் முதலாக காணப்படும் விஜய நகர அரசர்களும் அதிகாரிகளும் புக்கராயனைத் தலைமையாகக் கொண்டிருக்கின்றன.

மேலும் அவன் பிள்ளை குமார கம்பணு, முல பகலில் ராஜ பிரதிநியாக இருந்த மகாராயமங்கு, சால்வமங்கு என்னும் நாராயணவரத்தைச் சேர்ந்த சாளுவ வம்சத்தின் முதற் பெரும் பெயர்களில் இவர்கள் பெயர்களும் காணப்படுகின்றன. புக்கராயன் அரசனுக இருந்தான். குமார கம்பணு சில படையெழுச்சிகளையெடுத்து பாலார் நதியோர நாடுகளுக்கு மன்னனுன சம்புவராயர்களைத் தோற்கடித்து தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டதுமல்லாமல் மதுரை சுல்தானையும் தோற்கடித்தான்.

இந்தத் தென்னிந்தியப்போரில் சாளுவ பங்கு தனிப்பங்கு பெற்று வெற்றி வாகை சூட்டிக் கொண்டான். நாம் இப்பொழுது விஜய நகர சாம்ராஜயம் ஏற்பட்ட முதல் நூறு வருடங்களில் காணப்படும் திருப்பதி சாஸனங்களைக் காண்போம்.

முதலிலிருந்தே திருப்பதியும் அதைச்சுற்றியுள்ள பிரதேசங்களும் விஜயநகர ராஜ்யத்துடன் சேருகிறது. விஜயநகரத்து சாஸனங்களைப்பற்றி கவனிக்குமுன் இச்சாஸனங்கள் சோழர்களுடையதும் இதரவம்சங்களுடையதுமான சாஸனங்களிலிருந்து எவ்வகையில் மாறுபட்டிருக்கின்றன என்பதை நன்கு கவனிக்க வேண்டும். முதன் முதலாக கவனிக்க வேண்டியது. இச்சாஸனங்களில் தேதிக்குறிப்புகள் முந்தையசாஸனங்களில் குறிப்பிட்டதுபோல் அரசனுடைய ஆட்சி வருடத்தைக் காண்பிப்பதில்லை. இவை சக வருடங்களில் குறிக்கப்பட்டு தேதி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதன்படி தேதிக்குறிப்பு சரியாகவும் சந்தேகத்து இடம் கொடாமலும் இருப்பதுடன் நடைமுறையில் சுலபமாகவும் இருக்கிறது. ஆனுல் இவற்றில் ஒரு குறை இருக்கிறது. முன் சாஸனங்களில் பிரஸஸ்தி அல்லது மெய்க்கீர்த்தி என்னும் பகுதியில் வரலாற்றுச் செய்திகள் காணப்படும் அவை இப்பொழுது கிடைக்கவில்லை. சரியான தேதி கொடுப்பதின்

மற்ெருரு குறையாவது சாதாரணமாக அரசன் சாஸனத் திலிடப்பட்டிருக்டிம் குறிப்பிற்கு நேரிடையாக சம்பந்தப் பட்டிருந்தாலொழிய அவன் யெயர் கொடுக்கப்படுவதில்லை.

ஆகவே அரசனே, அரசனுக்குச் சம்பந்தமானவர்களோ நன்கொடை கொடுத்தாலொழிய இச்சாஸனங்கள் தனிப்பட்ட முறையில் பொறிக்கப்பட்டவையாகும். இத்தடைகளை மனதில் வைத்துக்கெகண்டு பார்த்தால் விஜயநகர சரித்திரத்தின் முதல் நூற்றுண்டில் திருப்பதியில் அநேக சாஸனங்கள் காணப் படுகின்றன.

இவை முதல் வால்யூமில் நெ. 178-லிருந்து 236 வரையிலும் இரண்டாவது வால்யூமில் சிறு பான்மையானவும் சாஸனங்கள் காணப்படுகின்றன. இதில் முதலாவதாக நெ. 178-ல் தேதி ஒன்றும் காணப்படவில்லை அதில் புக்கராயனின் பெயர் காணப் பட்டு மலைக்கோவிலில் தினந்தோறும் அன்ன நைவேத்தியம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. அனேக மாக இது புக்கன் I ஐக்குறிக்கும், முன்னமே கூறியபடி விஜய நகரை ஸ்தாபிப்பது பற்றி கிரமமாகக் கூறுவது கி. பி. 1336-ம் வருஷமாகும்.

இதே தேதியில் தான் விஜய நகரை வித்யா நகரம் என்னும் பெயருடன் ஸ்தாபித்தாகும். ஒரு விதத்தில் பார்த்தால் இந்த தேதியே விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்ததைக் குறிக்கும். ஆனல் சாம்ராஜ்யத்தை சரியாக ஸ்தாபித்தது கொஞ்ச காலத்திற்குப் பிறகு தான். இது சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ஹரி ஹரன் IIனுடைய ஆட்சியின் முதல் சில ஆண்டுகளில் நடந்தது என்னலாம்.

இதை முன்னிட்டு நடந்த நடவடிக்கைகளும் தென் தேசத்தில் ஒரு சாம்ராஜ்யம் நிலைநிறுத்தியதும் சுமார் கி. பி. 1371-ல் நடந்தது எனக் கூறினுல் தகும். இவ்வருடம் தான் ஸ்ரீரங்கநாதனை ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். ஆகவே அத்தருணம் விஜய நகரின் முதலரசர்கள் தேசத்தை தங்கள் ஆட்சிக்குள் உள்படுத்தி முகம்மதிய ஆட்சியின் கலப் பில்லாத ஓர் இந்து தென் இந்தியாவை நிறுவனம் செய்து தங்கள் பலத்தை அறிந்து கொண்டதற்கு ஓர் அடையாளம் என்னவாம்.

ஆனல் கி. பி. 1346-லேயே விஜய நகர சகோதரர்கள் ஹரி ஹரன் I. புக்கன் I இவர்களுடைய கல்வெட்டுகளை கிழக்கே நெல்லூர் ஜில்லாவில் உதயகிரியில் காண்கிறோம்; ஆகவே

நமக்கு கவனிக்க வேண்டிய பிரதேசம் ஏற்கனவே இச் சாம்ராஜ்யத்தில் சேர்ந்துவிட்டது எனக்கொள்ளவேண்டியிருக்கிறது. மேலும் அவர்கள் இராஜ்ஜியம் ஒரு பக்கத்தில் பெனுகொண்டாவிலும் அதற்குக்கிழக்கில் அனந்தபூர் ஜில்லாவிலும் மற்றொரு பக்கத்தில் சித்தூரை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் மூல் பாகல் வரையிலும் பரவியிருந்தது.

ஆகவே திருப்பதியைச் சுற்றிலுமுள்ள பிரதேசம் ஒய்சன அரசர்களிடமிருந்து நேராக விஜயநகர அரசர்களின் ஆட்சிக்குட்பட்டு மாறியது என்னலாம்.

**ஆதிசாஸனங்கள் புக்கன், சாளுவ மங்கு, குமார கம்பண, ஹரிஹரன் II இவர்களைக் குறிக்கிறது.**

சாஸனங்கள் 178, 180 இரண்டும் ஒரே விஷயத்தைக் குறிப்பிடுகிறது, ஆனுல் முதலாவது தெலுங்கிலும் அடுத்தது தமிழிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தெலுங்கில் ஜுலை 6, 1359–க்குச் சரியான சகவருஷம் 1281–ஐக் குறித்து அப்பொழுது மஹாமண்டலேஸ்வர மங்கி தேவராஜா செய்த ஒரு சேவையைக் குறிக்கிறது.

இதில் கொடுத்திருக்கும் பின்னப்பட்ட பிருதிலிருந்து இது சாளுவ அரசனைத் தான் கூறுகிறது எனக்கொள்ளல் வேண்டும். குமாரகம்பண தெற்கில் படையெடுத்தபொழுது இவன் அப்போர்களில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டு நல்லவீர தீரச்செயல்களைச் செய்து அதன் பயனுக தென்னுடு முழுவதையும் விஜயநகரில் சேர்க்கக் காரணமாயிருந்தான். இந்த சாளுவ வம்சத்தைப்பற்றி விரிவாக மேலே பார்க்கப் போகிருேம். மேலும் இந்த சாளுவ அரசன் ஆதியில் முதல் முதலாகப் போரில் புகழடைந்தான். அவன் திருப்பதி கோவிலுக்குச் செய்த சேவைகளில் ஒன்று கர்ப்ப கிரஹத்தை தங்கத்தால் மூடி மேலே தங்கத்தால் செய்த ஒரு கலசத்தையும் வைத்தான்.

தமிழ் சாஸனத்தில் கர்ப்ப கிரஹத்தை தங்கத்தால் மூடினதை "பொன்மேஞ்சு" எனக் கூறப்பட்டிருக்கிறது. தமிழில் இதற்குச் சரியான வார்த்தை "பொன்வேய்ந்து" என்றும் அதுதிரிந்து "பொன்மேய்ந்து" எனவும் வரும். ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் இது மாதிரி ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் செய்த சேவையைப் "பொன்மேய்ந்து" எனக்கூறப்பட்டிருக்கிறது. இவனுக்குக் கொடுக்கப்பட்ட பிருதுகளில் ஒன்று

கன்னடத்தில் "மீஸரகண்டா" என்று. இதை விரிவாக்கினால் "மேதினீமீஸரகண்டா" என்றுவரும். இதன் பொருள் உலகத்தில் மீசையுடன் உள்ளவர்களில் மனிதன் என்று ஆகும். அதாவது "மனிதருள் மாணிக்கம்" என்று பொருள் ஆகும்.

இந்த பிருது சளுவர்களுக்கு ஒரு சிறப்பான பிருதாக இருந்தது. இருப்பினும் வேறு சில அதிகாரிகளும் வம்சத்தவர் களும் இப்பெயரை சூட்டிக் கொண்டு திகழ்ந்தனர். நெ. 181 ஸ்ரீவீரகுமார கம்பண்ண உடையாரைப்பற்றி அவனுக்குரித் தான பல பிருதுகளுடன் குறிக்கிறது. இந்தச் சாஸனத்தில் எழுதியிருப்பது கோவிலில் அணையா விளக்கு ஒன்று எரிய 28 பசுக்களும் ஒரு மாடும் நன்கொடை கொடுத்ததைக் குறிக் கிறது. இந்நன்கொடையைக் கொடுத்தவர் கம்பண்ண உடை யாரின் கீழ் **பேக்கடை** என்னும் ஸ்தானத்தை வஹித்த ஒரு அதிகாரியாகும் எனக்கூறப்பட்டிருக்கிறது.

இதற்குச் சமமான கன்னட வார்த்தை **பேர்கடை** அதாவது ஓர் உயர் தர அதிகாரி தமிழில் **பெரும் தரம்** என்பதற்கு சமமான அதிகாரி என்னலாம். குமார கம்பண்ணவுக்குக் கொடுக்கப் பட்ட பிருதுகள் திருப்பதி பிராந்தியத்தில்கூட கன்னடத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்பிருதுக்களாவன :—

மஹாமண்டலேஸ்வர, ஹரிராய (அரிராய) **விபாடகண்ட** என்னும் வார்த்தையுடன் முடியும் ஒரு பிருதில் முன்பாகம் விடப்பட்டிருப்பதால் இதை வேறு சாஸனங்களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும், (அ—து) **பாஷகே தப்புவ ராயர கண்ட**. வேறொரு விதமாகப் பார்த்தால் **மேதினி மிசர கண்ட** எனச் சொல்லலாமோவெனில் இது குமார கம்பணவுக்கும் சரி இதர விஜயநகர அரசர்களுக்கும் சரி சேர்க்கப்படுவதில்லை.

நெ. 182 இதனுடைய தொடர்ச்சியேயாகும்; ஆனால் அதில் ஒரு குறிப்பு உள்ளது. கீலக வருடம் எனக்கொடுக்கப் பட்டிருப்பது சகஹு 1290-ச் சரியான கி. பி. 1368 ஆகும். நெ. 183 மிக்க சிதலித்துப் போய் இருந்தாலும் சில அம்சங்கள் கவனிக்கத்தக்கன. அதில் ஒரு சம்புகுல சக்ரவர்த்தி திருமல்லி நாதன் சம்புவராயப் பெருமாள் என்ற பெயர் வருகிறது. அவன் கோவிலுக்குச் சில நன்கொடைகள் கொடுத்தான். திருப்பதியில் சம்புவராயனுடைய சாஸனம் இருப்பது கவனிக்கத் தக்கது. ஏனெனில் இந்த சம்புவராயர்கள் முதலில் திருவல்லத் திலும் பிறகு வேலூரை அடுத்த விரிஞ்சி புரத்திலும் தலை நகரைக் கொண்டு பாலார் ஆற்றங்கரை பிரதேசங்களை ஆண்டு

வந்தனர். இவர்கள் விரிஞ்சி புரத்திலிருந்து ஆண்டு வந்த பொழுது தான் குமார கம்பணு அவர்களைத் தோற்கடித்து அவர்களை விஜயநகர சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வந்தான். ஆனால் இந்த சாஸனத்தில் தேதி ஒன்றும் சொல்ல முடியவில்லை ; இந்த சாஸனம் அவர்களது எந்த ஆட்சி ஆண்டைச் சார்ந்தது என்று சொல்லவும் இயலவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. அவர்கள் ஆட்சி செலுத்திய நன்னாளில் ஒரு சமயம் திருப்பதியையும் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்திருந்தார்கள் என்பது. நெ. 184 சக வருஷம் 1301-க்குச் சரியான கி. பி. 1380–க்கு உரியது. இது ஒரு தனிப்பட்டவர் சாஸனம். ஏனெனில் அதில் வெறும் நன்கொடை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி சில உற்சவங்களில் பெருமாளும் நாச்சிமார்களும் இரண்டாவது நாளன்று அழகப் பிரான் தோட்டத்திற்குப் போகும்பொழுது அமுது செய் விக்கும் பொருட்டு திட்டம் செய்த பிரஸாதம் கூறப்பட்டு இருக்கிறது.

மேலும் இதில் கூறியபடி சுவாமி புஷ்கரணி திருக்குளத்தின் மேற்கில் இருக்கும் ஸ்ரீவராஹ நாயனருக்கு தனியே பிரஸாதம் அமுது செய்ய இதில் கூறப்பட்டு இருக்கிறது. 450 தங்க நாணயங்களை அழகப்பிரானரின் பிள்ளை வைஷ்ணவ களிகன்றி தாஸன் இந்த சேவைக்குக் கட்டினன். இந்த சேவைக்கு வேண்டிய செலவுகளை இந்த பணத்தின் வட்டியிலிருந்து செய்ய வேண்டியது என்று சொல்ல அதை ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

இந்த சேவையைப் பற்றின விவரங்களை கோவில் கரணம் திருநின்றவூர் உடையான் என்பவர் ஒரு சாஸனத்தில் எழுதி வைத்தார். இதற்குப் பின்வரும் பல சாஸனங்களில் இந்த கர்ணத்தின் பெயர் வருகிறது. அவர் தான் கோவில் சாஸனங்கள் அனைத்தும் தக்கமுறையில் எழுதி திருப்பதி யிலிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் முன்னிலை வைத்து அவர்கள் நியமனம் பெறவேண்டும். இந்த நன்கொடை கொடுத்தவரின் பிருதுகளில் ஒன்று திருமங்கை ஆழ்வார் என்றும் அவர் திருப்பதியிலுள்ள வைஷ்ணவர்களுக்குத் தலைவர் என்றும் தெரி கிறது.

**ஹரிஹரன் ஆட்சியில் இதர சாஸனங்கள் :**

அடுத்த நெ. 185 ஆகும். இது கோவிலின் வரதராஜ ஸ்வாமி சன்னதிக்கு வடக்குச் சுவரில் இருக்கிறது. இது எழுதப்

பட்ட வருடத்தின் பெயரைக் காட்டுகிறது. அதில் கொடுத்திருக்கும் விபரங்களைக் கொண்டும் இதர சந்தர்ப்பங்களைக் கொண்டும் பார்த்தால் இந்தத் தேதி ஜனவரி 18, 1388 ஆகும்.

அதில் முல்லை திருவேங்கட ஜீயர் என்றும் மடாதிபதி கோவில் கஜானுவில் 100 தங்க நாணயங்கள் செலுத்தினதைக் கூறுகிறது. இதிலிருந்து வரும் வட்டிப் பணத்தை வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட உற்சவ தினத்தன்று அன்னம், பிரஸாதங்கள் இவைகளாக பெருமாளுக்கு நைவேத்தியம் செய்ய வேண்டியது என்றும், இது ஹரிஹரராயர் என்னும் ஹரிஹர II-ன் பெயரில் நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. நன்கொடை கொடுத்தவரின் பெயர் கொடுக்கப் படவில்லை.

ஆனுல் இந்த நன்கொடை கோவிலை நிர்வாகம் செய்யும் ஒரு சன்னியாசியிடம் ஒப்படைக்கப்பட்டது. முன் கூறிய திருநின்றவூர் உடையான் இதைச் சாஸனத்தின் வடிவாக எழுதினுன். நெ. 186-ம் இதே விஷயத்தை மேலும் கூறுகிறது. நெ. 187, சக வருஷம் 1312–க்குச் சரியான கி. பி. 1390–ஐக் குறிக்கிறது. இது ஸ்தானத்தார் (ஊரில் உள்ளவர்)களுக்கும் அரிசாணுலயம் நந்தவனத்தை மேல் பார்வையிடும் முல்லை திருவேங்கட ஜீயருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்.

இதன்படி மார்கழி மாதம் முழுவதும் பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் திருப்பாவை பாடி சேவிக்குப் பொழுது பொங்கல் தளிகை பண்ணி நைவேத்தியம் பண்ண கட்டளை. மேலும் இதன்படி மாத நடுவில் பத்து நாட்களுக்கும் மாதத்தின் இறுதி நாளன்றும் மேல் திருப்பதியில் பெருமாளுக்கு பொங்கல் தளிகை அமுது செய்வித்து விநியோகம் பண்ணுவதென்றும் அதே மாதிரிகீழ் திருப்பதியில் கோவிந்த ராஜப் பெருமாளுக்கும் செய்வதென்றும் கட்டளை.

இதற்காக 1200 தங்க நாணயங்கள் கட்டப்பட்டு அதன் வரும்படியிலிருந்து மேற்படி சேவைகள் செய்ய வேண்டிய விவரங்களைக்குறிப்பிட்டு, திருவேங்கடஜீயர் காலத்திற்குப் பிறகு அவருக்கடுத்த ஜீயர் மேற்பார்வையில் இந்த கைங்கரியம் நடக்க வேண்டும் என்றும் அதற்குரிய உவமைகளை அவர் அனுபவிக்கவேண்டுமென்றும் சுவையான விஷயத்தையும் கடைசியாகக் குறிப்பிடுகிறது. இதன்படி அடுத்தவர் அவரைப் போலவே ஒரு ஏகாங்கியாக இருக்க வேண்டுமென்று நிபந்தனை. நெ. 188 ஒரு அரை குறையான சாஸனம்.

அதில் காணப்படுவதும் ஒரு தளிகையை விநியோகம் பண்ணுவதைப்பற்றி மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் கூறப்பட்ட சாஸனங்கள் யாவும் திருமலைக் கோயிலில் காணப்படும் சாஸனங்கள் ஆகும். நெ. 189 உடன் நாம் கோவிந்தராஜர் கோவிலுக்கு வருகிறோம். அது அந்தக் கோவில் பார்த்தசாரதி ஸ்வாமி சன்னதியின் தென் சுவரில் காணப்படுகிறது. நெ. 187-ல் கூறப்பட்ட மேல் திருப்பதி, கீழ் திருப்பதி இரண்டுக்கும் சேர்ந்து கொடுக்கப்பட்ட நன்கொடையைப் பற்றியே இங்கும் கூறுகிறது. நெ. 190 மலைக்கோவிலில் இருக்கிறது. இது சகவருஷம் 1314-க்குச்சரியான பிப்ரவரி 25, 1393 ஐக்குறிக்கிறது. இதுவும் ஸ்தானத்தாருக்கும் ஜீயருக்கும் முன் கூறியபடி ஏற்பட்ட ஒப்பந்தம். அதன் படி வருடம் முழுவதும் உற்சவங்களுக்கு கடைசி நாளுக்கு மறுநாள் சில சேவைகள் செய்ய உடன்பாடு.

இதற்கு கஜானாவில் 600 தங்க நாணயங்கள் செலுத்தப் பட்டு அதன் வரும்படியிலிருந்து மேற்கூறிய சேவை செய்யப் படவேண்டுமென்று கட்டளை. அதே கணக்கர் இந்த ஒப்பந் தத்தை ஒரு சாஸனமாக எழுதிவைத்தார். நெ. 191 என்பது திருமலையிலிருந்து சந்திரகிரிக்குப் போகும் வழியில் உள்ள ஒரு கோவிலின் வெளிப்புறத்தில் இருக்கிறது. இது சக வருஷம் 1326-க்குச் சரியான டிஸம்பர் 18, 1404 ஐக்குறிக்கிறது. இது ஸ்தானத்தாருக்கும் ஒரு கிரி தேவப்பாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். இந்த கிரி தேவப்பா ஆத்ரேய கோத்ரம் சாயண்ணாவின் குமாரன் சாந்தப்ப நாகப்பண்ணாவின் இளைய சகோதரன். அவனுடைய கோத்திரத்திலிருந்து சாயண்ணா என்பவன் ஆளும் வம்சத்தைச் சேர்ந்தவன் எனத் தெரிகிறது.

ஏனெனில் ஆளும் வம்சத்தவர் கோத்ரம் ஆத்ரேயகோத்ரம் தான். இதன்படி கோவிலுக்குக் கொஞ்சம் தொலைவிலுள்ள ஒரு நந்தவனத்தில் நடக்கும் ஒரு உற்சவத்தின் 7-வது நாள் உற்சவத் தன்று செய்யவேண்டிய சேவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. இது இருக்கும் இடத்தை நோக்கின் இது கீழ்திருப்பதி யின் அருகில் இருக்கவேண்டும் எனத் தெரிகிறது.

**தேவராயன் II-ம் திருப்பதியில் வேதபாராயணம் செய்ய ஏற்பாடும் :**

நெ. 192 மலைக் கோவிலில் உள்ள ஒரு முக்கிய சாஸனம் இது சக வருஷம் 1351—க்குச் சரியான டிசம்பர் 5, 1429-ம் வருடம் ஆகும். விஜயநகர சாம்ராஜ்யம் சக்கரவர்த்தியான தேவராயன் II என்பவனுடைய நன்கொடை ஆகும். அதன்படி

சில கிராமங்களிலிருந்து ஏற்கனவே கோவிலுக்கென்று எழுதி வைத்த நிலங்களையும் மேலும் சில நிலங்களையும் சேர்த்து பெருமாளுக்கென்று எழுதி வைக்கப்பட்டது.

இந்த நிலங்களிலிருந்தோ கிராமங்களிலிருந்தோ வரும் வருவாயை (இவை சந்திரகிரி கஜானுவைச் சார்ந்தவை) வைத்துக் கொண்டு அரசனின் பெயரால் சில உற்சவங்கள் மற்றும் சில நாட்களில் சில தளிகைகள் செய்து பெருமாளுக்கு சமர்ப்பிக்க வேண்டியது. இந்த சாஸனம் சில இடங்களில் சிதறிப்போயிருப்பதால் அதன் முழு அர்த்தம் விளங்க வில்லை. சந்திரகிரி கஜானுவுக்கு சில கிராமங்களிலிருந்து நிலவரி கட்டவேண்டும் எனக்கூறப்பட்டிருக்கிறது. இந்த கிராமங்கள் தான் இப்பொழுது கோவிலுக்கென்று தானம் செய்யப்பட்டு அவைகளிலிருந்து வரும் வரும்படியை வைத்துக் கொண்டு தான் இந்த கைங்கர்யம் செய்ய வேண்டியது. இளமாண்டையா என்னும் கிராமம் இதில் காண்கிறது நெ. 193 என்பது சக வருஷம் 1352-க்குச் சரியான ஜூலை 1, 1430-க்குச் சார்ந்தது.

இது திருப்பதி கோவிலில் ஒரு சம்ஸ்கிருத ஸ்லோகமாக உள்ளது. இதில் பிஸ்ஸண்ண தேவராயன் மகன் இளவரசன் ஸ்ரீகிரியால் வழங்கப்பட்ட ஒரு **தங்கப்பட்டா** (முகத்தில் அணியும் ஓர் தகடு)வைக் குறிக்கிறது. அடுத்த நெ. 194–ம் மலைக்கோவிலிலிருந்து வருகிறது. இது சகவருஷம் 1330–க்குச் சரியான மார்ச்சு 13, 1409-ஐக் குறித்து ஸ்தானத்தாருக்கும் கோபினுதய்யாவின் சிஷ்யன் மல்லண்ணு அல்லது மாதவ தாஸனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்.

இதன்படி கோவிலுக்கு ஒரு தளிகையும் ஓர் அணையா விளக்கு எரிவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சாஸனத்தில் ஸ்வாரஸ்யமான பாகம், இந்நன்கொடை கொடுத்தவர் தன் சொந்தச் செலவிலேயே ஆற்றிலிருந்து கால் வாய் எடுத்து தண்ணீரை அவிலாலி கிராமத்திற் கருகிலுள்ள ஏரியில் கொண்டு விட்டார். இதன் பயனாக ஏரியின் கீழேயுள்ள நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வந்தார். இதில் இதுவரை சாகுபடி செய்யாத 5,000 குழிநிலங்களை சீர்திருத்தி அவன் சொந்த செலவில் சாகுபடிக்குத் தகுதியுள்ளதாக ஆக்க வேண்டும். இதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு தளிகைக்கு வேண்டிய செலவுகளைச் செய்ய வேண்டியது.

விளக்கிற்காகத் தனியாக 82 பசுக்கள் (கன்றுகள் உள்பட) தானம் செய்தான். கால்வாயை சீர்திருத்தம் செய்வது, ஏரியை சாகுபடிக்குத் தக்கதாக செய்து கொள்வது, இதுவரை சாகுபடி செய்யாத நிலங்களைச் சீர்திருத்துவது இவை யாவும் தானம் கொடுத்தவர் தன் சொந்த செலவில் செய்து பிறகு கோவிலுக்குச் சேவைகளுக்காகக் கொடுத்து விட்டார். நெ. 195, மேலேயுள்ள விஷயத்தையே, விவரங்கள் இல்லாமல் ஒரு சம்ஸ்கிருதஸ்லோகத்தில் சொல்லுகிறது. இங்கு மல்லண்ணுவை **அமாத்ய சேகர** பிரதான மந்திரி எனக்கூறப் பட்டிருக்கிறது. நெ. 196, சகம் 1339-க்குச் சரியான கி. பி. ஆகஸ்ட் 25, 1417 ஆகும். அதே சந்திரகிரி மல்லண்ணு கோவிலில் ஒரு மண்டபத்தை அஸ்திவாரத்திலிருந்து உச்சிவரை பழுது பார்த்தான் என்கிறது.

நெ. 193, சகம் 1366-க்குச் சரியான அக்டோபர் 2, 1444 ஆகும். இது ஸ்தானத்தாருக்கும் சந்திரகிரி தேவராசன் புத்திரன் மல்லாண்டையாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். முன் நெ. 193, 195-ல் கூறியபடி இதுவும் தளிகை பண்ணி பெருமாளுக்கு அமுது செய்வது என்பதைப் பற்றியாகும். இதற்குச் செய்முறையும் முன் போலவே ஒரு வாய்க்கால் வெட்டி வரும் தண்ணீரைக் கொண்டு சில நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்து அதன் வருவாய் மூலம் இந்த சேவையைச் செய்வது. நெ. 198, கர்ப்ப கிரஹத்திற்கு மேலிருக்கும் **ஆனந்த விமானம்** கோபுரத்தைப் பழுது பார்த்ததைக் குறிக்கிறது.

இது கோபி நாதய்யாவின் சீடன் மாதவ தாசனால் செய்யப் பட்டது. இந்த கோபிநாதய்யா என்பவர் விஜயநகரத்தை சளுவர்கள் ஆண்டபொழுது நாட்டை ஆட்சிபுரியும் பணியைச் செய்த கோபனார்யாவோ என சம்சயம் தட்டுகிறது. இதைப் பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாவிட்டாலும் இது உண்மை யென நம்ப இடம் இருக்கிறது. அடுத்தபடியாக நெ. 199-லிருந்து நெ. 202 வரை உள்ளவை திருப்பதி கோவிலில் இருக்கின்றன.

இவையாவும் கோவிலில் வேத பாராயணம் பண்ண ஏற்பாடுகளைப் பற்றிய ஒரே விஷயத்தைப் பற்றிக் கூறுகிறது. இவை யாவும் சகவருஷம் 1355-க்குச் சரியான நவம்பர் 22, 1433-ஐக் குறிக்கிறது. இதில் 55ல் உள்ள முதல் 5 முதல் நெ. 199-ல் மறைந்து விட்டது. இதில் சுவாரஸ்யமான விஷயம் யாதெனில் கோவிலில் குறிப்பிட்ட நேரங்களிலும் உற்சவ காலங்களில் பெருமாளை ஊர்வலம் கொண்டு வரும்பொழுதும்

சில பிராமணர்களால் வேத பாராயணம் செய்ய ஏற்பாடு பண்ணியதைக் குறிக்கிறது.

இந்த வேத பாராயணம் பண்ணும் ஏற்பாடு அரசன் தேவராயனுடைய பெயரால் பண்ணப்பட்டு பின் கூறப்பட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணர் முக்கியஸ்தரான திரு கலி கண்றிதாஸர் புத்திரன் அழகப் பிரானுர் தேவண்ண உடையாருக்கு பின்வருமாறு விண்ணப்பம் செய்து கொண்டார்.

திருவேங்கடமுடையானுடைய மஹிமைக் கேற்ப சகல விதமான அம்சங்களும் நிறையப் பெற்றிருந்தும் வேதபாரயணம் என்னும் அங்கம் இல்லாதிருப்பது ஒரு குறையாயிருக்கிறது எனக் கூறி மேலும் இந்த அம்சத்தை ஆளும் அரசன் தேவராய மஹாராஜன் பெயரில் அழைத்தல் நன்கு எனக் கூறிஞர்.

இத்தேவராய மஹாராஜா விஜயநகரத்தின் முதல் வம்சத்தைச் சேர்ந்த தேவராய II ஆகத்தான் இருக்கவேண்டும். சாஸனத்தின் வார்த்தைப்படி திருப்பதியிலுள்ள வைஷ்ணவ முதல்வர் அந்நாட்டு அரசனுடம் கூறியது பெருமாளுடைய மஹிமைக்கு தக்க ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு வெளிப் படுத்தும் வகையில் செயல்கள் செய்தாகிவிட்டது.

இந்த ஒரு அம்சம் மாத்திரம் செயல் படவில்லே. ஆகவே இந்த குறையையும் நீக்கி விட்டால் மிக்க நன்ருகயிருக்கும். அரசன் இதற்கு சம்மதித்தால் இச்சேவையை ஆளும் மஹா ராஜன் பெயரில் நடத்தலாம் எனக் கூறப்பட்டிருக்கிறது, தேவஸ்தான மொழி பெயர்ப்பில் இதனுடைய அர்த்தம் சரியாகக் கூறப்படவில்லே. மொழி பெயர்ப்பில் வேத பாராயணம் கூறுவது நிறுத்தப்பட்டது என்றிருக்கிறது.

அதாவது ஒரு சமயம் வேதபாராயணம் நடந்து கொண்டிருந்ததென்றும் ஏதோ காலப்போக்கில் அது நிறுத்தப் பட்டதென்றும் இப்பொழுது செய்வது அதை திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதென்றும் அர்த்தமாகிறது. மூல சாஸனத்தில் காண்பது.

"திருவேங்கட முடையானுக்கு ஸகலமானவைபோகங் களும் உண்டா யிருக்க வேத பாராயணம் நடவாதிருந்தபடி ஆலே" தேவஸ்தான் சாஸனம் Vol I No. 199 இது தேவஸ் தான மொழி பெயர்ப்புக்கு இடம் கொடுக்கவில்லே. மூலத்தின் அர்த்தம் தெரிவிப்பது வேதபாராயணம் முன்பு இல்லா திருந்தது. இப்பொழுது அதை ஆரம்பிக்க வேண்டுகோள் என்று. அந்த நாட்டரசன் இந்த ஏற்பாட்டின் பொருட்டு

சித்திக்குட்டை என்னும் கிராமத்திலிருந்து வரும் வரி வசூலிலிருந்து ஒரு பாதியை **ராஜ பண்டாரந்**தின் மூலமாக இந்த சேவைக்கு ஒதுக்கி வைக்கும்படி கட்டளையிட்டான். இந்த வரும்படி இச்சேவைக்கு போதவில்லை என்ற காரணத்தால் அதே கிராமத்திலிருந்து வரும்வரி வசூலிலிருந்து மற்ருெரு பகுதியை **ஸ்ரீ பண்டாரம்** (கோவில் கஜாஞ) மூலமாக இதே விஷயத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது என்று பின்னற் காணப்பட்ட சாஸனத்தின் மூலம் தெரிகிறது. இதன் படி கோவில் கஜாஞவில் குறைவு காணப்படுவதை வேறு சில சுற்றிலுமுள்ள குறிக்கப்பட்ட **தேவதானம்** கிராமங்களிருந்து அந்தந்த கிராமத்திற்குத் தக்க பகுதிப் பணத்தை கோவில் கஜாஞவில் கட்டி அக்குறைவை சரிகட்டினர்கள்.

இந்த சாஸனத்தின்படி திருப்பதி ஸ்தானத்தாருக்கும் ஸ்ரீனிவாஸபுரம் என்னும் சித்தக்குட்டை அல்லது **அகரம்** மகாஜனங்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் இதில் குறிக்கப் பட்டிருக்கிறது. இவ்வகரம் கிராமம் தான் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்களுள் முதன்மையான (முதலியார்) கலி கண்ரி தாசருடைய அனுபவித்திலிருந்து வந்தது. இந்த ஏற்பாடு மிக முக்கியமானதாகும். இந்த சாஸனத்தின்படி சகம் 1355-ல் தான் இந்த ஏற்பாடு பண்ணப்பட்டதால் இந்த நாள் வரை தேவ பாராயணமே இல்லாமல் இருந்ததா என்னும் கேள்வி எழுகிறது.

இந்த சாஸனத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டால் கோவில் முறைகளில் வேதபாராயணம் ஓர் அங்கமாக அமைய வில்லை எனத்தான் கொள்ள வேண்டும். நமக்கு இந்த தேதி வரை வந்த எந்த சாஸனத்திலும் இதைப்பற்றிக் கூறவில்லை; எங்கே தான் இதைப்பற்றி கூறியிருக்கக்கூடும் என்று தெளி வாகக் காட்டவும் நமக்கு இயலாது.

**ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸமாலா**வில் கூறியபடி ராமானுஜர் வகுத்து வைத்த நித்தியபடி வழிபாடுகளில் இது இடம் பெற வில்லை; இது நடந்து கொண்டிருந்தால் அங்கு இதைப்பற்றி கட்டாயம் கூறப்பட்டிருக்கும். இதனல் கோவில் சேவைகளில் வேத பாராயணம் இல்லையென்ருே குறிப்பாக வைஷ்ணவ கோவில்களில் இல்லையென்ருே கூறிவிட முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் இங்கு கூறியிருக்கும் முறையைக் கவனித் தால் இது சாதாரணமாக வழக்கத்தில் இருக்கும் அம்சம்,

இருப்பினும் திருப்பதியில் இல்லாதிருப்பது வியக்கத்தக்கது என்று. சாதாரணமாக தமிழ் நாட்டில் வேதம் ஓதுவது நன்கு தெரிந்திருந்தது.

மதுரைக் காஞ்சியில் குறிப்பாக சிறப்பாக வேதங்கள் ஒலியுடன் ஓதப்படுகின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒரு பாட்டில் ருக் வேதத்தை நன்கு ஓதுவது நல்ல அந்தணருக்கு ஓர் முக்கிய அம்சமாகும் என வருகிறது. பத்தாம் நூற்றுண்டின் முன் பாகத்தில் வசித்து வந்த ராஜசேகரன் என்னும் கவி அழகாகச் சொல்லுவது வேதத்தை பிழையற ஒழுங்காக ஓதுவதைக் கேட்பதற்கு இந்தியா முழுவதிலுமே தெற்கே திராவிட தேசத்திற்குத் தான் போக வேண்டும் என்று. ஆகவே திருப்பதியில் வேத பாராயணம் இல்லாமல் இருப்பது அப்பதிக்கே உரித்தான ஓர் வேற்று அம்சமாகும். திருப்பதியில் இது இல்லாமலிருந்ததற்கு சில காரணங்களும் உண்டு.

அக்காலங்களில் திருப்பதியில் சௌகரியமாக வசிக்க வசதிகள் இல்லாமல் இருந்தன. ஆகவே மிகக்குறைவானவர்களே மலையின் மேல் குடியேறி இருந்தார்கள். தினசரி வேண்டிய சாதாரணவஸ்துக்கள் ஜலவசதி புஷ்பம் சமர்ப்பிப்பது இவைகள் கூட ஆளவந்தார் காலத்திலும்சரி பிறகு ராமாநுஜர் காலத்திலும் சரி ஒவ்வோர் சமயங்களில் அகப்படாமல் போய் அவைகளைத் தனியாக வரவழைக்க வேண்டிவந்தது. ஆகவே திருப்பதியில் வேதம் ஓதுவது சாதாரணமாய் நடக்கும் சம்பவமாயிருந்திருக்காது. ஆயின் இதில் அதிசயிக்கத்தக்கது என்னவெனில் ராமாநுஜர் மிக்க கவனத்துடன் இதைவிடக் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் கூட விஸ்தாரமாக ஏற்பாடுகள் செய்திருக்க இந்த விஷயத்தில் மாத்திரம் ஏன் அடியோடு விட்டு விட்டார் என்பது தான். ெந. 200 ஷெ ஒப்பந்தத்தின் பின் பாகத்தைக் கூறுகிறது. ெந. 201-ன் ஆரம்பத்தில் தேவராயன் ஆட்சியைக் குறித்துக் கூறி சகம் 1355-ஐக் குறிக்கிறது. இந்த ஒப்பந்தம் கோவிலைச் சேர்ந்த திருக்குடவூர்நாடு, வைகுந்தவளநாடு இவை இரண்டும் ஸ்தானத்தாருடன் செய்து கொண்ட ஒப்பந்தம். இதன்படி இக்கிராமங்கள் கட்டும் நிலவரித் தொகையை வைத்துக்கொண்டு 24 பிராம்மணர்களைப் போஷிப்பதென்றும் அவர்கள் நிரந்தரமாக தங்கு தடையின்றி இந்த சேவையைச்செய்ய வேண்டுமென்றும் கண்டிருக்கிறது.

இக்கிராமங்களின் முக்கியஸ்தர்களில் அநேகர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டிருக்கிருர்கள். இதன் பயனாக

வேதம் ஓதுவது நிரந்தரமாக நடத்த ஏற்பாடாயிற்று. நெ. 202–ல் இந்த ஒப்பந்தத்தின் முழு விவரமும் கொடுக்கப் பட்டு ஒப்பந்தத்தின் வெவ்வேறு ஒப்பந்தக்காரர்களும் செலுத்த வேண்டிய தொகையையும் குறிப்பிட்டிருக்கிறது நெ. 203 இதே மாதிரி ஒப்பந்தம் ஆனால் பின்பக்கத்தில் கையொப்ப மிடப்பட்டது.

**தேவராயர் II-காலத்து இதர சாஸனங்கள் :**

நெ. 204 திருப்பதியிலிருந்து வருகிறது. இது சகம் 1358-ஐக் குறிக்கிறது. தேவராயர் II–ஐக் குறிக்கிறது. இதில் சடகோப நம்பி அழகப்பிரானுர் கோவிந்தா என்பவர் 1000 தங்கநாணயங் களுக்கு தன் வீட்டை கோவில்கஜானுவிற்கு விற்றதற்கு எழுதிய ஒப்பந்தம். இதன் நடுவில் தேவண்ண உடையார் பெயர் வருகிறது. இதன்படி இந்த கோவிந்தா என்பவர் இந்த வீட்டை ஒரு பிள்ளையில்லாத மாது (அவருடைய உறவா யிருக்கலாம்) விடமிருந்து கிடைக்கப் பெற்றுர் என்கிறது.

பிறகு இதற்கு கிரய பத்திரம் எழுதியிருக்கிறது. நெ. 205 கிட்டத்தட்ட அதேமாதிரியான சாஸனம். தேவண்ண உடையாரிடமிருந்து வந்த பணத்தைக் கொண்டு வாங்கிய வீடு. இந்த வீடும் கோவில் கஜானுவுக்கு விற்கப்பட்டு அதன் கிரய பத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. 4200-க்கு இரண்டே முக்கால் கிரெளண்டுகளும் ஒரு வீடும் கிரயமாயிற்று இதில் கையொப்ப மிட்டவர்கள் கோவிந்தா, கோவில் கணக்கர், அவ்விடத்திய பல ஆசார்ய புருஷர்கள் ஆவர். நெ. 206 தேவராயர் ஆட்சிக்கு உரித்தான சாஸனம்.

இதில் தேதி அழிந்து விட்டது. மற்றும் சாஸனத்தின் வாசக பாகமும் மிகவும் அழிந்து விட்டதால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நெ. 207 திருப்பதியிலிருந்து வந்தது. சகம் 1356 வருஷத்தியது. இதில் அரசனின் பெயர் வரவில்லை. இது ஸ்தானத்தாருக்கும் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்களில் முதல் வரான கலிகன்றிதாஸ அழகப்பிரானுருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்.

இவர் கோவில் கஜானுவில் 400 தங்க நாணயங்களைக்கட்டி தக்ஷிணுயனம் ஆறு மாத காலமும் விடியற் காலையில் நடத்த வேண்டிய உற்சவத்துக்கு உபயோகப்படுத்த வேண்டியது என ஒப்பந்தம் செய்து கொண்டார். நெ. 208-ல் அநேகமாக முழுவதும் சிதிலமாகி விட்டது. நெ. 209 கன்னடத்தில் எழுதப் பட்டிருக்கிறது. சகம் 1368-ஐச் சார்ந்தது. அதில் முத்தய்ய நாயகனின் குமாரன் தெப்பட நாகய்ய நாயகன் நன்கொடை

யாக கொடுத்த 3000 தங்க நாணயங்களைப்பற்றி குறிப்பிடுகிறது.

இந்த தொகையை ஸ்தானத்தாரிடம் ஒப்படைத்து இந்த சேவை நன்கு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. நெ. 210 மலைக்கோவிலிலிருந்து வருகிறது. சகம் 1368-ஐச் சார்ந்தது. அதில் ஸ்தானத்தாருக்கும் எற்றக்கம்பய தேவன் மகன் பெரிய மல்லதேவனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் கூறப்பட்டிருக்கிறது. இவனுக்கு **மேதினி மீஸர கண்ட கட்டாரி சாளுவ** என்னும் பிருதுகள் காண்கின்றன. இவன் 1000 தங்க நாணயங்களைக் கொடுத்து அதன் வருவாயிலிருந்து பெருமாளுக்கு யாவத் காலமும் ஒரு தளிகை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கூறுகிறது.

கோவில் கணக்கர் இதை முறையாக எழுதிக் கொடுத்தார். நெ. 211 சகம் 1364-ஐச் சார்ந்தது. இதில் ஸ்தானத்தாருக்கும் திருப்பதி **சாட்டாடை ஸ்ரீ வைஷ்ணவன்** கருணாகர தாஸனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவன் 100 தங்க நாணயங்களைக் கட்டி அதன் வருவாயிலிருந்து கீழ் திருப்பதியில் கோவிந்தராஜப் பெருமாளுக்கு ஒரு தளிகை தாஸன் பெயரில் நடத்தவேண்டுமெனக் கூறுகிறது. நெ. 212-ம் கீழ் திருப்பதியிலிருந்து வருகிறது.

இதில் ஸ்தானத்தார்களுக்கும் நான்கு பேர் (வைஷ்ணவர்களாயிருக்கலாம்) ஆழ்வார் முதலியார், உலகுடைய பெருமாள், திரு அனந்தாழ்வார், நாராயணப் பெருமாள் ஆகியோருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். சகம் 1367-க்குச் சரியான டிஸம்பர் 13, 1445-ஐச் சார்ந்தது. இதன்படி சில நாட்களில் நடக்கும் உற்சவங்கள் முதல் இருவர்கள் பெயரிலும் மற்றும் சில நாட்களில் மற்றைய இருவர்கள் பெயரிலும் நடத்த வேண்டுமென்றும் இதற்காக அவர்கள் வெவ்வேறு பணங்களைக் கொடுத்தார்களென்றும் தெரிகிறது. மேலும் பெருமாளுக்கு தளிகை அமுது செய்த பிறகு அதை எப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்றும் கூறுகிறது. நெ. 213 மலைக்கோவிலிலிருந்து வருகிறது. சகம் 1367-க்குச் சரியான டிஸம்பர் 15, 1445-ஐச் சேர்ந்தது.

இது ஸ்தானத்தாருக்கும் திருச்சானூர் சபையின் அங்கத்தினரும் ராமானுஜ தாஸரின் மகனுமான அநந்த சயனனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். இதில் மலைக்கோவிலில் நடக்கும் ஏழு உற்சவங்களின் துவஜாரோகணம் அன்றைக்கும் கீழ் திருப்பதியில் இரண்டு உற்சவங்களுக்கும் தளிகை சமர்ப்பிக்க

அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டது. தளிகைகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டு, வழக்கம் போல் கணக்கர் இந்த ஒப்பந்தத்தை சாஸனப்படுத்தினர் நெ. 215 கீழ் திருப்பதியிலிருந்து வருகிறது. சகம் 1368—க்குச் சரியான நவம்பர் 23, 1446—ஐச் சார்ந்தது.

ஸ்தானத்தாருக்கும் திருச்சானூர் சபை அங்கத்தினர் வடமாமலை தாஸர் அழகர் அப்பிள்ளை திருவனந்தாழ்வார் பெரிய பெருமாளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். முன் சாஸனம் போல் இதுவும் ஒன்பது துவஜாரோகணம் நாட்களில் சமர்ப்பிக்கும் தளிகைகளுக்குரிய ஏற்பாடுகள் குறிக்கப் பட்டிருக்கின்றன. நெ. 216 கீழ் திருப்பதியிலிருந்து வருகிறது. அது சகம் 1368-க்குச் சரியான நவம்பர் 14, 1445-ஐச் சார்ந்தது. ஸ்தானத்தாருக்கும், திருச்சானூர் சபையின் அங்கத்தினர் ராமானுஜதாஸர் குமாரர் அழகிய பெருமாளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்.

கோவில் கஜானாவில் 200 தங்க நாணயங்கள் கட்டப்பட்டு அதன் வரும்படியிலிருந்து மார்கழி மாதம் முப்பது நாட்களும் தளிகை பண்ணி சமர்ப்பிக்க ஏற்பாடாயிருக்கிறது.

**மல்லிகார்ஜுன தேவராயன் ஆட்சியின் சாஸனங்கள்:** நெ.217, கீழ் திருப்பதியில் கோவிலுக்கு வெளியில் சன்னதித் தெரு கோடியில் ஒரு கல்லில் எழுதப்பட்டிருக்கிறது. இது வீர பிரதாப மல்லிகார்ஜுன தேவராயரைக் குறிப்பிடுகிறது. இது சகம் 1371-க்குச் சரியான மார்ச்சு 4, 1450-ஐச் சார்ந்தது.

மலைத்திருப்பதியிலிருக்கும் ஒரு வீட்டை விற்பனை செய்ய ஒப்பந்தம். இந்த விற்பனை இரு ஸ்ரீ வைஷ்ணவ பிராமணர்கள் ஆழ்வார் முதலியார் உலகுடைய பெருமாள் முதலியார் இவர்களால் வைகுந்த வளநாட்டில் சந்திர கிரியிலிருக்கும் **நியோகி** லாஸமாலிகம் சென்னப்ப உடையாருக்கு விற்பனை செய்யப்பட்டது. நெ. 218 மலைக்கோவிலில் இருந்து வருகிறது. அது சகம் 1372—க்குச் சரியான ஆகஸ்ட்டு 31,1450-ஐக் குறிக்கிறது.

இதில் அரசன் பெயர் வரவில்லை. இது ஸ்தானத்தாருக்கும் **மஹா மண்டலேஸ்வர மேதினி மிசார—கண்ட கட்டாரி—சாளுவ** மால கங்கைய்ய தேவ மஹா ராஜனின் மகன் சிறுமல்லைய்ய தேவனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் அவன் தினப்படி தளிகை சமர்ப்பிக்க 1200 தங்க நாணயங்களை கோவில் கஜானாவில் கட்டினான். நெ. 219 மலைக்கோயிலிலிருந்து வருகிதது. அது சகம் 1367—க்குச் சரியான டிசம்பர் 13, 1445—ஐச் சார்ந்தது.

இது ஸ்தானத்தாருக்கும் எம்பெருமானுர் ஜீயர் என்பவருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். அவர் பெயரால் இரண்டு தளிகைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்மென்பதற்காக அவர் கோவில் கஜாஞவில் 2000 தங்க நாணயங்கள் கட்டினுர். இதில் விசேஷம் என்னவென்முல் இவ்வெம்பெருமானுர் ஜீயர் என்பவர் **பங்கயச் செல்வி** என்னும் தோட்டத்திற்கு உரியவராய் அதில் வசித்து வந்தார். மேலும் அவரை மலைக்கோயிலில் **கோயில் கேள்வி** அதாவது கோவில் நிர்வாககர் **என்று** குறிப்பிட்டிருக்கிறது.

ராமாநுஜர் ஏற்படுத்திய விஷயங்களில் கோவில் நிர்வாகத்தைப்பற்றி அவர் செய்த ஏற்பாட்டை இது குறிக்கிறது. நெ. 220 மலைக்கோயிலிலிருந்து வருகிறது. இது சகம் 1367-க்குச் சரியான பிப்ரவரி 17, 1446ஐச் சார்ந்தது. இது ஜீயருக்கும் ஸ்தானத்தாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்.

இதன் படி ஒன்பது துவஜாரோஹண நாட்களிலும் செய்ய வேண்டிய தளிகைகளைப்பற்றியும் மேலும் இரண்டு உற்சவங்களில் செய்ய வேண்டிய தளிகைகளைப் பற்றியும் விவரிக்கிறது. ஒன்பது துவஜாரோஹண நாட்களில் ஏழுமலைக்கோயிலிலும் இரண்டு கீழ்திருப்பதியிலும் உள்ளன, இரண்டு உற்சவங்களில் ஒன்று மலைக்கோயிலில் **புஷ்பயாகம்** என்னும் புஷ்ப சேவை மற்றொன்று கோவிந்தராஜர் உற்சவத்தின் கடைசி நாளன்று.

இவைகளுக்காக அவர் கோவில் கஜாஞவிற்கு 1000 தங்க நாணயங்களைக்கட்டினுர். இதில் இன்னொரு விசேஷமென்னவென்முல் **புஷ்பயாகம்** என்னும் உற்சவத்தில் பெருமாளும் நாச்சிமார்களும் **மலைக்கினிய நின்ற பெருமாள்** என்னும் பெயருடன் விளங்கும் மண்டபத்திற்கு எழுந்தருளி **திருவாய்மொழி** ஓதக்கேட்டு அதன் பின்னர் பிரசாதம் வழங்குதல் நடைபெறும். இப்பிரசாதவினியோகம் முடிந்த பின்னர், **பங்கையர்ச் செல்வி**க்கும் மடத்திற்கும் உரிமையாளரான ஜீயருக்கு மிகுதி பிரசாதத்தைக் கொடுத்து விடவேண்டியது. இந்த ஜீயர்கள் **ஏகாங்கிகள்** அதாவது கல்யாணமாகாத வைஷ்ணவர்கள்.

இம் மிகுதி பிரசாதத்தை பீடத்திலிருக்கும் ஜீயர் முறையே பெற்றுக் கொள்ளவேண்டும். நெ, 221 மலைக்கோயிலிலிருந்து வருகிறது. இதுவும் முன்போலவே ஒன்பது துவஜாரோஹணம் உற்சவங்களுக்கும் தளிகைகள் பண்ணி முன்போல் வழங்க வேண்டும். இதற்கு 1000 தங்க நாணயங்கள் செலுத்தப் பெற்று வினியோகம் முன்போலவே நடக்கவேண்டும் மெனக்

கூறுகிறது. இது சகம் 1368–க்குச்சரியான ஜனவரி 27, 1446 ஐச் சார்ந்தது. நெ. 222 திருப்பதியிலிருந்து வருகிறது.

இதில் வருஷப் பெயர் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது அதற்குச் சரியான ஜூலை 17 1447-ஐச் சார்ந்தது. ஒன்பது உற்சவங்களைத்தவிர வேறு சில உற்சவங்களையும் சேர்க்கப் பட்டிருக்கிறது. நெ. 223 கீழ் திருப்பதியிலிருந்து வருகிறது. இது சகம் 1378–க்குச் சரியான பிப்ரவரி 21, 1457-ஐச் சார்ந்த தாகும். இதில் ஸ்தானத்தாருக்கும் எம்பெருமானார் ஜீயருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஜீயர் 5000 தங்க நாணயங்களைச் செலுத்தி கோவிந்த ராஜருக்கு சில நித்தியபடி சேவைகளைச் செய்ய ஏற்பாடு செய்தார்.

இந்த ஏற்பாட்டில் விசேஷ அம்சம் என்ன வென்றால் கஜானாவுக்கு கட்டப்பட்ட 5000 தங்க நாணயங்களைக் கொண்டு அவிலாலி கிராமத்தில் ஒரு ஏரிவெட்டி, அதிலிருந்து வரும் வரும்படியை வைத்துக்கொண்டு இந்த சேவைகள் செய்ய வேண்டியது என்பது.

முன்பு கூறியபடி தளிகை வினியோகம் பண்ண ஏற்பாடு செய்யப்பட்டது. நெ. 224 கவனிக்கத்தக்க சாஸனம் நிர்வாகத்தின் சில முக்கிய விஷயங்களை இது எடுத்துக் காட்டுகிறது. இது சகம் 1372க்குச் சரியான (1450-51) ஐக் குறிக்கிறது. இதன்படி ஒரு சென்ன கேசவதாசன் பைண்ட பள்ளி எல்லையிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி சித்த குட்டைக்குத் தண்ணீர் கொண்டுவருவதும் அங்கிருந்து ஒரு **கஸக்கால்** வெட்டி தண்ணீரை அவிலாலி ஏரிக்குக் கொண்டு சித்தக்குட்டை கிராமத்தில் பயிரிடப்படாத நிலங்களை சாகுபடி செய்வதும் என்ற ஏற்பாடு.

இந்த ஏற்பாடு நிறைவேற்றப்பட்டால் தங்கள் நிலங்களுக்கு ஹானி ஏற்படும் என்றும் சாகுபாடி செய்யப்படும் நிலங்கள் கூட சாகுபடி செய்ய முடியாமல் போய்விடும் என பைண்ட பள்ளி கிராமவாசிகள் முறையிட்டனர். இதை மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க, அவர்கள் செய்த ஏற்பாடாவது பைண்ட பள்ளி கிராமவாசிகளுக்கு முன்னேற்பாட்டின்படி சாகுபடி செய்யப்பட வேண்டிய நிலங்களைக் கொடுத்து விடவேண்டியது என்றும் அவர்களிடம் மேற்கண்ட ஏற்பாடு ஏன் துவங்கப் பட்டது என விளக்கப்படுத்தி அதன் பலனைச் சரிவர கொண்டு வர வேண்டியது என்றும். அக்கிராமவாசிகளும் வேறொரு கால்வாய் வெட்டி அதன் வழியாக தண்ணீரைக் கொண்டு

போய் முற்லும் புது முறையைக் கையாண்டு அந்நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்தார்கள்.

இதனால் அவர்கள் நிலங்களும் கெடவில்லை. இதன் பயனுக ஸ்ரீனிவாஸ புரத்திலுள்ள வீர நரசிம்மப் பெருமாளுக்கு செய்ய வேண்டிய நித்திய தளிகை சரிவர ஏற்பாடாயிற்று நைவேத்தியம் செய்ததில் அங்கேயே வினியோகம் பண்ணது போக மீதியை அவ்வூரிலேயே இருக்கும் **ராமானுஜ கூடத்தில்** வசிக்கும் ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டியது. நெ. 225 மலைக்கோயிலிலிருந்து வருகிறது.

இது சகம் 1376–க்குச் சரியான ஜுலை 7, 1454-ஐச் சார்ந்த தாகும். இது ஸ்தானத்தாருக்கும் பாபனுசத்தில் ஒரு பூந் தோட்டம் நிர்வஹித்து வரும் ராமானுஜதாஸருக்கும் ஏற்பட்ட உடன்பாடு. இதற்காக இந்த தாஸர் கஜானுவில் 1000 தங்க நாணயங்கள் கட்டி இந்த ஏற்பாட்டை நடத்தினர்.

இதில் வினியோகம் செய்த பிறகு மீந்த பிரஸாதத்தை பூந்தோட்டத்தை கவனித்து வரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டியது. நெ. 226-ல் ஷை தானத்தை ஒரு சம்ஸ்கிருத ஸ்லோகத்தில் விவரிக்கிறது.

**இக்காலத்திய இதர சாஸனங்கள் :**

நெ. 228, கீழ் திருப்பதியில் கோவிந்த ராஜஸ்வாமி கோவிலி லிருக்கும் பார்த்தசாரதி சந்நதியில் இருக்கிறது. சகம் 1308-க்குச் சரியான மார்ச்சு 24, 1387-க்குச் சார்ந்தது. இது ஸ்தானத்தாருக்கும் வைஷ்ணவர்களுள் தலைவரான கொல்லி காவலிதாசருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். கொல்லி என்பது குலசேகர ஆழ்வாருக்கு ஏற்பட்டபிருது ஆகும். நித்தியபடி தளிகை பண்ணி சமர்ப்பிக்க 1000 தங்க நாணயங்களை கஜானுவில் கட்டினர்.

இந்த அமுது சேவை எக்காலத்திலும் நடத்தப் பட வேண்டுமென்றும் தனக்குச் சேரவேண்டிய பாகத்தை தன்னுடைய சந்ததிகளும் அனுபவிக்க வேண்டுமென்றும் எழுதப் பட்டிருக்கிறது. வழக்கம்போல் இதை எழுத்துப் படுத்தி எழுதியவர் கோவில் கணக்கர் ஆவர். அடுத்த ஏழு எட்டு சாஸங்கள் மிகவும் சிதிலமடைந்தும் முழுமையாக இல்லாமலும் இருத்தலால் அவைகளிலிருந்து ஒன்று தெரிந்து கொள்ள முடியவில்லை. வால்யூம் II-லிருந்து இரண்டு மூன்று சாஸனங்கள் தான் இந்தக் காலத்தை சார்ந்ததாகும். முதலாவது. சகம் 1367-க்குச் சரியான டிஸம்பர் 13, 1445–ஐச் சார்ந்ததாகும்.

ஸ்தானத்தாருக்கும் பாரத்வாஜ கோத்திரம் பெரிய பெருமாள் தாஸர் அருளாள தாஸர் குமாரர் தேவண்ணுவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். வழக்கம் போல் ஒன்பது துவஜாரோஹண நாட்களிலும் தளிகை பண்ணி சமர்ப்பிப்பதைப்பற்றி கூறுவது. இதற்கு வேண்டிய திரவியமும் கொடுக்கப்பட்டது. அடுத்தது வால்யூம் II-ல் நெ. 2 ஆகும்.

இது கீழ் திருப்பதியில் கோவிந்தராஜர் சந்நிதியில் இருக்கிறது. சகம் 1376—க்குச் சரியான ஆகஸ்ட் 25, 1454-ஐச் சார்ந்தது ஸ்தானத்தாருக்கும் சந்திரகிரியிலிருக்கும் ஹரியப்பாவுக்குப் ஏற்பட்ட ஒப்பந்தமாகும். அவருடைய தகப்பனார் கௌரண்ணு, தனஞ்சய கோத்திரம், ஆஸ்வலாயன சூத்திரம்,ரிக் வேதி. திருப்பதியில் 12 பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்க ஹரியப்பா, கஜானுவில் 3000 தங்க நாணயங்கள் கட்டினன். இந்த 3000 நாணயங்களைக் கொண்டு ஊற்றிலிருந்து பெருகும் தண்ணீரை வாய்க்கால் வழியாகக் கொண்டு போய் சாகுபடிக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

இதிலிருந்து வரும் வரும்படியைக் கொண்டு மேற்கண்ட சேவையை நடத்த வேண்டும். அடுத்தக் கீழ் திருப்பதியிலிருந்து வருகிறது. சகம் 1379—க்குச் சரியான கி. பி. 1457—ஐச் சார்ந்ததாகும். ஸ்தானத்தாருக்கும் கோவில் கணக்கர் திருநின்றவூருடையானுக்கும் ஏற்பட்டஒப்பந்தத்தைக் குறிக்கிறது. அவன் 100 தங்க நாணயங்களைக்கட்டி ஸ்ரீனிவாஸ புரத்தேரிக்கரை மேல் கட்டிய பூங்காவிற்கு கோவிந்தராஜப் பெருமாளை எடுத்துக் கொண்டு போய் உற்சவம் நடத்த வேண்டுமென ஒப்பந்தம். இந்த தர்மம் அவனது சந்ததியார்கள் என்றென்றும் செய்யவேண்டும்.

**விஜயநகர ஆட்சியின் முதல் நூற்றுண்டில் திருப்பதி :**

திருப்பதியிலிருக்கும் சாஸனங்களிலிருந்து விஜயநகர வரலாற்றின் முதல் நூற்றுண்டை நாம் கவர்ந்தோம். திருப்பதியிலிருக்கும் முதல் சாஸனத்திலேயே புக்கராயனைப் பற்றி குறிப்பு வருவதைப் பார்க்கிறேம். ஆனுல் இந்த குறிப்பு அரைகுறையாகவும் சரியாகப்புரியாமலும் இருக்கிறது.

ஆனுல் அது புக்கராயன் பெயரைக்கொண்டு நடத்திய ஒரு காரியத்தையோ அல்லது அவன் புகழுக்காக எழுதியதாகவோ இருக்கிறது. இதில் கடைசி சாஸனம் நம்மை மல்லிகார்ஜுனன் ஆட்சிக்கும் 1457-க்கும் அழைத்துச் செல்கிறது. இது மல்லிகார்ஜுனன் காலம் தான். ஏனெனில் அவன் கி. பி. 1465—ல்

இறந்தான். அவனுக்குப் பிறகு விருபாக்ஷன் என்னும் பெயர் கொண்ட அவனுடைய ஓர் சகோதரன் ஆட்சிபீடத்தில் அமர்ந்தான். சரித்திர ஆசிரியர்கள் இவனை விஜரநகரத்து விருபாக்ஷன் III எனக்குறிப்பிடுகிறார்கள். இந்த மாறுதலி லிருந்து விஜயநகர ராஜ்யத்து வரலாறு பல விதங்களில் மாறுதல் அடைந்திருக்கிறது. திருப்பதியிலும் இந்த மாறு தலின் ஒலி பிரதிபலிக்கிறது. ஆனால் ஒன்று நாம் கவனிக்க வேண்டியது.

திருப்பதியும் அதைச்சுற்றிலுமுள்ள பிரதேசங்கள் சாம்ராஜ்யத்திற்கு உள்ளடங்கின அரசர்களால் ஆளப்பட்ட போதிலும் அவ்வரசர்கள் மிக்க சுதந்தரத்துடன் ஆட்சி புரிந்து வந்தார்கள். இதனால் சாம்ராஜ்யத்தினால் இவர்கள் மேல் நடத்திய ஆட்சி பேரளவேயன்றி நெருங்கிய ஆட்சியல்ல. இது நிச்சயமாகத்தான் இருந்தது எனச் சொல்ல வேண்டியதில்லை.

ஏனெனில் சாஸனங்களில் தேதியைக் கொடுக்கும் முறை மாறிவிடவே மாமன்னன் பெயரைக் குறிப்பிடாமல் இருப்பதி லிருந்து மத்திய அரசு கெடுபிடி குறைந்து விட்டதெனக் கருத நியாயம் இல்லை. தேதிகள் சகவருஷத்தில் கொடுக்கப்படுவதால் தற்சமயம் ஆளும் அரசரின் பெயரைக் குறிப்பிட அவசியமில்லை; சிலஇதற்கு முன் ஏற்பட்ட சாஸனங்கள் ஆளும்மன்னனின் நடை பெறும் ஆட்சி வருடத்தைக் குறிப்பிட்டதால் நிர்ப்பந்தமாக ஆட்சி மன்னனின் பெயர் குறிக்கப்பட வேண்டியதாயிருந்தது. இது எப்படியிருப்பினும் சாம்ராஜ்யத்தின் இந்தப்பகுதிக்கு ஓர் தனிச்சிறப்புவாய்த்து இருந்தது.

மாமன்னர்களின் பெயர்களில் முதன் முதலாக புக்கராயன் பெயர் வருகிறது, அவன் பிள்ளை குமார கம்பண தேவராயர் II, மல்லிகார்ஜுனர் இவர்கள் பெயர்களும் வருகின்றன. இவற்றில் சில நேர்முகமாக வராவிட்டாலும் அது தேதியைக் குறிக்கும் புதியமுறையினால் வந்த ஓர் மறைமுக விளக்கமாகும். இந்த மன்னர்களின் பெயர்கள் இங்கு வருவதின் காரணம் அம்மன்னர்களோ, இளவரசர்களோ கோவிலுக்காக கொடுத்த நன்கொடைகளாகும் வேறொருவர் கொடுத்திருந்தாலும் அது மன்னனைக் கௌரவிக்கும் வகையில் கொடுத்ததாகும்.

முன்னமே கூறியபடி கோவில் நிர்வாகம் அங்கிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் கையில் இருந்தது: அரசு நிர்வாகத்தில் தலையிடவில்லை. கோவிலின் நிர்வாகத்தின் சில அம்சங்கள் இதை மிகவும் தெளிவாகக் காட்டுகிறது. ராமானுஜர்

ஏற்படுத்திய கோவில் நிர்வாக சீர்திருத்தங்களை நினைவுபடுத்தும் படி சில அம்சங்களின் விளக்கங்கள் காணகின்றன. ராமாஜஜர் ஏற்படுத்திய அநேக உற்சவங்களைப் பற்றிய குறிப்புகள் இதை ஊர்ஜிதப்படுத்துகின்றன. முக்கியமாக கவனிக்க வேண்டியது ராமாநுஜர் ஏற்பாட்டின்படி உற்சவகாலங்களில் பிரபந்தம் முழுவதும் ஓத ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், அவற்றில்'சில (முக்கியமாக திருப்பாவை) வற்றை ஓத தனி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இது வரை, பெருமாளுக்கு முன்னும் சரி, பெருமாளை வீதியில் எழுந்தருளப்பண்ணும் போதும் சரிவேதம் ஓத ஏற்பாடு செய்யப்படவில்லை. இதை சாஸனத்தில் " திருவேங்கட முடை யானுக்கு ஸகலமான வைபோகங்களும் உண்டா(யிரு)க்க வேதபாராயணம் நடவாதிருந்தபடி ஆலே" என்று கூறப் பட்டிகிறது. ஆகவே அங்குள்ள முக்கியமான வைஷ்ணவர்கள் இதை தேவண்ண உடையாருடைய கவனத்திற்குக் கொண்டுவர அவனுடைய சித்தக்குட்டையிலிருந்து வரும் ஒரு பாதி வரும் படியை வேதபாராயண சேவைக்காக ஒதுக்கிவைத்தான்; கலிகுன்றிதாஸர் அழகப்பிராஞர் கூறியபடி இந்த சேவை மாமன்னன் தேவராயன் II அல்லது தேவராய மகாராயன் பேரில் அவனை கௌரவிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

கோவிலுக்கு அனேக நன்கொடைகள் கொடுக்கப்பட்டன; அநேகம் சில முக்கிய அதிகாரிகளால் கொடுக்கப்பட்டவை; சில கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் கோயிலைச் சுற்றியுள்ள பூங்காக்களை மேல் பார்வையிடும் அங்கேயே வசிக்கும் சன்னியாசிகள் இவர்களால் கொடுக்கப்பட்டவை. இந்நன்கொடைகள் இரு பிரிவானவை சிறியனவான நன் கொடைகள் பணத்தைக் கொண்டு நீர்ப்பாசனம் அபிவிருத்து செய்து ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்ட நிலங்களை இன்னும் நன்கு விருத்தி செய்வதோ, சாகுபடி செய்யப்படாத நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருவதோ இவைகளைச் செய்து, நிலத் திலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு இந்த சேவைகளை நிறைவேற்ற வேண்டியது.

இந்த இரண்டாவதுவகை நன்கொடையால் இருவகை நலன்கள் ஏற்படுகின்றன; ஒன்று திருப்பதியில் சேவை செய்து அதனுல் ஏற்படும் புண்ணியத்தை சம்பாதிப்பது; மற்ருென்று இதே நன்கொடையால் நிலத்தை உழுது வாழ்பவர்களுக்கு மேலும் சௌகரியங்கள் செய்வது, சாகுபடி செய்யாத

நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவருவது ஆகிய நற்பலன்கள் கிட்டுகின்றன. இதனால் உழவர்களுக்கு உடனே பலன் ஏற்படுகிறது. ஆகவே நன்கொடை கொடுத்தவருடைய ஆத்ம சுத்திக்காக செய்த ஓர் காரியம் கோவில், கடவுள், பிராமணர் ஆகியவர்களுக்கு மாத்திரம் உபயோகப்படாமல், மற்றைய ஜாதிகளுக்கும் உபயோகப்படும்படியாயிற்று.

அரசாங்கம் நேர்முகமாக தலையிடுவதோ அல்லது அரசாங் கத்திலிருந்து நன்கொடை கொடுப்பதோ இதுவரை நாம் பார்க்கவில்லை. ஓர் அரசனோ, உயர் அதிகாரியோ நன்கொடை கொடுத்த பொழுது. அது அவர்களுடைய சொந்த ஆத்ம சுத்திக்காகக் கொடுக்கப்பட்டது. மேலும் அந்நன்கொடைகளை அவர்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்தார்களே தவிர, அரசாங்க பணத்திலிருந்து கொடுக்கவில்லை. ஆகவே அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட தொகை ஒன்று மேயில்லை எனக்கூறலாம். ஆகவே கோவிலுக்குச் சொந்த மான சொத்துக்கள் யாவும் தனியார்கள் கோவிலுடைய நன்மைக்காகக் கொடுத்த நன்கொடைகளிலிருந்து வந்தவை எனவே கூறலாம்.

அத்தியாயம் 17

# சாளுவர்கள் ஆட்சியில் திருப்பதி

**சாளுவர்கள்—அவர்கள் தோற்றமும் ஆரம்ப வரலாறும்:**

இதுவரை நாம் கண்டசாஸனங்களில் விஜயநகரை ஆண்ட முதல் வம்ச அரசர்களை நாம் பார்த்தோம், அவர்களுள் கடைசியானவன் மல்லிகார்ஜுனன் என்பவன். இவனுடைய சாஸனம். கி. பி. 1457-க்குச் சார்ந்ததாகும். இவன் கி. பி. 1465-ல் இறந்தான். அவனுக்குப் பிறகு விருபாக்ஷன் அரசனானன். இவன் அவனுக்கு சகோதரனாயிருக்க வேண்டுமென்பதை இந்த அரசரின் ஸ்ரீசைலம் சாஸனங்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. அவனுடைய ஆட்சி கிட்டத்தட்ட இருபது வருஷங்கள் நடந்தது.

அவனுக்குப் பிறகு வேறொரு வம்சம் அரசை ஏற்றது அப்பொழுது சளுவ வம்சத்தின் புகழ் பெற்ற சளுவ நரஸிங்கன் என்பவன் தானே விஜயநகரின் ஆட்சி பீடத்தில் புதிய அரசனாக அமர்ந்தான். அவன் சக்கரவர்த்தியாக அமர்வதற்கு முன்பே, நாட்டில் மிக்க செல்வாக்கு உடையவனாக இருந்ததால் கி. பி. 1450-லிருந்தே ஒரு விதத்தில் அந்நாடு அவனுக்கு உடன்பட்டதாக கருதவேண்டும். மேலும் இந்த வம்சத்தவர் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு திருப்பதி பிராந்தியத்தில் இருந்ததால் திருப்பதியில் இவர்கள் ஆதிக்கம் மிகைபட இருந்தது. ஆகவே சி. பி. 1457-க்குப் பிறகு வரும் காலத்தைப் பற்றி நாம் கவனிக்கும் போது திருப்பதியிலுள்ள சாஸனங்கள் முழுவதும் இந்த வம்சத்தவர்களைக் குறித்தும் அவர்கள் கோவிலுக்குச் செய்த நன்கொடைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. இது இரண்டு முக்கிய காரணங்களால் சரியெனத் தோன்றும். முதலாவதாக சளுவர்கள் இந்த சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் போடவே மிக்க உழைப்புடன் வேலை செய்ததால் அவர்கள் இந்த அரசை ஒப்புக் கொள்ளக் காரணமாக இருந்தது. முன்னமேயே சளுவமங்கு கோவிலின் விமான மண்டபத்தின் மேல் பொன்னல் தகடுஅடிக்கவும் அதற்கு மேல் பொன்னல் ஆன சிகரத்தை வைக்கவும், சிதம்பரம் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் இருப்பது போல் இவைகளைச் செய்ய நன்கொடை கொடுத்தார் என்பதைப்பற்றியுள்ள சாஸனத்தைப்பற்றி சொன்னோம்.

இந்த மங்கிதேவன், புக்கராயன் குமாரன் குமார கம்பணன் எடுத்த படையெடுப்புகளில் மிக்க வீரத்துடன் போர் செய்து புகழ்மாலை சூடிக் கொண்டான். இவன் முக்கியமாகக் கருதும் வீரச் செயல்கள் சாம்புவராயனைத் தோற்கடித்து திரும்பவும் அவனைச் சிற்றரசனுக்குதல், மதுரை சுல்தானைத் தோற்கடித்தல் ஆகியவையாகும். இச் செயல்கள் சாதாரணமாக இந்தப் போர்களுக்குத் தலைமை வகித்த இளவரசன் குமார கம்பணனால் செய்யப்பட்டதெனக் கூறப் படுகிறது. ஆகவே விஜய நகர ராஜ்யத்தின் ஆரம்பத்திலேயே சளுவ வம்சம் புகழை அடைந்து விட்டது.

இருப்பினும் இவர்கள் ஏன் இந்த பிரதேசத்துடன் இணைக்கப்பட்டார்கள் எனத் தெரிவில்லை. இவர்கள் ஏற்கனவே இங்கே இருக்கிறார்கள். இதற்குமுன் காலம்வரை இந்த பிரதேசத்தை ஆண்டவர்களில் ஒருவர் கூட சளுவர்களுடன் கூட்டாக இருந்ததாகத் தெரியவில்லை. இந்த பிரதேசத்தைப் பற்றிப் பேசுகையில் நாம் தெலுங்கு சோழர்களைப்பற்றியும், தெலுங்கு பல்லவர்களைப்பற்றியும் சாளுக்கிய வம்சத்தாருடன் உறவு கொண்ட யாதவராயர்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் சளுவ வம்சம் என்று ஒன்று இருந்ததைப்பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை. இந்த வம்சத் திற்கு சளுவ என்பது குடிப்பெயர் ஆகும்.

இந்தப் பெயரை சமீபத்தில் மங்கி தன்னுடைய சொந்த வீரச் செயல்களால் பெற்றான். ஆகவே இந்தப் பெயரை முன்னதான சாஸனங்களில் நாம் காணமுடியாது. இருப்பினும் இந்த வம்சத்தின் ஆதி அரசர்களுடைய பிருதுகளில் சாளுக்கிய நாராயணன் என்னும் பெயர் வருகிறது. இந்த பிருது இவர்கள் வம்சத்தில் பழைமையானவரான குண்டா என்பவருக்கு வழங்கப் பட்டது. இவர் போரில் "உலகத்தை ஜெயிப்பதற்கு ஆயத்த மான ஸுல்தான்" ஐக் கொன்றார். இந்த சுல்தான் கல்யாண புரம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். இந்த நகரம் தான் பிற்காலத்தில் கல்யாணி என்னும் பெயருடன் பிற்காலத்திய சாளுக்கியர்களுக்குத் தலைநகராக விளங்கியது.

நமக்குக் கிடைக்கும் சொல்பமான விவரங்களைக் கொண்டு பார்த்தால் இவர்கள் யாதவராயர்களைப் போல் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆதியிலேயே இவவிடத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் என்றும் சொல்லலாம். இவ்வம்சத்தவர்கள் கல்யாணியோடு சம்பந்தப் பட்டவர்கள் என்பது சரியாயிருந்தால் அது அவர்களுடைய ஆதிஸ்தலம்

என்றும் முகம்மதியர்கள் தக்காணத்தை வென்று பாமினி ராஜ்யத்தை ஸ்தாபித்தபோது அவர்கள் அவ்விடத்தை விட்டு வந்தார்கள் என்றும் கொள்ளலாம்.

அது எப்படியாயினும் இவர்கள் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெற்கே நாடு கடந்து திருப்பதி பிரதேசத்தில் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தார்கள் என்றும் கொள்ளலாம். அக்காலத்தில் இப்பிரதேசம் ஜன நடமாட்டம் இல்லாமல் இருந்ததால் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரவும் நாகரீகத்தைப் பரப்பவும் அனேக செயல்களைக் செய்ய வேண்டி இருந்தது. இதற்கு அத்தாட்சி கோவிலுக்கு இந்த காலத்தில் கொடுக்கப்பட்ட நன்கொடைகள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

ராஜநாத திண்டிமா என்பவரால் இயற்றப்பட்ட சாளுவாப் யுதயம் என்னும் செய்யுள் வடிவத்தில் அமைந்த நூலில் இந்த வம்சத்தைப்பற்றி நீண்ட வம்சாவளி கூறப்பட்டிருக்கிறது. இவர் அரசரவையில் கவியாக இருந்து இந்நூலில் சாளுவ நரஸிம்மனின் வீரச் செயல்களைப்பற்றி கூறி இருப்பது ஒரே ஒரு கையெழுத்துப் பிரதி மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நரஸிம்மனுல் இயற்றப்பட்டதெனக் கூறப்படும் ஒரு நூல் இருக்கிறது. இது ராஜநாதனுல் செய்யப்பட்டதென்று நன்கு புலனுகிறது. இதன் பெயர் ராமாப் யுதய என்னும் காவ்யம் ராமாயணத்தைக் கூறுகிறது. இதிலும் கூட சரித்திர சம்பந்தம் பட்ட முதற் பெயற் மங்கி அல்லது மங்கி தேவனுகும்.

முன் கூறப்பட்ட படி இவன் தான் கம்பணனுடைய தெற்கு படையெடுப்பில் முக்கிய பங்கு பெற்றவன். மங்கியின் புதல்வர் களுள் ஒருவன் கௌதமன் அல்லது கௌத என்பவன். இவன் ஆறு புதல்வர்களுள் ஒருவன். ஆனுல் இவனைப்பற்றி விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த கௌதாவுக்கு நான்கு புத்திரர்கள் இருந்தனர். அவர்களுள் முதல்வன் குண்ட என்பவன். இப்பெயர் இந்த வம்சத்தில் மூன்ருவது பெயராகும். இவனுக்கு இரண்டு மகன்கள். பெரியவன் பெயர் திம்மா இரண்டாமவன் நரஸிம்ம அல்லது சளுவ நரசிம்ம என்பவன்.

அவனுக்கு திப்பா என்று மற்ருெரு பிள்ளை இருந்தான். அவன் மாமன்னன் தேவராயர் II-னுடைய சகோதரியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான். அவனுடைய பிள்ளை கோப என்பவன் பெயர் பெற்ற அரசனுக இருந்த வந்த சமயம் சளுவ நரஸிம்மன் பெயர் பிரசித்தியாய்க் கொண்டு வந்தது.

கோபவுக்கு இருபிள்ளைகள் திம்மா அல்லது திருமலைதேவ என்றும் திப்ப அல்லது திருபுராந்தக என்றும் பெயர்கள் கொண்டிருந்தனர். இவர்களிருவரும் சாம்ராஜ்யத்தின் தெற்கு மாகாணங்களில் ராஜ பிரதிநிதிகளாய் இருந்தார்கள். நரஸிம்மனுக்கு மிகச் சிறிய இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களைப்பற்றி பின்பு சொல்லுவோம்.

சளுவ என்று இன்னொரு சகோதரன் இருந்தான். அவனுக்கு பர்வதராஜன் என்று ஒரு பிள்ளை இருந்தான். சாஸனங்களில் இவனை ஒரு ராஜ பிரதிநிதியாகக் கூறுகிறது. இவர்கள்தான் கியாதி பெற்றி சளுவ வம்சத்தின் முதல்வர்கள். இவர்களுக்கு மங்கிதேவ என்பது சிறப்புப் பெயராக வழங்கியது.

**விருபாக்ஷனின் கொடுங்கோல் ஆட்சியால் சளுவநரஸிம்மன் முன்னுக்கு வரஹேது வாயிற்று:**

சாளுவர்கள் அரசுக்கு வந்த சமயம் விஜயநகர சரித்திரத்தில் புதிய கஷ்டங்களும் குழப்பங்களும் நிறைந்ததாக இருந்தது. சாளுவ நரஸிம்மன் உயர்ந்த பதவியைப் பறித்துக் கொள்ள இதுவே சாதகமாயிருந்தது. சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்களுள் முதல் ஸ்தானம் வஹித்த காரணத்தால் இவர்களுக்கு சாளுவர்கள் எனக்காரணப் பெயர் வந்தது. இந்தப் பெயரே அவர்களுடைய வம்சத்தவர்களுக்கும் கிடைத்து விட்டது. இவர்கள் விஜயநகர சாம்ராஜ்யம் ஆரம்பித்ததிலிருந்து மல்லிகார்ஜுனன் இறப்புவரை, ஒருவித கஷ்டமுமின்றி அச்சாம்ராஜ்யத்தின் சிற்றரசாகவே இருக்க திருப்தியடைந்திருந்தனர். மல்லிகார்ஜுனன் இறந்ததும் ஒருவித குழப்பம் ஏற்பட்டது. மல்லிகார்ஜுனன் கி. பி. 1465-ல் இறந்ததும் அந்நாட்டை அவனுடைய இளைய சஹோதரன் பிடுங்கிக் கொண்டதால் ஏற்பட்டவினையாகும் இது.

அவன் தனது சகோதரனுடைய இரண்டு பிள்ளைகளைத் தள்ளி வைத்து தன்னுடைய பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டு வரவசதி செய்தான். தன்னுடைய பிள்ளைகளின் நன்மைக்காக இந்தக் காரியத்தை சாதிக்க அரச குலத்தினர்களைக் கொல்ல வேண்டியதாயிற்று; இன்னும் பல துஷ்கிருத்தியங்கள் செய்ததால் அவன் வெறுக்கப்பட்டான். இது தான் கடைசியாக அவனுடைய ராஜ்யத்தை சளுவ நரஸிம்மன் பிடித்துக் கொள்ள ஹேதுவாயிருந்தது. இந்த முதல் வம்சத்தினர்களுள் ஆட்சி நடத்தியவர்களுடைய பெயர்களாவன:



காளி கோபுரம்



மோட்டார் பாதையில் உள்ள கணபதி

| | | | |
|---|---|---|---|
| ஹரிஹர | I | கி. பி. | 1336—1355 |
| புக்க | | கி. பி. | 1355—1377 |
| ஹரிஹர | II | கி. பி. | 1377—1404 |
| புக்க | II | கி. பி. | 1404—1406 |
| தேவராய | I | கி. பி. | 1406—1422 |
| விஜயபூபதி | | கி. பி. | 1422 |
| தேவராய | II | கி. பி. | 1422—1449 |
| மல்லிகார்ஜுன | | கி. பி. | 1449—1465 |
| விருபாக்ஷ | | கி. பி. | 1465—1485 |

விஜயநகர சாம்ராஜ்யம் தோன்றிய அதே சமயம் தக்காணத்தில் முகம்மதிய பாமனி ராஜ்யமும் நிறுவப்பெற்றது. சாம்ராஜ்யம் தோன்றிய விதத்திலிருந்து விஜயநகர அரசர்கள் சர்வதா இந்த புது அரசின் ஆக்கிரமிப்பைத் தடுக்க வடக்கு எல்லையைக் காக்க வேண்டியதாயிற்று.

இதுவே விஜயநகரத்தை அரசாண்ட முதல் வம்சத்து அரசர்களின் முக்கிய பெருங்கடமையாக கடைசிவரை இருந்தது; விஜயநகர ராஜ்யம் திகழ்ந்த முடிவு வரையிலும்கூட இதுவே அவர்களின் கடமையாக இருந்தது. இதை ஸ்தாபித்த முதலரசர்கள் புக்கன், ஹரிஹரன் என்பவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் வேறு முனைகளிலும் போர் இட்டு இந்த புது சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டியதாயிற்று. ஹரிஹரன் II-ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளும்போது ராஜ்யம் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டது. இது முடிந்த பிறகு அவர்களுடைய நோக்கம் முழுவதும் வடக்கு எல்லையைப் பற்றியே கவனம் செலுத்த வேண்டியதாயிற்று.

படையெடுப்புக்கள் சர்வசாதாரணமாக இருந்தன; விஜய நகரம் எப்பொழுதும் தாக்குதல்களை எதிர்த்து முறியடிப் பதிலேயே கவனம் கொள்ள வேண்டியதாயிருந்தது. இந்த உபத்திரவம் மிக்க தொந்தரவாகப் போகவே மாமன்னன் தேவராயன் II தன்னுடைய சேனைகளை வேறு விதமாக அணி வகுத்து முகம்மதிய தாக்குதல்களை எதிர்ப்பது மட்டுமன்றி ஓரிரண்டு தரம் எதிரிகள் நாட்டில் படையெடுப்பும் எடுத்து அவர்களைத் திணறவைத்தார்.

இதன் பயனாக தேவராயர் IIன் ஆட்சி முடியும் தருவாயில் விஜயநகரத்தின் பலம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டு அதனால் பாமனி அரசர்கள் கூட இவ்வரசிடம் மரியாதை காட்ட ஆரம்பித்தார்கள்.

**ஒரிஸ்ஸா கடற்கரையோர ஜில்லாக்களைக் கைப்பற்றுதல் சளுவ நரஸிம்மனுக்கு நல்லவாய்ப்பு :**

இதே சமயத்தில் வடக்கில் ஒரிஸ்ஸாவில் ஒரு புது ராஜ்ஜியம் கபிலேஸ்வரன் என்னும் ஊக்கமுள்ள அரசனால் உருவாக்கப்பட்டு வந்தது. இவன் அரசு செலுத்த ஆரம்பித்த சமயம் மல்லிக்கார்ஜுனனும் அரசு பீடம் ஏறினான். அவன் அரசனான முதல் காரியமாக பாமனி சுல்தான், ஒரிஸ்ஸா அரசன் இவ்விருவருடைய கூட்டு சைன்யங்களால் விஜயநகர் சூழப்பட்டதை எதிர்க்க வேண்டியிருந்தது. அவன் கடைசியில் வெற்றி பூண்டான்; ஆயினும் ஒரிஸ்ஸா ஹிந்துக்களின் ஆதிக்கம் வலுக்கத் தொடங்கிற்று.

அவர்கள் படிப்படியாக தங்கள் ராஜ்யத்தை விஸ்தாரம் பண்ணிக்கொண்டு பாமனி ராஜ்யத்தின் கடலோர ஜில்லாக்களைக் கோதாவரி நதிவரையில் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்கள் அங்கேயிருந்து கொண்டு தெற்கு நோக்கி படையெடுத்து கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவைகள் கொண்டபள்ளி, கொண்டவீடு ஆகிய கோட்டைகள். அங்கிருந்து மேலும் தெற்கு நோக்கிச் சென்று விஜயநகர ராஜ்யத்தின் எல்லைக்குள் புகுந்தனர்.

ஒரு சமயம் அவர்கள் நெல்லூர் ஜில்லாவில் உள்ள உதய கிரியைக் கைப்பற்றி மேலும் தெற்கே படையெடுத்து தென்னாற்காடு ஜில்லாவின் நடுவரையில் வந்து விட்டார்கள். ஆகவே வரலாற்றின் இந்தப்பகுதியில் மிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. கடலோரப்பகுதிகளிலிருந்து இக் கலிங்க அல்லது ஒரிஸ்ஸா அரசர்களை விரட்ட மிக்க பிரயாசை யெடுக்க வேண்டியிருந்தது. சந்திரகிரியிலும் அதையடுத்த இடங்களிலும் எத்தகைய அரசனுக்கும் இம்மாதிரியான நிலைமையில் தனது பேரரசுக்கு உவக்கும் வகையில் எதிரிகளுடன் போரிட்டு வெற்றிவாகை சூடிக் கொள்வதும் அதன் பயனாக நன்மைக்கோ தீமைக்கோ மிக்க பலம் பொருந்தியவனாக ஆவதும் சாதாரணம்.

அச்சிற்றரசன் வீரனாயிருப்பதுடன் புத்தி கூர்மையா யிருப்பவனுமாயிருந்தால் இதையெல்லாம் தனது சொந்த பிரயோஜனத்திற்கு திருப்பிக் கொள்ளுவான். மல்லிக்கார் ஜுனன் முதல் முதலாக கலிங்க பாமனி கூட்டு படை யெடுப்பைத் தகர்த்து தனது சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய பிறகு அவன் சலிக்காமல் உழைக்கவேண்டியிருந்தது. சாஸனத்

தின்படி மல்லிக்கார்ஜுனனும் அவனது மந்திரிகளும் சாம் ராஜ்யத்தின் கிழக்கு எல்லையில் நரஸிங்கனது ராஜ்ய விவகாரங்களைக் கவனித்ததாகக் கூறுகிறது. [ E. C. III Nos 12,59. Sewell's Hist. Ins under date 1459 ]

இது ஆளும் அரசர்கள் ஒரிஸ்ஸா அரசர்களின் தொல்லைகளை எதிர்க்க எடுத்துக் கொண்ட பிரயாசைகளை நன்கு விளக்குகிறது. நரஸிங்கனுக்கு இது தக்க தருணமா யிருந்தது. அவனும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டான்

**சாளுவ நரஸிம்மன் பதவிக்கு வந்த விதம் :**

சாளுவ மங்குவிலிருந்து ஆரம்பித்து எல்லா சாளுவர்களும் திருப்பதியைச் சுற்றிய பிராந்தியத்தில் சம்பந்தப்பட்டவர்கள்; அவர்களுடைய தலைநகரம் சந்திரகிரி எனக்கூறப்படுகிறது. சரித்திர சம்பந்தமாக நோக்கின் சந்திரகிரி மாகாணம் தான் இவர்களுடைய அரசின்கீழ் வந்தது; வந்தவிதம் எப்படியாயிருப் பினும் இருக்கலாம். ஒருவேளை சாளுவர்கள் இப்பிராந்தி யத்தில் இவர்களுக்கு முன்னிருந்த யாதவராயர்களுடன் உறவு கொண்டாடுபவர்களாய் இருக்கலாம்; அல்லது விஜயநகர ராஜ்யம் இப்பகுதியை பிடித்துக் கொண்டு முன்னிருந்த அரசனை தகர்த்தி சாளுவ அரசனை நியமித்திருக்கலாம்.

நமக்கு இவர்கள் எவ்வாறு அங்கே வந்தார்கள் என்பதைப் பற்றி சரியான விவரம் கிடைக்கவில்லை. ஸ்ரீரங்கம்கோவில் ஒழுகுவின்படி சாளுவ மங்குவும் கோபணூர் யாவும் முறையே அரசனும் மந்திரியுமாக நாராயணவரத்தில் இருந்தார்கள். இது பழைய தொண்டைமான்களுடைய தேசத்தைக் குறிக்கும்; அவர்கள் பிறகு சந்திரகிரி ராஜ்யத்திற்கு அரசர்களாக வந்தார் களென்றால் அது அசாதரணமான நிகழ்ச்சியல்ல. சாளுவ மங்கு தன் செயல்களைச் செய்து கொண்டிருக்கையிலும் அதே மாதிரி அவனுடைய சந்ததியார் காலத்திலும் அது ஒரு சிற்றரசாய் திகழ்ந்திருக்க வேண்டும். ஆயின் இப்பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து அனேக வெற்றிகளைப் பெற்றதால் விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க ஹேதுவாயிருந்தது. திருப்பதியிலிருந்தே சாளுவ மங்குவைப்பற்றி நமக்குக் கிடைத் திருக்கும் ஒரே சாஸனத்தின் வழியாக நமக்கு இது நன்கு விளக்கப் படுகிறது.

விஜயநகர ராஜ்யத்தின் சரித்திரத்தில் நாம் மேல் நோக்கிச் செல்லும் போது தேவராயர் II-னுடைய ஆட்சி இறுதி

வரை இம்மாகாணம் சாதாரணமாகவே திகழ்வதைக் காண்கிறோம். இம்மாமன்னன் இறந்த அதே சமயம் ஓரிசாவில் ஓர் புதிய வம்சம் தோன்றியதால் ராஜீய நிலைமை மாறிற்று. அதுவரை பாமனி சுல்தான்களின் நடவடிக்கைகளைத் தான் நன்கு கவனித்து தக்கவாறு நடந்து கொள்ள வேண்டியிருந்தது. தேவராயர் II-இக்காரியத்தை மிக நன்கு கவனித்து வந்தார்.

தேவராயருடைய போர் தளவாடங்களும் விஜயநகருடைய உயர்ந்த போர் ஆயத்தமும் சேர்ந்து இருந்ததைக் கண்ட எதிரிகளான பாமனி அரசர்கள் ஒரு கூட்டுறவின் தேவையை நன்கு உணர்ந்தார்கள். அதே சமயம் ஓரிஸ்ஸாவில் கபிலேஸ்வரர் தன் ராஜ்யத்தை நன்கு ஸ்தாபித்துக் கொண்டு விஜயநகர ராஜ்யத்தின் மேல் படையெடுக்க விருப்பம் கொண்டான். தேவராயன் ஆட்சியில் இருக்கும்வரை அவன் மேல் படையெடுத்து ஜயிப்பது முடியாத காரியம் என எதிரிகள் உணர்ந்திருந்தனர். ஆகவே அவன் இறப்பு ராஜ்யத்தில் கலவரத்தை ஏற்படுத்தி இளவரசன் பீடத்தில் ஏறுவதற்கு கஷ்டத்தை உண்டாக்கும் என எதிர்பார்த்தது வியக்கத்தக்கதில்லை.

அம்மாதிரி கலகம் உண்மையாக ஏற்பட்டது என்பதை நிச்சயமாக கூறுவதற்கில்லை. ஆனால் மல்லிகார்ஜுனனைப் போன்ற இளமையான அரசன் பீடத்தில் ஏறுவதையடுத்து எதிரிகள் அந்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். ஆகவே இந்த சூழ்நிலையில் தான் பாமனி ராஜ்யமும் ஒரிஸ்ஸா ராஜ்யமும் ஒன்று சேர்ந்தார்கள். ஆகவே கி. பி. 1450-ல் விஜயநகர ராஜ்யத்தின் மேல் ஒரு படையெடுப்பு நடந்ததைப் பற்றி கேள்விப் படுகிறோம். ஆகவே அச்சமயம் மல்லிகார்ஜுனன் ராஜ்யத்தின் தலைநகரத்தையே பாதுகாத்து எதிரிகளை விரட்டியடிப்பதில் ஈடுபட்டிருக்க வேண்டியிருந்தது. அவனும் தற்காலிகமாக அவர்கள் எதிர்ப்பை உடைத்து அவர்களை ஓடவைத்தான்.

வட எல்லையில் உள்ள அபாயத்தை இது ஓரளவு காட்டுகிறது. பாமனி ராஜ்யத்திலிருந்து ஏற்படும் எதிர்ப்பைவிட கிழக்கில் ஓரிஸ்ஸாவிலிருந்து ஏற்படும் எதிர்ப்பைத் தாங்க தக்க யுத்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் தான் சந்திரகிரியை யாண்டு கொண்டிருந்த சிற்றரசனுக்கு மற்ற சிற்றரசர்களைக் காட்டிலும் தனது வீர தீரங்களைக் காட்ட ஒரு தனிச்சிறப்பு வாய்த்திருந்தது. சளுவ குண்டாவே இதில் ஒரு பகுதியை

ஏற்கவேண்டியிருந்தது. அவன் உயிருடன் இருந்த பொழுதோ அல்லது பிறகோ ஒரிஸ்ஸாவினுடைய எதிர்ப்புகள் உண்மையாக ஆயின. அவர்கள் விஜயநகரின் கீழ்பக்கங்களில் படையெடுத்து பல பாகங்களைப் பிடித்துக் கொண்டு கொண்டி வீடு உதயகிரி ஆகிய இடங்களைப் பிடித்துக்கொண்டு மேலும் தமிழ் தேசத்து ஜில்லாக்களையும் பிடிக்கப் புகுந்தார்கள். இந்த ஒரிஸ்ஸாவின் செய்கைகள்தான் மிக்க கவலையை உண்டாக்கியது.

ஆகவே மல்லிகார்ஜுனரும் அவருடைய மந்திரியும் இந்த கீழ் எல்லைக்கு விரைந்து அங்கு சைன்யங்களின் அணி வகுப்புகளைப் பலப்படுத்தினர். ஒரிஸ்ஸா சைன்யங்கள் வரும் மார்க்கத்தில் சளுவ நரஸிம்மன் தன்னை நிறுத்திக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய நிலைமையை பலப் படுத்திக் கொண்டான். ஓரிடத்திலிருந்து மற்றோரிடமாக சைன்யத்தை அழைத்துக்கொண்டு, விரோதிகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடமாக பின் தள்ளி கடைசியாக தான் ஆளும் இடங்களிலிருந்தும் நெல்லூர் ஜில்லாவின் தென் பாகங்களிலிருந்தும் விரட்டி ஓட்டி, கடைசியாக உதயகிரிக் கோட்டையும் அதையொட்டி இருக்கும் பிரதேசங்களையும் பிடித்துக் கொண்டான்.

இது முடிந்ததும் தன் ராஜ்யத்தின் வட எல்லையைக் கொஞ்சம் பாது காப்பாக வைத்துவிட்டு மேலும் வடக்கே சென்று ஒரிஸ்ஸா அரசனையும் பாமனி சுல்தான்களையும் கண் காணிப்பில் வைத்துக் கொண்டான். இவ்வரசர்களுக்கு முறையே உள்நாட்டு உபத்திரவங்கள் இருந்து வந்தன. முகம்மதுஷா III பட்டத்துக்கு வந்த பிறகு அவர்கள் நிலைமை கொஞ்சம் நன்கு மாறிற்று. ஆகவே அவர்கள்கிழக்குப் பக்கமாக படையெடுக்கலாயினர். ஆகவே 1483–84–ல் முகம்மதுஷா ராஜமத்திரியை நோக்கிச் சென்று கோதாவரிக் கரையில் தங்கிய பொழுது அங்கு சளுவ நரஸிம்மன் ஒரு பெரிய சைன்யத்துடன் நன்கு ஆட்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டான். இதிலிருந்து சளுவ நரசிம்மன் ராஜ்யத்திற்கு எதிரிகளிடமிருந்து ஏற்படக் கூடிய எதிர்ப்புகளை வராமல் தடுத்து செய்த சேவைகளால் தனக்கு ஒரு விசேஷமான நிலைமையை ஏற்படுத்திக் கொண்டான்

**மாமன்னன் விருபாக்ஷனுடைய செய்கைகள் நரஸிம்மனைப் பீடத்தில் கொண்டு வைத்தது :**

இந்த ஏற்பாடுகளின் கடைசி நிலைமைகளில் விஜயநகர் மல்லிக்கார்ஜுனனுடைய ஆட்சியில் இல்லாமல் அவனுடைய

சகோதரனுடைய ஆட்சியில் இருந்தது. அவன் ஆரம்பத்திலேயே இல்லா விட்டாலும் கொஞ்ச நாட்கள் கழித்தாவது ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டு அதன் பயனாக விரோதத்தை சம்பாதித்துக்கொண்டான். கி. பி. 1465-ல் மல்லிக்கார்ஜுனன் இறந்தான். அதே வருடத்தில் கடைசியில் அவனுடைய சகோதரன் விருபாக்ஷன் ஆட்சிக்கு வந்தான்.

இதற்குப்பிறகு சளுவ நரஸிம்மன் தலை நகருக்கு உட்படாதவன்மாதிரியும் தனது ஸ்வதந்திரத்தை நிலை நாட்டு பவனாகவும் நடந்து கொண்டான். இருப்பினும் வெளிப் படையாக தன் ஸ்வதந்திரத்தை வெளிக் காட்டும் வகையில் கிரியாம்சையில் ஏதும் செய்யவில்லை. சில வருடங்களில் நரஸிம்மனும் அவனுடைய தளகர்த்தர்களும் இந்த பிரதேசம் முழுவதிலும் இன்னும் தெற்கிலுள்ள ஜில்லாக்களிலும் விறு விறுப்பாக வேலை செய்ய ஆரப்பித்தனர். ஈஸ்வரன், அவன் பிள்ளை நரஸ், ஆரவீதி புக்கா நாகமநாயக என்னும் பெயர்கள் இக்காலத்து நடவடிக்கைகளில் காணப்படுகின்றார்கள்.

ஆகவே முகமதுஷா III-வுடன் நரஸிம்மன் போரிட வேண்டிய சமயத்தில் அவன் ஏற்கனவே ராஜமந்திரியிலிருந்து தெற்கு பாகங்களையும் தென்னாற்காடு ஜில்லாவரையிலும் மேலும் மேற்கே மைசூரின் உள்பகுதியில் ஸ்ரீரங்கப்பட்டணம் வரையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஆக்கிக் கொண்டிருந்தான். அவன் ராஜ்யத்தில் வீரதீரத்துடன் இருப்பது ஒரு வித ஆக்ஷேபத்துக்கும் இடம் தராது. இந்த சூழ்நிலையில் பேரரசுக்கு உள்ளடங்கி தனது ஆட்சியை நடத்தி வந்தால் அதற்கு ஒரு வரும் குறைகூற முடியாது.

இது தான் அந்நாட்டில் அப்பொழுது நடந்தது; ஆயின் மாமன்னனும் சிற்றரசன் மேல் தன் அதிகாரத்தைக் காட்டிய தாகவும் அதற்கு சளுவ நரஸிம்மன் பணிந்ததாகவும் தெரிய வில்லை. விருபாக்ஷனின் ஆட்சியின் ஆரம்பத்தில் அனேக கஷ்டங்கள் இருந்தன: இது நாட்கள் ஆக ஆக அதிகம் ஆயிற்றே ஒழிய குறையவில்லை. நமக்குக் கிடைத்த ஆதாரங் களிலிருந்து விருபாக்ஷனுடைய நிர்வாக ஊழல்கள் எல்லா வகைகளிலும் பரவி கடைசியில் அவனுடைய நிலைமை மிக்க கஷ்ட நிலைக்கு உள்ளதாக ஆயிற்று.

அவனது அநீதிகளும் அராஜகச் செயல்களும் மேற்கு கடலோர பிரதேசங்களிலும் பேசப்பட்டது. ஹநோவர் என்னுமிடத்தில் முகம்மதிய குதிரை வியாபாரிகளை கொலை

செய்ததைப் பற்றி போர்த்துகீஸியர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையில் விருபாக்ஷன் தனது சகோதரனுடைய பிள்ளைகளை ஒழித்து விட்டு ராஜ்யத்தைத் தனது பிள்ளைகளுக்குக் கொடுக்க முயற்சி செய்தான்.

இது ராஜ்யத்தில் மிக்க அதிருப்தியை உண்டு பண்ணினதால் நரஸிம்மனுக்கு ராஜ்யத்தைத் தன் வசமாக்கிக் கொள்ள ஒரு நல்ல தருவாயை தந்தது. சாம்ராஜ்யத்தை சிதறுண்டு போகாமல் ஒன்றாக நிலைத்து வைக்க கவனமும் திறமையுமுள்ள அரசன் தேவையாயிருந்தான். விருபாக்ஷன் அப்படிப்பட்ட அரசன் அல்ல; அவனது செயல்கள் காரியங்களை மிக்க கேவலப் படுத்தின. தக்க தருணம் வந்தபொழுது ஜனங்களின் ஆதரவு இல்லாத விருபாக்ஷனின் பிள்ளைகளான இளவரசர்களை நீக்கி நரஸிம்மான் தானே சிம்மாஸனத்தில் அமர்ந்தான்.

இது ஜனங்களுக்கு திருப்தியை உண்டாக்கியது. ராஜ்யம் சிதறுண்டு போகாமல் ஒன்றாய் இருப்பதற்கு இவன் அரசனாய் வந்தது ஓர் நல்ல அறிகுறி. ஆகவே கி. பி. 1450–லிருந்து 1483 வரை சாளுவ நரஸிம்மன் பேரரசனின் ஆட்சிக்குக் கீழ்படாமல் தன் கீழ்பட்ட ராஜ்யத்தை தானே ஆண்டு கொண்டு, படிப்படியாக தன் ஆதிக்கத்தைப் பெருக்கி கடைசியாக சாம்ராஜ்யத்தின் மாவீரனாகத திகழ்ந்தான். நாம் இப்பொழுது திருப்பதி கோவிலில் உள்ள சாஸனங்களால் இந்த நிலைமை எவ்வாறு விளக்கப் படுகிறதென்றும், அவன் தானே கோவிலுக்கு என்னென்ன செய்ய முடிந்ததென்பதையும் காண்போம்.

(முதல் பாகம் முற்றும்)

# முதற்பாகம் 1க்கு
## உப அங்கமாக குறிப்பு

இந்த வால்யூமில் அநேக தடவைகளில் திரும்ப திரும்ப திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் மூர்த்தியமைப்பு இருவிதத் தன்மையுடைத்தாயிருப்பதையும், சிவனுக்கே உரிய சில அம்சங்கள் அம்மூர்த்தியில் காணப்படுவதையும் எடுத்து உரைத்திருக்கிறோம். இக்கலப்பு உருவகத்தைப் பற்றி முதலாழ் வார்கள் பாட்டுகளில் வருவது போலவே மற்றைய ஆழ்வார் களும் இவ்வம்சங்கள் திருப்பதியிலிருக்கும் விஷ்ணுவின் மூர்த்தத்தில் காணப்படுவதை எடுத்துறைத்திருக்கின்றனர், ருத்ரனும் நாராயணனும் இருமூர்த்திகளாய் இருப்பினும் அடிப் படையில் ஒன்றே என்று கருதப்படுவதையும் ருத்ரனின் அம்சங்கள் திருமாலின் மேல் காணப்படுவதையும் பொய்கை ஆழ்வாரின் முதல் நூற்றந்தாதியில் 98 வது பாட்டில் காண் கிறோம். இதே கருத்து மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் மோக்ஷதர்மத்தைக் கூறும் 350 வது அத்தியாயத்தில் வருவதைக் காண்கிறோம். ஸ்லோகங்கள் 26, 27-ல் இவைகள் வருகின்றன.

ருத்ரன் நாராயணன் ஐக்கியமாவது பற்றி மேலும் வரும் 352 வது அத்தியாயத்திலும் காண்கிறோம். முக்கியமாக இவ் வத்தியாயத்தின் பிற்பகுதியில் இதைக் காண்கிறோம். ஆகவே இந்த கருத்து அக்காலத்தில் பரவலாயிருந்தது என்பதையும் நம்மாழ்வார் இதைக் கூறும் பொழுது அவருக்கு ஆதாரங்கள் இருந்தன என்பதையும் காண்கிறோம். சிலர் மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தை பிற்காலத்தினர் ஒட்டு வைத்ததாக கூறுவர். இது சர்ச்சைக்குறிய விஷயம். ஆகையால் இங்கே கருத முடி யாது. கி. பி. 5 அல்லது 6வது நூற்றுண்டில் மஹாபாரதம் ஒரு லக்ஷம்ஸ்லோகங்கள் (சதசாஹஸ்ரி) கொண்ட நூல் என யாவராலும் கருதப்பட்டது. இது சரியானதாயின் சாந்தி பர்வத்தை ஒதுக்கி வைக்க முடியாது. எதுவாயினும் சரி மஹாபாரதத்தில் காணப்படும் ஸ்லோகங்கள் நம் கவனத்தை இழுப்பதாயிருக்கிறது. அவைகளை இங்கே கூறினது அக் காலத்திய விஷ்ணு பக்தர்களிடம் பரவலாக இருந்த கருத்தை வெளிக்காட்டவேயன்றி வேறு எவ்வித நோக்கமும் இல்லை.



ஸ்ரீ பத்மாவதித் தாயார் கோவில் உயர் கோபுரம்



ஸ்ரீ தேவி, பூ தேவியுடன் உற்சவ மூர்த்தி
ஊர்வலம் எழுந்தருளல்